॥ श्रीः ॥

श्रीमते रामानुजाय नमः ॥

श्रीमत्कृष्णसूरये नमः ॥

பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்திமாலா மலர் 6

பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை

அருளிச்செய்த

திருமாலை

வ்யாக்யானம்.

[ப்ரமாணத்திரட்டுடன் கூடியது.]

[பதவுரையுடனும் அரும்பதவுரைகளுடனும் கூடியது.]

***

பதிப்பாசிரியர்:—

K. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், அட்வகேட்,

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

***

விலை ரூ. 2—12—0

தபால் கூலி (ரிஜிஸ்டர் மூலம்) அணா 7.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத்க்ருஷ்ணஸூரயே நம:

முகவுரை.

"திருமாலை அறியாதார் திருமாலை அறியாதாரே". திருமாலை
யென்னும் திவ்யப்ரபந்தத்தை அறியாதவர்கள், லக்ஷ்மியை மயக்குகிற
வனும், லக்ஷ்மியிடம் மயங்குகிறவனுமாகிய ஸ்ரிய:பதியின் அளவிலா
அன்புஸ்வரூபத்தையும், திவ்யமங்கள விக்ரஹங்களையும், உடைய
வனுக்கு உடைமையை விடமாட்டாத குணபூர்த்தியையும், அவனது
விபூதியையும் அறியாதவர்களே. சொல்மாலையாகிய அழகிய பாமாலை
யைப் பகவானுக்குச் சூட்டினவர் விப்ரநாராயணர் என்று திருநாமம்
பூண்ட தொண்டரடிப்பொடியாழ்வார். வநமாலையின் அம்சமாகிய
இவ்வாழ்வார் பகவானுக்குத் திருமாலை பாடியது பொருத்தமே.
தொண்டரடிப்பொடி தோன்றின தொல்நகரம் திருமண்டங்குடி;
தொல்குலம் பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மண குலம். திருநக்ஷத்
திரம் மார்கழியில் கேட்டை. "மாஸாநாம் மார்க்கசீர்ஷோஹம்"
என்று கீதாசாரியனான கிருஷ்ணனும், "நீளாதுங்கஸ்தநகிரிதட ஸுப்
தமுத்போத்ய க்ருஷ்ணம்" என்கிறபடி "மார்கழித்திங்கள் மதிநிறைந்த
நன்னாளால்" என்று பாடி அவனை எழுப்பின ஆண்டாளும் உகந்த
உயர்வும், திருவத்யயனோத்ஸவம் தொடங்கும் காலமாகிற கௌரவ
மும், தேவர்கள் தினத்திற்கு ப்ராஹ்ம முஹூர்த்தமாகிற மகிமையும்,
அரங்கத்தம்மானைத் திருப்பள்ளியுணர்த்தும் மாதமாயிருக்கும் பெரு
மையுமாகிய நன்மைகளையுடையது இம்மாதமேயாகும். இம்மாதம்
இவ்வாழ்வாரின் அவதாரத்துக்கு நேர்ந்தது. மார்கழியில்கேட்டை
இந்த ஆழ்வார் அவதாரத்தாலும், ஆசாரியர்களில் பெரியநம்பிகள்
பிறப்பினாலும் முப்புரியூட்டின ஸ்ரீவைஷ்ணவ நக்ஷத்திரமாய்
விளங்குகிறது. மாஸங்களில் ஶ்ரேஷ்டமானது மார்கழி. நக்ஷத்
திரங்களில் ஶ்ரேஷ்டமானது ஜ்யேஷ்டை (கேட்டை). ஜ்ஞாநஶ்ரேஷ்
டர் இவ்வாழ்வார். மன்னியசீர் மார்கழிக்கேட்டையில் தொல்புகழ்
சேர் தொண்டரடிப்பொடி தோன்றியது தகுதியே. திருமாலின்
திருவடிசூடும்தகைமையினராய் வேதாந்தவிசாரம் பண்ணுமவர்கள்
பொலிந்த பரமவைதிக வம்சத்திலுதித்து ஸகலவேதார்த்தஸாரங்களை
உலகுக்கு உபகரித்த விப்ரஶ்ரேஷ்டராகிய விப்ரநாராயணரை
மாமறையோன் என்றார் மாமுனிகள். "மிக்கவேதத்திலுட்பொருள்"

என்று மதுரகவிகள் அருளிச்செய்த ததீயதாஸ்யமே இவருக்கு நிரூபகமும், தாரகமும், திருநாமமுமாயிற்று. "என்செய்வான் தோன்றினேனே" என்று தம் பிறப்பைப் பாழ்பிறப்பாக நைச்சாநுஸந்தாநம் செய்தபோதிலும், இவர் பிறப்பே பிறப்பு. மற்றவர்கள் பிறப்பு மறக்கும் பிறப்பு. "ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய" என்று இளையபெருமாளைச் சொன்னதுபோல் பூமாலைசூட்டிப் பாமாலைபாடப் பிறந்தவர் இவர். "பிறந்தபின் மறந்திலேன்" என்கிற பெருமை இவர்க்கு உண்டு. "ஸ உ ஶ்ரேயாந் பவதி ஜாயமாநः" என்று பகவான் அவதரித்து மேன்மையடைவதுபோல் வாடாத மாலையாகிய வைஜயந்தியாக இருந்த இவர் பூமாலை சூட்டியதோடல்லாமல் செந்தமிழில்பெய்யும் மறைத்தமிழ்மாலையைப்பாடி நித்யகைங்கர்யநிரதராய் நிலைநின்ற புகழ்பெற்றார். "மற்றொன்றும் வேண்டாமனமே மதிளரங்கர், கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ்—உற்ற திருமாலை பாடும் சீர்த்தொண்டரடிப்பொடி யெம்பெருமானை எப்பொழுதும் பேசு" என்றார் திருவரங்கப்பெருமாளரையர். பெரியகோவிலையும் பெரிய பெருமாளையும் மட்டும் பேணி "மற்றுமோர் தெய்வமுண்டே" என்று மற்ற அர்ச்சாவதார எம்பெருமான்களையும் பாடாத பாதிவ்ரத்யம் இவர் ஒருவர்க்கே உண்டு. திருவரங்கச்செல்வனுக்கு 'பதின்மர்பாடும்பெருமாள்' என்னும் பெருமையை அளித்தவரிவரே. ஆழ்வாருடைய ஹ்ருதயகமலம் அரங்கனைக்கண்டு மலர்ந்து, உள்ளமுருகி, உவப்புடன் இனிய தமிழ்மொழியில் இயற்கையழகுடன் தேனொழுகும்பாசுரங்களைப்பொழிந்தது. பாசுரங்களாலாகிய மலர்களைக் கொண்டு நன்றாகக் கட்டப்பட்ட மாலையாகிய திவ்யப்பிரபந்தம் திருமாலையாகும். வேறு எவராலும் எம்மொழியிலும் இம்மாதிரியாகப் பாடப்படவில்லையென்று நாம் உறுதியாகச்சொல்லலாம். அதிஸங்க்ரஹ அதிவிஸ்தாரமாகிய தோஷங்களில்லாத பிரபந்தமிதுவே. பகவானை ஶ்ரோதாவாக்கி அவருக்கு உபதேசம் பண்ணும் பெருமை இந்தப் பிரபந்தத்துக்குண்டு. மற்ற பிரபந்தங்களில் ஆழ்வார் பெருமையும் பிரபந்தத்தின் பெருமையும் பாடப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். நம்மாழ்வார் திருவாய்மொழியில் "திருமாலலருளப்பட்ட சடகோபன்" என்றும் "சொல்சந்தங்களாயிரத்துளிவைபத்தும்" என்றும், பெரியாழ்வார் திருமொழியில் "வேதப்பயன் கொள்ளவல்ல விட்டுசித்தன்" என்றும், "வெங்கலிநலியாவிட்டு

சித்தன்" என்றும், "மெய்ந்நாவன்மெய்யடியான்" என்றும், "வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்தவிளக்கை விட்டு சித்தன் விரித்தனன்" என்றும், "இன்தமிழ்மாலை" என்றும் பாடப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் இவ்வாழ்வாரோ "துளவத் தொண்டாயதொல்சீர்த் தொண்டரடிப்பொடிசொல் இளையபுன் கவிதையேலு மெம்பிரார்க்கினியவாறே" என்று இவ்விஷயதிலும் நைச்யத்தையே அநுஸந்தித்தார். அஹங்காரம் அநர்த்தமென்று அறிந்து, அஹங்காரமழிந்ததை அறிவித்து, பாகவதசேஷத்வமே பரமப்ராப்யமென்று கோஷித்து, எம்பெருமானுடைய முகோல்லாஸமே சிறந்தபலன் என்று கூறி, இப்பிரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்; "எங்ஙனேசொல்லினும் இன்பம் பயக்குமே" என்று மாறனும், "புன்கவிதையேலுமெம்பிரார்க்கினியவாறே" என்று அன்பர்தாள் தூளியும் அச்யுதனுடைய அந்தரங்க அபிப்ராயத்தை அறிவித்தார்கள். பண்டைமறைகளை ப்ராஹ்ம க்ஷத்ரிய வைச்யர்களுக்கே அதிகரிக்க யோக்யதையுண்டு. பேதை பாலகர்களுக்கும், சூத்ர சண்டாளர்களுக்கும் சொல்லவும் கேட்கவும் தகுதியான தமிழ்பாஷையிலுள்ள தமிழ்த்திருவேதமிதுவேயாகும். இதின் ஸர்வாதிகாரத்வமே "கொடுமின் கொள்மின்" என்று இப்ரபந்தத்தில் பாடப்பட்டது. இவ்வாழ்வாருடையவும், இப்பிரபந்தத்தினுடையவும் பெருமைகளை,

"ஆராயும் வேதங்களோருநான்காலும்
அயனுலுமரனுலுமறியோண்ணத
நாராயணன்சோரூபரூபமாதி
நலந்திகழும் விபூதியருட்குணங்கள் தங்கும்
ஏராருந் திருமாலை நாற்பத்தைந்து
மிலங்குசராசரமுருகவிசைப்பராவி
காயமோடு கரைந்துநீராளமாதல்
கண்டனந்தன் மீதிலுறை கமலச்செங்கண்
மாயவனுர் பூவிலுறை மங்கையோடு
மனமகிழ்ந்து தொண்டரடிப்பொடியார்தம்மைப்
போயெடுத்துத் திருமார்போடழுந்தப் புல்கப்
புறம்போசிந்ததிலேயாழ்வார்பூண்டயாக்கை
தோயமோடு தோயமுறக் கலந்ததோத்தார்
சுடராழிக் கையனுமத் தொண்டர்தாமும்."

என்று வடிவழகியநம்பிதாஸர் பாடியிருக்கிறார். திருநாமத்தி னுடைய பிரபாவமும், திருநாமஸங்கீர்த்தநம் செய்பவர்களின் ராஜகுல மாஹாத்ம்யமும், இந்திரலோகமாளும் அச்சுவையைக்காட்டிலும் திருநாமஸங்கீர்த்தநரஸத்தின் மேன்மையும் இந்த பிரபந்தத்தில் உத்கோஷிக்கப்பட்டிருக்கின்றன. அச்சுதன் நாமத்தைச் சொல்ல அயோக்யர் கிடையாது என்பதுவே இப்பிரபந்தத்தின் ஸாரார்த்தம்.

இதில் பாடப்பட்டவர் அரங்கமாநகருளான். அவரோ தோஷங் களை அறியாதவர். கொள்வாருமுண்டோ என்று படுகாடுகிடக்கும் அரங்கனுக்கு ஆகாதவர் இல்லை. கர்மயோகம் கிடையாது, ஜ்ஞாந யோகம் கிடையாது, பக்தியோகம் கிடையாது, அர்ச்சாதிகள் செய்யவுமில்லை, கிஞ்சித்காரமுமில்லை, நினைப்புமில்லை, திவ்யதேச வாஸமுமில்லை, விஷயாந்தரப்ராவண்யமுண்டு, செய்யாத பாபங்க ளில்லை என்று குணஶூந்யதையையும், தோஷபூர்த்தியையும் சொல்லி அகலப்பார்த்த ஆழ்வாரை ஆதரம் பெருகவைத்த அழகன் அரங்கனன்றோ!

இதற்கு வியாக்கியானம் செய்தவர் இவ்வாழ்வார் குலத்தவ ராகிய ஸ்ரீமத்க்ருஷ்ணஸூரி. ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அறியவேண்டிய ஸகலஸாரார்த்தங்களும் இந்தப் பிரபந்தத்தில் அடங்கி இருப்பதாக பெரியவாச்சான்பிள்ளை அறிவித்திருக்கிறார். இந்த பிரபந்தத்தின் ஸாரமாகிய "மெய்ம்பொருள்போகவிட்டு" [38-வது] என்கிற பாசுரத்தில் த்வயார்த்தமும், ப்ராப்யப்ராபகங்களும் அறிவிக்கப்படு கின்றனவென்கிறார் ஆச்சான்பிள்ளை. இப்பிரபந்தத்திற்குப்பெரியவாச் சான்பிள்ளை வியாக்கியானம் செய்திருப்பது பாரிலுள்ளோர் பாக்ய மேயாகும். இப்பிரபந்தத்திற்குச் செய்யப்பட்டிருக்கும் வியாக்கியா னத்தைப் படிக்கும்போது, ஆழ்வாருடைய பிரபந்தம் இனிதோ, ஆச்சான்பிள்ளை அழகாக வியாக்கியானம் செய்திருப்பது இனிதோ என்று நிர்ணயிக்கமுடியாமல், மாறிமாறி நினைத்து ப்ரஹ்மாநந்தப் படுகிறோம். யாத்ருச்சிகஸுக்ருதயடியாக அத்வேஷம் பிறந்து, அதடியாக ஆபிமுக்யம் பிறந்து, உபாயமும் உபேயமும் அவனே என்று அறிவதும் அவனருளாலேயே என்பது இப்பிரபந்தத்தினு

லும் இதற்கேற்பட்ட வியாக்கியானத்தினாலும் தெளிவாக விளங்குகிறது. பகவத்கிருபையினால் இந்த கிரந்தம் மார்கழியில் கேட்டையில் பூர்த்தியாயிற்று. மற்ற கிரந்தங்களும் தடங்கலின்றி வெளிவரும்படி அநந்தனும் ஆழ்வாரும் ஆசார்யர்களும் கிருபைபுரிவார்களாக.

பராங்குச திருவவதார ()
வருஷம் 5052 விக்ருதி௵ ()
மார்கழியில் கேட்டை ()

இங்ஙனம்,
தொண்டரடிப்பொடி,
கி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருநக்ஷத்ர தனியன்.

कोदण्डे ज्येष्ठनक्षत्रे मण्डङ्गुडिपुरोद्भवम्।
चोलोर्व्यां वनमालांशं भक्तपद्रेणुमाश्रये॥

கோதண்டே ஜ்யேஷ்டநக்ஷத்ரே மண்டங்குடிபுரோத்பவம்।
சோளார்வ்யாம் வநமாலாம்ஶம் பக்தபத்ரேணுமாஶ்ரயே॥

चोलक्षितौ धनुषि मासि महेन्द्रतारे
यः प्रादुरास मुरजिद्वनमालिकांशः।
रङ्गेशकेलिसखं ऊर्ध्वशिखं द्विजेन्द्रं
भक्ताङ्घ्रिरेणुं अनघात्मगुणं प्रपद्ये॥

சோளக்ஷிதௌ தநுஷி மாஸி மஹேந்த்ரதாரே
யः ப்ராதுராஸ முரஜித்வநமாலிகாம்ஶः।
ரங்கேஶகேளிஸகம் ஊர்த்வஶிகம் த்விஜேந்த்ரம்
பக்தாங்க்ரிரேணும் அநகாத்மகுணம் ப்ரபத்யே॥

வாழித்திருநாமம்.

மண்டங்குடியதனில் வாழவந்தோன் வாழியே
மார்கழியிற் கேட்டைநாள் வந்துதித்தான் வாழியே
தெண்டிரைசூழரங்கரையே தெய்வமென்றான் வாழியே
திருமாலையோன்பதஞ்சும்செப்பினான் வாழியே
பண்டுதிருப்பள்ளியெழுச்சிபத்துரைத்தான் வாழியே
பாவையர்கள்கலவிதன்னைப்பழித்தசெல்வன் வாழியே
தொண்டுசெய்துதுளபத்தால் துலங்கினான் வாழியே
தொண்டரடிப்பொடியாழ்வார் துணைப்பதங்கள் வாழியே.

பெரியவாச்சான்பிள்ளை திருநக்ஷத்ர தனியன்.

सकलद्राविडांनायसारव्याख्यानकारिणम्।
श्रावणे रोहिणीजातं कृष्णसंज्ञमहं भजे॥

ஸகலத்ராவிடாம்நாயஸாரவ்யாக்யாநகாரிணம்।
ஶ்ராவணே ரோஹிணீஜாதம் க்ருஷ்ணஸம்ஜ்ஞமஹம் பஜே॥

வாழித்திருநாமம்.

தண்மை சிங்கம் ரோகிணி நாள் தழைக்கவந்தோன் வாழியே
தாரணியில் சங்கநல்லூர் தானுடையோன் வாழியே
புன்மை தவிர் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே
பூதூர் எதிராசர்தாள் புகழுமவன் வாழியே
மன்புகழ் சேர் சடகோபர் வளமுரைப்போன் வாழியே
மறை நாலின் பொருள்தன்னைப் பகுத்துரைத்தான் வாழியே
அன்புடன் உலகாரியர்தம் அடியிணையோன் வாழியே
அபயப்ரதராஜர் தாள் அனவரதம் வாழியே.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருவரங்கப்பெருமாளரையர் அருளிச்செய்த

* திருமாலைத் தனியன். *

மற்றொன்றும் வேண்டாமனமே மதிளரங்கர்
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ்—உற்ற
திருமாலை பாடுஞ்சீர்த் தொண்டரடிப் பொடியெம்
பெருமானை யெப்பொழுதும் பேசு.

பதவுரை :— மனமே—என் நெஞ்சமே!, மதிள் அரங்கர்—ஸப்தப்ராகாரங்களையுடைய திருவரங்கத்தில் எழுந்தருளியிருப்பவரும், கன்று இனம்—பசுக்கூட்டங்களை, மேய்த்த—மேய்த்தவருமான எம்பெருமானுடைய, கழல் இணை கீழ்—இரு திருவடிகளிலும், உற்ற — ஊன்றிய பக்தியையுடையவரும், திருமாலை பாடும்—'திருமாலை' என்னும் பிரபந்தத்தை பாடுமவரும், சீர்—கல்யாண குணங்கள் பொருந்தியவரும், தொண்டர் அடி பொடி—தொண்டரடிப்பொடி என அழைக்கப்படுமவருமான, எம் பெருமானை — எங்களுடைய ஸ்வாமியை, எப்பொழுதும்—எல்லாக்காலத்திலும், பேசு—அநுஸந்தித்துப்போரு; மற்று ஒன்றும் — வேறு ஒரு புருஷார்த்தமும், வேண்டா—வேண்டுவதில்லை.

: பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த :

தனியன் வ்யாக்யாநம்.

அவ :— (மற்றொன்றும் வேண்டாமனமே) இதில் மநஸ்ஸைக் குறித்து, பகவத்விஷயத்தில் வாசிகமாக அடிமை செய்த ஆழ்வார் திருநாமத்தை நிரந்தராநுஸந்தாநம் பண்ணும்படி சொல்லுகிறது.

வ்யா :— (மற்றொன்றும் வேண்டாமனமே) என்று * “சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லா” என்கிறபடியே, இங்கு “மற்றொன்றும்” என்று பரத்வாதிகளின் பேரைப் பற்றச் சொல்லுகிறதாதல்; புருஷார்த்தாந்தரங்களைப் பற்றச் சொல்லுகிறதாதல். “மற்றொன்றும் வேண்டா” என்று ப்ரியஹிதங்களுக்கு உறுப்பாக வேறொன்றும் வேண்டா என்கிறது. (மனமே) பந்தமோக்ஷங்கள் இரண்டுக்கும் பொதுவான மனஸ்ஸை, அந்தப் பொதுவான ஆகாரத்தைக் குலைத்து, அதில் ஒன்றையே என்றும் அநுபவிக்கப் பார். அதென்னென்னில்; “மதிளரங்கர் கற்றினம் மேய்த்த கழலிணைக் கீழுற்ற திருமாலை பாடும்சீர்த் தொண்டரடிப்பொடி யெம்பெருமானை யெப்பொழுதும் பேசு” என்கிறது. (மதிளரங்கர்) † “மதிள் திருவரங்கத்தானே” என்று இவர் பேசும்படி திருமங்கையாழ்வார் கட்டின மதிளையிட்டு நிரூபிக்கும்படியான கோயிலையுடையவர். ‡ “ஆயபொன்மாமதிள் சூழ்ந்தழகார் தென்னரங்கமே” என்று அவர் தாமும் அருளிச்செய்தார். § “திண்கொடி மதிள் சூழ் திருவரங்கத்தாய்” என்னும்படியான அரங்கர்.

(கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழுற்ற திருமாலைபாடும்) அதாவது :— a “கற்றினம் மேய்த்த வெந்தைகழலிணை” என்று உபக்ரமித்து, b “மழைக்கன்று வரைமுனேந்தும் மைந்தனே” என்றும், c “வளவெழுந்தவளமாட மதுரைமாநகரந்தன்னுள், கவளமால் யானைகொன்ற கண்ணனை அரங்கமாலை, துளபத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடிசொல்” என்றும், அவதாரத்தோடேகூட அரங்கமாலை அநுஸந்தித்துத் தலைக்கட்டிற்று; அதிலே தேங்கினபடுவிறே அர்ச்சாவதாரம். விக்ரஹைகதேஶமான திருவடிகளைச் சொன்னது விக்ரஹத்துக்கும் உபலக்ஷணம். d “அழகியபைம்பொன்” இத்யாதி.

பெரியபெருமாள் திருவடிகளை ஸேவித்தவாறே, “கற்றினம் மேய்த்த வெந்தைகழலிணை” என்னும் ஆகாரம் தோற்றியிருக்கும். அதாவது :— e “கன்றின்பின்போன சிறுக்குட்டச் செங்கமல

---

* திருவாய் (7-10-10). † திருமாலை (42). ‡ பெரிய திரு (5-4-9). § திருவாய் (7-2-3). a திருமாலை (9). b திருமாலை (36). c திருமாலை (45). d பெரியாழ்-திரு (1-2-20). e பெரியாழ் திரு (3-3-4).

வடியும் வெதும்பிஉன்கண்கள் சிவந்தாயசைந்திட்டாய் நீ எம்பிரான்" என்று வடிவிலே தொடைகொள்ளலாம்படியாயிருக்கும். * "காவிரித் தென்னரங்கன் மன்னியசீர் மதுசூதனு! உன்னையிளங்கன்று மேய்க் கச்சிறுகாலேயூட்டி யொருப்படுத்தேன்" என்றும், † "காவிரித் தென்னரங்கன் பண்டவன் செய்த கிரீடை" என்றுமிறே பட்டர் பிரான் அருளிச்செய்தது. "வண்டினங்கள் ஆலிக்குஞ்சோலை அரங்கத்தரவணையான் காலிப்பின்போனகழல்" என்னக்கடவதிறே.

திருக்கைகளைக் கண்டவாறே, § "மழைக்கன்று வரைமுனேந் தும்" a "கொடியேறு செந்தாமரைக்கை" என்னலாயிருக்கும்; b "குன்றேந்திக்கோநிரை காத்தவன்" என்னும் ஆயனாய் அன்று குன்றமொன்றெடுத்தான், அரங்கமாநகரமர்ந்தானிறே. திருமுகமண் டலத்தைக் கண்டவாறே, c "வெண்ணெயுண்டவாயன்" என்று கவ்ய (गव्य) ஸேவை பண்ணின ஆகாரம் தோற்றியிருக்கும். பர்வத்ரயமும் இப்படி ஸர்வசேதந ஸம்ரக்ஷண ஸமர்த்தங்களா யிருக்கும். d கேயத்தீங்குழலூதிற்றும் நிரைமேய்த்ததும்; e நீடுலகுண்டதிறங்கிளர்வாய்; f வையமேழுங்கண்டாள் பிள்ளைவாயுள்; g முற்றமுண்டகண்டமிறே; h வாயினும் வயிற்றினும் வைத் திறே நோக்குவது.

(கற்றினம் மேய்த்த கழலிணைக் கீழுற்ற திருமாலைபாடும்) ஆஶ்ரிதரக்ஷணத்துக்குறுப்பாய் அதிஸுலபமான திருவடிகளுக்கு ஒக்கும்படியான அதிலே ஊன்றி அடிபட்டு; "அடிசூட்டலாகு-மந்தாமம்" என்னும்படி அரங்கமானுக்கும் திருமாலையைப்பாடித் திருவடிகளிலே சூட்டும். i "செய்ய சுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை" என்னக்கடவதிறே. (பாடுஞ்சீர்) பாடுகைதானே இவர்க்கு ஸ்ரீயாய்த்து. (சீர்த்தொண்டரடிப்பொடி) துளபத்தொண் டாய தொல்சீர்த்தொண்டரடிப்பொடியிறே. (தொண்டரடிப்பொடி யெம்பெருமானை) அவர்க்கு "அரங்கநகரேம்பிரான்" என்னும்

* பெரியாழ் திரு (3-3-2). † பெரியாழ் திரு (2-9-11). § திருமாலை (36). a பெரியாழ் திரு (3-5-10). b திருவாய் (7-2-8). c அமல (10). d திருவாய் (6-4-2). e திருவாய் (6-6-3). f பெரியாழ் திரு (1-1-6). g அமல (6). h திருவாய் (2-4-11). i முதல் திருவ (1).

படி, இலங்கையர்கோன் வழிபாடுசெய் கோயிலெம்பெருமான் நம் பெருமாளாயிருப்பர்; இங்கு தொண்டரடிப்பொடி எம்பெருமானை யிருக்கும். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஶேஷபூதரான ஆகாரத்தாலே நமக்கு நாதராயிருப்பர். இப்படி நமக்கு ஸ்வாமியானவரை. † "எப்போதுமீதேசோல்" என்கிறபடியே ஸர்வகாலத்திலும் அநுஸந்தித்துப் போரு. இத்தால் (1) "**गुरोर्नाम सदा जपेत्**" (குரோர் நாம ஸதா ஜபேத்) என்னும் அர்த்தம் சொல்லிற்று.

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்.

தனியன் வ்யாக்யானம் முற்றிற்று.



ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை

அருளிச்செய்த

திருமாலை வ்யாக்யானம்.

श्रीमत्कृष्णसमाह्वाय नमो यामुनसूनवे।
यत्कटाक्षैकलक्ष्याणां सुलभः श्रीधरस्सदा॥

ஸ்ரீமத் க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே।
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலபஶ் ஸ்ரீதரஸ்ஸதா॥

வ்யாக்யாந அவதாரிகை.

நித்யஸூரிகளோடொத்த ப்ராப்தி தமக்கு உண்டாயிருக்க அத்தை அறியாதே, அநாதிகாலம் "தேஹமே ஆத்மா" என்றும், ஶப்தாதி விஷயங்களே போக்யமென்றும் விரும்பி, ஸம்ஸாரத்தில்

† பெரிய திருவ (87).

கைகழிந்த ஆழ்வாரை, பெரியபெருமாள் தம்முடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளுக்கு வாசகமான திருநாமப்ரபாவத்தை நிர் ஹேதுகமாகக் காட்டியருளக்கண்டு, தாமும் அநுபவித்து அநுபுபூ (ருமு) ஷுக்களையும் அநுபவிப்பிக்கவும் வல்லராய்ப் பெரியபெரு மாளையும் உகப்பித்துத் தலைக்கட்டுகிறார்.

ஸம்ஸாரிகளாகிறார்:— ஐஹிகத்தில் புண்யபாபரூபமான கர்மங்களை ஆர்ஜித்தும், ஆமுஷ்மிகத்தில் ஸ்வர்க்கநரகங்களிலே அதினுடைய பலாநுபவத்தைப் பண்ணியும் இப்படி கதாகதம் பண்ணித் திரிவார் சிலராய்த்து. அது தன்னிலும் புண்யபாப ரூபமான கர்மங்களை ஸ்வர்க்கநரகங்களிலே அநுபவித்து கர்ம ஶேஷத்தோடே பூமியிலே கர்ப்பவாஸம் பண்ணுகைக்கு வரும் வழியிலே இவ்வாத்மா படும் எளிவரவை வேதாந்தத்திலே பஞ்சாக்நி வித்யையென்று ஒரு ப்ரதேசத்திலே ஓதிவைத்தது. அதாவது:— யாதநாஶரீரத்தாலே நரகாநுபவம் பண்ணி அச்சரீரத்தை அங்கே பொகட்டு, அநந்தரம் புண்யஶரீரத்தைப் பரிக்ரஹித்து ஸ்வர்க்கா

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருமாலை வ்யாக்யாந அரும்பதவிளக்கம்.

அவதாரிகை:— பரமகாருணிகரான ஆச்சான்பிள்ளை இவ் வாழ்வாருடைய திருநாம வைபவ ஜ்ஞாநம் பகவந்நிர்ஹேதுக கடாக்ஷலப்தமென்று ப்ரமாத்ரு வைபவகதநமுகேந இப்ரபந்த தாத்பர்யத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார் (நித்யஸூரி களோடொத்தவித்யாதி). முதல் மூன்று பாட்டாலே தாம் அநுப வித்து மேல் பதினொருபாட்டாலே அநுபுபூக்ஷுக்களையும் அநுபவிப் பித்து "எம்பிராற்கினியவாறே" என்று பெரியபெருமாளை உகப் பித்துத் தலைக்கட்டுகிறார் என்றபடி. திருநாமத்துக்கு ப்ரபாவமே தென்ன: ஏவம்விதரான ஸம்ஸாரிகளை உஜ்ஜீவிப்பிக்கை என்று ஸம்ஸாரஸ்வபாவத்தை ஸப்ரகாரமாக அருளிச்செய்யா நின்று கொண்டு திருநாமவைபவத்தை அருளிச்செய்கிறார் (ஸம்ஸாரிகளா கிறாரென்று தொடங்கி திருநாமத்தினுடைய வைபவமிருப்பதென்னு மளவும்). (எளிவரவு) துக்கம். (அத்தாலே) ஹிமஸஹிதமான கிரணத்

நுபவம் பண்ணி, அங்கே அச்சரீரத்தைப் போகட்டு, ஸூக்ஷ்ம ஶரீரத்தோடே நிராலம்பநமான ஆகாஶத்திலே பதிக்கக்கடவன்.

ஆதித்யன் தன் கிரணங்களாலே ஹிமவானின் ஹிமத்தை உபாதாநம் பண்ணி, அத்தாலே ஆகாசத்திலே மங்கிக் கிடக்கிற ஆத்மாவை க்ரஹித்து மேகத்திலே புகவிடக்கடவன்; அங்கே அந்த ஹிமம் வர்ஷரூபேண வர்த்தி (वर्धि) க்குமளவும் கிடந்து, வர்ஷதாரைகளோடே பூமியிலே பதிக்கக்கடவன்; அந்த ஜலம் ஸஸ்யத்துக்கு தாரகமாய்ப் புகுமளவிலே தத்த்வாரா ஸஸ்யத்திலே புகக்கடவன்; அந்த ஸஸ்யம் பக்வமாய் அந்நரூபேண பரிணமிக்குமளவும் அங்கே கிடந்து, அந்நமானது புருஷசரீரத்திலே புகுந்து, சுக்லமாய் பரிணமிக்குமளவும் செல்ல அங்கே கிடந்து, ஸ்த்ரீ புருஷ ஸம்யோகத்தாலே ஶுக்லத்வாரா ஸ்த்ரீஶரீரத்திலே புகுந்து, (2) "**पञ्चम्यामाहुतावापः पुरुषवचसो भवन्ति**" (பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தி) என்கிறபடியே கர்ப்பமாய்ப் பரிணமிக்கக்கடவன். கர்ப்பவாஸம் பண்ணும்போது, (3) "**अत्याम्लकटुतीक्ष्णोष्णलवणैर्मातृभोजनैः। अतितापिभिरत्यर्थं वर्धमानातिवेदनः॥**" (அத்யாம்லகடுதீக்ஷ்ணோஷ்ணலவணைர்மாத்ருபோஜநை: । அதிதாபிபிரத்யர்த்தம் வர்த்தமாநாதிவேதந: ॥) என்கிறபடியே மாத்ருபோஜனத்தில் அந்தர்பூதங்களான க்ரூரத்ரவ்யங்களாலே தொடரிலிட்ட ஈயப்போலே துடியா நிற்கும்.

இந்த க்லேஶத்தோடே கர்ப்பதும்பமாகிற பையிலே கட்டுண்டு, அவயவங்களை நீட்டமுடக்கமாட்டாதே, (4) "**क्लेशान्निष्क्रान्तिमाप्नोति जठरान्मातुरातुरः**" (க்லேஶாந்நிஷ்க்ராந்திமாப்நோதி ஜடராந்மாதுராதுர:) என்கிறபடியே க்லேஶேந ஜநித்து, பால்யதசையில்

தாலே என்றபடி. (தொடரிலிட்ட) தொடராவது: ஈயம் உறுக்குகைக்கு உறுப்பான ம்ருந்நிர்மிதபாத்ரவிசேஷம். (கர்ப்ப தும்பம்) கர்ப்பகோளம் (4) "**अधोमुखो वै क्रियते प्रबलैस्सूतिमारुतैः। क्लेशान्निष्क्रान्ति**" (அதோமுகோ வை க்ரியதே ப்ரபலை: ஸூதிமாருதை: । க்லேஶாந்நிஷ்க்ராந்திம்). இத்யாதி (8) "**पापेन महता व्याप्तस्तृषार्तः क्षुधया तथा। क्लेशादुत्क्रान्तिमाप्नोति**" (பாபேந மஹதா வ்யாப்த: த்ருஷார்த்த: க்ஷுதயா ததா। க்லேஶாதுத்க்ராந்திமாப்நோதி) இத்யாதி.

அஶுசிப்ரஸ்ரவங்களிலே கிடந்து, (5) “**कण्डूयनेऽपि चाशक्तः परिवर्तेप्यनीश्वरः। स्नानपानादि चाहारमवाप्नोति परेच्छया॥**” (கண்டூயநேபி சாஶக்த: பரிவர்த்தேப்யநீஶ்வர:। ஸ்நாநபாநாதி சாஹாரமவாப்நோதி பரேச்சயா॥) என்கிறபடியே தின்றவிடத்தைச் சொரிதல், கடித்தவற்றைத் துடைத்தல் செய்யமாட்டாதே, தாரகாதிகளும் பராதீநமாய் இப்படி க்லேஶேந அதிஶைஶவகாலத்தைப் போக்கி, தானே ஒரு ப்ரவ்ருத்தி பண்ண க்ஷமனுனவளவிலே, (6) “**तस्मात् बाल्ये विवेकात्मा यतेत श्रेयसे सदा**” (தஸ்மாத் பால்யே விவேகாத்மா யதேத ஶ்ரேயஸே ஸதா) என்கிறபடியே பாலத்ப்ரவணனாக ப்ராப்தமாயிருக்க, (7) “**बाल्ये क्रीडनकाशक्ताः**” (பால்யே க்ரீடநகாஸக்தா:) என்று லீலையோடே காலத்தைப் போக்கி யௌவநாவஸ்த்தையிலே நரகஹேதுவான விஷயாந்தரங்களோடே போதுபோக்கி, ஜரையிலே வந்து அகப்பட்டு அஶக்தியோடே காலக்ஷேபத்தைப் பண்ணி, நினைவின்றியே இருக்கச்செய்தே மரணம் ப்ராப்தமாக, (8) “**क्लेशादुत्क्रान्तिमाप्नोति याम्यकिङ्करपीडितः**” (க்லேஶாதுத்க்ராந்திமாப்நோதி யாம்யகிங்கரபீடித:) என்கிறபடியே உத்க்ரமண தசையிலே க்லேசத்தை அநுபவித்து அநந்தரம் ப்ருத்யுபாவமுனும்.

இப்படி ஸம்ஸாரிகளுடைய அநர்த்த பரம்பரைகளைக் கண்டு, (9) “**सुहृदं सर्वभूतानां**” (ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்) என்கிறபடியே பரமஸுஹ்ருத்தான ஸர்வேஶ்வரன் இவனுடைய உஜ்ஜீவநார்த்தமாக, (10) “**मानं प्रदीपमिव कारुणिको ददाति**” (மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி) என்கிறபடியே ஶாஸ்த்ரத்தைக் காட்டிக் கொடுத்தான். எங்ஙனே என்னில்; வேதாந்தத்திலே, (11) “**क्षरं प्रधानं**” (க்ஷரம் ப்ரதாநம்) இத்யாதி வாக்யங்களாலே, சிதசிதீஶ்வர தத்வத்ரயங்களையும் பிரியக் காட்டிக்கொடுத்து, அந்தர்யாமி ப்ராஹ்மணத்தாலே, (12) “**एष सर्वभूतान्तरात्मा**” (ஏஷ ஸர்வபூதாந்தராத்மா) என்று ஜாத்யந்தனுக்குக் கண்ணைக் கொடுத்தாற்போலேயும், இருட்டறையிலே விளக்கேற்றிக் காட்டினாற்போலேயும், சேதநாऽசேதங்கள் ஶரீரம், ஈஶ்வரன் ஶரீரி என்றும், ஈஶ்வரனோடு சேதநாசேதநங்களுக்குள்ள ஸம்பந்தத்தைக் காட்டிக்கொடுத்து, (13) “**द्वासुपर्णा**” (த்வாஸுபர்ணா) இத்யாதி வாக்யங்களாலே சேதநனுக்கு அசித்

ஸம்பந்தம் கர்மோபாதிகமென்று காட்டிக்கொடுத்து, (14) "तदा विद्वान् पुण्यपापे विधूय" (ததா வித்வாந் புண்யபாபே விதூய) இத்யாதி வாக்யங்களாலே ஔபாதிகமான அசித்ஸம்ஸர்க்கமற்று, ஒரு தேச விசேஷத்தாலே ஸூரிபோக்யமான போகத்தை அநுபவிக்குமது ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தமென்று காட்டிக்கொடுத்து;

இப்படி ஈஶ்வரன் உபகரித்தவிடத்திலும் பாபப்ராசுர்யத்தாலே இத்தைக் கைவிட்டு வேதபாஹ்யராயும், இதுக்குள்ளே புகுந்து, (10) "तत्रैऽवकेपि चपलाः शलभीभवन्ति" (தத்ரைவ கேபி சபலா: ஶலபீபவந்தி) என்கிறபடியே விளக்கிலே "விட்டில்" என்று சில பதார்த்தங்கள் நசித்துப்போமாபோலே, வேததாத்பர்யம் அறியாமையாலே குத்ருஷ்டிகளாய் நசித்துப்போக, தாம் பண்ணின வேதப்ரதாநம் அகிஞ்சித்கரமாயறுகையாலே ஓலைப்புறத்தில் செல்லாத தேசத்திலே ஏடுத்துவிடும் ராஜாக்களைப்போலே ஸம்ஸாரி ஸஜாதீயனாய் வந்து அவதரித்தவிடத்திலும், * "வைது நின்னை வல்லவா பழித்து" என்கிறபடியே உள்ள ஶக்தியடங்க பகவந் நிந்தைக்குடலாயும் ஹிரண்யராவணாதி ரூபத்தாலே எதிரம்புகோத்து நசித்தும் இப்படி அவதாரமும் கார்யகரமாகாதவிடத்திலும் உடையவன் உடைமையை விடமாட்டாத சாபலத்தாலே இவர்களுடைய ஆபிமுக்யத்திலே அவஸரப்ரதீக்ஷனாய் வர்த்திக்க;

சேதநர் பக்கலிலே யாத்ருச்சிக ஸுக்ருதமென்று ஒன்று பிறக்க, அது வ்யாஜமாக விஶேஷகடாக்ஷம் பண்ணி அத்தாலே அத்வேஷம் பிறந்து, அதடியாகப் பண்ணின விஶேஷகடாக்ஷத்தாலே ஆபிமுக்யம் பிறந்து, அநந்தரம் ஶாஸ்த்ரவாஸனையாலும் ஆசார்யோபதேசத்தாலும் ஈஶ்வரன் நிருபாதிகஶேஷியென்றும், இவ்வாத்மா அவனுக்கு அநந்யார்ஹஶேஷமென்றும் யதாஜ்ஞாநம் பிறந்து, அநந்தரம் ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தத்திலே ருசி பிறக்குமளவும் தன்னுடைய விஶேஷகடாக்ஷத்தாலே புகுர நிறுத்தி "புருஷார்த்த லாபத்துக்கு உபாயமேதோ?" என்று புபு (புபு)த்ஸை பிறந்தவளவிலே, ஶாஸ்த்ரஸித்தமான கர்மாத்யுபாயங்களைக் காட்டிக்கொடுத்து, இது துஷ்கரமென்றும் விளம்பித பலப்ரத

* திருச்சந்த (111).

மென்றும் ப்ரமாதஸப்பாவனையுள்ளதென்றும் இவற்றில் இழிய இராய்த்தவர்களுக்கு வேதாந்தஸித்தமான தன்னுடைய உபாய பாவத்தைக் காட்டிக்கொடுக்க;

பக்தியினுடைய துஷ்கரதையோபாதி ப்ரபத்திநிஷ்டாஹேதுவான மஹாவிஶ்வாஸமும் சிலர்க்குக் கிட்டுகை அரிதாகையாலே இதில் இழியக் கூசினவர்களுக்கு ஸர்வாதிகாரமான யாத்ருச்சிக பகவந்நாம ஸங்கீர்த்தனமே சேதநருடைய பாபத்தைப் போக்கி ஸுக்ருதாநுகூலமாக, கர்மயோகாதிகளிலே மூட்டுதல், ப்ரபத்தியிலே மூட்டுதல், விரோதியைப்போக்கி ப்ராப்யத்தைக் கொடுக்கைக்குத் தானே நிர்வாஹகமாதலாம்படியான வைபவத்தையுடைத்தாயாய்த்து திருநாமத்தினுடைய வைபவமிருப்பது. அதற்கு ப்ரமாணமேதென்னில்; (15) “**किं जपन् मुच्यते जन्तुर्जन्मसंसारबन्धनात्**” (கிம் ஜபந் முச்யதே ஜந்துர்ஜந்மஸம்ஸாரபந்தநாத்) என்றும், (16) “**याति ब्रह्म सनातनं**” (யாதி ப்ரஹ்ம ஸநாதநம்) என்றும் உபோத்காத பலஶ்ருதிகளிலே சொல்லி, நடுவே திருநாமத்தைச் சொல்லுகையாலே, இவ்வாழ்வார் இப்படிப்பட்ட திருநாமத்திலே இழிந்தவராகையாலே அத்திருநாமவைபவத்தைப் பேசுகிறார் இப்ரபந்தத்தாலே.

திருநாமத்தில் இவர் இழிகைக்கடி ஸ்ரீவிஷ்ணுதர்மம். அது தனக்கு வக்தாவார்? ஶ்ரோதாவார்? அது விளைந்தபடி எங்ஙனே என்றால்:— பாண்டவர்களுக்கு இவ்வருகே நாலைந்து தலைமுறை சென்றவளவிலே “ஶதாநீகன்” என்பானொரு ராஜாவுளனாய், அவன் பகவத்விஷயீகாரமுள்ள ஸந்தாநத்திலே பிறந்தானொருவனாகையாலே பரமஸாத்விகனாய், அபிஷிக்தனானவன்றே தொடங்கிச் சிறியத்தைப் பெரியது நலியாதபடி நாட்டை ரக்ஷித்து, “அத்ருஷ்டஶேஷமாக இவர்களுக்கு நம்மால் செய்யலாவதென்?” என்று ஸ்ரீஶௌநகபகவான் பக்கலிலே சென்று, “தேஹபோஷண பராய் மூலையடியே திரிகிற ஸம்ஸாரிகளுக்கு உஜ்ஜீவநோபாயமாயிருப்பதொன்றருளிச் செய்யவேணும்” என்று கேட்க; “காலம் கலி

(அதற்கு) திருநாமம் ஸ்வதந்த்ரோபாயமென்னுமதுக்கு.

“ஆவலிப்புடைமை கண்டாய்” என்கையாலே பெரியபெருமாள் ஶ்ரோதாவென்கிறது.

காலமாயிருந்தது, பாபப்ராசுர்யத்தாலே வேறொன்றுக்கு அதிகாரிக ளில்லை, ஸர்வாதிகாரமான பகவந்நாமஸங்கீர்த்தநமே ஆத்மாக் களுக்கு உஜ்ஜீவநோபாயமாயிருப்பது" என்றருளிச்செய்தான்.

அங்கு ஸ்ரீஶௌநகபவான் வக்தா, ஶதாநீகன் ஶ்ரோதா. இங்கு ஆழ்வார் வக்தா, பெரியபெருமாள் ஶ்ரோதா. அங்கு அஜ்ஞாத ப்ரஶ்நம்; இங்கு ஜ்ஞாத ப்ரஶ்நம். ஜ்ஞாதம் ப்ரஶ்ந விஷயமாவானென்? என்னில், (17) "**किं मृष्टं सुतवचनं**" (கிம் ம்ருஷ்டம் ஸுதவசநம்) என்கிறபடியே, ஆழ்வார் வாயாலே திரு நாமவைபவத்தை அருளிச்செய்யக்கேட்கையிலுண்டான ப்ரீதியாலே. இன்னமும் இவ்வாழ்வாருக்கு பகவத்விஷயத்தை ப்ரகாசிப்பிக்கிற ஶ்ருதிகளிலும் வேதோபப்ருஂஹணம் பண்ணின ரிஷிகளிலும், அல்லாத ஆழ்வார்களிலும், இவர்க்கு நெடுவாசியுண்டு; எங்ஙனே யென்னில்; (18) "**यतो वा इमानि भूतानि**" (யதோ வா இமாநி பூதாநி) இத்யாதி வாக்யங்களாலே ஜகஜ்ஜந்மஸ்திதிலயஹேதுவான ஜகத்காரணவஸ்துவைச் சொல்லி, (19) "**कारणन्तु ध्येयः**" (காரணந்து த்யேய:) என்கிறபடியே அதுவே உபாஸ்யமென்று இவ் வளவாலே த்யேயவஸ்துவைச் சொல்லி, "ஸத் ப்ரஹ்மாத்மா" இத்யாதி ஸாமாந்யவாசி ஶப்தங்களுக்கு விஶேஷாகாங்க்ஷை உண் டாகையாலே ஸ்ருஷ்டிவாக்யகதிஸாமாந்ய * (விஶேஷ)ந்யாயத் தாலே, (20) "**एको ह वै नारायण आसीत्**" (ஏகோ ஹ வை நாரா- யண ஆஸீத்) என்று விசேஷித்தது; இவ்வளவாய்த்து ஶ்ருதி சொல்லிற்று; வேதோபப்ருஂஹணம் பண்ணின ரிஷிகள், (21) "**अजायमानो बहुधा विजायते**" (அஜாயமாநோ பஹுதா விஜாயதே)

(ஸர்வாதிகாரம் என்றவிடத்திலே 16(a) "**वेदान्तगो ब्राह्मणः स्यात्**" (வேதாந்தகோ ப்ராஹ்மணஸ்யாத்) இத்யாதி (17) "**किं मृष्टं सुतवचनं पुनरपि मृष्टं तदेव सुतवचनम्। मृष्टादपि मृष्टतरं तदेव परिपक्वं सुतवचनम्॥**" கிம் ம்ருஷ்டம் ஸுதவசநம் புநரபி ம்ருஷ்டம் ததேவ ஸுதவசநம் । ம்ருஷ்டாதபி ம்ருஷ்டதரம் ததேவ பரிபக்வம் ஸுதவச நம்॥) (இன்னமும்) பெரியபெருமாள் ஶ்ரோதாவாகவும் தாம் வக்தாவுமான ஏற்றத்துக்கு மேலே.

---

* குண்டலிதமதிகம்.

என்கிற ஶ்ருத்யுபப்ரும்ஹணமான இதிஹாஸபுராணமுகத்தாலே திருவவதாரங்களை ப்ரகாஶிப்பித்தார்கள்; அதில் ஸ்ரீவால்மீகி பகவான் ஸ்ரீராமாவதாரத்திலே மண்டினன்; ஸ்ரீபராஶரபகவான் க்ருஷ்ணாவதாரத்திலே மண்டினன்; ஸ்ரீஶௌநகபகவான் அர்ச்சாவதார வைபவத்தை, (22) "**तामर्चयेत् तां प्रणमेत् तां भजेत् तां विचिन्तयेत्**" (தாமர்ச்சயேத் தாம் ப்ரணமேத் தாம் பஜேத் தாம் விசிந்தயேத்) இத்யாதிகளாலே ப்ரகாஶிப்பித்தான்.

ஆழ்வார்களிலே முதலாழ்வார்கள் மேன்மைக்கெல்லையான பரத்வத்திலும் நீர்மைக்கெல்லையான திருமலையிலும் மண்டினர்கள்; நம்மாழ்வாரும் பெரியாழ்வாரும் க்ருஷ்ணாவதாரத்திலே ஊன்றியிருப்பர்கள்; திருமங்கையாழ்வார் உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றிலும் மண்டினர்; அர்ச்சாவதார ஸாமாந்யமுமன்றிக்கே பெரியபெருமாளையல்லது வேறறியா திருப்பாரொருவராய்த்து இவர்.

அர்ச்சாவதார ஸாமாந்யத்திற்காட்டில் கோயிலுக்கு ஏற்றமென்? என்னில்; காவேரியானது ப்ரவாஹமும் ஏகரூபமாய் ஸ்தலமும் அதுவாயிருக்கச்செய்தே தீர்த்த விஶேஷங்களிலே ரஸ விஶேஷங்களுண்டாகிறுப்போலே, போக்யதாதிஶயத்தால் வந்த ஏற்றம் வேறொரு இடத்துக்கில்லை; அல்லாதாரில் இவர்க்கு உண்டான ஏற்றம்போலே ப்ரபந்தாந்தரங்களிற்காட்டில் இப்ரபந்தத்துக்கு

(தீர்த்த விஶேஷம்) துறைவிஶேஷம்.

த்ரிமூர்த்திஸாம்யத்தை நிர்வஹிக்கவேண்டும் அருமையாவது: த்ரிமூர்த்திஸாம்யப்ரமத்தை (23) "**मध्येविरिञ्चगिरिशं प्रथमावतारः**" (மத்யேவிரிஞ்சகிரிஶம் ப்ரதமாவதார:) என்கிறபடியே அவதார ப்ரயுக்தஸாம்யபரமென்று நிர்வஹிக்கவேண்டும் அருமை என்றபடி. இது திருப்பல்லாண்டு ப்ரவேஶத்திலே இவர் அருளிச்செய்த ப்ரக்ரியை. ஶப்தத்தினுடைய செவ்வையாலே ஸ்வத: அர்த்தபோதகத்வமுண்டானாலும் ப்ராதீதிகார்த்தப்ரகாஶத்வமொழிய, தாத்பர்யம் துரவகாஹமாகையாலே தத்ப்ரகாஶத்வம் கூடுமோவென்ன அருளிச்செய்கிறார் (கடலித்யாதி).

அவதாரிகை அரும்பதம் முற்றிற்று.

நெடுவாசியுண்டு. எங்ஙனே என்னில்; * "நீராய் நிலனாய்" என்று தொடங்கி * "சிவனாய் அயனாய்" என்று சேதநாசேதநவாசி ஶப்தங்களாலே ஈஶ்வரனைச் சொல்லுகிற இந்த ஸாமாநாதிகரண்யத்துக்கு, "அநுப்ரவேஶக்ருதம் ஸாமாநாதிகரண்யம்" என்று நிர்வஹிக்க வேண்டும் அருமையாதல், † "முனியே நான்முகனே முக்கண்ணப்பா" என்று தோற்றுகிற த்ரிமூர்த்திஸாம்யத்தை நிர்வஹிக்கவேண்டும் அருமையாதல், இன்னமும் ஶப்தத்திலருமையாலே ஸ்வார்த்தத்தை அறிகைக்கு அருமைப்படவேண்டுதல் செய்யும் இக்குறைகள் ஒன்றுமின்றிக்கே இருக்கையும்; இன்னமும் கடல் போராழமாயிருக்கச்செய்தேயும் நீர்த்தெளிவாலே தரை தோற்றுமாபோலே ஶப்தத்தின் செவ்வையாலே ப்ரமேயம் கனத்திருக்கச்செய்தேயும் உள்ளதடங்கத் தோற்றும்படி இருக்கையும்; இன்னமும் ப்ரணவம்போலே ஶப்தம் அத்யல்பமாய் அர்த்தக்ரஹணம் அரிதாயிருத்தல், மஹாபாரதம்போலே பெருத்துத் தாத்பர்யம் அறிய அரிதாயிருத்தல், இவ்விரண்டு குறையுமன்றிக்கே, ஒரு சேதநனுக்கு ‡ ஜ்ஞாதவ்யங்களை-பரந்த சடங்குகளை-சுருங்க ப்ரயோகவ்ருத்தி செய்து கொடுத்தாப்போலே ஸகலார்த்தங்களும் இப்ரபந்தத்துக்குள்ளே உண்டாகையாலும் ப்ரபந்தாந்தரங்களில் காட்டில் இப்ரபந்தத்துக்கு நெடுவாசி உண்டு.

மயர்வற மதிநலமருளப்பெற்ற

தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிச்செய்த

திருமாலை.

1\. காவலிற் புலனைவைத்துக் கலிதன்னைக் கடக்கப்பாய்ந்து
நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர்தலைகள்மீதே
மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ நின்னாமங்கற்ற
ஆவலிப்புடைமைகண்டா யரங்கமாநகருளானே.

பதவுரை :— மூ உலகு — எல்லா உலகங்களையும்; உண்டு— (ப்ரளய காலத்திலே) திரு வயிற்றிலே வைத்து (ரக்ஷித்து), உமிழ்ந்த — (பின்னர்) வெளிப்படுத்திய, முதல்வ — ஜகத்காரண பூதனே !, நின் நாமம் கற்ற—உன்னுடைய திருநாமத்தை (ஆசாரி

---

* திருவாய் (6–9–1). † திருவாய் (10–10–1). ‡ ஜ்ஞாதவ்யமாய்.

யன் மூலமாக) கற்றதனாலுண்டான, ஆவலிப்புடைமை—கர்வத்தினாலே, புலனை—பஞ்சேந்திரியங்களையும், காவல் இல் வைத்து—காவலில்லாமல் கண்டபடி திரியவிட்டு (அப்படியிருந்தும்), கலி தன்னை—பாபராசியை, சடக்க பாய்ந்து — வாஸனையுடன் உதறித் தள்ளி, நாவலிட்டு—வெற்றிக்கூச்சலிட்டு, நமன் தமர் தலைகள் மீதே—யமன், அவனுடைய கிங்கரர்கள் இவர்களின் தலைகள் மேலே, உழிதருகின்றோம் கண்டாய்—அடியிட்டுத் திரிகின்றோம் கிடாய்.

அவ:— முதல் பாட்டு. திருநாமம் யமவஶ்யதையைத் தவிர்த்துத் தருமென்று இதினுடைய பாவநத்வத்தையும், திரு நாமம் கற்றாருடைய ராஜகுலமாஹாத்ம்யத்தையும் சொல்லுகிறது.

வ்யா:— (காவலில் புலனைவைத்து) காவலில்லாதபடி இந்த்ரியங்களை வைத்து. அதாகிறது: மேல்சொல்லுகிற லாபங்களுக்கு அநுகூலமாகச் செய்ததொன்றில்லை என்கையும், அவ்வளவேயன்றியே, (24) "नृपशुः" (ந்ருபஶு:) என்னும்படியே விஷய ப்ராவண்யங்களில் நியதியின்றிக்கே போந்தபடியும் விஹிதங்களை அநுஷ்டித்தல் நிஷித்தங்களைக் கைவிடுதல் செய்யாதவனென்கை. இதுக்கடியாகக் கொண்டிழிந்த ஸ்ரீவிஷ்ணுதர்மத்திலும், (25) "रागादिभिरनिर्जितैः" (ராகாதிபிரநிர்ஜிதை:) என்று "அஜிதேந்த்ரியரானவர்களுக்கும் பகவத்ப்ராப்த்யுபாயமேது" என்றிறே கேட்டது. ஆக இப்படிச் சேதனன்றான் மூலையடியே திரிந்தாலும் அவன் தோஷங்களைப்போக்கி மேல் சொல்லுகிற நன்மைகளைக் கொடுக்கும் படியாய்த்துத் திருநாமத்தினுடைய ப்ரபாவமிருப்பது. ஒருவன் விஷதஷ்டனானால் விஷவித்யையில் குஶலனாயிருப்பானொருவன், "நீ

அரு:— முதற்பாட்டு. (காவலித்யாதி) "அநுகூலமாகச் செய்ததொன்றில்லை என்கை" என்றது, பலிதமான தாத்பர்யம். அடைவே உக்தவிரணம் (விஹிதங்களையித்யாதி). காவலில்லாதபடி புலனை வைத்திருக்க மேற்சொல்லுகிற பலங்கள் ஸித்திக்கக் கூடுமோ? என்ன அருளிச்செய்கிறார் (இதுக்கடியாகவித்யாதி). (இதுக்கடியாகக்கொண்டிழிந்த) திருநாமம் சொல்லுகைக்கு மூலமாகக் கொண்டிழிந்த என்றபடி. (என்றிறே கேட்டது) அதுக்குத் திருநாமஸங்கீர்த்தநமே உபாயமென்றிறே ப்ரதிவசநம். திருநாமந்தான்

ஸுகமே எண்ணெய் வார்க்கவுமாம், குளிக்கவுமாம், உறங்கவுமாம், ஸ்வைரஸஞ்சாரம் பண்ணவும் அமையும், நான் அழகிதாகப் போக்கித் தருகிறேன்" என்னுமிறே; அப்படியேயாய்த்து ஸம்ஸார விஷதஷ்டனைக் குறித்துத் திருநாமப்ரபாவமிருப்பது.

"வைத்து" என்கிறவிது புத்திபூர்வகமாக அநீதியிலே மூட்டிப் போந்தேனென்கை. காவலில்லாதபடி என்றால் ஶப்தம் வசிக்குமோ வென்னில்: மீமாம்ஸகர் ஶப்தத்தை நியமித்தாகிலும் அர்த்தத்தை முக்யமாகக் கொள்ளுமாப்போலே, இங்கும் அர்த்தகௌரவத்தாலே ஶப்தத்தை நியமித்துச் சொல்லுகிறோம். அங்ஙனன்றியே, காவலிலே புலனை வைத்தென்னவுமாம். அந்தப் பக்ஷத்தில் இது ஸாதநகோடியில் புகாதே பலகோடியிலே புகக்கடவது. அதாவது: இதர விஷயங்களிலே மண்டித் திரிந்த இந்த்ரியங்களைத் திருநாமத்தை அண்டைகொண்ட பலத்தாலே சிறையிலே வைத்தபடி. அராஜகமாய்க் கிடந்தகாலம் குறும்பு செய்தாரை, ராஜகீயமானவாறே ராஜாவை அண்டைகொண்டு சிறையிலே வைக்குமாப்போலே. அதவா, அப்ராப்த விஷயங்களிலே மண்டித்திரிந்த இந்த்ரியங்களை ப்ராப்த விஷயங்களிலே மூட்டினேன் என்னவுமாம். (26) "पुंसां दृष्टिचित्तापहारिणं" (பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்) என்னும்படியான விஷயமாகையாலே அப்ராப்தவிஷயங்களில் போகாதபடி தன்பக்கலிலே ஆக்கிக்கொள்ளவல்ல வயிரவுருக்கான விஷயமிறே.

ஸ்வைரஸஞ்சாரம் பண்ணினவனுக்கு பலப்ரதமோ? என்ன (ஒருவனித்யாதி). (ஶப்தம் வசிக்குமோவென்னில்) என்றது, "காவலில்" என்றது காவலிலே என்னுதல்; காவலில்லாத புலனென்னுதலொழிய, காவலில்லாதபடி என்று ஶப்தம் வசிக்குமோவென்னிலென்றபடி.

(அர்த்தகௌரவம்) திருநாமவைபவம். அப்போது திருநாமத்துக்கு வைபவமில்லையே? என்ன அருளிச்செய்கிறார் (அந்தப் பக்ஷத்திலித்யாதி) மூன்றாமர்த்தத்துக்கு ஶப்தநிர்வாஹம் "காவலில்லாத புலனை" என்று. மூட்டினது கொண்டு ப்ரவசநமாமோ? என்ன அருளிச்செய்கிறார் (பும்ஸாமித்யாதி). கலி-பாபமாதல், காலமாதல். தன்னை-கௌரவமாதல், எனக்கு ப்ரதியான தன்னை

(கலிதன்னைக்கடக்கப்பாய்ந்து) அஜிதேந்த்ரியத்வத்துக்கு அடியான பாபராசியை வாஸனையோடே போக்கி. "தன்னை" என்றது த்ருஷ்டத்தில் விஷயப்ராவண்யஹேது, அத்ருஷ்டத்தில் நரகஹேது, பகவத்வைமுக்யஹேது, தேஹாத்மாபிமாநஹேது, இன்னமும் அநர்த்தங்களுக்கு அடியான கனத்தை நினைத்து. என்னை நியமித்துப்போந்தது தன்னையே, நான் இப்போது நியமித்தேன் என்கை. "கடக்க" என்றது அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரிலே ஒருவனென்னலாம்படி இருக்கை. அதாகிறது: வந்து கழிந்ததென்று தோற்றாத படி இருக்கை. "கலி" என்று காலபரமானபோது க்ருதயுக புருஷர்களிலே ஒருவனென்று சொல்லலாம்படி இருக்கை. திருவடி ஸமுத்ரதரணம் பண்ணினாப்போலே இவர் பாபஸமுத்ரத்தைக் கடக்க வல்லரானார்.

"நின்னுமங்கற்ற" என்று திருநாமவைபவத்தாலே வந்த வித்தை தந்தலையாலே வந்ததாகச் சொல்லுவானென்? என்னில்; திருநாமத்துக்குள்ளதொரு ஸ்வபாவமாய்த்து இது. இராமடமூட்டு வாரைப்போலே முகம் தோற்றாமே நின்று உபகரிக்கையாலே இவன் தானே செய்துகொண்டானாக அபிமாநிக்கலாம்படியிருக்கும். இனி பலம் தன்னதாகையாலே "பாய்ந்து" என்னத்தட்டில்லை. தாம் தேஹஸம்ஸ்ருஷ்டராயிருக்கச்செய்தேயும் இத்தை "கடந்து" என்னலாம்படியிறே பெரியபெருமாள் இவரை விஷயீகரித்தது.

(நாவலிட்டுழிதருகின்றோம் நமன்தமர்தலைகள்மீதே) பாப பலத்தை அநுபவிப்பிக்கும் யமனுடைய தலையிலும் அவன் மனுட்டி தலையிலும் அடியிட்டு ஸஞ்சரியா நின்றோம். நலிந்து போந்த யமபடரை ஒருபேரையிட்டுத் துகைக்கிறார்காணும். "நாவலோ

என்னுதல். இதில் இரண்டாமர்த்தம் (என்னை நியமித்தித்யாதி). "கடக்கப்பாய்ந்து" என்றதுக்கு இரண்டு தாத்பர்யம்; அவ்வருகுபட்டவரென்னும்படி நிரஸித்தென்னுதல். அநாயாஸேந நிரஸித்தென்னுதல். இரண்டாவது (திருவடியித்யாதி).

ஹேத்வந்தரம் (இனிபலமித்யாதி). "கடக்கப்பாய்ந்து என்றதின் முந்தின தாத்பர்யத்திலே (தாம்தேஹேத்யாதி). "தமர்"

நாவல்" என்றும், "அறையோவறை" என்றும், தோற்றவர்கள் முன்னே ஜயித்தவர்கள் சொல்லும் சொல்லு. முன்பு யமாதிகள் பேர்கேட்க அஞ்சிக்கிடந்தவர், திருநாமத்தை அண்டைகொண்ட பலத்தாலே யமன் வாசலிலே சென்று * (தலையிலே அடிவைத்து) அறைகூவுகிறார் இப்போது, வாலிபேர்கேட்க அஞ்சி, சுரமடைந்து கிடந்த மஹாராஜர், பெருமாளை அண்டைகொண்ட பலத்தாலே கிஷ்கிந்தா த்வாரத்திலே சென்று அறைகூவினாப்போலே.

அங்கு நாமிபலம்; இங்கு நாமபலம். "உழிதருகின்றோம்" என்றது, தம் மிடுக்குத்தோற்றநின்று நிர்ப்பயஸஞ்சாரம் பண்ணுகிறபடி. "பாபத்துக்கு நீ எழுதிவைத்த பட்டோலையைக்கொண்டு வரவல்லையாகில் புறப்படாய்" என்றாப்போலே இருக்கிறதாய்த்து. "உழிதருகின்றோம்" என்கிற பஹுவசநத்தாலே, திருநாமம் ரஸிக்க வாயிலே பட்டவாறே இவர் ஸதஸ்யாகமாகப் பணைத்தபடி. அதவா, இதின் இயலை அப்பஸித்து இதில் அத்வேஷமுடையாரையும் கூட்டிக்கொள்ளுகிறாராய்த்து. ஸமுத்ரலங்கநம் முதலாக லங்கையிலுண்டான பராக்ரமமெல்லாம் திருவடி தானொருவனுமே செய்தானாயிருக்க, பிராட்டியைக்கண்ட ப்ரீதிக்குப் போக்குவீடாக மதுவநமழிக்கிற பலத்திலே எல்லா முதலிகளுக்கும் அந்வயமுண்டானாப்போலே, ஒருத்தனுக்கு ராஜகுலஸம்பந்தம் உண்டானால் அவன் பந்துக்களும் அவனை என்னென்றாரும் அடங்க வாழக்கடவதிறே; அவ்வளவும் இல்லையாகிறதன்றே பகவத்ஸம்பந்தத்துக்கு.

என்று, அந்தரங்கஸப்பந்திகளாய், அத்தாலே மணாட்டியைச் சொல்லுகிறது. இப்ரபந்தத்திலியலை அதிகரித்து இதில் அத்வேஷமுண்டானமாத்ரம் கொண்டு ப்ரீதிபூர்வகமாகத் திருநாமம் சொன்ன தம் பேறு உண்டாகக்கூடுமோ என்ன அருளிச்செய்கிறார் (ஸமுத்ரலங்கநமித்யாதி). பரிஹாராந்தரம் (ஒருத்தனுக்கித்யாதி). "உழிதருகின்றோம்" என்றதின் முந்தின தாத்பர்யத்துக்குச்சேர "நமன்தமர்" என்றதுக்கு மணாட்டிமார் என்று அர்த்தமருளிச்செய்தது, இரண்டாம் தாத்பர்யத்துக்குச்சேர "தமர்" என்றதுக்கு அர்த்தாந்தரம் (உழிதருகின்றோமித்யாதி).

---

* குண்டலிதமதிகம்.

"உழிதருகின்றோம்" என்று பலரையும் கூட்டிக்கொள்ளுகையாலே இவர்களுக்கெல்லாம் ஸஞ்சாரஸ்தலம் வேணுமென்று அவன் பரிகரத்தையும் கூட்டிக்கொள்ளுகிறார். லோகத்திலே பாபம் பண்ணினார் தத்பலாநுபவத்துக்கு அஞ்சி யமன் பேரிடுவார், அவனுடைய லேககன் பேரிடுவாராய், "யமம் தர்ப்பயாமி, சித்ரகுப்தம் தர்ப்பயாமி" என்று ஆராதியா நிற்க, திருநாமத்தை அண்டைகொண்ட பலத்தாலே அவர்கள் தலையிலே அடியிடுகிறோம் என்கிறாரிறே இவர். தம்மைக் கீழ் நலிந்த யமாதிகளை இப்போது ஒருபேரையிட்டுத் துகைக்கிறார் காணும். இவர் தமக்கு விஜயமாகச் சொல்லுகிறார் இத்தனை போக்கி; அவன்தான் தன்தலைகண்டது திருநாமங்கற்றார் திருவடிகளிலே வணங்கவென்றாய்த்திருப்பது. (27) "प्रणामं येऽपि कुर्वन्ति तेषामपि नमो नमः" (ப்ரணாமம் யேபி குர்வந்தி தேஷாமபி நமோ நம:) என்னக்கடவதிறே.

(28) "स्वपुरुषमभिवीक्ष्यपाशहस्तं—प्रभुरहमन्यनृणां न वैष्णवानां" (ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாஶஹஸ்தம்—ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம்) என்றது கேவலம் தேஹபோஷணபரராய் இருப்பார்க்குக் காண் நான் நிர்வாஹகனாயிருப்பது, மற்றைப்படியே வைஷ்ணவர்கள் எனக்கு நிர்வாஹகராய்க்காண் இருப்பர் என்றபடி. * "திறம்பேன்மின் கண்டீர்—இறைஞ்சியும் சாதுவராய்ப் போதுமின்களென்றான்" இவர்களைக் கண்டால் அநுகூலவ்ருத்திகளைப்பண்ணி தாந்தராய்ப்போருங்கோள் என்கிறான். இப்படித் தானும் பயப்பட்டுத் தன் படரையும் நியமித்துக்கொண்டிறே யமனிருப்பது.

லோகமடங்க யமபடபீதராயிருக்க, "நமன்றமர் தலைகள்மீதே நாவலிட்டுழிதருகின்றோம்" என்கைக்கு வந்த தன்னேற்றமென்? என்று பெரியபெருமாள் திருவுள்ளமாக, (மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ) என்கிறார். ப்ராதேஶிகனைப் பற்றினேனாகிலன்றோ அவனுக்கு அஞ்சவேண்டுவது; ப்ரளயாபத்திலே ஸகலலோகங்களையும் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்து, அங்கிருந்து நெருக்குண்ணாதபடி

"மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ" என்றத்தாலே ஸர்வநிர்வாஹகத்வம் பலிதம். (ப்ராதேஶிகன்) ஒரு தேஶத்துக்கு நியாமகன். "நாமம்

---

* நான்-திருவ (68).

வெளிநாடுகொணப் புறப்படவிட்ட ஜகத்காரணபூதனானவனே!; ப்ரளயாபத்திலும் ஸ்ருஷ்டிவேளையிலும் அந்த யபாதிகளோடு என்னோடு வாசியற ஸர்வநிர்வாஹகனானவனல்லையோ? "நம்மைப் பற்றி உமக்கு இந்த நன்மை எல்லாம் உண்டாய்த்தென்றீரே?" என்ன, உன் அருகு வந்திலேன், (நின்னாமங்கற்ற ஆவலிப்பு) உன் திருநாமத்தைக் கற்ற பலமென்னுதல்; கர்வமென்னுதல்.

"நின்னாமம்" என்றது, * ஓராயிரமாயுலகேழளிக்கும் பேரன்றே; தேவரீரைப்போலேயோ திருநாமம்; கட்டிப்பொன்னுக்கும் பணிப்பொன்னுக்கும் உள்ள வாசிபோராதோ தேவரீர்க்கும் திருநாமத்துக்கும்; மறுவலிடும் ப்ரளயாபத்திலன்றோ தேவரீர் எடுத்தது, ஸம்ஸாரப்ரளயத்தில் நின்றும் எடுக்கும்போது தேவர் திருநாமம் வேண்டாவோ? † "நீளரவைச் சுற்றிக்கடைந்தான் பெயரன்றே தொல்நரகைப் பற்றிக்கடத்தும்படை." "மந்த்ரம்" என்னாதொழிந்தது:—காலநியமமென்ன, அதிகாரிநியமமென்ன, இவை தொடக்கமானவை வாராமைக்காக. இடறினவன் "அம்மே" என்னும்போது ஒரு சடங்கு வேண்டாவிறே.

நஞ்ஜீயர், "அப்ரயதனைக்கொண்டு திருநாமம் சொல்லலாமோ? ஆகாதோ?" என்று பட்டரைக் கேட்க: "கங்காஸ்நாநம் பண்ணப் போமவனுக்கு உவர்க்குழியிலே தோய்ந்து போகவேணுமோ? மேலுண்டான நன்மைகளைப் பண்ணிக்கொடுக்கவற்றானது கீழுள்ள அசுத்தியைப் போக்கமாட்டாதோ? என்றருளிச்செய்தார். வாயாலே திருநாமம் சொல்லுகைக்கு ஆகாதாரில்லை; மாத்ருகாதுகனுக்கும் கைசலித்தால் அம்மே என்ன ப்ராப்தி உண்டாயிறே இருப்பது. "கற்ற" என்றது, ஆசார்யோச்சாரணாநுச்சாரண க்ரமத்தாலே வந்ததாயிருக்கை. பெரியபெருமாள்

கற்ற ஆவலிப்பு" என்கைக்குத் திருநாமத்துக்கு ஏற்றபேதென்ன அருளிச்செய்கிறார் (நின்நாமமென்றதித்யாதி). (திருநாமம்) என்றது திருமந்திரம். (அப்ரயதன்) அஶுத்தன். ஈஶ்வரனை இல்லை செய்கிறவர்களுக்குத் திருநாமம் சொல்லப் ப்ராப்தியுண்டோ? என்ன அருளுகிறார் (மாத்ருகாதுகனித்யாதி). தாத்பர்யாந்தரம் (ஸார்த்த

---

* திருவாய் (9—3—1). † முதல் திருவ(81).

சொல்லுவிக்க, அநந்தரம் சொன்னவராய்த்து இவர். (கற்ற) என்றது ஸார்த்தமாகவன்றிக்கே ஶப்தமாத்ரத்தை அப்யஸிக்கை.

(ஆவலிப்புடைமை) வைஶ்ரவணனென்னுமாப்போலேயாய்த்துத் திருநாமஸம்பந்தத்தால் வந்த ஐஶ்வர்யம். (கண்டாய்) இவ்வர்த்தம் உபதேசிக்க வேண்டியிருந்ததோ, என் வடிவிலே தெரியாதோ? ரஸாயந ஸேவை பண்ணினாரையும் மண்தின்றாரையும் வடிவிலே தெரியாதோ? நான் பண்டையவனென்று தோற்றாநின்றதோ? மண்தின்ற உன் † முகம்போலே இருந்ததோ என்முகமும். (அரங்கமாநகருளானே) இங்கு வந்து சாய்ந்தருளிற்றுத் திருநாமம் சொல்லவல்லானொருவனைக் கிடைக்கவற்றன்றோ என்னும் நசையாலேயன்றோ? ஸத்யஸங்கல்பராகையாலே தேவரீருடைய நினைவு ஸபலமாகப்பெற்றதிறே. (மாநகர்) ராஜா இன்னமண்டபத்தே இருந்து நினைப்பிட்டானென்றால் பின்னை அவன்தன்னாலும் தவிர்க்கவொண்ணாதாயிருக்குமாபோலே. இங்கேயிருந்து விஷயீகரித்ததென்றால் இனி தேவராலும் தவிர்க்கப்போமோ?

மாகவித்யாதி). (ரஸாயநம்) போஷகத்ரவ்யம். "மாநகர்" என்றதுக்கு, நினைப்பிட்டது தப்பவொண்ணாத ஸ்தலமென்னுதல், நிர்வாஹக ஸ்தலமென்னுதல். அத்தை அருளிச்செய்கிறார் (ராஜேத்யாதி). 1.

---

* திருமாலை சின்னஅரும்பதம்.

அரு:— முதற்பாட்டு. புருஷார்த்தஸித்திக்கு ஜிதேந்த்ரியத்வம் சொல்லவேண்டியிருக்க, அஜிதேந்த்ரியத்வம் சொல்லவேண்டுவானென்? என்ன அருளுகிறார் (இதுக்கடியாகவித்யாதி). திருநாமந்தான் ஸ்வைரஸஞ்சாரம் பண்ணினவனுக்கு பலப்ரதமாமோவென்ன (ஒருவனித்யாதி). (அர்த்தகௌரவம்) திருநாமப்ரபாவம். இந்த்ரியங்களைப் புறம்பு போகவொட்டாதே தன்பக்கலிலே துவக்கிக் கொள்ளுகையாலே "பகவத்விஷயத்தில் என்கிறது மூன்றாமர்த்தம். "கலி-பாபமாதல், காலமாதல். தன்னை-கௌரவமாதல், எனக்கு ப்ரதியான தன்னையென்னுதல்" என்று அருளிச்செய்கிறார் (என்னை

---

* திருமாலை சின்ன அரும்பதம் அந்தந்தப் பாசுரத்தின் கடைசியில் அச்சிடப்பட்டிருக்கிறது. † (பா) உடம்பு

(மாநகர்) ஸாம்ஸாரிகமான துர்வ்யவஹாரம் அறும் இடம். முன்பு அநீதியிலே கைவளர்ந்து அஸதஸ்யரும் நால்வரிருந்த விடத்தில் சென்றேறமாட்டாதே இருந்தவன், தனக்கே ஒரு ராஜ குலஸம்பந்தமுண்டானல் ஸதஸ்ஸை மதியாதே சென்றேறுகையும், அவர்கள் ப்ரஸாவஹிக்கையுமாயிறே இருப்பது; அப்படியே முன்பு யமாதிகளுக்கு அஞ்சிக்கிடந்து இடமறியாதே போந்தவர், இப்போது திருநாமஸம்பந்தத்தாலே யமாதிகள் தலையிலே அடி யிட்டுத் திரியும்படியான ராஜகுலத்தைச் சொல்லிற்றாய்த்து. 1.

---

2. பச்சைமாமலை போல்மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா! அமரரேறே! ஆயர்தம் கொழுந்தேயென்னும்
இச்சுவைதவிர யான்போ யிந்திரலோகமாளும்
அச்சுவைபெறினும்வேண்டே னரங்கமாநகருளானே.

பதவுரை:— அரங்கமாநகருளானே—அடியவர்களுக்காகத் திருவரங்கத்தில் நித்யவாஸம் செய்யுமவனே!, பச்சை மா மலை போல் மேனி—பசுமை நிறமுள்ள பெரிய மலைபோன்ற திருமேனியையும், பவளம் வாய்—பவளம்போன்ற (சிவந்த) திருவதரத்தையும், செம் கமலம் கண்—செந்தாமரை மலரை யொத்த கண்களையுமுடையவனாய், அச்சுதா—ஆச்ரிதரை ஒருநாளும் நழுவவிடாதவனே!, அமரர் ஏறே—நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனே!, ஆயர்தம் கொழுந்தே—இடையர்களுக்குத் தலைவனே!, என்னும்—என்னும்படியான, இ சுவை தவிர—இந்த ரஸத்தை விட்டு, யான்—(உன் திருநாமங்களைச் சொல்லும்) நான், போய்—வெகுதூரம் போய்,இந்திர லோகம் ஆளும்—பரமபதத்தை ஆளும்படியான, அ சுவை—அந்த போகத்தை, பெறினும்—அடைவதாயிருந்தாலும், வேண்டேன்—(அதை) விரும்பமாட்டேன்.

அவ:—இரண்டாம் பாட்டு. (பச்சைமாமலையித்யாதி) திருநாமத்தினுடைய பாவநத்வமும் அது கற்கையாலே தமக்குப் பிறந்த

நியமித்தவித்யாதி). தேஹத்தோடேயிருக்கச் செய்தே "கடந்து" என்னக்கூடுமோ? என்ன (தாம்தேஹேத்யாதி). ஈச்வரனை இல்லை செய்கிறவர்களுக்குத் திருநாமம் சொல்ல ப்ராப்தியுண்டோவென்ன (மாத்ருகாதுகனித்யாதி). 1.

ராஜகுலமும் சொல்லிற்றாக்கீழ்; இதில், திருநாமத்தினுடைய போக்யதையைச் சொல்லுகிறது. ஆனால் பின்னை போக்யதையைச் சொல்லி பாவநத்வத்தைச் சொன்னாலோ? என்னில்: பயம் போனாலிறே ரஸ்யதையிலே இழிவது; ஜ்வரம் அநுவர்த்தியா நிற்க, பால் ரஸிக்குமோ? முன்பு பாபத்தைக் கூடுபூரித்து யமபீதனாயிருக்கிறவனுக்கு அந்த பயம் நிவ்ருத்தமானாலல்லது போக்யதையிலே நெஞ்சு செல்லாதிறே. (29) "यन्नामसङ्कीर्तनतो महाभयात् विमोक्षमाप्नोति न संशयं नरः" (யந்நாமஸங்கீர்த்தநதோ மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி ந ஸம்ஶயம் நர:) என்று ருஷிகள், திருநாமம் பயநிவ்ருத்திக்கு ஹேதுவாகச்சொல்லுவர்கள்; ஆழ்வார்கள், * "பிழைப்பில்பெரும் பெயரேபேசி" என்று போக்யதா ப்ரகர்ஷத்தைச் சொல்லுவர்கள்.

இத்திருநாமந்தான் ப்ரயோஜநாந்தரபரர்க்கு ப்ரயோஜநத்தைக் கொடுக்கும்; உபாயாந்தரநிஷ்டர்க்கு பாவநமாயிருக்கும்; ப்ரபந்நர்க்கு தேஹயாத்ராஶேஷமாயிருக்கும். முத்துப்படும் துறையில் முழுகுவார், முத்தைக் கொடுத்துப்பழம் கொள்ளுவார்கள். † செழுமுத்துவெண்ணெற்கெனச் சென்று மாறுவர்களிறே. விலையறியும் செட்டிகள்பக்கல் புகுந்தவாறே பெருவிலையாகும்; செருக்கரானார் இத்தைப் பூண்டு அநுபவிப்பர்கள்; அப்படியே ப்ரயோஜநாந்தரபரர்க்கும் உறுப்பாய், ஸாதநாந்தரநிஷ்டர்க்கும் உறுப்பாய், ப்ரபந்நர்க்கு ஸ்வயம் ப்ரயோஜநமுமாயாய்த்து இத்திருநாமம் இருப்பது.

அரு:— இரண்டாம் பாட்டு. (பச்சையித்யாதி) (பயம்போனா லிறே) இத்யாதி வாக்யத்துக்குத் தாத்பர்யம், கீழில் பாட்டில் சொன்ன திருநாமத்தினுடைய பாவநத்வத்திலே இவர்க்கு ஊற்றமில்லையென்று பலித்ததிறே. இத்தால் ருஷிகளில் வ்யாவ்ருத்தி அருளிச்செய்கிறார். (யந்நாமேத்யாதி) "பெரும் பெயரே" என்றவிடத்திலே பெருமை—போக்யதையாலே.

ஒன்றுக்கே அநேகாகாரம் கூடுமோவென்ன, அருளிச்செய்கிறார் (இத்திருநாமந்தானித்யாதி). உக்தமான ஆகாரத்ரயத்துக்கும் அடைவே த்ருஷ்டாந்தத்ரயம் (முத்துப்படுமித்யாதி).

---

* இரா-திருவ (50). †பெரிய திருமொழி (3-8-7).

"கீழே நின்னுமம்கற்ற என்று நின்றீர், நம் பேர் சொன்னார்க்கு நாம் கொடுக்கக்கடவதொரு நாடுண்டு, அத்தை அவர்களால் கொள்ளோமென்ன வொண்ணாது, நம்மால் கொடோமென்ன வொண்ணாது; அத்தைக் கொள்வீர்" என்று பெரியபெருமாள் அருளிச்செய்ய; "திருநாமம் சொல்லும்போதை ரஸமொழிய அவ்வருகு போய் அநுபவிக்கும் ரஸம் எனக்கு வேண்டா" என்கிறார்.

வ்யா: — (பச்சைமாமலைபோல்மேனி பவளவாய்கமலச்செங்கண் அச்சுதாவமரரேறே ஆயர்தம் கொழுந்தேயென்னுமிச்சுவை) இந்த ரஸமிருந்தபடி கண்டீர். உமக்குத் தான் புறம்பே போவென்ன வேண்டியிருந்ததோ? என்கிறார். (பச்சைமாமலைபோல்மேனி) பச்சை நிறத்தையுடைத்தாய் ஶ்லாக்யமாயிருப்பதொரு மலைபோலே யாய்த்துத் திருமேனி இருப்பது. காணப்புக்கால் கண்ணும் குளிர்ந்து நெஞ்சும் குளிரும்படி ஶ்லாக்யமாயாய்த்திருப்பது. தாபத்ரயாதுரருடைய ஸகலதாபங்களும் கண்டபோதே ஆறும்படியாய்த்துத் திருமேனி இருப்பது. நெய் திணுங்கினாப்போல அகவாயில் தண்ணளியினுடைய செறிவெல்லாம் வடிவிலே காணலாம்படி இருக்கை.

"மாமலை" என்றது பூஜ்யமான மலை என்றபடி. ப்ரதமத்தில் ஸமாஶ்ரயமாய்,பின்பு நித்யாநுபாவ்யமாயிருக்கும்ஶ்லாக்யதையைச்

"வேண்டேன்" என்கிற ப்ரதிஷேதத்துக்கு ப்ரஸக்தியை அருளிச்செய்கிறார் (கீழே நின்னுமம் கற்றவித்யாதி).

ரஸிக்குமென்னுமதுக்கு ஸப்தம் காட்டுகிறார் (பச்சைமாமலையித்யாதி). பசுமையாலே குளித்தியைச் சொல்லி, பூஜ்யதையாலே மாமலை என்கிறார் (கண்ணும் குளிர்ந்து நெஞ்சும் குளிரும்படி) என்று இத்தால் பலித்த தாத்பர்யம் (தாபத்ரயாதுரருடைய வித்யாதி). பசுமையைச் சொன்னதுக்கு ப்ரகாராந்தரேண தாத்பர்யம் (நெய்திணுங் கினாப்போலேயித்யாதி).

"மா" என்றதுக்கு, கீழே "காணப்புக்கால்" என்ற வாக்யத்திலே ஒரு தாத்பர்யம் அருளிச்செய்து பசுமையாலும் பூஜ்யதையாலும் பலித்த தாத்பர்யாந்தரம் (ப்ரதமத்திலித்யாதி). மலைபோலென்னாதே

சொல்லுகிறது. மலையானது ஸ்தைர்யத்துக்கும் ஒப்பாய் வளர்த்திக்கும் ஒப்பாமித்தனையொழியத் திருமேனியிலுண்டான போக்யதாதிஶயமெல்லாமில்லையே அதுக்கு.

“மேனி” (30) “**आनन्दमयः**” (ஆநந்தமய:) என்கிற ஸ்வரூபமும் ஆநந்தாதி குணங்களுமல்ல இவரை உகப்பிப்பது, இவை இரண்டும் அகவாயிலே ஆய்ப்படியான இவ்வடிவாய்த்து இவரை உகப்பிப்பது. (31) “**इच्छागृहीताभिमतोरुदेहः**” (இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:) * “குன்றுடுகொழுமுகில்போல் குவளைகள்போல் குரைகடல்போல் நின்றுடுகணமயில்போல் நிறமுடைய நெடுமால்” என்னக்கடவதிறே. கழுத்தே கட்டளையாக நீரை முகந்து போகமாட்டாதே மலையினுச்சிலே சாய்ந்த மேகம் போலவும், கண்ணாலே முகந்து அநுபவிக்கக் குவளைகள் போலவும், அநுபவித்து முடிக்கவொண்ணாமைக்குக் கடல் போலவும், வைத்த கண் வாங்காவொண்ணாமைக்கு மயில்திரள் போலவுமாய்த்து இத்திருமேனி இருப்பது. (32) “**सिञ्चेतिमञ्जजनमिन्दिरयातटित्वान्भूषामणिद्युतिभिरिन्द्रधनुर्दधानः। श्रीरङ्गधामनि दयारसनिर्भरत्वादद्रौ शयालुरिव शीतलकालमेघः॥**” (ஸிஞ்சேதிமஞ்சஜநமிந்திரயாதடித்வாந் பூஷாமணித்யுதிபிரிந்த்ரதநுர்ததாந: ஸ்ரீரங்கதாமநி தயாரஸநிர்ப்பரத்வாதத்ரௌ ஶயாலுரிவ ஶீதளகாளமேக:). (பவளவாய்கமலச் செங்கண்) திருமேனி ஒரு பெருங்கடல்போலேயாய், அதிலே கொண்டு முழுகுஞ்சுழிகள் போலேயாய்த்து, திவ்யாவயவங்களிருப்பது. திருமேனிக்கும் பரபாகமான பவளம் படர்ந்தாப்போலேயாய்த்துத் திருவதரத்தில் அழ

“பச்சைமாமலை” என்று விஶேஷிப்பானென்? என்ன அருளிச்செய்கிறார் (மலையானதித்யாதி). ஆகையாலே அபூதோபமை என்றபடி.

இவரை உகப்பிக்குமென்கைக்கு வடிவு அப்படி போக்யமாயிருக்குமோவென்ன அருளிச்செய்கிறார் (இச்சாக்ருஹீதேத்யாதி). திருமேனி போக்யமென்றதுக்கு ப்ரமாணாந்தரம் (குன்றுடித்யாதி). “குன்றுடு” என்றதுக்கு “சாய்ந்த” என்று வ்யாக்யானம் பண்ணுகைக்கு நியாமகமேதென்ன அருளிச்செய்கிறார் (ஸிஞ்சேதித்யாதி).

---

* பெரியாழ்-திருமொ (4-8-9)

கிருப்பது. மலையிலே பவளம் படர்ந்தாப்போலே இருக்கை. சந்த்ரோதயத்தில் கடல் கொந்தளித்தாப்போலே ஆஶ்ரிதமுகசந்த்ர தர்ஶநத்தாலே வந்த அழகு ஓதமேறினபடி. (33) "**वचसा सान्त्वयित्वा**" (வசஸா ஸாந்த்வயித்வா) என்கிறபடியே ஆஶ்ரிதரை வினவுகிற திருவதரமிருக்கிறபடி.

(கமலச்செங்கண்) ஜீவநாத்ருஷ்டத்தாலே இத்திருப்பவளத்துக்குத் தப்பினாரையும் அகப்படுத்திக் கொள்ளும் கண்கள். வாயால் சொல்லமாட்டாதே குறையும் கண்ணாலேயிறே தலைக்கட்டுவது. (33a) '**लोचनाभ्यां पिबन्निव**" (லோசநாப்யாம் பிபந்நிவ) என்கிறபடியே அகவாயில் வாத்ஸல்யாதி குணங்களுக்கு ப்ரகாஶகமாயிருக்கிறபடி. மென்மை, குளித்தி, நாற்றம் தொடக்கமானவற்றுக்கு ஒரு போலியாமத்தனையல்லது அகவாயில் தண்ணளியெல்லாம் இல்லையே அதுக்கு. "விக்ரஹமில்லை, குணமில்லை, விபூதியில்லை" என்கிற ஶங்யவாதிகள் ஸஞ்சரிக்கிற ஸம்ஸாரத்திலே இப்படி விக்ரஹத்தை ஆதரித்த இவர்கள் உத்தேஶ்யராகப் பெற்றோமே!" என்று ஜீயர் அருளிச்செய்வர்.

(அச்சுதா) த்ருஷ்டாந்தமாகச் சொன்ன மலை, பவளம், தாமரை போலே நாள்செல்ல நாள்செல்லச் செவ்வி மாறுதல், தான் அழிதல் செய்யாதே ஏகரூபமாயிருக்கை. (34) "**सदैकरूपरूपाय**" (ஸதைகரூபரூபாய)என்னக்கடவதிறே. அதவா, இச்செவ்வி மாறாதே செல்ல வேணுமென்று மங்களாஶாஸநம் பண்ணுகிறாரென்றுமாம். *"சேவடி செவ்விதிருக்காப்பு" என்னக்கடவதிறே. இவ்வழகிலே அகப்பட்டாரை ஒருநாளும் நழுவவிடாதவன் என்றுமாம். (அமரரேறே) இவ்வழகை ஸதாதர்ஶநம் பண்ணும் போக்தாக்களைச் சொல்லுகிறது. காலமெல்லாம் இடைவிடாதே அநுபவியாநின்றாலும் எல்லை காண

தாத்பர்யாந்தரம் (வசஸாஸாந்த்வயித்வேத்யாதி). இந்தப்பக்ஷத்தில் திருவதரத்தின் ஸ்வாபாவிகமான செவ்வியைச் சொல்லுகிறது. தாத்பர்யாந்தரம் (வாயாற்சொல்ல வித்யாதி). "செம்" என்றதுக்குத் தாத்பர்யம் (லோசநாப்யாமித்யாதி) (அதுக்கு) தாமரைக்கு. ப்ராஸங்கிகம் (விக்ரஹமில்லையித்யாதி).

---

* திருப்பல்லா (1)

வொண்ணுதபடி. அவ்வருகாயிருக்கை. † "அயர்வறுமமரர்களதிபதி" என்னக்கடவதிறே. அவ்வநுபவம் மாறினுல் முடியுமவர்களென்று தோற்றுகைக்காக, அநுபவத்தினுடைய அவிச்சேதத்தாலே "அமரர்" என்கிறது. (35) "सदा पश्यन्ति सूरयः" (ஸதா பஶ்யந்தி ஸூரய:) என்னக்கடவதிறே. ஆனல் பிராட்டி, திருவடி, திருவநந்தாழ்வான் போல்வார் அநுபவிக்குமதாய் அதிக்ருதாதிகாரமாய் இருக்கிறதோ என்னில்; (ஆயர்தம் கொழுந்தே) மேன்மைக்கெல்லையானவர்களுக்கு நியாமகனுயிருக்குமாபோலே தாழ்வுக்கு எல்லையான இடையர்க்கும் பசுக்களுக்கும் ஸுலபனுனபடி. வடிவழகும் மேன்மையும் நீர்மையும் ஒரு பசுங்கூட்டாயிறே பரத்வமிருப்பது. (என்னும்) இஸ்ஸ்வபாவங்களை அநுபவித்தோ உமக்கு இவ்வினிமை பிறந்ததென்னில்; அங்ஙனன்று, திருநாமத்தினுடைய உக்திமாத்திரத்தாலே வந்த இனிமை.

(இச்சுவைதவிர) இந்த ரஸத்தைவிட்டு. சுவை—ரஸம். கைப்பட்டத்தை விட்டு. ‡ (இவ்வறுசுவைக்கு வேறொரு சுவை இருந்தவிடம் தேடிப் போகச் சொல்லுகிறீரோ? இவருடைய அறுசுவை இருக்கிறபடி.) திருநாமத்தை உம்முடைய நாக்கிலேயிட்டுப் பாராமையிறே நான் உபதேசிக்க வேண்டுகிறது. (யான்) திருநாமம் சொல்லுகைக்குப் பாங்கான நாவையுடைய நான். (யான்) ஒருதேஶவிசேஷத்தே போய் அநுபவிக்குமளவும், விளம்பத்தைஸஹியாத த்வரையையுடைய நான். (போய்) கோவினுக்கு அணித்தாயிருக்கையுமன்றியே நெடுங்கை நீட்டான அத்தூரமெல்லாம்போய். (இந்திரலோகம்) நிரவதிகைஶ்வர்ய யுக்தனுடைய லோகம். "ப்ரஹ்மேந்த்ராதி ஶப்தங்கள் பரமாத்ம

(அதிபதி) "अधिकः पतिः—अधिपतिः" (அதிக: பதி:—அதிபதி:) என்றபடி. நித்யராயிருக்கிறவர்களை "அமரர்" என்று மரணப்ரஸக்தியைச் சொல்லுவானென்? என்ன, அருளிச்செய்கிறுர் (அவ்வநுபவம் மாறினுலித்யாதி).

"இச்சுவை" என்றதுக்குத் தாத்பர்யாந்தரம் (திருநாமத்தையித்யாதி). இந்தப் பக்ஷத்திலே "இ" என்றது, அதிஶயத்திலே. முந்தினது—ஸந்நிஹிதத்வத்திலே தாத்பர்யம். தாத்பர்யாந்தரம்

---

† திருவாய் (1-1-1). ‡ குண்டலிதம் க்வாசித்கம்.

வாசகம்'' என்கிற வேதாந்தவாஸனை தோற்ற அருளிச்செய்கிறார். (ஆளும்)*''ஆள்மின்கள்வானகம்'' என்னும்படியே இஷ்டவிநியோகார்ஹமாம்படியிருக்கை. (அச்சுவை-இச்சுவை) அது ஶ்ருதிஸித்தம்; இது ப்ரத்யக்ஷஸித்தம்; அது கேட்டார் வாய்கேட்டுப்போமது; இது கைப்பட்டது.

(பெறினும் வேண்டேன்) கிட்டுமளவும் வேண்டாவென்கிறீர். கிட்டினவாறே நீரே அதிலே தோள்மாறுகிறீர் என்ன; பெற்றாலும் எனக்கு வேண்டா. அத்தைத் தந்து பார்க்கலாகாதோ நான் ஆதரிக்கும்படிகாண . என்கிறார். "உறாது" என்றொழிந்தது தம்மிலும் அளவுடையார் நித்யாநுபவம் பண்ணுகிற விஷயத்துக்குக் குற்றம் சொன்னாராவர்; இன்னமும் அதுக்கு உத்கர்ஷம் சொல்லுகிற ப்ரமாணங்களையும் அநாதரித்தாராவர். பால் கைக்கும் புளிக்கும் என்னிலன்றோ பிணங்க வேண்டுவது; அதுதான் வேண்டாவென்பாரைச் செய்யலாவதில்லையே. (36) "भावो नान्यत्र गच्छति" (பாவோ நாந்யத்ர கச்சதி) என்றவனைச் செய்யலாவதுண்டோ.

பரமபதம் வேண்டாவென்ன; இங்குத்தைக்கு நன்மையேதென்ன; (அரங்கமாநகருளானே) பரபதத்திலநுபவத்தை விட்டு, இவ்வழகையும் ஶீலத்தையும் இங்குள்ளாரை அநுபவிப்பிக்கைக்கு வந்து கிடக்கிற இது போராதோ? தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கிற நீர்மையை அநுபவிக்கைக்கு அங்குள்ளாரும் இங்கே வாராநிற்க என்னை அங்கே போகவிடத் தேடுகிறதென்? இத்தால் சொல்லிற்றாய்த்து:— இங்கே இருந்து திருநாமத்தை அநுபவிக்கும் இனிமைக்குப் பரமபதாநுபவமும் ஸத்ரு'ஶமன்றென்னும்படி தமக்குத் திருநாமம் ரஸித்தபடியைச் சொல்லிற்றாய்த்து. 2.

(ஒரு தேஶவிஶேஷத்திலேயித்யாதி). (இந்திரன்) ஈஶ்வரனாதல்; அந்தர்யாமியாதல். இத்தை வாக்யத்வயத்தாலே அருளுகிறார் (ப்ரஹ்மேந்த்ராதித்யாதி).

(உத்கர்ஷம் சொல்லுகிற ப்ரமாணம்) (35a) "निरस्तातिशयाह्लाद" (நிரஸ்தாதிஶயாஹ்லாத) என்கிறது. ''வேண்டேன்'' என்றால் அநாதரமன்றோ என்ன (பால்கைக்குமித்யாதி) இங்குத்தைக்கு நன்மையே

---

* திருவாய் (10-9-6)

3. வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவரேலும்
பாதியுமுறங்கிப் போகும் நின்றவிப்பதினையாண்டு
பேதைபாலகனதாகும் பிணிபசிமூப்புத்துன்பம்
ஆதலால் பிறவிவேண்டேனரங்கமாநகருளானே.

பதவுரை: — அரங்கமாநகருளானே!— மனிர்சதாம்—மனிதர்கள். வேத நூல்—வேதசாஸ்த்ரத்தின்படி, நூறு பிராயம் புகுவரேலும்—நூறு வருஷங்கள் ஜீவித்திருப்பார்களேயாகிலும், பாதியும்—அதில் பாதியான ஐம்பது வருஷங்களும், உறங்கி போகும்—தூக்கத்திலே கழியும்; நின்ற இ பதினையாண்டு—மிகுந்த ஐம்பது வருஷங்களும், பேதை—ஒன்றுமறியாத குழந்தைப்பருவமாயும் பாலகன்—பாலப் பருவமாயும் அது ஆகும்—(பின்னர்) விஷயப்ரவணனாய்த் திரியும்

தென்ன என்றது தாத்பர்யம். திருநாமத்தினுடைய போக்யதையை விட்டுப் பரமபதம் வேண்டேனென்ற இத்தால்: கோயிலிலேயிருந்து திருநாமத்தைச் சொல்லுகையே பரமப்ராப்யமாய்த்தே; இன்னமும் இங்குத்தைக்கு நன்மையேதென்னவென்றபடி. தாத்பர்யாந்தரம் (தாழ்ந்தார்க்கித்யாதி) 2.

அரு:— இரண்டாம் பாட்டு. ஒன்றுக்கே மூன்றுகாரம் கூடுமோ-வென்ன, கூடுமென்னுமத்தை த்ருஷ்டாந்தமாக உபபாதிக்கிறார். (முத்துப்படுமித்யாதி). ஶங்காபரிகாரம் பண்ணி மேல் அவதாரிகை (கீழே நின்னுமம்கற்றவித்யாதி). ரஸிக்குமென்னுமதுக்கு ஶப்தம் காட்டுகிறார் (பச்சைமாமலைபோலித்யாதி).

கீழ்ச்சொன்ன த்ருஷ்டாந்த ஸ்வபாவத்தை தார்ஷ்டாந்திகத்திலே ஏறிடுகிறார் (தாபத்ரயாதுராரித்யாதி வாக்யத்வயத்தாலே). பசுமையாலும் பூஜ்யதையாலும் பலிதம் (ப்ரதமத்திலித்யாதி). (குவளை) கருநெய்தல். (அதுக்கு) தாமரைக்கு. "வானவர் மற்று" என்னுமல், அமரரென்பானென் என்ன (அவ்வநுபவமித்யாதி).

(இந்திரன்) ஈஶ்வரனுதல், அந்தர்யாமியாதல். "इदि परमैश्वर्ये" (இதி பரமைஶ்வர்யே) என்று தாது. இவற்றை வாக்யத்வயேந அருளுகிறார் (நிரவதிகேத்யாதி). உறுதென்னுமல் வேண்டேனென்பானென்? என்ன (உறுகதென்னு இத்யாதி). வேண்டேனென்றால் அநாதரவன்றோவென்ன (பால்கைக்குமித்யாதி). 2.

யௌவநாவஸ்தையாயும், பிணி— வியாதியினால் பீடிக்கப்பட்டவனாயும், பசி—ஐந்து இந்திரியங்கட்கும் ஐப்புலனிலுண்டான ஆசையைத் தணிக்கும் காலமாயும், மூப்பு—கிழத்தனமாயும், துன்பம்—மற்றும் பலதுன்பங்களாயும் கழியும்; ஆதலால்—இப்படி ஆயுள் முழுவதும் கழிகிறபடியால், பிறவி—(நிஹீனமான) ஜந்மத்தை, வேண்டேன்—ஒருகாலும் விரும்பேன்.

அவ:— மூன்றாம் பாட்டு (வேதநூல்) உமக்குப் பரமபதம் வேண்டாவாகில் கோயிலோடே தோள்தீண்டியான ஸம்ஸாரத்திலே இருந்து திருநாமத்தை அநுபவியுமென்று பெரியபெருமாள் அருளிச்செய்ய; அத்தையும் நிரூபித்தவாறே திருநாமம் சொல்லுகைக்கு அவகாஶமில்லாதபடி துரிதபரம்பரையேயாயிருந்தது; ஆகையாலே எனக்கு அது வேண்டாவென்ன; திருநாமம் சொல்லுகைக்கு அவகாஶமில்லாதபடி ஸம்ஸாரத்துக்கு நீர் சொல்லுகிற குறையென்? என்று கேட்டருள; ஸம்ஸாரத்தினுடைய தோஷங்களை உபபாதித்துக் காட்டுகிறார். இத்தால் பழகிப்போருகிற ஸம்ஸார யாத்ரையிலும் ஜுகுப்ஸை பிறக்கும்படி திருநாமம் இனிதென்று அம்முகத்தாலே திருநாமத்தினுடைய போக்யதா ப்ரகர்ஷத்தைச் சொல்லுகிறது.

வ்யா:— (வேதநூல் பிராயம் நூறு) (37) "**वेदशास्त्राऽविरोधिना**" (வேதஶாஸ்த்ராऽவிரோதிநா) என்கிறபடியே வேதமாகிற நூல். வேதாக்ய ஶாஸ்த்ரமென்னக்கடவதிறே. நூல்—ஶாஸ்த்ரம்; அதவா வேதங்களும் நூல்களுமென்னவுமாம். வேதங்களும், வேதார்த்த ஜ்ஞாநமுடைய புருஷர்களுடைய வசநங்களும். (பிராயம் நூறு) (38) "**शतायुर्वै पुरुषः**" (ஶதாயுர்வைபுருஷ:) என்றிறே சொல்லுவது; இதிறே பரமாவதி — இதுதான் ஒலைப்புறத்திலே கேட்டுப்போமித்தனை. புகுகைக்கு ஸம்பாவனையில்லை. அந்த நூறுதான் அளவுகோல் வாசியால் வந்த ஏற்றத்

அரு: — மூன்றாம்பாட்டு. (வேதநூலித்யாதி). (ஆர்ஷமித்யாதி). ஆர்ஷம்-வ்யாஸாதிரிஷித்ருஷ்டவேதம் இத்யர்த்த: . (அளவுகோல் வாசியாலே) என்றது, தேவபேதத்தாலும் யுகபேதத்தாலும் நெடுவாசி பட்டிருக்குமென்றபடி. அளவுகோல் வாசியாலே நெடுவாசி

தாலே சிலர் பக்கலிலே நெடுவாசிபட்டிருக்கும். அத்தை வ்யாவர்த்திக்கிறது "மனிசர்" என்று. (39) "न जायते म्रियते वा कदाचिन्नायं भूत्वा भविता वा न भूयः" (ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந்நாயம் பூத்வா பவிதா வா ந பூய:) என்கிறபடியே, கல்பாதியிலே தோற்றி கல்பாந்தத்திலே முடிவாயிருக்குமிறே; சிலர்க்கு அங்ஙனன்றியே இருக்கை. (தாம்) கர்ப்பமே தொடங்கி மரணத்துக்கு யோக்யமாயிருக்க, தமக்கொரு ஜீவநமும் பரிக்ரஹமுங்கர்ணென்று க்ஷேபிக்கிறார்.

(புகுவரேலும்) முதலிலே புகுவாரில்லை; கர்ப்பத்திலே முடிதல், ஜநியாநிற்க முடிதல், பிறந்து முடிதல், நாலுநாளிருந்து முடிதல், பால்யத்திலே முடிதல், செருக்கித்திரியும் யௌவநத்திலே முடிதல், ஜரையிலே முடிதலாய் மரணத்தை நிர்ணயிக்க அரிதாம்படியிறே இருப்பது. (40) "गर्भे विलीयते भूयो जायमानोऽस्तमेति च। जातमात्रे च म्रियते बालभावेऽथ यौवने॥ मध्यमं वा वयः प्राप्ते वार्धके वा ध्रुवा मृतिः॥" (கர்ப்பே விலீயதே பூயோ ஜாயமாநோऽஸ்தமேதி ச। ஜாதமாத்ரேச ம்ரியதே பாலபாவேऽத யௌவநே॥ மத்யமம் வா வய: ப்ராப்தே வார்த்தகே வா த்ருவா ம்ருதி:॥) என்னக்கடவதிறே. ப்ராணிகள் தங்கள் ஆயுஸ்ஸுப்போகிறபடி ஒன்றையும் அறியாதே உதயாஸ்தமயங்களைக் குறித்து உகவாநிற்பர்கள். (41) "नन्दन्त्युदित आदित्ये नन्दन्त्यस्तमिते रवौ। आत्मनो नावबुध्यन्ते मनुष्या जीवितक्षयम्॥" (நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவௌ। ஆத்மநோ நாவபுத்த்யந்தே மநுஷ்யா ஜீவிதக்ஷயம்॥) (41a) "जायस्व म्रियस्व" (ஜாயஸ்வ, ம்ரியஸ்வ) * "மின்னின்நிலையில" † "வாள்களாகி நாள்கள் செல்ல." (புகுவரேலும்) வருந்தி நூறு வயஸ்ஸுப் புக்காராகில்.

பட்டிருக்குமென்கைக்கு ப்ரமாணம் (ந ஜாயதே ம்ரியதே) இத்யாதி.

ப்ராஸங்கிகம் (ப்ராணிகளித்யாதி). "ஜீவிதக்ஷயம்" என்றதுக்குத் தாத்பர்யம் (ஜாயஸ்வேத்யாதி). (கடிக்கூறுகப்பாழாய்) என்றது, ஒரு செய்யிலே செம்பாதி உழுமாய்ப் பாழாமாப்போலே என்ற

---

* திருவாய் (1—2—2). † திருச்சந்த (112).

(பாதியுமுறங்கிப்போகும்) அதிலே செம்பாதி கடிக்கூறுகப் பாழாய் நித்ரையாலே கழியும். பாதியுமுறங்கிப்போகிற கணக்கிலே, "திருநாமம் சொல்லக்கடவ காலம் வ்யர்த்தமே போவதே!" என்று வெறுக்கிருராய்த்து. இவர் (42) "**जहौ निद्राञ्च तन्द्रीञ्च**" (ஜஹௌ நித்ராஞ்ச தந்த்ரீஞ்ச) என்று இளையபெருமாளைப்போலே இருக்கவிறே அடுப்பது. (43) "**सततं कीर्तयन्तः**" (ஸததம் கீர்த்தயந்த:) என்று ஸர்வகாலமும் திருநாமம் சொல்லவிறே கண்டது. (நின்றதில் பதினையாண்டு) ஶேஷித்ததிலே பதினைந்து ஸம்வத்ஸரம் பாலனாயும், யுவாவாயும்,, விஷயப்ரவணனாயும் இங்ஙனே கழியும். "நின்ற இப் பதினையாண்டு" என்றபோது சேஷித்தநாள் பதிற்றஞ்சு-ஐம்பது ஸம்வத்ஸரம் என்றுகிறது. இவன் போரப்பொலியப் பாரிக்கிற காலமெல்லாம் தமக்கு ஒன்றுராயிராமையாலே, "இது" என்று சூஷ்த்ரமாகப் பேசுகிருர். (பேதை)திருநாமம் சொல்லுகைக்கும் யோக்யதையின்றிக்கே, தன்னுடைய ஹிதாஹிதங்கள் ஜநநியினு டைய புத்த்யதீநமாயிருக்கும் அத்யந்தஶைஶவம்.

(பாலகன் அதாகும்) பாலனாகிற அந்த அவஸ்த்தையாம் என்றபடி. தீம்புகள் செய்தாலும் பொடியவொண்ணுத பருவம். இவனை "திருநாமம் சொல்லிற்றிலன்" என்று வெறுக்கவொண்ணுதே? (அதாகும்) ததநந்தரமான அந்த அவஸ்த்தையாமென்றபடி. ததநந்தரம் யௌவநம் வந்து பிரவேசித்து விஷயப்ரவணனாய்த் திரியும். ஜநநியுடைய புத்யதீநமான பேதைத்தனமே நன்றென்னும்படி யாய்த்து இதின் அறிவுகேடு இருப்பது. உள்ள அறிவு அக்ருத்ய கரணத்துக்கு உடலாகையாலே அந்த யௌவநம் அழிவதற்கு முன்னே வ்யாதிவந்து கைக்கொள்ளும். அத்தை வேரும் விறகும் தேடி ஒருபடி பரிஹரித்துக் கொள்ளக்கொண்டு பசி தலையெடுக்

படி. "பாதியும்" என்ற ச ஶப்தத்துக்குத் தாத்பர்யம் (திருநாமம் சொல்லவித்யாதி). முந்தின அர்த்தத்தில் நின்றவிப்பதினையாண்டு பேதைபாலகனாயும் மிக்குள்ள காலமெல்லாம் யுவத்வ வார்த்தகத் வாதிகளிலே கழியும். யுவாவாயும் விஷயப்ரவணனாயும் இங்ஙனே கழிக்குமென்றது-இங்ஙனே காலம் கழியுமென்றபடி. "இ" என் றதுக்குத் தாத்பர்யம் (இவன் போரப்பொலியவித்யாதி).

கும் பசியாவது: ஸர்வேந்த்ரியங்களும் ஸ்வஸ்வ விஷயங்களிலே ப்ரவணமாகை. ஆரோக்யம்பிறந்தவாறே இந்த்ரியங்கள் தலையெடுத்து, "விஷயங்களைக் காட்டு காட்டு" என்று நலியத் தொடங்கும். * "ஐவர் திசை திசை வலித்தெற்றுகின்றனர்" என்றும் † "ஐவராற்றுத் தின்னிடவஞ்சி நின்னடைந்தேன்" என்றும் சொல்லக் கடவதிறே.

§ காலன் கொண்டும், பரஹிம்ஸை பண்ணியும், த்ரவ்யார்ஜநம் பண்ணுகிறது இந்த்ரியங்களால் வரும் நலிவு தீருகைக்கிறே. இங்ஙனே செல்லாநிற்க ஜரைவந்து கைக்கொள்ளும். ஜரையாகிறது: சாலப்பொல்லாததொன்றிறே. போகயோக்யதையன்றிக்கே இருக்கச் செய்தே சாபல்யம் அநுவர்த்திக்கும்றே. ‡ "பண்டு காமரானவாறும்" என்று வ்ருத்தகீர்த்தநம் பண்ணியாகிலும் தரிப்போமென்று பார்க்கும். இவ்வளவிலே இடிவிழுந்தாற் போலே மரணம் வந்து உபஸ்த்திதமாம். (துன்பம்) இதுவே துக்கமாய் நிரந்வய விநாஶத்தோடே தலைக்கட்டும். (7) "बाल्ये क्रीडनकासक्ताः यौवने विषयोन्मुखाः। अज्ञानयन्त्यशक्ताश्च वार्धकं समुपस्थितम्॥" (பால்யே க்ரீடநகா ஸக்தா: யௌவநே விஷயோந்முகா:। அஜ்ஞாநயந்த்யஶக்தாஶ்ச வார்த்தகம் ஸமுபஸ்திதம்॥"

(ஆதலால் பிறவிவேண்டேன்) நாடுபிடித்தார்க்கு ஒழுகைக்காட்டி குட்டமும் திடரும் மணலும் மடையுமாக எழுதி வெறும்பாழாக்கிக் காட்டுவாரைப்போலே, திருநாமம் சொல்லுகைக்கு அவஸரமில்லாதபடி உள்ள ஆயுஸ்ஸை புறம்பே செல்லுகிறபடியைப்பேசி,

---

"பாலகன்" என்றதுக்கு ப்ரஸ்துதோபயோகித்வேந தாத்பர்யம் (இவனையித்யாதி). (43a) "आरोग्यमिन्द्रियोल्बणं" (ஆரோக்யமிந்த்ரியோல்பணம்) என்றத்தை உட்கொண்டருளிச்செய்கிறார் (ஆரோக்யமித்யாதி).

(நாடுபிடித்தார்க்கு) குத்தகை பிடித்தார்க்கு. நாலுபிடித்தாரென்றுமுண்டு. (குட்டம்) குழி. (ஒழுகை) கணக்கு).

---

* திருவாய் (7-1-10). † பெரிய திருமொ (7-7-7). ‡ பெரிய திருமொ (1-3-5). § யமரூபமான த்ரவ்யத்தைத் தானம் வாங்குதல்.

பெரியபெருமாளுக்கு விண்ணப்பம் செய்கிறார். நீர், "அச்சுவை பெறினும் வேண்டேன்" "ஆதலால் பிறவிவேண்டேன்" என்று விபூதித்வயத்துக்கும் கண்ணழிவு சொல்லாநின்றீர். "நிற்பாயாகில் திருவாணை; கிடப்பாயாகில் திருவாணை என்பாரைப்போலே நீர் படுத்துகிறதென்? நமக்கு விபூதி த்வயமேயன்றோ உள்ளது" என்ன; (அரங்கமாநகருளானே) விபூதித்வயத்துக்கும் புறம்பாய் த்ருதீயா விபூதியான கோயிலிலே எனக்கு ஓரிருப்பிடமரிதோ என்கிறார்.

கோயிலில் வந்தால் அதிபால்யத்திலே அந்நப்ராஶநத்துக்கு என்றாகிலும் திருவடிகளிலே கொண்டு புகுருவர்கள், க்ரீடாவஸ்தையிலும் (44) "बाला अपि क्रीडमानाः" (பாலா அபி க்ரீடமாநா:) என்கிறபடியே செல்வர் எழுந்தருளும்படியை அநுகரியாநிற்பர்கள். பக்வனானால் தான் விரும்பின விஷயங்களைப்பற்ற உள்ளே புகக்கடவனாயிருக்கும். பெருமாளுடைய வடிவழகும் அங்குத்தை பாவநத்வமும் விஷயாந்தரங்களில் துவக்கையும் அறுக்கும். வ்ருத்தனாய் உள்ளுப்புகமாட்டாதவற்றைக்கு, இவன் வாசலிலே வந்து நிற்பர். ஆக இப்படி வாஸிதமாகையாலே ஸ்வப்நத்திலும் காண்பது இவ்வடிவேயாயிருக்கும். இனி (45) "देशोऽयं सर्वकामधुक्" (தேஶோயம் ஸர்வகாமதுக்) என்கிறபடியே தேசந்தானே எல்லா நன்மைகளையும் பண்ணிக்கொடுக்கவற்று; ஆகையாலே கோயில்வாஸம் அடிக்கழஞ்சு பெற்றுச் செல்லாநிற்குமிறே. 3.

திருநாமம் சொல்லுகைக்கு ப்ரதிபந்தகமான கீழ்ச்சொன்ன ஸௌஶவாதிகள் இங்குமுண்டோவென்ன அருளிச்செய்கிறார் (கோயிலில் வந்தாலித்யாதி). (அடிக்கழஞ்சு) அதிஶ்லாக்யம். 3.

சின்ன அரு:— மூன்றாம் பாட்டு. "ந ஜாயதே" இத்யாதி ஶ்லோகத்தில் ஆத்மாவினுடைய நித்யதை சொல்லுமிடத்தில் "ந ஜாயதே ம்ரியதே" என்று மநுஷ்யதேஹத்தையும், "கதாசிந்நாயம் பூத்வா பாவிதா வா ந பூய:" என்று தேவதேஹத்தையும் வ்யாவர்த்திக்கையாலே கல்பாதியிலே தோன்றுகிற ப்ரஹ்மாதிகளுடைய ஆயுஸ்ஸும் கூட்டுகிறது.

4. மொய்த்த வல்வினையுள்நின்று மூன்றெழுத்துடைய பேரால்
கத்திரபந்துமன்றே பராங்கதி கண்டுகொண்டான்
இத்தனையடியரானார்க் கிரங்கும் நம்மரங்கனாய
பித்தனைப் பெற்றுமந்தோ! பிறவியுள் பிணங்குமாறே.

பதவுரை: — மொய்த்த—அடர்ந்து கிடக்கிற, வல் வினையுள் நின்று—வலிமை பொருந்திய பாபக்கடலினுள் நின்று, மூன்று எழுத்து உடைய பேரால்—மூன்று எழுத்தையுடைய கோவிந்தா வென்னும் திருநாமத்தால், கத்திரபந்தும் அன்றே—க்ஷத்திரபந்துவு மன்றோ, பராங்கதி—மேலான பரமபதத்தை, கண்டு கொண்டான்—கண்டு அநுபவிக்கப்பெற்றான்! இத்தனை அடியர் ஆனார்க்கு—இவ்வளவு ஆநுகூல்யமுடையவர்கட்கும், இரங்கும்—இரங்கி அருள்புரிகின்ற, நம் அரங்கன் ஆய பித்தனை— அடியாரிடத்தில் அன்புள்ள நம் அழகிய மணவாளனை, பெற்றும்—ஸ்வாமியாகப் பெற்று வைத்தும், பிறவியுள்—ஜந்மங்களில் அகப்பட்டு, பிணங்கும் ஆறே—வருந்துகிற விதம் என்னே !, அந்தோ—ஐயோ !.

(ஜீவநமும் போகமும் பரிக்ரஹம்) போகத்துக்கு உறுப்பாக தாராதி (दारादि) பரிக்ரஹம்.

(தடிக்கூறு) ஒருதடியிலே ஒருவயலிலே பாதி சிவந்து போமா போலே என்றபடி. பகலுக்கொழிய ராத்ரியும் திருநாமம் சொல்லக் கூடுமோவென்ன (ஜஹெள இத்யாதி).

"பாலகனாகிற அதாகும்" என்று ரூபகம். அன்றிக்கே, "அதாகும்" என்று பிரித்துச்சொல்லுதல். "बाधै" (பாதை) என்கிறதில் ப்ரத்யக்ஷத்தில் ஜ்ஞாபகமேதென்ன, (காலனித்யாதி). ஸாந்வயஷட்பாவவிகாரத்திலே ஒருவிகாரம் நசித்து விகாராந்தரத்தைத் தான் பஜித்து அந்த அந்த அவஸ்த்தையோடே இருக்கை ஸாந்வய விநாஶம்; நிரந்வய விநாஶம்: ஒரு அவஸ்த்தையுமின்றிக்கே முடிந்து போகை.

(நாடுபிடித்தார்) புதுக்கச்சீமை வாங்கினார். கோயிலிலேதான் திருநாமம் சொல்ல அவகாஶமுண்டோவென்ன (கோயிலித்யாதி).

அவ:— நான்காம் பாட்டு. (மொய்த்த) கீழ் மூன்றுபாட்டாலும் ஸ்வலாபத்தைப்பேசி, அநந்தரம் பதினொருபாட்டாலே பரோபதேசம் பண்ணுகிறார். ஸ்வாநுபவத்தை விட்டு பரோபதேசம் பண்ணுகைக்கு ஹேதுவென்னென்னில்:—ப்ராப்தமுமாய் ஸுலபமுமான இவ்விஷயத்தை ஸம்ஸாரிகள் இழக்கிற இழவைப் பொறுக்க மாட்டாமையாலும், இவ்விஷயந்தான் ஸஹகாரியைப் பெற்றல்லது தனியநுபவிக்க அரிதாகையாலும், (46) "एकः स्वादु न भुञ्जीत" (ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத) என்கிறபடியே, அநுபூதார்த்தம் பிறரை அநுபவிப்பித்தல்லது நிற்கமாட்டாத ப்ரக்ருதியாகையாலும், பரோபதேசத்திலே ப்ரவ்ருத்தராகிறார்.

இதில் முதற்பாட்டு, ஸம்ஸாரிகள் பாபிகளான எங்களுக்குத் திருநாமம் சொல்லுகைக்கு யோக்யதையுண்டோ? என்ன; ப்ராயஶ்சித்த ஸாத்யமல்லாதபடி பாபப்ரசுரனான க்ஷத்ரபந்துவும் திருநாமப்ரபாவத்தாலே பரமபதப்ராப்தியைப் பண்ணினபடியைக் கேட்டார்க்கு "அயோக்யன்" என்று அகல விரகுண்டோ? என்றவிடத்திலும் விமுகராகக்கண்டவாறே இத்தைக் கேட்டுவைத்தும் பாபபலமான ஜந்மாதி க்லேஶத்தை அநுபவிப்பதே! என்று விஸ்மிதராகிறார்.

வ்யா:— (மொய்த்த வல்வினை) பாபங்கள் மிகைத்து "நான் முற்பட நான் முற்பட" என்று மேல் விழுந்து மொய்த்துக் கொண்டு கிடக்கிறபடி. தேன்கூட்டை ஈ மொய்த்துக்கொள்ளுமா போலே மொய்த்துக்கொள்ளுகை. * "நெய்க்குடத்தைப் பற்றியேறு மெறும்புகள்" என்னக்கடவதிறே; முதலிகள் லங்கையை "எனக்கு எனக்கு" என்னுமாபோலே. (47) "मेरुमन्दरमात्रोपि" (மேருமந்தர

அரு:— நாலாம் பாட்டு. (மொய்த்தவித்யாதி) "மொய்த்த" என்றதுக்கு அபிநிவேஶபூர்வகமான செறிவைச் சொல்லுதல், கேவலம் செறிவை மாத்ரத்தைச் சொல்லுதல். இரண்டாவது (தேன் கூட்டையித்யாதி). அர்த்தத்வயத்துக்கும் வ்யுத்க்ரமண த்ருஷ்டாந்தத்வயம் (நெய்க்குடத்தையித்யாதி).

* பெரியாழ் திரு (5-2-1).

மாத்ரோபி). (48) "इषीकतूलमग्नौ प्रोतं" (இஷீகதூலமக்நௌ ப்ரோதம்). ஜகத்ஸ்ருஷ்டியில் ஈப்பவரனுக்குண்டான ஶக்தி போரும் சேதநனுக்கு பாபஸ்ருஷ்டியிலுண்டான ஶக்தியும். (வல்வினை) ஒரு பாபந்தானே காலதத்வமுள்ளதனையும் அநுபவிக்கவேண்டும்படியிறே இதின் பலமிருப்பது. (49) "यद्ब्रह्मकल्पनियुतानुभवेऽपि" (யத்ப்ரஹ்மகல்பநியுதாநுபவேபி). ஒரு ஸர்வஶக்தி போக்குதல் தவிருதல் செய்யவேண்டும்படியிறே பாபத்தின் கனமிருப்பது.

(உள்நின்று) ஸமிதையிடாமாணியைப் போலே தானே சூழ்த்துக்கொண்டு கிடக்கிறபடி. நடுக்கடலிலே ஒரு க்ஷுத்ரஜந்து நின்று அலையுமாபோலே, அணுபரிமாணவஸ்து, பாபஸமுத்ரத்திலே நின்று அலைகிறபடி. * "சிறியனேலும் செய்வினையோ பெரிதால்" என்னக்கடவதிறே. (நின்று) பாபங்களுக்கு இடையாதொழிகை. (50) "सर्वं सहे मे" (ஸர்வம் ஸஹே மே) என்னக்கடவதிறே. நெருப்பிலே கால்பாவினாற்போலே, பாபங்களிலே வேர்விழுவதே! (மூன்றெழுத்துடைய பேரால்) மூன்றெழுத்தையுடைய திருநாமத்தாலே. † " கெடுமிடராயவெல்லாம்" இத்யாதி.

"மொய்த்த" என்றதுக்கு ஏகார்த்தமாதல். இப்படி கனத்தபாபத்தைக் கூடுபூரிக்குமென்னுமதுக்கு ப்ரமாணம் அருளிச்செய்கிறார் (மேருமந்தரேத்யாதி). "ஸர்வே பாப்மாந:" என்றது இவ்விடத்துக்கு விவக்ஷிதம். இத்தால் பலிதம் (ஜகத்ஸ்ருஷ்டியித்யாதி). ஒரு பாபந்தானே என்ற வாக்யத்தால் பலித்த தாத்பர்யம் (ஒருஸர்வஶக்தீத்யாதி).

தாத்பர்யாந்தரம் (நடுக்கடலிலேயித்யாதி). அதாவது:—ஸ்வவஶமன்றிக்கே அதின் நடுவேநின்று அலைகிறவென்றபடி. "ஸமிதையிடாமாணி" என்ற வாக்யத்துக்குச்சேர (பாபங்களுக்கித்யாதி). "நடுக்கடலிலே" என்றதுக்குச்சேர (நெருப்பிலேயித்யாதி). அன்றிக்கே "ஸமிதையிடாமாணி" இத்யாதி வாக்யங்கள் "உள்நின்ற" என்றதுக்குத் தாத்பர்யத்வயமாய், "பாபங்களுக்கு" இத்யாதி வாக்யங்கள் "நின்று" என்றதுக்கே தாத்பர்யத்வயமென்று நிர்வஹிக்கவுமாம்.

---

* திருவாய் (4-7-1). † திருவாய் (10-2-1).

பாபங்களைப் பண்ணினவர் பரப்பும் பாபத்தின் பரப்பும் போலேயிருக்கிறதோ பாபவிமோசநமென்னில்; "மூன்றெழுத்து" என்கிறது, ஓரோ திருவக்ஷரமே போருமென்கைக்காக. ப்ரக்ருதி ப்ரத்யயயோகத்தாலே பதமாயிருக்கையன்றியே மூன்றக்ஷரமாயிருக்கை 'ஓர் அயுதாக்ஷரீ, ஸஹஸ்ராக்ஷரீ' என்னுமவை போலே முடிந்ததாய்விடவற்றே என்றிருக்குமதன்றே இது. (பேரால்) மந்த்ரமென்னுதொழிந்தது, "ரிஷி, சந்தோதேவதை, ஶக்திபீஜம், வர்ணம், விநியோகம், த்யாநம்" என்னுமாபோலே, சிலசடங்குகளுண்டாய், அதிக்ருதாதிகாரமாயிருக்கையன்றியே ஸர்வாதிகாரமாய், ஸ்த்ரீபாலஸாத்யமாயிருக்கை. இடறினவன் "அம்மே" என்னுமாபோலே இடர்வந்தபோது ஸர்வருக்கும் சொல்ல ப்ராப்தியுண்டாயிருக்கை. இன்ன திருநாம மென்னுதே "மூன்றெழுத்துடையபேரால்" என்றது ருசிபிறந்தவன்று உபதேசிக்கைக்காக ஆச்சாதிக்கிறார்; * "மூன்றெழுத்ததனை" என்று பெரியாழ்வார் மறைத்தாப்போலே.

(கத்திரபந்தும்) "क्षत्रियाणामधमः इति—क्षत्रबन्धुः" (க்ஷத்ரியாணாமதம: இதி க்ஷத்ரபந்து:). "ப்ரஹ்மபந்து:" என்னுமாபோலே சகாரத்தாலே, தண்மைக்கெல்லை நிலமான இவனும். (அன்றே) நம்முதலிகள் கோஷ்டியில் "நாலூரான்" என்றாப்போலே, ரிஷிகள் கோஷ்டியில் "க்ஷத்ரபந்து" என்றால் செவிபுதைக்கும்படியாய்த்து இருப்பது. (51) "सन्त्यक्ते बन्धुलोकेन तस्मिन् दुर्वृत्त चेतसि। चिन्तां चकार स मुनिः क्षत्रबन्धौ दयापरः॥" (ஸந்த்யக்தே பந்துலோகேந தஸ்மிந் துர்வ்ருத்தசேதஸி। சிந்தாம் சகார ஸ முநி: க்ஷத்ரபந்தௌ தயாபர:॥) (பரகதி கண்டுகொண்டான்) பாபவிமோசநமே பலம் போந்திருக்க அவ்வளவன்றிக்கே, ஸ்வர்க்காதி பலங்களின் அளவுமன்றிக்கே, ஐஶ்வர்யகைவல்யங்களளவுமன்றிக்கே உத்தமபுருஷார்த்தத்தைக் கிடைலபித்தது. ஸம்ஸாரிகளில் கடையானவன் அஸ்ப்ருஷ்டஸம்ஸார

(பரப்பும்) என்றது "மொய்த்த" என்றத்தைப் பற்ற.

ருஷிகள் கோஷ்டியில் செவிபுதைக்கு மென்னுமதுக்கு ப்ரமாண மருளிச்செய்கிறார் (ஸந்த்யக்த இத்யாதி). தாத்பர்யாந்தரம்

---

‡ (பா) காலப்பரப்பும். * பெரியாழ்-திரு (4-7-10).

கந்தருடைய அநுபவத்தையிறே பெற்றது. (கண்டுகொண்டான்) என்றது இழந்தது பெற்றாற்போலேயிருக்கை. திருநாமம் சொன்னதுக்குப் பலன் பெற்றானாயிருக்கையன்றிக்கே, தன்னது தான் பெற்றானாகவாய்த்து இவன் நினைத்திருப்பது. அஜ்ஞாநத்தாலே * மறைந்து கிடந்ததாய் பகவத்விஷயீகாரத்தாலே அதில் நிவ்ருத்தி பிறந்தால், ஸ்வரூபமும் ஸ்வரூபாநுரூபமான வ்ருத்திவிஶேஷமும் ப்ரகாசிக்குமித்தனையிறே. (52) "प्रकाश्यन्ते न जन्यन्ते" (ப்ரகாஶ்யந்தே ந ஜந்யந்தே) என்னக்கடவதிறே.

(இத்தனையடியரானார்க்கு) க்ஷுத்ரபந்துவினளவு ஆநுகூல்யமுடையார்க்கென்னுதல். "ஈஶ்வரன் சேஷி, நீ சேஷபூதன்" என்றால் அதில் அத்வேஷமுடையார்க்கென்னுதல்; (53) "पतिं विश्वस्य" (பதிம் விஶ்வஸ்ய) (54) "यस्यास्मि" (யஸ்யாஸ்மி) என்று சிலர் சொன்னால் மநஸ்ஸு அதிர்ந்திராதிருக்கை. இவ்வளவைக்கொண்டு "அடியரானார்க்கு" என்னலாமோவென்னில்; பகவதபிப்ராயத்தாலே அருளிச்செய்கிறார். (55) "दुराचारोऽपि सर्वाशी" (துராசாரோபி ஸர்வாஶீ) என்று தொடங்கி, (55) "निर्दोषं विद्धि तं जन्तुं प्रभावात् परमात्मनः" (நிர்த்தோஷம் வித்தி தம் ஜந்தும் ப்ரபாவாத் பரமாத்மந:) என்னக்கடவதிறே. "இத்தனை" என்கிறவிதுதான் மேருமந்தரம் † (போலே மலையமலை) சமந்தாப்போலேயாய்த்து இருக்கிறது அத்தலைக்கு. (56) "भूयिष्ठां ते नम उक्तिं विधेम" (பூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம) என்னக்கடவதிறே. (இரங்கும்)

(திருநாமம் சொன்னதுக்கித்யாதி). ப்ராப்யஸித்தி இப்போதாயிருக்க, தன்னது பெற்றாற்போலே என்கிறபடியென்? என்ன அருளிச்செய்கிறார் (அஜ்ஞாநத்தாலேயித்யாதி.)

அல்பாநுகூல்யம்கொண்டு பகவதபிப்ராயத்தாலே "அடியார்" என்னலாம். அதுக்கு த்ருஷ்டாந்தம் (துராசாரோபீத்யாதி). அதாவது: பாபங்களைக் கூடுபூரித்திருக்கை. ஆஶ்ரயணமாத்ரம் கொண்டு பகவத்ப்ரபாவத்தாலே நிர்த்தோஷனென்றாப்போலே என்றபடி. (பகவதபிப்ராயத்தாலே) என்றத்தின் விவரணம் (இத்தனையென்

---

* (பா) மறந்து. † குண்டலிதம் அதிகம்.

அத்வேஷயுக்தனுக்கு இது புருஷார்த்தமாம்போது ஸ்வாபாவிகஸம்பந்தத்தாலே இத்தலையில் ஆபிமுக்யத்திலே அவஸரப்ரதீக்ஷணாயிருக்கையிறே. பெறுகிறது தன்னை, இத்தலையிலுள்ளது விலக்காமை; பேற்றுக்கு இது எங்ஙனே போரும்? அன்றீன்ற கன்றுக்குத் தாயிரங்குமாபோலே தானேயெல்லாம் செய்தாலும் "ஒன்றும் செய்திலோம்" என்னுமிரக்கமேயாய்த்து உள்ளது என்றுமாம். * "உன்னடியார்க்கென்செய்வனென்றேயிருத்தி நீ" என்னக்கடவதிறே.

(நம்மரங்கனைய) அகிஞ்சநரான நமக்காகவிறே கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது. பரமபதம் நித்யருக்கும் முக்தருக்கும்; திருப்பாற்கடல் முக்தப்ராயரான ஸநகாதிகளுக்கும் ப்ரஹ்மாதிகளுக்கும்; அவதாரங்கள் தத்காலீநரான பாக்யாதிகருக்கு; கோயிலில் நிலை தேசகாலங்களுக்கு பிற்பாடரான நிர்ப்பாக்யருக்கு முகங்கொடுக்கவிறே. "நம்" என்றது க்ஷத்ரபந்துவோடு ஸகோத்ரிகளான நமக்கும் ஸுலபனான இடமென்கை (பித்தனை) பித்தராகிறார்:— பூர்வாவஸ்த்தையில் ஜ்ஞாநமின்றியிலே ஒழிந்தார். தன்னையும் அறியாதே பிறரையும் அறியாதே இருக்குமவரென்றுமாம். அதாகிறது—கொள்ளுமவன் சிறுமை பார்த்தல், கொடுக்கிறவன் பெருமை பார்த்தல், கொடையின் சீர்மை பார்த்தல் செய்யவறியாதிருக்குமவனென்கை. (பெற்றும்) தான் குறைவாளனேயாகிலும் குறைதீர்க்கும் ரக்ஷகனிருந்தவிடத்தே செல்லவேணுமிறே. அது வேண்டாதபடி பூர்ணனான தான் "என்னைக் கொள்வாருண்டோ?" என்று கிடக்கிறவிடம்.

கிறவித்யாதி). (இது புருஷார்த்தமாம்போது) என்றது அடிமை அபேக்ஷிதமாம்போதுஎன்றபடி.

(ஸ்பாவிகஸம்பந்தத்தாலே) என்றது, அடியாரான ஸம்பந்தத்தாலே என்றபடி. "இரக்கமேயாய்த்து உள்ளதென்றுமாம்" என்று சில ஸ்ரீகோஶங்கள் பாடம். அப்போது ப்ரதிகோடியருளிச்செய்யாமையாலே இவ்வாக்யத்துக்கு அர்த்தம் ஸந்திக்தம். "க்ஷத்ரபந்துவோடு" என்ற வாக்யம் தாத்பர்யாந்தரமாதல். "நம்மரங்கனைய" என்

---

* பெரிய திருவ(53)

(அந்தோ பிறவியுள் பிணங்குமாறே) ஸுலபமான விஷயத்தை விட்டுப் போறானுமாமிறே போய்ப்பெறுகிற விஷயம் இத்தோடு துல்யமாயிருக்குமாகில், ஜந்மாதிகளிலே தான் அகப்பட்டுக்கிடக்கச்செய்தே அந்யோந்யம் விவாதம் பண்ணி முடிந்து போவதே! என்று வெறுக்கிறார். ஒரு விடக்கைப்பற்றி இரண்டு பதார்த்தம் விவாதம் பண்ணுமாபோலே, அத்யந்தஹீநமாய் இருவர்க்கும் பாத்தம் போராத விஷயங்களைப்பற்றி ஸ்பர்த்தை பண்ணித்திரிவதே! (அந்தோ) "ஸர்வேஶ்வரனுக்கு ஸ்ரீகௌஸ்துபத்தோபாதி ஸ்ப்ருஹா விஷயமான ஆத்மவஸ்து இப்படி படுவதே!" என்று தர்மஹாநி கண்டால் "படுகுலை, படுகுலை" என்பாரோபாதி வெறுக்கிறார். ப்ராப்தமுமாய், ஸுலபமுமாய், ஸுஶீலமுமான இவ்விஷயத்தை விட்டு, அப்ராப்தமுமாய், துர்லபமுமாய், துஶ்ஶீலமான விஷயங்களைப்பற்றி க்லேஶிக்கக்கண்டால், தார்மிகரான இவர்களுக்குப் பொறுக்கப்போமோ. 4.

கையாலே ப்ராப்தியும், ஸௌலப்யமும்; "பித்தன்" என்று ஸௌஶீல்யம். விடக்கு-ஶவம். 4.

சின்ன அரு:— நாளைப்பாட்டு. ஒருவனுக்கு இத்தனை பாபம் பண்ணக்கூடுமோவென்ன (ஜகத்ஸ்ருஷ்டியித்யாதி). (ஸமிதையிடா மாணி) சுப்பிலாலே தன்னை வளையச் சூழ்த்துக்கொண்டு கிடக்குமொரு ஜந்துவிஶேஷம். "கோவிந்தா" என்கிற மூன்றெழுத்து; மூன்று பதமுடைய பேரொன்றாமல் மூன்றக்ஷரமுடைய பேரென்பானென்? என்ன (ஓரோ திருவக்ஷரமித்யாதி). (ப்ரஹ்மபந்து) ப்ராஹ்மணாதமன். (இத்தனை) அல்பமாதல், கனமாதல். (மலை) மஹாமேரு. அத்வேஷம் பற்றாசாக இரங்குகைக்கு ஹேதுவேதென்னில் (அத்வேஷயுக்தனித்யாதி). (இது) அத்வேஷம். அத்வேஷம் ஸாதநமாகாதோவென்ன (பெறுகிறதித்யாதி). (இரங்கும்) க்ருபைபண்ணுமென்னுதல், ஈடுபடுமென்னுதல். இத்தை அருளிச்செய்கிறார் (அன்றீன்றவித்யாதி). (ஜ்ஞானமின்றியிலே) ஆஶ்ரிதர் தோஷத்தில் ஜ்ஞானமில்லை, அறியானென்றபடி. குறையாளனேயாகிலும்) என்றது, லோகத்தில் குறையாளனாவானென்றபடி. 4.

5. பெண்டிரால் சுகங்களுய்ப்பான் பெரியதோ ரிடும்பைபூண்டு
உண்டிராக் கிடக்கும்போது உடலுக்கே கரைந்து நைந்து
தண்டுழாய் மாலைமார்பன் தமர்களாய்ப் பாடியாடித்
தொண்டுபூண்டமுதமுண்ணுத் தொழும்பர் சோறுகக்குமாறே·

பதவுரை: —பெண்டிரால்—மனைவியரால், சுகங்கள்—எல்லாவித மான ஸுகங்களையும், உய்ப்பான்—அநுபவிப்பதாக எண்ணி, பெரியது ஓர் இடும்பை—மிகப்பெரியதான கஷ்டங்களை, பூண்டு—ஏறிட்டுக் கொண்டு, இரா உண்டு—ராத்ரியிலே புஜித்து, கிடக்கும் போது—படுக்கையிலே சாயும் போது, உடலுக்கே கரைந்து—சரீரரக்ஷணத்திற்காகக் கவலைப்பட்டு, நைந்து—மனது உடைந்து, தண் துழாய் மாலை மார்பன்—குளிர்ந்த திருத்துழாய்மாலையைத் திருமார்பிலணிந்த ஸர்வேச்வரனுடைய, தமர்கள் ஆய்—அடியாராய் பாடி—(பகவத்குணங்களை வாயாரப்) பாடி, ஆடி—(அதனால், இருந்தவிடத்தில் நில்லாமல்) ஆடி, தொண்டு பூண்டு—சேஷவ்ருத்தியை மேற்கொண்டு அமுதம் உண்ணு—(பகவத்குணநுபவமாகிற) அம்ருதத்தைப் புஜிக்கப் பெருத, தொழும்பர்—நீசர், சோறு உகக்கும் ஆறே—சோற்றை விரும்புவது என்னே!.

அவ: — ஐந்தாம்பாட்டு. (பெண்டிரால்) "பிறவியுள் பிணங்குமாறு" என்று விலக்ஷணவிஷயத்தை விட்டு துர்விஷயங்களைப்பற்றி அநர்த்தப்படுவதே!" என்று வெறுத்தார், கீழ்; ஏன்றுன், ஷோடஶ வயஸ்கையான ஸ்த்ரீகள் ஸஞ்சரிக்கிற ஸம்ஸாரத்துக்குப் பொல்லாங்கு சொல்லுவானென்? என்று லோகாயதிகன் ப்ரத்யவஸ்தானம் பண்ணினுன்; அவனுகிறுன்-தேஹாதிரிக்தமாயிருப்பானெருு ஆத்மாவுண்டென்றும் தர்மாதர்மங்களுண்டென்றும், பரலோகமுண்டென்றம் சொல்லுகிறவை அஸத்யம், ப்ரத்யக்ஷிக்கிற உடப்பு கொண்டு அநுபவிக்கிற த்ருஷ்டாநுபவமொழிய வேறென்றில்லை என்னுமவன். அவர்களைக் குறித்து விஷயங்கள் அல்பாஸ்திரத்வாத்யநேக தோஷதூஷிதங்கள்; இவை எல்லாம் சொல்ல வேண்டுவது லபித்தாலிறே; துராராத்யமாகையாலே லபிக்கை அரிது என்கிறுர்.

வ்யா:—(பெண்டிரால் சுகங்களுய்ப்பான்) இவனுடைய சங்கல்ப வாக்கியம், அக்னியை அணைந்து விடாய்தீர நினைப்பாரைப்போலேயும் ஆடுகிற பாம்பின் நிழலிலே ஒதுங்கி க்லேஶம் தீர நினைப்பாரைப் போலேயும், விஷ பக்ஷணத்தைப் பண்ணி தரிக்க நினைப்பாரைப்போ லேயும், து:க்கஸாதநத்தையிறே ஸுகஸாதநமாக நீ ப்ரமிக்கிறது. * "கொண்ட பெண்டிர்" என்கிறபடியே தன்னுடைய † அநந்யத்வம், தோற்ற அது வேணும் இது வேணுமென்று தும்ஶகங்களை அபே க்ஷித்து அலைக்கும் விஷயமிறே. இவனுடைய த்ரவ்யத்தளவும் போகத் தளவுமிறே இவன்பக்கல் ஆதரம். 'பெண்டிரால்' என்றது-ஜாத்யபிப் ராயமானபோது, த்ரவ்யத்தளவிலே காலத்தையும் பரிச்சேதித்துப் பரிக்ரஹிப்பார்கள்; த்ரவ்யப்ரதாநைகளாகையாலே. இவன் நினைத்த போகரஸம் அங்கில்லை; பிறர் காணில் எளிவரவு; அத்தைத் தப்பிறு ஞகில் மேல் நரகம். இது வாய்த்த விஷயஸ்வபாவமிருப்பது. (30) "**आनन्दमयः**" (ஆநந்தமய:) என்கிற விஷயத்தை லபித்தாப் போலேயிறே இவனுக்கொரு ஸ்த்ரீபதார்த்தம் லபித்தாலிருப்பது. 'சுகங்கள்' என்கிற பஹுவசநத்தாலே ஸர்வ ரஸங்களும் இவளாலே என்றிருக்கை. "இவள் கால்நலத்தாலே தநமுண்டாம், பக்வையான வளவிலே காமரஸம், ததநந்தரத்திலே புத்ரஸம்பத்து" என்றுப்போ லேயிறே இவன் அபிமானித்திருப்பது.

அரு:—அஞ்சாம்பாட்டு. (பெண்டிராலித்யாதி) வ்யங்க்யோக்திக் குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அக்னியை அணைந்தித்யாதி) விஹிதநிஷித்த விஷயங்களினுடைய து:க்கஸாதநத்வத்தை ஶாஸ்த்ர ரோக்த ப்ரக்கிரியையாலே அருளிச்செய்து அவர்கள் ஸ்வபாவத்தா லும் இது து:க்கஸாதநமென்னக்கோலி ப்ரதமம் விஹித விஷயத்தி னுடைய து:க்கஸாதநத்வத்தை அருளிச்செய்கிறார் (கொண்ட பெண்டிரித்யாதி). "அலைக்கும் விஷயம்" என்கிறதென்? இவன் ப்ரீதியுமில்லையோ? என்ன அருளிச்செய்கிறார் (இவனுடைய வித்யாதி) அநந்தரம் நிஷித்த விஷயத்தினுடைய து:க்கஸாதநத்வத்தை அரு ளிச்செய்கிறார் (பெண்டிராலென்றித்யாதி). ஶாஸ்த்ரப்ரக்ரியை யாலே நிஷித்த விஷயத்தினுடைய து:க்கோதர்க்கத்வத்தை அருளிச் செய்கிறார் (பிறர்காணிலித்யாதி).

---

* திருவாய் (9-1-1). † (பா) அநந்யத்வம்.

"உய்ப்பான்" என்றது, இவன் இப்படி பாரித்துப்போம தொழிய அவ்விஷயத்தில் அநுபாவ்யமாயிருப்பதொரு ரஸமில்லை. நிஹீநவிஷயமாகையாலே நெடுநாள் சென்றாலும் இன்னது அநுப வித்தோமென்று ப்ரத்யபிஜ்ஞை பண்ணலாவதொன்றில்லை; இவனு டைய பாதி ஸம்வாதமேயுள்ளது. அவர்கள் த்ரவ்யபரைகளாய் அநாதரித்தாலும் அவ்வநர்த்தமே ஹேதுவாக ஶ்ரத்தைமிகும் இவ னுக்கு. (பெரியதோர் இடுப்பை பூண்டு) அத்தாலே காலன் கொண்டும், பரஹிம்சை பண்ணியும், துஸ்ஸஹமான மஹாதுःக்கங் களை ஏறிட்டுக்கொள்ளும். "பூண்டு" என்றது கழுத்தில் புக்க வாயோடுபோலே தன்னால் கழற்றவொண்ணாதிருக்கை. அளவிறந்த ஸுகத்தை அநுபவிக்கவேணுமென்று கோலி அளவிறந்த துःக்கத்தை யாய்த்து ஏறிட்டுக்கொள்வது. ஓர் அஞ்ஜலியுண்டறுக்கமாட்டாத விஷயத்தையன்றே பற்றிற்று. (57) "ஸுஸுகம் கர்த்தும்" (ஸுஸுகம் கர்த்தும்) என்கிறபடியே ஸாதநவேளையே தொடங்கி ரஸிக்கும் விஷயமன்றே * "தூயவமுதைப் பருகிப்பருகி யென்மாயப்பிறவி மயர்வறுத்தேன்" என்னக்கடவதிறே. இங்கே ஸாத்யஸாதகங்க ளிரண்டும் துःக்கரூபமாயிருக்கும்.

"சுகங்கள்" என்றதுக்கு போகரஸங்களென்று அர்த்தாந்தரம் விவக்ஷித்து, "உய்ப்பான்" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவனிப்படியித்யாதி) "உய்ப்பான்" என்றதுக்குத் தாத்பர்யாந்தரம் (இவனுடைய வித்யாதி). அதாவது: அவர்கள் த்ரவ்யபரைகளா கையாலே இவனுக்கு போகம் கொடார்களென்றபடி. இவர்கள் அநாதரித்தால் இவன் மேல் விழுவானென்னென்ன அருளிச்செய் கிறார் (அவர்களித்யாதி). ஶ்ரத்தை மிகுகைக்கு ஹேது பாபப்ரா சுர்யம். அத்தாலே விஷயஸுகாபேக்ஷையும். அதுக்கு இப்போது ஏதென்ன அருளிச்செய்கிறார் (ஓரஞ்ஜலியித்யாதி). † (அன்றே பற்றிற்று "துராராதரையிறே"-ஆகையாலே என்றபடி. "பெரிய தோரிடுப்பைபூண்டு" என்று ஸாதநம் துःக்கரூபமாகவன்றிக்கே ஸுகங்களுக்கும் "உய்ப்பான்" என்ற ஸாத்யமும்) துःக்கரூபமென்

---

* திருவாய் (1-7-3). † குண்டலிதம் அநந்விதம்.

(உண்டிரார்) இராவுண்டு, ஜீவிக்கவும் அவஸர மில்லாதபடி பகலெல்லாம் தட்டித்திரிந்து அஸ்தமயவேளையிலே யாய்த்து ஜீவிப்பது; முதல் ஸ்வஶரீர ரக்ஷணத்தைப்பண்ணிக் கொண்டுநின்று பின்னையிறே விஷயாநுபவம் பண்ணப்பார்ப்பது. (கிடக்கும்போது) அநந்தரம் ஓரிடத்திலே விழவிடுகை அபேக்ஷித மாயிருக்கும். அப்போது ஶிதிலனாகையாலே விஷயங்களை அநுஸந் தித்தல் அநுபவித்தல் செய்ய க்ஷமனல்லன்.

(உடலுக்கே கரைந்துநைந்து) "நாளை இவற்றை ரக்ஷித்து நாமும் ஜீவித்தோமாய் விடவல்லோம்" என்று சிந்தியாநிற்கும். அவதாரணத்தாலே தேஹாதிரிக்தமாயிருப்பதொரு ஆத்மவஸ்து உண்டென்றிருக்கிலிறே அதுக்கும் ஒருகால் கரைய வேண்டுவது; ஶரீரஸம்பந்தத்தில் வகுத்த புருஷார்த்தத்தை லபிக்கும்விரகேதோ? நரகத்தையும் கர்ப்பவாஸத்தையும் தப்பும் விரகேதோ? என்று கரையவிறே அடுப்பது. அதுக்கு யோக்யதை இல்லாமையாலே தேஹதாரணத்துக்காகவே கரையாநிற்கும். "கரைந்துநைந்து" என்றது பகவத்குணவித்தராயிருப்பார் * "நினைதொறும் சொல் லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்" என்று படுமதடங்க இத்தேஹத் திலே படுமாய்த்தது இவன்.

(தண்டுழாய்மாலைமார்பன் தமர்களாய்ப் பாடியாடி) ஸர்வேஶ்வரனை அநுபவித்து (58) "अहमन्नमहमन्न" (அஹமந்நமஹமந்நம்) என்று களித்துச் செருக்குக்குப் போக்குவிட்டுத் திரியக்கடவ சேத நர்படும் அநர்த்தமே என்கிறார். (தண்டுழாய்மாலைமார்பன்) ஸர்வேஶ் வரத்வ ஸூசகமான திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதனானவன் இவர்கள் பற்றின துராராதவிஷயங்கள் போலன்றியே "தன்வேறுமை யை முன்னிட்டு என்னைப் பற்றுமவனை ரக்ஷிக்கக்கடவேன்" என்று தனி

கிறார் (ஸுஸுகம் கர்த்துமித்யாதி). ஸாதநஸமயத்திலும் ரஸிக்கு மென்றதுக்கு ப்ரமாணமருளிச்செய்கிறார் (தூயவமுதையித்யாதி). தாத்பர்யாந்தரம் (இவர்கள்பற்றினவித்யாதி).

* திருவாய் (1-7-3).

மாலையிட்டுக்கொண்டிறே அவனிருப்பது. அவன் ரக்ஷகனுகாதவன்றும் கிட்டுவார்க்கு அவ்வடிவும் ஒப்பனையுமே ப்ரயோஜநம் போரும் கிடீர். (தமர்களாய்) இவ்விஷயத்தில் இவனுக்கு ஸாத்யம் ஒன்றில்லை, ஸ்வாபாவிக ஸம்பந்தத்துக்கு அநுமதிபண்ணுமித்தனையே வேண்டுவது. இவ்வாத்மாவுக்கு நிலைநின்ற ஸ்வரூபமிதிறே. அவனை (53) **"पतिं विश्वस्य"** (பதிம் விஶ்வஸ்ய) என்றும் இவனை, (54) **"यस्यास्मि"** (யஸ்யாஸ்மி) என்றும் (59) **"दासोऽहं"** (தாஸோऽஹம்) என்றுமிறே நிர்த்தோஷப்ரமாணங்கள் சொல்லுகிறது. (தமர்) அடியார். கீழ்ச்சொன்னவை அடங்க இவன்றனே ஏறிட்டுக்கொண்டவையிறே.

(பாடியாடி) பகவதநுபவஜநிதப்ரீதிக்குப் போக்கு வீடாகப் பாடி, அதுதான் இருந்தவிடத்திலிருக்க வொட்டாமையாலே ஆடி, (60) **"गायन्ति केचित्प्रणमन्ति केचिन्नृत्यन्ति केचित्"** (காயந்தி கேசித் ப்ரணமந்தி கேசித் ந்ருத்யந்தி கேசித்) என்று மதுவநத்தில் புக்க முதலிகள்படியாய்த் திரியக்கடவனிறே இவன்; ஒரு தேஶவிஶேஷத்திலே சென்றாலும், (58) **"हा उहा उहा उ"** (ஹா வுஹா வுஹா வு) என்று ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பாடி ஸஸம்ப்ரம ந்ருத்தம் பண்ணியிறே திரிந்திருப்பது. (தொண்டுபூண்டு) அடிமைபூண்டு. தனக்கு வகுத்த ஶேஷவ்ருத்தியை ஏறிட்டுக்கொண்டு. "உறும்" என்று ஏறிட்டுக்கொள்ளுகை அன்றிக்கே உகந்து ஏறிட்டுக்கொண்டு.

போக்யதையைப்பற்ற மூன்றுமர்த்தம் (அவனித்யாதி). 5.

சின்ன அரு:— அஞ்சாம் பாட்டு. "சுகங்களுப்பான்" என்று ஆக்ஷேபிக்கிறதென்? அது ஸுகமன்றோ? என்ன (அக்நியையித்யாதி). ஸ்த்ரீகள் ஸுகஹேது வல்லாதமாத்ரமன்றிக்கே து:க்கஹேதுக்களாயும் இருப்பர்களென்னுமத்தை அருளுகிறார் (கொண்டபெண்டிரித்யாதி). ஜாத்யபிப்ராயம்: ஸாதநஸ்த்ரீகளான போதென்றபடி. இப்படி நரகாவஹமான விஷயத்தை "பெண்டிர்" என்று பூஜ்யமாகச் சொல்லுகிறதென்? என்ன, அவன் நினைவைப்பற்ற என்கிறார் (ஆநந்தமய: இத்யாதி). இல்லையென்கிறதென், அல்பமாகிலுமில்லையேயென்ன (நிஹீநவிஷயமித்யாதி). உபேக்ஷித்தால்

(பூண்டு) இவ்வாத்மாவுக்கு தாஸ்யமேயிறே ஆபரணம். (61) "द्रुमचीरैरलङ्कृतः" (த்ருமசீரைரலங்க்ருத:) என்றது ஆபரணமானாப் போலே. நம்பெருமாளுக்குச் சேரசுந்தரபாண்டியன் தம்பிரான் பதக்கம்போலே இவனுக்கு தாஸ்யமாகிற ஆபரணம். அவனுக்கும் அது நெஞ்சிலே கிடப்பதொன்று; இவனுக்கும் இது நெஞ்சிலே கிடப்பதொன்றிறே. "இடும்பைபூண்டு" என்கிறது போலன்றிறே இது. (62a) "अहं सर्वं करिष्यामि" (அஹம் ஸர்வம் கரிஷ்யாமி) * "வழுவிலாவடிமை செய்யவேண்டும்நாம்" என்கிறதிறே இது. "பூண்டு" என்கிற ஶப்தம் இரண்டிடத்திலும் ஒத்திருக்க நெடுவாசிபட அர்த்தம் சொல்லுவானென்? என்னில்; அர்த்தபலத்தாலே அப்ராப்த விஷயத்தில் ஸேவையை, (63) "सेवा श्ववृत्तिः" (ஸேவா ஶ்வவ்ருத்தி:) என்றும், ப்ராப்தவிஷயத்தில் பாரதந்த்ர்யத்தை (64) "पारतन्त्र्यं परे पुंसि" (பாரதந்த்ர்யம் பரே பும்ஸி) என்றும் (65) "सा किमर्थं न सेव्यते" (ஸா கிமர்த்தம் ந ஸேவ்யதே) என்றும் விஷயம் பேதித்தாப்போலே இங்கும் அர்த்தபலத்தாலே பேதித்துச் சொல்லுகிறது.

(அமுதமுண்ணு) ஸ்வரூப ப்ராப்தமுமாய் நித்யாநுபாவ்யமுமாய் இருக்கும் அம்ருதமாய்த்து இது. (66) "तव दास्यसुखैकसङ्गिनां

அபேக்ஷிக்கிறதென்? என்ன (அவர்கள் த்ரவ்யேத்யாதி). (இடும்பை) து:க்கம். இதர விஷயத்துக்கும் இவ்விஷயத்துக்கும் உள்ள வாசியை அருளுகிறார் (அஞ்ஜலியித்யாதி). விஷயாநுபவம் பலமாயிருக்க, உய்ப்பானென்னென்ன (ஸ்வஶரீரேத்யாதி). அவை ஸ்வாபாவிகமானால் "பெண்டிரால்சுகம்" என்று அந்யஸுகங்களை அபேக்ஷிக்கிறதென்னென்ன (கீழ்ச்சொன்னவையித்யாதி). "பாடியாடி, பூண்டு" என்கையாலே உகப்பாய், அத்தைப்பற்ற அருளுகிறார் (உறுமென்றித்யாதி) (உறும்) ப்ராப்தம். விதிரூபமாகவன்றிக்கே என்றபடி. (பூண்டு) ஆபரணமாகவுமாம். வாஸனையாலேயாகிறதென்? அறிந்தன்றோ உண்கிறானென்னில் (வாசியறியுமித்யாதி). அறியானென்கைக்கு ஜ்ஞாபகமேதென்ன (ஒன்றிலேயித்யாதி). 5.

---

* திருவாய் (3-3-1).

(தவ தாஸ்யஸுகைகஸங்கிநாம்) என்றும், (67) "तव दास्यमहारसज्ञः" (தவ தாஸ்யமஹாரஸஜ்ஞ:) என்றும் சொல்லக்கடவதிறே. (தொழும்பர்) இதினுடைய போக்யத்தையை அறியாதே அபோக்யமாய் அப்ராப்தமாயிருந்துள்ள க்ஷுத்ரவிஷயங்களை விரும்பும் நீசர். (தொழும்பர்) தண்ணியர். ப்ராப்தி இல்லாமே இத்தை இழக்கிறாரல்லர்; லபிக்கையில் நேர்த்தியுண்டாய் இழக்கிறாரல்லர்; க்ஷுத்ர விஷயங்களுக்கும் இதுக்கும் உள்ள வாசி அறியும் சேதநருமாயிருக்க, துராராதமாய், அபோக்யமாயிருக்கிற விஷயத்திலே மண்டப் பண்ணிற்றிறே * சாபலம்.

(சோறுகக்குமாறே) மண்ணில் காட்டில் சோற்றுக்கு வாசி அறிந்து ஜீவிக்கிறபடி எங்ஙனே? நித்யமான ஆத்மவஸ்துவுக்கு பகவச்சேஷத்வமே தாரகம் என்றறியாதவன், அநித்யமான தேஹத்துக்குச் சோறு தாரகம் என்றறிந்து ஜீவிக்கிறானே? பித்ராதிகள் ஜீவிக்கக் காண்கிற வாஸனை கொண்டு செய்கிறானித்தனையிறே; வாசியறியுமவனாகில் ஆத்மாவுக்கும் நன்மையெண்ணானோ? ஒன்றிலே விசேஷஜ்ஞாநமுண்டாகில் மற்றையதிலும் அறிவு உண்டாகாதோ? 5.

---

6. மறஞ்சுவர்மதிளேடுத்து மறுமைக்கே வெறுமைபூண்டு
புறஞ்சுவ ரோட்டைமாடம் புரளும்போ தறியமாட்டீர்
அறஞ்சுவ ராகிநின்ற வரங்கனார்க் காட்செய்யாதே
புறஞ்சுவர் கோலஞ்செய்து புள்கவ்வக் கிடக்கின்றீரே.

பதவுரை:—மறம் சுவர்—க்ரூரஸ்வபாவமென்னும் சுவரை, மதிள் எடுத்து—அரணாகக் கட்டியும், மறுமைக்கே—அவ்வுலக இன்பத்திற்கு, வெறுமை பூண்டு—ஏழ்மையை மேற்கொண்டும், புறம் சுவர்—வெளிச் சுவராய், ஓட்டை—அழியும்படியான, மாடம்—தேஹமானது, புரளும் போது—தரையில் விழுந்து முடியும் காலத்தை, அறிய மாட்டீர்—அறியமாட்டீர்கள், அறம் சுவர் ஆகி நின்ற—தர்மமே இயற்கையாக நிற்கின்ற, அரங்கனார்க்கு—ஸ்ரீரங்கநாதனுக்கு, ஆள் செய்யாதே—அடிமை செய்யாமல், புறம் சுவர்—வெளிச்சுவரான

---

* (பா) பாபபலம்.

இவ்வுடம்பை, கோலம் செய்து—அலங்கரித்து, புள் கவ்வ—பக்ஷிக ளானது கவ்வும்படியாக, கிடக்கின்றீரே— விநாசத்தைத்தேடி இருக் கின்றீர்களே.

அவ:— ஆறும்பாட்டு. (மறஞ்சுவர்) விஷயங்களுக்கு அல்பாஸ் திரத்வாதி தோஷங்கள் அநேகமுண்டானாலும் எங்களுடைய த்யா கத்துக்கு ஹேதுவாகமாட்டாது. ஏகவிஷயத்தில் பூர்ணாநுபவம் பெற்றிலோமேயாகிலும் விஷயங்கள் அநேகமுண்டான பின்பு ஒன் றிலில்லாத நன்மை மற்றையதிலே கூட்டிக்கொண்டு அநுபவிக்கிறோ மென்ன; அப்படியேயானாலும் அந்த போக்தாதான் ஸ்த்திரனாக வேணுமே? அவ்விஷயங்களோபாதி போக்தாவும் அஸ்த்திரனென்று போக்தாவினுடைய நிலையில்லாமையைச் சொல்லுகிறார்.

வ்யா:— (மறப்சுவர்மதிளெடுத்து) மறமாகிற சுவரை அரணாக எடுத்து. க்ரௌர்ய ஸமுதாயத்தையாய்த்துத் தனக்கு அரணாக நினைத் திருப்பது. அமாநித்வாத்யாத்மகுணங்களெல்லாவற்றுக்குமாக இவன் பக்கலுள்ளது க்ரௌர்யமேயாய்த்து. (மறம்) அருளின்மையும், கோபமும், தருகண்மையுமாம். அதாவது:—இவன் அதிக்ருத்தனாய் வர்த்தியாநின்றான், தனக்கு அனர்த்தத்தைத் தானே சூழ்த்துக் கொள்ளா நின்றான் என்று ஸத்துக்கள் "ஐயோ" என்று தனக்கு ஹிதம் சொல்ல நினைத்தாலும் தன்பக்கல் அணுகவொண்ணாத படி க்ருத்தனாயிருக்கும். ஒரு ஸாத்விகன் தன்பக்கல் கிட்டாமைக்கு இடும் அரண் இதுவிறே. ராவணனுக்கு மாரீசன், மால்யவான், கும்பகர்ணன், ஸ்ரீவிபீஷணாழ்வான் இவர்களெல்லாரும் ஹிதம்

அரு:— ஆறும் பாட்டு. (மறம் சுவரித்யாதி.)

सभापर्वणि धर्मपुत्रस्य राजसूयकर्तव्यतौ विमर्शसमये कृष्णागमन-वेलायां—(४९) "**भूतभव्यभवन्नाथः केशवः केशिसूदनः। प्रकारस्सर्ववृष्णीनां आपत्स्वभयदो हरिः**" (ஸபாபர்வணி தர்மபுத்ரஸ்ய ராஜஸூயகர்த் தவ்யதௌ விமர்சஸமயே க்ருஷ்ணாகமநவேளாயாம்), (பூதபவ்யபவந்நாத: கேசவ: கேசிஸூதந:। ப்ரகாரஸ் ஸர்வவ்ருஷ்ணீநாம் ஆபத்ஸ்வபயதோ ஹரி:॥)

சொன்னவிடத்தில் சொன்ன ஹிதம் கேளாமையாலே தன்னோடு சேர்ந்த கும்பகர்ணனும் மாரீசனும் முடிந்து போனார்கள்; அல்லாதார் திக்க்ருதரானார்கள். இதுவிறே துஷ்ப்ரக்ருதிக்கு ஹிதம் சொன்னார் படும் எளிவரவு.

“மதிளெடுத்து” என்றது, இந்த க்ரௌர்யம் ஸ்வரூபப்ராப்தமாய் வந்ததொன்றன்று, ஒரு நாள் வரையிலே பகவத்விஷயீகாரமடியாக அழிவதொன்றென்று தோற்றுகைக்காக. வீரஸுந்தர ப்ரஹ்மராயன் சோழக்குடியிலிட்ட மதிள்போலேயிறே இவன் தான் பண்ணிக்கொள்ளுமரண் விநாஶபர்யந்தமாய் முடியும்படி. இவன் இத்தால் பெற்ற ப்ரயோஜநம் சொல்லுகிறது (மறுமைக்கே வெறுமை பூண்டு) இவனிருந்த காலத்தில் செய்த கார்யம் அத்ருஷ்டத்துக்குத் தாரித்ர்யத்தைக் கூடுபூரித்தவித்தனை. ஶரீரதாரணத்தோபாதி ஆத்மதாரணமாயிருப்பதொரு நன்மையும் வேணுமென்று இருந்தானாகில், ஈஶ்வரன் அத்தையே நினைத்து ரக்ஷிக்குமிறே. (69 “धातुसाम्ये स्थिते स्मर्ता” (தாதுஸாம்யே ஸ்த்திதே ஸ்மர்த்தா) என்றகிறபடியே ஆத்மோஜ்ஜீவநார்த்தமாக ஒருகால் நினைத்தானாகில், (60a) “अहं स्मरामि” (அஹம் ஸ்மராமி) என்று அது தன்னையொன்றையுமே கொண்டு முடிய நடத்துமிறே ஈஶ்வரன். ஶரீரவிஶ்லேஷ ஸமநந்தரத்திலே அவ்வருகே ஒருகுளிந்த விழியில்லாதபடி பண்ணிக்கொண்டானாய்த்து. இம்மையிலே வெறுமையாகில் ஆகமாபாயிகளுமாய் ஶரீரத்தளவுமாயிறே இருப்பது. மறுமையிலே வெறுமையாகிறது:—நித்யமான ஆத்மாவுக்குப் பிறந்ததாகையாலே. “வந்த தாரித்ர்யமும்

தறுகண்மை-வீரம். ஐஹிகத்திலே மண்டின இவர் அத்ருஷ்டஹேதுவாக ஒன்றைச் சேர்த்துக்கொண்டு ரக்ஷையாக்குகை கூடுமோவென்ன அருளிச்செய்கிறார் (ஶரீரதாரணேத்யாதி). அத்ருஷ்டத்துக்கு தாரித்ர்யமாவது ஆத்மோஜ்ஜீவநார்த்தமான ஹிதசிந்தாபாவமென்று கீழே ஒரு தாத்பர்யம் அருளிச்செய்து கைங்கர்யாபாவமேறு தாரித்ர்யமென் தாத்பர்யாந்தரம் விவக்ஷித்து அத்தால் வ்யாவ்ருத்தியை அருளிச்செய்கிறார் (இம்மையிலே வெறுமையாகிலித்யாதி).

நித்யமிறே. இதுக்கு முன்பு ஒன்றின்றிக்கே ஒழிந்தாலும் மேலே ஒரு நன்மை தேடிக்கொள்ளுகைக்குத் தானில்லையே என்கிருர்

(புறஞ்சுவரோட்டைமாடம் புரளும்போதறியமாட்டீர்) புறஞ் சுவரென்கிறது, தேஹத்தை. புருஷார்த்தோபயோகியாக ஈஶ்வரன் தந்த ஶரீரத்தைக்கொண்டு விஷயாந்தரப்ரவணமாக்குகையாலே "புறஞ்சுவர்" என்கிறது. இத்தைக்கொண்டு ஆத்மாவுக்கு ஒரு நன்மை தேடினுகில் அதுதானே உத்தேஶ்யமாமிறே. (ஓட்டை மாடம்) 'அப்போது விழுந்தது; இப்போது விழுந்தது' எனனும்படி அஸ்திரமாயிருக்கையாலே சொல்லுகிருர். (ஒட்டைமாடம்) ஓடும் பூட்டும்கொண்டு ஸமாதாநம் பண்ணி நிற்கவேண்டும் படியிருக்கை. "மாடம்" என்கிறது ஸம்ஸாரிகள் அபிப்ராயத் தாலே.

நீர் ஹிதம் சொல்லுகிறது இப்போதன்றே, க்ரமத்திலே செய்கிறோமென்ன; (புரளும்போதறியமாட்டீர்) ஜீவிக்கும் காலம் இன்னவளவென்று அறியமாட்டிகோள். செடுவிகாள்! பரண மன்றே தோள்தீண்டியாக வந்து நிற்கிறது, க்ரமத்திலே செய் கிறோமென்று ஆறியிருக்கலாமோ? இருக்கும் நாள் அந்யபரராய்க் கொண்டு உங்களுக்கு நன்மையைப் பார்த்திலிகோள், இனி மரண வேளையில் தானே ஶக்தரல்லிகோள். நீங்கள் என்ன நன்மை தேட இருக்கிறிகோள், இனி முடிந்துபோமித்தனையாகாதே என் கிருர்.

(அறஞ்சுவராகிநின்ற) தர்மமே ப்ரக்ருதியாக நிற்கிறவர். (70) "लोकानां त्वं परो धर्मः" (லோகாநாம் த்வம் பரோ தர்ம:), (71) "रामो विग्रहवान् धर्मः" (ராமோ விக்ரஹவாந் தர்ம:), (72) "कृष्ण

(விஷயாந்தர ப்ரவணமாக்குகையாலே) என்றது, இவ்விஷ யாந்தரப்ராவண்யத்துக்கு உடலாக்குகையாலே என்றபடி. (உத் தேஶ்யமாமிறே) என்றது உள்சுவராய் உத்தேஶ்யமாமிறே என்ற படி. (ஓடு) தட்டோடு.

சாய்ந்து புரளும்போது அஶக்த்யாஹிதத்தை அறிந்து அதுக்கு உடலாக ஒன்றைச்செய்யமாட்டிகோளென்று விவக்ஷித்து அர்த் தாந்தரம் அருளிச்செய்கிருர் (இருக்கும் நாளித்யாதி), ஸாதநாநு

धर्मं सनातनं" (க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்) என்கிறபடியே ஸித்த தர்மமாயிருக்கிற இருப்பு ப்ரக்ருதியிறே. (73) "उपायोपेयत्वे तदिह तव तत्त्वं न तु गुणौ" (உபாயோபேயத்வே ததிஹ தவ தத்த்வம் நது குணௌ) என்னக்கடவதிறே. (ஆகிநின்ற) உபாயாந்தரங்கள்போலே ஸாத்யமன்றிக்கே ஸித்தமாய்க்கொண்டு சமைந்து நின்றவர். ஸாத்ய தர்மங்களுக்கு பலவேளையில் வந்தால் அவன் கைபார்த்திருக்க வேணும்; அவன் தன்னைப் பற்றினார்க்கு வேறொன்றை அபேக்ஷிக்க வேண்டாவே; இனி இவனுக்கு வேண்டுவது இவ்வரணில் ஒதுங்கோமென்னுமையாய்த்து. (68) "प्राकारस्सर्ववृष्णीनां" (ப்ராகாரஸ்ஸர்வவ்ருஷ்ணீநாம்) இன்று இதிலே ஒதுங்குவோமென்னும் குறைவாளர்க்கு அரணாகச் சொல்லக்கடவதிறே.

(நின்ற) (74) "आशया यदि वा रामः" (ஆஶயா யதி வா ராம:) என்கிறபடியே அவன் அவஸரப்ரதீக்ஷனாய் நிற்கிறபடி. (அரங்கனார்க்கு) விஷயம் தூரமென்னும் குறையுமில்லை கிடீர். "நம்மைக் கொள்ளுவாரார்" என்று கிடக்கிறவராய்த்து. (ஆள்செய்யாதே) இவன் தலையில் அநுஷ்டாநமில்லாத பின்பு பலத்திலே அந்வயிக்குமித்தனையிறே. இவனுக்கு ஸ்வரூபப்ராப்தமான பலமாகச் சொல்லுகிறது அடிமையையிறே. இத்தையிறே இழந்து போந்தது. இவனுக்கு ஓரிடத்திலும் பாரதந்த்ர்யம் தவிராது. கர்மபாரதந்த்ர்யமாதல், ஈஶ்வரபாரதந்த்ர்யமாதல். அதில் கர்மபாரதந்த்ர்யத்துக்கு இசைந்தான்-வாஸனையாலே; ஈச்வரபாரதந்த்ர்யத்துக்கு இசைந்திலன்-பாபத்தாலே. (ஆட்செய்யாதே) "உண்ணாதே" என்றாப்போலேயிருக்கிறதாய்த்து இவர்க்கு.

(புறஞ்சுவர்கோலஞ்செய்து) (75) "असन्नेव स भवति" (அஸந்நேவ ஸ பவதி) என்கிறபடியே ஆத்மஸ்வரூபம் அஸத்ஸமமாய்க்

ஷ்டாந பூர்வகமன்றோ ஸாத்யஸித்தி; ஸாதநத்தையும் அநுஷ்டியுங்கோளென்ன வேண்டாவோவென்ன (இவன் தலையிலித்யாதி). இத்தை இழந்து போருகைக்கடியேதென்ன, பாரதந்த்ர்யத்துக்கு இசையாமையாலே என்று பார்த்து அடிகண்டெழுந்திருக்கிறார் (இவனுக்கித்யாதி).

கிடக்க வந்தேறியான உடம்பை ஒப்பித்திருக்கிறதிறே. ஆதமாவை அலங்கரிக்கையாவது:— அடிமை செய்கையிறே. புத்தகங்களை அக வாய் பெருச்சாளி அறுத்துக்கிடக்கத் தெருவுபாட்டை நூலும் துரும்பு வைத்து அலங்கரிக்குமாபோலேயாய்த்து உடம்பைப்பேணு கை. (புள்கவ்வ) * மாம்ஸபக்ஷணம் பண்ணித் திரியக்கடவ பக்ஷி களும் முந்துறக்கவ்வி, பின்னை "க்ருதக்நமாம்ஸம்" என்று † பொகட் டுப்போம். (கிடக்கின்றீரே) வகுத்தவிஷயம் ஸந்நிஹிதமா யிருக்க அங்ஙனே அநாதரப்படுகிறிகோள்! என்று வெறுக்கிறார். பரார்த்தம் பொறுக்கமாட்டாமையாலே சொல்லுகிறார். ‡ கோவை வாயாளில்படியே அவன் சாத்துப்படியான உடப்பு படுப்பாடே! என்று வெறுக்கிறார். இவர்கள் செத்துக்கிடக்கச்செய்தேயோ இவ் வார்த்தை சொல்லிற்று? என்னில்; அங்ஙன்ன்று, இவர்கள் உண்டு உடுத்துத் திரியாநிற்கச் செய்தே "கிடக்கின்றீரே!" என்கிறார். (76) "नेयमस्ति पुरी लङ्का" (நேயமஸ்தி புரீ லங்கா) என்று திரு வடி சொல்லிற்று ராவணன் ஸிம்ஹாஸநஸ்தனாயிருக்கச்செய்தே யிறே. துர்யோதநாதிகள் யுத்தகளத்திலே பட்டுக்கிடக்க அவர்களை ஸ்ரீவேதவ்யாஸபகவான் கண்டு "நான் சொல்லிற்றுச் செய்யாதே பட்டுக் கிடக்கிறிகோளே!" என்று வெறுத்தாப் போலே வெறுக் கிறாரென்றுமாம். 6.

நூலும் துரும்பும் வைத்து அலங்கரிக்கையாவது:—காமன் மிடற்றில் நூல் பிடித்துத் துரும்புபிடித்துக் காமன் வீடலங்கரிக் கை 6.

சின்ன அரு:— (தறுகண்மை) ஸ்வைரஸஞ்சாரமென்றபடி. ப்ராஹ்மராயன் கோயிலிலே பிணங்கித் தன்னுடைய ஊரான சோ ழக்குடியிலே மதிளிட்டுடிருக்க, கோயிலதிகாரிபோய் ஊரையும்

---

* "तान् मृतानपि क्रव्यादाः कृतघ्नान् नोपभुञ्जते" (தாந் ம்ருதாநபி க்ரவ் யாதா: க்ருதக்நாந் நோபபுஞ்ஜதே) [இறந்த பின்பும், க்ருதக்னர் களின் மாம்ஸத்தை, மாம்ஸபக்ஷிகளான பறவைகளும் புஜிப்பதில்லை.] [ரா–கி (30–63)] என்று ச்லோகத்தை அநுஸந்திருப்பது.
† (பா) கைவிட்டு. ‡ திருவாய் (4–3–1).

7. புலையற மாகிநின்ற புத்தோடு சமண மெல்லாம்
கலையறக் கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோதாம்
தலையறுப் புண்டும் ‡ சாவேன் சத்தியங் காண்மின்ஐயா
சிலையினு லிலங்கைசெற்ற தேவனே தேவனுவான்.

பதவுரை:—கலை— சாஸ்திரங்களை, அற சற்ற மாந்தர்—நன்றுக கற்றுத் தாத்பர்யம் உணர்ந்த மனிதர்கள், புலை அறம் ஆகி நின்ற— நீச தர்மமாக இருந்துள்ள, புத்தோடு சமணம் எல்லாம் —பௌத்த மதம் சமண மதம் முதலிய மற்ற மதங்களையும், காண்பரோ—நெஞ்சாலே ஆராய்வரோ? சேட்டரோ தான்— காதினுல்தான் கேட்பர்களோ? (மேலும்), தலை அறுப்புண்டும்—என் தலையானது அறுக்கப்பட்டாலும், சாவேன்—நான் சாகமாட்டேன்; ஐயா—பெரியார்களே, காண்மின்—(உங்கள் முன்னிலையிலேயே காட்டுகின்றேன்) பாருங்கள்; சிலையினுல்—வில்லினுல், இலங்கை செற்ற—இலங்கை நகரத்தை அழித்த, தேவனே—(அத்தால் வந்த) புகரையுடைய எம்பெருமானே, தேவன் ஆவான்—ஸர்வாச்ரயணீயனுவான்.

அவ:— ஏழாம் பாட்டு. (புலையறம்) "தொண்டு பூண்ட முதமுண்ணுத்தொழும்பர்" என்றும், "புட்கவ்வக்கிடக்கின்றீரே" என்றும் எங்களை நிந்திக்கிறதென்? ஸம்ஸாரஸ்வபாவம் இங்ஙனே இருந்தது; "தண்டுழாய் மாலை மார்பன்" என்று ஆஶ்ரயணீயனைச் சொன்ன அவன் தூரஸ்த்தனுகையாலே எங்களுக்குக் கிட்டவரிது; இன்னமும் ஆஶ்ரயிப்பார்க்கு விலக்கடிகள் பலவுமுண்டாயிருந்தது' அந்தத் § தடையையும் அறுத்து ஆஶ்ரயணீயனையும் காட்டித்

அவனையுமழித்தானென்கிற கதை. (ஓடும் பூட்டும்) தட்டோடும், அகமுகம் பூட்டும். (பூட்டு) வரிச்சு. வாசியேதென்ன அருளுகிறுர் (ஸாத்யதர்மங்களித்யாதி). "ஆட்செய்யாதே" என்கைக்கு பாரதந்த்ர்யமுண்டோவென்ன (இவனுக்கோரித்யாதி). துருப்பு-வைக்கை, அகலத்துக்கு-குறுமட்டத்துக்கு. தாத்பர்யாந்தரம் (கோவைவாயாளித்யாதி).

‡ பா) சாகேன் § (பா) தட்டையும்.

தாரும் என்ன, இங்கே வந்தவதரித்து விரோதிநிரஸநஶீலனான தஶரதாத்மஜனையே ஆஶ்ரயியுங்கோள்-என்கிறார்.

வ்யா:—(புலையறமாகிநின்ற புத்தொடுசமணமெல்லாம்) சதுர்விதமான பௌத்தரும் க்ஷபணரும் முதலானவையெல்லாம். புலையறம்—நீசதர்மம். அதாகிறது:—ஜ்ஞாநவிஷயமான பதார்த்தங்களும் ஜ்ஞாநமுமேயுள்ளது; இதில் ப்ரமாணம், ப்ரத்யக்ஷமும் அநுமாநமுமேயுள்ளது என்பாரும், பதார்த்தங்கள் அநுமேயங்கள், ஜ்ஞாநமேயுள்ளது என்பாரும், அநுமேயமாயும் பதார்த்தங்களில்லை கேவலஜ்ஞாநமேயுள்ளது என்பாரும், அந்த ஜ்ஞாநமுமில்லை, ஸர்வம் ஶூந்யமென்பாரும், ஸர்வத்தையும் ஶூந்யமென்னலாமோ, ஜகத்து கார்யகாரணரூபத்தாலே நித்யமாயும் அநித்யமாயும், பிந்நமாயும் அபிந்நமாயும், ஸத்யமாயும் அஸத்யமாயும், இப்படி *அநேகாந்திகமென்பாரும், ஆக இப்படி சொல்லுகிற நீசதர்மம். (ஆகிநின்ற) நெல்லுக்குக் களைபோலே வைதிகதர்மத்துக்கு விருத்தமாய்ப் பழையதாய்ப்போருமென்கை. "எல்லாப்" என்றது ஸாங்க்யம், வைஶேஷிகம், பாசுபதம் முதலானவை. இவை நீசதர்மமானபடி எங்ஙனேயென்னில்:—ஈஶ்வரவிபூதியிலே ஒருவனை ஹிம்ஸித்தார்க்குச் சொல்லுகிற பாபங்களுக்கு அவதியில்லை; ஈச்வரனையும், ஈச்வரவிபூதியையும் அஜ்ஞாநாவஹிபாலே அழிக்கப்பார்க்கிறவர்களிறே; அகண்ட்யண்டந ப்ரவ்ருத்தரிறே அடங்க.

(கலையறக்கற்ற மாந்தர்) ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸபுராணாதிகளில் நிலைநின்றவர்களாய் வேததாத்பர்யம் கைப்பட்டவர்கள்; அவர்களாகிறார்: கூரத்தாழ்வான் போல்வாரிறே. (காண்பரோ கேட்பரோ தான்) இவற்றை நெஞ்சாலே ஆராய்தல், செவியாலே கேட்குதல் செய்வர்களோ. ஆழ்வான், இஷ்டஸித்தி வாசிக்கிறவர்களோடே இருந்து தாழ்த்துவர ஆழ்வார் ஆழ்வானுக்குச்சொன்ன வார்த்தையை அநுஸந்திப்பது. பாஹ்யகுத்ருஷ்டிகள் †ஸத்தயா அஸஹ்யமாகையும் பகவத்விஷயம் ஸத்தயா தாரகமாயிருக்கையுமிறே தர்ஶநநிஷ்டையாவது. (தலையறுப்புண்டுஞ்சாவேன் சத்தியம் காண்மின்) நிர்த்தோஷஶ்ருதியை ப்ரமாணமென்றிருக்குமளவில்லாதார்க்

* (பா) அநேக. † (பா) வார்த்தை.

கும் இதுவே ஆஶ்ரயணீயவஸ்துவென்னுமிடம் ப்ரத்யக்ஷத்தாலே ஸாதிக்கிறேன், அத்தைக் காணுங்கோள். மழுவைக்காய்ச்சி, கையிலேயிட்டால் அக்நி தன்கார்யம் செய்யமாட்டாதொழிகிறது அர்த்தத்தினுடைய ஸத்யதையாலேயிறே. அப்படியே என்னுடைய ஶரீரத்தை சிரஶ்சேதம் பண்ணினால் அதின்கார்யமான மரணமின்றிக்கே இருந்ததாகில் தஶரதாத்மஜனே ஆஶ்ரயணீயன் என்றிருங்கோள். (77) "धर्मात्मा सत्यसन्धश्च" (தர்மாத்மா ஸத்யஸந்தஶ்ச) என்கிற ப்ரதிஜ்ஞையாலே * வரபலத்தாலே அறுக்கக்கடவதல்லாத தலை அறுக்கக்கண்டோமிறே; அப்படியே அற்ற தலை அதின் கார்யமான மரணம் பிறவாதபடியிறே இவர் ப்ரதிஜ்ஞை. தலையறுக்கச் செய்தேயும் மரணமின்றிக்கே ஒழியக்கூடுமோவென்னில்; (சத்தியம் காண்மின்) ப்ரத்யக்ஷிக்கப்புகுகிறவற்றிலே ஸம்ஶயிக்கிறதென்? நான் பண்ணுகிற த்ருஷ்டப்ரத்யக்ஷத்தைக் காணுங்கோள்.

(ஐயா) அவர்கள் இருயாதே காண்கைக்காக இரக்கிறார். நீர், இப்படி ப்ரத்யயம் பண்ணவேண்டா, பண்ணின ப்ரதிஜ்ஞையே அமையும், ஆஶ்ரயணீயன் இன்னானென்று சொல்லலாகாதோ என்ன; (சிலையினாலிலங்கைசெற்ற தேவனே தேவனாவான்) வரம் கொடுத்த தேவதைகள் தரம் குலையாமே சக்ரவர்த்தித்திருமகனாய்

அரு:— ஏழாம்பாட்டு. (புலையித்யாதி) இஷ்டஸித்தி என்றது ஸாங்க்யவாசஸ்பதி என்று பேரான ஸாங்க்யஶாஸ்த்ரம். ஆழ்வானுக்குச் சொன்ன வார்த்தையாவது: "இத்தனைபோது தாழ்த்ததென்?" என்ன, இவ்வ்ருத்தாந்தத்தை அருளிச்செய்ய, "தலையறக் கற்ற மாந்தர் காண்பரோ, கேட்பரோ" என்றருளிச்செய்து புநஸ்ஸ்நாநம் பண்ணுவித்தருளி ஸ்ரீபாததூளியும் இடுவித்தருளினாராம்.

"தலையறுப்புண்டும் சாகேன்" என்றது, ப்ரதிஜ்ஞாமாத்ரமொழிய சாவாதிருக்கக்கூடுமோவென்ன அருளுகிறார் (மழுவையித்யாதி). அர்த்தத்தினுடைய ஸத்யதையாலே ப்ரதிஜ்ஞைகார்யகரமாமென்னுமதுக்கு உதாஹரணம் (தர்மாத்மேத்யாதி ஶ்லோகம்). இந்த்ரஜித் வதஸமயத்தில் இளையபெருமாளுடைய ப்ரதிஜ்ஞை. 7.

---

* (பா) சாபத்தாலே.

வந்தவதரித்து, கையில் வில்லாலே லங்கையை அழியச் செய்தவனே ஆஶ்ரயணீயன். தேவதைகள் தங்கள் அளவறியாதே ராவணனுக்கு வரங்கொடுத்து, பின்னை தங்கள் குடியிருப்பு இழக்கும்படி அவனாலே நெருக்குண்டு போக்கற்றவளவிலே திருவடிகளிலே வந்து விழுவர்கள், அதுக்குப் போக்கடி செய்கை ஈஶ்வரனுக்கே பரமிறே. ப்ரஹ்மாதிகள் வரபலத்தாலே பூண்கட்டின லங்கையை ஸங்கல்பத்தாலன்றியே கையில் வில்லாலே அழியச்செய்தவனே உங்கள் விரோதியையும் போக்கி ரக்ஷிக்குமென்கை. (தேவனே) ராவணவத ஸமநந்தரத்தில் கையும் வில்லுமாய் நின்றபோதை வீரஶ்ரீயால் வந்த புகரையுடையவனே ஆச்ரணீயனாவான். 7.

---

8. வெறுப்பொடு சமணர்முண்டர் விதியில் சாக்கியர்கள்நின்பால்
பொறுப்பரி யனகள்பேசிற் போவதே நோயதாகிக்
குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமங்கண்டா யரங்கமா நகருளானே.

சின்ன அரு:— ஏழாம் பாட்டு. ஈஶ்வரனை அழிக்கப்போமோவென்ன (அகண்ட்யகண்டநேத்யாதி). (காண்பரோ) கண்ணென்று-உட்கண்ணாய், நெஞ்சைச்சொல்லுகிறது. (இஷ்டஸித்தி) ஸாங்க்ய வாசஸ்பத்யம். வார்த்தையாவது-ஆழ்வானை அவர் திருத்தகப்பனார், "கூரத்தாழ்வான்!'காண்பரோகேட்பரோ' என்றருளிச்செய்யா நிற்க, நீ இதைக்கேட்கலாமோ, தீர்த்தமாடி ஶ்ரீபாததீர்த்தம் ப்ரஸாதப்படு" என்று சொன்னவார்த்தை. கேட்டமாத்ரத்திலே ப்ராயச்சித்தம் பண்ணவேணுமோவென்ன அருளுகிறார் (பாஹ்யகுத்ருஷ்டீத்யாதி). இப்படி பாஹ்யகுத்ருஷ்டிகளுடைய ஹேயதையைச் சொல்லி ஸர்வஸ்மாத்பரனை சக்ரவர்த்தித்திருமகனே ஆஶ்ரயணீயனென்னுமிடத்துக்கு ப்ரமாணமாக வேதங்களைச்சொல்லி, அதிலும் ப்ராமாண்யபுத்தி இல்லாதார்க்கு ஸத்யம் பண்ணுகிறேனென்கிறார் (தலையறுப்புண்டுமித்யாதி). நீர் பண்ணுகிற ஸத்யம்தான் எங்களுக்கு ப்ரமாணமாகிறபடி எப்படி என்ன (மழுவைக்காய்ச்சியித்யாதி). இப்படி ஸத்யத்தினாலே ஸ்வபாவம் பேதித்தவிடமுண்டோவென்ன (தர்மாத்மா ஸத்யஸந்த இத்யாதி). இது இந்த்ரஜித்து விஷயம். லங்கையை அழியச்செய்யவேண்டுவானென்ன (தேவர்களித்யாதி). 7.

பதவுரை:—அரங்கமாநகருளானே! வெறுப்போடு—(பகவத்விஷயத்தைக் கேட்கப் பொருத) வெறுப்புடன் கூடிய, சமணர்—க்ஷமணர்களும், முண்டர்—சைவர்களும், விதி இல்—(பகவத் ஸமாச்ரயண) பாக்கியம் இல்லாத, சக்கியர்கள்—பௌத்தர்களும், நின்பால்—(ஸர்வேச்வரனை) உன் விஷயத்தில், பொறுப்பு அரியனகள்—பொறுக்க முடியாத விஷயங்களை, பேசில்—சொல்லுவார்களாகில், அதுவே நோய் ஆகி—அந்த நிந்தையே வியாதியாகி, போவது—முடிந்து போவது (சிறந்தது); (அப்படியின்றியே); எனக்கு—(பகவத்தூஷணம் பொருத) எனக்கு, குறிப்பு அடையும் ஆகில்—தருணம் வாய்க்குமாகில், கூடுமேல்—(சக்தியும்) இருக்குமாகில், ஆங்கே—(பகவந் நிந்தை பண்ணிய) அவ்விடத்திலேயே, தலையை அறுப்பதே—அவன் தலையை அறுத்துத் தள்ளுகையே, தருமம் கண்டாய்—செய்பத்தக்க காரியம்.

அவ:— எட்டாம் பாட்டு. (வெறுப்பொடு) இப்படி வைதிகமர்யாதைகளிலே நின்று தசரதாத்மஜனே ஆஶ்ரயணீயன் என்று சொன்னவிடத்தில், அங்குத்தை சுணுதிக்யத்தை புத்தி பண்ணி ஆஶ்ரயியாதே, ஸம்ஸாரிகள் அவிக்ருதராயிருந்தபடியைக் கண்டு, இதுக்கடி பாஹ்யதர்ஶநருசிகளாகையிறே; ஆனபின்பு இவர்கள் வத்யரென்று பெரியபெருமாளைக் குறித்து அருளிச் செய்கிறார்.

வ்யா:— (வெறுப்பொடு சமணர்முண்டர்) அர்த்தகாம நிபந்தநமாகவன்றிக்கே நிர்நிபந்தநமாக பகவதுத்கர்ஷம் கேட்டவாறே சிவீறெலன்றிருப்பர்கள். வேத ப்ரதிபாத்யதயா வரும் பகவதுத்கர்ஷமும், தத்ஸமாராதநார்த்தக்கதமான ஜ்யோதிஷ்டோமாதி ஹிம்ஸையும், அ(ச), மணர்க்கும் ஶைவர்க்கும் அஸஹ்யம். திருநாளில் எழுந்தருளாநின்ருல் நான்றுகொள்வாரும், "சொப்பூதிற்று" என்று முட்டிக்கொள்வாருமாயிறே முண்டரிருப்பது. (முண்டர்' என்கிறது ஶைவரை. * "முண்டன் நீரன்" என்கிறபடியே அவனுடைய வடிவையிறே இவர்களும் தரித்திருப்பது. சமணராகிற முண்டரென்னவுமாம். (விதியில் சாக்கியர்கள்) பகவதுத்கர்ஷத்தை அறிந்து

* திருச்சந்த (71)

தத்ஸமாஶ்ரயணத்தைப் பண்ணி அநுபவிக்கைக்கிடான பாக்யமில்லாத பௌத்தர்.

(நின்பால் பொறுப்பரியனகள்பேசில்) ஸர்வஸ்பாத்பரனாய், குணாதிகனான உன்பக்கலிலே பொறுக்கவரியனவாயிருப்பன சிலவற்றைச் சொல்லுவர்களாகில். ஈஶ்வரஸத்பாவத்தையும் தத்விபூதி ஸத்பாவத்தையும் இல்லைசெய்வாரும், ஒருக்ஷேத்ரஜ்ஞனை பரதேவதையென்பாருமானால், வைதிகருக்குப் பொறுக்கப்போகாதிறே. அவர்கள் சொல்லும் பாசுரம் தம்வாயால் சொல்லமாட்டாமையாலே "பொறுப்பரியனகள்" என்கிறார். † "தான்தீங்கு நினைந்த" என்றும் ‡ "அன்றின்னாதனசெய் சிசுபாலன்" என்றுமிறே இவர்கள் வார்த்தை இருப்பது. "பேசில்" என்றது செவிகேட்கச் சொல்லுவர்களாகில் என்றபடி.

மஹாபலி ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கலிலே சென்று "எனக்கு ராஜ்யஸ்ரீ குறைந்துவாரா நின்றது; இதுக்கு அடியென்?" என்று கேட்க; "அஸுரர்களுக்காக தேவர்களை நெருக்கினாய்; அவர்கள் க்ஷீராப்தியிலே சென்று ஆஶ்ரயிக்க, அவர்கள் விஜயார்த்தமாக அதிதி வயிற்றிலே புகுந்தருளினான்; உன் ஐஶ்வர்யம் முடிந்ததுகாண்!" என்ன; அவன் பகவந்நிந்தையைப்பண்ண, செவிபுதைத்துக்கொண்டு, "கெடுவாய்! என்முன்னே பகவந்நிந்தையைப் பண்ணினாய்; என் தலையை அறுத்தாயாகில் எனக்கு உபகரித்தாயாயிற்று; நீ இப்படிச் சொன்னதுக்காக ராஜ்யப்ரஷ்டனாவாய்" என்று ஶபித்தான். "விரக்தனானவன் ராஜ்யத்தை ஒன்றாக

அரு:—எட்டாம் பாட்டு. (வெறுப்பித்யாதி) "பேசில்" என்றது அதிஶப்தத்துக்குப் பேசார்களென்று அந்யதா ப்ரதிபாதநமுண்டாகையாலே அத்தை வ்யாவர்த்திக்கைக்காக அருளுகிறார் (பேசிலென்றது—செவிகேட்கச் சொல்லுவர்களாகிலென்றபடி) என்று. "பொறுப்பரியனகள்" என்று பகவந்நிந்தை. அது அஸஹ்யமென்னுமதுக்கு உதாஹரணம் (மஹாபலீத்யாதி). (போவதே நோயதாகி) "அதுவே நோயாகிப்போவது" என்று அந்வயத்தை

---

† திருப்பாவை (25). ‡ நாச்-திரு (4-7).

நினைத்து இப்படி ஸபிப்பானென்?" என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க; "நாயை தண்டிக்கையாகிறது அது தின்கிற அமேத்யத்தை விலக்குகையன்றோ" என்றருளிச்செய்தார். ராஜகுமாரனை தண்டிக்கையாவது: சாந்தையும் வெற்றிலையையும் விலக்குகையிறே. (போவதே நோயதாகி) பிள்ளை திருநறையூரரையரைப்போலே ஸத்வ ப்ரசுரனாயிருந்தானாகில் அவன் நிந்தையே நோயாக முடிந்துபோவது. அதவா, *கேட்டால் பொறுக்கமாட்டாதபடி அஸக்தனாயிருந்தானாகில் அவர்கள் முகத்திலே விழியாதே போவதென்றுமாம். (78) "**गुरोर्यत्रपरीवादो निन्दा वाऽपि प्रवर्तते। कर्णौ तत्र पिधातव्यौ गन्तव्यं वा ततोऽन्यतः॥**" (குரோர்யத்ர பரீவாதோ நிந்தா வாऽபி ப்ரவர்த்ததே। கர்ணௌ தத்ர பிதாதவ்யௌ கந்தவ்யம் வா ததோऽந்யத:॥)

(குறிப்பெனக்கடையுமாகில்) அங்ஙனன்றிக்கே எதிரி நசிக்கும்படி இலக்கு வாய்க்குமாகில். குறித்தல்:—நினைத்தலும் †கருத்திலது கிட்டலும். (கூடுமேல்) தான் அவன் கையிலே அகப்படாதபடி எதிரியை நிரஸித்துத் தப்பவல்ல ஸக்தியோகமுண்டாகில். (தலையையாங்கே அறுப்பதே கருமம்). பகவந்நிந்தை பண்ணின இடந்தன்னிலே தலையை அறுக்கையிறே கர்த்தவ்யம். 'கருமம்' என்றது அவன் கார்யமென்னவுமாம்; ஸ்வகார்யமென்னவுமாம். பின்னை, அவன் நிந்தை பண்ணக்கேளாதொழியலாம். பகவந்நிந்தை பண்ணி அவன் தனக்கு அநர்த்தத்தை விளைத்துக்கொள்ளாதொழியலாம். அக்நீஷோமீய ஹிம்ஸையில் யஜமானனுக்கும் பஸுவுக்கும் ஸ்வர்க்கஸித்தியுண்டாகச் சொல்லாநின்றதிறே. (கண்டாய்)

விவக்ஷித்து அருளிச்செய்கிறார், (திருநறையூரரையரித்யாதி). (கேட்டால் பொறுக்கப்போகாதபடி) என்றது, பொறுக்கப்போகாதபடியானவற்றைக் கேட்டாலென்றபடி.

(கருத்தில் காட்டல்) இலக்கு. "கருமம்" என்றதுக்கு கர்த்தவ்யமென்று முந்தினவர்த்தம். (கார்யம்) என்றத்திலே அர்த்தத்வயம். கார்யமென்ற பக்ஷத்தில் அர்த்தத்வயத்துக்கும் ஸம்வாதம் (அக்நீஷோமீயமித்யாதி). இவருடைய ஆந்ருஸம்ஸ்ய ஸ்வபாவத்

---

* (பா) கேட்டார். † (பா) கருத்தில் காட்டலும்.

ஸ்ரீதண்டகாரண்யத்தில் ரிஷிகளுக்கு விரோதிகளான ராவணாதிகளை அழியச்செய்த தேவரீர்க்கிறே இது சொன்னாலேறுவது.

(அரங்கமாநகருளானே) கோயிலில் வந்து கண்வளர்ந்தருளுகிறது அவதாரத்தில் பிற்பாடரானாருடைய விரோதிகளைப் போக்குகைக்காகவன்றோ? என்கிறார். ஆந்ருஶம்ஸ்ய ப்ரதாநராய் †பரமதார்மிகரான இவ்வாழ்வார் "வதம் ஆம்" என்று விதிப்பானென் என்னில் (79) "न हिंस्यात् सर्वा भूतानि" (ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி) ‡என்கிறதன்றே; அக்நீஷோமீய ஹிம்ஸைபோலே இருப்பதொன்றிறே இது; பகவந்நிந்தை பண்ணுவார்க்கும், பகவதஸாதாரணராயிருப்பார்க்கும் பாத்யபாதக (बाध्यबाधक) ஸம்பந்தமேயுள்ளது. §"எண்ணாத மானிடத்தை எண்ணாதபோதெல்லாம் இனியவாறே" என்னக்கடவதிறே. 8.

9. மற்றுமோர் தெய்வமுண்டே மதியிலா மானிடங்காள்
உற்றபோ தன்றிநீங்க ளொருவனென் றுணரமாட்டீர்
அற்றமே லொன்றறியீ ரவனையல்லால் தெய்வமில்லை
கற்றினம் மேய்த்தவெந்தை கழலிணை பணிமினீரே.

துக்குச் சேராமையேயன்று, ப்ரமாணவிருத்தமுமென்கிறார் (நஹிம்ஸ்யாதித்யாதி). (என்னுநின்றதிறே) என்ற வநந்தரம் "இரண்டுக்கும் சேருப்படி என்னென்னில்" என்று ஶங்கையைப் பூரிப்பது. இவ்விரண்டுக்கும் வ்யுத்க்ரமேண பரிஹாரமருளிச்செய்கிறார் (அக்நீஷோமீயமித்யாதி வாக்யத்வயத்தாலே). பாத்யபாதக ஸம்பந்தமுண்டென்னுமதுக்கு ப்ரமாணமருளிச்செய்கிறார் (எண்ணாத மானிடத்தையித்யாதி) 8.

சின்ன அரு:—எட்டாம் பாட்டு. செவியிலே கேட்கில் அஸஹ்யமாயிருந்தவிடமுண்டோவென்ன (மஹாபலியித்யாதி). "அதே-நோயாகிப்போவது" என்றநவயித்து முடிந்துபோதல், அஸஹ்யமாய்ப் புறப்பட்டுப்போதல். (கருத்திலது கிட்டில்) நினைத்த காரியம் கிட்டுகை. இவ்விடத்துக்கு இது அர்த்தம். இருவர்க்கும் பலமுண்டோவென்ன (அக்நீஷோமீயமித்யாதி). 8

---

† பரமசாந்தரான. ‡ என்னுநின்றதிறே. § பெரிய திருமொ (11-6-7).

பதவுரை :—மதி இலா—வேதாந்த ஜ்ஞாநமில்லாத, மானிடங்காள்—மனிதர்களே!, மற்றும்—(என்னால் சொல்லப்பட்டவனைத்) தவிர, ஓர் தெய்வம்—(சரணமடையத்தகுந்த) ஒரு தெய்வம், உண்டே—உண்டோ? (கிடையாது); நீங்கள்—நீங்கள், உற்ற போது அன்றி—(நீங்கள் சரணடைந்த தேவர்க்கு) ஆபத்துக்காலம் வந்தபோதல்லால் (மற்ற காலங்களில்), ஒருவன் என்று—'ஸர்வாதிகன் ஒருவனே' என்று, உணரமாட்டீர்—அறியமாட்டீர்கள்; மேல்—(சாஸ்திரங்களில் பதப்பொருளுக்கு) மேலானதான, அற்றம்—மறை பொருளை, ஒன்று அறியீர்—சிறிதும் அறியமாட்டீர்கள்; அவனை அல்லால்—அவனையொழிய, தெய்வம்-(சரணமடையத்தக்க) தேவன், இல்லை—(வேறொருவன்) இல்லை; (ஆதலால்), கற்று இனம் மேய்த்த—பசுக்கூட்டங்களை மேய்த்த, எந்தை—என் ஸ்வாமியான கிருஷ்ணனுடைய, சழல் இணை—இரு திருவடிகளையும், நீர் பணிமின்—நீங்கள் சரணமாகப்பற்றுங்கள்.

அவ :— ஒன்பதாம் பாட்டு. (மற்றுமோர்) அவர்கள் "பரிஷ்ட கர்ஹைக்கஞ்சி, இதர தர்ஶநருசியால் ஆஶ்ரயியாதிருந்தோமல்லோம். தஶரதாத்மஜனையிறே ஆஶ்ரயிக்கச் சொல்லிற்று; அவனாகிறான்: வாசலும் தடையுமாய் எங்களுக்குக் கிட்டவொண்ணாதாயிருப்பானொருத்தன்; கிட்டினாலும் வஸிஷ்டாதிகள் அருகேயிருந்து 'அயோக்யரோ யோக்யரோ' என்று நிற்பர்கள்; ஆகையாலே பராவஸ்த்தையோடு ராமாவதாரத்தோடு வாசியில்லை; எங்கள் அயோக்யதை பாராதானொருவன் ஆஶ்ரயணீயனாகவேணும்; அவனைக் காட்டித்தாரீர்" என்ன; "ஆகில் யோக்யாயோக்யதை பாராதே தானே மேல்விழுந்து விஷயீகரிக்கும் க்ருஷ்ணனை ஆஶ்ரயியுங்கோள்" என்கிறார்.

வ்யா :— (மற்றுமோர் தெய்வமுண்டே) நான் சொல்லுகிற இவனையொழிய வேறேயொரு ஆஶ்ரயணீய தத்வமுண்டோ? "ஈஶ்வரோஹம்" என்றிருப்பாருண்டானாலும், ஆஶ்ரயணீயனுமாய், ப்ராப்தனுமாயிருப்பான் வேறொருவனில்லை; (80) "**येप्यन्यदेवताभक्ताः**" (யேப்யந்யதேவதாபக்தா:) என்று அந்யராகவிறே இவன் சொல்லும் போதும் சொல்லுவது. (ஓர் தெய்வம்) சட்டக்குடியனைச் சிறிது போதைக்குப் போலியாய் நின்று பின்னை விவேகித்தால் கழிக்கலாவ

தொன்றுமில்லை; (உண்டே) இவனோடு ஸமாநராயிருப்பாருண்டோ வென்று கேட்கிறாரல்லர்; கிம்க்ஷேபமாதல்; * "ஏழுலகுமீபாவஞ் செய்து அருளாலளிப்பார் ஆர்" என்றால், "அவன்" என்று எதிரிகளுக்கு உத்தரமாம்படி ஸுப்ரஸித்தமான அர்த்தமென்கிறாராதல்; ஸம்ப்ரதிபந்நமான அர்த்தத்தை ஒருவராலும் இசையாதொழியவொண்ணாதிறே.

(மதியிலா மானிடங்காள்) (81) "**त्रीणि शतानि त्रिसहस्राण्यग्निं त्रिंशच्च देवानवचा सपर्यन्**" (த்ரீணி ஶதாநி த்ரிஸஹஸ்ராண்யக்நிம் த்ரிம்ஶச்ச தேவாநவசா ஸபர்யந்) என்கிறபடியே ஆராத்யர் அநேகரென்னுமிடம் ஶ்ருதிஸித்தமன்றோவென்ன;(மதியிலாமானிடங்காள்) வேதாந்தஜ்ஞாநமில்லாதார் பாக்யஹீநரிறே. (82) "**चतुर्होतारो यत्र संपदं गच्छन्ति देवैः**" (சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பதம் கச்சந்தி தேவை:), (83) "**अहं हि सर्वयज्ञानां भोक्ता**" (அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா), (84) "**ये यजन्ति पितॄन् देवान्**" (யே யஜந்தி பித்ரூந் தேவாந்) என்கிற ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் ஜ்ஞாநமில்லாதாரிறே. அறிவுக்கு யோக்யதையுள்ள ஜந்மத்திலே ஜநித்து அறிவின்றிக்கே இருக்கிற பாக்யஹீநர்காள். † "ஆன்விடையேழன்றடர்த்தாற்காளானாரல்லாதார் மானிடவரல்லரென்றென்மனத்தேவைத்தேனே" என்றும், ‡ "செங்கண்மால் நாமம் மறந்தாரை மானிடமாவையேன்" என்றும், (75) "**असन्नेव स भवति**" (அஸந்நேவ ஸ

அரு:—ஒன்பதாம் பாட்டு. (மற்றித்யாதி) "உண்டே" என்கிறதென்? அவர்கள் தங்களை ஆஶ்ரயணீயராக நினைத்திருக்கிறார்களேயென்ன அருளிச்செய்கிறார் (ஈஶ்வரோஹமித்யாதி). "மற்று" என்று பிரியச்சொன்னதுக்கு ப்ரமாணமருளிச்செய்கிறார் (யேப்யந்யேத்யாதி). "ஏழுலகும்" என்ற வாக்ய விவரணம் (அவனென்றித்யாதி). உக்த விவரணம் (சதுர்ஹோதார இத்யாதி).

மானிடங்களாயிருந்து வைத்து மதியில்லாதே இருக்கிறிகோள் என்றருளிச்செய்து, மதியில்லாதே இருக்கவும் மானிடங்களாயிருக்கிறிகோள் என்று க்ஷேபமாக விவக்ஷித்து, அப்படி பகவத்ஜ்ஞாநமில்லாதது கொண்டு மநுஷ்யரல்லரென்று சொன்னபேருண்டோ

* திருவாய்(2-2-2). † பெரிய.திருமொ (11-7-9). ‡ நான்—திருவ(49)

பவதி) என்றும் சொல்லக்கடவதிறே. (85) "**तत् ज्ञानमज्ञानमतोऽन्यदुक्तं**" (தத் ஜ்ஞாநமஜ்ஞாநமதோऽந்யதுக்தம்) என்றும், § "ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்றும் வகுத்த விஷயத்தில் ஜ்ஞாநமே ஜ்ஞாநமாவது; அல்லாதவை அஜ்ஞாநஸமாநம். (86) "**विद्यान्या शिल्पनैपुणं**" (வித்யாந்யா ஶில்பநைபுணம்) செருப்புக் குத்தக் கற்ற ஜ்ஞாநத்தோபாதியிறே இதர ஜ்ஞாநங்கள்.

எங்களுக்கு அறிவில்லையாகில் அறிந்த நீர் அருளிச்செய்ய மாட்டீரோவென்ன; உற்றபோதன்றி நீங்களொருவனென்றுணர மாட்டீர்) நான் சொன்னாலும் ப்ரளயம் வந்து கிட்டினபோது ஆஶ்ரயணீயரான தேவதைகளும் நீங்களும் ஒரு புகுவாசல் தேடித் திரியுமன்றல்லது "ஸர்வாதிகனொருவனுளன்" என்று உங்கள் நெஞ்சில் படமாட்டாது; உங்களுக்கு ஆஶ்ரயணீயரான தேவதைகள், ராவணாதி கண்டகர் கையிலே நெருக்குண்டு கூப்பிடுமன்றிறே ரக்ஷகனொருவனுண்டென்று உங்கள் நெஞ்சிலேபடுவது என்றுமாம். (ஒருவனென்றுணரமாட்டீர்) தேவதாந்தரங்களை ஆராதிக்கிற நீங்கள் ஆபத்தசைகளை ஒழிந்தபோது அவர்களோபாதி இவனும் ஒருவனென்று புத்திபண்ணமாட்டிகோள். அபுநராவ்ருத்தி லக்ஷண மோக்ஷத்தைத்தரும் இவன்பக்கல் க்ஷுத்ரபலப்ரதரான தேவதைகள் பக்கல் பண்ணின ஆதரமுமின்றிக்கே இருக்கிறதிறே ஸம்ஸாரிகள் மதிகேடு. (அற்றமேலொன்றறியீர்) அற்றம்—மறைபொருள். அறியாமைக்கடி அபிதாநவ்ருத்திக்கு மேற்பட தாத்பர்யவ்ருத்தி அறிகிலிகோள். (87) "**वचसां वाच्यमुत्तमं**" (வசஸாம் வாச்யமுத்தமம்) (88) "**वेदैश्च सर्वैरहमेव वेद्यः**" (வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:) (89) "**नारायणपरा वेदाः**" (நாராயணபரா வேதா:) என்னக்கடவதிறே. (அவனையல்லால் தெய்வமில்லை) அவனையொழிந்த தேவதைகளுடைய ஸத்பாவத்தை இல்லையென்கிறாரல்லர்; ஈஶ்வரனுக்கு ப்ரகாரமாய்க்கொண்டு அத்தேவதைகளுமுளர்; ஆஶ்ரயணீயரல்ல

வென்ன (ஆன்விடையேழித்யாதி). "மதியிலா" என்கிற ஸாமாந்ய ஶப்தம் ப்ரஹ்ம விஷய ஜ்ஞாநாபாவத்தைக் காட்டுமோவென்ன அருளுகிறார் (தத்ஜ்ஞாநமித்யாதி).

---

§ முத-திருவ (67).

ரென்கிறார். "அவனை" என்று மேற்சொல்லுகிற க்ருஷ்ணனை நினைக்கிறார்.

"அவனை" என்று நீரருளிச்செய்கிறவனை இன்னானென்று விசேஷியீர், நாங்களாச்ரயிக்கவென்ன; (கற்றினம் மேய்த்த வெந்தை கழலிணைபணிமினீரே) என்கிறார். "க்ருஷ்ணன்" என்னாதே "கற்றினம் மேய்த்த" என்றது தேவதாந்தரங்களைப் போலே துராராதனன்றிக்கே ஸர்வஸுலபனென்கைக்காக.

பசு மேய்க்கை, * அயர்வறுமமரர்களதிபதியாயிருந்தத்தோடொக்கும்; கன்று மேய்க்கையிலேயாய்த்துத் திருவுள்ளம் உகந்திருப்பது; ஸ்வரக்ஷணத்தில் குறைய நின்றார் பக்கலிலேயிறே திருவுள்ளம் மண்டியிருப்பது. † "திவத்திலும் பசு நிறை மேய்ப்புவத்தி" என்கிறபடியே பசு மேய்க்கையில் உகப்பு; கன்றுகளை மேய்க்குமிடத்தில் இனிதுகந்திருக்கும். கற்று—கன்று. (எந்தை) நானகப்பட்ட துறையிலே நீங்களும் அகப்படப்பாருங்கோள். (கழலிணைபணிமினீரே) அச்செயலுக்குத் தோற்று, (90) "गुणैर्दास्यमुपागतः" (குணைர்தாஸ்யமுபாகத:) என்கிறபடியே நான் அவன் திருவடிகளிலே விழுந்தேன், நீங்களும் அப்படியே ஆச்ரயியுங்கோள்.

தான் சிறியனாய் நின்ற நிலையிலே தன்னை ஆச்ரயித்தாரைப் பொறுப்பிக்குமவனை ஆச்ரயியுங்கோள். "யயாதி இந்த்ரனோடே

"கற்றினம் மேய்த்த" என்றதுக்குமேலே ஓரர்த்தசிக்ஷை பண்ணுவாராக, ‡ "கன்று மேய்த்தினிதுகந்த" என்றவிடத்தை உட்கொண்டருளிச்செய்கிறார் (கன்று மேய்க்கையிலேயித்யாதி). "கற்றினம் மேய்த்த" என்றதுக்குத் தாத்பர்யாந்தரம் (தான் சிறியனாயித்யாதி). தன்னை ஆச்ரயித்திருப்பாரைப் பொறுக்கைக்கு ஸம்வாதமருளிச் செய்கிறார் (யயாதீத்யாதி). என்ன வேதார்த்தம் சொல்லுகிறதென்று கேட்க, "ஸர்வேச்வரனையொழிந்த தேவதைகளை ஆச்ரயித்துப்பெற்றால் அத்தை இத்தைச் சொல்லித் தள்ளிவிடுவார்கள். ஸர்வேச்வரனொருவனுமே தன்னை ஆச்ரயித்த

---

* திருவாய் (1-1-1). † திருவாய் (10-3-10). ‡ திருநெடுந்தாண்டகம் (16).

ஏகாஸநத்திலிருந்தவளவிலே, கர்ம பூமியிலே புண்யக்ருத்துக்களாய்ப் போருவாராரோ? என்ன; அஸத்யம் சொல்லலாகாதென்னும் நினைவாலே, நான் வர்த்திக்கிற நாளிலே என்னைச் சொல்லுவார்களென்ன; ஏகாஸநத்திலிருந்தது பொருமையாலே ஆத்மப்ரஶம்ஸை பண்ணினுயென்று 'ध्वंस' (த்வம்ஸ) என்று தலைகீழ்ப்படத் தள்ளினுனென்று உண்டாயிருந்தது; வேதோபப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தமான மஹாபாரதத்தில், இது என்ன வேதார்த்தம் சொல்லுகிறது என்று குறைப்பட்டிருக்கும்" என்ன; "அவனே ஆஶ்ரயணீயனென்னுமிவ்வர்த்தம் சொல்லுகிறது" என்றருளிச்செய்தார். 9.

வர்களுக்கு எல்லாம் கொடுத்தாலும் ஒன்றும் கொடுத்திலோம் என்று குறைப்பட்டிருக்கும்" என்று இவ்வளவும் கூட்டி நிர்வஹிப்பது. 9.

சின்ன அரு:— ஒன்பதாம் பாட்டு. (ஶிஷ்டகர்ஹைக்கஞ்சி) ஆழ்வார் கர்ஹைக்கு பயப்பட்டு. மேற்சொல்லுகிறுர்கள் ருத்ராதிகளுமுண்டேயென்ன, அருளிச்செய்கிறுர் (ஈச்வரோஹமித்யாதி). "மற்றும்" என்று அந்யராகச் சொல்லலாமோவென்ன (யேப்யந்யேத்யாதி). (கட்டக்குடி) கஷ்டக்குடி; தரித்ரனென்றபடி. ஊரொப்புக்கு வீட்டடைவிலே எண்ணும்போது ஒக்கவெண்ணலாய், உற்று விசாரித்தால் கொடுக்க வகையற்றிருக்குமவன். "பாக்யஹீநரிறே இப்படிச் சொல்லுவார்" என்று பூரிப்பது. மதியில்லாமையாலே மானிடவரென்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் (ஆன்விடையேழித்யாதி). சிறிது ஜ்ஞாநமுண்டே, மதியிலாவென்பானென்னென்ன (தத்ஜ்ஞாநமித்யாதி). (உற்றபோது) ப்ரளயாபத்திலே உற்றபோதென்னுதல்; ராவணுதி பீடையிலே உற்றபோதென்னுதல். (ஒருவன்) அத்வீதீயனென்னுதல்; அவர்களோடொருவனென்னுதல். (அற்றமேல்) "அற்றம்" என்று அறுதியாய், அறுதியானவர்த்தமாகில் தாத்பர்யமறிகிலிகோளென்றபடி. (அபிதாநவ்ருத்தி) ஶக்யார்த்தம். எல்லா ஶப்தத்துக்கும் யதாவான அர்த்தம் அவனேயென்ன (வசஸாமித்யாதி). இந்த அவதாரத்தால் பலிதத்தை அருளுகிறுர் (தான் சிறியனுயித்யாதி). இத்தால் தான் தாழ்ச்சியான தூத்யஸாரத்யங்களைப் பண்ணியும் ஆச்ரிதனை

10. நாட்டினான் தெய்வமெங்கும் நல்லதோ ரருள்தன்னாலே
காட்டினான் திருவரங்க முய்பவர்க் குய்யும்வண்ணம்
கேட்டிரே நம்பிமீர்காள் கெருடவாகநனும் நிற்கச்
சேட்டைதன் மடியகத்துச் செல்வம்பார்த் திருக்கின்றீரே.

பதவுரை :—எங்கும் — எல்லாவிடங்களிலும், தெய்வம்—பல தாமஸ தெய்வங்களை, நாட்டினான்—நிலை நிறுத்தினான் ; உய்பவர்க்கு —உஜ்ஜீவிக்க விருப்பமுள்ளவர்களுக்கு, உய்யும் வண்ணம்—கடைத் தேறலாம்படி, நல்லது ஓர் அருள் தன்னாலே—(தனது) ஒப்பற்ற தயாகுணத்தினால், திரு அரங்கம்—திருவரங்கத்தைக், காட்டினான்— காண்பித்துக் கொடுத்தான் ; நம்பிமீர்காள்—பகவத் வ்யதிரிக்தவிஷயங்களில் பூர்ணமான பற்றுள்ளவர்களே !, கேட்டீரே—இவ்வர்த்தத்தைக் கேட்டீர்களா ? கெருட வாகனனும் நிற்க—கருடனை வாகனமாகவுடைய எம்பெருமான் இருக்கச்செய்தேயும், சேட்டை தன் மடியகத்து—மூதேவியின் பக்கலிலே, செல்வம் பார்த்து இருக்கின்றீரே —ஐச்வர்யம் வேண்டி நிற்கின்றீர்களே.

அவ :—பத்தாம் பாட்டு. (நாட்டினான்) “தண்டுழாய் மாலை மார்பன்” என்கிற தேஶவிப்ரகர்ஷம் தீர ராமாவதாரத்தை அருளிச் செய்தீர் ; அநந்தரம் அதிலும் ஸுலபமான க்ருஷ்ணாவதாரத்தை அருளிச்செய்தீர் ; ராமாவதாரத்தோடு க்ருஷ்ணாவதாரத்தோடு வாசியென் இரண்டுக்கும் பிற்பாடரான எங்களுக்கு ?” என்ன ; “தேஶகாலத்தால் வந்த குறைதீரக் கோயிலிலே வந்து பெரிய பெருமாள் கண்வளர்ந்தருளுகிறார், அங்கே ஆச்ரயியுங்கோள், அவரையொழிய மோக்ஷார்த்தமாக வேறு தேவதைகளை ஆஶ்ரயிக்கையாவது அஶ்ரீவாசலிலே ஐச்வர்யம் வேண்டியிருப்பாரோபாதி கிடிகோள்” என்கிறார்.

வ்யா :— (நாட்டினான்) ஸத்வப்ரசுரராய்த் தன்னைப் பற்றுமளவுடையவரன்றிக்கே இருக்கும் ரஜஸ்தம:ப்ரசுரர்க்கும் தேவதை

அர்ஜுநனைப் போரப்பொலிய நினைத்திருக்குமென்றபடி. இவனையொழிந்தவர்கள் ஆச்ரிதருடைய உச்ச்ராயம் பொறாரென்னுமதுக்கு ஸம்வாதம் (யயாதித்யாதி). (குறைப்பட) “இந்த வர்த்தம் தெரிந்ததில்லையென்று நான் குறைப்பட்டிருப்பன்” என்று நஞ்ஜீயர் கேட்க, பட்டர் அருளிச்செய்தது.

களை நாட்டினான். அதுக்கடி தன்னரசுபோலே ஸ்வதந்த்ரராய் மூலை யடியே திரியப்புக்கவாறே, ஸ்வஸ்வகுணாநுகூலமாக தேவதைகளை ஆச்ரயித்து, பின்னை, சேதநரிறே நம்வாசி அறிந்து நம்மைப்பற்று கிறார்கள் என்னும் நினைவாலேயாய்த்து தேவதைகளை நாட்டிற்று. (நாட்டினான்) * உபக்நத்தைப்பெறாத கொடிபோலேயாய்த்து ஈச்வர னுடைய ஆத்மபாவத்தையொழியில் தேவதைகளுடைய ஸத்தாதி களிருப்பது. சுள்ளிக்கால் நாட்டினாப்போலே இருக்கிறதாய்த்து. † "நிறுத்தினான் தெய்வங்களாக" என்னக்கடவதிறே.

(தெய்வமெங்கும்) 'ஐயன்' என்றும், 'எழு மூர்த்தி' என்றும் இதெல்லையாக ஆசண்டாளம் ஆச்ரயணீயரைக் கற்பித்தான். (91) "**विष्णुरात्मा भगवतः**" (விஷ்ணுராத்மா பகவத:) என்றும், ‡ "இறைய வரவரவர் விதிவழியடைய நின்றனரே" என்றும் சொல்லக்கடவ திறே. முதல்தன்னிலே இவற்றை முமுக்ஷுவிஸ்ருக்ஷயா ஸ்ருஷ் டித்துப் பின்னை வேதசக்ஷுஸ்ஸையும் கொடுத்துவிட்டால், குணாநு கூலமாக தேவதையை ஆச்ரயித்து, அவற்றினுடைய ஸ்வபாவங்களை யும் தன்வாசியையும் அறிந்து நம் பக்கலிலே வருகின்றனவென் றாய்த்து தேவதைகளை ஸ்ருஷ்டித்தது; * அதுபோய்க் கொள்கொம்பு மூடப்படர்ந்து அவர்கள் பக்கலிலே ஆதரத்தைப்பண்ணித் தன் பக்கலிலே வைமுக்யத்தைப் பண்ணும்படியாய்விட்டது. (நல்ல தோரருள் தன்னாலே) தான் நினைத்தவழியே தன்னுடைய ஹிதமறிந்து போராதே நோவுபட்டிருந்தனவாகாதே என்று க்ருபைபண்ணினா னாய்த்து.

அரு:— பத்தாம் பாட்டு. (நாட்டினானித்யாதி) "நாட்டினான்" என்றதுக்கு தேவதைகளுக்கு அந்தராத்மத்வேந நின்று அவர்களை ஸ்திதிப்பித்தானென்று அர்த்தாந்தரம் விவக்ஷித்து அருளிச்செய் கிறார் (உபக்நத்தையித்யாதி). முந்தின வர்த்தவிவரணம் (சுள்ளிக் காலித்யாதி) இரண்டாமர்த்தத்துக்கு ப்ரமாணம் (நிறுத்தினானித் யாதி).

ஈச்வரனுடைய ஆத்மபாவத்தையொழிய இவற்றின் ஸத்தை யில்லையென்னுமதுக்கு ப்ரமாணம் (விஷ்ணுராத்மேத்யாதி).

---

* உபக்நம்-கொள்கொம்பு. † திருவாய் (5-2-8). ‡ திருவாய் (1-1-5).
* (பா) அதுவே.

(நல்லதோரருள்) இவற்றினுடைய கர்மாநுகுணமாகவாதல், ஆச்ரயணாநுகுணமாகவாதல் பண்ணுமருள் போலன்றியே, (92) "कृपया केवलं" (க்ருபயா கேவலம்) என்கிறபடியே இவற்றினுடைய துர்க்கதியைக்கண்டு பண்ணுமருள்; இவர்கள் தந்தாம் தசையை அறிந்து அநுஸந்தித்து அதுக்கநுதபிக்கவும் அறியாதிருக்கச் செய்தே பண்ணுமருளிறே.

"நல்லதோரருள்" என்கையாலே கீழ் தேவதைகளை உண்டாக்கி வைத்ததும் அருளின் கார்யமென்கிறது. (அருள் தன்னாலே காட்டினான் திருவரங்கம்) சிலர் எங்களுக்குக் காட்டவேணுமென்னக் காட்டுகையன்றிக்கே, முலைக்கடுப்புத் தீரத்தரையிலே பீச்சுவாரைப் போலே தன் செல்லாமையாலே காட்டினானாய்த்து. இருந்த கிழிச் சீரையோடே ரத்நத்தைக் கொடுப்பாரைப்போலே கோயிலோடே கூடவாய்த்து தன்னைக் காட்டிக்கொடுத்தது. இவர்களோடு இவர்கள் ஆச்ரயிக்கிற தேவதைகளோடு வாசியறத் தந்தாம் நிலையையுணர்ந்து, ரக்ஷகாபேக்ஷையுண்டானவன்று நாமறியோமாகவொண்ணாதென்று ரக்ஷகனான தான் தன்னை ஸந்நிஹிதனாக்கி வைத்தான்.

இதுதான் ஆர்க்கென்னில்; (உய்பவர்க்கு) உஜ்ஜீவிப்போமென்பாரெல்லார்க்கும் ஒக்குமிது; இவன் நிழலில் ஒதுங்கோமென்னாமையே வேண்டுவது; இது உஜ்ஜீவநமானவோபாதி தேவதாந்தர பஜநமும் பந்தகமாகையாலே ஸம்ஸாரஹேதுவென்கை. (உய்யும் வண்ணம்) தேவதாந்தரமுகமாக தச்சரீரியை ஆராதிக்கையும் உஜ்ஜீவநப்ரகாரமானாலும் அது அதிக்ருதாதிகாரம்; கோயிலைவந்து ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கை ஸர்வாதிகாரம். (கேட்டிரே நம்பிமீர்காள்) பகவத்வ்யதிரிக்த விஷயலாபத்தாலே பூர்ணராயிருந்துள்ள நீங்கள் இவ்வர்த்தத்தைக் கேட்டிகோளே என்கிறார். ஸர்வேச்வரன் ஸந்நிஹிதனாயிருக்க தேவதாந்தரங்களை ஆச்ரயித்து அத்தாலே பூர்ணராயிருந்துள்ள நீங்கள் கேட்டிகோளே என்றுமாம். ஸம்ஸாரிகள்

"காட்டினான்" என்றதின் முந்தின வர்த்தத்திலே நோக்காக "நல்ல தோரருள் தன்னாலே" என்றதுக்கவதாரிகை (முதல் தன்னிலேயித்யாதி) (ஆச்ரயாநுகுணமாக) அதிகாராநுகுணமாக என்றபடி. "ஆச்ரயணாநுகுணமாகவாதல்" என்றுபாடமுண்டு; அறியோம்.

* ஆனைக்குப்பு ஆடுவாரைப்போலே இருக்கையாலே உணர்த்தி "கேட்டிரே" என்கிறார்.

(கெருடவாகனனும் நிற்க) கருடவாஹனனிறே ஆச்ரயணீயன், பெரிய திருவடி கழுத்திலே நற்றரிக்கவிருத்தல், திருவாழியைச் சலியாதே பிடித்தல், ஸாக்ஷால்லக்ஷ்மியை எனக்கென்னுதல் செய்யு மிவற்றிலே ஒன்றே அமையுமிறே ஸர்வேச்வரனுகைக்கு. தன்பக்கல் ஆஶாலேசமுடையார் இருந்தவிடத்தே கொடுவந்து காட்டும் பரி கரத்தையுடையவன் நிற்க. "நிற்க" என்கிறது, (74) "आशया यदि वा रामः" (ஆஶயா யதி வா ராம:) என்கிறபடியே அவஸரப்ரதீக்ஷ ஞய் நிற்கை. தேவதாந்தரங்கள் பக்கல் போமிடத்தில் இவனை அதிக்ரமித்துப் போகவேண்டும்படி இவனுடைய ப்ரத்யாஸத்தியைச் சொல்லிற்ருகவுமாம்.

(சேட்டை தன் மடியகத்துச்செல்வம் பார்த்திருக்கின்றீரே) அஶ்ரீகிழிச்சீரையிலே தநம் வாங்கவிருக்கிறிகோள். அலக்ஷ்மீ பக்கலிலே ஐஶ்வர்யத்தை ஆகாங்க்ஷித்திருக்கிறிகோளே. இதர தேவ தைகளை ஆச்ரயித்து மோக்ஷம்பெறவிருக்கையாகிற இது அஶ்ரீபக்க லிலே ஐச்வர்யம் வேண்டியிருக்கையிறே. பந்தகமாய் க்ஷுத்ரமான பலங்களைத்தரும் தேவதைகளை ஆச்ரயித்து அபுநராவ்ருத்தி லக்ஷண மோக்ஷத்தை லபிக்கப்போமோ; அமணனைக் கூறைவேண்டுகிறது கொலையைக் (கொலை) கருதியிறே; அப்படியே இவர்கள் மதிப்பை அறுக்கையிறே. ரஜஸ்தம:ப்ரசுரரை ஆச்ரயித்து நித்யஸத்வஸ்தர் பெறும்பேற்றை எங்ஙனே பெறும்படி. பகவத்ப்ரவணரானவர்கள் தேவதாந்தரங்களை த்ருணீகத்திறே இருப்பது. ருத்ரனும் தேவியும் போகாநிற்க, பகவத்ப்ரவணராயிருப்பாரொருவர் அவர்களை அநா தரித்துத் தன் வஸ்த்ரத்தைக் குத்தி நின்றத்தை நினைப்பது. 10.

"கெருடவாகநன்" என்றதுக்குத் தாத்பர்யம் (தன்பக்கலித்யாதி). "நிற்க" என்றதின் இரண்டாமர்த்தத்துக்கு ஶப்தநிர்வாஹம் ப்ராப்த விஷயமாகையாலே தூரஸ்த்தனேயாகிலும் ஸந்நிஹிதனென்று சொல்லலாம்படியான ப்ரத்யாஸத்தியைச் சொல்லுகிறது, "சேட்

---

* ஆனைக்குப்பு ஆடுவார்—சதுரங்கமாடுவார்.

11, ஒருவில்லா லோங்குமுந்நீ ரடைத்துலகங்க ளுய்யச்
சேருவிலே யரக்கர்கோனைச் செற்றநம் சேவகனுர்
மருவிய பெரியகோயில் மதிள்திரு வரங்கமென்னு
கருவிலே திருவிலாதீர்! காலத்தைக் கழிக்கின்றீரே.

பதவுரை:—ஒரு வில்லால்— கைக்கெட்டியதொரு வில்லாலே, ஓங்கு முந்நீர் அடைத்து—கொந்தளிக்கும்படியான கடலிலே அணை கட்டி, உலகங்கள் உய்ய—எல்லா உலகங்களுக்கும் உஜ்ஜீவிக்கும்படி, சேருவிலே—யுத்தத்திலே, அரக்கர் கோனை—ராக்ஷஸர்களின் அதிபனை இராவணனை, சேற்ற—அழியச்செய்து, நம் சேவகனுர்—நமக்கு உதவிய அழகிய மணவாளன், மருவிய—நித்யவாஸம்பண்ணுகிற, பெரியகோயில்—பெருமைபொருந்திய கோயிலாவது, மதிள் திரு அரங்கம்—மதிள்களையுடைய ஸ்ரீரங்கம், என்னு—என்று சொல்ல

டைதன்மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே” என்று. தேவதைகளாயிருக்கிறவர்களை அநாதரித்துச் சொல்லலாமோவென்ன (பகவத் ப்ரவணனித்யாதி). இதுக்கு ஸம்வாதமருளிச்செய்கிறுர் (ருத்ராணுமித்யாதி). 10.

சின்ன அரு:—பத்தாப்பாட்டு. (மூலையடியே) தன்னிஷ்டப்படியே, தாத்பர்யாந்தரம் (சுள்ளிக்காலித்யாதி). அவர்கள் முகேநதன்னை ஆஶ்ரயிக்கைக்காக என்றபடி. அவர்கள் பலப்ரதராகவல்லார்களோவென்ன, இவன் அந்தராத்மதயா நின்று கொடுக்கையாலே கொடுக்க வல்லரென்கிறுர் (விஷ்ணுராத்மேத்யாதி).

அவர்கள் முகேந தன்னை ஆஶ்ரயிக்கக் கரணேமே என்ன (முதல் தன்னிலேயித்யாதி). கேவலக்ருபையாலே என்கைக்கு ஜ்ஞாபகமேதென்ன (இவர்களித்யாதி). (உய்யும்வண்ணம்) என்றது ப்ரபத்தியாய், உபாயாந்தரம் உஜ்ஜீவநப்ரகாரமன்றேவென்ன (தேவதாந்தரமுகமித்யாதி). (வ்யதிரிக்தவிஷயம்) ஶப்தாதிகள், முந்தினவர்த்தம். (மடியகம்) கிழிச்சீரை.

(அமணன்) நிர்வாணி. அவனைப் புடைவை கேட்டால் அதில்லாமையாலே தன் மதிப்புக்கெட்டுச் செத்தவனைப்போலே இருக்கும். பகவத்ப்ரவணரிருக்கும்படி யென் என்ன (பகவதித்யாதி). த்ருணீகரிப்பரென்கைக்கு ஸம்வாதம் (ருத்ராணுமித்யாதி). 10.

மாட்டாதவராய், கருவிலே திரு இலாதீர்—காப்பத்திலும் பகவத் கடாக்ஷமில்லாதவர்களாயுள்ளவர்களே! காலத்தை—(பகவானை சரணடைந்து தொண்டுபுரியவேண்டும்படியான) காலத்தை, கழிக்கின்றீரே—வீணுக்குகின்றீர்களே.

அவ :—பதினேராம்பாட்டு. (ஒரு வில்லால்) இப்படி ஸௌலப்யகாஷ்டையை உபதேசியா நிற்கச்செய்தேயும் அவிக்ருதராயிருக்கிற ஸம்ஸாரிகளைக் குறித்து, நான் ஆஶ்ரயணீயனுகச் சொன்ன சக்ரவர்த்தித் திருமகன் பிற்பாடர்க்கும் உதவுகைக்காக இங்கே வந்து கண்வளர்ந்தருளா நிற்க, பாக்யஹாநியாலே திருநாமத்தைச் சொல்லிப் பிழைக்கமாட்டாதே காலத்தை வ்யர்த்தமே போக்குகிறிகோளே என்று இன்னுதாகிருர்.

வ்யா :— (ஒரு வில்லால்) கைக்கெட்டிற்ருெரு வில்லாலேயாய்த்துக் கடலையடைத்தது. அதுக்கடியென்னென்னில்; ஸமுத்ரத்தை அர்த்தித்து வழி வேண்டிக்கிடந்தவிடத்திலே வந்து முகங்காட்டிற்றில்லை; இது குணத்துக்கு முகங்காட்டுமதாயிருந்ததில்லை; (93) "चापमानय सौमित्रे" (சாபமாநய ஸௌமித்ரே) என்றபடியே "கொண்டுவா தக்காளை" என்று கையிலே வில்லை வாங்கி, அவ்வில்லு எதிரிகள் பக்கல் தண்ணளி பண்ணினும் பண்ணுத (93) ஆஶீவிஷோபமமான அம்புகளை விட்டார்.

(ஓங்குமுந்நீர்) கடலினுடைய ஸ்வாபாவிகமான வேஷத்தைச் சொல்லுகிறதன்று, கையும் வில்லுமாய் நின்ற வீரவுறைப்பைக்கண்டு, கீழ் மண்கொண்டு மேல் மண்ணெறிந்து கொந்தளித்தபடியைச் சொல்லுகிறது. இதுதான் ஆர்த்திக்கிரற்குமதன்றே; அம்புக்கிரங்குமதிறே. உபாத்யாயன்கையில் கசைகண்டு சிறு ப்ரஜைகள்

அரு :—பதினேராம்பாட்டு. (ஒரு வில்லாலித்யாதி), உபாத்யாயன்கையில் கசைகொண்டு சிறு ப்ரஜைகளை நியமிக்கும்போது கோபஸஹிதனுய் நியமிக்குமாப்போலே, இவரும் வில்லைக்கொண்டு ஸமுத்ரத்தை அடர்க்கும்போது கோப ஸஹிதராகவே அடர்த்தாரென்று த்ருஷ்டாந்தத்தாலே பலிப்பித்து அதுக்கு ப்ரமாணமருளிச்செய்கிருர் (ஸமுத்ரஸ்யேத்யாதி).

காலிலே விழுமாபோலே திருவடிகளளவும் வந்து வெள்ளங்கோத்த தாய்த்து. (94) "समुद्रस्य ततः क्रुद्धो रामो रक्तान्तलोचनः" (ஸமுத்ரஸ்ய தத: க்ருத்தோ ராமோ ரக்தாந்தலோசந:) என்னக்கடவதிறே. (அடைத்து) நாலிரண்டு அப்பு விட்டவாறே வந்து முகங்காட்டி முதுகெடுத்துக் கொடுத்தவாறே அதின் மேலேயாய்த்து அணை கட்டிற்று. ஆகையாலே கல்லாலன்று அடைத்தது, வில்லால் என்கை. இங்ஙனன்றாகில் இட்ட இட்ட மலைகளெல்லாம் ஆழ்ந்துபோய் அடைத்ததாய்த் தலைக்கட்டாது.

(உலகங்களுய்ய) பாதாளம், பூம்யந்தரிக்ஷஸ்வர்க்கம் இவ்வுலகங்கள் உய்ய. ராவணனுடைய * வரபலத்தாலே இவ்வுலகங்களெல்லாம் அழிந்திறே கிடந்தது. (95) "न यष्टव्यं न दातव्यं न भोक्तव्यं कथञ्चन" (ந யஷ்டவ்யம் ந தாதவ்யம் ந போக்தவ்யம் கதஞ்சந) என்று யஜ்ஞாதிகளை விலக்கியும் அம்பாலே இந்த்ராதிகளை ஜயித்தும் பஹுமுகமாக நலிந்தான்; இவனை அழித்த பின்பாய்த்து லோகங்கள் ஜீவித்தது. அங்ஙனன்றே, (96) "सेतुं दृष्ट्वा समुद्रस्य" ஸேதும் த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய) என்கிறபடியே அஸ்த்தரானவர்களும் அத்தை தர்சித்து ஸத்தராம்படி "ஒரு வில்லாலே அடைத்து" என்று கீழே யோஜிக்கவுமாம்.

(செருவிலே) மாயாம்ருகத்தைக்காட்டி ராஜபுத்ரர்களை அகற்றி, திறந்துகிடந்த வாசலிலே நாய் புகுருமாபோலே, தனியிருப்பிலே வந்து பிரித்த கோழைப்பையலைப்போலன்றியே, பத்தும் பத்தாக யுத்தத்திலே; (அரக்கர்கோனை) நான் ராக்ஷஸராஜன் என்று தன் பரிகரத்தைப் பார்த்து அபிமானித்திருந்தவனை. தானே அதிக்ரமம் பண்ணுமளவன்றியே துர்வர்க்கதுகக்கடைய ஒதுங்க நிழலாயிருந்தவனை. (செற்ற) அவன் கண்முகப்பே பரிகரபூதரை அழித்து, ப்ரஜைகளை அழித்து, தன் தலை தரையிலே புரளக் கண்ணாலே காண

தாத்பர்யாந்தரம் அருளுகிறார் (தானே அதிக்ரமமித்யாதி). "செற்ற" என்றதுக்கு ஒருநாளல்லா ஒரு நாளாகிலும் அநுகூலிக்குமோவென்று குணதிக்யம் தோற்ற அருளுகிறார் (அவன் கண்முகப்பே

---

* (பா) பாஹுபலத்தாலே.

பாரில்லையாம்படி இருக்க, தான் காணும்படி ஓரோதலையாக அறுத்திறே அவனை அழியச் செய்தது. (97) "गच्छानुजानामि" (கச்சாநுஜாநாமி). (நம் சேவகனார்) ஈஶ்வரத்வத்தாலே "சேவகனார்" என்கைறாரல்லர், ஸேவகவாசியாலே; அதாகிறது: கையிலக்கைக்கு ஸேவிக்குமவனென்கை. அதாகிறது: ஓரஞ்ஜலிக்குத் தானுள்ள தனையும் இவனை ஸேவிக்கை. † "தாய் தலையற்றற்று வீழத் தொடுத்த தலைவனிறே. அநந்யகதியான நம் விரோதி வர்க்கத்தைப் பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷ விரோதியைப் போக்கினாப்போலே போக்கும் ஆண்பிள்ளையென்னுதல். எல்லார்க்கும் தஞ்சமான பிராட்டிக்கு உதவுகையிலே நமக்குதவினான் என்று எல்லார்க்கும் சொல்லலாம்படி இருக்கையாலே 'நம் சேவகனார்' என்னுதல். நஞ்ஜீயர் இப்பாட்டைக் கேட்டவன்று தம்மிலே அநுஸந்தித்துப் போகாநிற்க ஒரு சேவகனும் ஒரு ஸ்த்ரீயும் விவாதம் பண்ணினவளவிலே அவனுக்கு அவள் சொன்ன வார்த்தையைக்கேட்டு வித்தரான வார்த்தையை அநுஸந்திப்பது; அதாகிறது: பிணங்கினவளவிலே "உன்னால் என்னை என் செய்யலாம்; ஏழைக்கும் பேதைக்குமன்றோ சாமந்தனார் பத்திரம் கட்டிற்று" என்றாள். பட்டரை ஆச்ரயித்த சோழ சிகாமணி பல்லவராயர்க்கு (98) "रामलक्ष्मणगुप्ता सा" (ராமலக்ஷ்மணகுப்தா ஸா) என்கிற ச்லோகத்தை அருளிச்செய்து

யித்யாதி). அப்படி ஒரு நாளாகிலும் அநுகூலிக்குமோவென்னும் நினைவு பெருமாளுக்குமுண்டென்னுமதுக்கு நியாமகமேதென்ன அருளிச்செய்கிறார் (கச்சாநுஜாநாமியித்யாதி). அதவா, வக்ஷ்யமாணமான அவருடைய ஸௌர்யத்துக்கு ப்ரமாணமாதல்; அந்தப் பக்ஷத்தில் "அவன் கண்முகப்பே" என்ற வாக்யம் சித்ரவதத்திலே நோக்காகக் கண்டுகொள்வது. "சேவகனார்" என்றதுக்கர்த்தாந்தரம் (அதாகிறதித்யாதி). (ஸேவகவாசியாலே) என்ற முந்தினவர்த்தத்துக்கு ப்ரமாணமருளிச்செய்கிறார் (தாய் தலையித்யாதி). அன்றிக்கே 'செற்ற' என்று சொன்ன சித்ரவதத்துக்கு ப்ரமாணமாதல்; 'நம் என்றதின் முந்தினவர்த்தத்திலே ஐதிஹ்யங்கள். (சாமந்தனார்) ராஜா.

---

* நாச் திரு (5-3).

"கடற்கரையில் வெளியை நினைத்திரும்" என்றத்தை அநுஸந்திப்பது. அத்தைக்கூடக் கேட்டிருந்த நஞ்ஜீயரும் பிள்ளை விழுப்பரையரும் நம்பி ஸ்ரீ கோவர்த்தநதாஸருமாக இதுக்குச் சேர்ந்திருந்ததென்று, ‡ "இலைதுணை மற்றென்னெஞ்சே" என்கிற பாட்டை அநுஸந்தித்தார்கள். ஆக அநந்யகதிகளான நமக்குத் தஞ்சம் சக்ரவர்த்தித் திருமகனென்கை.

(சேவகனார் மருவிய பெரியகோயில்) ராவண வதம் பண்ணி வினையற்ற பின்பும் அவதாரத்தில் பிற்பாடர்க்கும் உதவுகைக்காக வாய்த்து கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது. ரேபாந்தமாகச் சொல்லிற்று பூஜ்யவாசியன்று, சேவகத்திலுறைப்பைச் சொல்லிற்று. (மருவிய) திருவுள்ளம் பொருந்தி நித்யவாஸம் பண்ணுகிறதேசம். பரவ்யூஹ விபவங்களில் கோயிலில் பொருத்தம் சொல்லுகிறது. (பெரியகோயில்) கோயில் பரப்பை நினைத்தன்று; ராஜா இன்ன விடத்திலே இருந்து நினைப்பிட்டானென்றால் பின்னை அவன்றன்னாலும் மாற்ற நினைப்பிடவொண்ணாதிருக்கும் தேச கௌரவத்தைப் பற்றச்சொல்லுகிறது. அதாகிறது : ஸம்ஸாரிகள் கார்யம் வீடறுக்கையிறே. (45) "देशोऽयं सर्वकामधुक्" (தேஶோயம் ஸர்வகாமதுக்), (99) "विष्णोरायतनं ययौ" (விஷ்ணோராயதநம் யயௌ). (மதிள் திருவரங்கம்) கண்வளர்ந்தருளுகிறவருடைய ஸௌகுமார்யத்தைக்கண்டு அஞ்சவேண்டாதபடி மதிளையுடைத்தாயிருக்கை. இவ்வஸ்துவின் சீர்மையை அறிந்திருக்கும் திருமங்கையாழ்வார்போல்வாரிட்ட மதிளிறே. (என்னா) உடம்பு நோவவேண்டா; ஓருக்திமாத்ரமே அமையும்; அவருடைய குணசேஷ்டிதங்களைப்பற்றின திருநாமம் வேண்டா; தேஶஸ்பர்ஶியான திருநாமமே அமையும்.

(கருவிலே திருவிலாதீர்) ஸுகரமாயிருக்க நீங்கள் அநாதரிக்கிறது—கர்ப்பத்திலும் பகவத் கடாக்ஷமில்லாமையிறே. (100). "जायमानं हि पुरुषं यं पश्येन्मधुसूदनः" (ஜாயமாநம் ஹி புருஷம் யம் பஶ்யேந்மதுஸூதந:) என்கிறபடியே கர்ப்பவாஸ ஸமயத்தில்

பெருமைக்கு ஸர்வாபேக்ஷித ப்ரதத்வம் சொல்லுகிறதென்று அர்த்தாந்தரவிவக்ஷயா ப்ரமாணமருளிச்செய்கிறார் (தேஶோயமித்

---

‡ நான்-திருவ (8).

தயநீயதையைக்கண்டு குளிர நோக்குவதொரு நோக்குண்டு, அது இவனுக்கு பகவத்ப்ராவண்யமாகிற ஸம்பத்துக்கடி; அதுவும் பெறுதவர்களாகாதே நீங்கள் என்கிறுர். * "கருவரங்கத்துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்" என்றும் † "கருக்கோட்டியுட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்" என்றும் சொல்லக்கடவதிறே. (காலத்தைக் கழிக்கின்றீரே) (101) "**विचित्रा देहसंपत्तिरीश्वराय निवेदितुं**" (விசித்ரா தேஹஸம்பத்திரீஶ்வராய நிவேதிதும்) என்று பகவத் ஸமாஶ்ரயணுதிகளுக்குக் கண்ட காலத்தை வ்யர்த்தமே போக்குகிறிகோளே! காலக்ருதபரிணுமமில்லாத தேசத்தில் நின்றுமிங்கே வந்து கிடக்க நீங்க்ள் காலத்தை வ்யர்த்தமே போக்குவதே! நித்ய ஸூரிகள் நித்யாநுபவம் பண்ணுநிற்க, அத்தைவிட்டு உங்கள் அவஸரம் பார்த்துக்கிடக்க, நீங்கள் காலத்தை வ்யர்த்தமே போக்குவதே! நித்ய ஸூரிகளநுபவம் உங்களுக்கும் வேணுமென்று அது ஸாத்மிக்கைக்காக இங்கே சிரமம் செய்விக்கைக்கு வந்துகிடக்க, நீங்கள் அந்யபரராய்த் திரிகிறிகோளே என்கிறுர். 11.

யாதி). கர்ப்பத்தில் கடாக்ஷம் பகவத் ப்ராவண்யஹேதுவென்னுமதுக்கு ஸம்வாதமருளிச்செய்கிறுர் (கருவரங்கத்துளித்யாதி). தாத்பர்யாந்தரம் (நித்யஸூரிகளநுபவமித்யாதி). 11.

சின்ன அரு:—பதினோராம்பாட்டு. (அம்புகளைவிட்டார்) என்றது, எடுத்த ஶ்லோகார்த்தம். இப்படி கலங்கப்பண்ணுவானென்னென்ன (இதுதான் ஆர்த்தியித்யாதி). உலகங்களுய்ய அரக்கர்கோனைச் செற்றென்னுதல்; உலகங்களுய்ய முந்நீரடைத்தென்னுதல். செற்று—சித்ரவதம் பண்ணி. அஞ்ஜலிக்குக் கார்யம் செய்தவிடமுண்டோவென்ன, தேவர்களஞ்ஜலிக்குச் செய்தானென்கிறுர் (தாய்தலையித்யாதி). அநந்யகதியானவர்களை ஈச்வரன் ரக்ஷிக்குமென்னுமதுக்கு ஸம்வாதத்வயம் (நஞ்சீயரித்யாதி). (சாமந்தன்) ராஜா. (பத்திரம்) ஆயுதம். (வீடறுக்கை) விடுவிக்கை. (வினையற்ற பின்பு) கார்யமான பின்பு. கர்ப்பத்திலே கடாக்ஷித்தால் ப்ராவண்யமுண்டோவென்ன (கருவரங்கத்தித்யாதி). "காலத்தைக் கழிக்கின்றீரே" என்றதுக்கு நாலு தாத்பர்யம் நாலு வாக்யத்தாலே அருளிச்செய்கிறுர் (விசித்ரேத்யாதி). (சிரமம் செய்கை) பழகுகை. 11.

---

* முத-திருவ (6). † இர-திருவ (87).

12. நமனும் முற்கலனும்பேச நரகில் நின்றார்கள்கேட்க
நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி
அவனதூ ரரங்கமென்னாது அயர்த்துவீழ்ந் தளியமாந்தர்
கவலையுள் படுகின்றாரேன் றதனுக்கே கவர்கின்றேனே.

பதவுரை:— நமனும்—யமதர்மராஜாவும், முற்கலனும்—முத்கல பகவானும், பேச—பேசிக்கொண்டிருக்க, நரகில் நின்றார்கள் கேட்க—நரகத்திலுள்ளவர்கள் (அவ்வார்த்தைகளைக்) கேட்டவுடனே, நரகமே—அந்த நரகம் தானே, சுவர்க்கம் ஆகும்—ஸ்வர்க்கலோகமாம்படியான, நாமங்கள் உடைய—திருநாமங்களையுடைய, நம்பி அவனது—பரிபூர்ணனான எம்பெருமானுடைய, ஊர்—தேசம், அரங்கம் என்னாது—திருவரங்கம் என்று சொல்லாது, அளியமாந்தர்—சிறந்த மநுஷ்யர்கள், அயர்த்து—(பகவந் நாமத்தை) மறந்து, வீழ்ந்து—(விஷயங்களாகிய படுகுழியில்) விழுந்து, கவலையுள் படுகின்றார் என்று—துக்கத்தினால் பீடிக்கப்படுகிறார்களே என்று, அதனுக்கே—அதற்காகவே, கவர்கின்றேனே—நான் கவலைப்படாநின்றேன்.

அவ:—பன்னிரண்டாம் பாட்டு. (நமனும்) வாயாலே திருநாமத்தைச் சொல்லச் சொன்னீர், எங்கள் பாபத்தாலே பஹுஜல்பம் பண்ண க்ஷமராகாநின்றோம், திருநாமம் சொல்ல ஶக்தராகிறிலோமென்ன; ஆகில் ஶ்ரவணமாத்ரத்தாலே திருநாமம் உத்தாரகமென்று முத்கலோபாக்யாந முகத்தாலே சொல்லி, "இப்படிப்பட்ட ப்ரபாவத்தையுடையவனூர் கோயிலென்று உஜ்ஜீவிக்கலாயிருக்க து:க்கபாகிகளாவதே! என்று இவர்கள் அநர்த்தத்தைப் பொறுக்கமாட்டுகிறிலேன் என்கிறார்.

வ்யா:—(நமனுமுற்கலனும் பேச) பண்டு முத்கலனென்பானொருவன் பாபப்ரசுரனாய் வர்த்திக்கிற நாளிலே திலதேநுவை தானம் பண்ணுகிற ஸமயத்திலே, "க்ருஷ்ணாய" என்று கொடுத்தான். பின்பு அவனுடைய மரணதசையிலே யமபடர் வந்து நெருக்கி யமன் பக்கலிலே கொண்டுசெல்ல, யமன தான் இவனை எதிர்கொண்டு ஸம்பாவிக்க, "உன்னுடைய படர் என்னை நெருக்கிக் கொண்டுவர நீ ஸம்பாவியா நின்றாய், இதுக்கு ஹேதுவென்?" என்ன, "உன

அரு:—பன்னிரண்டாம் பாட்டு. (நமனுமித்யாதி). (சொல்லிப் போருவதொரு கதையுண்டு) "ஸ்ரீவிஷ்ணுதர்மத்திலே" இதிஶேஷ:

னுடைய ப்ரபாவம் அவர்களும் அறிந்திலர், நீயும் அறிந்திலை, ஒரு கால் திருநாமத்தைச் சொன்னாய் காண்" என்று அத்தை ப்ரஶம்ஸிக்க, இங்ஙனே ப்ரஸக்தாநுப்ரஸக்தமான இத்தை நரகாநுபவம் பண்ணுகிறவர்கள் கேட்டவநந்தரம் அவ்விடந்தானே ப்ராப்யபூமியாய்த்தென்று சொல்லிப்போருவதொரு கதையுண்டு; அத்தை இங்கே சொல்லுகிறது.

(நமனும் முற்கலனும் பேச) முத்கலபகவான் ஸத்காரத்துக்கு ஹேதுவென்னென்று சொல்ல, யமன், 'முன்பே திருநாமம் சொன்னாய் காண்' என்று சொன்னவிவ்வளவேயாய்த்து பிறந்தது. யமன் தனக்குப் பாவநமாகத் திருநாமத்தைச் சொன்னானுமல்லன், முத்கல பகவான் கேட்க அவனுக்கு உபதேசித்தானுமல்லன்; நாரகிகளைத் தன் கைசலிக்க நலிந்து இவற்றுக்கு இனி போக்கடி ஏதென்று சொன்னானுமல்லன்; (102) "किं त्वया नार्चितो देवः केशवः क्लेशनाशनः" (கிம் த்வயா நார்ச்சிதோ தேவ: கேஶவ: க்லேஶநாஶந:) என்று அவர்களை கர்ஹித்துச் சொன்னானுமல்லன். திருநாமம் சொன்னானொருவன் நரகம் புக்கானென்று தன் பதத்துக்கு ஹாநி வருகிறதோ வென்று சொன்னானித்தனை.

(நரகில் நின்றார்கள் கேட்க) பாபம் பண்ணுகிற ஸமயத்திலே அநுதபித்து மீண்டு ப்ராயஶ்சித்தம் பண்ணும் ஸமயத்தில் கேட்டாருமல்லர். பாபத்தினுடைய பலாநுபவம் பண்ணுகிற ஸமயத்திலேயாய்த்து கேட்டது. அப்போது தானும் ஸமித்பாணிகளாய்க் கேட்டாருமல்லர்; ப்ராஸங்கிகமாகத் திருநாமம் செவிப்பட்டவித்தனை. பாபம் பண்ணுகிற வேளையில் ப்ராஸங்கிகமாகவும் ஒருத்தர் திருநாமம் சொல்லுவாரில்லையோ, அப்போது கேளாதொழிவானென் என்னில்; அப்போது விஷய ப்ராவண்யத்தால் வந்த செருக்காலே செவிப்படாது; இப்போது து:க்காநுபவம் பண்ணுகிறவளவாய் "ஆரொரு நல்வார்த்தை சொல்வார்" என்னும் தசையாகையாலே செவிப்படுமே.

(நரகமே சுவர்க்கமாகும்) அந்த நரகந்தான் போகபூமியோடொத்தது. மாறி நினைப்பிடுமித்தனையிறே வேண்டுவது. (103) "विभीषणविधेयं हि लङ्कैश्वर्यमिदं कृतं" (விபீஷணவிதேயம் ஹி

லங்கைஶ்வர்யமிதம் க்ருதம்) என்கிறபடியே ராவணஸம்பந்தத்தாலே துஷ்ப்ரக்ருதிகளுக்கு ஸ்தாநமான லங்கையை ஸாத்விகர்க்கு ஸ்தாநமாக்கிக் கொடுத்தாப்போலே. இப்படி நகரந்தானே ஸ்வர்க்கமாம்படி பண்ணுகிறுன் நாமியோவென்னில்; (நாமங்கள்) திருநாமப்ரபாவத்தாலே வந்ததாய்த்து. (நாமங்களுடைய நம்பி) இத்திருநாமங்களை உடையவனுகையாலே புஷ்கலனுயிருக்குமவன். எல்லா நன்மைகளும் தன்னைப்பற்றிப் பெறவேண்டியிருக்குமவனுக்கும் ஏற்றத்தைப் பண்ணிக்கொடுக்கவற்ருயாய்த்து திருநாமமிருப்பது. (104) "**देवो नामसहस्रवान्**" (தேவோ நாமஸஹஸ்ரவாந்) என்றும், * "பேராயிரம் கொண்டதோர் பீடுடையன்" என்றும் சொல்லக்கடவதிறே. † "நாரணன் தம்மன்னை நரகம்புகாள்" (105) "**नारायणशब्दमात्र**" (நாராயண ஶப்தமாத்ரம்). (அவனதூராங்கமென்னுது) இப்படிப் பூர்ணனவன் நித்யவாஸம் பண்ணுகிற தேசம் கோயிலென்னுமிவ்வளவு கிடீர் இவனுக்கு நேர்த்தி.

நேர்த்தி அல்பமாய் பலம் கனத்திருக்கச்செய்தேயும் இத்தைச் சொல்லவொட்டாத பாபத்தின் கனமிருந்தபடியென்! இப்படித் திருநாமம் சொல்லுவார் அருகிருக்கலாகாதென்பாரும், அவர்களை நாட்டில் நின்றும் போகத்துரத்துவாரும், திருநாமம் சொன்னதுவே ஹேதுவாக ஹிம்ஸிப்பாருமாயிறே ஸம்ஸாரந்தானிருப்பது. ஒருவனுடைய அந்திமஸமயத்திலே திருமந்த்ரத்தை உபதேசித்து இத்தைச் சொல்லாயென்ன; அவனும் "ஆமாகில் சொல்லிப் பார்க்கிறேன்" என்று இத்தை அநேகமுருச்சொல்லி அது தன்னைச் சொல்லாதே செத்துப்போனுன். இரண்டும் அக்ஷரமொத்திருக்கச் செய்தே சொல்லவொட்டிற்றில்லையிறே பாப (**वल्ल**) பலம்.

துக்கைகதாநமான நரகம் ஸுகைகதாநமான ஸ்வர்க்கமாகக் கூடுமோவென்ன அருளிச்செய்கிறுர் (மாறியித்யாதி). நாமஸஹஸ்ரவாந் தஸ்மாத் தேவ: 'திருநாமப்ரபாவத்தாலே வந்ததாய்த்து "என்றதே கீழ்; அப்படி நாமியையொழியவும் நாமமேரக்ஷகமென்னுமதுக்கு ப்ரமாணம் (நாரணன் தம்மன்னையித்யாதி). "நாராயண ஶப்தமாத்ரம்" என்ற துக்கடி "ஆர்த்தாவிஷண்ணு:" இத்யாதி.

---

* திருவாய் (9-3-1). † பெரியாழ்-திரு (4-6-1).

(அயர்த்து வீழ்ந்து) வருத்தவன் திருநாமத்தை விஸ்மரித்து, விஷயப்ரவணராய்க்கொண்டு தலைகீழாக விழுந்து. ‡ "மறந்தேனுன்னை முன்னம்" என்றும், (106) "यन्मुहूर्तं क्षणं वापि" (யந் முஹூர்த்தம் க்ஷணம் வாபி) என்றும் சொல்லக்கடவதிறே. (அளியமாந்தர்) திருநாமம் சொல்லுகைக்கு யோக்யமான நாக்குப்படைத்த அருமந்த மநுஷ்யர். § "தாமுளரே" என்கிற பாட்டையும், || "நாவாயிலுண்டே" என்கிற பாட்டையும் சொல்லிக்கொள்வது. (கவலையுள் படுகின்றாரென்று) "து:க்கத்தே அகப்படுவதே" என்று. (அதனுக்கே கவர்கின்றேனே) அதனுக்கே க்லேஶப்படாநின்றேன் என்கிறார். ஸுகரூபமான திருநாமஸ்பர்ஶத்தாலே ஆநந்த நிர்ப்பரராயிருக்கைக்கு யோக்யரானவர்கள் து:க்கபாகிகளாவதே!' என்றிறே இவர் க்லேஶப்படுகிறது. அவதாரணத்தாலே—எனக்குக் கரைதல், எனக்கும் பிறர்க்கும் கரைதல் செய்யவொண்ணாதபடி ஸம்ஸாரிகள் து:க்கம் எனக்கு ஆற்றப்போகிறதில்லை என்கிறார். கவலை—துன்பம். 12.

(நாட்டில் நின்றும் போகத்துரத்துவாரும்) என்றது: கைஶிக வ்ருத்தாந்தத்தைப் பற்ற. ஹிம்ஸிப்பார் -- ஹிரண்யாதிகள். 12.

சின்ன அரு :—பன்னிரண்டாம் பாட்டு. (ப்ரஸக்தம்) முத்கலன் கேட்டது. (அநுப்ரஸக்தம்) திருநாமம் சொன்னாயென்று யமன் சொன்னது. திருநாமம் ஒன்றை உத்தேசித்துச் சொல்லுகையன்றிக்கே, ப்ரஸங்காத் சொன்னாலும் பலிக்குமென்னுமத்தை அருளிச்செய்கிறார் (யமன் தனக்கித்யாதி). அந்த நரகமே ஸ்வர்க்கமாகக் கூடுமோவென்ன (மாறி நினைப்பிடுமித்யாதி). ஸ்வயமேவ பூர்ணனானவனுக்கு நாமத்தாலே பூர்த்தியுண்டாகவேணுமோவென்ன (எல்லா நன்மைகளுமித்யாதி). திருநாம ஸம்பந்தத்தாலே நரகமில்லையென்னுமதுக்கு ப்ரமாணம் (நாரணன் தம்மன்னையித்யாதி). மறப்பர்கள், மறந்தால் வரும் விரோதம் இவை, இதுக்கு ப்ரமாணம் காட்டுகிறார் (மறந்தேனித்யாதி.) 12.

---

‡ பெரிய திருமொ (6-2-2). § இர-திருவ (21). || முத-திருவ (95)

13. எறியுநீர் வெறிகொள்வேலை மாநிலத் துயிர்களெல்லாம்
வெறிகொள்பூந் துளபமாலை விண்ணவர்கோனை யேத்த
அறிவிலா மனிசரெல்லா மரங்கமென் றழைப்பராகில்
பொறியில்வாழ் நரகமெல்லாம் புல்லெழுந்தொழியுமன்றே.

பதவுரை :—எறியும் நீர்—அலைகள் வீசுகின்ற நீரையும், வெறி கோள்—(மாம்ஸத்தின்) துர்நாற்றத்தையுமுடைய, வேலை—கடலாலே சூழப்பட்ட, மாநிலத்து உயிர்கள் எல்லாம்—பெரிய இப்பூமியிலுள்ள சேதநர் எல்லாரும், வெறி கோள்—மிகுந்த பரிமளத்தையும், பூ—அழகையுமுடைய, துளபம் மாலை—திருத்துழாய் மாலையை தரித்துள்ள, விண்ணவர் கோனை—நித்யஸூரிகள்நாயகனை, ஏத்த—துதிப்பதற்கெனவே ஏற்பட்டுள்ளனர்; அறிவு இலா மனிதர் எல்லாம்—அறிவில்லாத மனிதரெல்லாம், அரங்கம் என்று அழைப்பராகில்—திருவரங்கம் என்று சொல்லுவர்களானால், பொறியில் வாழ்—இந்திரியங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்கின்ற, நரகம் எல்லாம்—நரகம் போன்ற இவ்வுலகமுற்றும், புல் எழுந்து—புல் முளைத்து, ஒழியும் அன்றே—பாழாகிவிடுமல்லவா.

அவ :— பதின்மூன்றும் பாட்டு. (எறியுநீர்) ஸம்ஸாரிகளை நோக்கி ஹிதம் சொல்லுகைதான் அவர்களுக்கு அஸஹ்யமாமளவானவாறே, இவர்கள் துஷ்ப்ரக்ருதிகளென்று பாராதே துர்க்கதியைப் பார்த்து, ஸ்வகதமாக இவர்கள் ஸ்வரூபம் பகவதர்த்தமாயிருக்கிறபடியை அறிந்திலர்களேயாகிலும், ஒருபாதியாலன்றியே வாயாலே 'திருவரங்கம்' என்பார்களாகில் ஸம்ஸாரம் காய்பெழுந்து போமாகாதே! என்கிறார்.

வ்யா :— (எறியுநீரித்யாதி) எறியாநின்றிருந்துள்ள நீரையுடைத்தாய் அஸாதாரணமான கந்தத்தையுமுடைத்தான கடலால்

அரு :—பதின்மூன்றும் பாட்டு. (உபாதி) ப்ரகாரநியதி. "பூ" என்று அழகாய், அத்தால் செவ்விகொள்கையையுடைத்தாகை. 13.

சின்ன அரு :— பதின்மூன்றும் பாட்டு. (எறியுமித்யாதி). நாலாம்பாட்டுத் தொடங்கி பதினொரு பாட்டு பரோபதேசமாயிருக்க, இப்பாட்டு ஸ்வாநுஸந்தாநரூபமாக அருளிச்செய்கிற இது ப்ரகரணவிருத்தமென்று தோற்றுமாகையாலே, அதுக்கீடாக அவதாரிகை அருளிச்செய்கிறார் (ஸம்ஸாரிகளையித்யாதி). 13.

சூழப்பட்ட மஹாப்ருதிவியிலுள்ள சேதநவர்க்கமடங்கலும். "எறியு நீர்" என்கிறது த்ரிபாத்விபூதியிலே அஸங்குசிதமாக இருக்கைக்கு யோக்யரான சேதநர். * "வெள்ளத்திடைப்பட்ட நரியினம்போலே" என்கிறபடியே ஸங்குசிதமான நீர் வெள்ளத்துக்குள்ளே இருக்கிற ஸங்கோசம் தோற்றுகைக்காக. "வெறிகொள்வேலை" என்றது சாத்தின திருத்துழாயின் பரிமளத்தை அநுபவிக்கைக்கு யோக்யரான சேதநர் ஸமுத்ரத்தினுடைய துர்க்கந்தத்துக்கு இலக்காயிருக்கிற அநர்த்தம் தோற்றுகைக்காக. மாநிலம் பஞ்சாசத்கோடி விஸ்தீர்ணையான ப்ருதிவி. (உயிர்கள்) தேஹஸம்பந்தமற்றால் ஸ்ரீகௌஸ்துபம்போலே ஈஶ்வரனுக்கு ப்ரியவிஷயமான வஸ்து கிடீர் என்கை. (எல்லாம்) ஸ்வாதந்த்ர்யத்தையே முடிய நடத்தக்கடவதான தேவவர்க்கத்தோடு அவர்களுக்குக் குடிமக்களான மநுஷ்ய வர்க்கத்தோடு வாசியற ஸகல சேதநரும்.

(வெறிகொள்பூந்துளபமாலை விண்ணவர் கோனையேத்த) பரிமளத்தையும் செவ்வியையுமுடைத்தான திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதனாய் இருக்கும் இருப்புக்குத்தோற்று நித்யஸூரிகள் ஏத்துமாபோலே இவர்களையும் ஏத்தவாய்த்துக்கண்டது. (107)

"सृष्टस्त्वं वनवासाय" (ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய) என்று இளைய பெருமாளைப்போலே, ஸம்ஸாரிகளையும் முதலிலே ஸ்ருஷ்டித்தது தன்னை அநுபவிக்கைக்காகவாய்த்து. இது ஜ்ஞாநப்ரதாநர் பெறும் பேறுயிருந்தது, அத்தனை அறிவில்லாத க்ஷுத்ர ஸம்ஸாரிகளுக்குக் கிட்டுமோவென்னும் ஶங்கையிலே மேல்சொல்லுகிறது (அறிவிலா மனிசரெல்லா மரங்கமென்றழைப்பராகில்) மநுஷ்ய ஜந்மத்திலே பிறந்துவைத்து, அறிவின்றிக்கே இருந்தார்களாகிலும்; திருவரங்க ப்ராவண்யம் வேண்டா, உக்திமாத்ரமே அமையும். "ஆகில்" என்றது பாபப்ரசுரர்க்கு இதுதானும் ஸித்தியாதென்கை.

(பொறியில் வாழ் நரகம்) இந்த்ரியங்களுக்குக் குடிமக்களாய் வர்த்திக்கிற லீலாவிபூதி. எல்லா அவஸ்தையிலும் தப்பாதபடி தன் பக்கலிலே அகப்படுத்திக்கொள்ளவற்றுகையாலே, "பொறி" என்று இந்த்ரியங்களைச் சொல்கிறது. (நரகம்) அவிவேகிகளுக்கு

* பெரிய திருமொழி (11-8-5).

..கம் யமனுடைய † தண்டல்; அறிவுடையார்க்கு நரகம் ஸம்ஸாரம். ‘நன்றுமஞ்சுவன் நரகம் நானடைதல்” என்னக்கடவதிறே. எல்லாம் புல்லெழுந்தொழியுமன்றே) லீலாவிபூதி கட்டடங்கத் ரிசாய்ப்போமிறே. 13.

---

14. வண்டின முரலும்சோலை மயிலின மாலும்சோலை
கோண்டல்மீ தணவும்சோலை குயிலினம் கூவும்சோலை
அண்டர்கோ னமரும்சோலை அணிதிரு வரங்கமென்னு
மிண்டர்பாய்ந் துண்ணும்சோற்றை விலக்கி நாய்க்கிடுமினீரே.

பதவுரை:— வண்டு இனம்—வண்டுகளின் கூட்டங்கள், முரலும் சோலை—ரீங்காரம் செய்யும்படியான சோலைகளையுடையதும், மயில் இனம்—மயில்களின் கூட்டங்கள், ஆலும் சோலை—நர்த்தனம் செய்யும்படியான சோலைகளையுடையதும், கோண்டல் மீது அணவும்—மேகங்கள் மேலே வந்து அணைந்து நிற்கும், சோலை—சோலைகளையுடையதும், குயில் இனம்—குயில்களின் கூட்டங்கள், கூவும் சோலை—ஒன்றையொன்று அழையாநிற்கும் சோலைகளையுடையதும், அண்டர் கோன்—தேவர்களுக்கு அதிபதியான ஸர்வேச்வரன், அமரும் சோலை—நித்யவாஸம் பண்ணும்படியான சோலைகளையுடையவும், அணி—(ஸம்ஸாரத்திற்கு) ஆபரணமாகவுள்ளதுமான, திரு அரங்கம் என்னு—ஸ்ரீரங்கம் என்று வாயால் சொல்லாத, மிண்டர்—நன்றி இல்லாத மூர்க்கர்கள். பாய்ந்து உண்ணும் சோற்றை—மேல் விழுந்து சாப்பிடும் சோற்றை, விலக்கி—(அவர்கள் சாப்பிடாதபடி) விலக்கி, நீர் நாய்க்கு இடுமின்—நீங்கள் நாய்க்குப் போடுங்கள்.

அவ:—பதினான்காம் பாட்டு. (வண்டினம்) பிறர்முகம்பார்த்துச் சொல்லியும் தம்மிலே சொல்லியும் இப்படி ஹிதம் சொன்னவிடத்திலும் அவர்கள் விமுகராகையாலே அவர்களை வெறுத்து, அவர்களோட்டை ஸஹவாஸத்தால் வந்த க்லேசம்தீரக் கர்ப்பூர நிகரத்தை வாயிலே இடுவாரைப்போலே கோயிலை அநுபவித்து, “இப்படித் தங்களுக்குச் § சொல்ல ப்ராப்தமாயிருக்க இத்தை அநாதரிப்பதே” என்று அவர்களை உபேக்ஷா வசனத்தைப் பண்ணி இவர் பரோபதேசாத் நிவ்ருத்தராகிறார். இதுதான் ஸ்வாநுபவமா

---

† (பா) தண்டம். ‡ திருவாய் (8-1-9). § (பா) செல்ல

யிருக்க பரோபதேஶமாகத் தலைக்கட்டுகிறது, ஸத்துக்கள் அநு ஜ்ஞாநம் பிறர்க்குக் கர்த்தவ்யமாகக் கடவதிறே.

வ்யா :—(வண்டினமுரலும் சோலை) கிண்ணகத்திலிழிவார் திரள்திரளாக இழியுமாபோலே மது வெள்ளத்தாலே வண்டுகள் திரள்திரளாகவாய்த்து இழிவது. கழுத்தே கட்டளையாக மது பாநத்தைப்பண்ணி, புக்க த்ரவ்யம் இருந்தவிடத்திலிருக்கவொட்டா மையாலும் தான் வாய்விடமாட்டாமையாலும் ஆளத்திவையா நிற்குமாய்த்து. முக்தர் திரள்திரளாக பகவதநுபவம் பண்ணி போக்கு வீடாக ஸாமகாநம் பண்ணிக்களிக்குமாபோலே, இவ்வூரில் திர்யக்குகளும்கூடக் களித்து வர்த்திக்குமென்கை. (மயிலினமாலுஞ் சோலை) வண்டுகளுடைய த்வநியைக் கேட்டும் சோலையின் பசுமையைக் கண்டும் வர்ஷாவில் மேகங்களாக நினைத்து இனமினமாக மயில் களானவை ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணாநிற்கும். ஆலுதல்-ஆடுதலும், களித்தலும். (கொண்டல்மீதணவும் சோலை) இவற்றினுடைய ஆலிப்பையும் சோலைப் பரப்பையும் பசுமையையும் கண்டு மேகங் களானவை ஸமுத்ரமாகக்கொண்டு படியாநிற்கும். அன்றிக்கே, மேகபதத்தளவும் செல்லத்திருச்சோலைதான் ஓங்கியிருந்தபடியைச் சொல்லிற்றாகவுமாம். இவ்வூரில் பொழிலும் மயில்மிகு பொழிலா யிருக்கிறபடி. திருமலையில் பொழிலின் இருட்சியாலே புக்கவிடமும் புறப்பட்டவிடமும் தெரியாது ; இவ்வூரில் பொழில் வஸ்துவை வஸ்த் வந்தரமாக ப்ரமிப்பிக்கும். (குயிலினங்கூவுஞ்சோலை) கீழ்ச்சொன்ன வற்றின் வ்யாபாரமின்றிக்கே, குயிலினங்களானவை இருந்தவிடத் திலேயிருந்து, தாந்தாமிருந்த ப்ரதேஶத்தில் குளிர்த்தியாலே அந்யோந்யம் அழையா நின்றன.

(அண்டர் கோனமருஞ்சோலை) வண்டு, மயில், கொண்டல், குயில் இவற்றோபாதி இவனும் சோலைப்பரப்பையும் போக்யதையை

அரு :—பதினாலாம் பாட்டு. (வண்டித்யாதி) இரண்டாமர்த்தத் தில் "அண்டர்கோன்" என்று நித்யவிபூதியோகம் சொன்னது :— வ்யூஹவிபவஸ்தாநங்களுக்கும் உபலக்ஷணம் ; இரண்டாமர்த்தத் துக்கு சோலையையுடைத்தாய் ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான என்றபடி.

கண்டு விடமாட்டாதே கிடக்கிறானாய்த்து. ரக்ஷ்யபூதரான ம்ஸாரிகளுக்கு ப்ராப்யமானவோபாதி ரக்ஷகனான ஈஸ்வரனுக்கும் ராப்யமாய்க்காணும் இத்தேசமிருப்பது. (அண்டர்கோன்) அண் ாந்தர்வர்த்திகளை நிர்வஹிக்கைக்காக என்னுதல்; பரவ்யூஹவிபவ ஸ்தானங்களை விஸ்மரித்து நித்யவாஸம் பண்ணுகிற தேசம் என்னு தல். (சோலையணி திருவரங்கம்) சோலையை ஆபரணமாகவுடைத்தான கோயிலென்னுதல். ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான கோயிலென்னு தல். (திருவரங்கமென்னா மிண்டர்) அவன் தங்களுக்காக வந்து கண்வளராநிற்க, அவன் இருந்த தேசத்தை வாயாலே சொல்லவும் கூட மாட்டாத மூர்க்கர்; மூர்க்கராகிறார்—விழுக்காடறியாதவர்கள். அதாகிறது:— நரகவாஸம் கர்ப்பவாஸம் முதலானவை புடரியைப் பிடித்துக்கொண்டு நிற்க, கேவலம் தேஹபோஷணபரராய் இருக்கு மவர்கள். (பாய்ந்துண்ணுஞ் சோற்றைவிலக்கி நாய்க்கிடுமினீரே) திருவரங்கமென்னமாட்டாத மூர்க்கராயிருப்பார் ஜீவிக்கிறது வழி யல்லாவழியே அபஹரித்து ஜீவிக்கிறார்களித்தனை, அத்தை விலக்கி நாய்க்கிடுங்கோள். தங்களை உத்தேசித்து வந்து கண்வளர்ந்தருளுகிற அந்த உபகாரத்தை அறியாத க்ருதக்நர் ஜீவிக்கிற ஜீவனத்தை விலக்கி ஒரு நாள் ஒரு பிடி சோறிட்டவன் வாசலைப்பற்றிக் கிடக்கும் அத்தனை க்ருதஜ்ஞமான நாய்க்கு இடுங்கோள். இதுதான் (108) "**योऽसाधुभ्योऽर्थमादाय साधुभ्यः संप्रयच्छति**" (யோऽஸாதுப்யோऽர்த்த மாதாய ஸாதுப்ய: ஸம்ப்ரயச்சதி) என்னும் நிர்வாஹகரைக் குறித்திறே சொல்லுகிறது. 14.

(நிர்வாஹகரைக் குறித்து) என்றது திருமங்கையாழ்வார்போல் வாரை என்றபடி. 14.

சின்ன அரு:—பதினாலாம் பாட்டு. (தங்குமூரண்டம்) என்று பரமபதத்தைச்சொன்னது மற்ற இரண்டு ஸ்தலத்துக்கும் உப லக்ஷணம். (விழுக்காடறியாதவர்கள்) முன்பின விஷயமறியாதவர் கள். (மிண்டர்) நன்றிகெட்டவர்கள். "பாய்ந்துண்ணும் சோறு" என்றத்தையும் கூட்டிக்கொண்டு மிண்டருக்கர்த்தம் (அதாகிற தித்யாதி). 14.

15. மெய்யர்க்கே மெய்யனாகும் விதியிலாவென்னைப்போலப்
பொய்யர்க்கே பொய்யனாகும் புட்கொடியுடைய கோமான்
உய்யப்போ முணர்வினார்கட் கொருவனென் றுணர்ந்தபின்னை
ஐயப்பாடறுத்துத் தோன்று மழகனா ரரங்கமன்றே.

பதவுரை :—புள் கோடி உடைய கோமான்—கருடனைக் கொடியாகவுடைய நாயகன், விதி இலா என்னைபோலே—(நெடுங்காலமாக பகவத் விஷயம் கிடைக்கப்பெறாத) பாக்யஹீநனான என்னைப்போல, மெய்யர்க்கு—(பகவானிடப்) வெறுப்பில்லாதவர்களுக்கு, மெய்யன் ஆகும்—(தன் ஸ்வரூபத்தை) உள்ளபடி காட்டிக்கொடுப்பன்; பொய்யர்க்கு—(பகவானைத் தவிர்த்த) விஷயங்களில் விருப்புள்ளவர்களுக்கு, பொய்யன் ஆகும்—(தன்னைக் காட்டிக்கொடாமல்) பொய்யனாயிருப்பன்; உய்யப்போம் உணர்வினார்கட்கு—உஜ்ஜீவிக்கும் வகை அறியவேணுமென்னும் அறிவுடையவர்களுக்கு, ஒருவன் என்று உணர்ந்த பின்னை—'ஈச்வரன் ஒருவன் உளன்' என்று அறிந்த பின்பு, ஐயப்பாடு அறுத்து—(மிகுந்துள்ள) ஸந்தேஹங்களையும் போக்கி, தோன்றும்—காட்சியளிக்கிறவனாய், அழகன்—தன் அழகினால் உலகையே அடிமைகொள்ளுமவனான எம்பெருமானது, ஊர்—இருப்பிடம், அரங்கம் அன்றே—திருவரங்கமாயிருக்கும்.

அவ :—பதினைந்தாம் பாட்டு. (மெய்யர்க்கேயித்யாதி) முதல் மூன்று பாட்டாலே ஸ்வலாபத்தைப் பேசி, அநந்தரம் பதினொரு பாட்டாலே பரோபதேஶம்பண்ணி, அது தன்னை ஸம்ஸாரிகள் ஸ்வீகரியாமையாலே அவர்கள் பக்கல் நின்றும் கால்வாங்கினாராய் நின்றார் கீழ்; இவர்களிலே அந்யதமனாயிருந்துள்ள என்னைப் பரோபதேஶம் பண்ண வல்லேனாம்படி ஸ்வவிஷயத்தில் ஸம்ஶய நிவ்ருத்தி முதலாகப் பரமபக்தி பர்யந்தமாகப் பிறப்பிப்பதே என்று, பெரிய பெருமாள் தமக்கு நிர்ஹேதுகமாகப்பண்ணின மஹோபகாரத்தை மேல் பத்து பாட்டாலே அருளிச்செய்கிறார். இதிறே க்ருதஜ்ஞருடைய ஸ்வபாவமிருக்கும்படி. * "என்னைத் தீமனங் கெடுத்தாய் உனக்கென்செய்கேன்" என்னா நிற்பர்களிறே. இப்

அரு :—பதினைந்தாம் பாட்டு. (மெய்யர்க்கேயித்யாதி). பரோபதேஶம் பண்ணவல்லேனாம்படி என்ற அநந்தரம் "பண்ணினான்"

* திருவாய் (2-7-8)

ட்டில் அத்வேஷம் பிறந்தவளவிலே தன் படிகளையெல்லாம் ாட்டிக்கொடுக்குமென்றும் தானுமொருவன் உளன் என்றறிந்த ளவிலே ஸம்ஶயநிவ்ருத்தியைப் பண்ணி வைக்குமென்றும் இவ் வர்த்தத்தை எனக்கு அத்வேஷம் பிறந்தவளவிலே காட்டித்தர அநுபவிக்கப்பெற்றேன் என்கிறார்.

வ்யா :—(மெய்யர்க்கே மெய்யனாகும்) இங்கு "மெய்" என்று சொல்லுகிறது பொய் தவிர்ந்த மாத்ரமான அத்வேஷத்தையாய்த்து. இவன் பக்கலுள்ளது அத்வேஷமானாலும் அவன் இவன்பக்கல் இருக்கும்படியென் என்னில்; (மெய்யனாகும்) மெய்யான பரிமாற்ற முடையார் திறத்திலிருக்கக்கடவ படிகளைக்கொண்டு இவன்பக்கலிலே இருக்கும். அதாகிறது தன்படிகளை அடங்க இவனுக்குக் காட்டிக் கொடுக்கும். இரண்டிடத்திலும் ஶப்தம் ஒத்திருக்க இது அர்த்த மாகிறபடி எங்ஙனே என்னில், குணப்ரகரணமாகையாலும் ஸமஸ்த கல்யாண குணாத்மகனுக்கு இது ஓரேற்றமாகச் சொல்லவொண்ணா மையாலும், இம்மாத்ரமே பற்றாசாக ரக்ஷிக்கைக்கடியான ஸ்வாபாவிக ஸம்பந்தமுண்டாகையாலும், அவாப்த ஸமஸ்தகாமனாகையாலே இதுக்குமேல் வேண்டாதபடி நிரபேக்ஷனாயிருக்கையாலும், இதுதான் ஸம்ஸாரிகளிலே சிலர்க்கு ஸம்பாவிதமாகையாலும், * ஈஶ்வரனுக்குக் குற்றமல்லாமையாலும், ஶப்தத்தை நெருக்கி அர்த்தம் சொல்லு கிறோம். இன்னமும் கண்ணழிவற்ற மெய்யராய்ப் பரிமாறுவார் நித்யஸூரிகளே ஆகையாலும், அந்த மெய் ஸம்ஸாரிகள் பக்கல் ஸப்பவியாமையாலும், இனித்தான் ஸம்ஸாரிகள் பக்கலுள்ளதொன் றாலே பேறாகவேண்டியிருக்கையாலும், (109) "मित्रभावेन संप्राप्तं" (மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்) என்கிற தர்மிக்ராஹக ப்ரமாணத்தோடு சேருகையாலும், இதுவே அர்த்தமாகவேணும். இந்த அத்வேஷத்தை ஸாதநமாக்கவொண்ணாதிறே; சேதநனாகையாலே இந்த ருசி

என்று கூட்டுவது. (குணப்ரகரணமாகையாலும்) என்றது ஸம்ஶய நிவ்ருத்தி முதலாக பரமபக்திபர்யந்தமாக உபகரிக்கிற ஔதார் யகுணப்ரகரணமாகையாலும் என்றபடி. (நித்யஸூரிகளேயாகை

* ஈச்வரனுக்கோரேற்றமல்லாமையாலும்.

ஸ்வரூபாந்தர்பூதமாகையாலும் அநுபவவேளையிலே உள்ளதொரு ருசையாலும் ஸாதநமாகமாட்டாது.

(பொய்யர்க்கே பொய்யனாகும்) மெய்யென்று பேரிடலாவதொரு பொய் இவ்வாச்ரயத்தில் இனி உண்டாகமாட்டாதென்று தோற்றினால் பின்னை கண்ணநீரோடேயாய்த்து கால் வாங்குவது. ஸர்ப்பதஷ்டனை நெற்றியில் கொத்திப் பார்த்தால் பசையில்லையாகில் ம்ருதனென்று மீளுமோபாதி, இவன் பக்கல் உஜ்ஜீவநஹேதுவில்லையென்று ஈடுபாட்டோடேயாய்த்து மீளுவது. "மெய்யர்க்கே" என்கிற அவ்தாரணத்தாலே அத்வேஷமாத்ரத்தையே சொல்லுகிறது. "பொய்யர்க்கே" என்கிற அவதாரணம் மெய்க்கு ப்ரஸங்கமில்லாத பொய்யரைச் சொல்லுகிறது. மெய்யென்று சொல்லுகிறது ஸத்யத்தை. ஸத்யமென்கிறது: பகவத் விஷயத்தைப்பற்றின அறிவை.

"பொய்" என்று சொல்லுகிறது, பகவத்வ்யதிரிக்தமான பதார்த்தங்களை விஷயீகரித்த ஜ்ஞாநத்தை. மெய்யர்க்கு மெய்யனாய்ப் பொய்யர்க்குப் பொய்யனாய்ப் போந்தமை எங்கே கண்டோமென்னில்; (என்னைப்போல) நான் நெடுநாள் தன்பக்கல் வைமுக்யம்பண்ணிப் போந்தவிடத்தில் என்னைக் கிட்டமாட்டாதே நின்றான்; எனக்கு அத்வேஷம் பிறந்தவளவிலே மேல்விழுந்து விஷயீகரித்தான். இவை இரண்டும் என்பக்கலிலே கண்டேன். (விதியிலாவென்னை) அவனுடைய ஶீலமிதுவாயிருக்க, அநாதிகாலம் விஷயாந்தர ப்ரவணனாய் பகவத்விஷய விமுகனாய்ப் போந்த பாக்யஹீநனென்று முன்பிழந்த இழவுக்கு வெறுக்கிறார். * "பழுதே பல பகலும்

யாலும்) என்றது நித்யஸூரிகளை ஆகையாலே என்றபடி. (மெய்யென்று பேரிடலாவது ஒரு பொய்) என்றதுக்கு "நன்மையென்று பேரிடலாவது ஒரு தீமையும் காணாதே" என்ற ஸ்ரீவசநபூஷண வாக்யத்துக்கு ஜீயர் அருளிச்செய்ததுவே அர்த்தமாகக் கண்டு கொள்வது.

"என்னைப்போல" என்றத்தைப்பற்ற எனக்கு அத்வேஷமித்யாதி). "இழந்த இழவே மேற்பட்டிருக்கும்" என்றதுக்கு ப்ரமாணம் அருளிச்செய்கிறார் (நிந்திதேத்யாதி).

* முதல் திருவ (16).

ாயின" என்று பெற்றபேற்றில் காட்டில் இழந்த இழவை மேற் டுப்படியிறே இவ்விஷயத்தில் கைவைத்தார்படி இருப்பது. (110) "**निन्दितस्सवसेल्लोके स्वात्माप्येनं विगर्हते**" (நிந்தித: ஸ வஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே) என்னக்கடவதிறே. இப்படி மெய் யென்று பேரிடலாவதொரு பொய்யைக்கொண்டு விஷயீகரிக்கிறவன் தான் ஆளில்லாதாளொருவனோவென்னில்; (புட்கொடியுடைய கோமான்) மெய்யான பரிமாற்றத்தையுடையார் அநேகருடையபடி களை ஒருவன் செய்யவல்லனும்படி சமைந்தார் அநேகரையுடையா னொருவனாய்த்து. "கொடி" என்று (111) "**दासः सखा वाहनं**" (தாஸஸ்ஸகா வாஹநம்) இத்யாதிகளுக்கு உபலக்ஷணம். (112) "**निवासशय्या**" (நிவாஸஶய்யா) இத்யாதி. (கோமான்) அயர்வறு மமரர்களதிபதியாகையாலே மேன்மையுடையனாயிருக்குமவன். ஸம்பந்நராயிருக்குமவர்களேயாகிலும் தநலோபத்தாலே ஒரு காசு விழுந்தவிடத்தே போய்த்தேடா நிற்பர்களாய்த்து தந்தாம் வஸ்துவை விடமாட்டாமையாலே.

(உய்யப்போமுணர்வினர்கட்கு) கீழ் பொய்யிலே வ்யவஸிதராய் நின்றநிலையில் நின்று கால்வாங்கிய நாம் 'உஜ்ஜீவிக்கும் ப்ரகாரமேதோ' என்னும் வெளிச்செறிப்பை உடையவர்களுக்கு ஈதொழிய முடியப் போம் உணர்வும் உண்டுபோலே காணும். (113) "**बुद्धिनाशात् प्रणश्यति**" (புத்திநாஶாத் ப்ரணஶ்யதி) என்னக்கடவதிறே. உய்யப் போமுணர்வாகிறது:— யாத்ருச்சிகமாக விளைந்ததொரு ஸுக்ருத மடியாக, "நாமார் நாம் நின்றநிலையென்?" என்றும், "மேல் நமக்குப் போக்கடியேது" என்றும் பிறக்கும் உணர்வு. (ஒருவனென்றுணர்ந்த பின்னை) "ஈச்வரனுமொருவனுளன் என்னும் அறிவு பிறந்த பின்பு. கேவலம் தேஹமேயன்று உள்ளது; தேஹாதிரிக்தமாயிருப்பதொரு ஆத்மாவுமுண்டு, அவனுக்கு ஸ்வாமியாயிருப்பானொரு ஈஶ்வரனு முண்டு" என்னும் அறிவுடையார்க்கு "பஞ்சவிம்ஶகன் ஆத்மா" என்றால் இசைவாருண்டு, ஷட்விம்ஶகன் ஈச்வரன் என்றால் இசைவா ரில்லையிறே.

(ஷட்விம்ஶகனீஶ்வரான்) என்றவிடத்திலே "தம் ஷட்விம்ஶக மித்யாஹு: ஸப்தவிம்ஶகமதாபரே" இத்யாதி.

(ஐயப்பாடறுத்துத் தோன்றும்) ஈச்வர ஸத்பாவத்தை இலை யாத நாளிறே இவனுக்கு ஸம்சயமுள்ளது. தானே ப்ராப்னென்னுமிடத்திலும், தானே விரோதியைப் போக்குமென்னுமிடத்திலும் உண்டான ஸம்சயங்களை அறுத்துக்கொண்டு வந்து தோன்றும். இவனுக்கு ஸம்சயநிவ்ருத்தி பண்ணுவது எத்தாலே என்னில்; (அழகன்) (114) "शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नं" (சிஷ்யஸ்தேऽஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்) என்று அர்ஜுநனுக்கு உபதேசத்தாலே ஸம்சயத்தை அறுத்தான்; அத்தனை அளவில்லாதார்க்கு அழகாலே ஸம்சயத்தை அறுத்துக்கொண்டு வந்து தோன்றும். * "திருமேனியடிகளுக்கு" என்றும், † "கண்டவாற்றால் தனதேயுலகென நின்றான்" என்றும் சொல்லுகிறபடியே கண்டபோதே ஸர்வாதிகவஸ்துவென்று நிர்ணயிக்கலாம்படியிறே திருவடிவுதானிருப்பது. (ஊரரங்கமன்றே) இவ்வழகு ஒரு தேச விசேஷத்திலே போனாலன்றோ அநுபவிக்கலாவது என்ன; அது வேண்டா, ஸம்ஸாரத்துக்குள்ளே கோயிலிலே அநுபவிக்கலாமென்கிறார். "பரமபதம் கலவிருக்கை, நத்தம்கோயில்" என்னும்படியாய்த்து கோயிலில் நித்யஸந்நிதி இருப்பது. 15.

வடிவழகு ஸர்வாதிகத்வ ப்ரகாசகமானாப்போலே ப்ராப்ய ப்ராபக விஷயமான ஸம்சயத்தையும் அநுவர்த்திப்பிக்குமென்று "திருமேனியடிகளுக்கு" இத்யாதி வாக்யங்களுக்குத் தாத்பர்யம். 15.

சின்ன அரு :—(இதொரு ஏற்றமாக) மெய்யான பரிமாற்றமுடையார்க்கு மெய்யனுமென்கிறது ஏற்றமாக. இது தான் நல்லார்க்கு நல்லாராகை. (தர்மிக்ராஹகம்) தர்மியான ஈச்வரனை ரக்ஷகனாக க்ரஹிப்பிக்கிற ப்ரமாணம். இப்படி நித்யஸூரிகளையுடையவன் அத்வேஷமாத்ரத்தாலே அங்கீகரிப்பானென் என்ன, (ஸம்பந்நராயித்யாதி). (உய்யப்போமுணர்வு) உஜ்ஜீவிக்கப்பண்ணும் உணர்வென்று சப்தார்த்தம். 'உய்யப்போமுணர்வு' என்கையாலே நசிப்பிக்கப்பண்ணும் உணர்வும் உண்டே என்றபடி. ஈச்வரனுண்டென்றறிகை அரிதோவென்ன (பஞ்சவிம்சகனித்யாதி). 15.

---

* திருவாய் (9-7-4). † திருவாய் (4-5-10).

16. சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோ டிசைந்தகாலம்
மாதரார் கயல்கணென்னும் வலையுள்பட் டழுந்துவேனைப்
போதரே யென்றுசொல்லிப் புந்தியிற்புகுந்து, தன்பால்
ஆதரம்பெருகவைத்த அழகனூரரங்கமன்றே.

பதவுரை :—சூதன் ஆய்—ஈச்வரனும் தர்மாதர்மங்களும் இல்லை என்று சொல்லுமவனாய், கள்வன் ஆகி—ஈச்வரனுக்கு உரியதான ஆத்மாவை என்னது என்னுமவனாய், தூர்த்தரோடு இசைந்த காலம்—விஷயாந்தரங்களில் ஈடுபட்டவர்களுடன் கூடியிருந்த காலத்திலே, மாதரார்— ஸ்த்ரீகளுடைய, கயல் கண் என்னும்—கயல்போல் அழகிய கண்களாகிற, வலையுள்பட்டு—வலையிலே அகப்பட்டு, அழுந்துவேனை—முழுகிக்கிடக்கிற என்னை, போதரே என்று சொல்லி—'இங்கே வா' என்று கூப்பிட்டு, புந்தியில் புகுந்து—என் திருவுள்ளத்திலும் வந்து புகுந்து, தன்பால் ஆதரம் பெருக வைத்த அழகன்—தன் பக்கலிலே அன்பானது வெள்ளமிடும்படியாக செய்த வடிவழகையுடைய எம்பெருமானது, ஊர்—இருப்பிடம், அரங்கம் அன்றே—திருவரங்கமன்றோ.

அவ :—பதினாறும் பாட்டு. சூதனாய், ப்ராப்யமும் ப்ராபகமும் தானே என்னுமிடத்தில் ஸம்சயத்தை அறுத்துத் தந்தாப்போலே, ததநந்தரபாவியான ஆதரத்தைத் தன்பக்கலிலே விஷயாநுகுணமாகப் பெருகும்படி பண்ணினான் என்கிறார்.

வ்யா :—(சூதனாய்க் கள்வனாகி) தம்முடைய பூர்வவ்ருத்தம் அருளிச்செய்கிறார். சூதாவது : பர்யதோஹரத்வம். களவாவது பரத்ரவ்யத்தை என்னதென்றிருக்கை; ப்ரமாண விஷயமான அர்த்தத்தை இல்லையென்கை. இனி காஷ்டாபஹாரம் பண்ணினவனுக்கும் ரத்நாபஹாரம் பண்ணினவனுக்கும் அபஹாரமொத்திருக்க,

---

அரு :—பதினாறும் பாட்டு. (சூதனாயித்யாதி) பரத்ரவ்யத்தை என்னதென்று இருக்கையாவது—பகவதீயமான ஆத்மவஸ்துவை என்னதென்றிருக்கை என்று விவக்ஷித்து, அதினுடைய க்ரௌர்யத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் 'இனி காஷ்டாபஹாரமித்யாதி). இங்கே (114ஓ) "तृणकाष्ठापहारेण" (த்ருணகாஷ்டாபஹாரேண) இத்யாதி கண்டுகொள்வது.

த்ரவ்யவைஷம்யத்தாலே தோஷமும் நெடுவாசிபட்டிருக்கும்; சண்டாள த்ரவ்யத்தை அபஹரித்தார்க்கும் வஸிஷ்டத்ரவ்யத்தை அபஹரித்தார்க்கும் த்ரவ்யம் ஒன்ருனாலும் ஸ்வவான்களுடைய வைஷம்யத்தாலே தோஷம் நெடுவாசிபட்டிருக்கும். இத்த்ரவ்யம் ஸ்ரீ கௌஸ்துபம்போலே ஈச்வரனுக்கு ஸ்ப்ருஹணீயமான ஆத்மத்ரவ்யம். உடையவனும் ஸர்வேச்வரனாகையாலே தோஷத்துக்கு அவதியில்லை என்கை. ஆக, கள்வா கிறது—ஈச்வரஶேஷமான "ஆத்மவஸ்துவை" என்னது என்றிருக்கை. சூதாவது பச்யதோஹரத்வம். அதாவது ஸத்வ்ருத்தனுயிருப்பானெருவன் பரஶேஷமாய்க்கொண்டு ஆத்மஸ்வரூபமுண்டு, ஶேஷியான ஈச்வரனுமுண்டு, தர்மாதர்மங்களுமுண்டு என்று இருந்தால், இவையெல்லாம் பொய்காண் என்று அவனை விப்ரலம்பித்து தன்படியாக்கிக் கொள்ளுகை. அகவாயில் நினைவு இதுவானுல் பின்னை இதுக்கு வர்த்தகராயிருப்பாரோடேயிறே ஸஹவாஸம் பண்ணுவது.

(தூர்த்தரோடிசைந்த காலம்) ப்ராப்தனுன ஸர்வேச்வரனை விட்டு அப்ராப்த விஷயங்களிலே அதிப்ரவணரோடே பொருந்திப் போந்தகாலம். இப்படிப் பொருந்திப்போந்த காலத்தை ஸ்மரிக்கையும்கூட அஸஹ்யமாயிருக்கிறதாய்த்து இவர்க்கு. இப்படி அநர்த்தப்பட்டுப் போந்த காலத்துக்குத் தொகையில்லை கிடீர். ஆத்மாவுக்கு நிலைநின்ற ஸ்வரூபம் வைஷ்ணவஸஹவாஸமேயாயிருக்க, அநர்த்தஹேதுவான ஸ்வபாவத்தை உடையவர்களோடே காலத்தைப் போக்குவதே! பாகவதஸஹவாஸம் பகவத்விஷயத்தோடே மூட்டிவிடுமோபாதி விபரீதருடைய ஸஹவாஸமும் விஷயப்ராவண்யத்தோடே மூட்டிவிடுமிறே.

"தூர்த்தரோடிசைந்து, மாதரார் கயல்கணென்னும் வலையில் பட்டழுந்துவேனை" என்னுதே "காலம்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (இப்படி பொருந்திஞலித்யாதி). ஆனுல் "போது" என்னுதே "காலம்" என்பானென்? என்ன; நிரூபபதகாலஶப்தம் காலசைர்க்யபரமாகையைப்பற்ற என்று அருளிச்செய்கிருர் (இப்படி அநர்த்தப்பட்டித்யாதி). "தூர்த்தரோடு" என்றதுக்கு வாஸனை (ஆத்மாவுக்கித்யாதி).

(மாதரார்கயற்கணென்னும் வலையுள்பட்டழுந்துவேனை) ஸ்த்ரீகளுடைய, கயல்போலே முக்தமாயிருந்துள்ள கண்ணாகிற வலையிலே அகப்பட்டுக் கால்வாங்க மாட்டாத என்னை. ஜாதிமாத்ரமே பற்றாசாக மேல்விழுமதொழிய ஜந்மவ்ருத்தங்களாராய அறியான். கண்ணினுடைய ஆகர்ஷகத்வமே அறியுமித்தனை. அகவாய் மயிர்க்கத்தியாயிருக்க இவனையொழியத் தங்களுக்குச் செல்லாமை தோற்றும்படியாய்த்துப் பார்ப்பது. "கண்" என்று பேராய் வலையின் கார்யமாய்த்துப் பலிப்பது. இதுதானும் மணிவலையிறே. கண்ணுக்குள்ளே மணியுமுண்டிறே; அத்தைப்பற்ற "வலை" என்கிறது. புறம்பு கால்வாங்கவொண்ணாதபடி கண்ணைக்காட்டி, தான் கிட்டாதே அகல நிற்கும்; அதுக்கடி, கிட்டினவன்று அபிநிவேஶத்தோடே போகோபகரணங்களைக் கொண்டிழிந்த இவன் தனக்கு ஸ்நாநீயம்கொண்டு புறப்படவேண்டும்படியாயிறே அதின் தண்மை இருப்பது. இவன்றான் அவிவேகியாகையாலே அகவாய் ஆராயமாட்டாதே வாய்கரையிலே அழுந்தி நோவுபடாநிற்கும். (வலையுள்பட்டழுந்துவேனை) மீண்டு கால்வாங்கவொண்ணாது; அதுதன்னில் அதுபாவ்யமொன்றில்லை; கிடந்து உழைக்குமித்தனை. விஷயப்ராவண்யத்தால் ஸித்தித்தது க்லேஶமேயாய்விட்டது.

இவ்வோ விஷயங்களிலே அகப்பட்டுக் கால்வாங்கமாட்டாதே நோவுபடுகிறபடியைக்கண்டு, பெரியபெருமாள், "ஆழ்வீர்! நீர் நினைத்திருப்பதென்? ஆசைப்பட்டிருப்பதென்?" என; "இப்படி என்னை நோவுபடுத்தின கண்ணை ஒரு தார்மிகன் வந்து காட்டுமாகில், 'ஆமிறே' என்று கண்ணழகியாரை உகப்பேன்" என்ன! "கண்ணின் வாசியறிந்தீர்" என்று திருத்திரையை எடுத்துவிட்டு நின்று திருமுகத்தைக் காட்டினான். உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்களைக் காட்டியருளி, "ஆழ்வீர்! நீர் ஆசைப்பட்ட கண்ணுடையார் இங்கே காணும், இங்கே பாரீர்" என்ன; "இவை சில கண்களிருந்தபடி என்?" என்று தாம் முன்பு அநுபவித்த

வலையின் கார்யம் இன்னதென்று உபபாதிக்கிறார் (புறம்பித்யாதி). (அதுகிட்டின) இத்யாதி வாக்யத்துக்குத் தாத்பர்யம் ஸ்வதோஷம் தங்களுக்கு அவிதிதமாகையாலே அதில் நிற்பர்கள் என்றபடி.

கண்களிற்காட்டில் விலக்ஷணமுமாய் ப்ராப்தமுமாயிருக்கையாலே இவருடைய நெஞ்சு விஷயாந்தரங்களில் நின்றும் மீண்டது. (115) "रामः कमलपत्राक्षः सर्वसत्त्वमनोहरः। रूपदाक्षिण्यसंपन्नः प्रसूतो जनकात्मजे॥" (ராம: கமலபத்ராக்ஷ: ஸர்வஸத்வமநோஹர:। ரூபதாக்ஷிண்ய ஸம்பந்ந: ப்ரஸூதோ ஜநகாத்மஜே ॥)

(புந்தியில் புகுந்து) இவ்வளவிலே விலக்குகைக்குப்பரிகரமில்லாதபடி நினைவுக்கு வாய்த்தலையைப்பற்றினன். நாம் புகுமிடத்தில் இவர்க்கு விலக்காமையுண்டாயிருந்ததென்று இதுவே பற்றாசாக இவர் திருவுள்ளத்திலே வந்து புகுந்தானென்றுமாம். புகுந்து செய்ததென்னென்னில்: (தன் பாலாதரம் பெருகவைத்த) அப்ராப்த விஷயத்தில் பண்ணிப்போந்த ஆதரம் தன்பக்கலிலே ஆம்படியாகப் பண்ணினன். பாழிலே பாய்கிற நீரைப் பயிரிலே வெட்டிவிட்டாப் போலே ஆதரத்தை * ஸப்ரயோஜநம் ஆக்கினன். (பெருக) † "அதனில் பெரிய" என்னுமாபோலே அநுபாவ்யனை தன்னளவன்றிக்கே பெருகும்படியாக. (வைத்த) இதுக்கடியாகத் தந்தலையில் ஒன்றும் காணாமையாலே ஈதொரு தண்ணீர்ப்பந்தல் வைத்தானத்தனை கிடீர்! என்கிறார்.

இப்படி ஆதரத்தைக் கரைபுரளப் பண்ணின பரிகாரமேதென்னில்; (அழகன்) ‡ "பேரமர்காதல் கடல்புரைய விளைவித்த காரமர்மேனி நங்கண்ணன்" என்னக்கடவதிறே. பக்தி வர்த்தகமான கர்மஜ்ஞாந ஸ்தாநத்திலே நிற்கிறதாய்த்து இவர்க்கு வடிவழகு; இவர்க்கு ஸம்சயத்தை அறுக்கைக்கும், ஆதரத்தை பெருக்குகைக்கும், ஸாமக்ரி ஒன்றேயென்றதாய்த்து. (அழகன்) அழகையே நிரூபமாகவுடையவன். (ஊராங்கமன்றே) இவர் திருவுள்ளத்தில் புகுருகைக்கு அவஸரப்ரதீக்ஷனாயிருந்தவனூர் கோயில் என்கிறார். பரமபதம் கலவிருக்கை என்னும்படி நித்யவாஸம் பண்ணுகிற தேசம். ருசி பிறந்தபோது புக்கு அநுபவிக்கலாம் தேசமிறே இது. 16.

(நித்யவாஸம் பண்ணுகிற தேசம்) என்றத்தால் பலிதம் (ருசிபிறந்தபோதித்யாதி). 16.

---

* ஸாதரமாக்கினன். † திருவாய் (10-10-10). ‡ திருவாய் (5-3-4).

17. விரும்பி நின்றேத்தமாட்டேன் விதியிலேன் மதியொன்றில்லை
இரும்புபோல் வலியநெஞ்ச மிறையிறை யுருகும்வண்ணம்
கரும்பமர் சோலைசூழ்ந்த வரங்கமா கோயில்கொண்ட
கரும்பினைக் கண்டுகொண்டேன் கண்ணிணை களிக்குமாறே!

பதவுரை:—விரும்பி நின்று—*மிகுந்த அன்புடன் ஒருபடிப்பட்டு நின்று,* ஏத்தமாட்டேன்—*ஸ்தோத்ரம் பண்ணமாட்டாதவனாயிரா நின்றேன்*; விதி இலேன்— *(கைகூப்புதல் நாவினால் துதித்தல் முதலிய) காயிகவ்யாபாரங்களும் செய்யப்பெறாதவனாயிராநின்றேன்:* மதி ஒன்று இல்லை — *(எம்பெருமான் ஒருவன் உளன் என்னும்) அறிவும் (எனக்கு) இல்லை*; (இப்படிப்பட்ட என்னுடைய) இரும்பு போல் வலிய நெஞ்சம்—*இருப்பு போன்ற கடினமான மனஸ்ஸானது,* இறை இறை உருகும் வண்ணம்—*சிறிது சிறிதாக உருகும்படி,* சுரும்பு அமர்—*வண்டுகள் பொருந்தி இருக்கும்படியான,* சோலை சூழ்ந்த—*சோலைகளாலே சூழப்பட்ட,* மா அரங்கம்—*சிறந்த திருவரங்கத்தை,* கோயில் கொண்ட—*இருப்பிடமாகக்கொண்ட,* கரும்பினை—*கரும்புபோல் பரமபோக்யனான பெருமானை,* என் கண் இணை—*என் இரண்டு கண்களும்,* கண்டு கொண்டு — *பார்த்து அநுபவித்து,* களிக்கும் ஆறே—*மகிழ்ச்சியடையும் விதம் என்னே!*

அவ:—*பதினேழாம் பாட்டு. (விருப்பி) கீழ் ஆதரம் பெருகின படி சொல்லிற்று; இதில் அகவாயில் ஆதரம் விளைந்து புறவாய் கட்டழியாமலிருக்கையன்றிக்கே, சக்ஷுராதி கரணங்களும் தன்னைக் கண்டு சேதநஸமாதியாலே களிக்கும்படி பண்ணினான் என்கிறார்.*

வ்யா:— (விரும்பிநின்றேத்தமாட்டேன்) *மநோவாக்காயங்கள் மூன்றினுடைய பூர்வவ்ருத்தத்தை அருளிச்செய்கிறார். விஷயம் விலக்ஷணமானால் அத்யாதரத்தோடே வ்யவஸிதனாய்நின்று ஸ்தோத்ரம் பண்ணவேணுமிறே; அது செய்யமாட்டிறிற்றிலேன்.* (116) "सोऽहं—स्तुतौ न च सामर्थ्यवान्" (ஸோஹம்—ஸ்துதௌ ந

சின்ன அரு:— *பதினாறும் பாட்டு. பஶ்யதோஹரத்வமே தென்ன அருளுகிறார் (ப்ரமாண விஷயமித்யாதி). "பதிம்விச்வஸ்ய" "யஸ்யாஸ்மி" என்கிற ப்ரமாணங்கள். களவை பரிக்ஷிக்கிறார் (இனி காஷ்டேத்யாதி).*

ச ஸாமர்த்யவாந்) என்னுமாபோலே பகவத்விஷயத்தைப்பேசவென்றால் வாகிந்த்ரியத்துக்கு ஶக்தியில்லை, வ்யதிரிக்த விஷயங்களைப் பேச வென்றால் ஆதாரமுமுண்டாய் ஶக்தியுமுண்டாயிருக்கும். வாக்வ்யாபாரம் புறம்பேயானாலும் காயிகவ்யாபாரங்களில் நப்பக்கல் பண்ணிற்றேதேனுமுண்டோ? என்ன; (விதியிலேன்) (117) "**विधिर्विधानं**" (விதிர்விதாநம்) என்கிறபடியே காயிகவ்யாபாரத்தைச் சொல்லுகிறது. உன்னை உத்தேசித்து உன்பக்கல் அநுகூலமாக இதுக்குமுன்பு கையால் ஒன்றும் செய்திலேன். (118) "**सा जिह्वा या हरिं स्तौति**" (ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி) என்கிறவிதுவும் (118) "**यौ तत् पूजाकरौ करौ**" (யௌ தத் பூஜாகரௌ கரௌ) என்கிறவதுவும், புறம்பே தப்பிற்றாகிலும் நெஞ்சாலேதான் நம்மை நினைத்தல்செய்தீரோவென்ன; (மதியொன்றில்லை) உன்வாசி அறியாதொழிந்தால் நீ ஒருவன் உண்டென்றிருக்கும் அறிவும்கூட இல்லை. உன்னையொழிந்த ஸகல பதார்த்தங்களினுடைய ஸ்வரூபஸ்வபாவங்களை உள்ளபடி அறிய க்ஷமனாயிருப்பன். உன்னளவில் வந்தால் உன்னுடைய ஸத்பாவத்திலும் ஜ்ஞாநமில்லை. (75) "**असद्ब्रह्मेति वेद चेत् असन्नेव स भवति**" (அஸத்ப்ரஹ்மேதி வேத சேத் அஸந்நேவ ஸ பவதி) என்னக்கடவதிறே. (86) "**विद्यान्या शिल्पनैपुणं**" (வித்யாந்யா ஶில்பநைபுணம்).

இப்படி மநோவாக்காயங்களை அந்யதாவாக்கிக் கார்யம் கொண்டீராகில், ப்ரதாநமான மநஸ்ஸை மேலே திருத்திக்கொள்ளுகிறோமென்ன (இரும்புபோல்வலியநெஞ்சம்) தேவரீர்க்குத் திருத்திக் கொள்ளுகைக்கு யோக்யதையில்லை. இரும்பாகில் அக்நியாலே நியமித்துக்கொள்ளலாம்; இது ஒருபடியாலும் திருத்தவொண்ணாதென்கை.

அரு:—பதினேழாம் பாட்டு. (விரும்பியித்யாதி). (ஸத்பாவத்திலும் ஜ்ஞாநமில்லை) என்கைக்கு இது இல்லாவிடில் வரும் அநர்த்தமேதென்ன, (அஸத்ப்ரஹ்மேத்யாதி). ப்ரஹ்மவேதநமில்லாதது கொண்டு "அஸந்நேவ" என்று அவதரிக்கிறதென்? அல்லாத பதார்த்தவிஷயஜ்ஞாநமுண்டேயென்ன அருளிச்செய்கிறார் (வித்யாந்யேத்யாதி).

இதுக்கு முன்பு பூர்வாவஸ்தையில் தாம் நின்றநிலையை அருளிச் செய்தார். இதுக்கு மேல் அத்தலையில் ப்ரபாவம் சொல்லுகிறார் (இறையிறையுருகும் வண்ணம்) இவ்வன்மையோடே இது முடிந்து போகாதபடி இப்போது என் மநஸ்ஸை சிதிலமாப்படி பண்ணினன். கடிநஸ்தலத்திலே வர்ஷித்தால் காடிந்யமடங்க நெகிழ்ச்சிக்கு உறுப்பாமாபோலே, விஷயாந்தரத்தாலே மநஸ்ஸு அதிகடிநமாநும் ஶிதிலமாப்படி வயிரவுருக்காயிறே பகவத்ப்ரபாவமிருப்பது. (சுரும்பமரித்யாதி) உருக்கின விஷயந்தான் இருக்கிறபடி. வண்டுகள் பொருந்தி விடமாட்டாத சோலை. பரிமளம் படிந்தாப்போலே தன்னிலே பிறந்ததேனென்னும்படியாய்த்து வண்டுகள் படிந்துகிடக்கும் படி. மதுமாறிலிறே அது கால்வாங்குவது. மதுமாறுவது செவ்வி மாறிலிறே. ஆக நித்யவஸந்தமான சோலையென்கை. சோலையின் போக்யதை புரணியென்னும்படியாய்த்து ஊரில் போக்யதை இருப்பது. பரமபதத்தோபாதி ஶ்லாக்யமான கோயிலாகக் கொண்டான். (கரும்பினை) "கரும்பு" என்றது கைதொட்டால் பிசுகுநாறுதே இருக்கும் போக்யமான வஸ்துவை. ப்ராப்தமுமாய் ஸுஶகமுமாய் இருக்கச்செய்தேயும் போக்யதையாய்த்து மிக்கிருப்பது ; "கன்னல்" என்றொழிந்தது :- பாகவிஶேஷத்தாலே ஆக்கனுய்வந்த ஸாரஸ்ய மல்ல ; ஸத்தாப்ரயுக்தமான ஸாரஸ்யமென்கைக்காக. (119) "**रसो वै सः**" (ரஸோ வை ஸ:) என்னக்கடவதிறே.

(கண்டுகொண்டு) 'நிதியெடுத்துக்கொண்டு' என்னுமாபோலே கண்ணாலே பருகும் கரும்பாய்த்து இது. (33) "**लोचनाभ्यां पिबन्निव**" (லோசநாப்யாம் பிபந்நிவ) (என் கண்ணிணைகளிக்குமாறே) நரகாவஹமான விஷயங்களைக்கண்டு களித்துப்போந்த என் கண்கள் கிடீர் இவ்விஷயத்தைக்கண்டு களிக்கின்றன. (இணை) களிப்புக்கு ஒன்றுக்கொன்று ஒப்பாமித்தனை போக்கி வேறு உபமானமில்லை. முக்தர் ஸதாதர்ஶநம் பண்ணிக்களிக்கும் களிப்பும் இக்கண்ணாலே இப்படி

(வன்மை) காடிந்யம். இரும்புபோலிமாத்ரமென்னும்படி வலிய நெஞ்சமென்றபடி. (புரணி) ஶப்ரை.

"என் கண்ணிணை" என்றத்தால் வ்யாவ்ருத்தி அருளிச்செய்கிறார் (முக்தரித்யாதி). "இக்கண்ணாலே" என்றது விஷயாந்தர

களிக்கிற களிப்புக்கு ஶத்ருஶமன்றிறே. சரணுதிபதியான என்னை யொழியத் தானே களியாநின்றன. இந்த்ரியங்கள் ஜ்ஞாநப்ரஸர த்வாரமென்கிற அங்கிலைகுலைந்து * சேதநஸமாதியாலே தானே களியா நின்றன. (120) " रामं मेऽनुगता दृष्टिः " (ராமம் மேऽநுகதா த்ருஷ்டி:) கர்த்தாவையொழியவே கரணங்களுக்கே அந்வயவ்யதிரேகங்களிலே ஶோகஹர்ஷங்களுண்டாம்படியிறே விஷயஸ்வபாவமிருப்பது. 17.

---

18. இனிதிரைத் திவலைமோத வெறியுந்தண் பரவைமீதே
தனிகிடந் தரசுசெய்யும் தாமரைக் கண்ணனெம்மான்
கனியிருந்தனைய செவ்வாய்க் கண்ணனைக் கண்ட கண்கள்
பனியரும்புதிருமாலோ என்செய்கேன் பாவியேனே.

பதவுரை :—இனிது — இனிமையாக, திரை திவலை மோத— அலைகளிலுண்டான துளிகள் அடிக்க, எறியும் தண் பரவை மீது— (அலைகள்) கொந்தளிக்கும்படியான குளிர்ந்த கடல்போன்ற திருக் காவேரியின் மேலே, தனி கிடந்து—தனியனாய்க் கண்வளர்ந்தருளி, அரசு செய்யும்—(சேதநர்களுடைய அஹங்காரத்தைப் போக்கி) அரசு செலுத்தும், தாமரைக் கண்ணன்—செந்தாமரைக் கண்ணனும், எம்மான்—எனக்கு ஸ்வாமியும், கனி இருந்தனைய செம் வாய் கண்ணனை—கொவ்வைக்கனிபோன்று சிவந்த வாயையுடையவனுமான ஸ்ரீ க்ருஷ்ணனை, கண்ட கண்கள்—காணப்பெற்ற கண்கள், பனி அரும்பு—குளிர்ந்த ஆநந்தக்கண்ணீர்த்துளிகள், உதிரும்—பெருகி நிற்கும்; பாவியேன்—(நன்றாக ஸேவிக்கப்பெறாத) பாவியாகிய நான் என் செய்கேன்—என்ன செய்வேன் ?

ப்ரவணமான இக்கண்ணுலே என்றபடி. தாத்பர்யாந்தரம் (சரணுதி பதியித்யாதி). 17.

சின்ன அரு :—பதினேழாம் பாட்டு. மதியொன்றில்லை என்பானென் ? பகவத்ஜ்ஞாநமில்லாவிட்டால் வேறு ஜ்ஞாநமில்லையோ வென்ன, அவையெல்லாம் அஸத்ஸமமென்கிறார் (அஸத்ப்ரஹ்மேத்யாதி). புரணி—தோல். 17.

---

* (பா) சேதநவ்யாதி போலே.

அவ :—பதினெட்டாம் பாட்டு. (இனிதிரை) கண்களினுடைய களிப்புக்குப் போக்குவீடான ஆநந்தாஶ்ருக்கள் ப்ரவஹிக்கையாலே அது குட்யாதி வ்யவதாநம் போலே அநுபாவ்ய விஷயத்தை மறையா நின்றதென்று வெறுக்கிறார்.

வ்யா :—(இனிதிரைத்திவலைமோத) * "ஒண்சங்கதைவாளாழியான்" என்றவிடப்போலே இவ்விடமொரு கடைக்குறைத்தலாய் இருக்கிறதாய்த்து. இனிதாகத் திரைகளிலுண்டான திவலையானது ஸ்பர்ஶிக்க. மலைபோலே சிலபெருந்திவலைகள் வந்து முறிந்து சிறு திவலையாய் துடைகுத்த உறங்குவாரைப்போலே திருமேனியை ஸ்பர்ஶியாநிற்கும். அவை அங்குத்தைக்கு அநுகூலமாக ஸ்பர்ஶியா நிற்கச்செய்தேயும், அதுவும் பொறாத திருமேனியின் ஸௌகுமார்யத்தை அநுஸந்திக்கையாலே, "மோத" எனகிறாராய்த்து இவர். "அரக்கர்கோனைச் செற்ற நம்சேவகனார்" என்று ஆஶ்ரயணவேளையிலே ஶக்தியை அருளிச்செய்தார். இப்போது போகவேளையாகையாலே ஸௌகுமார்யத்தை அநுஸந்திக்கிறாரிறே. (எறியும் தண்பரவைமீதே) திரைக்கிளர்த்தியையுடைத்தாய் ப்ரமஹாரமாயிருந்துள்ள ஸமுத்ரத்தின் மேலே சாய்ந்தருளுபாப்போலே வந்து கண்வளர்ந்தருளுகிறவனென்னுதல்; அன்றிக்கே, பரப்பாலும் ஜலஸம்ருத்தியாலும் இதுதன்னையே ஸமுத்ரமாகச் சொல்லிற்றாகவுமாம்.

(தனிகிடந்து) நினைவறிந்து பரிமாறுவார் ஒருநாடாகவுடையவன் கிடீர், இங்கேவந்து தனியே கண்வளர்ந்தருளுகிறான். இப்படிக் கண்வளர்ந்தருளாநிற்க ஒருகார்யமற்று அந்யபராய்த் திரியாநின்றார்களிறே ஸகலமே ஸம்ஸாரிகள். † "தனியேன்வாழ்முதலே" என்பானொரு தனியனைக் கிட்டுமோவென்னும் நசையாலேயிறே தனியே வந்து கண்வளர்ந்தருளுகிறது. அதுக்குடலாகச் செய்கிறகார்யந்தானேதென்னில் : (அரசுசெய்யும்) அரசுசெய்கையாவது :—

அரு :—பதினெட்டாம் பாட்டு. (இனிதிரையித்யாதி). அப்படி நித்யஸூரிகளையுடையவன் இங்கே தனியே கண்வளர்ந்தருளுகைக்கு ஹேதுவேதென்ன (தனியேன் வாழ்முதலித்யாதி). (அதுக்குடலாக) இவனைப்பெறுகைக்குடலாக.

* திருவாய் (8-8-1). † திருவாய் (10-10-1).

வன்னியம் அறுக்கை. வன்னியமாகிறது : 'அஹம்' என்றிருக்கை. அத்தை அறுக்கையாகிறது :—"நம:" என்னப்பண்ணிக்கொள்ளுகை. (121) "नम इत्येव वादिनः" (நம இத்யேவ வாதிந:) என்கிறபடியே நித்யஸூரிகளுடைய யாத்ரையே இங்குள்ளார்க்கும் யாத்ரையாம்படி பண்ணிக்கொள்ளுகை. இவ்வன்னியம் அறுக்கைக்குப் பரிகரமே தென்னில்; (தாமரைக்கண்ணன்) கையிலே ப்ரஹ்மாஸ்த்ரமிருக்க வெல்லவொண்ணாத இடமில்லையிறே; அங்குள்ளாரை வென்ற பரிகரத்தைக் கொண்டாய்த்து இங்குள்ளாரையும் வென்றது. * "தாமரைக்கண்ணனை விண்ணோர் பரவுந்தலைமகனை" என்னக் கடவதிறே. அவர்களுக்கு போகோபகரணமான இத்தைக்கொண்டு கிடீர் இங்குள்ளாருடைய விரோதியைப்போக்குவது; இப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு அகப்பட்டார் ஆரென்னில்; (எம்மான்) நான் தோற்று என்னை எழுதிக்கொடுத்தேன். ஸம்ஸாரிகளுக்கும், இவ்வருகான என்னைத் தோற்பித்த கண்களுக்கு இனி வெல்லவொண்ணாத நில முண்டோ?

(கனியிருந்தனைய செவ்வாய்) அக்கண்ணாலே நிர்மமரானார்க்கு அநுபாவ்யமான விஷயமிருக்கிறபடி. கண்டபோதே நுகரலாம் கனிபோலேயாய்த்து திருவதரத்தில்போக்யதை இருப்பது. 'இருந்து' என்றது அச்செவ்வி என்றுமொக்க ஏகரூபமாயிருக்கிறபடி. (34) "सदैकरूपरूपाय" (ஸதைகரூபரூபாய) என்னக்கடவதிறே. (கண்ணனை) பெரியபெருமாளைத் திருவடிதொழுதால், "அவதாரத்தில் பிற்பாடர்க்கும் உதவுகைக்காக க்ருஷ்ணன் வந்து கண்வளர்ந் தருளுகிறான்" என்று ஸ்மரிக்கலாம்படியாய்த்து இருப்பது.

"யசோதைப்பிராட்டி பிள்ளைமனம் கன்றுமல் தீம்பிலே கைவளரும்படி வளர்த்த மொசுமொசுப்பெல்லாம் தோற்றியிருக்கும்

(அவர்களுக்கு) இத்யாதி வாக்யம் தாத்பர்யாந்தரமாதல். "எம்மான்" என்று கண்ணழகுக்குத் தோற்றவர் நீரொருவருமே யானால் ஸம்ஸாரிகளை வன்னியமறுக்கைக்கு கண்ணழகு பரிகரமாய்த்த தில்லையோவென்ன (ஸம்ஸாரிகளுமித்யாதி). (மொசுமொசுப்பு) செருக்கு.

---

* திருவாய் (2-6-3).

பெரியபெருமாளைக்கண்டால்" என்றும், "வஸிஷ்டாதிகளாலே ஸுஶிக்ஷிதராய் வளர்ந்து படிந்தவிநயமெல்லாம் தோற்றும்படியான சக்ரவர்த்தித்திருமகனை ஸ்மரிக்கலாம்படியிருக்கும் நம்பெருமாளைக் கண்டால்" என்றும் பட்டர் அருளிச்செய்வர்.

(கண்ட கண்கள்) அநாதிகாலம் இழந்த இழவு தீரக்காணப் பெற்ற கண்கள். (பனியரும்புதிருமாலோ) கண்டு அநுபவிக்கப் பெற்ற ப்ரீதியாலே ஆநந்தாஶ்ரு ப்ரவஹியா நின்றது! அநுபவஜநித ஹர்ஷமடியாக வந்ததாகையாலே அதிஶீதளமாய், வறுத்த பயறு முளைக்கும்படி இருக்குமென்கை. விரஹமடியாக வந்ததாகிலிறே உஷ்ணமாயிருப்பது. (122) "आह्लादशीतनेत्राम्बुः" (ஆஹ்லாதஶீதநேத்ராம்பு:) என்னக்கடவதிறே. (என்செய்கேன் பாவியேனே) கண்ணநீர் அருவிகள்போலே மறைக்கையாலே, "என் செய்கேன்!" என்கிறார். "பெறுதற்கரிய விஷயத்தைக்கண்டு அநுபவிக்கப்பெற்றிருக்க இதுக்கு இடைச்சுவருண்டாவதே! என்செய்கேன் பாவியேன்" என்கிறார். "ஆலோ" என்றது விஷாதாதிசயஸூசகம். அத்தலையில் வைலக்ஷண்யத்தை அளவுபடுத்தவொண்ணாது, அநுபவஜநித ஹர்ஷத்தை அளவுபடுத்தப்போகிறதில்லை, என்செய்கேன் பாவியேன் என்கிறார். கண்ணநீர் ஊற்றமாறாதபடி வெள்ளமாய்ச் செல்லுகையாலே இத்தை மாற்றி ஒருகால் கண்டதாய் விடப்போகிறதில்லை; இவ்விஷயத்தை அநாதிகாலம் பாபத்தாலே அநுபவிக்கப் பெற்றிலேன்; இன்று கண்ணநீர் மறைக்க அநுபவிக்கப் பெற்றிலேன், என் கார்யம் வெள்ளக்கேடும் வறட்கேடுமாய்த்து என்கிறார். அங்ஙனன்றியே, இப்போது இழவுண்டாய் "பாவியேன்" என்கிறாரல்லர்; பாட்டுக்கேட்டு ஈடுபட்டுப் பாவியேனென்பாரைப் போலே பாவியேனென்கிறார் என்றும் சொல்லுவர்கள். 18.

"பனி" என்று குளிர்த்தியைச் சொன்னதுக்குத் தாத்பர்யம் (அநுபவஜநிதேத்யாதி). (பயறுமுளைக்கும்படி) என்றது, பயறு குளிர்ந்த நிலத்திலே முளைக்குமாகையாலே இங்கும் கண்ணீரின் குளிர்த்தியாலே பயறு முளைக்கும்படி இருக்குமென்றபடி. 18.

சின்ன அரு:—பதினெட்டாம் பாட்டு. "இனிது" என்ன வேண்டினவிடத்திலே "இனி" என்று குறைந்துகிடக்கிறது. நீர்

19. குடதிசை முடியைவைத்துக் குணதிசை பாதம்நீட்டி
வடதிசை பின்புகாட்டித் தென்திசை யிலங்கைநோக்கிக்
கடல்நிறக் கடவுளெந்தை யரவணைத் துயிலுமாகண்டு
உடலெனக் குருகுமாலோ என்செய்கே னுலகத்தீரே.

பதவுரை :—உலகத்தீரே—இவ்வுலகத்திலுள்ளவர்களே !, கடல் நிறம் கடவுள்—கடல் போன்ற நிறத்தையுடைய ஸர்வேச்வரனுன, எந்தை—என் ஸ்வாமி, குடதிசை—மேற்குத் திக்கில், முடியைவைத்து—(சேஷித்வ ஸூசகமான்) திருமுடியை வைத்தருளியும், குணதிசை—கிழக்குத்திக்கில், பாதம் நீட்டி—(சேதநரெல்லாரும் தஞ்சமாக இழியும்) திருவடிகளை (என்னளவும் வர) நீட்டியும், வடதிசை—வடக்குத் திக்கிலுள்ளவர்களுக்கு, பின்புகாட்டி—தன் பின்னழகைக் காட்டியும், தென்திசை—தெற்கு திக்கில், இலங்கை நோக்கி—(விபீஷணன் வசிக்கும்படியான) லங்கையை (அன்புடன்) பார்த்துக் கொண்டும், அரவு அணை—திருவனந்தாழ்வானுகிற படுக்கையிலே, துயிலும் ஆ கண்டு—கண்வளர்ந்தருளும் அழகைக் கண்டு, எனக்கு உடல் உருகும்—என் சரீரமானது உருகாநின்றது ; ஆலோ—ஐயோ!, என் செய்கேன்—என்ன செய்வது ?

அவ :—பத்தொன்பதாம் பாட்டு. (குடதிசை) சக்ஷுராத்யவயவங்களுக்குப் பிறக்கிற விக்ருதிகளேயன்றிக்கே, ததாஸ்ரயியாய் அவயவியான ஶரீரந்தான் கட்டழியாநின்றது என்கிறார்.

வ்யா :—(குடதிசையித்யாதி). இவரை உருக்கின பரிகரந்தானிருக்கிறபடி. பூமியை ஸ்ருஷ்டித்தது புண்யபாபமிஸ்ரங்களாயும் பாபப்ரசுரங்களாயும் மநுஷ்யதிர்யக்ஸ்தாவரங்களாயும் இருந்துள்ள பதார்த்தங்கள் வர்த்திக்கைக்காகவென்றும், ஆகாஶத்தை ஸ்ருஷ்டித்தது புண்ய யோநிகளான தேவதைகள் வர்த்திக்கைக்காகவென்றும்

தோற்றால் எல்லாரும் தோற்றதாமோவென்ன (ஸம்ஸாரிகளுக்கு மித்யாதி). (மொசுமொசுப்பு) குழக்குழுக்கென்று செவ்வையாயிருக்கை. (குளிர்த்தியின் மிகுதி) வறுத்த பயறு முளைக்கை. பனி-குளிர்த்தி. விஷாதமேதென்ன அருளுகிறார் (அத்தலையிலித்யாதி). பாவியேனென்றத்தைப்பற்ற அருளுகிறார் (கண்ணநீரூற்றுநின்றித்யாதி). பாடக்கேட்டு—பாவியென்று ஈடுபடுமாபோலே. 18.

நினைத்திருப்பர். நடுவில் திக்குகளுக்கு ஒரு விநியோகமில்லை, இது வ்யர்த்த ஸ்ருஷ்டியோ என்றிருப்பர்; இப்போது அங்ஙனன்று, இதுவும் ஸப்ரயோஜநமென்னும் இடமும் கண்டார். சேதநஸ்ருஷ்டி முமுக்ஷுவிஸ்ருக்ஷை ஆனாப்போலேயும், சேதநர் வர்த்திக்கைக்கு லோகஸ்ருஷ்டி ஆனாப்போலேயும், திக்குகளை ஸ்ருஷ்டித்ததும் சேதநர்க்கு ருசிஜநகமான ஸ்வவ்யாபாரார்த்தமாகக் கண்டதாகாதே! என்றிருக்கிறார்.

(குடதிசை முடியைவைத்து) மேலைத்திக்கு ஸப்ரயோஜநமாம்படி உபயவிபூதிக்குமாகச் சூடின திருவபிஷேகத்தையுடைத்தான திருமுடியை வைத்து. * "முடியானே" என்கிறபடியே சேஷித்வத்தை அநுஸந்தித்து அத்திக்காக வாழும்படியிறே திருமுடியை வைத்தது. (குணதிசைபாதம் நீட்டி) * "மூவுலகும் தொழுதேத்துஞ் சீரடியான்" என்கிறபடியே ஸகலலோகங்களும் வாழுகைக்கு இழியும் துறையான திருவடிகளை, கீழைத்திக்கு வாழும்படியாக நீட்டி. "நீட்டி" என்றது என்னளவும் வர நீட்டின திருவடிகள் என்கிறார். துர்யோதந ஸ்தாநம் இங்ஙனே வாழ்ந்துபோனால் அர்ஜுநன் இருப்பு வாழச்சொல்லவேண்டாவிறே. "ஆளவந்தார் திருவடிதொழ எழுந்தருளினால் 'துர்யோதநஸ்தாநம்' என்று திருமுடிப்பக்கத்தில் ஒரு ப்ரதேசத்தில் ஒருநாளும் எழுந்தருளி இருந்தறியார்; ‡ திருவடிக்குக் கிழக்கு எழுந்தருளியிராதப்ரதேசமில்லை" என்று பட்டர் அருளிச்செய்வர்.

(வடதிசை பின்புகாட்டி) வடக்கு திக்கு ஆர்யபூமியாகையாலே † ஸம்ஸ்க்ருதமுரணராய், ஆழ்வார்கள் ஈரச்சொல்லும் நடையாடாத தேசமாகையாலே அத்திக்கைத் திருத்தும்போது பின்னழகெல்லாம் வேணுமென்றிருந்தார். (123) "पूर्वाङ्गादधिका पराङ्गकलहं" (பூர்வாங்காததிகா பராங்ககலஹம்) என்னக்கடவதிறே. (தென்திசை இலங்கை நோக்கி) இதுக்கு முன்புத்தை திக்குகளைக் கடாக்ஷித்தது அவ்

அரு:—பத்தொன்பதாம் பாட்டு. (குடதிசையித்யாதி) ஸித்தமான ஆகாரத்தை இவர் இப்போது அருளிச்செய்கிறதுக்கு ப்ரயோஜநம் (பூமியை ஸ்ருஷ்டித்ததித்யாதி).

---

* திருவாய் (3-1-8). † (பா) ஸம்ஸ்க்ருதமாத்ரமுளதாய்.
‡ (பா) திருவாசலுக்கு.

வோதேஶங்களின் வெறுமை தீருகைக்காக; இது தம் குறை தீருகைக்காக. அவை க்ருபாகார்யம்; இது தன்செல்லாமையாலே யாய்த்து. ‡ "அன்பொடு தென்திசைநோக்கிப் பள்ளிகொள்ளும்" என்னக்கடவதிறே. ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு வன்னியமறுத்து ராஜ்யத்தைக்கொடுத்து அவன் ஸம்ருத்தியைப் பார்த்துக்கொண்டு கண்வளர்ந்தருளுகிறபடியாய்த்து. மாதா ப்ரஜைகளுக்கு முலை கொடுத்து அவற்றின் முகமலர்த்தி காண்கைக்குப் பாங்காகச் சாயுமா போலே. § "செல்வவிபீடணற்கு வேறாக நல்லானை" என்னக்கட வதிறே. "விபீஷணன் புகுருமாகில் நானும் என்பரிகரமும் விடைகொள்ளுமித்தனை" என்று மஹாராஜர் சொல்ல; "அன்றீன்ற கன்றின்பக்கல் வாத்ஸல்யத்தாலே || முன்னணைக்கன்றைக்கொம்பிலும் குளம்பிலும் கொள்ளும் ஸுரபியைப்போலே, ஸபரிகரரான உம்மை விடவேண்டுமளவிலும் விபீஷணனை விடோம்" என்றாரிறே; அந்த மஹாராஜர் தமக்கு ஒருநலிவு வரப்புக்கவளவிலே, (124) **"किं कार्यं सीतया मम"** (கிம் கார்யம் ஸீதயா மம) என்றாரிறே.

(கடல்நிறக்கடவுள்) நித்யஸூரிகளுக்கு நித்யாகாங்க்ஷிதமான வடிவையுடைய பரதேவதை கிடீர், ஒரு ஸம்ஸாரியைக்குறித்து ஸாபேக்ஷனாய்க் கிடக்கிறான். கடல்போலே கண்டார்க்கு ச்ரமஹரமா யாய்த்து வடிவிருப்பது. கடல்வர்ணத்துக்குப் போலியாமித்தனை போக்கி, அப்ராக்ருத வஸ்துவுக்கு ஒப்பாகமாட்டாதிறே என்கை. (எந்தை) அவ்வடிவைக்காட்டி என்னை எழுதிக்கொண்டவன். பழங் கிணறு கண்வாரு (வாங்கு) கிறதென்? ப்ராக்ருதிவஶனாய் தாழ்வுக் கெல்லைநிலமான என்னளவும் வரவன்றோவெள்ளங்கோத்தது. * "நீசனேன்நிறைவொன்றுமிலேன்என்கண்பாசம்வைத்த பரஞ்சுடர்ச்

திருமண்டங்குடி கோயிலுக்குக் கிழக்கேயிறே. (என்னையும் வரநீட்டின) என்றது என்னை விஷயீகரிக்கைக்காக வரநீட்டின என்றபடி. (தூர்யோதநஸ்தாநப்) என்றது ப்ரஸங்கத்தில் ஐதிஹ்யம்.

ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு இத்யாதி வாக்யம் தாத்பர்யாந்தரம். முந்தின தாத்பர்யத்துக்குச் சேர ப்ரமாணம் (செல்வவிபீடணற்

‡ பெருமா-திருமொ (1-10).
§ பெரிய திருமொ (6-8-5). || (பா) முன்னீன்ற. * திருவாய் (3-3-4).

சோதிக்கே" என்னக்கடவதிறே. (அரவணைத்துயிலுமாகண்டு) விலக்ஷணமான ரத்னத்தை விலக்ஷணமான தகட்டிலே அழுத்தினாப் போலே, திருவநந்தாழ்வான் மேலே சாய்ந்தபின்பாய்த்து இவ் வஸ்து மஹார்க்கமாய்த்து.

(உடலெனக்குருகுமாலோ) திருவநந்தாழ்வான்மேலே கண் வளர்ந்தருளுகிறபடியைக்கண்டு சேதநன் உருகுகையன்றிக்கே ஜடமான ஶரீரம் உருகாநின்றது. (125) "भगवत्स्वरूपतिरोधानकरीं" (பகவத்ஸ்வரூபதிரோதாநகரீம்) என்கிறபடியே திரோதாயகமான ஶரீரம் கட்டழியாநின்றது. (126) "देहयोगाद्वा सोऽपि" (தேஹயோ-காத்வா ஸோऽபி) என்கிறபடியே ஜ்ஞாநஸங்கோசகரமான ஶரீரம், அநுபவ ஜநிதஹர்ஷத்தாலே அழிகிறதிறே. கூடப்புக்க ஸம்ஸாரிகள் "எங்களுக்கு உடலுருகக் காண்கிறிலோம்" என்ன; (எனக்குருகு மாலோ) "ஆலோ" என்றது ஆற்றுப்பெருக்கிலே அருகுகரைகளுடைந்தால் நோக்குகிறவர்கள் கைவிட்டுக் கடக்கநின்று கூப்பிடுமா போலே கூப்பிடுகிறார்.

(என்செய்கேன்! உலகத்தீரே) பெரியபெருமாள் அழகைக் கண்டுவைத்துக் குறியழியாதே புறப்படுகிற ஸம்ஸாரிகளைப் பார்த்து, உங்களைப்போலே தரித்திருக்கைக்கு ஒருவிரகு சொல்லவல்லிகோளே! என்கிறார். தம்மோடு ஸஜாதீயராயிருக்கிற ஆழ்வார்களைக் கேட்கில் ஓட்டையோடத்தோடே ஒழுகலோடமாமித்தனையிறே. "என்செய் கேன் பெருமாளே!" என்று அவர் தன்னைக்கேட்கில் தம்மெளிமையை அறிவித்ததாய், அத்தாலே "எதிர்த்தலை அழிந்ததாகாதே" என்று அவர் மேனாணித்திருக்கக்காணுமதாய்த்து பலம். இவ்விஷயத்தைக் கண்டுவைத்துக் குறியழியாதே இருக்கிற ஸம்ஸாரிகளைப் பார்த்து

ஸித்யாதி). (அப்ராக்ருதவஸ்துவுக்கு) என்றது "கடவுள்" என்றத்தைப்பற்ற. "ஈசன் என்றத்தைப்பற்ற, "ஈசன் வானவர்க்கு" என்கிற பாடமெல்லாம் விவக்ஷிதம்.

தாத்பர்யாந்தரம் (பகவத்ஸ்வரூபேத்யாதி). (தேஹயோகாத்வா ஸோऽபி) ஸோऽபி—திரோதாநபாவ: தேஹயோகாத் பவதி; வா ஶப்தோ விகல்பார்த்த:; வ்யவஸ்திதஶ்ச விகல்ப:.

* "உங்களிறுக்குவாத பரிஹாரத்திலே எனக்கும் ஒரு சிறுங்கை இடவல்லிகோளே" என்கிறுர். 19.

---

20. பாயுநீ ரரங்கந்தன்னுள் பாம்பணைப் பள்ளிகொண்ட
மாயனுர் திருநன்மார்வும் மரதகவுருவும் தோளும்
தூயதாமரைக் கண்களும் துவரிதழ்ப் பவளவாயும்
ஆயசீர் முடியும்தேசு மடியரோர்க் ககலலாமே.

பதவுரை :— பாயும் நீர்—பாயும்படியான காவிரியாலே சூழப்பட்ட, அரங்கம் தன்னுள்—திருவரங்கத்திலே, பாம்பு அணை—திருவநந்தாழ்வாஞகிய படுக்கையிலே, பள்ளிகொண்ட—கண்வளர்ந்தருளுகிற, மாயனுர்—ஆச்சர்ய சேஷ்டிதஞன எம்பெருமானுடைய, திருநல் மார்வும்—பிராட்டி வசிக்கும்படியான விலக்ஷணமான திருமார்பும், மரதகம் உருவும்—மரதகமணிபோன்ற திருமேனி நிறமும், தோளும்—திருத்தோள்களும், தூய தாமரை கண்களும்—பரிசுத்தமான தாமரை மலரையொத்த திருக்கண்களும், துவர் இதழ்—சிவந்த திருவதரங்களும், பவளம் வாயும்—பவளம் போன்ற திருவாயும், ஆய சீர் முடியும்—வெகுகாலமாயுள்ள மேன்மையையுடைய திருமுடியும், தேசும்—(இவைகளால் வந்த) தேஜஸ்ஸும், அடியரோர்க்கு—(ஸ்வரூபத்தை அறிந்த) அடியவர்களுக்கு, அகலலாமோ—இழக்கத்தகுமோ ?

சின்ன அரு :—பத்தொன்பதாம் பாட்டு. (வ்யாபாரம்) ஶயநஸ்தித்யாதிகள். ஶேஷித்வஸூசகமான திருமுடி ப்ரதேஶம் வாழுகிறது. திருவடி ப்ரதேஶம் வாழக்கூடுமோவென்ன அருளுகிறுர் (துர்யோதநஸ்தாநமித்யாதி). (ஆர்யபூமி) ஸம்ஸ்க்ருதபூமி. "வேறுகநல்லானை" என்கைக்கு விபீஷணனுக்கு அதிகமாகச் செய்ததென் என்ன அருளுகிறுர் (விபீஷணன் புகுருமித்யாதி). (கடவுள்) பரதேவதை. இத்தைப்பற்ற அருளுகிறுர் (வர்ணத்துக்கித்யாதி). (பழங்கிணறு காணவருகை) தூறெடுக்கை. பழங்கதை சொல்லுகிறதென் என்றபடி. திரோதாயகமாயிருக்குமோவென்ன அருளுகிறுர் (தேஹயோகாத்வாஸோऽபி) என்று ஜ்ஞாநாநந்தலக்ஷணமான ஆத்மாவுக்கு தேஹஸம்பந்தத்தாலே அஜ்ஞாநமென்று ஸூத்ரார்த்தம். (அருங்கலை) கரை. ஆழ்வார்களும் ஈச்வரனுமிருக்க ஸம்ஸாரிகளைக் கேட்கிறதென் என்ன அருளுகிறுர் (தம்மோடு ஸஜாதீயரித்யாதி). 19.

---

* (பா) உங்களறுகு வராத.

அவ :— இருபதாம்பாட்டு. (பாயுநீர்) இவ்விஷயத்தில் ப்ராவண்யத்தைத் தவிர்த்து எங்களைப்போலே தேஹயாத்ராபரராய் வர்த்திக்கவே தரிக்கலாமென்ன; கண்வளர்ந்தருளுகிற அழகைக்கண்டு வைத்து "இஸ்ஸம்ருத்தியடங்க எங்களது" என்னும்படியான ஸ்வரூபஜ்ஞாநமுடைய எங்களுக்கு, "அஹம் மம" என்றிருக்கிற உங்களைப்போலே அகலவிரகுண்டோ என்கிறார்.

வ்யா :—(பாயுநீரரங்கம்) அடைத்து ஏற்றவேண்டாதபடி நீருக்குப்பள்ளநாலியான கோயில். இது உபலக்ஷணம். * பாவநமாயும் ப்ரஸந்நமாயுமுள்ள பதார்த்தங்களுக்குப் பள்ளமடையாயிறே கோயிலிருப்பது. (127) "रमणीयं प्रसन्नाम्बु सन्मनुष्यमनो यथा" (ரமணீயம் ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோ யதா). நீருக்கு ஸாத்விகர் நிதர்ஶநமாயிறே இருப்பது. (தன்னுள் பாம்பணை) அந்நீர் உறுத்தாமைக்குப் படுத்தபடுக்கையாய்த்துத் திருவநந்தாழ்வான். † "வெள்ளை வெள்ளத்தின்மேலொருபாம்பை மெத்தையாகவிரித்து" என்னக்கடவதிறே. (பள்ளிகொண்டமாயனார்) கண்வளர்ந்தருளும்போதையழகு ஆச்சர்யமாயாய்த்து இருப்பது. (128) "स मया बोधितः श्रीमान् सुखसुप्तः परन्तपः" (ஸ மயா போதித: ஶ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்த:) என்னக்கடவதிறே. நிற்றல் இருத்தல் செய்தாராகிலும் அகலலாம் கிடீர். ‡ "ஏரார்கோலந்திகழக்கிடந்தாய்" என்றும், § "ஆனையில் கிடந்த கிடக்கைகண்டிடப்பெற்றிலேன்" என்றும் சொல்லக்கடவதிறே. ஆனையில்கிடக்கை—ஆனைபோலே கிடக்கை.

(திருநன்மார்வும்) பிராட்டியாலே விலக்ஷணமான மார்பும். பிராட்டியுடைய செம்பஞ்சின் சுவடுகளும் கழித்தமாலைகளுமாய்க்

அரு :— இருபதாம் பாட்டு. (பாயுநீரித்யாதி). (பள்ளநாலி) பள்ளமடை. (இது உபலக்ஷணம்) என்றது இதுக்கும் உபமாநமான ஸாத்விகஹ்ருதயத்துக்குப் பள்ளமடையென்னுமதுக்கும் உபலக்ஷணமென்றபடி.

கீழ் அபிப்ரேதமான அர்த்தத்தை உபபாதிக்கிறார் (பிராட்டியுடையவித்யாதி). இரண்டாமர்த்தத்துக்கு, திருவுக்கு நன்றான

---

* உபமாநமாயும். † பெரியாழ்-திரு (5-1-7). ‡ திருவாய் (5-8-1). § பெருமாள் திருமொழி (7-2).

கிடக்குமாய்த்து. பிராட்டி ||"அகலகில்லேனிறையும்" என்று பிரியமாட்டாத வைலக்ஷண்யத்தையுடைய மார்வமென்னவுமாம். (மரதகவுருவும்) கண்டார் கண்குளிரும்படி நீர்வெள்ளத்தைத் திறந்துவிட்டாப்போலேயாய்த்து வடிவு இருப்பது. (தோளும்) கீழிலவைபோலே இடுசிவப்பில்லாத தோளும். அவ்வெள்ளத்திலே அழுந்துகிறார்க்குத் தெப்பம்போலே இருக்கிற திருத்தோளும்.

(தூயதாமரைக்கண்களும்) பிராட்டியோடு ஹிரண்யாதிகளோடு வாசியறக் குளிரநோக்குகிற திருக்கண்களும். நோக்குக்குத் தூய்மையாவது: நிர்ஹேதுகமாகக் கடாக்ஷிக்கை. (129, "सुहृदं सर्वभूतानां" (ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்) என்கிறபடியே, அநுகூல ப்ரதிகூல விபாக ரஹிதமாயாய்த்து ஸௌஹார்த்தமிருப்பது. (130) "देवानां दानवानाञ्च सामान्यमधिदैवतं" (தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்) என்கிறபடியே ஸம்பந்தமொத்தாய்த்து இருப்பது. இப்படி இருக்க, சிலபதார்த்தங்களுக்குக் கடாக்ஷம் அநர்த்தஹேதுவாகிறது ப்ரக்ருதிதோஷத்தாலே. ஸர்வாநுகூலமான தென்றலானது ஒருபதார்த்தத்திலே வந்தால் ஶோஷகமாகாநின்றதிறே. மென்மை, குளிர்த்தி, நாற்றம் இவற்றுக்குத் தாமரை ஒரு போலியாமித்தனைபோக்கி அகவாயில் தண்ணளிக்கு த்ருஷ்டாந்தமாக மாட்டாதே. (துவரிதழ்பவளவாயும்) சிவந்த திருவதரத்தையும் பவளம்போலே இருந்துள்ள தந்தபங்க்தியையுமுடைய வாயும். (131) "अवाक्यनादरः" (அவாக்யநாதர:) என்கிற காம்பீர்யம்

மார்வென்றபடி. உபமாநமுகேந சொல்லாமைக்குத் தாத்பர்யம் அருளிச்செய்து ரூபகமாக அருளிச்செய்கிறார் (அவ்வெள்ளத்லேயித்யாதி).

தூய்மைக்கு மூன்று தாத்பர்யம். முந்தின தாத்பர்யம் (பிராட்டியோடித்யாதி). இரண்டாவது (நோக்குக்கித்யாதி). முந்தினதின் உபபாதநம் (ஸுஹ்ருதம் ஸர்வ பூதாநாமித்யாதி). இது தனக்கு அடியேதென்ன அருளிச்செய்கிறார் (தேவாநாமித்யாதி). (ஒருபதார்த்தம்) தாமரை. தந்தபங்க்தி தோற்றுகையாலே இவ்விரண்டையும் அருளிச்செய்கிறார் (அவாக்யநாதர இத்யாதி வாக்யத்வயத்தாலே). 20.

|| திருவாய் (6-10-10).

குலைந்து, கிட்டினாரை ஸாந்த்வவாதநம் பண்ணுகிற திருப்பவளமும்; முருக்கிதழ்போலவும் ப்ரவாளம்போலவுமுள்ள திருப்பவளமும்; ஸ்வாபராதத்தை அநுஸந்தித்துக்கிட்ட அஞ்சினவர்களுடைய அபராதத்துக்கு நேர்த்தரவு கொடுக்க ஸ்மிதம்பண்ணும் திருப்பவளமும் என்கை.

(ஆயசிர்முடியும்) பண்டேயாய்ச் சீர்மையையுடைத்தான முடியும். ஸித்தமாய் ஐஸ்வர்யஸூசகமான திருவபிஷேகமும். இத்தனையாலுமாக அவயவஶோபை சொல்லிற்று. (தேசும்) இத்தால் ஸமுதாயஶோபை சொல்லுகிறது. (அடியரோர்க்ககலலாமே) இஸ்ஸம்ருத்தியைக் கண்டால் ஸ்வரூபஜ்ஞாநமுடையார்க்கு அகலப்போமோ? இதுக்குப்புறம்பாய் "நான், என்னது" என்றிருப்பார்க்கன்றோ அகலலாவது. "ஆமே" என்றது எதிரிகளுக்குமொக்க அகலப்போகாதென்னவேண்டுப்படியாயிறே அர்த்தத்தின் மெய்ப்பாடிருப்பது. ஆயம்பொன்னாய், பொன்னாலே சீரியமுடி என்னவுமாம். ஆயம்—பொன். ஆயமென்றத்தை ஆயவென்று கடைக்குறைத்தலாய்க்கிடக்கிறது. 20.

---

21. பணிவினால் மனமதொன்றிப் பவளவா யரங்கனார்க்குத்
துணிவினால் வாழமாட்டாத் தொல்லைநெஞ்சே நீ சொல்லாய்
அணியினார் செம்பொனாய அருவரை யனையகோயில்
மணியனார் கிடந்தவாற்றை மனத்தினால் நினைக்கலாமே?

சின்ன அரு:—இருபதாம் பாட்டு. நீருக்குப்பள்ளமடை என்றவிது—நீரோடே ஸமாநரான ஸத்துக்களுக்கும் உபலக்ஷணம். (பதார்த்தம்) ஸத்துக்கள். ஸத்துக்கள் நீருக்கு உபமாநமாயிருப்பர்களோவென்ன அருளுகிறார் (ரமணீயமித்யாதி). (இடுசிவப்பு) விஶேஷணம். (அவ்வெள்ளம்) ஸௌந்தர்யவெள்ளம். அநுகூலப்ரதிகூலவிபாகமன்றிக்கே கடாக்ஷிக்கைக்கு ஹேதுவேதென்ன (ஸுஹ்ருதமித்யாதி வாக்யத்வயத்தாலே). (ஒருபதார்த்தம்) தாமரை. அதரத்தில் சிவப்பு ப்ரதிபலிக்கையாலே தந்தபங்க்தி சிவந்திருக்குமென்றபடி. (நேர்த்தரவு) பயப்படாதே என்று சீட்டுக்கொடுக்கை. 20.

பதவுரை :— பவளம் வாய்—பவளம் போன்ற திருவதரத்தை யுடைய, அரங்கனார்க்கு—திருவரங்கன் விஷயத்திலே, பணிவினால்—பணிவாக இருந்து, மனம் அது ஒன்றி—(பகவத் விஷயத்தில்) மனத்தைப்பொருந்த வைத்து, துணிவினால்—துணிவுடன், வாழமாட்டா—வாழமாட்டாத, தொல்லை நெஞ்சே–வெகுகாலமாக பகவத்விஷயத்தை இழந்திருந்த நெஞ்சமே!, அணியின் ஆர்—அழகு பூர்ணமாயுள்ள, செம் பொன் ஆய—சிவந்த பொன்னால் செய்யப்பட்ட, அரு வரை அனைய—சிறந்த மேருமலையை ஒத்த, கோயில்—கோயிலிலே, மணி அனார்—நீலரத்னம் போன்ற எம்பெருமான், கிடத்த ஆற்றை—கண் வளர்ந்தருளுகிற அழகை, மனத்தினால்—நெஞ்சினால், நினைக்கல் ஆமே—அளவிடக்கூடுமோ ? நீ சொல்லாய்—நீயே சொல்லாய்.

அவ :—இருபத்தோராம் பாட்டு. (பணிவினால்) அகலப்போகாதாகில் பரிச்சேதித்து அநுபவிக்கப்பார்த்தாலோ என்கிற திருவுள்ளத்தைக்குறித்து, இவ்விஷயத்தில் துணிவில்லாமையாலே அநாதிகாலம் இழந்த அறிவுகேடுபோலே இருப்பதொன்று காண் இப்போது பரிச்சேதித்து அநுபவிக்கலாமென்று கணிசிக்கிறவிதுவும் என்கிறார்.

வ்யா :—(பணிவினால் மனமதொன்றி) பணிவதாக வந்து ஒருப்பட்டு ; இதரவிஷயங்களில் நின்றும் இவ்விஷயத்தில் மனஸ்ஸைப் பணிவதாகவொன்றி. ஒன்றுகை—ஒருப்படுகை. இதரவிஷயங்களிலே போருகிற நெஞ்சை அவற்றினின்றும் மீட்டு ப்ராப்தவிஷயத்திலே ப்ரவணமாக்குவோமென்னும் உத்யோகமாத்ரமேயாய்த்து இவ்விஷயத்துக்கு வேண்டுவது. இங்கு மநஸ்ஸென்கிறது மநோவ்ருத்தியை. பகவத்வ்யதிரிக்த விஷயங்களில் பணிவுதான் உண்டானாலும் இரங்குகைபாக்ஷிகம் ; இரக்கமுண்டானாலும் பலிப்பதில்லை. பகவத்விஷயத்தில் (132) **“न नमेयं”** (ந நமேயம்) என்கிற ப்ரதிஜ்ஞை குலையும்மாத்ரமே அமையும். சேதநனுடைய ஆபிமுக்யத்துக்காக

அரு :—இருபத்தோராம் பாட்டு. (பணிவினாலித்யாதி). (உத்யோகமாத்ரமேயாய்த்து இவ்விஷயத்துக்கு வேண்டுவதித்யாதி). அப்யுபகம்யமருளிச்செய்கிறார் (ப்ரணமந்தன்னையித்யாதி). இரக்கமிறேவேண்டுவது, ஆனபின்பு இவனுடைய உத்யோகம் அவனுடைய இரக்கத்துக்கு ஹேதுவென்று தாத்பர்யம்.

ஸ்ருஷ்ட்யவதாரங்களைப் பண்ணிப்போந்த ஈச்வரனுக்கு விஷயீகார ஸூசகமாத்ரமே அமையும். ப்ரணாமம் தன்னைப் பண்ணினாலும் அதுவன்றே பலப்ரதம்; ஈச்வரனுடைய இரக்கமிறே. இவன் பண்ணுகிற வ்யாபாரங்கள் அங்கு பலிப்பதொன்றின்றியே இருக்க, அவனுடைய இரக்கத்துக்கு ஹேதுவானபடியென்னென்னில்: ஒருத்தனை ஒருவன் கையோங்குவது எதிரி ஸ்பர்சிப்பதொன்றின்றியே இருக்க உள்ளதனையும் என்னைப் பரிபவித்தான் என்றிருக்கைக்கு ஹேதுவாகாநின்றதிறே; அவ்வோபாதி அஞ்சலியும் எல்லாவற்றையும் கொடுத்து, பின்னையும் (133) "**न जातु हीयते**" (ந ஜாது ஹீயதே) என்னும்படி ப்ரியவிஷயமாயிறே இருப்பது. (134) "**एकोपि कृष्णे सुकृतः प्रणामः**" (ஏகோபி க்ருஷ்ணே ஸுக்ருத: ப்ரணாம:) (135) "**अञ्जलिः परमा मुद्रा क्षिप्रं देवप्रसादिनी**" (அஞ்சலி: பரமாமுத்ரா க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ).

(பவளவாயரங்கனார்க்கு) இவ்வளவு ஆநுகூல்யமுடையாரை முன்புத்தை இழவுக்கு ஸாந்த்வநம் பண்ணும் திருவதரத்தை உடையவர்க்கு. (அரங்கனார்க்கு) எப்போதோ நம்மைக் கிட்டுவதென்று நித்யஸந்நிஹிதராயிருக்கிறவர்க்கு. (துணிவினால் வாழமாட்டா) வடிவழகுதான் பணிவையுமுண்டாக்கித் துணிவையும் உண்டாக்கிப் பின்னை அநுபவத்திலே மூட்டிவிடுமாய்த்து. (பவளவாயரங்கனார்க்கு பணிவினால் மனமதொன்றி—துணிவினால் வாழமாட்டா) இவ்விஷயத்தை அநுபவிக்கைக்கு வ்யவஸாயமேயாய்த்து வேண்டுவது. (136) "**व्यवसायादृते ब्रह्मन्! नासादयति तत्परम्**" (வ்யவஸாயாத்ருதே ப்ரஹ்மந்! நாஸாதயதி தத்பரம்) என்று ப்ரஹ்மப்ராப்திக்குக் கண்ணழிவற்ற ஸாதநம் வ்யவஸாயம்காண்! என்று உபதேசித்தானாய்த்து, தன் ஆசார்யனை வேதவ்யாஸனில் காட்டில் அப்புருஷார்த்த ஸாதநத்திலே தெளிவுடைய ஜநகன். (தொல்லை நெஞ்சே) ஓர் அத்யவஸாயமாத்ரத்தாலே இவ்விஷயத்தை அநுபவிக்கமாட்டாத இவ்விழவு, நெஞ்சே! உனக்கு அநாதியிறே. (நீ சொல்லாய்) இவ்விஷயத்தைப் பரிச்சேதித்து அநுபவிக்கலாமென்று நீதான் சொல்லிக்காணாய். (அணியித்யாதி) அழகு மிக்கிருப்பதாய் செம்பொன்னின

"அணி" என்றது கோயிலுக்கு விசேஷணம்.

அருவரையுண்டு—மஹாமேரு; அத்தோடு ஒத்திருந்துள்ள கோயில். ஸம்ஸாரத்துக்கு ஆபரணமாய், தர்ஶநீயமாய், ஸ்திரமாய், ஸர்வாதாரமாயிருக்கை. (மணியனூர்சிடந்தவாற்றை) அம்மேருவைப் புடைபடத் துளைத்து அதுவிம்மும்படி ஒரு நீலரத்னத்தை அழுத்தினாற்போலேயாய்த்து கோயிலாழ்வார்க்குள்ளே பெரியபெருமாள் கண்வளர்ந்தருளுகிறபடி. (கிடந்தவாற்றை மனத்தினால்நினைக்கலாமே) கண்வளர்ந்தருளுகிற அழகைக்கண்டால் நெஞ்சாலே பரிச்சேதிக்கலாம்படி இருந்ததோ. ஸ்வரூபத்தைப் பரிச்சேதிக்கிலும், ததாச்ரயமான கல்யாணகுணங்களைப் பரிச்சேதிக்கிலும், வடிவழகைப் பரிச்சேதிக்கவொண்ணாதென்கை. நினைவுக்குப் பரிகரமானத்தை ஒழிய வேறே ஒருகரணத்தாலே நினைக்கில் நினைக்குமித்தனைகாணும். 21.

---

22. பேசிற்றே பேசலல்லால் பெருமையொன் றுணரலாகாது
ஆசற்றார் தங்கட்கல்லா லறியலாவானுமல்லன்
மாசற்றார் மனத்துளானை வணங்கிநாமிருப்பதல்லால்
பேசத்தானாவதுண்டோ பேதைநெஞ்சே நீ சொல்லாய்.

பதவுரை :—பேதை நெஞ்சே—அறிவில்லாத மனமே!, பேசிற்றே—(வேதங்களும் வைதிக புருஷர்களும்) பேசிப் போந்தவைகளையே, பேசல் அல்லால்—(நாமும்) சொல்லுவதல்லாமல், பெருமை—(எம்பெருமானுடைய) மேன்மையில், ஒன்று—ஏகதேசமும், உணரல்

சின்ன அரு :—இருபத்தோராம் பாட்டு. உத்யோகம் போருமோவென்ன அருளுகிறார் (இதரவிஷயங்களித்யாதி). (பாக்ஷிகம்) ஸந்தேஹம். உத்யோகம் போருகைக்கு ஹேதுவேதென்ன அருளுகிறார் (சேதனனுடையவித்யாதி). உத்யோகமும் உபாயமானாலோவென்ன (ப்ரணமந்தானித்யாதி). ப்ரணமத்தால் இரங்குகிறானென்று அர்த்தமாக்கி அதன்மேலே ஶங்கிக்கிறார் (இவன்பண்ணுகிறவித்யாதி). ப்ரணமத்தாலே பலமில்லாவிட்டால் இரக்கத்துக்கு ப்ரணமம் ஹேதுவாகக்கூடுமோவென்று ஶங்காபிப்ராயம் (எதிரியை ஸ்பர்ஶியாதிருக்கை)- ஒன்றை உபகரித்தன்றிக்கே இருக்கை. (பரிபவித்தான்) கெட்டுவிட்டானென்று ஈடுபடுகை. கீழ் சொன்னவர்த்தத்துக்கு ஶப்தம் காட்டுகிறார் (அரங்கனார்க்கித்யாதி). வ்யவஸாயமே போருமென்னுமதுக்கு ஸம்வாதமாக ஶுகனுக்கு ஜநகன் சொன்னதை அருளுகிறார் (வ்யவஸாயாத்ருதேயித்யாதி). 21.

ஆகாது—அறியமுடியாது; ஆசு அற்றார் தங்கட்கு அல்லால்—உபாயாந்தரங்களைப் பற்றுகையாகிற) குற்றமற்றவர்களுக்கல்லது, அறியல் ஆவானும் அல்லன்—அறிய முடியாதவனாயிராநின்றான்; (அதனால் மாசு அற்றார் மனத்து உளானை—(தன்பக்கலிலே ஸகலத்தையும் துறந்த) குற்றமற்றவர்களுடைய நெஞ்சில் நித்யவாஸம் பண்ணுமவனை, நாம் வணங்கி இருப்பது அல்லால்—(ஸர்வபரந்யாஸம் செய்த) நாம் அநுபவித்து இருக்குமதொழிய, பேச தான் ஆவது உண்டோ—(அவனுடைய பெருமைகளைப்) பாசுரமிட்டுப்பேசத்தான் முடியுமோ?, நீ சொல்லாய்—நீயே சொல்.

அவ:—இருபத்திரண்டாம் பாட்டு. (பேசிற்றே) நினைக்கவொண்ணாதாகில் வாய்விட்டுப் பேசினாலோவென்ன; (137) "मनः पूर्वो वागुत्तरः" (மந: பூர்வோ வாகுத்தர:) அன்றோ; மநஸ்ஸாலே பரிச்சேதிக்கவொண்ணாத விஷயத்தைப் பாசுரமிட்டு முடிக்கப்போமோ, பேசலாமென்கிற அறிவுகெட்ட நெஞ்சே! சொல்லாய் என்கிறார்.

வ்யா:—* உக்தி ப்ராக்ருதவிஷயங்களைப் பேசுகிறதில்லையோவென்ன; அவை பரிச்சிந்நமாகையாலே; இது அபரிச்சிந்நமாகையாலே பேசவொண்ணாது. ஆனால், (118) "सा जिह्वा या हरिं स्तौति" (ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி) என்கிற விஷயத்தைக் கைவாங்கி இருக்குமத்தனையோவென்னில்; (பேசிற்றேபேசலல்லால்) முன்பு வேதங்களும் வைதிகபுருஷர்களும் பேசிப்போந்தவை தன்னையே சொன்னோமாமித்தனை போக்கி இவ்விஷயத்துக்கு ஸத்ருஶமாக ஒரு பாசுரமிட்டுப் பேசித் தலைகட்டவொண்ணாது. பேசிப்போந்தவை தான் எங்ஙனே என்னில்; (138) "नीलतोयदमध्यस्था विद्युल्लेखेव" (நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ) † "நீலமுண்டமின்னன்ன மேனி,,(139)"अतसीपुष्पसङ्काशं"(அதஸீபுஷ்பஸங்காஶம்) (140) "हिरण्मयः पुरुषो दृश्यते" (ஹிரண்மய: புருஷோ த்ருஶ்யதே) (141) "रुक्माभं" (ருக்மாபம்) ‡ "சுட்டுரைத்தநன்பொன்னுன் திருமேனி யொளியொவ்

அரு:—இருபத்திரண்டாம் பாட்டு. (பேசிற்றேயித்யாதி). (உக்தி ப்ராக்ருதவிஷயங்களைப் பேசுகிறதில்லையோ) இத்யாதி ஶங்காபரிஹாரங்களுக்கு அத்யந்தம் ப்ரயோஜநம். தாத்பர்யம் (இந்த ப்ராக்ருத

*(பா) புத்தி; வாக்கானது. † திருவிருத்தம் (29). ‡ திருவாய் (3-1-2).

வாது'' இத்யாதி. இந்த ப்ராக்ருதபதார்த்தங்கள் அப்ராக்ருத வஸ்துவுக்கு விஸத்ருஶமிறே. இது தன்னைக் கொண்டிழிவானென் என்னில்; அதீந்த்ரியவிஷயத்தில் இழியும்போது ஒருநிதர்ஶநத்தைக் கொண்டிழியவேண்டுகையாலே சொன்னவித்தனையொழிய உள்ளபடி சொல்லிற்றுப்த்தலைக்கட்டவொண்ணாது. வேதங்கள் பேசினபடியே பேசுமத்தனையல்லது நம்மால் பாசுரமிட்டுப் பேசமுடியாது. அவை பேசினபடியென்னென்னில்; (142) "**अप्राप्य**" (அப்ராப்ய) என்று பேசினவித்தனை. அப்படியே பேசவொண்ணாது என்று பேசுமத்தனை என்றாகவுமாம். அதுக்கடியென்னென்னில்; (பெருமையொன் றுணரலாகாது) இன்னது போலேயென்று ஸத்ருஶத்ருஷ்டாந்த முண்டாதல், ஏவம்பூதமென்று பரிச்சேதித்தல் செய்யவொண்ணாது. இதர விஷயங்களில் வந்தால் உபமாநத்தளவும் உபமேயம் வரமாட் டாது; இவ்விஷயத்திலே உபமேயத்தளவும் உபமாநம் வரமாட்டாது. ஸ்வரூபமென்ன, குணங்களென்ன, விக்ரஹமென்ன, விபூதியென்ன, இவற்றிலொன்றையும் பரிச்சேதிக்கவொண்ணாதென்கை.

ஆனால் இவ்வஸ்து ஒருவர்க்கும் அறியவொண்ணாதோவென் னில்; (ஆசற்றார்தங்கட்கல்லாலறியலாவானுமல்லன்) ஆசு—குற்றம். மாசு—குற்றம். இனி அத்தை விஷயவிபாகம் பண்ணிக்கொள்ளு மித்தனை. அதாகிறது:— உபாயவிஷயமாக வரும் குற்றம்; அதாகிறது:— பாரதந்த்ர்யத்துக்குச் சேராதவை. அஹங்கார கர்ப்பமான அசேதநக்ரியாகலாபங்களை ஸாதநமாக நினைத்திருக்கை. இதரோபாயங்கள் பலப்ரதமாமிடத்தில் அவனுடைய அநுக்ரஹம் பார்த்திருக்கவேணும்; தான் உபாயமாமிடத்தில் ஸஹாயாந்தரா பேக்ஷை இல்லை; இதரோபாயங்களை விட்டுத் தன்னையே உபாயமாகப் பற்றினார்க்கல்லது தன்னை உள்ளபடி அறியலாயிருப்பானொருவ னல்லன்.

(மாசற்றார்) இதுவுமொரு மாநஸதோஷமாயிற்று; அதாகிறது: ப்ராப்யாபாஸங்களிலே ப்ராப்யபுத்தியைப் பண்ணி இருக்கை. அவன்றன்னையே பற்றி ஐச்வர்யாதிகளை லபித்துப்போகாநிற்பர்கள்.

பதார்த்தங்களித்யாதி). 'ஒன்று' என்றதுக்குத் தாத்பர்யம் ஸ்வரூப மென்ன இத்யாதி.)

அங்ஙனன்றியே அவன்றன்னையே பெறவேணுமென்றிருக்கை—மாசறுகையாவது. (மனத்துளானை) இப்படி எல்லாவற்றையும் விட்டு ஸம்ஸாரநிவ்ருத்திபூர்வகமாக ஒரு தேசவிஶேஷத்திலே நித்யாநுபவம் பண்ணவேணுமென்று தன்பக்கலிலே ஸர்வபரந்யாஸம் பண்ணி இருக்குமவர்களுடைய நெஞ்சிலே நித்யவாஸம் பண்ணுமவனை. இவர்கள் நெஞ்சுக்குப் புறம்பு, காட்டுத்தீயோபாதியாக வாய்த்து நினைத்திருப்பது. ஜலசரபதார்த்தங்கள் ஜலத்தையொழிய தரிக்கமாட்டாதாப்போலே இவர்கள் நெஞ்சொழிந்தவிடத்தில் தரிக்கமாட்டானாய்த்து. திருப்பதிகளில் நித்யவாஸம் பண்ணுகிறதும் ஒரு ஶுத்தஸ்வபாவனானவனுடைய ஹ்ருதயத்தைக் கணிசித்திறே. § "என்னிலாத முன்னெலாம்" என்னக்கடவதிறே. (வணங்கி நாமிருப்பதல்லால்) ஆச்ரிதர் நெஞ்சைவிட்டுப் போகாதவனை பின்பு, அவன் பக்கலிலே ஸர்வபரந்யாஸம் பண்ணின நாம், அவனை அநுபவித்துத் தரிக்குமதொழிய வேறொரு க்ருத்யமுண்டோ என்கிறார். வணக்கமென்று ஸர்வப்ரகாராநுபவத்துக்கும் உபலக்ஷணம்.

(பேசத்தானுவதுண்டோ) அவன் பெருமையை அநுஸந்தித்தால் பாசுரமிட்டுப் பேசலாயிருந்ததோ. (பேதைநெஞ்சே) க்ஷுத்ர விஷயங்களைப் பேசிப்போந்த வாஸனையாலே இவ்விஷயத்தையும் உன் மதிகேட்டாலே பேசலாமென்றிருக்கிறாயிறே. (நீ சொல்லாய்) என் வார்த்தையொழிய இவ்விஷய ஸ்வபாவமிருந்தபடியாலே பரிச்சேதித்துப் பேசலாயிருந்ததோ? சாபலம் பண்ணுகிற நீதான் சொல்லிக்காண் என்கிறார். 22.

உபாயவிஷயமான குற்றத்தை ப்ரகாராந்தரேண அருளிச்செய்து ஆனால் உகந்தருளின நிலங்களிலே நித்யவாஸம் பண்ணுகிறானில்லையோவென்ன, அருளிச்செய்கிறார் (திருப்பதிகளிலித்யாதி). (பெருமையை அநுஸந்தித்தால்) என்றது அறிந்தாலென்றபடி. 22.

சின்ன அரு :— இருபத்திரண்டாம் பாட்டு. புத்தி—இங்கு மனஸ்ஸு; ஒன்று செய்யவொண்ணுதென்பானென்? லோகத்திலே உபமானமிட்டுச் சொல்லுகிறதே என்னவருளுகிறார் (இதரவிஷயங்களித்யாதி). (ஒன்றுணரலாகா) இன்னபடி என்னுதல், ஏகதேஶமும்

---

§ திருச்சந்த விருத்தம் (64).

23. கங்கையிற் புனிதமாய காவிரி நடுவுபாட்டுப்
போங்குநீர் பரந்துபாயும் பூம்பொழி லரங்கந்தன்னுள்
எங்கள்மா லிறைவனீசன் கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்துவாழ்கே னேழையே னேழையேனே!

பதவுரை:— ஏழையேன்—*சபலசித்தத்தையுடைய நான்*, கங்கையில்—*கங்காநதியிற்காட்டிலும்*, புனிதம் ஆய—*பரிசுத்தத்தன்மை வாய்ந்த*, காவிரி நடுவு பாட்டு—*காவேரிநதியின் நடுவில்*, போங்கு நீர்—*பொங்கிவரும்படியான வெள்ளமானது*, பரந்து பாயும்—*எங்கும் ஒரு சீராகப் பாயும்படியான*, பூம் பொழில்—*அழகிய சோலைகளையுடைய*, அரங்கம் தன்னுள்—*கோயிலிலே*, எங்கள் மால்—*ஆச்ரிதர் பக்கல் அன்புபூண்டவனாய்*, இறைவன்—*ஸர்வஸ்வாமியாய்*, ஈசன்—*ஸர்வ நியாமகனான பெரியபெருமாளுடைய*, கிடந்தது—*ஒப்பற்ற சயனக் கோலத்தை*, கண்டும்—*கண்டு அநுபவிக்கப்பெற்ற பின்பும்*, மறந்து—*(அந்தத் திருக்கோலத்தை) மறந்து*, எங்ஙனம் வாழ்கேன்—*எவ்வாறு தரித் திருப்பேன்*; ஏழையேனே—*(பகவத் விஷயத்தில் அகப்பட்டு) ஒன்றும் செய்யமாட்டாது திகைத்து நிற்கின்றேனே.*

அவ:—*இருபத்து மூன்றும் பாட்டு. (கங்கையில்) நினைக்கவும் பேசவுமொண்ணுதாகில் இவ்விஷயத்தை விஸ்மரித்துத் தரித்தாலோ வென்னில்; பெரியபெருமாளுடைய கிடையழகிலே அதிசபலனான நான் விஸ்மரித்து எங்ஙனே தரிப்பேன் என்கிறார்.*

வ்யா:—*(கங்கையில் புனிதமாய காவிரி) கங்கையிற் காட்டிலும் பாவநமான காவேரி. தர்ஶநீயதையாலும், போக்யதையாலும் உண்டான ஏற்றமொழிய, வேறு பாவநத்வத்தாலும் ஏற்றத்தையுடைத்தாயாய்த்து காவேரி இருப்பது.* (143) "गङ्गासाम्यं पुरा प्राप्ता देवदेवप्रसादनात्। रङ्गावतरणादूर्ध्वमाधिक्यञ्चाप्यवाप सा॥" (கங்காஸாம்யம் புரா ப்ராப்தா தேவதேவப்ரஸாதநாத்। ரங்காவதரண-

---

உணரலாகாதென்னுதல். இத்தை அருளுகிறார் (ஸ்வரூபமென்ன வித்யாதி). ஸாதநாந்தரத்துக்கும் இதுக்கும் வாசியேதென்ன (இதரோபாயங்களித்யாதி). உளன் என்கையாலே ஸத்பாவமாய் அவர்கள் மநஸ்ஸிலொழிய தரியானென்கை. 22.

அரு:—*இருபத்துமூன்றும் பாட்டு. (கங்கையிலித்யாதி). ஆக ஆஶ்ரிஸ் ஸ்பர்ஶமுண்டென்கிறார் (பாவநார்த்தமித்யாதி).*

தூர்த்வமாதிக்யஞ்சாப்யவாப ஸா ||) என்கிறபடியே ஏற்றமுண்டிறே காவிரிக்கு. கங்கைக்கு ஒரு நாளிலே திருவடிகளோட்டை ஸ்பர்ஶத்தால் வந்த ஶுத்தியோகமிறே உள்ளது. (144) "पावनार्थं जटामध्ये दधार शिरसा हरः" (பாவநார்த்தம் ஜடாமத்யே ததார ஶிரஸா ஹர:) என்கிறபடியே அஶுத்தியைப் போக்குகைக்காக ருத்ரன் ஶிரஸா தரிக்கையாலே ரௌத்ரமென்று சொல்லுவதொரு குற்றமுண்டு; அவனோட்டை ஸ்பர்சமுள்ளதொரு பதார்த்தங்கள் நிர்மால்யமென்று ததீயரான சைவர்க்கும் அஸ்ப்ருஶ்யமாயிறே இருப்பது. * (அப்படி அடியுடையாளானாலும் தன்னுடைய பாவநத்வத்துக்கும் மயிர்ப் பாடுண்டாய்த்தே). † ஆறுபொதிசடையோனிறே. ஆகையாலே ஒரு சிக்கு நாற்றமும் மயிர்ப்பாடும் உண்டே; அதில்லாதபடியினும், பெரியபெருமாள் நடுவே பள்ளிகொண்டருளுகையாலும், புனிதமிறே. ஆயிருக்கச் செய்தேயும் திருவடிகளோட்டை ஸ்பர்ஶத்தாலே எங்கேனும் புகிலும் பாவநத்வம் மேற்பட்டிருக்குமாய்த்து. ‡ "உன்றனடி சேர்ந்தருள் பெற்றாளன்றே" என்னக்கடவதிறே. அப்படிப்பட்ட திருவடிகளையுடையவன் தானே வந்து படுகாடுகிடக்கிற ஏற்றமுண்டிறே காவேரிக்கு. (நடுவுபாட்டு) நடுவிடத்து. யசோதைப் பிராட்டி மடியிலே சாய்ந்தாற்போலேயாய்த்து காவேரியின் நடுவே கண்வளர்ந்தருளுகிறபடி.

(பொங்குநீர் பரந்துபாயும் பூம்பொழிலரங்கந்தன்னுள்) ஜல ஸம்ருத்தியாலேயும், கோயிலைக்கிட்டுகிறோமென்கிற ப்ரீதிப்ரகர்ஷத்தாலேயும் பெரியகிளர்த்தியோடே வாராநிற்கும். (பரந்துபாயும்) ஒரு மடையாலன்றியே தன் அபிநிவேஶமெல்லாம் தோற்ற எங்கு மொக்கப்பாயாநிற்கும். (பூம்பொழில் அரங்கந்தன்னுள்) ஜல ஸம்ருத்தியாலே பொழில்களும் பூமாறாதே செல்லுமாய்த்து. பெரிய பெருமாளுடைய ஸௌகுமார்யத்துக்கு அநுகூலமான ஜலஸம்ருத்தியையும் நித்யவஸந்தமான பொழிலையுமுடைய ஶ்ரமஹரமான தேஶம். இத்தால் கோயிலினுடைய பாவநத்வமும், போக்யதையும் சொல்லிற்றாய்த்து.

(எங்கள் மால்) ஆஶ்ரிதர் பக்கல் வ்யாமோஹம் ஒருவடிவு கொண்டாற்போலே இருக்கை. 'எங்கள்' என்று தம்மைப்போலே

---

* குண்டலிதம் அதிகம். † திருவெழுகூற்றிருக்கை. ‡ முதல் திருவ 97

பெரியபெருமாள் பக்கலிலே ந்யஸ்தபரராயிருப்பாரையும் கூட்டிக் கொள்ளுகிறார். கோயிலின் பாவநத்வபோக்யத்வங்களைக்கண்டு சாய்ந்தருளினானென்றுபேராய் நிரூபித்தால் ஆஶ்ரிதவ்யாமோஹமே ஹேது. வ்யாமோஹமேயாய் ஸம்பந்தமின்றிக்கே இருக்கை யன்றியே (இறைவன்) இவற்றை உடையவனாயிருக்கை. (ஈசன்) உடையவனானாலும் நியமிக்க ஶக்தனன்றிக்கே இருக்கையன்றியே நல்வழிபோக்குகைக்கும் க்ஷமனாயிருக்கை. ஸ்நிக்தனாய், ப்ராப்தனாய், ஶக்தனாயிருக்குமவனென்கை. குணத்ரயவஶ்யதையைத் தவிர்த்து நித்யாநுபவம் பண்ணும் தேஶத்தேறக்கொண்டுபோக நினைத்து, வாத்ஸல்யப்ரேரிதனாய் வந்து தன்னுடைமையைத் தன் கருத்திலே நடத்துகைக்காகக் கிடக்கிறபடி.

(கிடந்ததோர் கிடக்கை) கீழ்ச்சொன்ன ஆத்மகுணங்களை விஸ்மரித்துக் கிடையழகிலே அகப்பட்டபடி. நிற்றல், இருத்தல் செய்தாராகில் மறக்கலாய்த்திறே. நாட்டில் அழகியராயிருப்பார்க்கு நிற்றல் இருத்தல் செய்தபோது அழகுதோற்றி, சாய்ந்தால் தோற்றுவது வைரூப்யமேயாயிருக்கும்; இவ்விஷயத்தில் சாய்ந்தபோதாய்த்து அழகு மினுங்கியிருப்பது. (128) "श्रीमान् सुखसुप्तः परन्तपः" (ஶ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப:) என்னக்கடவதிறே. (ஓர் கிடக்கை) ஒருக்கணித்தோ மல்லாந்தோ கண்வளர்ந்தருளுகிறதென்று தெரியாதிருக்கும். இவர்கள்தான் நின்றானாகில் 'நிலையார நின்றான்' என்பர்கள்; இருக்கக்கண்டால், 'பிரானிருந்தமை காட்டினீர்' என்பர்கள்; சாயக்கண்டால், 'கிடந்ததோர் கிடக்கை' என்பர்கள்.

இம்மூன்று பதங்களாலும் பலித்த தாத்பர்யத்தைத் தொகுத்தருளிச்செய்கிறார் (குணத்ரயேத்யாதி).

'ஓர்' என்று அத்விதீயமென்னுதல்; அன்றிக்கே, கிடக்கும் ப்ரகாரம் உபயாகாராவலம்பியாயிருக்கையாலே த்ருஷ்டங்களுக்கு ஸம்ஶயஜநகமாகையால் வந்த அத்விதீயத்வமாதல், இத்யாதி ஸௌந்தர்யாதிஶயத்தைச் சொல்லுகையாலே பலித்த தாத்பர்யமென்று ஏகார்த்தமாதல். (நிற்றல் இருத்தல் செய்தாராகில் மறக்கலாய்த்திறே) என்கைக்கு அவ்வோவவஸ்தைகளுக்கு ஆகர்ஷகத்வமில்லையோவென்ன அருளிச்செய்கிறார் (இவர்கள்தானித்யாதி). மறக்க

(கண்டு மெய்ம்மனம் மறந்து வாழ்கேன்) இவ்விஷயத்தைக் கண்டநுப விப்பதற்கு முன்பாகில் மறக்கவுமாம். கண்டு அநுபவித்த பின்பு இனித்தான் எந்தப்ரகாரத்தாலே மறப்பது. (வாழ்கேன், இவ் விஷயத்தை விட்டுப்போய் மணலை முக்கவோ. அநுபவித்தால் மறக்க வொண்ணாது; மறந்தால் புறம்பு தரிக்கவொண்ணாது. (ஏழையே னேழையேனே) நானோ அத்யந்தசபலனாய், கிட்டினால் அநுபவிக்க மாட்டேன்; பிரிந்தால் தரிக்கமாட்டேன். (ஏழையேன் ஏழையேனே முன்பு இதரவிஷயங்களிலே அகப்பட்டு ஶிதிலனாயிருப்பன்; இப் போது பகவத்விஷயத்திலே அகப்பட்டு புறப்பு கால்வாங்கமாட்டாதே இருப்பன்; அது கர்மத்தாலே வந்த ஶைதில்யம்; § இது விஷயவை லக்ஷண்யத்தாலே வந்த ஶைதில்யம். 23.

---

24. வெள்ளநீர் பரந்துபாயும் விரிபொழி லரங்கந்தன்னுள்
கள்வனார் கிடந்தவாறும் கமலநன்முகமும் கண்டும்
உள்ளமே வலியைபோலு மொருவனேன் றுணரமாட்டாய்
கள்ளமே காதல்செய்துன் கள்ளத்தே கழிக்கின்றாயே.

வொண்ணாதாகில் அநுபவிக்கவல்லீரோவென்ன அருளிச்செய்கிறார் (ஏழையேனேழையேனேயென்று). அர்த்தாந்தரம் (முன்பித்யாதி). முந்தினவர்த்தத்துக்கு வீப்ஸைக்கர்த்தம்—அத்யந்தசாபலம். விலக்ஷணவிஷயமாகையாலே அநுபவிக்கமாட்டேன், பிரிந்தால் தரிக்கவும் மாட்டேனென்றபடி. இரண்டாமர்த்தத்துக்கு 'ஏழை' என்று சாபல்யமாய், அத்தால் பகவத்விஷயத்தில் ஶைதில்யத்தைச் சொல்லுகிறதாய், 'ஏழை' என்ற வீப்ஸைக்குத் தாத்பர்யம் (முன்பு இதரவிஷயங்களிலுண்டான ஶைதில்யத்தைச் சொல்லுகிறது, இப் போது இதரவிஷயங்களில் ஶைதில்யம் சொன்னதுக்கு த்ருஷ்டாந் தார்த்தம். 23.

சின்ன அரு :—இருபத்துமூன்றாம் பாட்டு. (ரங்காவதரணத்) ஸ்ரீரங்கவிமாநம் திருவயோத்யையில் நின்றும் இங்கே வந்ததுக்கு மேல்(ஏழையேனேழையேனே) வீப்ஸை(மீமிசை)யாலே அத்யந்தசபல னென்னுதல். இதரவிஷயத்திலும் ப்ராப்த விஷயத்திலும் என்னு தல். 23.

---

§ (பா) இன்று.

பதவுரை :— வெள்ளம் நீர்—பெருவெள்ளத்தையுடைய காவேரி யானது, பரந்து பாயும்—எல்லாப் பக்கங்களிலும் பாயும்படியானதும், விரி பொழில்—விசாலமான சோலைகளையுடைய, அரங்கம் தன்னுள்—கோயிலிலே, கள்வனூர்—(அடியவர்களின் நெஞ்சைக்) கொள்ளை கொள்ளுமவனுன அழகிய மணவாளன், கிடந்த ஆறும்—பள்ளி கொண்டருளியபடியையும், கமலம் நல் முகமும்—தாமரை மலர் போன்ற அழகிய திருமுகத்தையும், கண்டும்—ஸேவிக்கப்பெற்ற பின்பும், உள்ளமே—நெஞ்சே !, வலியை போலும்—நீ கடினமாயிரா நின்ருய் போலும் !, ஒருவன் என்று—அவன் ஒப்பற்றவனென்று, உணர மாட்டாய்—அறியமாட்டாய், கள்ளமே காதல் செய்து—(பகவத் விஷயத்தில்) பொய்யான அன்பு பூண்டு, உன் கள்ளத்தே—உன் கள்ளச்செய்கைகளிலேயே, கழிக்கின்ருயே—காலத்தைக் கழிக்கிருயே !

அவ :—இருபத்துநாலாம் பாட்டு. (வெள்ளநீர்) 'மனத்திஞல் நினைக்கலாமே' என்றும், 'பேசத்தாஞவதுண்டோ' என்றும், 'எங்ஙன மறந்துவாழ்கேன்' என்றும், இவர் மறக்கப்புக்கவாறே இவரை நினைப்பிக்கைக்காக இவர் பக்கல் தமக்குண்டான ப்ரேமத்தைக் காட்டக்கண்டு, இவ்விஷயத்தில் நமக்குண்டான ப்ரேமம் அஸத் ஸமமாயிருந்ததீ என்றும், இன்னமும் இவ்விஷயத்தினுடைய வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்துத் தமக்குப் பிறந்த பக்தி விஷயாநுரூபமாகப் போராமையாலும், அசித்ஸம்ஸ்ருஷ்டனுக்குப் பிறந்த ப்ரேமம் பித்தோபஹதனுக்குப் பிறந்த தெளிவுபோலே விஸ்வஸிக்க வொண்ணுமையாலும் அநுதபித்து, திருவுள்ளத்தைக் குறித்து, உனக்கு இதரவிஷயத்தோபாதி இவ்விஷயத்திலும் க்ரித்ரிம ஸ்நேஹமாய் விட்டதாகாதே ! என்று திருவுள்ளத்தை நிந்திக்கிருர்.

வ்யா :—(வெள்ளநீர் பரந்துபாயும்) காவேரி ஸஹ்யமே தொடங்கிக் கோயிலைநோக்கி வருகிறதாகையாலே தன் அபிநிவேஶமெல்லாம் தோற்றும்படி பெருவெள்ளமாக நீரைக்கொண்டு வந்து சிலர்க்குக் குலைசெய்து தகையவொண்ணுதபடி ஸர்வோதிக்கமாகப்

அரு :—இருபத்துநாலாம்பாட்டு. (வெள்ளநீரித்யாதி). (செவ்வை பரிகாரமாஞற்போலே) என்றது, ஶேஷத்வம் பரிகாரமாஞற்போலே

பாயாநிற்கும். அபிநிவேஶம் முடியாமையாலே பாய்ந்து தலைக் கட்டாது. (விரிபொழிலரங்கம்) நீர் பாய்ந்த பரப்படங்கலும் சோலையும் விரிந்து வாராநிற்கும்.

(அரங்கந்தன்னுள் கள்வனார்) பரமபதத்தில் அக்ருத்ரிமரான நித்யஸூரிகளோட்டைப் பரிமாற்றத்துக்குச் செவ்வை பரிகரமானாற் போலே, க்ருத்ரிம ஸம்ஸாரிகளை வஶீகரிக்கைக்கு ஶௌர்யம் பரிகரமாகவாய்த்துக் கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது. நீர் வாய்ப்பும் சோலை வாய்ப்பும் கண்டு சாய்ந்தானென்கிறவிது வ்யாஜமாய், ஸம்ஸாரிகளுடைய வஶீகரணத்திலே நினைவாய்த்திருப்பது. நிலவரும் சென்றுபுக்கால் முற்பட சௌர்யகந்தி (**चौर्यगन्धि**) யாயாய்த்து திருமுகமிருப்பது. அதாவது: ஒரு உபாதியாலே தம்மை வந்து கிட்டினாருடைய ஆத்மவஸ்துவை அபஹரித்துச் சட்டைப்புரைக்குள்ளே இட்டுக்கொள்வரென்று தோற்றியிருக்கும். ஆதாகிறது: தமக்கு அந்தரங்கமாக்கிக்கொள்ளுகை. இன்னமும் தான் ஆத்மவஸ்துவைத் தன்னதாக அபிமாநித்துப் போந்தான், நாம் இவன் அபிமானித்த அத்தை மீட்போம் என்று பார்த்துத் தம் மழகைக் காட்டி (145) "**जितन्ते**" (ஜிதந்தே) என்னப்பண்ணுமவனாய்த்து. அவனதான வஸ்துவை இவன் நெடுநாள்பட அபஹரித்துப் போந்தபடி. தன்னத்தைத் தானே கொள்ளுகை அபஹாரமாம்படியிறே சேதநனுடைய ஆத்மாபஹாரம் காழ்ப்பேறினபடி. ஆத்மஸமர்ப்பணமும் ஆத்மாபஹாரமிறே என்னும்படியான இவ்வஸ்துவிறே இப்படி எளிவரவுபட்டது. ஆத்மஸமர்ப்பணமாகிறதுதான் மஹாபலி தாநம்போலே இருப்பதொன்றிறே.

(கிடந்தவாறும்) வஶீகரணபரிகரந்தானும் ஶீலாதிகுணங்களான ஆத்மகுணங்களுமல்ல; அவயவஶோபையான ரூபகுணங்களுமல்ல; 'கிடந்ததோர் கிடக்கை' என்னும் கிடையழகாய்த்து. (கமலநன் முகமும்) விகாஸம், செவ்வி, குளிர்த்தி, பரிமளம் என்றாப்போலே

என்றபடி. 'நிலவர்' என்றது ஸம்பந்த ஜ்ஞாநமுடையவர்களை. 'கள்வனார்' என்றதுக்கு, கீழே—முகத்தில் தண்ணளியைக்காட்டி அபஹரிக்குமென்றருளிச்செய்து, திருமுகத்தில்ஸௌந்தர்யத்தாலும் அபஹரிக்குமென்கிறார் (இன்னமுமித்யாதி).

சொல்லுகிறவற்றைப் பற்றத் திருமுகத்துக்குத் தாமரை ஒரு போலியாகச் சொல்லுமித்தனைபோக்கி, ஸர்வதா ஸத்ருசமல்லாமை யாலே (நன்முகம்) என்கிறார். சுத்தஸத்வமாய், ஜோதிர்மயமான முகத்துக்கு ப்ராக்ருதவஸ்து ஸத்ருசமாகவற்றோ? ஆச்ரிதவிஷயத் தில் போதுசெய்கிற இம்முகத்துக்கு த்ருஷ்டாந்தமுண்டோ? ஸம் ஸாரத்துக்குள்ளே குளிர்ந்தமுகம் இதொன்றுமே என்கிறார். (கண்டும் உள்ளமே வலியைபோலும்) கண்வளர்ந்தருளுகிற அழகைக் கண்டுவைத்தும் நெஞ்சே! ஒரு விகாரம் பிறவாதே திண்ணிதாயிருந் தாயீ! கீழ்ப்பிறந்த விகாரமெல்லாம் விஷயவைலக்ஷண்யத்தைப் பற்ற அஸத்ஸமமாயிருக்கிறதாய்த்து இவர்க்கு.

இப்போது எனக்கு வந்த வன்மையென் என்ன; (ஒருவனென் றுணரமாட்டாய்) அத்விதீயனென்று உணரமாட்டுகிறிலை. ஒருவ னென்று உணரப்புக்கால் அவனை உள்ளபடி உணரவேணும். அப் படி உணர்ந்தால் அத்தலையில் ஆச்ரிதவாத்ஸல்யத்துக்கு ஸத்ருசமாகவும், விஷயவைலக்ஷண்யத்துக்கு ஸத்ருசமாகவும் விடாய் பிறக்கவேணும், அது பிறவாமையாலே 'வலியை' என்கிறார்.

அப்படியாகில், கீழ், 'கண்ணிணை களிக்குமாறே' என்றும், 'பனியரும்புதிருமாலோ' என்றும், 'உடலெனக்குருகுமாலோ' என்றும் சொல்லிப்போந்தவையெல்லாம் என்னாய்த்தென்னில்; (கள்ளமேகாதல்செய்து) உனக்கு ப்ராக்ருதவிஷயத்தில் பண்ணிப் போந்த பூர்வவாஸனையாலே இங்கும் அநுவர்த்தித்துப்போந்தவித்தனை யொழிய, இவ்விஷயத்துக்கு ஸத்ருசமாக ஸ்நேஹித்தாயல்லையே. விஷயாந்தரங்களில் பண்ணிப்போந்ததுப் பலபக்தியாகையாலே இங் கும் பலபக்தியிறே பண்ணிற்று. (உன்கள்ளத்தேகழிக்கின்றாயே) இந்தக் க்ரித்ரிமபக்தியானது பண்டேயுன் பாழியிறே, இங்கும் அது தன்னையே முடியநடத்தினையத்தனையிறே. விஷயாந்தரங்களோபாதி யாக இதுதன்னையும் நினைத்தாயித்தனைபோக்கி இவ்விஷயத்துக்கு அநுரூபமன்றிறே உன்னுடைய ப்ரேமம் என்கிறார். 24.

குணத்திலே நோக்காகநன்மைக்குத் தாத்பர்யாந்தரம் (ஸம்ஸாரத் துக்குள்ளித்யாதி) (பலபக்தி) ப்ரயோஜநார்த்தமான பக்தியென்றபடி. (பாழி) ப்ரக்ருதி. 24.

25. குளித்து மூன்றனலை யோம்பும் குறிகொளந்தணமை தன்னை
ஒளித்திட்டேனென்கனில்லை நின்கணும் பத்தனல்லேன்
களிப்பதென்கொண்டு நம்பீ கடல்வண்ணா கதறுகின்றேன்
அளித்தெனக் கருள்செய்கண்டா யரங்கமாநகருளானே.

பதவுரை:— அரங்கமாநகருளானே!—, குளித்து—ஸ்நாநம் செய்து, மூன்று அனலை —மூன்று அக்நிகளை, ஓம்பும் —வளர்ப்பதற்குரிய யோக்யதையை உடையதும், குறி கொள்—மந்த்ரலோபாதிகள் வாராமே காப்பாற்ற அரிதான, அந்தணமை தன்னை—ப்ராஹ்மண்யத்தை, ஒளித்திட்டேன்—போக்கடித்து விட்டேன்; என் கண் இல்லை— (ஆத்மவிஷயஜ்ஞாநம்) என்னிடம் இல்லை; நின் கண் பத்தனும் அல்லேன்—உன் பக்கல் எனக்கு அன்பும் இல்லை; (இங்ஙனமிருக்க;) நம்பீ—(சீலாதிகுணங்களால்) பரிபூர்ணனே!, கடல் வண்ணா—கடல் போன்ற வடிவழகையுடையவனே!, கதறுகிறேன்— வாய்விட்டுக் கூப்பிடாநின்றேன்; எனக்கு—என் விஷயத்தில், அளித்து அருள் செய்யாய்—கிருபை செய்தருளவேண்டும்.

அவ:—இருபத்தஞ்சாம் பாட்டு. (குளித்து) கீழ், பகவத்விஷயத்தில் தமக்குப் பிறந்த ஆதரம் விஷயாநுரூபமாகப் போராமையாலும், அசித்ஸம்ஸர்க்கயுக்தனுக்குப் பிறந்ததாகையாலே பிததோபஹதனுக்குப் பிறந்த தெளிவுபோலே விச்வஸிக்கவொண்ணாமையாலும், என்செய்வோமென்று திருவுள்ளத்தைக்குறித்து அநுதபித்தாராய் நின்றார். இனி அசித்ஸம்ஸர்க்கமற்று ஒரு தேசவிஷயத்திலே நித்யாநுபவம் பண்ணுகைக்கு நம்கையில் முதல்காண்கிறிலோம், நாம் இவ்விஷயத்தை இழந்தே போமித்தனையாகாதே! என்று சோகிக்க, நீர் சோகிக்கிறதென்? அசித்ஸம்ஸர்க்கமற்று நம்மைப் பெறுகைக்கு

சின்ன அரு:—இருபத்து நாலாம் பாட்டு. (நிலவர்) திருப்பாணாழ்வார். அவரையும் அந்தரங்கமாக்கிக் கொள்ளுகையாலே (சௌர்யகந்தி) என்கிறது. (உபாதியாலே) என்றது ஸ்த்ரீகளைப் பிரிமாட்டாமையாலே வந்த தம்மை அங்கீகரித்தாப்போலே ப்ரயோஜநத்துக்காகப் புக்காலும் விடார் என்றபடி. தன் உடைமையைத் தான் கைக்கொள்ளுகை அபஹாரமோவென்ன அருளுகிறார் (அவனதான வஸ்துவித்யாதி) சலபக்தி—கபடபக்தி பாழி—ஸ்வபாவம். 24.

ஶாஸ்த்ரங்களிலே த்ரைவர்ணிகாதிகாரமாயும், ஸர்வாதிகாரமாயும் உண்டான ஸாதநங்கள் ப்ரஸித்தமன்றோ? அவற்றிலே ஒன்றை அநுஷ்டித்து நம்மை லபிக்கமாட்டரோ?'' என்ன; எனக்கு அவை யொன்றிலும் யோக்யதையே தொடங்கி இல்லையென்று மேல் பத்துப் பாட்டாலே தம்முடைய உபாயஶூந்யதையை அருளிச்செய்கிறார். ஆனால் பின்னை, கீழ் இவர்க்குப் பிறந்ததாகச்சொன்ன ஜ்ஞாநபக்தி கள் என்னென்பதாய்த்து என்னில்; பகவத்ப்ரஸாதத்தாலே பிறந்த போகோபகரணமான ஜ்ஞாநபக்திகளாய்த்து, இங்கு சொல்லிற்று; அவை ஸாதநகோடியில் அந்தர்ப்பவியாது, அவ்வநுபவம் காதாசித்க மன்றிக்கே நித்யமாகைக்குத் தம் கையில ஸாதநமில்லை என்கிறார் இங்கு. இதில் முதல் பாட்டிலே ப்ரஸித்தமாய் த்ரைவர்ணிகரான வர்களுக்கு அதிகாரமான கர்மஜ்ஞாநபக்திகளில் எனக்கோர் அந்வய மில்லை என்கிறார்.

வ்யா:—(குளித்து மூன்றித்யாதி) ஜந்மமாத்ரத்தையேகொண்டு நீ அவற்றை அநுஷ்டித்து வாவென்னுமித்தனை போக்கி, ஜந்ம ப்ரப்ருதி ப்ராஹ்மண்யத்துக்கு அநுரூபமாயிருப்பதோர் அநுஷ்டாந மில்லை என்கிறார். (குளித்து) நித்ய ஸ்நாநம், நைமித்திக ஸ்நாநம், ப்ராயச்சித்தஸ்நாநமென்று ஸ்நாநம் பஹுமுகமாயிருக்கும். நித்யஸ்நாநம் நைமித்திக ஸ்நாநத்துக்கு உடலன்று; அந்த நைமித்திக ஸ்நாநம் ப்ராயச்சித்த ஸ்நாநத்துக்கு உடலன்று; இவை தனித் தனியே ஸ்வதந்த்ரங்களாயிறே இருப்பது. கர்மாநுஷ்டாநந்தா னொழிய யோக்யதாபாதகங்கள் பண்ணிப்போரத் தான் அரிதாயிறே

அரு:—இருபத்தஞ்சாம் பாட்டு. (குளித்தியாதி). இங்கே "பித்தோபஹதனுக்கு" என்கிற வாக்யத்தாலே ஒருஹேது சொல்லு கையாலே, கீழிற்பாட்டில் அவதாரிகையில் சொன்ன ஹேதுதவயத் தோடே இதுவுமொரு ஹேதுவாகக் கண்டுகொள்வது.

(ஜ்ஞாநபக்திகள்) என்றது, "ஐயப்பாடறுத்துத்தோன்று மழகன், ஆதரம் பெருகவைத்த அழகன்'' என்ற பதங்களைப்பற்ற.

உபாயஶூந்யத்தை சொல்லுகிற ப்ரகரணத்திலே ஸ்நாநாதி ராஹித்யம் சொல்லுவானென் என்ன, அருளிச்செய்கிறார் (கர்மா நுஷ்டாநந்தானொழியவித்யாதி). மூன்றனலாவது—கார்ஹபத்யா

இருப்பது. (மூன்றனலை) அக்நி என்னாதே, 'அனல்' என்றது, ஆராதியாநின்றால் அபர்யாப்தியே ஸ்வபாவமாயிருக்கும் விஷய மென்று தோற்றுகைக்காக. (மூன்றனல்) ஒன்றே துராராதமா யிருக்க மூன்றையிறே விதித்தது. (ஓம்பும்) சவலைப்ரஜைக்குச் சோறும்நீரும் முடிந்துகொண்டு திரியும் மாதாவைப்போலே, உமியும் இந்தநமும் கொண்டு திரியவேண்டும் விஷயமென்கை.

(குறிக்கொள்) மந்த்ரலோபம், க்ரியாலோபம், த்ரவ்யலோபம், காலபேதம், * தேவதாவ்யத்யயம் என்கிற இவற்றில் ஒன்றுண்டா மாகில் நிஷ்பலமாயிருக்கையாலே, கரணம பிழைக்கில் மரண மென்கை. பண்ணின அக்ருத்யகரணங்களை க்ஷாந்திக்கு விஷய மாக்கி ஓரஞ்ஜலியாலே ஸுப்ரஸந்நமாம விஷயமன்றே. (அந்தணமை) இப்படி இருக்கிறதேதென்னில்:— ப்ராஹ்மண்யம்; அதுதன்னை (ஒளித்திட்டேன்) ப்ராஹ்மண்யமில்லாமை என்னளவேயாய்ப் போகையன்றியே இவ்வர்ணந்தான் தண்ணியது என்னும்படி பண்ணி னேன். விசிஷ்டராயிருப்பாரைக்கண்டால் இன்னான் அதிகரித்த வர்ணத்திலே சிலரன்றோ என்றுகொண்டு அவர்களுக்கும் அவத்ய மாம்படி திரிந்தேன். இதிறே நான் கர்மயோகத்தில் நின்ற நிலை.

ஆனால் ஜ்ஞாநயோகமிருந்தபடி எங்ஙனே என்னில்; (எண் கணில்லை) என் விஷயமாக எனக்கொன்றில்லை. ஆத்ம விஷயஜ்ஞாந மெனக்கில்லை என்கை. கர்மயோகமில்லை என்றபோதே தத்ஸாத்ய மான ஜ்ஞாநயோகமில்லை என்னுமிடம் அர்த்தஸித்தமன்றோ என்னில்; இஜ்ஜந்மத்தில் அநுஷ்டித்ததொரு கர்மமில்லையாகிலும் பூர்வஜந்மத்தில் கர்மயோகம் பக்வமாய், அவ்வளவிலே தேஹவிச் லேஷம் பிறந்து அநந்தரஜந்மத்தில் ஜ்ஞாநம் நைஸர்க்கிகமாயிருக்கு

ஹவநீயதக்ஷிணாக்நிகள். ஓம்புகையாவது — ஹோமஸாதநங்களைக் கொண்டு வளர்க்கை. இத்தை அருளிச்செய்கிறார் (சவலைப்பிரஜை) யித்யாதி).

"ஜ்ஞாநகர்மங்கள் இரண்டுமுண்டானால் பக்திகூடியல்லதிராது" என்கிற ஈட்டு வாக்யத்தோடே, "கர்மஜ்ஞாநங்கள் இரண்டுமில்லையா யிருக்க" என்ற வாக்யத்துக்கு விரோதமுண்டேயாகிலும், † நோற்ற நோன்பில் அருளிச்செய்தது "பரிநிஷ்பந்ந ஜ்ஞாநனுக்கு அநந்தர

* தேவதாத்யாகம். † திருவாய் (5-7-1).

மிறே, அதுவும் இல்லை என்கை. ஆனால் பக்தியோகமிருந்தபடி என்னென்னில்; (நின்கணும்பத்தனல்லேன்) கண்டார்க்கு ஸ்ப்ருஹை பண்ணியல்லது நிற்கவொண்ணாத நின்பக்கல் எனக்கு ஸ்நேஹலேசமு மில்லை. கர்மஜ்ஞாநங்கள் இரண்டுமில்லையாயிருக்க உபயஸாத்யமான பக்தி இல்லையென்னுமிடம் சொல்லவேணுமோ என்னில்; (146) "**जन्मान्तरसहस्रेषु तपोज्ञानसमाधिभिः। नराणां क्षीणपापानां कृष्णे भक्तिः प्रजायते॥**" (ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாநஸமாதிபி: । நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே ॥) என்கிறபடியே உண்டாகலாமிறே; அதுவும் இல்லையென்கை. அதவா, கர்மஜ்ஞாந பக்திகள் மூன்றையும் தனித்தனியே உபாயமாகச் சொல்லுவாரு முண்டு; அந்த ப்ரகாரத்திலே சொல்லிற்றாகவுமாம். (147) "**कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः**" (கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:), (148) "**सर्वं कर्माखिलं पार्थ! ज्ञाने परिसमाप्यते**" (ஸர்வம் கர்மாகிலம் பார்த்த! ஜ்ஞாநே பரிஸமாப்யதே), (149) "**भक्त्या त्वनन्यया**" (பக்த்யா த்வநந்யயா) என்னக்கடவதிறே. இதிறே கர்மஜ்ஞாநபக்திகளில் நான் நின்றதில்லை. மற்றும் இவ்விஷயத்தில் அறிவுடையார், ‡ "நோற்ற நோன்பிலேன்" என்றும், ‡ "கறவைகள் பின்சென்று" என்றும், (150) "**न धर्मनिष्ठोस्मि**" (ந தர்மநிஷ்டோஸ்மி) என்றும், தந்தாம் வெறுமைகளைப் பேற்றுக்குடலாக முன்னிட்டுக் கொண்டுபோகக்கடவதாயிறே இருப்பது.

பெரியபெருமாளும் தம்முடைய க்ருபைக்கு இவர்கள் சொன்ன வெறுமைகளும் அரிதாகையாலே பேற்றுக்குடலாக "ஆழ்வீர்! நீர், நிரபேக்ஷரன்றோ?" என்ன; (களிப்பதென்கொண்டு) கீழ் நின்ற நிலையில் எனக்கு அநுதாபமுண்டாயோ, அதடியாக, (151) "**मा**

க்ஷணத்திலே பக்திபிறவாது" என்றதைப்பற்ற; இவ்விடத்தில் சொன்னது—அபரிபக்வ கர்மஜ்ஞாநவானுக்குக் காலாந்தரத்திலே பக்திபிறக்கையைப்பற்றச் சொன்னதாகையாலே விரோதமில்லை யென்று கண்டுகொள்வது.

(தம்முடைய க்ருபைக்கு) என்றது, தாம் க்ருபைபண்ணுகைக்கு உறுப்பாகவென்றபடி. (வெறுமைகளும் அரிதாகையாலே) என்றது,

---

† திருவாய் (5-7-1). ‡ திருப்பாவை (28).

ஶுச:” (மா ஶுச:) என்றுண்டாயோ, எது ஆலம்பநமாகக்களிப்பது. இத்தால், அகிஞ்சநனென்றபடி. உமக்கு அநுதாபமில்லையாகில் விடுமித்தனையன்றோ என்னில்; என்பக்கல் கைம்முதலில்லையாகில் உன்பக்கலிலுமில்லையோ என்கிறார். (நம்பி) நான் உபாயாந்தரங்களில் வெறுமையில் பூர்ணனானவோபாதி, தேவரீர் ஶீலாதிகுண பரிபூர்ணரல்லீரோ? தேவரீருடைய பூர்த்தி ஸஹகார நிரபேக்ஷமன்றோ. ‡ “அறிவொன்றுமில்லாத” என்ற அநந்தரம், ‡ “குறைவொன்றுமில்லாத கோவிந்தா” என்றுளிறே.

(கடல்வண்ணா) தேவரீருடைய ஶீலாதிகுணபூர்த்தியெல்லாம் வேணுமோ, வடிவழகே அமையாதோ என்பேற்றுக்கு; ஒரு கடலோடே ஸ்பர்த்தைபண்ணி ஒருகடல் சாய்ந்தாற்போலேயிறே பெரியபெருமாள் கண்வளர்ந்தருளுகிறது. “ஐயப்பாடறுத்துத்தோன்றும் அழகன” என்றும், “ஆதாம் பெருகவைதத அழகன்” என்றும், இவ்வடிவழகேயிறே இவர்பற்றாசாகச்சொல்லிப்போந்தது. இத்தால் ஶரண்யனென்றபடி.

உம்முடைய வெறுமையையும், நம்முடைய பௌஷ்கல்யத்தையும் அறிந்தீராகில் இதற்கு மேற்பட உமக்கு வேண்டுவதென்னென்ன; (கதறுகின்றேன்) அந்நிலையிலேதான் நிற்கப்பெற்றேனோ, ஸாதநாநுஷ்டாநம் பண்ணிப் பலம் தாழ்த்ததென்று கூப்பிடுவாரைப்போலே, ச்ரவணகடோரமாகக் கூப்பிடாநின்றேன். ஸ்வரக்ஷத்தில் கைவாங்கி, தேவரீர் கண்வளர்ந்தருளுகிற அழகுக்கு மங்களாஶாஸநம் பண்ணுகையே யாத்ரையாக இருக்கிறேனோ. இத்தால் பலித்ததாய்விட்டது—

வெறுமைகளை முன்னிடுகையும் அல்லார்பக்கல் அரிதாகையாலென்றபடி. இத்தால் “அகிஞ்சநனென்றபடி” என்றதுக்குத் தாத்பர்யம்—இப்படி வெறுமையை முன்னிடுகிறது அநுதாபபூர்வகமல்லாமையாலே அகிஞ்சநனென்றபடி. “நம்பி” என்றதுக்குத் தாத்பர்யாந்தரம் (தேவரீருடைய பூர்த்தியித்யாதி). இந்த பக்ஷத்தில் உபாயாந்தரங்களில் அந்வயமில்லையாகில் ப்ரதிபத்தியிலே அந்வயமுண்டே என்று ஸங்கதிகண்டுகொள்வது. ப்ரமாணம் உபயார்த்த ஸாதாரணம்.

“கடல்வண்ணா” என்ற பதத்தோடேகூட்டி, “கதறுகின்றேன்” என்றதுக்குத் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (ஸ்வரக்ஷணத்திலித்யாதி).

"ஆசாரலேஶமுடையார்க்கு முகங்கொடுக்கக்கடவவர் ஓர் ஆச்ரிதன் கூப்பிடாநிற்க அநாதரித்து நிற்பதே!" என்று நாட்டார் சொல்லும் படி தேவரீர்க்கு ஓர் அவத்யத்தைத் தந்தேனித்தனையிறே.

இப்படி உமக்கொரு நன்மைகளுமில்லையாகில் பின்னை நம்மைச் செய்யச்சொல்லுகிறதென்? என்னில்; (அளித்தெனக்கருள்செய் கண்டாய்) என்னை தேவரீர்க்கு க்ருபாவிஷயமாக்கி க்ருபையும் பண்ணவேணும். அதாவது: அநுதாபத்தைப் பிறப்பிக்க வேணு மென்கை. ஏன்றான்? நமக்கு இங்ஙனே அடியே தொடங்கிச் செய்யவேண்டுகிற நிர்ப்பந்தந்தானென்னென்னில்; (அரங்கமா நகருளானே) தந்தாமுக்கென்ன ஒரு முதலும் இல்லாதாரை ரக்ஷிக் கைக்காகவன்றோ இங்குவந்து சாய்ந்தருளிற்று. குறைவற்றாரை ரக்ஷிக்கப்பார்க்கில் இங்கு வரவேணுமோ, அங்கே இருக்க அமை யாதோ. இங்கே வந்து கிடையழகு காட்டியும், அர்ச்சக பராதீந மான ஶீலவத்தைபைக் காட்டியும் ருசியே தொடங்கி உண்டாக்கி ரக்ஷிக்கைக்காகவன்றோ. 25.

---

26. போதெல்லாம் போது கொண்டுன் பொன்னடி புனையமாட்டேன்
தீதிலா மொழிகள் கொண்டுன் திருக்குணம் செப்பமாட்டேன்
காதலால் நெஞ்சமன்பு கலந்திலேனது தன்னாலே
ஏதிலே னரங்கர்க்கெல்லே என்செய்வான் தோன்றினேனே.

சின்ன அரு:— இருபத்தஞ்சாம் பாட்டு. (மூன்றனல்) கார்ஹ பத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்நி. (ஓம்புகை) வளர்க்கை. (தேவ தாத்யாகம்) அந்த கர்மங்களுக்கு அதிக்ருதமான தேவதைபைத் தப்புவிக்கை. ப்ராஹ்மண்யம் தமக்கில்லாதேபோனால், எல்லார்க்கும் இல்லாதே போகிறதென்னென்ன அருளுகிறார் (விஶஷ்டராயித் யாதி). (என் கண்) "கண்" என்று ஜ்ஞாநமும், இடமும். நிரபேக்ஷர் ஆகிஞ்சந்யம் சொல்லுகைபாலே ப்ரதிபக்திக்கு பூர்ணாதிகாரியன்றோ வென்று பெரிய பெருமாளுக்கு விவக்ஷை. உபாயாந்தரங்களில்லை என்று எனக்கு அநுதாபமுண்டோ என்றபடி. அருள்செய்கை அவனுக்கு அவத்யமாம்படி கூப்பிட்டோமே என்றும், ஒருகைம் முதலுமில்லையென்கிற அநுதாபத்தைப் பிறப்பிக்கை. 25.

பதவுரை:—போது எல்லாம்—எல்லாக் காலங்களிலும், போது கொண்டு—புஷ்பங்களைக்கொண்டு, உன் பொன் அடி —உன்னுடைய அழகிய திருவடிகளிலே, புனைய மாட்டேன்—ஸமர்ப்பிக்க சக்தியற்றிருக்கிறேன்; தீது இலா—குற்றமற்ற, மொழிகள் கொண்டு—வார்த்தைகளைக்கொண்டு, உன் திருக்குணம்—உன் கல்யாணகுணங்களை, செப்பமாட்டேன்—சொல்லமுடியாதவனாயிருக்கிறேன்; காதலால் அன்பு—காதலடியாக வரும் அன்பை, நெஞ்சம்—என் நெஞ்சிலே, கலந்திலேன்—உண்டாக்கினேனல்லேன்; அது தன்னாலே—ஆதலால், அரங்கற்கு—அரங்கனாகிய தேவரீரை, ஏதிலேன்—ஒரு அவயவத்தாலும் அநுபவிக்கப்பெற்றிலேன்; எல்லே—அந்தோ!, என் செய்வான்—எதற்காக, தோன்றினேனே—பிறந்தேன்?

அவ:—இருபத்தாறும்பாட்டு. (போதெல்லாம்) த்ரைவர்ணிகாதிகாரமான உபாயங்களில்லையாகில் ஸர்வாதிகாரமான அர்ச்சநஸ்தவநாதிகள்தான் உமக்குண்டோ வென்னில்; அதுவுமில்லை என்கிறார்.

வ்யா:—(போதெல்லாம் போதுகொண்டுன் பொன்னடி புனைய மாட்டேன்) அழகிய செவ்விப்பூக்களைக்கொண்டு ஸர்வகாலமும் உன்னுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளிலே புனையவிறே அடுப்பது, அதில் ச்ரத்தையில்லாமையே அன்று, ஶக்தியே இல்லை என்கிறார். உன்னையொழிந்த விஷயங்களிலே செய்யவென்றால் ச்ரத்தா ஶக்திகள் இரண்டுமுண்டாயிருக்கும். (118) "यौ तत् पूजाकरौ करौ" (யௌ தத் பூஜாகரௌ கரௌ) என்கிறபடியே, தேவரீர் திருவடிகளையே ஆராதிக்கக்கண்ட கைகளைக்கொண்டு, அப்ராப்தமாய் அநர்த்தாவஹமாயிருக்கும் விஷயங்களை ஆராதித்துப் போந்தேன்; காலமெல்லாம் மாட்டேன். ஒருக்கால் வல்லேன் என்கிறாரல்லர்; ஸர்வகாலமும் மாட்டேனென்கிறார். ஒருகாலத்தில் ஶக்தனாகில் அது தானே பேற்றுக்குப்போரும்படியாயிறே தேவரீர் ப்ரபாவமிருப்பது. (152) "सकृदुच्चरितं येन" (ஸக்ருதுச்சரிதம் யேந) என்றும், (153) "सकृत्स्मृतोपि गोविन्दः" (ஸக்ருத் ஸ்ம்ருதோபி கோவிந்த:) என்றும், (154) "सकृदेव प्रपन्नाय" (ஸக்ருதேவ ப்ரபந்நாய) என்றும் சொல்லக்கடவதிறே.

காயிகமான வ்யாபாரத்தைப் புறம்பே விநியோகம் கொண்டீரே யாகிலும் உம்முடைய பேச்சு, குற்றமற்றிராநின்றது, ஆனபின்பு நம்குணங்களைப் பேசமாட்டீரோவென்ன; (தீதிலா மொழிகள் கொண்டுன் திருக்குணஞ்செப்பமாட்டேன்) பேச்சு குற்றமற்றாலும் உன்னுடைய கல்யாணகுணங்களைப் பேசவென்றால் க்ஷமனாகிறிலேன். ஹேயகுணயுக்தங்களான க்ஷுத்ரவிஷயங்களைப் பேசவென்றால் வாழ்ச்சி (க்கிடாக) யீடாக நறுக்கறப் பேசவல்லேன்; (118) "सा जिह्वा या हरिं स्तौति" (ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி) என்கிற குணங்களில் வந்தால் நாக்கு புரளாது. அவை இரண்டுக்கும் விஷயம் புறப்பேயாக்கினீராகில் நெஞ்சாலே நம்மை ஸ்நேகிக்க வல்லீரேயென்ன; (காதலால் நெஞ்சமன்புகலந்திலேன்) காதலடியாக வரும் அன்பு இதுக்கு முன்பு நெஞ்சில் ஸ்பர்சித்ததில்லை அதாகிறது:-(155) "सङ्गात् सञ्जायते कामः" (ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:) என்கிற ப்ரேமம் புறம்பே ஒருவிஷயத்தில் உண்டாகிலிறே. அத்தை அங்குநின்றும் மீட்டுப்போந்து தேவரீர்பக்கலிலேயாக்கவேண்டுவது. முன்பு ஸ்த்ரீபதார்த்தங்களில் பண்ணிப்போந்த ப்ரேமம் அவர்கள் பக்கல் அர்த்தாதிகளை அபஹரிக்கைக்காகவாய்த்தல்லது அவர்களே உத்தேச்யமென்னும் ப்ரேமமும் இல்லை. (156) "स्मरपरवशो वञ्चनपरः" (ஸ்மரபரவஶோ வஞ்சநபர:) என்னக்கடவதிறே. (157) "परमसुहृदि बान्धवे कलत्रे सुततनयापितृमातृभृत्यवर्गे। शठमतिरुपयाति योऽर्थतृष्णां" (பரமஸுஹ்ருதி பாந்தவே களத்ரே ஸுததநயாபித்ருமாத்ருப்ருத்யவர்க்கே। ஶடமதிருபயாதி யோऽர்த்ததருஷ்ணாம்) என்னக்கடவதிறே.

(அதுதன்னாலே ஏதிலேன்) மநோவாக்காயங்கள் ஒருபடிப்பட்டிருப்பார் பெறும்பேற்றுக்கு இவற்றிலொன்றாகிலும் வேண்டியிருக்க,

---

அரு:—இருபத்தாறும் பாட்டு. (போதெல்லாம்) வாழ்ச்சி யீடாக—வாழ்ச்சியிட்டு வெட்டினாற்போலே என்றபடி.

நெஞ்சிலே அன்பு பண்ணமாட்டிற்றிலேனென்னாதே, 'கலந்திலேன்' என்றதுக்குத் தாத்பர்யம் (புறம்பேயித்யாதி). (157) "तमधमचेष्टमवैहि नास्य भक्तं" (தமதமசேஷ்டமவைஹி நாஸ்ய பக்தம்) என்று ச்லோகஶேஷம். "போதெல்லாம்" இத்யாதிக்கு ப்ரதி கோடித்வேந தாத்பர்யம் (ஸுஹ்ருதமித்யாதி). (26).

அதுவும் எனக்கின்றிக்கே இருக்கையாலே, (ஏதிலேன்) ஏதுமில் லேன். (அரங்கற்கு—ஏதிலேன்) (9) "**सुहृदं सर्वभूतानां**" (ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்) என்கிற ஸௌஹார்த்தத்தையும், (158) "**ऋजुः**" (ருஜு:) என்கிறபடியே ஆஸ்ரிதவிஷயத்தில் மநோவாக்காயங்கள் மூன்றும்செவ்விதாயிருக்கிற ஆர்ஜவகுணத்தையும் கேட்டேபோகாமே அநுஷ்டாநஶேஷமாக்குகைக்காகக் கோயிலிலே ஸந்நிஹிதரான தேவரீர்க்கு ஒன்றுமாகப் பெற்றிலேன்; ஒருகரணத்தாலும் தேவரீரை ஸ்பர்ஶிக்கப்பெற்றிலேன். (எல்லே) என்னே! அஸந்நிஹிதராய் இழந்தேனல்லேன்; ப்ராப்தியில்லையாய் இழந்தேனல்லேன்; செய்த அம்ஶத்திலே பிழைபிடிக்குமவராய் இழந்தேனல்லேன்; என்னிழ வுக்கடி பாபமேயிறே. ஸ்ரீகௌஸ்துபம்போலே உகப்பான வஸ்து கிடீர் இப்படி வ்யர்த்தமாய்ப்போய்த்தது. * அரங்கத்துறையுமின் துணைவர்க்குக்கிடீர் நான் தூரஸ்தனுய்த்து. கஷாயபாநம் பண்ணு மாப்போலே ஹிதபுத்தியாலே ஸேவிக்கவேண்டும் விஷயமாய்த்தான் இழந்தேனே; பாலே மருந்தானாற்போலே தர்ஶநீயரான தேவரீரே மோக்ஷப்ரதராயிருக்கவன்றோ இழந்தது.

(என்செய்வான் தோன்றினேனே) (101) "**विचित्रा देहसंपत्तिः**" என்கிறபடியே, தேவரீக்குறுப்பான ஜந்மமாயிருக்க நான் ஏதுக்காகப் பிறந்தேன். "என்செய்வான் பிறந்தேன்" என்னாதே, "தோன்றி னேன்" என்கிறது உத்பாதங்கள்போலே அநர்த்தஹேதுவாகப் பிறந்தேனென்கை. உத்பாதங்களுடைய தோற்றந்தான் தமக்கும் ப்ரயோஜநமின்றிக்கே பிறர்க்கும் அநர்த்தமாயிறே இருப்பது; அது போலேயாய்விட்டதிறே என் ஜந்மம் என்கிறார். (26).

---

27. குரங்குகள் மலையை நூக்கக் குளித்துத் தாம்புரண்டிட்டோடித்
தரங்க நீரடைக்கலுற்ற சலமிலா வணிலும்போலேன்
மரங்கள்போல் வலியநெஞ்சம் வஞ்சனேன் நெஞ்சுதன்னால்
அரங்கனார்க் காட்செய்யாதே அளியத்தே னயர்க்கின்றேனே.

சின்ன அரு:—இருபத்தாறும் பாட்டு. (மாட்டேன்) ஶக்தியில்லை. (வாழ்ச்சியீடாக) வாழ்ச்சியாலே. 26.

பதவுரை :— குரங்குகள் வாநரவீரர்கள் (கிஞ்சித்கரித்து ஸ்வரூபம் நிறம் பெறுவதற்காக), மலையை—மலைகளை, நூக்க—தள்ளிக் கொண்டுவர, தாம்—தாங்கள், குளித்து—தண்ணீரிலே முழுகி, புரண்டிட்டு—(பின்னர்) கரையிலுள்ள மணலிலே புரண்டு, ஓடி—ஓடி, தரங்கம் நீர்—அலைகளுடன் பொங்கும்படியான கடலை, அடைக்கல் உற்ற—தூர்ப்பதிலே ஈடுபட்ட, சலம் இலா—கபடமற்ற, அணிலும் போலேன்—அணில்களைப்போலும் (நான்) இல்லை; மரங்கள் போல்—மரங்களைப்போலே, வலிய நெஞ்சம்—கடினமான மனஸ்ஸை யுடையனாய், வஞ்சனேன் — வஞ்சனையிலே ஈடுபட்டுள்ளவனாய், அளியத்தேன்—(ஸர்வவித கைங்கர்யங்களுக்கும் தகுதிவாய்ந்த, பெருமையையுடைய நான், அரங்கனார்க்கு—திருவரங்கனுக்கு, நெஞ்சு தன்னால்—பொய்யாகக்கூட, ஆள் செய்யாதே—அடிமை செய்யாமல் அயர்க்கின்றேனே—அநர்த்தப்படாநின்றேன.

அவ :—இருபத்தேழாம் பாட்டு. (குரங்குகள்) மநுஷ்யாதிகாரமானவை ஒன்றுமில்லையாகில், திருவடி, திருவனந்தாழ்வான் முதலானவர்களால் கொள்ளும் அடிமையை, ஶாஸ்த்ர வஶ்யதையுமின்றிக்கே இருந்துள்ள திர்யக்குகளைக் கொள்ளுவதாக நாம் வந்தவதரித்த காலத்தில், திர்யக் ஸாமாந்யத்தாலே அணில்கள் ஶேஷத்வ பாவனையோடே பண்ணின சிலகிஞ்சித்காரமுண்டு, அதுதானுண்டோ வென்னில்; அதுவுமில்லை என்கிறார்.

வ்யா :—(குரங்குகள் மலையை நூக்க) மலைகளாலே கடலைத் தூர்க்கிறவிடத்தில் மலைகளுக்குத் தொகையுண்டாய்க்கொண்டு ஸ்ரீவாநர வீரர்களுக்குத் தொகையில்லாமையாலே ஒரு மலையை அநேகர் * கூடித்தொட்டுக்கொண்டு வருவார்களாய்த்து. ஒருமலை ஒருத்தர்க்குப் பாத்தம்போராதபடி பெருமிடுக்கராயிருக்கச் செய்தேயும் உபாத்யாயன் † கசைபோலே எல்லாரும் கிஞ்சித்கரித்து ஸ்வ

அரு :— இருபத்தேழாம் பாட்டு. (குரங்குகளித்யாதி) "மலை" என்ற ஏகவசநத்துக்குத் தாத்பர்யம் (மலைகளாலேயித்யாதி). உபாத்யாயன், கசைகொண்டுவரச் சொன்னால் அவன் முகமலர்த்திக்காக எல்லாரும் தொட்டுக்கொண்டு வருமாப்போலே என்றபடி. (விஷய

* கூடக்கொண்டு. † (பா) ஊசி ; நூசி.

ரூபம் பெறவேணுமென்றிருக்குமவர்களாகையாலே இப்படிச் செய்கிறார்களாய்த்து. ஸ்வரூபஜ்ஞாநமுடையாரோடு இல்லாதாரோடு வாசியறத் துரும்பெழுந்தாடும்படியிறே, அடிமை கொள்ளுகிறவர் கையும் வில்லுமாய் நின்ற நிலைதான். (மலையை நூக்க) கடலிலே பொகட என்னாதே "நூக்க" என்றது—ஒரு திரளுக்கு ஒருமலை விஷயமாகப் போராமையாலே வேறேயொரு திரள் வந்து பற்ற அவர்கள் பக்கலிலே நூக்கி, இப்படி கைமேலே போயாய்த்து மலை கடலிலே புகுவது. (159) "अवगाह्यार्णवं स्वप्स्ये" (அவகாஹ்யார்ணவம் ஸ்வப்ஸ்யே) என்று கொண்டு, பெருமாளுக்கு ஆற்றாமை கரைபுரண்டு செல்லாநிற்க அக்காரியத்துக்கு வேண்டுவார் ப்ரவர்த்தியா நின்றார்களென்று ஆறியிருக்கவொண்ணாதிறே. "கடல் தூர்ப்புண்டு அக்கரைப்பட்டதாய் விடவற்றே!" என்னும் த்வரையாலே எல்லாருமொக்க ப்ரவர்த்தித்தாராய்த்து.

(குளித்து இத்யாதி) ஸ்ரீவாநரவீரர்களுடைய த்வரைதான் அணில்களுக்குப் போந்திராமையாலே, பெருமாளுக்கு ஆற்றாமை கரைபுரளாநிற்க முதலிகளுக்கு இத்தனை மெத்தனவெல்லாம் என்தான்? இருந்தபடியால் சடக்கெனக் கடலடைக்கிறவர்களுக்கு ஶக்தி இல்லை, ஆனபின்பு, மலையாலே தூர்ப்புண்ட ப்ரதேஶத்துக்கு மணல் சுமக்கப்பரிகரமில்லையிறே என்று, ‡ அணில் நீரிலே புக்குத் தோய்கையும், கரையிலே ஏறினால் மணல் தொற்றுகையும், உதறினவாறே விட்டுக்கழிகையும் இவை முன்பே கைகண்டபடியாலே, இப்ரகாரத்தாலே கடலைத் தூர்ப்போமென்று பார்த்துக் கடலிலே புக்கு முழுகுமாய்த்து. இம்முழுக்கு தன்னாலே நீர்சுவறும், மணலும் கொண்டுவரலாமென்றாய்த்து நினைவு. (தாம்) கடலிலே நீர் சுவறுவதும் மணல் தொற்றுவதும் தம்முடம்பிலே என்றறியாதாய்த்து

மாகவும் போராமையாலே) என்றது போராதிருக்கச் செய்தேயும் என்றபடி. ஒரு திரளுக்கும் விஷயம் போராதிருக்க வேறே சிலர் வந்து பற்றுகிறதுக்கு ஹேதுவேதென்ன அருளிச்செய்கிறார் (அவகாஹ்யார்ணவமித்யாதி). ஆகையாலே கடல் தூர்ப்புண்ணு மென்றபடி.

---

‡ (பா) ஊர்ந்து.

அடிமையில் த்வரையாலே. தாழ்வுபட்ட கார்யமடங்கத் தங்களாலே தலைக்கட்டுகிறதாக அபிமாநித்துத் திரிகிறபடியாலே "தாம்" என்னவுமாம். (புரண்டிட்டோடி) புக்க மலைகளுக்கு § நொய் மணல்புக்குச் சொரிந்துகொண்டு வருகிறபடி போராதென்று பார்த்து மணலிலே புரண்டோடித் திரியாநிற்குமாய்த்து. உள்ளமணலும் வழியிலே உதிரும்படியாக ஓட இடையிலே நின்றவர்கள் இவற்றின் த்வரையைக் கண்டு ஏன்தான் இத்தனை || வேகம் என்றால் :—பெருமாளுக்குப் பகலமுது லங்கையில் வடக்குவாசலில் விடுவித்ததாயிருக்கும்; உங்களுக்கு த்வரையற்றிருந்ததீ!" என்னுமாய்த்து. ருசியானது தந்தாமளவைப் பார்க்கவொட்டாதிறே.

(தரங்கநீர் அடைக்கலுற்ற) திரையையுடைத்தாய்க் கிளர்ந்திருந்துள்ள கடலை அடைக்கையிலே சமைந்த. (உற்ற) கடல் அடைக்கிறார்கள் தாங்களாய், முதலிகளும் தங்களுக்கு எடுத்து கைநீட்டுகிறவர்களாய்த்து இவற்றினுடைய அபிமாநம். (சலமிலாவணிலும் போலேன்) இவற்றினுடைய வ்யாபாரம் அங்குத்தைக்குக் கிஞ்சித்காரமாய்ப் பலிப்பதொன்றில்லையாகில் இது அடிமையாகிறபடியெங்ஙனே? என்னில்; அடிமைகொள்ளுகிறவனுக்கு இவற்றின் பாவஶுத்தியே அமையுமென்கை. சலமிலாமையாவது—"கடல் தூர்ப்புண்டு பெருமாள் அக்கரைப்பட்டாராகவல்லரே!" என்கிற பாவஶுத்தியில் புரையற்றிக்கை. சலம்—வ்யாஜம், சலிப்பு; இலா—இல்லாமை; நின்றநிலை பேராதே நிற்கை. ஶாஸ்த்ரவஶ்யதையுமின்றிக்கே வர்ணாஶ்ரமநியமமுமின்றிக்கே, ஹஸ்தபாதாதிகரணமுமின்றியிலே இருக்கிற திர்யக்ஸாமாந்யமாத்ரமான இவை,

---

"சலம்" என்று வ்யாஜமாய், அத்தாலே அஹ்ருதயமென்றபடியாய், அதின்றிக்கே இருக்கையாவது—பாவத்தில் புரையற்றிருக்கை. அதவா, "சலம்" என்றதுக்கு அர்த்தாந்தரம் (சலம்—வ்யாஜம் என்று). இங்ஙனேயாகவுமாம். மித்ரகார்யபுத்த்யா செய்கிற முதலிகளைப் போலன்றிக்கே நிருபாதிகமாயிருக்கை. (159a) "मित्रकार्यं कृतमिदं भवद्भिर्वानरोत्तमाः" (மித்ரகார்யம் க்ருதமிதம் பவத்பிர் வாநரோத்தமா:) என்றாரிறே பெருமாள்.

---

§ நேர. || வியக்கம்.

குளிப்பது ஓடுவது புரளுவதாகிற இவற்றினுடைய பாவமும் எனக்கு இல்லையென்று, "குளித்து.மூன்றனலை—ஓளித்திட்டேன்" என்கிறார். அவாப்தஸமஸ்தகாமனுக்கு எதிர்த்தலையில் பாவஶுத்தியொழிய அவனுக்கு வேண்டுவதொன்றில்லை, இவனால் செய்யலாவதுமொன்றில்லை, நமக்குள்ள ஜ்ஞாநஶக்திகளைக்கொண்டு பூர்ணனுக்கு நாமொன்று செய்கையாவது என்னென்று கைவாங்குமவர்கள் பாக்யஹீநர், அந்த பூர்த்திதான் நாமிட்டதுகொண்டு த்ருப்தனாகைக் குறுப்பென்று ஶுத்தபாவராய் மேல்விழுகைக்குறுப்பாம் பாக்யவான்களுக்கு; இப்பாவஶுத்திதான் ஒருவர்க்கும் கிடையாமையாலே எல்லார்க்கும் செய்யலாவதொன்றென்னவொண்ணாது. ஆக அணில்களுக்குள்ள ஆநுகூல்யமும் எனக்கில்லை என்கிறார்

(மரங்கள்போல்வலியநெஞ்சம் வஞ்சனேன்) இவ்விஷயத்தில் தம் நெஞ்சில் நெகிழ்ச்சியில்லாதபடிக்கு த்ருஷ்டாந்தம் சொல்லுகிறார். "இரும்புபோல் வலிய நெஞ்சம்" என்றவர் அதுக்குமவ்வருகே ஒருவன்மை சொல்லுகைக்காக "மரங்கள்போல் வலிய நெஞ்சம்" என்கிறார். அக்நியிலேயிட்டு உருக்கி நினைத்தகார்யம் கொள்ளலாம் இரும்பு; இத்தை நெருப்பிலேயிட்டால் கரிந்துபோய் முன்பு நின்றநிலையும் கெடுமித்தனையிறே. (வஞ்சனேன்) இப்படி நெஞ்சு திண்ணியதாக இருக்கச்செய்தே இது த்ரவத்ரவ்யமோவென்று தேவரீரும் ப்ரமிக்கும்படி பாவித்துக் காட்டாநிற்பன். அகவாயில் நினைவு ஒன்றாயிருக்க "இவனத்தனை பகவத்ப்ரேமமுடையாரில்லை" என்று ப்ரமிக்கும்படி மறைத்து வர்த்திப்பன். "இறையிறையுருகும் வண்ணம்" என்று கீழ்சொன்னத்தை அநுஶயிக்கிறார். (நெஞ்சு தன்னாலரங்கனார்க்காட்செய்யாதே) அணில்கள் பக்கலிலும் பாவஶுத்தியேயிறே உள்ளது. அந்நெஞ்சைக்கொண்டு ஸந்நிஹிதனை உன்பக்கலிலே அல்பாநுகூல்யமும் பண்ணாதே. இந்த பாவஶுத்தி மாத்ரத்தையே பரிபூர்ண சேஷவ்ருத்தியாகக்கொள்ளும் பகவதபிப்ராயத்தாலே "ஆள்செய்யாதே" என்கிறார். (அளியத்தேன்) (62) "**अहं सर्वं करिष्यामि**" (அஹம் ஸர்வம் கரிஷ்யாமி) என்னும் இளைய பெருமாளைப்போலே ஸர்வவித கைங்கர்யங்களுக்கும் அர்ஹமான அருமந்தவஸ்துகிடீர் இது. (அயர்க்கின்றேனே) விஸ்மரித்து அநர்த்தப்பட்டுப்போவதே! இவ்விஷயம் ஸந்நிஹிதமல்லாமையாலே

யாதல், இத்தலையில் யோக்யதை இல்லாமையாலேயாதலன்றிறே; * "மறந்தேனுன்னை முன்னம்" என்கிறபடியே விஸ்ம்ருதியாலேயிறே அநர்த்தப்பட்டது. † (சலமிலாமரங்கள்போல் என்னவுமாம்; மரங்கள் போலே சலமிலாவென்னவுமாம். மரத்தை ஓர் ஆயுதத்தாலே சலிப்பிக்கவுமாம், நெஞ்சை ஒன்றாலும் சலிப்பிக்கவொண்ணாது என்றபடி.) 27.

(விஸ்ம்ருதியாலேயிறே அநர்த்தப்பட்டது) என்றவிடத்திலே, (159b) "विपदो नैव विपदः संपदो नैव संपदः। विपद्विस्मरणं विष्णोः संपत्तस्यैव संस्मृतिः॥" (விபதோ நைவ விபத: ஸம்பதோ நைவ ஸம்பத: । விபத்விஸ்மரணம் விஷ்ணோ: ஸம்பத்தஸ்யைவ ஸம்ஸ்ம்ருதி: ॥) என்றது அநுஸந்தேயம். 27.

சின்ன அரு:—இருபத்தேழாம் பாட்டு. (உபாத்யாயர் கசையாவது) உபாத்யாயர் கசைகொண்டுவா என்றால் அது ஒருவன் எடுக்கலாயிருக்கச் செய்தேயும் அவன் முகோல்லாஸார்த்தமாக எல்லாரும் தொட்டுக்கொடுவருவர்கள். திர்யக்குகளுக்கு ஸ்வரூபஜ்ஞாநம் கூடுமோவென்ன அருளிச்செய்கிறார் (ஸ்வரூபஜ்ஞாநமித்யாதி). மற்றத்திரளும் வந்து இப்படி கைப்பற்றாக வாங்கவேண்டுவானென்னென்ன (அவகாஹயேத்யாதி). அபக்தங்களாயிருக்க பக்தங்கள் போலே செய்யக்கூடுமோவென்ன (ருசியானதித்யாதி). (சலமிலா) அடைக்கை பிரயோஜநமொழிய வேறுவ்யாஜமில்லை என்னுதல்; வேறு ப்ரயோஜநமில்லை என்றபடி. அன்றிக்கே, சலமிலா—நின்ற நிலையில் சலியாமையென்றாய், பேராமலென்னுதல். இத்தை அருளுகிறார் (நின்றநிலையித்யாதி). இத்தால் பலிதத்தை ஸ்வாபதேசமாக அருளுகிறார் (அவாப்தஸமஸ்தேத்யாதி). ஆனால் இவ்விஷயத்தில் நின்றும் கைவாங்குமத்தனையோவென்ன (நமக்குள்ள ஜ்ஞாநேத்யாதி வாக்யத்வயத்தாலே). "அணிலம் போலேன்" என்கைக்கு அணில் செய்தது இது செய்யுமோவென்ன, (இப்பாவஶுத்தியித்யாதி). (அநுசயிக்கை) அநுதபிக்கை; நெஞ்சாலே செய்கை வ்ருத்தியோவென்ன (இப்பாவஶுத்தி மாத்ரேத்யாதி). 27.

---

* பெரிய திருமொழி (6-2-2). † குண்டலிதம் அதிகம்,

28. உம்பராலறி யலாகா வொளியுளார் ஆனைக்காகிச்
செம்புலா லுண்டுவாழும் முதலைமேல்சீறி வந்தார்
நம்பரமாயதுண்டே நாய்களோம் சிறுமையோரா
எம்பிராற் காட்செய்யாதே யென் செய்வான் தோன்றினேனே.

பதவுரை :—உம்பரால் (ப்ரஹ்மாதி) தேவர்களாலும், அறியல் ஆகா—(இப்படிப்பட்டதென்று அளவிட்டு) அறிய வொண்ணாத, ஒளி உளார்—தேஜோமயமான பரமபதத்திலுள்ள எம்பெருமான், ஆனைக்காகி—கஜேந்த்ராழ்வானுக்காக, செம் புலால்—சிவந்த மாம் ஸத்தை, உண்டு வாழும்—சாப்பிட்டு வாழுப்படியான, முதலை மேல் சீறி—முதலை மேலே கோபித்து, வந்தார்—(மடுவின் கரைக்கு) வந்தருளினார் ; நம் பரம் ஆயது உண்டே—(இப்படி ஆச்ரித பக்ஷபாதியாய் ரக்ஷிக்குமவனிருக்க) நம்முடைய ரக்ஷணத்தில் நமக்குப் பாரமானதுண்டோ ? நாய்களோம்—நாய்போல் நிஹீனரான நம்முடைய, சிறுமை ஓரா—குற்றத்தில் கண்வையாதே, எம் பிராற்கு—எம்பெருமானுக்கு, ஆள் செய்யாதே—அடிமை செய்யப்பெறாமல், என் செய்வான்—எதுக்காக, தோன்றினேன்—பிறந்தேன் ?

அவ :—இருபத்தெட்டாம் பாட்டு. (உம்பரால்) அணில்கள் திர்யக்காய்வைத்து நமக்குக் கிஞ்சித்கரிக்க உத்யோகித்த பாவஶுத்தி உமக்கில்லையாகில், ஸ்ரீகஜேந்த்ராழ்வான் பொய்கையிலே புக்கு இடர்பட்டு நாம் சென்று தனக்குதவக்கடவதாக நினைத்ததொரு நினைவுண்டு, அதுதான் உமக்குண்டோவென்ன ; அதுவுமில்லை என்கிறார்,

வ்யா :—(உம்பரித்யாதி) ப்ரஹ்மாதிகளால் அறியவொண்ணாத ஒளியுண்டு—ஸ்ரீவைகுண்டம் ; அத்தை வாஸஸ்தாநமாகவுடையவர். (160) "अथ यदतः परो दिवो ज्योतिर्दीप्यते" (அத யதத: பரோ திவோ ஜ்யோதிர் தீப்யதே) என்றும், (161) "अत्यर्कानलदीप्तं तत्स्थानं विष्णोर्महात्मनः" (அத்யர்க்காநலதீப்தம் தத்ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மந:) என்னக்கடவதிறே. ஜ்ஞாநாதிகராலும் (162) "ईश्वरोऽहं" (ஈஶ்வரோஹம்) என்றிருப்பார்க்கு நிலமன்றே பரமபதம் ; ப்ராபிக்க முடியாமையே அன்று, அறியவும் முடியாதென்கை. (163)

அரு:—இருபத்தெட்டாம்பாட்டு. (உம்பராலித்யாதி). "அறியலாகா" என்றதுக்கு இரண்டுதாத்பர்யம்; இவ்விரண்டையு மருளிச்

" यन्नदेवा न मुनयो न चाहं न च शङ्करः। जानन्ति परमेशस्य तद्विष्णोः परमं पदं॥" (யந்நதேவா ந முநயோ ந சாஹம் ந ச ஶங்கர:। ஜாநந்தி பரமேஶஸ்ய தத்விஷ்ணோ: பரமம் பதம்॥). * கலங்காப்பெருநகரத்திலே நித்யஸூரிகளை அநுபவிப்பித்திருக்கிறவர் கிடீர் ஸம்ஸாரத்திலே ஆர்த்தரக்ஷணத்துக்காக வந்தார். (ஆனைக்காகி) இப்படி கரைபுரண்ட மேன்மையை உடையவன்றான் பதறிவந்து கார்யம் செய்தது ஒருபிராட்டி (திருவடி) திருவநந்தாழ்வான்போல்வார்க்கோ வென்னில்; ஒரு திர்யக்குக்காகக் கிடீர். இடர்பட்ட அதினளவேது, உதவினவன் அளவேது என்கிறார். ஆஶ்ரிதர் ஒருதலையானால் தன் மேன்மை பார்த்தல், அவர்களுடைய சிறுமை பார்த்தல் செய்யுமவனன்றிக்கே, அவர்கள்பக்கல் பார்ப்பது அத்தலையில் ஆபத்தும் தன்னோட்டை ஸம்பந்தமுமேயாய்த்து. ஆஶ்ரிதர் சிறுமை † பார்த்தொழிந்தால் தன்சிற்றத்துக்கு நேர்நிற்க வல்லதொன்றுண்டோ.

சீறிவந்தது ஆர்மேலே என்னில்; (செம்புலானுண்டுவாழும் முதலைமேல்) தன்னிலும் க்ஷுத்ரமாயிருப்பதொரு நீர்ப்புழுவை பக்ஷ்யமாகக்கொண்டு, அத்தாலே ‡ வீற்றிருந்தேழுலகும் தனிக்கோல்செல்ல இருப்பாரைப்போல பூர்ணம் மந்யமாநமாய் இருப்பதொரு நீர்ப்புழுவை இலக்காகக்கிடீர் வந்தது. (164) " परावरेशं शरणं व्रजध्वं असुरार्दनं" (பராவரேஶம் ஶரணம் வ்ரஜத்வம் அஸுரார்த்தநம்) என்கிறபடியே ப்ரஹ்மாதிகள் போக்கற்று ஶரணம்புக, ஹிரண்யராவணாதிகளை அழியச்செய்யுமவர் கிடீர் ஒரு க்ஷுத்ர பதார்த்தத்தை இலக்காகக்கொண்டு அரைகுலையத்தலைகுலைய வந்தார். (165) " क्रोधमाहारयत्तीव्रं" (க்ரோதமாஹாரயத் தீவ்ரம்) (166) " अथ रामो महातेजाः" (அத ராமோ மஹாதேஜா:) இத்யாதிப்படியே ஆச்ரயத்திலில்லாததொன்றை ஏறிட்டுக்கொண்டாய்த்து வந்தது. தம்மளவில் நித்யம் ப்ரஶாந்தாத்மாவாயிருப்பர்; ஆஶ்ரித பரிபவத்தில் வந்தால் (167) " कोपस्य वशमेयिवान्" (கோபஸ்ய வஶமேயிவாந்)

செய்கிறார், (ஜ்ஞாநாதிகராணுமித்யாதி வாக்யத்வயத்தாலே). முந்தினது — அஹங்காரிகளானவர்கள் அறியுமது அவத்யமாகையாலே நிஷேதிக்கையிலே தாத்பர்யம்; இரண்டாவது ஶக்யநிஷேதம்.

---

† (பா) பாராதொழிந்தால். ‡ திருவாய் (4-5-1).

என்கிறபடியே க்ரோதமிட்ட வழக்காயிருப்பர். §"கொடியவாய் விலங்கினுயிர் மலங்கக்கொண்ட சீற்றமொன்றுண்டு" என்று ஆஶ்ரிதர் தங்களுக்குத் தஞ்சமாக நினைத்திருப்பதொன்றிறே இது. (வந்தார்) இருந்தவிடத்தே இருந்து ஸங்கல்பத்தாலே செய்யலாயிருக்க மடுவின் கரையிலே அரைகுலையத்தலைகுலையவந்தாராய்த்து. ஜகதுபஸம்ஹாரமாகிலிறே ஸங்கல்பத்தாலே செய்யலாவது; ஆச்ரித விரோதிகளை அழியச்செய்யுமிடத்துக் கைத்தொடராய்ச் செய்யாதவன்று சீற்றம் மாறமாட்டார்; அற்றை வரவு தமக்கு உதவினாற்போலே இருக்கிறதாய்த்து இவர்க்கு. முதலையின வாயிலகப்பட்டார் தாம் என்று தோற்றியிருக்கும்படியாக, §"கொடியவாய் விலங்கு" என்னாநிறே ஒருவர். ஆஶ்ரிதரிலே ஒருவர்க்கு உதவினது தந்தாமுக்கு உதவினதென்று இராதவன்று நமக்கு பகவத்ஸம்பந்தமில்லையென்றிருக்கவாய்த்து அடுப்பது.

(நம்பரமாயதுண்டே) இப்படி ஆஶ்ரிதவிஷயத்தில் பக்ஷபாதியாய் ரக்ஷிக்குமவனை பின்பு, நம்முடைய ரக்ஷணத்தில் நமக்கொரு பரமுண்டோ. தன் மேன்மைபார்த்தல், நம் சிறுமைபார்த்தல் நம்முடைய பாபத்தின் கனத்தாலே சீறி, சிலநாள் அநுபவித்தால் பின்பு செய்கிறோமென்று ஆறியிருக்குமவனாதலாய் நம் காரியத்துக்கு நாம் கடவோமாகிறோமோ. (நாய்களோம்) அவ்வானை ஸநகாதிகளுடைய ஸ்தாநத்திலேயாம்படியிறே நம்முடைய தன்மை. திறந்த வாசலெல்லாம் நுழைந்தாலும் நம்மைக் கொள்வாரில்லாத புகலறுதியை உடையோம், வளர்ந்தவனுக்கும் தொட்டால் குளிக்க வேண்டும்படியான தண்மையையுடைய பதார்த்தர். (சிறுமையோரா வெம்பிரார்க்கு) எத்தனையேனும் தண்ணியோமானாலும் தண்மையில் கண்ணில்லாதவர்க்கு. தோஷதர்ஶநத்தில் அவிஜ்ஞாதாவாய் குணதர்ஶநதித்ல் ஸஹஸ்ராம்ஶுவாயிருப்பர். (168) "यस्सर्वज्ञः सर्ववित्" (யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்) என்று ஓதப்படுகிறவனுக்கு அவிஜ்ஞாத்ருத்வமாவது:— இத்தலையில்தோஷம்கண்டு பொறுத்து உபகரித்தானாயிராதொழிகை.

"நின்றார்" என்னாதே "வந்தார்" என்றதுக்குத் தாத்பர்யம் (அற்றைவரவித்யாதி). "நாய்களோம்" என்றதுக்கு நிஹீநதையிலே

§ பெரிய திருமொழி (5-8-3).

(எம்பிராற்காட்செய்யாதே) தோஷம்பாராதே ஆபத்தே ஹேதுவாக ரக்ஷிக்கிறது வகுத்தவிஷயமாகையாலே. வகுத்தசேஷியுமாய் உபகாரகனுமாயிருக்குமவனுக்கு அடிமை செய்கையிறே ப்ராப்தம், அது செய்யாதே. எங்கள் கார்யம் தமக்கே பரமாக ஏறிட்டுக்கொண்டால் நம்முடைய கரணங்களுக்கு ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியிலே அந்வயிக்கையிறே ப்ராப்தம்.

(என்செய்வான் தோன்றினேனே) வ்யர்த்தஜந்மாவானேன். (107) "**सृष्टस्त्वं वनवासाय**" (ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய) என்கிறபடியே ஜந்மப்ரயோஜநம் அடிமையானால் அதுக்கு அசலான என் ஜந்மம் வ்யர்த்தமேயிறே. "பிறந்தேன்" என்னாதே, "தோன்றினேன்" என்றது (62) "**अहं सर्वं करिष्यामि**" (அஹம் ஸர்வம் கரிஷ்யாமி) என்ற இளையபெருமாள் பிறவி போலேயாகிலிறே பிறந்தேனென்னலாவது; அதில்லாமையாலே "தோன்றினேன்" என்கிறார். 28.

---

29. ஊரிலேன் காணியில்லை உறவு மற்றொருவரில்லை
பாரில் நின்பாதமூலம் பற்றிலேன் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனே கதறுகின்றேன்
ஆருளர் களைகணம்மா அரங்கமா நகருளானே.

நோக்காகத் தாத்பர்யாந்தரம் (திறந்தவாசலித்யாதி). நிஹீநதையினுடைய உபபாதநம் (வளர்த்தவனுக்கித்யாதி). "பிரான்" என்றதுக்குத் தாத்பர்யம் இரண்டு. 28.

சின்ன அரு :— இருபத்தெட்டாம் பாட்டு. இப்படி ரக்ஷிக்கைக்கு ஹேதுவேதென்ன, (ஆஸ்ரிதர் ஒருதலையித்யாதி). சிறுமை பார்த்து ஆபத்தில் உதவாதிருந்தால் வரும் விரோதமேதென்ன அருளுகிறார் (ஆச்ரிதர் சிறுமையித்யாதி). "பார்த்தொழிந்தால்" என்றது முழுச்சொல்லாய், பார்த்தாலென்றபடி. (நேர்நிற்கவல்லவர்) என்றது சீற்றத்துக்கு விஷயம் ஆஸ்ரிதவிரோதி ஒழிய இல்லாமையாலே சீற்றம் குமரிருக்கும். (புலால்) மாம்ஸம். சீறிவந்தாரென்று ஈடுபடுகைக்கு கோபம் உத்தேஸ்யமோவென்ன அருளுகிறார் (கொடியவாயித்யாதி). 28.

பதவுரை :—ஊர் இலேன்–தேவரீர் நித்யவாஸம் பண்ணப்பெறும் திருப்பதிகளிலே பிறக்கப்பெற்றிலேன் ; காணி இல்லை — (திருப் பல்லாண்டு பாடுகை முதலிய கைங்கர்யங்களுக்காக விடப்பட்ட) காணியாட்சியும் எனக்கில்லை ; உறவு இல்லை—பந்துக்களும் இல்லை ; மற்று ஒருவரும் இல்லை—வேறொருவரும் எனக்குக் கிடையாது ; பாரில் — இப்பூமியிலே, நின் பாத மூலம்—(புகலற்றவர்களுக்குத் தஞ்சமான) உன் திருவடிகளையும், பற்றிலேன்—(சரணாகப்) பற்றாத வனாயிராநின்றேன் ; பரம மூர்த்தி—எல்லாருக்கும் சேஷியானவனே !, கார் ஒளி வண்ணனே—கார் மேகம்போன்ற கருநிறத்தையுடைய வனே !, கண்ணனே—(ஸௌலப்யம் முதலிய குணங்களை உடைய) கிருஷ்ணனே !, கதறுகின்றேன்—கதறிக் கூப்பிடாநின்றேன் ; அம்மா —என் ஸ்வாமியே !, அரங்கமா நகருளானே—, களை கண் ஆர் உளர்—(தேவரீரை யொழிய வேறு) ரக்ஷகர் யார் இருக்கிறார் ?

அவ :—இருபத்தொன்பதாம் பாட்டு. (ஊரிலேன்) ஆனை இடர் பட்டபோது, அது தனக்குதவுகைக்காக நினைத்த நினைவு உமக்கில்லை யாகில் ஸ்ரீஸாளக்ராமம் திருவயோத்யை கோயில் முதலாக நாம் உகந்தருளின நிலங்களில் ஒருவனுக்கு ஜந்மாதிகளுண்டானால் அவனை நமக்கு ரக்ஷித்தே தீரவேணும், அங்ஙனே இருப்பன சில வுண்டோவென்னில் ; அவையுமெனக்கில்லை என்கிறார்.

வ்யா :—(ஊரிலேன்) இங்கு "ஊர்" என்று இவர் நினைக்கிறது ஸதாபகவத்ஸந்நிதியுண்டான ஸ்ரீஸாளக்ராமமென்ன, அவதார ஸ்தலமான திருவயோத்யாதிகளென்ன, கோயில் முதலாயிருந் துள்ள திருப்பதிகளென்ன, இவற்றையாய்த்து. "ஊர்" என்கிற ஸாமாந்யவாசி ஶப்தம் இவ்விசேஷங்களைக்காட்டுமோவென்னில் ; சேதநரிலே ஒருகுருச்சியில் பிறவாதாரில்லையிறே ; அவைதான் அத்ருஷ்டஹேதுவென்கைக்கு ஒரு ப்ரமாணமுமில்லை ; இங்கு

அரு :—இருபத்தொன்பதாம் பாட்டு. (ஊரிலேன்) "பாரில்" என்றதுக்கு உன் விஷயீகாரத்துக்கு யோக்யதையில்லாத ஸம்ஸாரத் திலே என்று ஒரு தாத்பர்யத்தை வலித்திப்பித்து, அன்றிக்கே, "ஊரி லேன்" இத்யாதியாலே பற்றாசில்லாமையைச் சொன்னவநந்தரம் "பாரில்" என்று விஶேஷித்ததற்குத் தாத்பர்யாந்தரம் (ஒருபற்று சித்யாதி). இப்போது பற்றுவிடில் க்ரமத்திலே கொள்ளுகிறோ

உபாயசூந்யதையைச் சொல்லிப்போருகிற ப்ரகரணத்தோடு சேர வேண்டுகையாலே இச்சப்தம் இவ்விசேஷங்களையே சொல்லிற்றாகக் கடவது. நாம் அபிமாநித்திருந்த எல்லைக்குள்ளே பிறந்தானென்று தேவரீர்க்குப் பற்றாசு பிடிக்கலாவதொரு தேசத்தில் பிறக்கப்பெற்றிலேன். தேசவாஸமாத்ரமே ஆத்மோத்தாரகமென்கைக்கு ப்ரமாணமென்னென்னில்; (45) **"देशोयं सर्वकामधुक्"** (தேசோயம் ஸர்வ காமதுக்), (169, **"भवद्विषयवासिनः"** (பவத்விஷயவாஸிந:), (170) **"तिर्यग्योनिगताश्चापि सर्वे राममनुव्रताः"** (திர்யக்யோநிகதாஶ்சாபி ஸர்வே ராமமநுவ்ரதா:) என்றும் சொல்லக்கடவதிறே. (காணியில்லை) அப்படி அத்தேசங்களில் ஜந்மமில்லையாகில் ஏதேனுமோர் உபாதியாலே அவ்வோவிடங்களில் க்ஷேத்ரஸ்பர்சமுண்டாகக்கூடும், அது உண்டோ என்னில்; அதுவுமில்லை என்கிறார். அதாவது:—தேஹயாத்ராசேஷமாகத் திருப்பல்லாண்டு பாடுகை முதலான நிமித்தங்களிலே அந்வயித்தல், * "திருநந்தநவனம்" என்றாப்போலே சிலவுண்டாதல், தாநத்தாலும் விலையாலுமுண்டாய் அவ்வூரிலே சென்று காணியாளவேண்டும்படியான ஸ்பர்சமுண்டாயிருக்கை.

அவையொன்றுமில்லையாகில் அவ்வூரிலுள்ளாரோடே ஒரு கொள்கொடையால் வரும் ஸம்பந்தமாதல், மந்த்ரஸம்பந்தமாதல் உண்டோவென்னில்; (உறவுமற்றொருவரில்லை) இவையின்றிக்கே ஒழிந்தால் கண்பழகி இருப்பாரொரு பந்துக்களுண்டோ என்னில்; அதுவுமில்லை என்கிறார். ஆனால் உமக்கு வாஸமெங்கேயென்ன; (பாரில்) ஒரு பற்றாசு பெறாவிடில் தரிக்கவொண்ணாதபடி அநந்தக்லேசபாஜநமான பூமியிலே வாஸம். கலங்காப்பெருநகரிலே இருக்கிறேனோ நிர்ப்பரனாயிருக்கைக்கு. ஒருவர் கூறை எழுவர் உடுக்கிற பயஸ்தாநத்திலே அன்றோ எனக்கு வாஸம். ஆகையால் (நின்பாதமூலம் பற்றிலேன்) ஸர்வப்ரகாரத்தாலும் புகலற்றார்க்குப் புகலான உன் திருவடிகளில் எனக்கு ஓரந்வயமில்லை. (171) **"तमेव शरणं गतः"**

மென்று ஆறியிருக்கவொண்ணாதோவென்ன என்று ஸங்கதியாகக் கடவது. (ஆகையால்) என்றது "ஊரிலேன் " இத்யாதியிலே ஸித்தமான பற்றாசில்லாமையாலே என்றபடி. புகலற்றார்க்குப்

---

* (பா) திருநந்தவனப்புறம்.

(தமேவ ஶரணம் கத:) என்று ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு இலக்கான காகத்துக்கும் கூட புகலிடமாயிறே தேவரீர் திருவடிகளிருப்பது. ஆனால் பின்னை ஒரு வழியாலும் உமக்கொரு நன்மை இல்லையாகில் பின்னை இழக்குமித்தனையன்றோ என்ன; (பரமமூர்த்தி) ஸ்வகதமாக ஒரு உஜ்ஜீவநோபாயமில்லையென்றேனத்தனைபோக்கி உன்பக்கலிலும் இல்லையோ. ஸர்வாதிகனாய், பரமஶேஷியாய் இருக்குமவனல்லையோ. ஶேஷத்வப்ரதிஸம்பந்தியாயிறே ஶேஷித்வம் இருப்பது. இவன் "ஸ்வதந்த்ரோஹம்" என்று ப்ரமித்தவன்றும் இவன் ப்ரதிபத்தியொழிய ஸ்வரூபத்தை மாற்றவொண்ணாதே.

ஸ்வரூபத்தை அழிக்கவொண்ணாதாகில் ஸ்வரூபாநுரூபமான ஸித்திக்குவழியேதென்ன; (காரொளிவண்ணனே) முதலடியிலே ருசிஜநகமாய் ருசிபிறந்தார்க்கு உபாயமுமாயன்றோ உன் வடிவழகிருப்பது. (கண்ணனே) வடிவழகுண்டாலும் உத்துங்கதத்வமன்றோ என்னவொண்ணாதபடி ஸௌலப்யாதி கல்யாணகுணயுக்தனல்லையோ.

பரமஶேஷியாய் விலக்ஷண விக்ரஹோபேதனாய், ஸௌலப்யாதி கல்யாணகுணயுக்தனாயிருக்கிற நீ இருக்க எனக்கு இழக்கவேணுமோ?

புகலான என்றது—உபயாநுஷ்டாநத்துக்கு யோக்யதையில்லாதார்க்கு ஒருபற்றாசை வ்யாஜமாகக்கொண்டு புகலான என்றபடி. பரமமூர்த்தி — பரமஶேஷி; ஸர்வாதிகனாகையாலே பரமஶேஷி என்றபடி. பரமஶேஷி என்றதுகொண்டு ஈச்வரனுடைய உபாயபாவத்தைக் காட்டுமோவென்ன அருளிச்செய்கிறார் (ஶேஷத்வ ப்ரதிஸம்பந்தியாயிறே இத்யாதி). ஆகையாலே ஶேஷத்வ நிர்வஹணத்வாரா உபாயமென்று தாத்பர்யம். ஆனால் ஶேஷத்வத்தை நிர்வஹிக்கும்போது இவன் பக்கலிலும் ப்ரதிபத்தி உண்டாக வேண்டாமோவென்ன அருளிச்செய்கிறார் (இவன் ஸ்வதந்த்ரோஹமித்யாதி).

ஆகவித்தால் அவன்றானறிந்த ஸம்பந்தமே ஹேதுவாக விஷயீகரிக்குமென்றபடி. ஸ்வரூபாநுரூபமான ஸித்திக்கு வழியேதென்னவென்றது-ருசியுண்டாகவேண்டாவோ வென்றபடி.

"வகுத்தசேஷியாவது" இத்யாதிவாக்யத்தில், "காரொளிவண்ணனே கண்ணனே" என்றதுக்குக் கீழருளிச்செய்த ரீதியொழிய ரீத்யந்தரேண தாத்பர்யமென்று கண்டுகொள்வது.

வகுத்தசேஷியாவது, சேஷித்வ ஸம்பந்தமில்லையாகிலும் விடவொண்ணாத வடிவழகையுடையனாவது, இவை இரண்டுமில்லை யாகிலும் விடவொண்ணாத நீர்மையுடையனாவது-எங்களோடே கலந்து பரிமாறுகை. இப்படிப்பட்டதேவரீருள்ளீராக எனக்கு ஓரிழவுண்டோ. (கதறுகின்றேன்) தேவரீருடைய இந்த வைலக்ஷண் யங்களை அநுஸந்தித்து, ஸாதநாநுஷ்டாநம் பண்ணி, பலம் தாழ்த் தாரைப்போலே கூப்பிடா நின்றேன்.

(ஆருளர்களைகண்) நான் இப்படி கூப்பிடாநிற்க தேவரீர் ஆறியிருக்கிறது தேவரீரையொழிய வேறார் ரக்ஷகராக, நான் எனக்கு ரக்ஷகனாகவோ, என்னளவும் புகுரநில்லாத பிறர் எனக்கு ரக்ஷகராகவோ? (அம்மா) உடைமை நசித்தால் இழவு உடையவன தன்றோ? (அரங்கமாநகருளானே) உடையவனானாலும் ஸந்நிஹித னல்லனென்றுதான் ஆறியிருக்கிறேனோ. "ஸம்ஸாரத்தில் * நம்மைப் பெற்றவேணுமென்று கூப்பிடுவாருமுண்டோ?" என்னும் நசை யாலேயன்றோ கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது. 29.

---

30. மனத்திலோர் தூய்மையில்லை வாயிலோரின் சொலில்லை
சினத்தினால் செற்றம் நோக்கித் தீவிளிவிளிவன்வாளா
புனத்துழாய் மாலையானே பொன்னிசூழ் திருவரங்கா
எனக்கினிக் கதியென் சொல்லாயென்னையாளுடையகோவே.

பதவுரை:—புனம் துழாய்—தன்னிலத்திலுள்ளதுபோல் செவ்வி தான திருத்துழாயை, மாலையானே—மாலையாக உடையவனே!, பொன்னி சூழ்—காவேரியாலே சூழப்பட்ட, திரு அரங்கா—கோயிலில் கண்வளர்ந்தருளுபவனே!, என்னை ஆள் உடைய கோவே—என்னை

சின்ன அரு:—இருபத்தொன்பதாம் பாட்டு. (எழுவருடுக்கை) ஒருவன் பறித்தகூரை அவனுக்குத் தக்காதபடி மற்றையவன் பறித்து இப்படி மேலேமேலே பறிகொடுக்கை. சேஷித்வத்தை இப்போது சொல்லுகிறதென்னென்ன அருளுகிறார் (சேஷித்வப்ரதிஸம்பந்தி யித்யாதி). நான் சேஷபூதனன்றோ என்று தாத்பர்யம். தனக்கு சேஷத்வஜ்ஞாநமுண்டானாலன்றோ பலிப்பதென்ன அருளுகிறார் (இவன் ஸ்வதந்த்ரோஹமித்யாதி). 29.

---

* (பா) நன்மை.

அடிமையாக்கிக்கொண்ட ஸ்வாமியே !, மனத்தில்—என் மநஸ்ஸிலே, ஓர் தூய்மை இல்லை—(காமம், கோபம் முதலியவை அற்ற) தெளிவு சிறிதும் இல்லை; வாயில்—வாயிலே, ஓர் இன் சொல் இல்லை—ஒரு பிரியமான வார்த்தையும் இல்லை; வாளா—ஒரு ப்ரயோஜனமின்றியிலே, சினத்தினால்—கோபத்தாலே, செற்றம் நோக்கி—விரோதம் தோற்றப் பார்த்து, தீ விளி விளிவன்—நெருப்பைப்போல் கொடூரமான வார்த்தைகள் சொல்லாநிற்பேன்; எனக்கு—இப்படிப்பட்ட தோஷங்களே மேலிட்ட) எனக்கு, இனி—உன்னை சரணடைந்த பின், என் கதி—என்ன கதி? சொல்லாய்—அருளிச்செய்யவேணும்.

அவ :—முப்பதாம் பாட்டு. (மனத்தில்) ப்ரவஸித்தமான கர்மாத்யுபாயங்களில்லை; ஸ்த்ரீஶூத்ராதிகாரமான த்யாநஸங்கீர்த்தநாதிகளுமில்லை; அணில்களுக்குண்டான பாவஶுத்தியுமில்லை; ஆனை இடர்பட்டபோது நினைத்த நினைவுமில்லை; புண்யதேஶவாஸத்தால் வரும் நன்மையுமில்லை என்றார்கீழ் அஞ்சுபாட்டாலே. "இந்நன்மையொன்றுமில்லையாகிலும் உம்முடையபக்கல் தீமைகளில்லையாகில் உம்மால் வரும் இழவில்லாமையாலே உம்மை அங்கீகரித்து உம்முடைய கார்யங்களும் செய்கிறோம். அது இருந்தபடியென்?" என்று பெரியபெருமாள் கேட்டருள; "நன்மைகள் ஒன்றுமில்லாதவோபாதி தீமைகளெனக்கில்லாததில்லை" என்கிறார் மேல் அஞ்சு பாட்டாலே. அதில் இப்பாட்டில் ஆநுகூல்யாபாவத்தை அநுபாஷித்துக்கொண்டு தம்முடைய பரஸம்ருத்யஸஹத்வமாகிற அநாத்ம குணத்தைப் பேசுகிறார்.

வ்யா :—(மனத்திலோர் தூய்மையில்லை) (172) "**मनसा तु विशुद्धेन**" (மநஸா து விஶுத்தேந) என்றும், (173) "**ये तु ज्ञानविदः शुद्धचेतसः**" (யே து ஜ்ஞாநவித: ஶுத்தசேதஸ:) என்றும் மனஸ்ஶுத்தியைப் பேற்றுக்குப் பரிகரமாகச் சொல்லக்கடவதிறே; அந்த ஶுத்தி எனக்கில்லை என்கிறார். ஓர் தூய்மையில்லை என்றது :—காமக்ரோதலோபபயத்வேஷாதிகளில் ஒன்று குறைந்து அதில் ஶுத்தனாகப் பெற்றிலேன். கலுஷம் காதாசித்கமாக இல்லையாகவும் பெற்றிலேன். (வாயிலோர் இன்சொலில்லை) மநஸ்ஶுத்தி இல்லையானால் வாயில் ப்ரியவசநங்கள்தானுண்டோவென்னில்; அதுவுமில்லை என்கிறார். ஓர் இன் சொல்லாவது—இதுக்கு முன்பு ஒரு

வரைக் குளிர 'ஏன்' என்றறியேன். குளிர 'ஏன்' என்ருர் திறத்தி லும் அநுகூலமாக ஒருமறுமாற்றம் சொல்லியும் அறியேன்; * "நெடுஞ்சொலால் மறுத்தநீசனேன்" என்கிறபடியே அபிமத விஷயங்களை உகக்கும்போதும் ஶ்ரவணகடுகமாயாய்த்து இருப்பது. ஆக இவ்விரண்டு பதத்தாலும் கீழ் அஞ்சுபாட்டாலும் சொன்ன அர்த்தத்தை அநுபாஷித்தாராய்த்து.

(சினத்தினுல் செற்றம் நோக்கி) இவையில்லாமையேயன்றிக்கே பரஸம்ருத்தி கண்டால் நிர்நிபந்தநமாக அவர்களுக்கு அநர்த்தங் களையே தேடாநிற்பன். நெஞ்சில் கோபத்தாலே ஶாத்ரவம் தோற்றப் பாரா நிற்பபன். செற்றம்—கோபம், சினம் என்றும் கோபம். மிக்க கோபத்தாலே. ஓராளுமொருநோக்கும் நேராகவாய்த்து பார்ப்பது. (தீவிளிவிளிவன்) நோக்கேயன்றியே வாய்விட்டால் கேட்டார்க்கு நெருப்பை வழியவிட்டாற்போலேயாய், குடி பறியும்படி யாகவாய்த்து வாய்விடுவது. (வாளா) இதெல்லாம் செய்கிறதுதான் ஒருகாலைக்கு வெற்றிலை பெறப்பார்க்கவோ? என்னில்; இதுதானே ப்ரயோஜநமாயிருப்பன். ப்ரயோஜநத்துக்கொரு ப்ரயோநம் வேண்டாவிறே. ஸாத்விகர், பரப்ரயோஜநத்தையே ப்ரயோஜநமாக நினைத்திருக்குமாப்போலே பராநர்த்தத்தையே ப்ரயோஜநமாக நினைத்திருப்பன். உம்முடையபடி இதுவாகில் நம்மை நிர்ப்பந்திக்கிற தென்னென்ன; (புனத்துழாய் மாலையானே) நம் தண்மை பார்த்து அகலவொண்ணுதபடி அபேக்ஷாமாத்ரமே ஹேதுவாக ரக்ஷிக்கக் கடவோமென்று ரக்ஷண தர்மத்திலே தீக்ஷித்துத் தனிமாலையிட் டன்ரே தேவரீரிருக்கிறது; ப்ராப்தியாலும் போக்யதையாலும் என்னுல் உன்னை விடப்போமோ. தன்னிலத்தில்போலே திருமார்பிலே செவ்வி பெறும்படியான திருத்துழாய் மாலையையுடையவனே. (பொன்னிசூழ்திருவரங்கா) ரக்ஷகனுய் தூரவிராதே ஸந்நிஹிதனுக வும்பெற்றேன். எத்தனையேனும் தண்ணியர்க்கும் ஆஶ்ரயிக்கும்படி யன்ரே தேவரீர் கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது. இட்ட

அரு:—முப்பதாம் பாட்டு—(மனத்திலோரித்யாதி.) அர்த்தாந் தரம் (செற்றம் கோபமித்யாதி.)

* பெரிய திருமொ (1-6-5).

திருத்துழாய்மாலைக்குப் புறமாலைபோலேயாய்த்து திருப்பொன்னி யோட்டைச் சேர்ந்திருக்கிறபடி.

(எனக்கு) கீழே தண்மையை உபபாதித்தாரிறே. இப்படி தோஷப்ரசுரனான எனக்கு. (இனி) என் தோஷத்தை அநுஸந்தித்து நான் எனக்கு ரக்ஷகனாகை தவிர்ந்து தேவரீர்பக்கலிலே ந்யஸ்த பரனான பின்பு. (கதியென்சொல்லாய்) † போக்கடி சொல்லாய். போக்கடியறச் சூழ்ந்துகொண்டு வைத்து "அவனைச் சொல்லாய்" என்னும்படியிறே ப்ராப்தியில் ஊற்றமிருப்பது. நீர் போக்கடி சொல் லென்ற போதாக நமக்குச் சொல்லவேண்டுகிறதென் என்னில்; (என்னையாளுடைய கோவே) இத்தலையில் ஶேஷத்வமும் அத்தலையில் ஶேஷித்வமும் வ்யவஸ்திதமாயன்றோ இருப்பது, வேறு இதுக்குக் கடவாரார், இது ஆருடைய வஸ்துவாய் நோவுபடுகிறது. 30.

---

31. தவத்துளார் தம்மிலல்லேன் தனம் படைத்தாரிலல்லேன்
உவர்த்த நீர்போல வென்றனுற்றவர்க்கோன்று மல்லேன்
துவர்த்த செவ்வாயினார்க்கே துவக்கறத் துரிசனானேன்
அவத்தமே பிறவிதந்தா யரங்கமா நகருளானே.

பதவுரை :— அரங்கமா நகருளானே!—, தவத்துளார் தம்மில்— தபஸ்ஸை அநுஷ்ப்பவர்களுடன், அல்லேன்—நான் சேர்ந்தவனல்ல; தனம் படைத்தாரில்—(ததீயாராதனத்தின் பொருட்டு) பணம் ஸம்பா தித்தவர்களிலும், அல்லேன்—சேர்ந்தவனல்லேன்; என்றன் உற்ற வர்க்கு—என் பந்துக்களுக்கு, உவர்த்த நீர் போல—உப்புத்தண்ணீர் போலே, ஒன்றும் அல்லேன்—ஒரு பிரயோஜநத்துக்கும் உதவாதவனா யிராநின்றேன்; துவர்த்த செவ்வாயினார்க்கே—சிவந்த அதரத்தை யுடைய ஸ்த்ரீகளுக்கும், துவக்கு அற—ஸம்பந்தம் அறுந்து போம்படி, துரிசன் ஆனேன்—கள்ளனானேன்; (இப்படிப்பட்ட எனக்கு) பிறவி— ஜந்மத்தை, அவத்தமே தந்தாய்—வீணாகவே தந்தருளினாய்.

"என்னையாளுடைய கோவே" என்றத்தைப்பற்ற (ப்ராப்தியி லூற்ற மென்றது.) 30.

சின்ன அரு :—முப்பதாம் பாட்டு. (தீவிளிவிளிவன்) தீதான விளியை—வார்த்தையை, விளிவன். (வாளா) வ்யர்த்தம், நிஷ் ப்ரயோஜநமாக. 30.

---

† (பா) போக்கடியற.

அவ:—முப்பத்தோராம் பாட்டு. (தவத்துளார்) ஶாஸ்த்ரீயமாய் மோக்ஷார்த்தமான விஹிதங்களில் எனக்கோரந்வயமில்லை என்றீர், ஸ்வர்க்கபலார்த்தமாகவாதல், விப்ரலம்பகராய் த்ருஷ்டபலார்த்தமாகவாதல், ஸத்கர்மாதிகளைப் பண்ணிப்போந்தீராகில் அவற்றில் உபாதிகளைப்போக்கி நன்மையிலே மூட்டுகிறோம், அவை தானுண்டோவென்னில்; அவையொன்றுமில்லை, ஸ்வப்ராப்திக்குப் பரிகரமாக தேவரீர் தந்த ஜந்மத்தை, விஷயப்ரவணனாய் ப்ரத்வேஷத்தாலே விநாஶஹேதுவாகத் தந்தீராகக்கொண்டேன் என்கிறார். ஆனால் கீழில் பாட்டோடு இதுக்கு ஸங்கதி என்னென்னில்; பரஸம்ருத்யஸஹத்வமேயன்றிக்கே விஷயாந்தர ப்ராவண்யதாலே என் பந்துஜநங்களுக்கும் அசலானேன் என்கிறார்.

வ்யா:—(தவத்துளார் தம்மிலல்லேன்) (174) "**यज्ञेन दानेन तपसाऽनाशकेन**" (யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந) என்று தபஸ்ஸை மோக்ஷார்த்தமாக விதித்ததிறே. முமுக்ஷுக்களாய்த் தபஸ்ஸை அநுஷ்டித்தாரில் கூட்டாகப்பெறுமையன்றிக்கே ஸ்வர்க்காதிப்ரயோஜநாந்தரபரராய் அதுதன்னையே பேணுவாருமுண்டு, அவர்களுக்கும் கூட்டாகப்பெற்றிறேன். இவை இத்தனையுமின்றியிலே ஒழிந்தால் ஒருதபஸ்ஸை ஆரம்பித்து அதில் வைகல்யத்தாலே ப்ராயஶ்சித்திகளானார் தங்களில்தான் கூடப்பெற்றேனோ. ஆக, தபஸ்பர்ஶமுடையார் ஒருவரிலும் கூடப்பெற்றிலேன் என்கிறார். (தனம்படைத்தாரில்லேன்) அர்த்த லாபத்தையும் புருஷார்த்த ஸாதநமாகச் சொல்லக்கடவது விலக்ஷணவிஷயத்தில் வ்யயிக்குமன்று. (174) "**यज्ञेन दानेन**" (யஞ்ஜேந தாநேந) என்றும், (175) "**यज्ञो दानं तपश्चैव पावनानि**" (யஞ்ஜோ தாநம் தபஶ்சைவ பாவநாநி) என்றும், (176) "**तद्दानं सात्त्विकं स्मृतं**" (தத்தாநம் ஸாத்விகம் ஸ்ம்ருதம்) என்றும் சொல்லக்கடவதிறே.

அரு:—முப்பத்தோராம்பாட்டு. (தவத்துளாரித்யாதி). தவத்தோர் தம்மிலல்லேன் என்னாதே, "தவத்துளார்" என்றதுக்குத் தாத்பர்யம் (யஜ்ஞேநேத்யாதி). "தவத்துளார்" என்றது தபஸ்ஸில் கூட்டப்பட்டவர் என்றாய், அத்தாலே கிஞ்சிதந்வயமுடையாரைச் சொல்லுகிறதென்று தாத்பர்யம். 'தவத்துளார் தம்மிலல்லேன்' என்கிற பஹுவசத்தாலே பலித்த தாத்பர்யம் (இவையித்தனையுமித்யாதி).

(177) "यया कया च विधया बह्वन्नं प्राप्नुयात्" (யயா கயா ச விதயா பஹ்வந்நம் ப்ராப்நுயாத்) என்றும் ஸத்விஷயத்திலே வ்யயிக்குமன்று த்ரவ்யார்ஜநத்துக்கு ப்ரகாரநியதியில்லை என்றும் சொல்லிற்றிறே. இம்முகத்தாலே த்ரவ்யார்ஜநம் பண்ணுவாரில் கூட்டல்லேன். திருமங்கையாழ்வார் போல்வார் அநுஷ்டிப்பதும் செய்தார்களிறே. இவையன்றிக்கே ஒழிந்தாலும், (178) "यत्तु प्रत्युपकारार्थं फलमुद्दिश्य वा पुनः" (யத்து ப்ரத்யுபகாரார்த்தம் பலமுத்திஶ்ய வா புந:) என்கிற ராஜஸதாநமாதல், (179) "असत्कृतमवज्ञातं" (அஸத்க்ருதமவஜ்ஞாதம்) என்கிற தாமஸதாநமாதல், க்யாத்யர்த்த தாநமாதல் இவை உண்டோ வென்னில்; அவையொன்றுமில்லை என்கிறார். இவை இரண்டும் இல்லாதாரும் பந்துக்களுக்குறுப்பாய் இருப்பர்களிறே. அதிருந்தபடி யென்னென்னில்; (உவர்த்தநீர்போலவென்றனுற்றவர்க்கொன்று மல்லேன்) உவர்நீரை முகத்திலே ஏறிட்டுக்கொண்டால் அது கண் விழிக்கவொண்ணாதபடி கரிக்குமாப்போலே, என்னை நேர்முகம் பார்க்க வொண்ணாதபடியாய்த்து நான் அவர்கள் திறத்தில் அவத்யபூதனாய் வர்த்தித்தபடி. அவர்ஜநீய பந்துக்கள் என் முகத்தே விழித்தால் அற்றைக்கு ஜீவிக்கமாட்டாதபடியாய்த்து அவர்களுக்கு அவத்ய பூதனாய் வர்த்தித்தபடி. அவர்களுக்கு அப்ரியமே பண்ணுகையாலே ப்ரியவிஷயமாகவும் பெற்றிலேன்; அவர்களுக்கு அஹிதமெண்ணு கையாலே ஹிதைஷியாகவும் பெற்றிலேன்; எனக்கும் அநர்த்தங்களை

இன்னவழியாலே தநம்படைத்தார் என்னாதே, ஸாமாந்யேந சொல்லுவானென்னென்ன; (யயாகயாசேத்யாதி). தநஸம்பாதநம் பண்ணினவனுக்கு ஸாத்விக ராஜஸ தாமஸதாநங்களுண்டாகை யாலே, அதில் ஸாத்விகதாநாபாவத்தை "விலக்ஷண விஷயத்தை" இத்யாதி வாக்யத்தாலே பலிப்பித்து, ராஜஸதாமஸதாநாபாவத்தை அருளிச்செய்கிறார் (இவையின்றிக்கே யொழிந்தாலுமித்யாதி). இவையின்றிக்கே ஒழிந்தாலுமென்றது: ஸாத்விகதாநமும் ததர்த்தமாக த்ரவ்யார்ஜநமுமின்றிக்கே ஒழிந்தாலுமென்றபடி. "என்றனுற்றவர்க்கொன்றுமல்லேன், என்றது எனக்கு மூத்தவர்க்கு ஒன்றுமல்லேனென்றபடி. ப்ரியஹிதகரத்வரூபமான அதிஶயாவஹனல்லன் என்ற இத்தால் பலித்தது அவத்யகரத்வமிறே; அத்தை அருளிச் செய்கிறார் (அவர்களுக்கித்யாதி).

விளைத்துக்கொள்ளுகையாலே தனக்குத் தானுமுளன் என்னுமளவும் பெற்றிலேன் ; அவர்களுக்கு அவத்யபூதனாயே போனேன்.

பந்துக்களுக்காகாதவர்களும் தந்தாமுக்கு அபிமதைகளான ஸ்த்ரீகளுக்காயிருப்பர்களே, அது இருந்தபடியென்னென்னில் ; (துவர்த்தவித்யாதி) அகவாயில் அநாத்மகுணங்களை மறைத்து அதரத்தின் பழுப்பைக்காட்டி அகப்படுத்திக்கொள்ளுமவர்களாய்த்து; இவனும் உள்வாயில் தண்மையறியான், தன்னோடு அவர்களுக்கொரு பந்தமில்லாமையுமறியான் ; இவனும் அவ்வதரத்தின் பழுப்புக் கவ்வருகுபோகமாட்டாதே அகப்படுமாய்த்து ; அகவாயில் அநாத்மகுணங்களை மறைக்கைக்குப் புறம்புள்ளாரோடு இவனுக்குண்டான துவக்கை அறுக்கைக்கும் அதரத்தின் பழுப்பேயாய்த்து அவர்களுக்குப் பரிகரம். புறம்புள்ள ஸகல பந்துக்களையும் விட்டுப் பற்றினவர்களுக்கும் தூர்ப்பரனாய்த் தலைக்கட்டினேன். அதாகிறது :—அவர்கள் பக்கலிலும் அபகாரனாய்ப் போந்தவனாகையாலே அவர்களுக்கும் இவனோட்டை ஸம்பந்தமற வேணுமென்றிருக்கை. தூரிசன்—கள்ளன். (180) "तेन चास्म्यवमानितः" (தேந சாஸ்ம்யவமாநித:) என்று "நீசனை ராவணனுக்கும் ஆகாதானொருவன்" என்று அவன் சொன்னாற் போலே, "தண்மைக்கெல்லையான ஸ்த்ரீகளுக்குமாகாதே அவர்களாலே பஹிஷ்கரிக்கப்பட்டேன் நானொருவன்" என்கிறார்.

ஆனபின்பு (அவத்தமே பிறவிதந்தாய்) தேவரீர் எனக்கு ஜந்மத்தை வ்யர்த்தமே தந்தருளினீராய்ப் பலித்தது. தம்முடைய கர்மமடியாக வந்த அநர்த்தத்தை அத்தலையிலே ஏறிடுவானென்னென்னில் ; கர்மஸ்வரூபத்தையும் ஸ்வஸ்வரூபத்தையும் உள்ளபடி அறிந்தவராகையாலே அருளிச்செய்கிறார். கர்மமாவது :—ஈஶ்வர ஹ்ருதயத்திலே நிக்ரஹரூபேணநின்று பலிப்பதொன்று. ஸகலப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் ஈஶ்வராதீநமாம்படியாய்த்து ஸ்வரூபமிருப்பது ;

"செவ்வாயினார்க்கே" என்கிற சப்தத்திலேயாக்கித் தாத்பர்யம் (தேநசேத்யாதி).

கிஞ்ச ஸம்பந்தத்தாலும் இத்தலையால் வந்த இழவை அத்தலையில் ஏறிடலாமென்று விவக்ஷித்து அதுக்கு த்ருஷ்டாந்தம் (கிணற்றிலித்யாதி.)

கர்மத்தைப் பொறுத்தோமென்னப்போமதொன்று. (181) "ददामि बुद्धियोगं तं" (ததாமி புத்தியோகம் தம்) என்கிறபடியே புத்திப்ரதாநம் பண்ணி நல்வழிபோக்குமிடத்தில் நிவாரகரில்லை; ஆக, இவ்வளவு உணர்ந்த இவர்க்குச் சொல்லலாமிறே. கிணற்றில் விழுந்த ப்ரஜையைக் கண்டு பேசாதேயிருந்தால், "தாய்தள்ளினுள்" என்னக் கடவதிறே. (அரங்கமாநகருளானே) ஶாஸ்த்ரங்களாலே மீட்கவொண்ணாதபடி கர்மபரதந்த்ரராய் விஷயாந்தரப்ரவணராயிருப்பாரை, அழகாலும் ஶீலத்தாலும் மீட்கைக்காகவன்றோ கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது. 31.

---

32. ஆர்த்து வண்டலம்புஞ்சோலை யணி திருவரங்கந்தன்னுள்
கார்த்திரளனையமேனிக் கண்ணனே உன்னைக்காணும்
மார்க்கமொன்றறியமாட்டா மனிசரில்துரிசனாய
மூர்க்கனேன் வந்துநின்றேன் மூர்க்கனேன் மூர்க்கனேனே.

பதவுரை :— வண்டு — வண்டுகள், ஆர்த்து — சப்தம் செய்து கொண்டு, அலம்பும்—அலைந்துகொண்டிருக்கும்படியான, சோலை—சோலைகளாலே, அணி—(ஸம்ஸாரத்துக்கு) ஆபரணம்போலே அழகு பெற்றிருக்கிற, திரு அரங்கம் தன்னுள் — கோயிலினுள்ளே, (கண்வளர்ந்தருளுகிற), கார் திரள் அனைய—கார்மேகத்தையொத்த, மேனி —திருமேனியையுடையவனாய், கண்ணனே—(அடியார்க்கு உடம்பு கொடுக்கும்) கிருஷ்ணனானவனே !, உன்னை காணும் மார்க்கம் ஒன்று

சின்ன அரு :— முப்பத்தோராம் பாட்டு. (விப்ரலம்பகராய்) த்ருஷ்டபலார்த்தமாக அபிசாரகர்மங்களைப் பண்ணுநிற்கச்செய்தேயும் ஹிம்ஸார்த்தமாகப் பண்ணுகிறுனென்று பிறருக்கும் தோற்றுதபடி பண்ணுகை. ந்யாயார்ஜிதமாகத்தேடி வ்யயிக்கையன்றிக்கே அந்யாயார்ஜிதமாகவும்தேடி வ்யயிக்கப்பெற்றிலேன் என்கிறுர் (யயா கயா சேத்யாதி). (இவையின்றியொழிந்தார்) என்றது ந்யாயமாகவும் அந்யாயமாகவும் ஆர்ஜித்து ஸத்விஷயத்தில் வ்யயியாமலிருந்தாலும் அஸத்விஷயத்திலேதான் வ்யயமுண்டோவென்ன, அதுமில்லை என்றபடி. (இவையிரண்டும்) தபஸ்ஸும், தநமும் பந்துக்களுக்கில்லாவிட்டால் உமக்குத்தானுண்டோ என்ன வருளுகிறுர் (எனக்குமித்யாதி). (பேசாதிருக்கை) எடுக்க ப்ரஸங்கியாதிருக்கை. 31.

—உன்னைப் பெறுகைக்கு ஒரு உபாயமும், அறியமாட்டா—அறிய மாட்டாதவனாய், மனிசரில்—மனிதர்களுக்குள், துரிசன் ஆய—கள்வனாய், மூர்க்கனேன்—பிடித்தது விடமாட்டாதே மூடனாகிய நான், வந்து நின்றேன் — (என் அயோக்யதையைப் பாராதே) வந்து நின்றேன்; மூர்க்கனேன் மூர்க்கனேனே—என்னே என்னுடைய மூர்க்கத்தனம்!

அவ :—முப்பத்திரண்டாம் பாட்டு. (ஆர்த்து) நம்பக்கல் விமுகரான ஸம்ஸாரிகளுக்கும்கூட ஆகாதபடி வர்த்தித்த நீர் நம்பக்கல் வந்தபடியென்னென்னில்; ப்ரதிபந்தகாரிகளாயிருப்பார் செய்யுமவற்றுக்கோர் அடைவுண்டோ, என் மௌர்க்க்யத்தாலே வந்தேன் என்கிறார்.

வ்யா :— (ஆர்த்துவண்டலம்பும் சோலை) திருச்சோலையில் மதுவைப் பாநம் பண்ண இழிந்த வண்டுகளானவை, அபிநிவேஶத்தாலே பரிச்சேதித்திழிய அறியாதே இழிந்து கழுத்தேகட்டளையாகப் பருகி, புக்க மது இருந்த விடத்திலிருக்கவொட்டாமையாலே ஆர்த்துக்கொள்ளாநிற்கும். முக்தர் பகவதநுபவஜநிதஹர்ஷத்துக்குப் போக்குவீடாக ஸாமகாநம் பண்ணுமாப்போலே ஒரு தேஶ விசேஷத்திலே பகவதநுபவத்தாலே முக்தர்க்குப் பிறக்கும் விகாரம் திர்யக்குகளுக்கும் பிறக்கும்படியாயாய்த்து கோயிலின் போக்யதை இருப்பது. (182) "गायन्ति केचित् प्रणमन्ति केचित् नृत्यन्ति केचित्" (காயந்தி கேசித் ப்ரணமந்தி கேசித் ந்ருத்யந்தி கேசித்) என்று மதுவநமழித்த முதலிகள், ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டுப் பாடுவார், ஆடுவார், ஒருவரையொருவர் சுமப்பர், ஒருவரையொருவர் பொகடுவார் ஆனார்களிறே; இவர் தம்முடைய ஸத்தையுண்டாகைக்குக் கூப்பிடுகிறார்; இவை ப்ரீதிக்குப் போக்குவீடாகக் கூப்பிடுகின்றன. (வண்டலம்பும் சோலை) மதுபாநம் பண்ண இழிந்தவண்டுகள் மதுவின் மிகுதியாலே ப்ரளயத்தில் அகப்பட்டலைகிற மார்க்கண்டேயனைப்போலேயும், கிண்ணகத்தில் அகப்பட்ட திருச்சோலைபோலேயும், அலையாநிற்குமாய்த்து. அலம்பல்-தளும்பல்.

அரு :—முப்பத்திரண்டாம் பாட்டு. (ஆர்த்தித்யாதி). (ப்ரதிபந்தகாரிகள்) மூர்க்கர். "அலம்பல்" என்று அவகாஹநத்தைச் சொல்லி, அத்தாலே பலித்த தாத்பர்யம் (அலைதல்) என்று.

(அணிதிருவரங்கம் தன்னுள்) ஸம்ஸாரத்துக்கு ஆபரணம் போலேயாய்த்து கோயிலிருப்பது. லீலாவிபூதிக்கு நாயகனொருவ னுண்டேயாகிலும் கோயிலிலே வந்து ஸந்நிஹிதரல்லாதபோது தாலி கட்டாத ஸ்த்ரீகள்போலேயாய்த்து லீலாவிபூதி இருப்பது. (சோலை யணிதிருவரங்கம்) சோலையை ஆபரணமாகவுடைய கோயிலென்னவு மாம். (கார்த்திரளனைய மேனி) மதுவெள்ளத்தைக்கண்டு கடலென்று ப்ரமித்து, மேகஸமூஹங்கள் கழுத்தேகட்டளையாகப் பருகி, நெகிழ்ந்து போகமாட்டாதே அவை உள்ளேபுகுந்து சாய்ந்தாற்போலேயாய்த்து பெரியபெருமாள் கண்வளர்ந்தருளுகிறபடி. வடிவின் கருப்பாலும் குளிர்த்தியாலும், பரோபகாரமே ஸ்வபாவமாயிருக்கையாலும் தனக் கென்ன ஒன்றுவையாமையாலும், மேகத்தை ஒருவகைக்குப் போலி யாகச் சொல்லும்படியாயாய்த்திருப்பது. * "தொக்கமேகப்பல்குழாங் கள்" என்று வடிவுக்கு ஸ்மாரகமாக மேகஸமூஹங்களைச் சொல்லக் கடவதிறே. (கண்ணனே) மேகத்திற்காட்டில் வ்யாவ்ருத்தி சொல்லு கிறது; கடக்கநின்று ஜலத்தை உபகரிக்குமதிறே மேகம்; ஸஜா தீயனாய் வந்துகிட்டித் தன்னையாய்த்து உபகரிப்பது. பெரிய பெருமாளைக் கண்டால் யசோதைப்பிராட்டி வைத்த வெண்ணெயைக் களவுகண்டமுதுசெய்து மூலையடியே திரிந்துவளர்ந்த செருக்குத் தோற்றியாய்த்திருப்பது. † "கொண்டல்வண்ணனைக் கோவலனாய் வெண்ணெயுண்டவாயன்" என்னக்கடவதிறே.

(உன்னைக்காணும் மார்க்கமொன்றறியமாட்டா) உன்னைப்பெறு கைக்குறுப்பாக நீ உபதேசித்துவைத்த, மார்க்கமுண்டு—வழி, அதா கிறது உபாயம்; அவையாகிறன:— கர்மயோகம், தத்ஸாத்யமான

(182 a) "भर्तानामपरं नार्या भूषणं भूषणादपि" (பர்த்தாநாமபரம் நார்யா பூஷணம் பூஷணாதபி) என்கிற ந்யாயத்தாலே விபூதிநாதனை ஈச்வரனன்றோ விபூதிக்கு ஆபரணமென்ன (லீலாவிபூதீத்யாதி). "கார்த்திரளனைய மேனி" என்று ஸாம்யம் சொன்னால், வ்யாவ்ருத்தி சொல்லும்போதும் அவரைச்சொல்லாதே "கண்ணன்" என்பானென் னென்ன (பெரியபெருமாளையித்யாதி). பெரியபெருமாளே க்ருஷ்ண னுகையாலே ஸஜாதீயத்வ ப்ரயுக்தோபகாரிகத்வ ரூபவ்யாவ்ருத்தியும்

---

* திருவாய் (8-5-8). † அமலனாதிபிரான் (10).

ஜ்ஞாநயோகம், உபாயஸாத்யமான பக்தியோகம், அவதாரரஹஸ்யம், புருஷோத்தமவித்யை, அநுக்தமான திருநாமஸங்கீர்த்தநம், புண்ய க்ஷேத்ரவாஸம் இப்படி சேதநபேதத்தோபாதி போருமிறே உபாய பேதமும். இவற்றிலே ஒன்றை அநுஷ்டிக்கமாட்டாமையேயன்றிக்கே அறியவும் மாட்டாதவனாய்த்து. (மனிசரில்) அறிவுக்கடைவில்லாத திர்யக்யோநியாய் இழக்கவுமாமிறே, அறிகைக்கு யோக்யமான மநுஷ்ய ஜந்மத்தைப் பெற்றுவைத்திறே இழக்கிறது. (துரிசனாய) அவர்கள் தாங்கள் நித்யஸூரிகள் கோடியிலேயாம்படி அவர்களுக்கு த்யாஜ்ய னான க்ருத்ரிமன். திர்யக்ஜந்மமாய் அயோக்யனென்று ஆறியிருக் கிறேனல்லேன், மநுஷ்யஜந்மத்தாலுள்ள ப்ரயோஜநம் பெற்றிலேன். (183) "**मानुष्यं प्राप्य**" (மாநுஷ்யம் ப்ராப்ய). உபயவிலக்ஷணனானேன் என்கிறார். துரிசு—களவு.

இப்படியிருக்கிற நீர் என்பக்கல் வருவானென்னென்னில்; (மூர்க்கனேன் வந்துநின்றேன்) என் தண்மைபாராத மூர்க்கனாகை யாலே வந்துகொடுநின்றேன். என் தண்மையுமறிந்து உன் வைலக்ஷண்யத்தையுமறிந்துவைத்து "அயோக்யன்" என்று அகல விறே அடுப்பது; அத்தைச்செய்யாதே வந்துகொடுநின்றேன். தண்ணீர் குடிக்கிற ஊற்றிலே நஞ்சையிடுவாரைப்போலே, விலக்ஷண போக்யமான விஷயத்தைக்கிட்டி அழிந்தேனென்கிறார். "கண்ணன்" என்றது அங்குத்தைக்கு ஆகாதாரில்லையிறே, அத்தையேபற்றி வந்து நின்றேன். (மூர்க்கனேன் மூர்க்கனேனே) இதொரு ‡ மௌர்க்க்யமே என்கிறார். வீப்ஸையால் இரண்டு தலையையும் அநுஸந்தித்து அத் தலைக்கு வந்த அவத்யத்தைப் பார்த்தும் தம்முடைய தண்மையைப் பார்த்தும் அருளிச்செய்கிறார். 32.

பெரியபெருமாளுக்கே என்றபடி. (அநுக்தமான) பகவத்கீதாயாமிதி ஶேஷ:.

அவன் வந்து பக்கலிலே நிற்கைக்கு ஹேது மூர்க்கனாகையாலே என்றருளிச்செய்து, நீ கண்ணனாகையாலே என்று ஹேத்வந்தரம் (கண்ணனென்றதித்யாதி). இந்த பக்ஷத்தில் மூர்க்கனாயிருந்து வைத்து நீ கண்ணனானது கொண்டு, "வந்துநின்றேன்" என்று

‡ (பா) மௌக்த்யமே.

33. மெய்யெல்லாம் போகவிட்டு விரிகுழலாரில்பட்டுப்
போய்யெல்லாம் பொதிந்துகொண்ட போழ்க்கனேன்வந்துநின்றேன்
ஐயனே அரங்கனே உன்னருளென்னுமாசைதன்னால்
பொய்யனேன் வந்துநின்றேன் பொய்யனேன் பொய்யனேனே.

பதவுரை :— ஐயனே !—ஸ்வாமியே !, அரங்கனே !—, மெய் எல்லாம்—மெய்யான (நினைவு, சொல், செயல் முதலிய) எல்லாவற்றையும், விட்டு—கை விட்டு, விரி குழலாரில்—விரிந்த கூந்தலையுடைய ஸ்த்ரீகள் வலையில், பட்டு—அகப்பட்டு, போய் எல்லாம்—பலவிதப் பொய்களையும், பொதிந்து கோண்ட—நிறைத்துக்கொண்டிருக்கிற, போழ்க்கனேன்—போக்கிடமற்ற நான், உன் அருள் என்னும் ஆசை தன்னால்—தேவரீருடைய க்ருபையிலே ஏற்பட்ட ஆசையினாலே, வந்து நின்றேன்—, பொய்யனேன் பொய்யனேன் பொய்யனேன்—(மனம், மொழி, மெய்கள் ஆகிற) மூன்று கரணங்களினாலும் பொய்யனாயிராநின்றேன் ; வந்து நின்றேன்—(எல்லாமறிந்த தேவரீர் திருமுன்பே) வந்து நின்றேன்.

அவ :—முப்பத்து மூன்றாம் பாட்டு. (மெய்யெல்லாம்) இப்படி நன்மைகளுமில்லை, தீமைகளாலும் குறைவில்லை, நான் இங்குத்தைக்கு ஆகாதானொருவனென்கிறார். அநந்தரம், கீழ்ப்பாட்டோடு இப்பாட்டுக்கு ஸங்கதியென்னென்னில் ; "மூர்க்கனேன் வந்து நின்றேன்" என்றீர். அந்த மௌர்க்க்யம் ஹ்ருதயத்திலே பட்டுச் சொல்லுகிறீரோ என்னில் ; அதுவும் பொய்யென்கிறார். ஆனால் நம்மைக் கிட்டுகைக்கொரு உபாயமில்லையாகில் மேல் போக்கென் என்று கேட்க, தேவரீர் திருவடிகளோட்டை ஸம்பந்தமும் க்ருபையுமொழிய வேறுண்டோவென்று சரமோபாயமான க்ருபையை வெளியிடுகிறார்.

வ்யா :— (மெய்யெல்லாம்) மெய்யாகிறது :— பூதஹிதமாய் யதார்த்தமாயிருக்கும் அர்த்தமாய்த்து. கீழ்ச்சொன்ன நன்மைக

நிர்வாஹம். "மூர்க்கனேன்" என்றதின் அநுபாஷணம் "மூர்க்கனேன்" என்றது. 32.

சின்ன அரு:—முப்பத்திரண்டாம் பாட்டு. (அலம்பல்) கழுவலும், அலைச்சலும். ஆபரணமானபடி எப்படியென்ன அருளுகிறார் (லீலா விபூதீத்யாதி). 32.

ளெல்லாவற்றுக்கும் ப்ரதமசிலையாயாய்த்து ஸத்யம் தானிருப்பது. (184) "सत्यमूलमिदं सर्वं" (ஸத்யமூலமிதம் ஸர்வம்) என்னக்கடவதிறே. ஜந்ம வ்ருத்தத்தால் குறையநின்ற கைஶிகன், "பகவத் விஷயத்தில் அவகாஹித்தாரில் பொய்சொல்லக்கடவாரில்லைகாண்!" என்று தன்னை பக்ஷிக்கநினைத்த ப்ரஹ்மராக்ஷஸனைக்குறித்துச் சொன்னானிறே; பகவத்விஷயத்திலே நாலடிவரநிற்கையாலே. (எல்லாம்) இவைதான் பலவகையாயாய்த்து இருப்பது. மநஸ்ஸால் நினைப்பது மெய்யாய், அத்தோடே சேரச்சொல்லுவதும் மெய்யாய், செய்வதும் மெய்யாயிருக்கை. பந்துவாயிருப்பானொருவனுக்கு மெய்யைச்சொல்லிப் புறம்புள்ளார்க்கு அஸத்யனாயிருக்கவும் கூடுமிறே, அதுவுமில்லை. இவையெல்லாம் நானிருக்கிற நாட்டிலும் நடையாடாதபடி ஸவாஸநையோடே போகவிட்டேன் என்கிறார். தன்னோடே பரிமாறினார்பக்கலிலே மெய்யிருக்குமாகில் தன்பக்கலிலே வந்து பொசியக்கூடுமென்று அவர்கள்பக்கலிலும் மெய்நடையாடாதபடி பண்ணினேன். ஸம்ஸாரிகள் அஜ்ஞராகையாலே பொய்யோடும் செல்லும்; மெய்கொண்டே நடக்கவேண்டும்படி ஸர்வஜ்ஞரான தேவரீர் திருவடிகளிலேயிறே அஸத்யனாய்த்து.

நீர் இப்படிமெய்யைநேராகப்பொகடுகைக்கு வாஸநைபண்ணிற்று எங்கேயென்ன; (விரிகுழலாரில்பட்டு) உன்கோஷ்டிக்குப்பொய்யாகாதாப் போலேயிறே அவர்கள் கோஷ்டிக்கு மெய்யாகாதபடி. ஸத்யனாயிருக்குமவனுக்கு ஸ்த்ரீகளோடொரு க்ஷணகாலமும் ஸம்ஸர்க்கம் அரிதாயாய்த்திருப்பது. (விரிகுழலாரில்) மயிர்முடித்திருக்கில் "இதொரு மயிர்முடியே! மாலைசுற்றின விரகே!" என்று அதிலே வித்தனாயிருக்கும்; விரித்திருக்கில் "ஓசழக்காக மயிரைவிரித்துப்

அரு:—முப்பத்து மூன்றாம் பாட்டு. (மெய்யெல்லாமித்யாதி) கீழ்ப்பாட்டிற்சொன்ன நன்மையில்லாமையை அநுபாஷிக்கிறவிடத்திலே "மெய்யெல்லாம் போகவிட்டு" ஏன்பானென்ன அருளுகிறார் (கீழ்ச்சொன்னவித்யாதி). "ப்ரதமசிலை" என்றதுக்கு நியாமகத்வேந "ஸத்யம்தபோதமஶ்ஶம:" இத்யாதியை அருளிச்செய்வர். ப்ரதமஶிலை—ஆதாரஶிலை. (எட்டுப்புரிகட்டல்) வீரைக்கோட்டைக்கு எட்டுப்புரிகட்டுவர்கள். (பண்ணறை) அடைவுகேடு.

பொகட்டபடியென் !" என்று அதிலே வித்தனாயிருக்கும். § "என்னை யுன்செய்கை நைவிக்கும்" என்று பகவத்விஷயத்தில் ஸாத்விகர் படுமதெல்லாம்படுமாய்த்து. (பட்டு) வலையிலே அகப்பட்ட சில பதார்த்தங்களைப்போலே தன்னால் மீளவொண்ணாதபடி அகப்படுகை. ஆசார்யோபதேஶத்தாலே வகுத்தவிஷயத்தில் பனியிருங்குழல்களைக் கண்ணாலே காணாநிற்க, நெஞ்சு ஸ்த்ரீகள் பக்கலிலேயாம்படியிறே அதில் அகப்பாடிருப்பது.

(பொய்யெல்லாம் பொதிந்துகொண்ட) மெய்யைக்குடநீர் வழித்தாற்போலே பொய்களைக் கூடுபூரித்தேன். பகவத்விஷய ஸம்ஸர்க்கம் பொய்யரை மெய்பராக்குமாப்போலேயாய்த்து — இவ்விஷயம் ஸத்யரை அஸத்யராக்கும்படி. (எல்லாம்) மெய்க்குச் சொன்னவைகளெல்லாம் இதுக்கும் உண்டிறே. "பொய்" என்று பேர் பெற்றவை எல்லாவற்றையும்தம்மோடேசேர்த்துக்கொண்டாராய்த்து. (பொதிந்துகொண்ட) அவற்றிலொன்றும் சேராதபடி பொதிந்து கொண்டேன். நாட்டார் தந்தாமபிமத விஷயங்களுக்குக் கார்த்திகைக்கு ஒருபொய் சொல்லவேண்டினால், அவர்களும் என்பக்கலிலே வந்து கேட்டுப்போம்படி பொதிந்துகொண்டேன். எட்டுப்புரியும் கட்டினாராய்த்து. (போழ்க்கனேன் வந்துநின்றேன்) என்னை அநுஸந்தித்தால் ※ "மெய்யானன்றே அங்குத்தைக்கு ஆவார்" என்று மீளவிறே அடுப்பது; பண்ணறையனாகையாலே நிர்லஜ்ஜனாய் வந்து கொடுநின்றேன். (நின்றேன்) ஸாதநாநுஷ்டானம் பண்ணி பலத்துக்கு அவஸரப்ரதீக்ஷராய் நிற்பவரைப்போலே வந்துநின்றேன். (போழ்க்கனேன்) போழ்க்கமை—பண்ணறை-கதிஶூந்யதை.

"இப்படிப்பட்ட நீர் ஶமதமாத்யுபேதர் சேரும் நம்பக்கலிலே வருவானென், விரிகுழலார்பக்கல் போகீர்" என்ன; (ஐயனே)

சின்ன அரு :—முப்பத்து மூன்றாம் பாட்டு. (எல்லாம்) த்ரிவித கரணத்தாலும் என்னுதல். சிறிது மெய்யும் சிறிது பொய்யுமென்னுதல். (ஒசழக்கு) அநாயாஸம். (பண்ணறையன்) கதிக்கேடன். இவர் சொன்னபொய் ஏதென்ன அருளுகிறார் (தன்பாலாதரமித்யாதி). 33.

---

§ திருவாய்(5-10.2)*பா "பொய்யனன்றே, அங்குத்தைக்காகாதவன்"

என்னால் அழித்துக்கொள்ளவொண்ணாத நிருபாதிகஸம்பந்தமடியாக வந்தேன், எத்தனையேனும் அநீதியிலே கைவளர்ந்த ப்ரஜைகளுக்கும் மாதாபிதாக்களிருக்குமிடத்தில், பிறர்காணாதபடி புழக்கடையாலே வந்து புகுரலாம்படியிறே ப்ராப்தியிருப்பது. (அரங்கனே) நம்மை "நிருபாதிக பந்து" என்று அறிந்தது ஶாஸ்த்ரவாஸனையாலேயோ, ஆசார்யோபதேஶத்தாலேயோவென்ன; அவற்றாலன்று, கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறபடியைக் கண்டறிந்தேன்.

நித்யவிபூதியிலிருப்பைக் காற்கடைகொண்டு, அநபிமதமான ஸம்ஸாரத்திலே ஸம்ஸாரிகளுடைய உஜ்ஜீவநமே ப்ரயோஜநமாகக் கண்வளர்ந்தருளுகிறபடியாலே, இஜ்ஜந்துக்களில் தேவரீர் திருவடிகளுக்கு ஆகாதாரில்லை என்னுமிடத்தையும் இக்கிடைதானே உபதேசிக்கிறதில்லையோ? நம்பக்கலிலே வந்து நீர் கொள்ளப்புகுகிற கார்யமென்னென்ன; (உன்னருளென்னுமாசை தன்னால்—வந்து நின்றேன்) தேவரீர் க்ருபையின் பக்கல் எனக்குண்டான நசையாலே வந்தேன். தந்தாமை முடியச்சூழ்த்துக் கொண்டவர்களுக்கும் தேவரீர் க்ருபையில் நசைபண்ணலாப்படியிறே தேவரீர் க்ருபையிருப்பது. ப்ரஹ்மாஸ்த்ரத்தாலே அழியச்செய்ய தேவரீர் உத்யோகித்த தஶையிலும் காகத்துக்கும் திருவடிகளிலே புகுரலாம்படியிறே தேவரீர் க்ருபை இருப்பது. (185) "**वधार्हमपि काकुत्स्थः कृपया पर्यपालयत्**" (வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத்) என்னக்கடவதிறே.

உம்முடைய பக்கல் நன்மைகளில்லாமையும் அறிந்து தீமைகளுண்டென்னுமிடமும் அறிந்து வந்தீரல்லீரோ, அதிகாரிகளில் இப்படிப்பட்ட உம்மையன்றோ நாம் தேடியிருக்கிறது. இதுதான் மெய்யோ என்ன; (பொய்யனேன்) நிரூபித்தவிடத்தில் இதுவும் பொய்யாயிருந்ததென்கிறார். ஸ்வதஸ்ஸர்வஜ்ஞரான தேவரீர் ஸந்நிதியிலே மெய்யென்று சொல்லலாவது என்பக்கலுண்டோ என்கிறார். (பொய்யனேன்) "தீமைகள் எனக்கில்லாதனவில்லை" என்று சொன்ன இவ்வார்த்தைகள், (186) "**अहमस्म्यपराधानामालयः**" (அஹமஸ்ம்யபராதாநாமாலய:) என்னும் இவ்வார்த்தை. இவ்வதிகாரத்துக்கு தேவரீர் ஸந்நிதியில் விலைசெல்லும் வார்த்தையென்று

சொன்னேனித்தனை, என்தண்மை என்நெஞ்சில்பட்டுச்சொன்னே னல்லேன். (பொய்யனேனே) ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனான தேவரீர் இப்பொய்தன்னை மெய்யென்று ப்ரமிக்கும்படியன்றோ நான் பொய் சொன்னபடி. தாம் கீழ் "ஆதரம்பெருகவைத்தவழகன்" என்றும், "கண்ணிணைகளிக்குமாறே" என்றும், "பனியரும்புதிருமாலோ" என்றும், "உடலெனக்குருகுமாலோ" என்றும் சொன்ன பொய் மாலைகளை அநுஸந்தித்து "பொய்யனேன் பொய்யனேனே" என்கிறார். மெய்கொண்டு பரிமாறவேண்டும் தேவரீர் திருவடிகளிலே எத்தனை பொய்சொன்னேன் என்கிறார். 33.

34\. உள்ளத்தே யுறையும்மாலை உள்ளுவா னுணர்வொன்றில்லாக்
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த் தொண்டுக்கே கோலம்பூண்டு
உள்ளுவாருள்ளிற்றெல்லா முடனிருந்தறிதியென்று
வெள்கிப்போ யென்னுள்ளே நான் விலவறச் சிரித்திட்டேனே.

பதவுரை:—உள்ளத்தே—நெஞ்சினுள்ளே, உறையும்—(எப்போதும்) வாஸம்செய்கிற, மாலை—ஸர்வஜ்ஞனை எம்பெருமானை, உள்ளுவான் உணர்வு—அநுஸந்திக்கைக்குறுப்பான அறிவு, ஒன்று இல்லா—சிறிதும் இல்லாத, கள்ளத்தேன் நானும்—கள்வனாகிய நானும், தொண்டு ஆய்—உனக்கு ஆட்செய்யுமவனாய், தொண்டுக்கே கோலம் பூண்டு—அடிமைக்கு வேண்டிய வேஷங்களைத் தரித்து, உள்ளுவார் உள்ளிற்று எல்லாம்—சிந்திப்பவர்களின் சிந்தனைகளையெல்லாம், உடன் இருந்து—கூடவிருந்து, அறிதி என்று—அறிகின்றாய் என்று (அறிந்து), என்னுள்ளே—எனக்குள்ளே, நான்—நான், வெள்கி போய்—வெட்கமடைந்து, விலவு அற—விலாபக்கத்து எலும்பு ஒடியும்படி, சிரித்திட்டேன்—சிரித்தேன்.

அவ:—முப்பத்துநாலாம் பாட்டு. (உள்ளத்தே) ஜ்ஞாந ப்ரஸரத் வாரமான மநஸ்ஸிலே நித்யவாஸம் பண்ணுமவனாய் நம்குற்றங்களை நேராக அறியும் ஸர்வஜ்ஞனை இவனைப் பொய்யனை நான் கிட்டி அவத்யத்தை விளைத்து என்னகாரியம் செய்தேன் என்று லஜ்ஜித்து, இதிற்காட்டில் நம்குற்றம் அறிகைக்கு ஜ்ஞானமின்றிக்கே இருக்கிற ஸம்ஸாரிகளோடே முடிந்துபோகையே நன்றென்று பெரியபெருமாள் திருவடிகளிலே நசையற்று அகலுகிறார்.

வ்யா :—(உள்ளத்தே) நினைவுக்கு வாய்த்தலையான நெஞ்சிலே இருக்குமவனைத்து. புறம்புள்ளாரொருவனாகிலிறே கண்ணால்கண்டதுக்கு அவ்வருகு அறியான் என்றிருக்கலாவது. (உறையும்) ஸதாஸந்நிஹிதனாயிருக்கை. போக்குப்புகுதியுண்டாகிலிறே போனபோதாக மூலையடியே நடக்கலாவது. (மாலே) ஸர்வாதிகனே. ஆத்மா உள்ளே வர்த்தியாநிற்கச் செய்தே ஸர்வத்தையும் அறியமாட்டான்; ஆகாஶம் வ்யாபியாநிற்கச்செய்தே வ்யாப்யத்தைக் குறித்து அதுக்கு நியந்த்ருதையில்லை; இவன் ஸர்வஜ்ஞனாய் ஸர்வநியந்தாவாயிருக்கும். (உள்ளுவானுணர்வு) நம்முள்ளே வர்த்தியாநின்றான் என்று அநுஸந்திக்கைக்கீடான ஜ்ஞாநமில்லை. (உணர்வொன்றில்லா) ஆத்மஜ்ஞாநமுண்டாகிலிறே பகவத்ஜ்ஞாநமுண்டாவது; † (அதில் ப்ரதமத்திலே அறியவேண்டும் ஆத்மஜ்ஞாநமில்லை; ஈஶ்வரவிஷயஜ்ஞாநமுமில்லை; தேஹஸ்வபாவத்திலும் ஜ்ஞாநமில்லை.)

(கள்ளத்தேன்) ஜ்ஞாநஹீநனென்று என்னை நாட்டார் அறியாமல் பகட்டி மறைத்துப்போந்தேன், ✻ நமக்கோர்ஆத்ம குணமில்லையென்று சொல்லும்போது என் அந்தராத்மா அறியவில்லை எண்பன்; அத்தாலே அவர்களும், இவனுக்கு ஆத்மவிஷயஜ்ஞாநமும் பரமாத்மவிஷயஜ்ஞாநமும் உண்டென்று நினைத்திருக்கும்படியாக அவர்களையும் மறைத்துப்போந்தேன். அடியில் அநாத்மகுணமுண்டாயிருக்கவிறே இல்லையென்பது; அக்களவுக்கு உன்னையும் பெருநிலையாக நிறுத்திக் களவுகண்டுபோந்தேன். (நானும் தொண்டாய்) ஒரு நன்மையுமின்றிக்கே இருக்கிற நானும், ஆத்மகுணோபேதர் அதிகரிக்கும் உன்னுடைய அடிமையிலே அந்வயியாநின்றேன். ஆர் செய்யக்கடவ அடிமையிலே ஆர் அந்வயிக்கிறார். சண்டாளன் வேதாத்ய

அரு :—முப்பத்துநாலாம் பாட்டு. (உள்ளத்தேயித்யாதி). (ஸம்ஸாரிகளோடே முடிந்துபோகையாலே)என்ற விடத்திலே "ஸம்ஸாரிகளோடே கூடிமுடிந்துபோகையே" என்று கூட்டி நிர்வஹிப்பது. "உள்ளுவானுணர்வொன்றில்லா" என்று ஈஶ்வரவிஷயஜ்ஞாநமொன்றுமில்லாததென்றது—தத்பூர்வபாவியான ஆத்மஜ்ஞாநமும் தேஹஸ்வபாவஜ்ஞாநமும் இல்லையென்றபடி.

---

† குண்டலிதம் அரும்பதாநநுகுணம். ✻ (பா) எமக்கோர் அநாத்ம.

யநத்தை அதிகரித்தால் நாட்டார் கர்ஹிப்பார்களென்று, (110) "स्वात्माप्येनं विगर्हते" (ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே) என்று தானும் அருவருத்திருக்குமிறே; அப்படியே படுகிறார். (தொண்டுக்கே கோலம்பூண்டு) உன்னைக் களவுகண்டு விடுமதன்றிக்கே ஸாத்விகர் ப்ரஸாவஹிக்கும்படி ரூபநாமங்களைத் தரித்துப்போந்தேன். பரப்பு மாறத் திருநாமத்தை இடுவது, ஸ்ரீபஞ்சாயுதங்களைத் தரிப்பது, அஹ்ருதயமாகத் திருநாமத்தைச் சொல்வது, உன் போக்யதையைச் சொல்லுவது, யமாதிகள் தலையில் என் கால் என்பதாய், நானுமொருவனுய் பரோபதேஶம் பண்ணுவதாய், எத்தனைசெய்தேன், எத்தனை ஜல்பித்தேன் என்கிறார். (உள்ளுவாருள்ளிற்றெல்லாமுடனிருந்தறிதியென்று) நினைவுக்கு வாய்த்தலையைப்பற்றியிருக்கையாலே அநுஸந்திப்பார் அநுஸந்திக்குமதெல்லாவற்றையும் கூடவிருந்து அறிதி என்று. (187) "एकोहमस्मीति च मन्यसे त्वं" (ஏகோஹமஸ்மீதி ச மந்யஸே த்வம்) இத்யாதி. ஸர்வஜ்ஞனுய் ஸர்வநியந்தாவாயிருக்கிற நீ உடனே இருக்கவோ நான் இவ்வமணக்கூத்தெல்லாம் அடித்தேன் என்கிறார்.

(வெள்கிப்போய்) தம்முடைய க்ருத்ரிமத்வத்தையும், அவனுடைய ஸர்வஜ்ஞத்வத்தையும், அவனுடைய ஸந்நிதியையும் அநுஸந்தித்து லஜ்ஜாவிஷ்டரானார். (போய்) ஸந்நிதியிலே லஜ்ஜித்துக்கவிழ்தலையிட்டு நிற்கமாட்டாமையாலே கடக்கப்போந்தார். அவனில்லாதவிடம் தேடிப்போகிறாரிறே இவர். பாஹ்யவிஷயங்களிலே லஜ்ஜித்தால் அங்குநின்றும் அது இல்லாத இடந்தேடிப் போருவரே. அவ்வாஸநையாலே போருகிறாராய்த்து இங்கும். (என்னுள்ளே) இவ்வர்த்தத்தில் ஸம்ஸாரிகள் இவர்க்குக் கூட்டல்லர்கள்; பெரியபெருமாள் பக்கல் நின்றும் அகன்றாராய் நின்றார்; அவர் ஸந்நிதியுண்டானாலும் அவர் இதுக்குக் கூட்டல்லர்; இனி இவர் தம்மிலே சிரிக்குமத்தனையிறே; தம்முடைய அபஹாஸ்யதைக்குத் தாமே ஸஹகாரியாமத்தனையிறே. (விலவறச்சிரித்திட்டேனே) விலாக்கள் ஒடியும்படி

(இவ்வர்த்தத்தில்) அபஹாஸரூபமான அர்த்தத்தில். ஸம்ஸாரிகள் லஜ்ஜாஶூந்யராகையாலே இவ்வபஹாஸத்துக்குக் கூட்டல்லர். இப்படி லஜ்ஜிக்கை ஈஶ்வரனுக்கு அநபிமதமாகையாலே பெரிய

சிரித்தாராய்த்து. அபஹாஸ்யதைக்கு அவதியுண்டானுலிறே சிரிப்புக்கவதியுண்டாவது. அகலநினைத்தவராகையாலே, தீப்பாய்வார், வெற்றிலைதின்று பூச்சூடித் தீப்பாயுமாபோலே சிரிக்கிறாராய்த்து. அர்ஜுநன் இவ்விஷயத்தில் நசைகிடக்கையாலே சோகித்துக் கைவாங்கினன்; இவர் நசையற நீங்குகிறாராகையாலே சிரித்துக் கைவாங்குகிறார். 34.

35. தாவியன் றுலகமெல்லாம் தலைவிளாக்கோண்டவேந்தாய்
சேவியே னுன்னையல்லால் சிக்கெனச் செங்கண்மாலே!
ஆவியே! அமுதே! என்றனுருயிரனையவேந்தாய்!
பாவியேனுன்னையல்லாமல் பாவியேன்பாவியேனே.

பெருமாள் இதுக்குக் கூட்டல்லரென்றபடி. (விலாக்கள்) பார்ஶ்வஸந்தி பந்தங்கள் ஆனுல் அர்ஜுநன் இவ்விஷயத்தை அகன்றேமென்று சோகித்தானத்தனையோவென்ன அருளிச்செய்கிறார் (அர்ஜுநனித்யாதி). 34.

சின்ன அரு:—முப்பத்துநாலாம் பாட்டு. ஆத்மாபத்தாத்மாவாகையாலே ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வங்களில்லையாகையாலே அறியமாட்டானென்றது. (உள்ளுவானுணர்வு) உள்ளுகை அநுஸந்திக்கைக்கீடான ஜ்ஞாநமில்லையென்றபடி. தத்வத்ரய ஜ்ஞாநமில்லை. ஆத்மகுணமில்லையென்றால் ஸ்வரூபமன்றே? அது களவாமோ என்ன அருளுகிறார் (அடியில் அநாத்மகுணேத்யாதி). அநாத்மகுணமுண்டாயிருக்க, எனக்கு ஆத்மகுணமில்லையென்று ஸ்வரூபம் சொல்லுகை களவென்றபடி. அக்களவு—ஆத்மகுணமில்லையென்றது. உன்னையும் பெருநிலையாகவென்றது அந்தராத்மா அறியவென்றது. அன்றிக்கே இந்த அவஸ்தையில் களவுக்கு அவன் ஸாக்ஷியானமாத்ரமன்றிக்கே பூர்வாவஸ்த்தையில் களவுக்கு அவன் ஸாக்ஷியென்கிறார் (அடியில் அநாத்மகுணேத்யாதி). அப்போது அக்களவென்றது:—பூர்வாவஸ்த்தையில் களவென்றபடி. அவனறியுமென்னுமதுக்கு ப்ரமாணமருளுகிறார் (ஏகோஹமித்யாதி). ஸ்வதோஷத்தை நினைத்தால் து:க்கியாமல் சிரிப்பானென்னென்ன அருளுகிறார் (அகலநினைத்தவரித்யாதி). அகலநினைத்தவனும் து:க்கித்தன்றோ அகன்றான், இவர் சிரிப்பானென்னென்ன அருளுகிறார் (அர்ஜுநனித்யாதி). அர்ஜுநன் உபாயாந்தரத்தினுடைய துஶ்ஶகத்வத்தை அநுஸந்தித்து இனி உன்னைக்கிட்டுகை என்றோென்றுண்டோ என்று அகன்றான். 34.

பதவுரை :—அன்று—(மஹாபலியாலே உலகங்கள் அபஹரிக்கப் பட்ட) அன்று, உலகம் எல்லாம்—எல்லா உலகங்களையும், தாவி தலை விளாக்கொண்ட—கடந்து எல்லார்தலையிலும் திருவடிபட வியாபித்த, எந்தாய்—என் ஸ்வாமியே!, செம் கண் மாலே—சிவந்த திருக்கண் களையுடைய ஆச்ரித பக்ஷபாதியே! ஆவியே—எனக்குப் பிராணன் போன்றவனே!, அமுதே—அம்ருதம் போன்றவனே!, என் தன் ஆர் உயிர் அனைய எந்தாய்—என்னுடைய அருமருந்து போன்ற ப்ராண னுக்கு அந்தராத்மாவான என் ஸ்வாமியே!, பாவியேன்—பாவியாகிய நான், சிக்கென—(எல்லாக் காலங்களிலும்) உறுதியாக, உன்னை அல்லால்—உன்னை யொழிய, பாவியேன்—(பிறரை) நினைக்கவும் மாட்டேன்; பாவியேனே—நான் மிக்க பாபத்தைப் பண்ணினவனே.

அவ :—முப்பத்தஞ்சாம் பாட்டு. இவர் இப்படி கைவாங்கின வாறே பெரியபெருமாள், இவரை இழந்தோமாகாதே என்று நொந்து, ஆழ்வீர்! நீர் அகலநினைத்ததுக்கு ஹேதுவென்னென்று கேட்டருள, ஸர்வஜ்ஞரான தேவரீர் திருமுன்பே க்ருத்ரிமங்களைச் சொல்லி, உம்மைக்கிட்டி அவத்யாவஹனுவதிற்காட்டில் என் அகவாய் அறியாத ஸம்ஸாரிகளும் நானுமாயிருக்கப்பார்த்தே னென்ன, நீர்கிட்டின ப்ரயோஜநம் அழகியது; நாம் தோஷத்தில் அவிஜ்ஞாதா; அவர்கள் தோஷத்தில் ஸர்வஜ்ஞர்; நாம்குண ஸர்வஜ்ஞர்; ஆகையாலே நம்வாசல் ஸர்வாதிகாரம்காண்! என்ன; இது உக்திமாத்ரமேயோ அநுஷ்டானமும் உண்டோவென்ன; பண்டே அடிபட்டுக்கிடக்கிறதுகாணும் என்று த்ரைவிக்ரமாபதாநம் கேட்டறியீரோ வஸிஷ்ட சண்டாள விபாகமற எல்லார் தலையிலும் நம் கால் பொருந்தினபடி அறியீரோவென்று ஶீலாதிக்யத்தையும் தன்செல்லாமையையும் காட்டி ஸமாதாநம் பண்ண ஸமாஹிதரா கிறார்.

வ்யா :—(தாவி) உங்கள் தலையிலே நாம் காலைவைக்கப் புகாநின் றோமென்னில்; துர்மாநவாஸநையாலே ஸம்வதியாதே ஆணையிடுவர் களிறே. *"திருவாணை நின்னாணை" என்று ஸாத்விகர் திருவடிகளை லபிக்கைக்கு மறுக்கவொண்ணாதபடி இடும் ஆணையை, திருவடிகளைக்

* திருவாய் (10-10-2).

கிட்டாமைக்கு இடுவர்களாய்த்து; இவர்கள் அறியாதபடி அநாயாஸேந எல்லார் தலையிலும் திருவடிகள்பட வளர்ந்தான். தாவுதல்— கடத்தல். (அன்று) மஹாபலியாலே அபஹ்ருதமாய், தன்னுடைய சேஷித்வமும் ஸம்ஸாரிகளுடைய சேஷத்வமும் அழிந்துகிடந்தவன்று. (உலகமெல்லாம்) மஹாபலியால் அபஹ்ருதமான அளவேயன்றியே ப்ரஹ்மலோகபர்யந்தமாக ஸகலலோகங்களையும், வஸிஷ்ட சண்டாள விபாகற எல்லார் தலையிலும் திருவடிகள் படும்படி வளர்ந்தபடி. (தலைவிளாக்கொண்ட) ரக்ஷ்யத்திலுடைய அளவல்லவாய்த்து ரக்ஷகனுடைய பாரிப்பு. (188) "अत्यतिष्ठद्दशाङ्गुलं" (அத்யதிஷ்டத்தசாங்குலம்) என்னக்கடவதிறே. (எந்தாய்) "அமரர்சென்னிப் பூவினை" என்று நித்யஸூரிகள் ஶிரஸாவஹிக்கும் திருவடிகளை விமுகரான ஸம்ஸாரிகள் தலையிலே வைக்கைக்கு ஹேதுவென்னென்னில்; அவர்ஜநீயஸம்பந்தமென்கிறார். தந்தலையிலும் திருவடிகளை வைக்கையினாலே "எந்தாய்" என்கிறார். உறங்குகிற ப்ரஜையைக் கட்டிக்கொண்டு கிடக்கும் தாயைப்போலே அன்று தன்பேறாகவிறே ரக்ஷித்தது. அன்றறியாத குறைதீர முறையறிந்த இன்று உபகார ஸ்ம்ருதியாலே "எந்தாய்" என்கிறார். ஸம்ஸாரிகள் இன்றும் அறிந்திலர்களே, அவர்களுக்குமாகத் தாம் உகக்கிறாரிறே.

(சேவியேனுன்னையல்லால்) இப்படிப்பட்ட நம்மைவிட்டுப் புறம்பேபோக நினைப்பானென் என்ன; உன்னுடைய நீர்மை அறியாதே நினைத்தேனத்தனை, உன்னை விட்டுப்புறம்பே போகேன் என்கிறார். உன்னை இழந்தால் நானும் பிறருமிறே உள்ளது; இரண்டிலும் அந்வயிக்கப்பார்த்திலேன். அவை இரண்டுமிறே ப்ரணவத்திலும் மத்யமபதத்திலும் சொல்லுகிறது. சேஷத்வ வாஸநையாலே புறம்புபோனாலும் ஸேவிக்குமத்தனையாய்த்து இவர். இது எத்தனை குளிக்கு நிற்குமென்ன; (சிக்கென) இது எல்லாக்

அரு:—முப்பத்தஞ்சாம் பாட்டு. (தாவியித்யாதி). (தலைவிளாக்கொண்ட) எல்லார் தலைக்கும் அவ்வருகே போனவென்றபடி. "எந்தாய்" என்றதுக்கு அபரபாவித்வேந தாத்பர்யாந்தரம் (தன் தலையிலுமித்யாதி). முந்தினவர்த்தத்துக்குச் சேர (உறங்குகிறவித்யாதி). இரண்டாமர்த்தத்துக்குச்சேர (அன்றறியாதவித்யாதி).

குளிக்கும் நிற்கும். யாவதாத்மபாவி. ஸர்வேஶ்வரனைக் குறித்து (151) "मा शुचः" (மா ஶுச:) என்கிறார் இவர்.

(செங்கண்மாலே) இது ஸ்வபாவகதநமன்று, தாத்காலிகவிஶேஷணம். இவர் "சிக்கென" என்றவாறே, திருவுள்ளம் இவர்பக்கலிலே ப்ரஸந்நமாய், இவர்பக்கல் வ்யாமோஹமுள்ளடங்காமையாலே கண்வழியே புறப்பட்டு ப்ரகாசிக்கிறபடி. (செங்கண்மாலே) வ்யாமோஹத்தாலே குதறிச் சிவந்தகண்களை உடையவனே. ஸ்ரீவிபீஷணாழ்வானைக் குறித்து மஹாராஜர், (189) "वध्यतां" (வத்யதாம்) என்றபோது பெருமாள் திருவுள்ளமழிந்தாற்போலேயாய்த்து, இவர் "விலவறச்சிரித்திட்டேன்" என்றபோது பெரியபெருமாள் திருவுள்ளமழிந்தபடி; பின்பு திருவடி வார்த்தையாலே (190) "अथ रामः प्रसन्नात्मा" (அத ராம: ப்ரஸந்நாத்மா) என்று பெருமாள் உளரானாற்போலேயாய்த்து, இவர் "சிக்கென" என்ற பின்பு பெரியபெருமாள் உளரானபடி. திருவடி அவதாரத்திலே (151) "मा शुचः" (மா ஶுச:) என்றான்; இவர் அர்ச்சாவதாரத்திலே (151) "मा शुचः" (மா ஶுச:) என்கிறார். (செங்கண்மாலே) என் ஸ்வரூபலாபத்துக்கு முகம் மலரும்படி வ்யாமுக்தரானதேவரீரையொழிய புறம்பு எங்கே போவேன்.

அவ்வளவேயோ ? (ஆவியே) என் ப்ராணனைவிட்டுப் புறம்பே போகவோ? இவர்க்கு ஒருவாயுவிஶேஷமன்று ப்ராணன்; † "என் திருமகள்சேர் மார்வனேயென்னுமென்னுடையாவியேயென்னும்" என்கிறபடியே ஒருமிதுநம்காணும் இவர்க்கு ப்ராணன். (அமுதே) தாரகமாத்ரமேயே யிருக்கையன்றிக்கே நிரதிஶயபோக்யமுமாய், சாவாமல் காக்கும் மருந்தாயிருக்குமவனல்லேயோ. அவ்வளவேயோ? (என்னுருயிரனைய) என் ஆத்மாவன்றோ நீ; ஆத்மாவைவிட்டு ஶரீரத்துக்குப் புறம்பே போக்குண்டோ? (எந்தாய்) அயோக்யனென்று அகலபுக்க என்னை நசியாதபடி மூட்ட என் ஸ்வாமியல்லேயோ? வத்ஸனைவிட்டுப் புறம்பே போகவோ ப்ராணனை விட்டுப் புறம்பே போகவோ ?போக்யவஸ்துவை விட்டுப்புறம்பேபோகவோ? என்னைநல்வழிபோக்குவித்த ஸ்வாமியைவிட்டுப் புறம்பேபோகவோ? என்கிறார்.

† திருவாய் (7-2-9).

வார்த்தைகள் அழகிதாயிருந்தது; கீழே "ஐயனே! அரங்கனே!" என்றும், "என்னையாளுடைய கோவே!" என்றும் அபுத்யா சொன்னவைபோலன்றிறே என்ன; (பாவியேனுன்னையல்லால்) உன்னை ஒழியப்புறம்பு ஒருவரை நெஞ்சாலும் நினையேன். (பாவியேன் பாவியேனே) பாபப்ரசுரரான ஸம்ஸாரிகளை விடமாட்டாதே எல்லார்தலையிலும் திருவடிகளை வைத்த உனக்கு அயோக்யனென்று அகலநினைத்ததுக்கு ஹேது என்பாபமேயிறே; (பாவியேன்) குற்றம் காணமாட்டாதவளவேயோ, உபேக்ஷித்த ஸம்ஸாரிகளையும் உபேக்ஷிக்க மாட்டாத உன்னை அகல நினைத்ததுக்கு ஹேது என் பாபப்ராசுர்யமேயன்றோ. என்னைக்கொண்டகன்று என்ஸத்தையை அழியப்புக்கவளவேயோ, எல்லார்க்கும் ஸத்தாஹேதுவான உன்னையும் உன்னையொழிந்த எல்லாருடைய ஸத்தையையும் நஶிப்பிக்கைக்குக்கிடீர் நான் நினைத்தது என்கிறார். 35.

---

36. மழைக்கன்று வரைமுனேந்தும் மைந்தனே! மதுரவாறே!
உழைக்கன்றேபோலநோக்கமுடையவர் வலையுள்பட்டு
உழைக்கின்றேற்கென்னை நோக்காதொழிவதே உன்னையென்னே
அழைக்கின்றேன் ஆதிமூர்த்தி! அரங்கமாநகருளானே.

"பாவியேன்" என்றதுக்கு, "தாவி" இத்யாதியைக் கடாக்ஷித்தருளிச்செய்து, "ஆவி" என்றத்தைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார், (என்னைக்கொண்டித்யாதி). 35.

சின்ன அரு:—முப்பத்தஞ்சாம் பாட்டு. உலகமென்பது—உயர்ந்தோர் மாடாகையாலே வஸிஷ்டனையும், எல்லாமென்கையாலே சண்டாளரையும் என்று இரண்டர்த்தம். (தலைவிளா) என்றது உழுமிடத்தில் முந்தினவிளா இடமாகக் கோலுகை. (தஶாங்குலமத்யதிஷ்டத்) பத்து அங்குலம் விஞ்சும்படி அளந்தார். ஆனால், தந்தையென்னாமல், "எந்தாய்" என்பானென் எனவருளுகிறார் (தன்தலையிலுமித்யாதி). இதரரையும் ஸேவியேனென்றுஸேவாஶப்தத்தாலே சொல்லுவானென்னென்ன அருளுகிறார், (ஶேஷத்வவாஸனையித்யாதி). செங்கண்மாலென்று தொடங்கி மேற்பதங்களைப்பற்ற அருளுகிறார் (வத்ஸலனையித்யாதி). மீமிசையைப்பற்ற அருளுகிறார் (குற்றம்காணிலித்யாதி). ப்ராசுர்யமேதென்ன அருளுகிறார் (என்னைக்கொண்டித்யாதி). 35.

பதவுரை :—அன்று—(இந்திரன் கல்மழை பெய்வித்த) அக்காலத்திலே, மழைக்கு—மழையைத் தடுப்பதற்காக, வரை—(கைக்கெட்டியதொரு) பர்வதத்தை, முன்—(பசு முதலியவை கஷ்டமடைவதற்கு) முன்னரே, ஏந்தும்—(ஒரு சிரமமின்றிக்கே) தாங்கிய, மைந்தனே—பெரும் மிடுக்கையுடையவனே!, மதுர ஆறே—பரம போக்யமான நதியை ஒத்தவனே!, உழை கன்று போல நோக்கம் உடையவர்—மான்குட்டியின் விழிபோன்ற விழியையுடைய ஸ்த்ரீகளின், வலையுள் பட்டு—(நோக்காகிற) வலையிலே அகப்பட்டு, உழைக்கின்றேற்கு என்னை—துடிக்கிற என்னை, நோக்காது ஒழிவதே—குளிர நோக்காம லிருப்பது தகுதியோ? ஆதி மூர்த்தி—ஆதிகாரணனே!, அரங்க மாநகருளானே!—, உன்னை அன்றே—(ரக்ஷ்ய வஸ்துவைத் தேடித் திரிகிற) தேவரீரையன்றோ, அழைக்கின்றேன்—கூப்பிடாநின்றேன்.

அவ :—முப்பத்தாறும் பாட்டு. (மழைக்கு) அயோக்யனென்று அகலாதபடி தன் நீர்மையைக்காட்டிச் சேரவிட்டுக்கொண்டானென்கிறார் கீழ்ப்பாட்டில்; இதில் தம்முடைய அயோக்யதை கழிந்தவாறே ப்ராப்யத்தில் த்வரைமிக்கு, யோக்யரைக் கொண்டுபோய் அடிமைகொள்ளும் தேசத்தேறக் கொடுபோகவேண்டியிருந்தார், அதுசெய்யக்கண்டிலர்; அதுக்கடி இவரை அகலாமே சேரவிடுகைக்குத் தான்பட்ட பாடறியுமவனுகையாலே ஆமமற்றுப் பசிமிக வேணுமென்று பேசாதிருந்தான்; விஷயங்கள் நடையாடுகிற தேசத்திலேயிருந்து க்லேசப்பட்டேபோமித்தனையாகாதே! என்று ப்ராப்யத்தில் த்வரையாலும் விரோதியில் அருசியாலுமாக, பெரிய பெருமாள் கண்வளர்ந்தருள அரிதாம்படி, கேட்டாரெல்லோரும் நீராம்படி பெருமிடறு செய்து கூப்பிடுகிறார்.

வ்யா :—(மழைக்கு) மழையென்றாலும் ஆனையென்றாலும் வ்யவஸ்திதமாயாய்த்து இவர்கள் கோஷ்டியிருப்பது. இப்போது கோவர்த்தநோத்தரணத்தைச் சொல்லுவானென்னென்னில்; அவனைப்பற்றித் தம் து:க்கநிவ்ருத்தியைப் பண்ணிக்கொள்ள நினைத்தவராகையாலே அவனுடைய ஆபத்ஸகத்வத்தை அருளிச்செய்கிறார். பசித்தவர்கள், "சீமானே! என் பசியைப் போக்கவேணும்" என்னுமாப்போலே

அரு :—முப்பத்தாறும் பாட்டு. (மழைக்கித்யாதி) ஆனை என்றது ஸ்ரீகஜேந்த்ராழ்வானை.

ஆபத்ஸகனே! என் து:க்கநிவ்ருத்தியைப் பண்ணித்தரவேணும் என்கிறார். (அன்று) (191) "गोगोपीजनसङ्कुलमतीवार्तं" (கோகோபீஜந ஸங்குலமதீவார்த்தம்) என்கிறபடியே கன்றுகளும், பசுக்களும், இடையரும் நடுங்கினவன்று. அன்றும் இன்றுமேயாய்த்து ஆபத்து. அன்று கல் வர்ஷத்தகப்பட்டாரை ரக்ஷித்தாற்போலே இன்று து:க்க வர்ஷத்தே அகப்பட்ட என்னை ரக்ஷிக்கவேணும். கல்வர்ஷத்தே நோவு படவேணுமோ ரக்ஷிக்கும்போது; து:க்கவர்ஷத்தே நோவு பட்டாரை ரக்ஷிக்கலாகாதோ? ஒருவூராக நோவுபடிலோ ரக்ஷிக்கலாவது; அவ்வூராகப்பட்ட நோவை ஒருவன் பட்டால் ரக்ஷிக்கலாகாதோ.

(வரை) இந்த்ரனேவ ஸம்வர்த்தகமேககணம் வர்ஷிக்க உத்யோகித்தவாறே திருவாழியை நினைக்க அவஸரமில்லாமையாலே கைக்கெட்டிற்றொரு மலையையெடுத்து ரக்ஷித்தானாய்த்து. இத்தால் இன்னத்தைப் பரிகரமாகக்கொண்டு இன்னத்தை ரக்ஷிக்கவேணுமென்னும் நியதியில்லை யென்கை. என்னுடைய ரக்ஷணத்துக்குப் பரிகரம் உதவப்பார்த்திருக்க வேணுமென்னும் குறையில்லையென்கை. (முன்) மழையிலே பசுக்கள் நோவுபடுவதற்கு முன்னே; ஏற்கவே ரக்ஷித்தபடி. (192) "बहुधा सन्ततदुःखवर्षिणि" (பஹுதா ஸந்ததது:க்க வர்ஷிணி) என்கிறபடியே து:க்கவர்ஷத்தில் நோவுபட்டுக்கூப்பிடவும் பேசாதிருப்பதே! (ஏந்தும்) ஏழு திருநக்ஷத்திரத்திலே மலையை எடுத்தவிடத்தில் ஒரு பூம்பந்தை எடுத்தாற்போலே வருத்தமற்றிருந்தபடி. ரக்ஷணதர்மத்தில் உனக்கு வருத்தமுண்டாய்த்தான் இழக்கிறேனோ. ஶேஷபூதர் ‡ சூட்டுநன்மாலைகள் ஏந்தினாற்போலே யாய்த்து ஶேஷி மலையேந்தினபடி. (மைந்தனே) மலையை அநாயாஸேந எடுக்கைக்குடலான பெருமிடுக்கையுடையவனே! "மைந்தன்" என்று பாலனாய், இத்தை ரக்ஷிகப்பெற்ற ப்ரியத்தாலே இளகிப் பதிந்தபடி என்றுமாம். தந்தாம் ஜீவநம் பெற்றவாறே இளகிப் பதிக்குமத்தனையிறே. ஸ்வபாநுரூபமாகவிறே ஜீவநமிருப்பது. உன் பேற்றுக்கு நான் கூப்பிடவேண்டுவதே! என்கிறார்.

ரக்ஷணம் ஜீவநமாமோவென்ன (ஸ்வரூபாநுரூபேத்யாதி). இத்தால் பலிதம் (உன்பேற்றுக்கித்யாதி).

---

‡ திருவிருத்தம் (21).

(மதுரவாறே) ரக்ஷகனன்றியே பக்ஷகனுனாலும் விடலாயோ உன்வடிவிருப்பது. (மதுரவாறே) ஸமுத்ரம் என்னாதே, "ஆறு" என்பானென்னென்னில்; கடலானால் விநியோகயோக்யமன்றிக்கே இருக்கும்; இது விடாய்த்தார்க்குக் குளித்தல், முகத்திலே இறட்டிக் கொள்ளுதல், பாநம்பண்ணுதல் செய்யலாயிருக்கும்; விடாயில்லாத போதும் அழுக்கைக் கழற்றிக்கொள்ளலாயிருக்கும்.

கடலானால் இவனிருந்தவிடத்தில் ஓடாது; இது இவனிருந்த விடத்தே வருகையாலும், கிண்ணமெடுத்தால் நடுவுள்ள அணைகளை முறித்துக்கொண்டு வருமாப்போலே இவ்வாறும் அயோக்யதாநு ஸந்தாநத்தால் இட்ட அணைகளையும் முறித்துக்கொண்டு வருமாய்த்து. நின்றார் நின்றவிடங்களிலே உபஜீவிக்கலாம்படியாயிறே இருப்பது; பரமபதத்தில் நின்றும் போந்து இடைச்சேரியிலே வந்து பிறந்த படியை நினைக்கிறார்.

இந்த்ரனடியாக மழையால் வந்த ஆபத்தைப் போக்கினோம்— அன்று; இன்று உமக்கு ஆபத்துக்கடியென்? என்ன; (உழைக் கன்றித்யாதி) ஸ்த்ரீகளுடைய நோக்காகிற வலையிலே அகப்பட்டு நோவுபடுகிறவனன்றோ நான். முக்தமான மானினுடைய விழிபோலே அகவாயில் ஒன்றுமின்றிக்கே இருக்க அஹ்ருதயமாக அநந்ய ப்ரயோஜனைகளைப்போலே தங்கள் செல்லாமைதோற்ற நோக்குகிற வர்களுடைய நோக்காகிற வலையிலே அகப்பட்டுத் துடிக்கிற என்னை. உழை—மான். வலையாகிறது:— அகப்படுத்திக்கொள்ளவற்றாய், கால்வாங்கிப்போகவொண்ணாதபடி பண்ணுமதாய், அதுதன்னில் ப்ரயோஜநமின்றிக்கே இருக்குமதிறே. பகவத்விஷயத்தில் போகாமே துவக்குகைக்கு வேண்டுவதுண்டாய் அதுதன்னிலே யோக்யதை யின்றிக்கே இருக்கை.

(என்னை) பசுக்களைப் போலன்றிக்கே நோவுபடுவதும் செய்து, நோவுபட்டேனென்று அறிவதும் செய்து, ரக்ஷாபேக்ஷையுடையேனாய் ரக்ஷகன் நீயே என்றிருக்கிற என்னை நோக்காதொழிவதே! கல்லால் வந்த ஆபத்துக்குக் கல்லாலே நோக்கினாய்; கண்ணாலே வந்த ஆபத்தைக் கண்ணாலே நோக்கவேண்டாவோ. என்னை ரக்ஷிக்கும் போது மலையை எடுக்கவேணுமோ, குளிரநோக்குமத்தனையன்றோ செய்யவேண்டுவது. நோக்கவேணுமென்னாதே, 'நோக்காதொழிவதே!'

என்று நிலாய்க்கிருரிறே ஸம்பந்தத்தாலும், நீர்மையில் ஊற்றத்தாலும், ஶீலத்தாலும். இவர் இப்படி நிலாய்த்துச் சொன்னபின்பும், இவர் நாம் கிட்டக்கொள்ள அயோக்யனென்று அகலக்கூடும். ஆமமறுங்கிடீர் என்று பேசாதே கிடந்தார். வ்யாதிக்ரஸ்தமான ப்ரஜைகள் வ்யாதி தலைசாய்ந்து சோறுசோறென்று கூப்பிடப்புக்கால் த்வரிதானே தாய்க்கு உகப்பாமாபோலே இவர் கூப்பிடு தன்னையே கேட்டுக்கொண்டு கிடந்தான். (உன்னையென்னே அழைக்கின்றேன்) வேறே ஒரு காபுருஷன் வாசலிலேயோ நான் கூப்பிடுகிறது; ரக்ஷ்யம் தேட்டமாயிருக்கிற தேவரீரை ரக்ஷகாபேக்ஷை உடையேனுய்க் கொண்டு கூப்பிடாநிற்கச் செவிபடாதொழிகைக்குப் புறம்பு அந்ய பரதையென்? ஜகத்வ்யாபாரமும் § மதர்த்தமன்ரே?

நீர் அழைக்குங்காட்டில் அப்போதே உம்முடைய கார்யம்செய்ய வேண்டுகிற தேவையென்னென்ன; (ஆதிமூர்த்தி) இது உருமாய்ந்து கிடந்தகாலத்திலே அபேக்ஷாநிரபேக்ஷமாக (193) "बहुस्यां" (பஹுஸ்யாம்) என்கிற ஸங்கல்பத்தாலே இவற்றை உண்டாக்கின உனக்கு இதினுடைய ரக்ஷணம் பண்ணுகை பரமன்ரே? பெற்ருர்க்கு ரக்ஷிக்கையும் பரமன்ரே. எங்கேனும் இடறிலும் "அம்மே!" என்ன ப்ராப்தியில்லையோ, என்னுடைய ரக்ஷணத்துக்கு ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகள் தேடிப் பழங்கிணறு கண்வாருகிறதென். (அரங்கமாநகருளானே) பரமபதத்தை விட்டுக் கோயிலிலே கண்வளர்ந்தருளுகிறது என்னுடைய ரக்ஷணம் பண்ணவல்லவாகில் இக்கிடைக்கு வேறே ப்ரயோஜநமுண்டோ. கர்மாநுகூலமாக ஸம்ஸாரிகளை ரக்ஷிக்கைக்கு வந்து கிடக்கவேணுமோ. (அரங்கமாநகருளானே— உன்னையன்றே அழைக்கின்றேன்) நான் ஏதேனும் பரமபதத்தேவந்து கூப்பிட்டேனே, ருசிபிறக்க வந்துகிடக்கிறவிடத்திலே ருசிபிறந்தார் இழந்துபோகவோ. இவர் இப்படி கூப்பிடப் பெரியபெருமாள் ஆறியிருப்பானென்னென்னில்; பரமபதத்திலுள்ளார் போகத்தாலே

"வ்யாதிக்ரஸ்தமான" என்ற வாக்யம் பேசாமைக்கு ஹேத்வந்தரமென்று தோற்றியிருக்கிறது.

---

§ (பா) ததர்த்தமன்ரே.

கூப்பிடக்கேட்டறிவர்; ஸம்ஸாரிகள் விஷயலாபத்தாலே கூப்பிடக் கேட்டறிவர்; தம்முடைய க்ருஷிபலமான கூப்பீடு கேட்டறியாமை யாலே பேசாதே கிடந்தார். 36.

---

37. தெளிவிலாக்கலங்கல்நீர்சூழ் திருவரங்கத்துள்ளோங்கும்
ஒளியுளார்தாமேயன்றே தந்தையும் தாயுமாவார்
எளியதோ ரருளுமன்றே என்திறத்தெம்பிரானுர்
அளியன் நம்பையலென்னுர் அம்மவோ! கொடியவாறே.

பதவுரை:— தெளிவு இலா—தெளிவு இல்லாத, கலங்கல்— கலங்கிய, நீர் சூழ்—காவேரியால் சூழப்பட்ட, திரு அரங்கத்துள்— கோயிலிலே, ஓங்கும்—பிரகாசிக்கும்படியான, ஒளி உளார் தாமே அன்றே—தேஜஸ்ஸை உடையவரான திருவரங்கனன்றோ, தந்தையும் தாயும் ஆவார்—(நமக்குத்) தகப்பனும் தாயுமாவார்; என் திறத்து— என் விஷயத்தில் (பண்ணவேண்டுவது), எளியது ஓர் அருளும் அன்றே—ஸாமாந்யமான குளிர்ந்த கடாக்ஷமேயன்றோ? எம் பிரானுர்—எனக்கு உபகாரகரான அவர், நம் பையல் அளியன் என்னுர்—"நம்முடைய பையலான இவன் நமது கருணைக்கு உரியன்" என்று (ஒரு வார்த்தை) சொல்வதில்லை; அம்ம ஓ கொடியவாறே— ஐயோ! (இவர் திருவுள்ளம்) மிகக் கொடியதாயிராநின்றதே!

அவ:—முப்பத்தேழாம் பாட்டு. (தெளிவு) இப்படிக் கூப்பிடச் செய்தேயும் பெரியபெருமாள் இரங்கி (151) "मा शुचः" (மா ஶுச:)

ரஹஸ்யம் தேட்டமாயிருக்கிற வாக்யத்தாலே, "அரங்கமா நகருளானே—உன்னையன்றே அழைக்கின்றேன்" என்று கூட்டி அருளிச்செய்து, "ஆதிமூர்த்தி—உன்னையன்றே" என்று கூட்டித் தாத்பர்யம் (எங்கேனுமித்யாதி). 36.

சின்ன அரு:— முப்பத்தாறும் பாட்டு. கல்வர்ஷமென்னுமல் கேவலம் மழையென்பானென்னென்ன அருளுகிறுர் (மழையென் றுனுமித்யாதி). "உழைக்கின்றேற்கு" என்றத்தைப்பற்ற (அது தன்னிலித்யாதி). இப்படிக் கூப்பிடச்செய்தேயும் ஏனென்னுமல் கிடப்பானென்னென்ன (இவரிப்படி கிலாய்த்தித்யாதி வாக்யத்வயத் தாலே). விடாய் பிறக்கைக்காகவும், இவர் த்வநிபோக்யமாகையாலும் என்றபடி. (காபுருஷன்) க்ஷுத்ரபுருஷன். 36.

என்னக்காணுமையாலே தம்மையொழிய வேறே எனக்கொரு பந்துக்களுண்டாயிருக்கிறுரோ? ப்ரயோஜநாந்தரபரனாய் பந்தகமாயிருந்துள்ள புருஷார்த்தத்தை அபேக்ஷிக்கிறுனென்றிருக்கிறுரோ? நம்முடையவனென்று அங்கீகரிக்க நான் பிழைப்பேனுனல் இத்தனையும் செய்யாதே ஆர்த்தத்வநி கேட்டுக் கண்ணுறங்கும்படி, அம்மே! இவர் திருவுள்ளம் இப்போது இங்ஙனே கொடிதாய்த்தாகாதே! என்று இன்னுதாகிறுர்.

வ்யா:— (தெளிவிலாக்கலங்கல்) ஊற்றுமாறித் தெளிகைக்கு அவகாசமில்லாதபடி மேன்மேலும் பெருகுகையாலே கலக்கம் மாருதாய்த்து. இவரைப்போலேயாய்த்து ஆறும். ப்ராப்திக்கு முன்பு சோகத்தாலே கலங்கியிருப்பர்; கிட்டினுல் ப்ரேமத்தாலே கலங்கியிருப்பர்; ஆறும் கோயிலுக்கு மேற்கு பெரியபெருமாளைக் காணப்புகாநின்றேமென்னும் ஹர்ஷத்தாலே கலங்கிவரும்; கிழக்குப்பட்டால் பிரிந்துபோகிற சோகத்தாலே கலங்கிப்போம். கோயிலருகு வழிபோவாரில் சேதநாசேதந விபாகமில்லை போலேகாணும் கலக்கத்துக்கு. (நீர்சூழ்) * "அதனில் பெரிய என்னவாவறச் சூழ்ந்தாய்" என்று பெரியபெருமாள் என்னளவிலிருக்குமாப்போலேயாய்த்து கோயிலை விளாக்குலைகொண்டிருக்கும்படி. (194) "दुग्धाब्धिः" (துக்தாப்தி:) இத்யாதி. ரத்நாகரமான க்ஷீராப்தி தமப்பனுர்; நான் இவ்விடத்தில் ஜநகீ; ஸாக்ஷால்லக்ஷ்மி பெண்; மணவாளப்பிள்ளை ஸர்வலோகோத்தரரான அழகியமணவாளப்பெருமாள்; இதுக்கு ஸத்ருஶமாக அங்கமணி செய்யலாவதேதென்றுவிசாரித்துக்கொண்டு வருகிறுப்போலேயாய்த்து ஆறும்பெருகி, மத்தகஜம்போலே பிசுகிப்பிற்காலித்து வருகிறபடி. (திருவரங்கத்துளோங்கு மொளியுளார்) ஆற்றுப்பெருக்கை நீக்கித் தரைகண்டு உள்புக அரிதாமாப்போலேயாய்த்து பெரியபெருமாள் தேஜஸ்ஸை நீக்கிப் புகுவதுக்கு ஆஶ்ரய

அரு:—முப்பத்தேழாம் பாட்டு. (தெளிவிலாவித்யாதி) பந்துக்களுண்டாயிருக்கிறுரோ என்றபடி. அப்படி விளாக்குலை கொண்டிருக்குமோவென்ன; (துக்தாப்திரித்யாதி). "பர்யேதி" என்றதிலே நோக்கு.

---

* திருவாய்மொழி (10-10-10).

மான வடிவழகு காண அரிதாயிருக்கிறபடி. பரமபதத்திலொளி பகல் விளக்கென்னும்படியாயாய்த்து. அந்தகாரத்தில் தீபம்போலே குறைவாளரான ஸம்ஸாரிகளுக்கு உதவப்பெற்ற பின்பு ஒளிமிக்கிருக்கிறபடி.

(ஓங்குமொளி) நித்யஸூரிகள் நடுவேயிருக்கிறபோது, ஆதித்யர்கள் நடுவே ஆதித்யன் இருக்குமாபோலேயாய்த்து இருப்பது. இங்கு ஆர்த்தர் மிகவுமுண்டாகையாலே தத்ரக்ஷணம் பண்ணி ஒளியும் மிகாநிற்குமத்தனை.

(ஒளியுளார்தாமேயன்றே தந்தையும்தாயுமாவார்) அவதாரணத்தாலே, (195) "**माता पिता**" (மாதா பிதா) என்று தொடங்கி, (195) "**नारायणः**" (நாராயண:) என்கிற பொதுவிலன்று, வ்யூஹாவஸ்தை, விபவாவஸ்தை என்கிற விஶேஷங்களிலுமன்று, இனி எனக்குத் தந்தையும் தாயுமாவார் பெரியபெருமாளே என்கிறார். தம்மையொழிய வ்யக்த்யந்தரத்திலேயும் ஒருபந்தமுண்டென்று ஆறியிருக்கிறாரோ. (196) "**सर्वेषामेव लोकानां**" (ஸர்வேஷாமேவ லோகாநாம்) இத்யாதி. இஸ்லோகந்தான், தர்மபுத்ராதிகள் வநவாஸம் பண்ணுகிற ஆபத்தசையிலே க்ருஷ்ணனும் ஸத்யபாமைப்பிராட்டியும் எழுந்தருள, அத்தைக்கேட்ட பராசராதி மஹர்ஷிகள் வந்து மார்க்கண்டேய பகவானைக் கண்டு பேரோலக்கமாகவிருக்க; தர்மபுத்ரன், இவ்வாபத்துக்கு ஆஶ்வாஸ ஹேதுவாக எனக்கொரு நல்வார்த்தை அருளிச்செய்யவேணும்" என்று ரிஷிகளைக்கேட்க; அவர்கள் சொன்னவை அடங்கப் பூர்வபக்ஷித்து ஸ்ரீமார்க்கண்டேய பகவான் எழுந்திருந்து சொன்னதாயிருக்குப். பின்பு சீராமப்பிள்ளையுடைய ஆபத்தசையிலே பட்டர் அருளிச்செய்ததாயிருக்கும். (தந்தையும் தாயுமாவார்) ப்ரியத்துக்கும் கடவர், ஹிதத்துக்கும் கடவர்.

(எளியதோரருளுமன்றே என்திறத்து) என் விஷயத்தில் மலையையெடுத்து ரக்ஷிக்கவேணுமோ? தம்மையொழிய வேறேயொரு

("நாராயண:" என்கிற பொதுவிலன்று) என்பது—பரத்வத்திலன்றென்றபடி. அவதாரணத்துக்குத் தாத்பர்யாந்தரம் (தம்மையொழியவித்யாதி). இவ்வர்த்தத்துக்கு ப்ரமாணம் (ஸர்வேஷாமித்யாதி).

ப்ரயோஜநத்தைக் கணிசித்தேனுய் அத்தைக் கொடுத்து விடுகிறோ மென்று ஆறியிருக்கிறீரோ? ஸ்ரீவிபீஷணாதிகள் ரக்ஷணம்போலே வில்லும்கோலும் எடுத்து ரக்ஷிக்கவேண்டித்தானிருக்கிறீரோ? குளிர வொரு கடாக்ஷம்கிடீர் என்விஷயத்தில் பண்ணவேண்டுவது. (எம் பிரானுர்) எனக்கு உபகாரகரானவர். இன்னுதாகிற தசையிலும் உபகாரகரென்பானென் என்னில்; செய்த அம்சத்தை இல்லை செய்யு மவரல்லாமையாலே அத்தை முன்னிடுகிறுர். அடியிலே முறையை யுணர்த்தி, அதுக்குமேலே ப்ராப்யப்ராபகங்கள் தாமே என் னு மிடத்தை உணர்த்தி, இப்போதும் நம்கூப்பீடு கேட்கவந்து ஸந்நிஹி தராயிருக்கிற ஆகாரமுண்டிறே.

(அளியன் நம்பையலென்னுர்) "அளி" என்று தண்ணளி. இவன் நமக்கு நல்லன், நம்முடைய பையலென்று ஒருவார்த்தை அருளிச்செய்யக்கேட்கவாய்த்து இவர் ஆசைப்படுகிறது; ஆழ்வீர் என்னுமது இவர்க்கு அஸஹ்யமாய்த்து.

ஶேஷபூதரான நாம் இவ்வர்த்தங்களை நினைத்திருக்க அமை யாதோ அவன் சொல்லவேணுமோவென்னில்; அதுபோராது, ஶேஷியானவனும் இதுக்குமேலெழுத்திடுமென்றுய்த்து ஶேஷத்வம் நிலைநின்றதாவது; மணக்கால் நம்பி "நம்மாணி! திருமழிசைமாலை மார்வானுக்குத்திற" என்றுரிறே. "பிள்ளைப்பிள்ளையாழ்வான்வாயாலே 'தம்பி அப்பிள்ளையாழ்வான் நம்மாணி' என்னப்பெற்றேன்" என்றுரிறே. (அம்மஓகொடியவாறே) ஆர்த்தத்வநி கேட்டால் எழுந் திருக்க வேண்டாவோ. ஆர்த்தத்வநிகேட்டும் இவர்கண் ணுறங்குவதே! இவர் திருவுள்ளம் இங்ஙனே கொடிதாய்த்தாகாதே! அம்மே! இவர் ஸ்வபாவமிருந்தபடியென் என்கிறுர். 37.

சின்ன அரு :—முப்பத்தேழாம் பாட்டு. ஸர்வேஶ்வரனை ஸர்வ விதபந்து என்கைக்கு ஸம்வாதமாக ஜதிஹ்யத்வயம் அருளுகிறுர் (இஶ்லோகந்தானித்யாதி). ரிஷிகள், "உபாயாந்தரங்கள் ரக்ஷகம்" என்ன, அதுவன்று, அண்டையிலே இருக்கிற க்ருஷ்ணனே ரக்ஷக னென்று ஸ்ரீமார்க்கண்டேய பகவான் சொன்னது. (நம்மாணீ) நம் பிள்ளாய். "அம்ம அம்ம" என்றது, விஷாதத்யோதகம். 37.

38. மேம்பொருள்போகவிட்டு மெய்ம்மையைமிகவுணர்ந்து
ஆம்பரிசறிந்துகொண்டு ஐம்புலனகத்தடக்கிக்
காம்பறத்தலைசிரைத்துன் கடைத்தலையிருந்துவாழும்
சோம்பரையுகத்திபோலும் சூழ்புனலரங்கத்தானே.

பதவுரை :— புனல் சூழ்—*காவேரி சூழ்ந்த*, அரங்கத்தானே—*கோயிலிலே கண்வளர்ந்தருளுகிறவனே !*, மேம் பொருள்—*மேன்மையை விளைப்பதாக ப்ரமிக்கச்செய்யும் இவ்வுலக விஷயங்களை*, போகவிட்டு—*வாஸனையுடன் விட்டு*, மெய்ம்மையை—*ஆத்மஸ்ரூபத்தை*, மிக உணர்ந்து—*உள்ளபடி உணர்ந்து*, ஆம் பரிசு—*ஸ்வரூபாநுரூபமான பலனாகிய பகவத்கைங்கர்யத்தை*, அறிந்து கொண்டு—*தெரிந்து கொண்டு*, ஐம் புலன்—*ஐந்து இந்திரியங்களையும்*, அகத்து அடக்கி—(*விஷயாந்தரங்களில் போகவொட்டாமல்*) *தன் வசத்திலே அடக்கி*, காம்பு அற—(*உபாயாந்தரங்களில் உள்ள*) *பற்று ஒழியும்படி*, தலை சிரைத்து—*தலையிலுள்ள சுமைகளைப் போக்கி*, உன் தலைக்கடை இருந்து—*உன் திருவாசலிலே காவல் புரிந்து*, வாழும்—*உஜ்ஜீவிக்கின்றவராய்*, சோம்பரை—(*தங்கள் நலத்தில்*) *சோம்பியிருப்பவர்களான பக்தர்களை*, உகத்தி போலும்—*உகக்குமவனல்லையோ நீ.*

அவ :—*முப்பத்தெட்டாம் பாட்டு*. (*மேம்பொருள்*) *மஹாபாரதத்துக்குச் சரமஶ்லோகம்போலாய்த்து இப்ரபந்தத்துக்கு இப்பாட்டு. மஹாபாரதமாகிறது*—(197)" **मतिमन्थानमाविध्य येनासौ श्रुतिसागरात् । जगद्धिताय जनितो महाभारतचन्द्रमाः ॥** " (மதிமந்தாநமாவித்ய யேநாஸௌ ஶ்ருதிஸாகராத் । ஜகத்திதாய ஜநிதோ மஹாபாரதசந்த்ரமா: ॥) *என்கிறபடியே ஶ்ருதிஸாரமாய்த்து மஹாபாரம்; ஸர்வேஶ்வரன் க்ஷீராப்தியைக்கடைந்து தேவர்களுக்கு அம்ருதத்தைக் கொடுத்தான்; ஸ்ரீவேதவ்யாஸபகவான் ஶ்ருதிஸாகரத்தைக் கடைந்து ஸர்வாஹ்லாதகரமான மஹாபாரதத்தை ஸம்ஸாரிகளுக்கு ஆத்மோஜ்ஜீவநஹேதுவாகக்கொடுத்தான். தேவர்களுக்கு ஈச்வரன்கொடுத்த அம்ருதம் பந்தகம்; ஸ்ரீவேதவ்யாஸபகவான் ஸம்ஸாரிகளுக்குக் கொடுத்த மஹாபாரதம் ஸம்ஸாரவிமோசநமிறே; அம்மஹாபாரதந்தான் கோதென்னும்படியாய்த்து ஸ்ரீகீதை; அதில் ஸாரமாய்த்து சரமச்லோகம். இது சொல்லுகைக்காகக் கீழடங்கச்சொல்லிற்று; இதுக்குமேல்*(198)**"इदं ते नातपस्काय"**(இதம் தே நாதபஸ்காய)*என்று*

தொடங்கி இந்தச் சரமஶ்லோகத்தினுடைய கௌரவத்தைச் சொல்லுகிறது. அப்படியே இப்பாட்டு அவதரிக்கைக்காகவாய்த்து இப்ரபந்தம் அவதரித்தது. இதுக்குமேலே ப்ரபந்தஶேஷமும் இப்பாட்டில் சொல்லுகிற அர்த்தத்தில் நிஷ்டராயிருப்பாருடைய ஏற்றம் சொல்லுகிறது. ஆக மஹாபாரதஸாரம் சரமச்லோகம் ஆனாற்போலே இப்ரபந்தஸாரம் இப்பாட்டு. இதுதான் த்வயத்தினுடைய அர்த்தத்தைச் சொல்லுகிறது. த்வயத்தில் ப்ராபகம் முன்னாய் ப்ராப்யம் பின்னாயிருக்க, இதில் ப்ராப்யம் முன்னாய் ப்ராபகம் பின்னாயிருப்பானேனென்னில்; வ்யுத்பத்திவேளையில் ப்ராப்யம் முன்னாய் ப்ராபகம் பின்னாயிருக்கக்கடவதிறே. (199) "स्वर्गकामो ज्योतिष्टोमेन यजेत" (ஸ்வர்க்ககாமோ ஜ்யோதிஷ்டோமேந யஜேத) என்றிறே வ்யுத்பத்தி வேளையிலிருப்பது; அநுஷ்டாநவேளையிலே ஜ்யோதிஷ்டோமாநுஷ்டாந பூர்வகமாகவிறே ஸ்வர்க்கஸித்தி. ப்ராபகநிஷ்டையாலேயிறே ப்ராப்யஸித்தி. அப்படியே இப்பாட்டிலே வ்யுத்பத்திவேளையாய் த்வயம் அநுஷ்டாநவேளையாயிருக்கிறது. அதில் பூர்வபாகத்தளவிலே அநுஸந்தித்தார் நம்வாழ்வார்; உத்தரபாகத்தை அநுஸந்தித்தாள் ஆண்டாள்; அவையிரண்டையும் சேர அநுஸந்தித்தார் இவ்வாழ்வாரேயாய்த்து. இப்பாட்டுக்குக் கீழ்ப்பாட்டோடே ஸங்கதியென்னென்னில்; "அளியன்நம்பையல் என்னார் அம்மவோ கொடியவாறே" என்று கிலாய்த்து வார்த்தை சொன்னவாறே, விஷயாந்தர ப்ராவண்யகரமான ஸம்ஸாரத்திலே வகுத்த புருஷார்த்தத்தை அபேக்ஷிக்கையும், தத்ஸித்திக்கு நம் கைபார்த்திருக்கையும் அதுக்குமேலே விளம்பம்பொறுதே கிலாய்க்கையும், ஆக இவ்வளவு புகுரநிற்பாரைப் பெறுவோமே! என்று பெரியபெருமாள் திருவுள்ளம்

அரு:—முப்பத்தெட்டாம் பாட்டு. (மேம்பொருளித்யாதி).மஹாபாரதத்துக்கு ஆத்மோஜ்ஜீவந ஹேதுத்வம் சரமச்லோகமுகேந என்றபடி. ப்ரபந்தஸாரம் என்றதுக்கு ஹேது (இதுதானித்யாதி).

பூர்வபாகத்தளவிலே என்றது த்வயத்தில் பூர்வபாகத்தளவிலே என்றபடி. "அகலகில்லேன்" என்கிற பாட்டிலே அநுஸந்தித்தாரென்றபடி. ஆண்டாள் அநுஸந்தித்த "சிற்றஞ் சிறுகாலே" என்றபடி. த்வயார்த்தமான இப்பாட்டிலே, அதில் அநுக்தமான உகப்

ப்ரஸங்கமாய், திருவுள்ளத்தில் ஹர்ஷமடங்காலும் திருமுகத்திலே தோற்றும்படியாயிருக்க; தேவரீரைக்கிட்டி தேவரீர் பக்கலிலே ந்யஸ்த பரராய்த் தந்தாமுடைய ஹிதத்தில் கைவாங்கியிருப்பாரைக்கண்டால் இங்ஙனேயோ தேவரீர் திருவுள்ளமிருப்பது என்று பெரியபெருமாள் திருமுகத்தைப் பார்த்து விண்ணப்பம் செய்கிறார். சரமச்லோகம் ப்ரபத்தியை விதிக்கிறதாயிருக்கும்; அதில் ருசியுடையாருடைய அநுஸந்தாநமாயிருக்கும் த்வயம்; த்வயநிஷ்டர் பக்கல் ஈச்வரனுக் குண்டான உகப்பைச் சொல்லுகிறது இப்பாட்டு.

வ்யா :— (மேம்பொருள்) இதுக்கு மூன்றுபடி நிர்வாஹம். மேலெழுந்தபொருளென்றும், மேவின பொருளென்றும், மேம் பாட்டை விளக்கும் பொருளென்றும். மேலெழுகையாவது :—கர்ம மடியாக வந்தேறியாய், பகவத்ஜ்ஞானம் பிறந்தவாறே மறந்துபோம தாயிருக்கை; இத்தை போக்யமென்று பார்த்து இழிந்தவனுக்கு ஆபாதப்ரதீதியில் ஒன்றுபோலே தோற்றி, நிரூபித்தால் அநுபாவ்ய மாயிருப்பதொன்றுமின்றிக்கே இருக்கையென்றுமாம்; மேவின பொருள் என்றது, (200) "दुरत्यया" (துரத்யயா) என்கிறபடியே சேதநனால் பிரிக்கவொண்ணாதபடியிருக்கை. "தேவோஹம், மநுஷ் யோஹம்" என்று உடம்பைத் தானாக நினைத்திருக்கும்படியிறே இத் தோட்டைப் பொருத்தமிருப்பது; அத்தைச் சொல்லிற்றாகவுமாம். மேம்பாட்டை விளக்கையாவது—தன்னைப் பற்றினாரை ஸர்வஜ்ஞதம ராக அபிமாநித்திருக்கும்படி பண்ணவற்றாகை. பொருள் என்று பதார்த்தம்; அதாகிறது :—தேஹம். இதுதான் தேஹாநுபந்தி யான ப்ராக்ருத பதார்த்தங்களுக்கும் உபலக்ஷணம். (போகவிட்டு) வாஸனையோடே விட்டென்கை. ஸ்ரீரிகளால் அவை துஷ்கரமாகை யாலே ப்ரக்ருதி ப்ராக்ருதங்கள் அபுருஷார்த்தமென்கிற ஜ்ஞாநத்தை யுடையனாகை; அல்லது புகுரவிட்டான் இவனாகிலிறே இவனால் போகவிடலாவது; (200) "मम माया दुरत्यया" (மம மாயா துரத்யயா)

பைச் சொல்லுகிறதுக்குக்கருத்து—மேலில் பாட்டுகளிலே, த்வய நிஷ்டர்க்கு அல்லாதாரில் ஏற்றத்தைச் சொல்லுகையாலே, இப் பாட்டிலும் த்வயநிஷ்டருடைய ஏற்றத்துக்குடலாகச் சொல்லு கிறதென்று தாத்பர்யம் விவக்ஷித்தருளிச்செய்கிறார் (சரமச்லோக மித்யாதி).

என்கிறபடியே ஈச்வரன் பந்தித்த பந்தத்தை இவனால் போக்க வொண்ணாதிறே. (200a) "अनात्मन्यात्मबुद्धिर्या" (அநாத்மந்யாத்ம புத்திர்யா) என்கிற ச்லோகத்தின்படியே தேகத்தில் ஆத்மபுத்தியை யும், தேஹாநுபந்தியான ப்ராக்ருதபதார்த்தங்களில் மமதாபுத்தியை யும், தேஹாதிரிக்தமான ஆத்மாவில் ஸ்வதந்த்ரபுத்தியையும் தவிருகை. அளவுடையரான ஸநகாதிகளுக்கும் செய்யலாவது இவ்வளவே. இரண்டுமரம் கூடநின்றால் ஒன்றை வெட்டநினைத்த வன் ஒருமரத்திலே கொத்திப் பெருங்காயத்தையிட அதுபட்டு நிற்குமாப்போலே, இப்ரதிபத்தி மாத்ரத்திலே இதுவிடும். "மெய்ம் மையை மிகவுணர்ந்து ஆம் பரிசறிந்துகொண்டு" என்று மேலும் ஜ்ஞாநப்ரகரணமாகையாலே, "போகவிட்டு" என்று ப்ரகரணபலத் தாலே ஜ்ஞாநத்தைச் சொல்லிற்றாகக்கடவது.

(மெய்ம்மையை மிகவுணர்ந்து) மெய்யென்கிறது ஆத்மாவை. "மெய்" என்ன ஆத்மாவைக்காட்டுமோவென்னில்; (201) "सत्यञ्चानृतञ्च सत्यमभवत्" (ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யமபவத்) என்கிற ச்ருதிச் சாயையாலே அருளிச்செய்கிறார். ஸத்யஶப்தம் அஸத்வ்யாவ்ருத்தி யைச் சொல்லுகிறதன்று; ஆத்மஸ்வரூபத்தின்நித்யதையைச் சொல்லு கிறது. "மெய்ம்மை" என்றொரு முழுச்சொல்லாய், ப்ரத்யக் விஷயத் தைச் சொல்லுகிறது. "கைம்மை, பொய்ம்மை" என்னுமாப்போலே; ஆக "மெய்ம்மை" என்று மெய்யானதன்மை என்றபடி. (மிகவுணர்ந்து) "தேஹமே ஆத்மா" என்றிருக்கும் லோகாயதிகனையவன்றிக்கே, "தேஹாதிரிக்தமாய் நித்யமாயிருக்கும் ஆத்மா" என்னும் மீமாம்ஸ கனையவன்றிக்கே, "ஜ்ஞாநம் ஆகந்துகம்" என்னும் வைஶேஷிகனைய வன்றிக்கே, ஸ்வயம்ப்ரகாஶமாய், நித்யமாய், ஜ்ஞாநகுணகமாய், அணுபரிமாணமாய், ஈச்வரனுக்கு அநந்யார்ஹஶேஷமாய் அதுதான் ததீயஶேஷத்வபர்யந்தமாக உணருகை. அதாவது:— ஆத்மாவை உள்ளபடி உணருகை.

"மெய்ம்மை" என்கிறதுக்குஅர்த்தாந்தரம்(ஆகவித்யாதி). முழுச் சொல்லென்று முந்தினவர்த்தத்துக்கு த்ருஷ்டாந்தம் (கைம்மை யித்யாதி).("மை" என்று ப்ரத்யயவிசேஷத்தைச் சொல்லுகிறது) என்கிற வாக்யம் ஸந்திக்தம்.

(ஆம்பரிசறிந்துகொண்டு) ப்ரக்ருதி ப்ராக்ருதங்கள் த்யாஜ்யம் என்று அறிந்து. ஆத்மாவை உள்ளபடி உணர்ந்தால் பின்னை, ஆம் பரிசாவது கைங்கர்யமேயாய்த்து. ஆம்பரிசு வர்த்திக்கும்படி அறிந்து. ஆத்மாபிமாநரூபமாகவாய்த்து வ்ருத்தி ஹேதுக்கள் தானிருப்பது. தன்னைத்திர்யக்காக அபிமாநித்தபோது த்ருண ஸமூஹமாய்த்து வ்ருத்தி ஹேதுவாகக்கடவது; "மநுஷ்யோஹம்" என்று அபிமாநித்தபோது அந்நம் வ்ருத்தி ஹேதுவாகக்கடவது; "தேவோஹம்" என்றபோது அம்ருதம் வ்ருத்திஹேதுவாகக்கடவது; "தாஸோஹம்" என்றபோது கைங்கர்யமே வ்ருத்திஹேதுவாகக் கடவது. ப்ரக்ருதி ப்ராக்ருதங்களில் ஸங்கோசம்போய் ஸ்வரூபத்தை உள்ளபடியறிந்தால் ஸஹஜகைங்கர்யமேயிறே வ்ருத்திஹேதுவாவது. (அறிந்துகொண்டு) "நிதியெடுத்துக்கொண்டு" என்னுமாப்போலே ப்ரக்ருதி ப்ராக்ருதங்கள் த்யாஜ்யம் என்கிற ஜ்ஞாநமும் ஆத்மா பகவத்பரதந்த்ரமென்கிற ஜ்ஞாநமும் ப்ராப்யம் கைங்கர்யம் என்கிற ஜ்ஞாநமுமிறே சேதநனுக்கு வேண்டுவது; விடுவிக்கையும் பற்றுவிக்கையும், உபாயபூதனான ஈச்வரன் க்ருத்யமிறே. "மேம்பொருள் மெய்மை, ஆம்பரிசு" என்கிற இவை, அவ்வோ பதார்த்தங்களுக்கு வாசகமன்றிக்கேயிருக்க தத்தத் ஸ்வபாவவாசியான ஶப்தங்களாலே, மறைத்தருளிச் செய்கிறார் அர்த்த கௌரவத்தாலே.

(ஐம்புலனகத்தடக்கி) இந்த்ரியங்களைத் தன்னுள்ளேயாம்படி பண்ணி. அதாவது :—தன்வசத்திலேயாம்படி பண்ணுகை. "மேம் பொருள் போகவிட்டு" என்கிற முதல் வார்த்தையிலேபோயிருக்க, "ஐம்புலனகத்தடக்கி" என்கிறது கீழ்ச்சொன்ன கைங்கர்யத்திலே "மமேதம்" என்கிற புத்தியைத்தவிருகை. கைங்கர்யத்திலும் நியமிக்க வேண்டுவன சிலவுண்டு; அவற்றையாய்த்து இங்குச் சொல்லுகிறது. தனக்கினிதாகப் பண்ணும் கைங்கர்யமும் அபுருஷார்த்தம்; தனக்கும் அவனுக்கும் இனிதாகப்பண்ணும் கைங்கர்யமும் அபுருஷார்த்தம்; அவனுக்கே ப்ரயோஜநமாகப் பண்ணுமதுவே புருஷார்த்தம். * "தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே" என்றும், (202) "रममाणा

(கோமுற்றவரித்யாதி) விவரணம் (தண்டமுகத்தாலேயித்யாதி).

* திருவாய்மொழி (2-9-4).

वने त्रय:" (ரமமாணு வநே த்ரய:) என்றும் சொல்லக்கடவதிறே. ஆக இவ்வளவால் உத்தரகண்டார்த்தமான ப்ராப்யம் சொல்லிற்றாய்விட்டது. "மேம்பொருள்போகவிட்டு" என்றும், "ஐம்புலனகத் தடக்கி" என்றும் நமஃஶப்தார்த்தம் சொல்லப்பட்டது; "மெய்ம்மையை மிகவுணர்ந்து" என்கிறவிது, நாராயணபதத்தில் நாரஶப்தார்த்தம் சொல்லிற்றாய், அந்த ஶேஷத்வத்துக்கு ப்ரதிஸம்பந்தியையொழிய ஸ்திதியில்லாமையாலே ஶேஷித்வம் ஆர்த்தமாகச் சொல்லிற்றாய், ஆக நாராயணஶப்தார்த்தம் சொல்லிற்றாய்த்து. "ஆம்பரிசறிந்துகொண்டு" என்று சதுர்த்தியிலர்த்தம் சொல்லிற்றாய்த்து. "உணர்ந்து" என்று கொண்டு ஜ்ஞாத்ருத்வ பரமாகச் சொல்லுகையாலே ப்ரணவார்த்தம் சொல்லிற்றாய்த்து.

இப்பாட்டில் குறையும் பூர்வார்த்தத்தில் சொல்லுகிற ப்ராபகத்வத்தைச் சொல்லுகிறது. (காம்பறத்தலைசிரைத்து) காம்பற—உபாயாந்தரங்களில் தனக்குண்டான தொற்றற, தலைசிறைத்து—தன் தலையிலுண்டான துரிதங்களைப்போக்கி. தன் தலையில் கிடக்கிற ஸாதநாந்தரங்களின் தொற்றை அறுத்தென்றபடி. தலைமயிராகிறதுதான் அபிமாநஹேதுவிறே. கோமுற்றவர் தண்டிக்குமிடத்தில் தலையைச் சிரைக்கிறது அபிமானத்தைப் போக்குகிறபடியாய்த்து. ஏகாந்தியாயும் ஸந்யாஸியாயும் வபநம் பண்ணுகிறது தன் அபிமாநத்தைத் தானே போக்குகிறபடியிறே. தண்டமுகத்தாலே பிறர் அபிமாநத்தைப் போக்குவதும் இம்முகத்தாலே; ஸ்வாபிமானத்தைப் போக்குவதும் இம்முகத்தாலேயிறே. ஆக அஹங்கார கர்ப்பமான உபாயாந்தரபரித்யாகத்தைச் சொன்னபடி. உபாயாந்தர பரித்யாக பூர்வகமாகவிறே ஸித்தோபாய பரிக்ரஹமிருப்பது. "காம்பறத் தலைசிரைத்து" என்றவிதுவும் அர்த்தகௌரவத்தாலே மறைத்தருளிச்செய்கிறார்.

இவரேயன்று, அர்த்தகௌரவத்தாலே ஶ்ருதியும் (13)"द्वासुपर्णा" (த்வாஸுபர்ணா) இத்யாதிகளிலே அர்த்தங்களை மறைத்துச் சொல்லும்; அந்த ச்ருதிச் சாயையாலே அருளிச்செய்கிறார். (உன்கடைத் தலையிருந்து) உன் தலைக்கடையென்றபடி. (203) "चरणौ" (சரணௌ) என்கிற ஸ்தாநத்திலே "கடைத்தலை" என்கிறார். ஸ்வநிகர்ஷத்தை

அர்த்த கௌரவத்தாலே மறைத்த மாத்ரத்துக்கு த்ருஷ்டாந்தம் (த்வாஸுபர்ணேத்யாதி). நங்கூரம் – இரும்புத்தடி.

அநுஸந்தித்துத் திருவடிகளிலே கிட்டமாட்டாமையாலும், ஸம்ஸாரத்தின் தண்மையை அநுஸந்தித்துப் புறம்புபோகமாட்டாமையாலும், திருவாசலைப் பற்றுகிறார். திருக்கண்ணமங்கையாண்டான், ஒரு ஸம்ஸாரி, தன் வாசலைப்பற்றிக் கிடந்ததொரு நாயை நலிந்தவனை வெட்டித் தானும் குத்திக்கொண்டபடியைக்கண்டு, "ஒரு தேஹாத்மாபிமாநியளவு இதுவானால் பரமசேதனன் யமாதிகள் கையில் நம்மை விட்டுக்கொடான்" என்று திருவாசலைப்பற்றிக்கிடந்தானிறே. (இருந்து) விஷயாந்தர ப்ராவண்யத்தாலே பாகுபரகென்று திரிந்தவன், மரக்கலத்துக்கு நங்கூரம் விழவிட்டாற்போலே (204) "अथ सोऽभयङ्गतो भवति" (அத ஸோऽபயங்கதோ பவதி) என்று, அபயஸ்தாநத்தைப்பற்றி நிர்ப்பயனாயிருந்தபடி. (வாழும்) உபாயம் ஈச்வரனேயானால் போகமிறே பின்புள்ளது. "இருந்துவாழும்" என்று அவ்விருப்புத்தானே வாழ்ச்சியானவிருப்பு என்றுமாம். (சோம்பரையுகத்திபோலும்) உன்பக்கலிலே ந்யஸ்தபரராய் ஸ்வஹிதத்தில் சோம்பினவர்களைக்கண்டால் உனக்குத் திருவுள்ளமிங்ஙனே உகந்தாகாதே இருப்பது. "வாழும்சோம்பர்" என்று கெடும் சோம்பரை வ்யாவர்த்திக்கிறதென்றுமாம். அதாகிறது :— ஶாஸ்த்ரத்தில் நாஸ்திகராய் கர்த்தவ்யங்களை விடுகையன்றிக்கே ஆஸ்திக்யாதிரேகத்தாலே நிரபேக்ஷோபாயத்தை ஸ்வீகரித்து பகவதநுபவமே யாத்ரையாய் ஸ்வஹிதத்தில் சோம்பியிருக்கை. (போலும்) நித்யஸூரிகளை உகக்குமாப்போலே சோம்பரை உகப்புதி. (சூழ்புனலரங்கத்தானே) இது நீரறிந்தபடி எங்ஙனேயென்னில்; கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறவிதுதானே அறிவிக்கிறதில்லையோ? நீர்வாய்ப்பையும், நிழல்வாய்ப்பையும்பற்றக்கண்வளர்ந்தருளுகிறாரென்றுபோராய், "ஒருசோம்பரைக்கிடைக்குமோ" என்னும் நசையாலேயிறே தேவரீர்சோம்பாதே கண்வளர்ந்தருளுகிறது. "காம்பறத்தலைசிரைத்து" என்றவிடம் உபாயஸ்வீகாரத்துக்கு அங்கமான உபாயாந்தரபரித்யாகத்தைச் சொல்லுகிறது. "சூழ்புனலரங்கத்தானே—உன்கடைத்தலை" என்று நாராயண ஶப்தார்த்தமான ஶீலாதிகளை நினைக்கிறது.

பிராட்டி ஸ்வரூபகநிரூபகதர்மமாகையாலும், நாராயண ஶப்தத்திலே அந்தர்பூதையாகையாலும், 'உன்' என்கிறவிதிலே லக்ஷ்மீஸம்பந்தம் அநுஸந்தேயம். கடைத்தலை என்றது "சரணம்" என்ற

படி. "இருந்துவாழும்" என்ற க்ரியாபதத்திலே உபாயாத்யவஸாயத்தையும், அதுதானே போகரூபமாயிருக்கிறபடியையும் சொல்லிற்று. "சோம்பரை" என்று (203) "प्रपद्ये" (ப்ரபத்யே) என்கிற உத்தமனாலே ஆக்ஷிப்தனான அதிகாரியைச் சொல்லுகிறது. 38.

---

39. அடிமையில்குடிமையில்லா அயல்சதுப்பேதிமாரில்
குடிமையில்கடைமைபட்ட குக்கரில்பிறப்பரேலும்
முடியினில்துளபம்வைத்தாய் மொய்கழற்கன்புசெய்யும்
அடியரையுகத்திபோலு மரங்கமாநகருளானே.

நாராயண ஶப்தத்திலே அந்தர்பூதமென்றது நாரஶப்தத்திலே அந்தர்பூதமென்றபடி 38.

சின்ன அரு :—முப்பத்தெட்டாம் பாட்டு. நம்மாழ்வார், "அகலகில்லேன்" என்கிற பாட்டிலும், ஆண்டாள், "சிற்றஞ்சிறுகாலே" என்கிற பாட்டிலும் அநுஸந்தித்தார்கள். (மேவின) இவனால் பிரிக்கப்போகாதபடி பொருந்தினவென்னுதல்; தேஹாத்மபேதம் தெரியாதபடி பொருந்தினவென்னுதல். ஶரீரனாயிருக்கிறவனுக்கு ஶரீரத்தைவிட்டுப்போமோவென்ன அருளுகிறார் (ஶரீரிகளாலித்யாதி). (அநாத்மந்யாத்மபுத்தி) ஆத்மாவல்லாத தேஹத்திலே ஆத்ம புத்தியும், அன்றிக்கே, ஸ்வதந்த்ரஸ்வபாவமில்லாத ஆத்மாவிலே ஸ்வாதந்த்ர்யபுத்தியும். ஆத்மஶப்தம் தேஹத்திலும் ஸ்வபாவத்திலும் வர்த்திக்கும். "போகவிட்டு" என்று நன்றாக விடுகையன்றோ சொல்லுகிறது. ஜ்ஞாநமாத்ரத்திலே ஒதுக்குவானென்னென்ன அருளுகிறார் (மெய்ம்மையைமிகவுணர்ந்தித்யாதி). (வர்த்திக்கும்படியை) ஆத்மாவர்த்திக்கும்படியை. ஜ்ஞாநமாத்ரம் போருமோவென்ன அருளுகிறார் (விடுவிக்கையுமித்யாதி). "தலைசிரைத்து" என்றால் ஸாதநாந்தர நிவ்ருத்தியைக் காட்டும்படி எப்படியென்ன, (தலைமயிரித்யாதி). (ஶ்ருதிமறைத்துச் சொல்லுகை) ஜீவாத்மபரமாத்மாக்களைப் பக்ஷிகளாக மறைத்துச் சொல்லுகை. உள்ளே புகுதல், புறம்பே போதல் செய்யாமல் தலைவாசலிலே இருக்கிறதென்? என்ன (ஸ்வநிகர்ஷத்தையித்யாதி). (நங்கூரம்) இரும்புக் கலப்பை. 38.

பதவுரை :— முடியினில்—திருமுடியில், துளபம் வைத்தாய்—(ஸர்வேச்வரத்வ ஸூசகமான) திருத்துழாய் மாலையை அணிந்தவனே !, அரங்கம் மாநகர் உளானே—, அடிமையில்—(உனக்கு) கைங்கர்யம் செய்வதில், குடிமை இல்லா —ஊற்றமில்லாதவராய், அயல்—(அடிமைக்கு) மாறுபட்டவர்களாய், சதுப்பேதிமாரில்—நான்கு வேதங்களையுமோதினவர்களான வேதியர்களைக் காட்டிலும், குடிமையில் கடைமை பட்ட—குடிப்பிறப்பினால் கீழானதான, குக்கரில்—சண்டாளருக்குக் கீழ்ப்பட்ட ஜாதியில், பிறப்பர் எலும்—பிறந்தவர்களேயானாலும், மோய் கழற்கு—உன் நெருங்கிய திருவடிகளுக்கு, அன்பு செய்யும்—பரியும்படியான, அடியரை — அடியவர்களையே, உகத்தி போலும்—உகக்குமவனன்றோ நீ.

அவ :—முப்பத்தொன்பதாம் பாட்டு. (அடிமையில்) அடிமை தொடங்கி மேல் ஆறு பாட்டும் இந்த ஜ்ஞாநமுடையாருடைய ராஜகுலம் சொல்லுகிறது. இவருடைய * பயிலுஞ்சுடரொளி † நெடுமாற்கடிமை இருக்கிறபடி. ஜந்மவ்ருத்த ஸ்வபாவங்களால் குறைய நின்றார்களேயாகிலும் அவர்கள் இந்த ஜ்ஞாநமுடையார்களாகில் உத்தேச்யரென்கிறார். இப்பாட்டால் எத்தனையேனும் தண்ணிய ஜந்மங்களிலே பிறந்தவர்களேயாகிலும் இந்த ஜ்ஞாநத்திலே நிஷ்டையுடையார்களாகில் திருத்துழாயோபாதி ஈச்வரனுக்கு ப்ரஸாவஹிக்கப்படுவர் என்கிறார்.

வ்யா :— (அடிமையில் குடிமையில்லா) கைங்கர்யம் நமக்குக் கர்த்தவ்யம் என்றிருக்குமவர்களன்றிக்கே இருக்கை. கைங்கர்யமாகிறது—ஸஹஜம் ; அதொழியச்செல்லா திருக்கையாய்த்து ப்ராப்தம்; அதின்றிக்கே இருக்குமவர்கள். (அயல்சதுப்பேதிமாரில்) அடிமைக்கசலான சதுர்வேதிகளாயிருப்பாரில்காட்டில். வேதாத்யயனம் பண்ணுகிறதுக்கு ப்ரயோஜநம் ஈச்வரனை உள்ளபடி அறிக்கையும், தன்னைஉள்ளபடி அறிகையும் கைங்கர்யம் ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தமென்று அறிகையுமாய்த்து. அயலாகையாவது :—இந்தஜ்ஞாநந்துக்குடலாகவேதாத்யயனம்பண்ணுகிறோமென்று அறியாதிருக்கை. அத்யயனபலம் அர்த்தஜ்ஞாநமென்றறியாதவர்கள் சதுர்வேதிகளானாலும் நிஷ்ப்ரயோஜநமென்கை. (205) "विष्णुभक्तिविहीनो यस्सर्वशास्त्रार्थ-

* திருவாய் (3-7). † திருவாய் (8-10).

वेद्यपि। ब्राह्मण्यं तस्य न भवेत् तस्योत्पत्तिर्निरूप्यताम् ॥" (விஷ்ணுபக்திவிஹீநோ யஸ்ஸர்வஶாஸ்த்ரார்த்தவேத்யபி। ப்ராஹ்மண்யம் தஸ்ய ந பவேத் தஸ்யோத்பத்திர் நிரூப்யதாம் ॥) என்னக்கடவதிறே. (206) "यः पुत्रः पितरं द्वेष्टि" (ய: புத்ர: பிதரம் த்வேஷ்டி) இத்யாதி. இனி, இவர்களிற் காட்டில் ஈச்வரனுக்கு உத்க்ருஷ்டரைச் சொல்லுகிறது மேல்.

(குடிமையில் கடைமைப்பட்ட குக்கரில் பிறப்பரேலும்) வேத விஹிதங்களை அநுஷ்டியாதும், நிஷித்தங்களை அநுஷ்டித்தும் போருகையாலே நிஹீநஜந்மங்களிலே பிறந்தவர்களேயாகிலும். குக்கராகிறார் :—சண்டாளரிலும் தண்ணியர் சிலர். "பிறப்பரேலும்" என்கிறது பகவத்ஜ்ஞாநத்துக்கு ஜன்மங்களுடைய உத்கர்ஷாபகர்ஷங்களில் நியதியில்லை, (207) "सर्वत्र खलु दृश्यते" (ஸர்வத்ர கலு த்ருஶ்யதே) என்கிறபடியே, இந்த ஜ்ஞாநம் எல்லா ஜந்மங்களிலும் ஸம்பவிக்குமென்கை; வேதோபப்ரும்ஹணார்த்தமாக அவரித்த ஸ்ரீராமாயணத்தில், காட்டிலே திரிவார் சில வேடரையும், வேடுவிச்சிகளையும், குரங்குகளையும், ராக்ஷஸரையும், மஹாபாரதத்தில் விதுரதர்மவ்யாதாதிகளையும், பிஶாசங்களையும், இடையரையும், இடைச்சிகளையும் கண்டோமிறே. ‡ "பாம்பணைமேல் பள்ளிகொண்டருளும் சீதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியரே" என்கிறபடியே.

நித்யஸூரிகளிற்காட்டில் இங்கேவந்து ஈஶ்வரன் ஆர்ஜித்தவர்களாகையாலே இவர்கள் சீரியரென்கை. அல்லாத பொன்னிற்காட்டில் வேதகப்பொன்னுக்கு ஏற்றமுண்டிறே. (முடியினில் துளபம்வைத்தாய்) திருத்துழாயோபாதி ஶிரஸாவஹிக்குமவர்களென்கை. திருத்துழாய்மாலை ஸர்வேச்வரத்வத்துக்கு ஸூசகமானாற்

அரு :— முப்பத்தொன்பதாம் பாட்டு. (அடிமையித்யாதி). "குடிமையில்லா" என்றவிடத்தில், குடிமையாகிறது—ப்ராப்தி; குடிமையில் கடைமைப்பட்டவர்கள்—அடிமையில் ப்ராப்தியுடையவர்கள், குக்கரில் பிறப்பரேலும் என்றபடி. ஜ்ஞாநமுண்டானது கொண்டு இவர்கள் ஜந்மத்தில் தண்மைபாராதே இவர் உத்தேச்யரென்று இப்பாட்டிலே சொல்லுகைக்கு ஹேதுவேதென்ன அருளிச்செய்கிறார் (பாம்பணைமேலித்யாதி). 39.

---

‡ திருவிருத்தம் (79).

போலே இவர்களாலே உன்னுடைய ஸர்வேச்வரத்வம் நிறம்பெறு மென்னவுமாம். (மெய்கழற்கன்புசெய்யும்) "ஐம்புலனகத்தடக்கி" என்கிறபடியே உன் உகப்புக்குப் புறம்பானவற்றைப் பொகட்டு * "உன்செவ்வடி செவ்விதிருக்காப்பு" என்று திருவடிகளுக்குப் பரியுமதுவே யாத்ரையாய், அத்தையே ப்ராப்யமாக நினைத்திருக்கு மவர்கள். (அடியரை) கீழ், உபேயத்தைச் சொல்லிற்றாய், இத்தால், உபாயத்தைச் சொல்லுகிறது. "சோம்பர்" என்கிறபடியே ஸ்வரூ பத்தை உள்ளபடி உணர்ந்து ஸ்வரக்ஷணத்தில் அந்வயமின்றிக்கே இருக்குமவர்கள். (அடியர்) அடியிலுள்ளார். உகப்பதும் திருவடி களேயாய், தாரகமும் திருவடிகளேயாயிருக்கை. † "நிழலுமடிதாறு மானோம்" என்னக்கடவதிறே. (உகத்திபோலும்) இப்படி இருக்கு மவர்களை உகத்தி. இதுக்குப் புறம்பான சதுர்வேதிகளைக் காட்டில் இவர்களை உகத்தி. இதுக்குப் புறம்பான சதுர்வேதிகளைக் காட்டில் இவர்களையேயிறே தேவரீர் உகந்திருப்பது. ‡ [(போலும்) திருத் துழாய்போலும்; முடியினில் துளபம்போல் அடியரை உகப்புதி.] (அரங்கமாநகருளானே) நிஹீனஜந்மாக்களாய் உனக்கு நல்லராயிருப் பார்க்கு முகங்கொடுக்கைக்காகவன்றோ இங்குவந்து கண்வளர்ந்தருளு கிறது. உத்க்ருஷ்டர்க்கு முகங்கொடுக்குமிடத்தில் பரமபதத்திலே யிருக்கவமையாதோ? 39.

---

40. திருமறுமார்வ! நின்னைச்சிந்தையுள் திகழவைத்து
மருவியமனத்தராகில் மாநிலத்துயிர்களெல்லாம்
வெருவுறக்கொன்றுசுட்டிட் டீட்டியவினையரேலும்
அருவினைப்பயனதுய்யார் அரங்கமாநகருளானே.

சின்ன அரு:— முப்பத்தொன்பதாம் பாட்டு. (குடிமையில் கடைமை) குலத்தில் கடைக்குலம். (குக்கர்) ச்வபசர். நித்யஸூரி களிற்காட்டில் இவர்களுக்கு ஏற்றமேதென்ன (அல்லாதபொன்னித் யாதி). வேதகப்பொன்தன்னோட்டை ஸம்பந்தத்தாலே இரும்பை யும் பொன்னாக்குமாப்போலே இவர்களும் தங்களோட்டை ஸம்பந் தத்தாலே ஸம்ஸாரிகளையும் பகவச்சேஷபூதராக்குகையாலே நித்ய ஸூரிகளிலும் அதிகரென்றபடி. (அடியிலுள்ளார்) திருவடிகளிலே ஸத்தைபெற்றவர்கள். "கழற்கன்புசெய்யுமடியரை" என்றும் கூட்டி அருளிச்செய்கிறார் (உகப்பது மித்யாதி). 39.

---

* திருப்பல்லா (1). † பெரிய திருவ (31). ‡ குண்டலிதம் அதிகம்

பதவுரை :— திரு— பெரிய பிராட்டியையும், மறு—ஸ்ரீவத்ஸ மென்னும் மறுவையும், மார்வ—திருமார்பில் தரித்துள்ளவனே! அரங்கமா நகருளானே!—, மாநிலத்து—இப்பெரிய பூமியிலுள்ள, உயிர்கள் எல்லாம்—ஜீவராசிகளையெல்லாம், வெருவு உற—(உலகமுழுவதும்) நடுங்கும்படி, கொன்று—(ஆயுதங்களால்) கொலைசெய்தும், சுட்டிட்டு—(தீயினால்) கொளுத்தியும், ஈட்டிய வினையர் ஏலும்—ஸம்பாதிக்கப்பட்ட பாபத்தையுடையவர்களானாலும், நின்னை—உன்னை, சிந்தையுள்—(தங்கள்) நெஞ்சிலே, திகழ வைத்து — விளங்கும்படி வைத்து, மருவிய மனத்தர் ஆகில்—திடமான நம்பிக்கையுடையராயிருப்பரேயானால் (அவர்கள்), அரு வினை—கொடிய பாபங்களினுடைய, பயன் அது—பலனை, உய்யார்—அநுபவிக்கமாட்டார்கள்.

அவ :—நாற்பதாம் பாட்டு. (திருமறுமார்வ) ஜந்மத்தால் வந்த தண்மையன்றிக்கே எத்தனையேனும் தண்ணியவ்ருத்தமுடையாரும், மேம்பொருளில் சொன்ன ஜ்ஞாநத்திலே நிஷ்டராகில் அவர்களுக்கு அந்தக் கர்மபலம் அநுபவிக்கவேண்டா என்கிறார்.

வ்யா :—(திருமறுமார்வ) திருவையும் மறுவையும்மார்விலேஉடையவனே. ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரனே! (208) "श्रीवत्सवक्षाः" (ஸ்ரீவத்ஸவக்ஷா:) என்கிறவிது ஸர்வேச்வரத்வ சிஹ்நமிறே. பிராட்டி திருமார்பிலே எழுந்தருளியிருக்கிற இருப்பை அநுஸந்திக்கிறாரிறேவாத்ஸல்யம் தோற்றுகைக்காக. § "அலர்மேல் மங்கையுறைமார்பா" என்றும், ‡ "நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும்" என்றும்மிறே இவர்கள் வார்த்தை இருப்பது. இதுதான் மேம்பொருளில் மறைத்த லக்ஷ்மீ

அரு :—நாற்பதாம் பாட்டு. (திருமறு இத்யாதி). ஸர்வேச்வரத்வ சிஹ்நமிறே என்றது—"மருவிய" என்று சொல்லுகிற ப்ராப்யத்வோபயோகித்வேந. (வாத்ஸல்யம் தோற்றுகைக்காக) என்றது "பயனதுய்யார்" என்றதுக்கு உபயோகித்வேந. அன்றிக்கே, "சிந்தையுள் திகழவைத்து மருவியமனத்தராகில்" என்று சொல்லுகிற உபாயோபேயோபயோகித்வேந சொல்லுகிறதென்று தாத்பர்யாந்தரம் விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் (அலர்மேல்மங்கை யித்யாதி). "திகழ" என்றதுக்கு ஸ்வகதஸ்வீகாரம் கலசாமை

---

§ திருவாய் (6-10-10). ‡ திருப்பல்லா (2).

ஸம்பந்தத்தை அதில் நிஷ்டையுடையவர்களுடைய வைபவம் சொல்லுகிறவிடத்தில் வெளியிடுகிறார். உபயோபேயங்கள் இரண்டுக்கும் அவள் ஸம்பந்தமே வேணும் என்னுமிடம் தோற்றுகிறது. (நின்னைச் சிந்தையுள் திகழவைத்து) ஸ்ரிய:பதியான உன்னை உபாயாந்தரங்கள் கலசாமே நெஞ்சிலே விளங்கும்படியாக அத்யவஸித்து. ஸமிதைபாதி ஸாவித்ரி பாதியாக இவன் தலையிலும் சிறிது ஸஹகாரமுண்டாகில் அவனுடைய உபாயபாவம் திகழாதே மழுங்குமென்கை. ரக்ஷிப்பிக்கைக்குப் பிராட்டியும், ரக்ஷிக்கைக்கு ஈச்வரனும், இப்படி அறிந்து துணிகைக்குத் தானும், அறிவிக்கைக்கு ஆசார்யனுமொழிய வேறொன்று வேண்டாதிருக்கை. "வைத்து" என்று இம்மிதுநத்தினுடைய பவ்யதையைச் சொல்லிற்றாகவுமாம்.

(மருவிய மனத்தராகில்) இவ்வம்ஶம் உபேயாத்யவஸாயத்தைச் சொல்லுகிறது. ப்ரயோஜநாந்தரங்களை விட்டு ஸ்ரிய:பதியே பரமப்ரயோஜநமென்று அத்யவஸித்திருப்பராகில்; "ஆகில்" என்ற இது ப்ராபகவிஷயமாகவுமாம், ப்ராப்யவிஷயமாகவுமாம், இத்துணிவு ஒரு சேதநனுக்குக் கிட்டுவதொன்றன்று என்னுமிடம் தோற்றுகைக்காக. (மாநிலத்துயிர்களெல்லாம் வெருவுறக்கொன்று) ஒருஜந்துவை ஹிம்ஸிக்கும்போது ஜகத்தடைய நடுங்கும்படியாகவாய்த்து நலிவது. இத்தால், இவனுக்கு ஹிம்ஸையிலுண்டான ருசிசொன்னபடி. (சுட்டிட்டு) ஶஸ்த்ராதிகளால் நலியுமளவன்றிக்கே ப்ராணனோடே தக்த்தமாக்கி. (ஈட்டியவினையரேலும்) இம்மஹாபாதகங்களை, புருஷார்த்த ருசியுடையார் அவ்வோ புருஷார்த்தங்களை ஆதரிக்குமாப்போலேயாய்த்து இவன் தான் ஏறிட்டுக்கொள்வது. ஜ்ஞாநம் பிறந்தவனுக்கு இது ஸம்பவியாமையாலே பூர்வவ்ருத்தத்தைச்சொல்லுகிறது. (209) "**जन्मान्तरसहस्रेषु**" (ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு), (210) "**बहूनां जन्मनामन्ते**" (பஹூநாம் ஜந்மநாமந்தே), (211) "**अनेकजन्मसंसिद्धः**"

யாலுண்டானஔஜ்வல்யத்தைச்சொல்லுகிறதென்று தாத்பர்யாந்தரம் (ஸமிதைபாதியித்யாதி). ஆனால் பிராட்டியைப் புருஷகாரமாகமுன்னிடுகை முதலாயுள்ளவையுண்டே, அவை நைரபேக்ஷ்ய பஞ்ஜகமன்றோ? என்ன அருளிச்செய்கிறார் (ரக்ஷிப்பிக்கைக்கித்யாதி)· ரக்ஷிக்கைக்கு ஈச்வரனும் என்கிற வாக்யத்துக்கு ப்ரயோஜநம் சிந்த்யம்.

(அநேகஜந்மஸம்ஸித்த:) என்கையாலே இவனால் இதுக்கு முன்பு செய்யக்கூடாது; கூடிற்றேயாகிலும். (அருவினைப்பயனதுய்யார்) தாங்கள் தேடிற்று ஜீவிக்கப்பெறார்கள். கடனுக்குத் தொடுத்த அம்பை மருகாந்தாரத்திலே விட்டாற்போலே அசல்பிளந்தேறிடுமத்தனை. (212) "द्विषन्तः पापकृत्यां" (த்விஷந்த: பாபக்ருத்யாம்) என்னக்கடவதிறே. அங்ஙனன்றிக்கே, கர்ணன் விட்ட ஸர்ப்பமுகாஸ்த்ரம்போலே * கீசகத்தோடே போக்குமென்னுதல்; அங்ஙனன்றியே பகதத்தன் விட்ட ஶக்தியை மார்பிலே ஏற்றாப்போலே தான் அநுபவித்தல், பொறுத்தேன் என்னுதல் செய்யுமத்தனை. அவன் (151) "सर्वपापेभ्यो मोक्षयिष्यामि" (ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) என்னாநிற்க, இவர்களுக்கு அநுபவிக்க விரகுண்டோ? (அரங்கமாநகருளானே) இவையெல்லாம் அவதார ஸமயங்களிலேயன்றோ என்னவொண்ணாதபடி அவதாரத்தில் பிற்பாடர்க்காகவன்றோ கோயிலிலேவந்து கண்வளர்ந்தருளுகிறது.

இதுதான் ஈச்வரன் ஆசைப்பட்டேபோமத்தனையொழிய இவ்வதிகாரிகளுக்கு இது ஸம்பவியாது; ப்ராமாதிகமானபுண்யத்தையும் பாதகமென்றிருக்கிறவர்கள் பாபத்திலே இழிவார்களோ? மார்பிலேயிருந்து (213) "न कश्चिन्नापराध्यति" (ந கஶ்சிந்நாபராத்யதி) என்னுமவள்தானே குறைசொன்னாலும் † "செய்தாரேல் நன்றுசெய்தார்" என்னும் அவனும் என்றால், பாபங்களிலே இழிவர்களோ? வாய்கரையர் நினைக்கவும் நிலமன்றென்கை. 40.

(கீசகம்) தலைக்கட்டு. "தான் அநுபவித்தல்" என்றதின் விவரணம் (பொறுத்தேனென்னுதலென்று). இதுக்கு நியாமகம் ‡ 'அசுரர்க்குத் தீமைகள் செய்குந்தா' என்றவிடத்தில், "அவன் மார்விலேற்கையாவது பொறுத்தேனென்னத் தீருமத்தனையிறே" என்று ஈட்டின் வாக்யம்.

"ஈட்டியவினையர்" என்றதுக்குப் பூர்வாக விஷயமாக அருளிச்செய்ததன்றிக்கே உத்தராகத்தைச் சொல்லுகிறதாக்கி, "ஏலும்" என்றதுக்குத் தாத்பர்யம் (இதுதானித்யாதி). வாய்கரையர் மேலெழுந்த ஜ்ஞாநத்தையுடையவர்கள். 40.

---

* (பா) கிரீடத்தோடே ‡ திருவாய்(2-6-1). † பெரியாழ்திரு(4-9-2).

41. வானுளாரறியலாகா வானவா வென்பராகில்
தேனுலாந் துளபமாலைச் சென்னியா வென்பராகில்
ஊனமாயினகள்செய்யு மூனகாரகர்களேனும்
போனகம்செய்தசேடம் தருவரேல் புனிதமன்றே.

பதவுரை:—ஊனம் ஆயினகள் செய்யும்—கீழான காரியங்களைச் செய்யுமவர்களாயும், ஊன காரகர்களேனும் — பிறரைக்கொண்டு கீழான செயல்களைச் செய்விப்பவர்களாயுமிருந்தபோதிலும், வான் உளார் அறியல் ஆகா வானவா—'மேலுலகத்திலுள்ள பிரமன் முதலியவர்களாலறியமுடியாத பரமபதத்தில் நித்யவாஸம் செய்பவனே!', என்பர் ஆகில்—என்று சொல்லுவார்களாகில், தேன் உலாம் துளப மாலை சென்னியா—'தேன் ஒழுகும்படியான திருத்துழாய் மாலையைத் திருமுடியிலுடையவனே!', என்பர் ஆகில்—என்று சொல்லுவார்களாகில், போனகம் செய்த சேடம்—(அவர்கள்) அமுது செய்து மிகுந்த பிரஸாதத்தை, தருவர் ஏல்—(தயைசெய்து) கொடுப்பாராகில், அன்றே—அப்போதே, புனிதம்—(அது) பரமபாவநமாகும்.

அவ:—நாற்பத்தோராம் பாட்டு. (வானுளார்) இவர்களுக்கு ஜந்மவ்ருத்தங்களால் வரும் குறையில்லாமையேயன்று, தங்களோடு ஸம்பந்தித்த ஸம்ஸாரிகளும் தங்கள் அங்கீகாரத்தாலே பரிசுத்தராம்படியான உத்கர்ஷத்தை உடையவர்கள் என்கிறார்.

வ்யா:— (வானுளாரறியலாகா வானவா) ப்ரஹ்மாதிகளால் துர்ஜ்ஞேயமான பரமபதத்தே நித்யவாஸம் பண்ணுமவனே! "ஆகா" என்கிறது சண்டாளன் அக்நிஹோத்ரத்திலே புகுரலாகாதென்னுமாப்போலே நிஷேதத்தைச் சொல்லிற்றாகவுமாம். பாணிலே உயரவிருந்தாரென்னு பரமபதநிலயனை அறியலாமோ? மநுஷ்யர்களிற்

சின்ன அரு:—நாற்பதாம்பாட்டு. அத்யவஸாயமொழியப்பின்னை ஒன்றும் வேண்டாமோவென்ன அருளுகிறார் (ரக்ஷிப்பிக்கைக்கித்யாதி). அர்த்தாத் உத்தராகத்துக்கோவென்ன அருளுகிறார். (இதுதான் ஈச்வரனித்யாதி). அவன் ப்ரபாவத்தையிட்டுச் செய்தாலோவென்ன அருளிச்செய்கிறார் (மார்பிலே இருந்தித்யாதி). (வாய்கரையர்) அவன் சிரிப்புக்கு விஷயமானவர்கள்; முகோல்லாஸமே புருஷார்த்தமென்றிருக்குமவர்களென்றபடி. பரமபதத்துக்கு ஆஸந்நராய், ஆந்தராளிகரான முமுக்ஷுக்களென்னவுமாம். 40.

காட்டில் வ்யாவ்ருத்தியுண்டென்று அதுகொண்டு அங்கே செல்ல லாமோ ?

(150) "अकिञ्चनः, अनन्यगतिः" (அகிஞ்சந:, அநந்யகதி:) என்றிருப்பார் அறியுமத்தை, (162) "ईश्वरोऽहं" (ஈஶ்வரோஹம்) என்றிருப்பார்க்கறியலாமோ?'ஆசற்றார் தங்கட்கல்லாலறியலாவானுமல்லன்' என்னக்கடவதிறே. நீஞ்சவல்லவனோடு, நீஞ்சமாட்டாதவனோடு வாசியறக் கடலை நீஞ்சவொண்ணுதாப்போலே, ஶக்தனோடு அஶக்தனோடு வாசியின்றிக்கே அஸாத்யமாயாய்த்து பகவத்விஷயமிருப்பது. (214) "अनन्यसाध्ये" (அநந்யஸாத்யே) என்னக்கடவதிறே. அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தனாய் ஶுத்தஸத்வமயமான விக்ரஹத்தையுடையனா யிருக்கிறவனுடைய பெருமையைப் பார்த்தாலும் அவனே உபாயமாக வேணும்; குணத்ரயவஶ்யனான இவன் சிறுமையைப் பார்த்தாலும் அவனே உபாயமாகவேணும்; ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத ஸ்வஸ்வரூபத்தை அநுஸந்தித்தாலும் அவனே உபாயமாகவேணும். (என்பராகில்) (137) "मनः पूर्वो वागुत्तरः" (மந: பூர்வோ வாகுத்தர:) என்கிறபடியே உள்வாயில் அநுஸந்தாநம் வழிந்துசொல்லும் சொல்லையுடையராகை. இத்தால் (186) "प्रार्थनामतिः शरणागतिः" (ப்ரார்த்தநாமதி: ஶரணாகதி:) என்கிறபடியே உபாயப்ரார்த்தனையைச் சொல்லுகிறது. (ஆகில்) ஸ்வஸாமர்த்யத்தை விடுகையிலுள்ள அருமை சொல்லுகிறது. (தேனுலாந்துளபமாலைச் சென்னியா) கீழ் உபாயாம்ஶம் சொல்லிற்றாய், இங்கு உபேயாம்ஶத்தைச் சொல்லு கிறது. மதுப்ரசுரமான திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதமான திருமுடியையுடையவனே. ஸர்வாதிகனாய், நிரதிஶயபோக்யனாய் அத ஏவ பரமப்ராப்யனென்கை. (என்பராகில்) இத்தாலும் ப்ராப்ய ப்ரார்த்தனையைச் சொல்லுகிறது. (ஆகில்) ப்ரயோஜநாந்தரங்களை

அரு :—நாற்பத்தோராம் பாட்டு. (வானுளாரித்யாதி). முந்தின அர்த்தத்திலே நோக்கு "பரணிலே" இத்யாதி வாக்யம்.

இரண்டாமர்த்தத்துக்குச்சேர (அகிஞ்சநோநந்யகதிரித்யாதி). "பரணிலே" இத்யாதி வாக்யத்தை ஸத்ருஷ்டாந்தமாக விவரிக்கிறார் (நீஞ்சவல்லவனோடித்யாதி). அநந்யஸாத்யமல்லாமைக்கு ஹேதுவே தென்ன அருளிச்செய்கிறார் (அஸ்ப்ருஷ்டேத்யாதி).

விட்டு இவனையே பரமப்ரயோஜநமென்று நினைக்கையிலுள்ள அருமை சொல்லுகிறது. (210) "स महात्मा सुदुर्लभः" (ஸ மஹாத்மா ஸுதுர் லப:) என்னக்கடவதிறே.

(ஊனமாயினகள் செய்யும்) வயிறு வளர்க்கைக்காகப்பர ஹிம்ஸை பண்ணுமவர்கள்; மத்யராத்ரியிலே மாம்ஸார்த்திகளாய் வருவாருண்டாகில் ஹிம்ஸ்ய பதார்த்தத்தை ப்ராணன் போகாமல் பந்தித்து மாம்ஸத்தை அறுத்துக் கொடுக்குமவர்கள். ஆன்ருஶம்ஸ்யப்ரதாநர் பிறர்க்காகத் தங்களுடைய மாம்ஸத்தை அறுத்துக்கொடுப்பர்கள்; அதுக்கு எதிர்த்தட்டு இது. (ஊனகாரகர்கள்) தாங்கள் கொல்லுமளவன்றிக்கே பிறரை இடுவித்துக் கொல்லுவிக்குமவர்கள். ஜ்ஞாநம் பிறப்பதற்கு முன்புத்தை வ்ருத்தம் சொல்லுகிறது. (ஏலும்) முன்பு செய்யிலும் இந்த ஜ்ஞாநம் பிறந்தபின்பு ஸம்பவியாது; பிறருடைய ஆர்த்திகாணில் மோஹிக்கில் மோஹிக்குமத்தனை. ஸர்ப்பாஸ்யத்திலே அகப்பட்ட மண்டூகத்தினுடைய ஆர்த்தியைக் கேட்டு இது ஆரறிந்து விடுவிக்கக் கூப்பிடுகிறதென்று ஆழ்வான் மோஹித்தான்; இப்படிப்பட்ட இவன் பரஹிம்ஸையிலே இழிந்தானாகில் ஈச்வரன் பண்ணுகிற ஹிம்ஸையோபாதி ஹிதரூபமாயாய்த்து இருப்பது. (போனகம்) பகவத்விஷயத்தில் சொல்லுமோபாதியாகிலும் சொல்ல வேணுமே; அதிலும் குறையச் சொல்லவொண்ணாதே. (செய்த சேடம்) (215) "त्वदीयभुक्तोज्झित शेषभोजिना" (த்வதீயபுக்தோஜ்ஜித ஶேஷபோஜிநா) என்றும், * "கலத்ததுண்டு" என்றும் சொல்லுகிறபடியே அமுதுசெய்துகைவாங்கின கலத்தில் ப்ரஸாதம். (தருவரேல்) பகவத்ப்ரஸாதம்போலே ப்ரயோஜநாந்தரபரர்க்கும் பொதுவாயிருக்குமதன்றே இது; அலப்யலாபம் கிட்டிற்றாகில். ஒருநாள் பட்டர் ப்ரஸந்நராய் ஜீயர்க்கு இட்ட ப்ரஸாதத்தை நினைப்பது. (புனித

ஆனால் தலையை ஆங்கே அறுப்பதே என்றத்தையுட்கொண்டு (இப்படிப்பட்டவனித்யாதி). "பட்டர் ப்ரஸந்நராய்" என்றதுக்கு, † "மைப்படிமேனி" என்கிற பாட்டுக்குத் தாமருளிச்செய்த அர்த்தத்துக்கு ‡ "இன்னாரென்றறியேன்" என்றத்தை ஸ்வாதமாக ஜீயரருளிச் செய்ததுக்கு ப்ரஸந்நராய் என்றபடி என்று சொல்லுவர்கள். 41.

* திருப்பல்லா (9). † திருவிரு (94) ‡ பெரியதிருமொழி (10-10-9)

மன்றே) தேசாந்தரே காலாந்தரே தேஹாந்தரயென்றியே ஸ்பர்ச வேதியாய் இரும்பு பொன்னுமாப்போலே அப்போதே பரிசுத்தம். (216) "तदुच्छिष्टं सुपावनं" (ததுச்சிஷ்டம் ஸுபாவநம்). பகவத் ப்ரஸாதம் பாவநம்; இது ஸுபாவநம். 41.

4-. பழுதிலாவொழுகலாற்றுப் பலசதுப்பேதிமார்கள்
இழிகுலத்தவர்களேலு மெம்மடியார்களாகில்
தொழுமினீர்கொடுமின் கொள்மி னென்றுநின்னோடொக்க
வழிபடவருளினாய்போல் மதிள்திருவரங்கத்தானே.

பதவுரை:—மதிள் திருவரங்கத்தானே—, "ஒழுகல் ஆறு—பிரமன் முதல் தங்களளவும் நீண்டு வருகிற வம்சபரம்பரையில், பழுது இலா—ஒரு தோஷமுமில்லாதவர்களாய், பல சதுப்பேதிமார்கள்—நாலு வேதங்களையும் அத்யயனம் பண்ணிப் போருமவர்களே!, எம் அடியார்கள் ஆகில்—'நமக்கு அடிமைப்பட்டவர்கள்' என்று அபிமானிக்கலாம்படியாயிருக்குமவர்கள், இழி குலத்தவர்கள் ஏலும்—கீழான குலத்தில் பிறந்தார்களேயாகிலும், நீர்—நீங்கள், தொழுமின்—(அவர்களைத்) தொழுங்கள்; கொடுமின்—(உங்களிடத்திலுள்ள விசேஷார்த்தங்களை அவர்களுக்கு) உபதேசியுங்கள்; கொள்மின் —(அவர்களிடத்தில் விசேஷார்த்தங்களுண்டாகில்) கேட்டுத் தெளியுங்கள்" என்று—என்று அருளிச்செய்து, நின்னோடும் ஒக்க—உனக்கு ஸமமாக, வழிபட—(அவர்களை) ஆராதிக்கும்படியாக, அருளினாய்—அருளிச்செய்தாயன்றோ?

அவ:— நாற்பத்திரண்டாம் பாட்டு. (பழுதிலா) ஜந்மவ்ருத்தாதிகளால் குறையநின்றே இந்த ஜ்ஞாநமுடையவர்கள், இந்த ஜ்ஞாநவிதுரராய் ஜன்மவ்ருத்தாதிகளால் உயர்ந்தவர்களுக்குஸர்வேச்வரனோபாதி பூஜ்யராய் ஜ்ஞாநதான ப்ரதிக்ரஹ ஸம்வ்யவஹாரங்களுக்கும் அர்ஹராவர் என்கிறார்.

சின்ன அரு:—நாற்பத்தோராம் பாட்டு. "வானவா" என்பதற்குத் தாத்பர்யம் அருளுகிறார் (அஸ்ப்ருஷ்டஸம்ஸாரேத்யாதி). கைங்கர்யார்த்தமாக ஹிம்ஸிக்கிலோவென்ன அருளுகிறார் (இப்படிப் பட்டவனித்யாதி). 41.

வ்யா :—(பழுதிலாவொழுகலாற்று) ப்ரஹ்மா தொடங்கித் தங்களளவும் வர நெடுகிப்போருகிற வம்ஶப்ரவாஹத்திலே ஒருதோஷமின்றிக்கே இருக்குமவர்கள். அதாகிறது :— உத்பத்திகளிலேயாதல், ஆசாராதிகளிலேயாதல், ஒருவகையாலும் ப்ராஹ்மண்ய ப்ரச்யுதியின்றிக்கே இருக்கை. (பலசதுப்பேதிமார்கள்) இவ்வம்ஶத்தில் சதுர்வேதிகளாயிருப்பார் அநேகரென்கை. (217) "चतुर्वेदा ऋषयः' (சதுர்வேதா ருஷய:) என்கிறபடியே ரிஷிஸமராயிருக்கை. "சதுப்பேதிமார்கள்" என்று ஸம்போதநை. ஒழுகல்—நெடுமை. ஆறு—வழி. (இழிகுலத்தவர்களேனும்) இதில் கீழ்ப்பட்டதில்லையென்னும் நிஹீநகுலத்திற்பிறந்தார்களேயாகிலும். (ஏனும்)(210) "बहूनां जन्मनामन्ते" (பஹூநாம் ஜந்மநாமந்தே) என்கிறபடியே அநேக புண்யஜந்மங்களினுடைய அவஸாநத்திலே ஸ்வரூபஜ்ஞாநம் பிறக்குமென்று சொல்லுகையாலே ஜ்ஞாநாதிகராயிருப்பார்க்கு நிஹீநஜந்மம் கூடாது; விதுரதர்மவ்யாதாதிகளைப்போலே கூடிற்றேயாகிலும். (எம்மடியார்களாகில்) என்னுடைய அஸாதாரணபந்தத்தை அறிந்து ஜ்ஞாநாநுகூலமான ஸ்வாசாரத்தை உடையராகில். கைங்கர்யமே எல்லா நன்மைகளுமாக நினைத்திருக்குமவர்களாய், ஈச்வரனும் இவர்கள் திறத்தில் நாமே இவர்களுக்கு உபாயோபேயங்களும் எல்லாவுறவுமென்று நினைத்திருக்கப்படுமவர்கள்.

(தொழுமினீர்) நீங்கள் தொழுங்கள். (218) "एत एव सतां दमः" (ஏத ஏவ ஸதாம் தம:) என்கிறபடியே உங்களுடைய வித்யாவ்ருத்தங்களும், ஜந்மோத்கர்ஷங்களும், மதஹேதுவாகையன்றியே தமஹேதுவென்றிருக்கும் நீங்கள் அவர்கள் காலிலே விழுங்கோள். (219) "कालेष्वपि च सर्वेषु" (காலேஷ்வபி ச ஸர்வேஷு) இத்யாதிகளில் சொல்லுகிறபடியே பகவத்ப்ரஸாதமொழிந்த ஸாதநாந்தரங்கள் பயஸ்தாநமென்றிருக்கும் நீங்கள் அவர்களை ஆராதியுங்கோள்.

அரு:—நாற்பத்திரண்டாம் பாட்டு. (பழுதிலாவித்யாதி). இந்த ஜ்ஞாநமென்றது—மேய்பொருகளில் ஜ்ஞாநமென்றபடி. "இந்தஜ்ஞாநவிதூரராய்" என்றதுக்குத் தாத்பர்யம்—அநுஷ்டாந ஶேஷமான ஜ்ஞானமில்லாமையைப்பற்ற; இல்லையாகில் "கொடுமின்" என்றத்தோடு சேராது. தாத்பர்யாந்தரம் (காலேஷ்வபிசேத்யாதி).

(220)"**परस्परनीचभावैः**" (பரஸ்பரநீசபாவை:) என்கிறபடியே ஸ்வரூப ப்ராப்தமான நீசபாவமானது அவர்களுக்கு ஸ்வரூபவலித்தம்; உங்களுக்கு துர்மாநத்தாலே துஷ்கரம்; அவர்களைத் தொழுவே உங்கள் ஸம்ஸாரபீஜமான துர்மானம் போம்; நிஹீநஜந்மத்திலே பிறந்தவன் ப்ராஹ்மணனுக்குரக்ஷகனாகஙகேகண்டோமென்னில்;கைம்பிகஸம்பந்தம் ப்ராஹ்மண்ய ப்ரச்யுதியாலே வந்த ப்ரஹ்மராக்ஷஸத்வத்தை ப்ராஹ்மணனுக்குப் போக்கிக்கொடுக்கக் கண்டோமிறே. (கொடுமின் கொண்மின்) அவர்கள் உங்கள்பக்கல் ஒரு ஜ்ஞாநாபேக்ஷைபண்ணில் நீங்கள் ஆதரித்துச் சொல்லுங்கோள்; அவர்கள் பகவத்ஜ்ஞாநத்தை உங்களுக்கு ப்ரஸாதிக்கில் கேட்டு க்ருதார்த்தராகுங்கோள். ஜாதி நிபந்தநமான ஸம்பந்தம்போலேயாதல், குணநிபந்தநமான ஸம்பந்தம் போலேயாதல், நீர்மேலெழுத்தான ஸம்பந்தமன்றிறே இவர்களோடு பண்ணும் ஸம்பந்தம்; இது யாவதாத்மபாவியான ஸம்பந்தமிறே.(என்றுநின்னோடுமொக்க வழிபடவருளினாய் போல்)இப்பாசுரம் பலப்ரதரான தேவரீரே அருளிச்செய்த பின்பு இதிலொரு ஸம்சயமுண்டோ? (என்று நின்னோடுமொக்கவழிபட) எனக்குமேல் பூஜ்யரில்லாமையாலே என்மாத்ரமாகிலும் அவர்களை ஆராதித்து நல்வழி போங்கோள். (அருளினாய்) (221)"**भक्तिरष्टविधा ह्येषा यस्मिन् म्लेच्छेऽपि वर्तते। स विप्रेन्द्रो मुनिः श्रीमान् स यतिः स च पण्डितः॥ तस्मै देयं ततो ग्राह्यं स च पूज्यो यथा ह्यहं**" (பக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே। ஸ விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமாந் ஸ யதி: ஸ ச பண்டித:॥ தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம்)என்கிறபடியே. (அருளினாய்) இந்த ரஹஸ்யம் தேவரீர் க்ருபையாலே அருளிச்செய்வித்தனையிறே. § "பூசித்துநல்கியுரைப்பர் தந்தேவியர்க்கே" என்று பகவத்ஸம்பந்தயுக்தருடைய பாவநத்வம் நித்ய

"கொடுமின், கொள்மின்" என்றதுக்கு ஜ்ஞான ப்ரதாநரூப ஸம்பந்தத்தைச் சொல்லுகிறதாகவேணுமோ, அல்லாத கொடைகொள்கையைச் சொல்லுகிறதானாலோவென்ன, அருளிச்செய்கிறார் (ஜாதி நிபந்தநமானவித்யாதி). சொன்னாய் என்னாதே, "அருளினாய்" என்றதுக்குத் தாத்பர்யம் (இந்த ரஹஸ்யமித்யாதி). இந்த ரஹஸ்யமென்றது"தொழுமின்" என்றத்தாலேபலித்தபாவநத்வத்தை. இப்படி ரஹஸ்யமோவென்ன அருளிச்செய்கிறார் (பூசித்தித்யாதி).

ஸூரிகளும் தந்தாமுடைய அபிமதவிஷயங்களுக்கு ஸர்வஸ்வதாநம் பண்ணினார்களாய் உபதேஶிக்குமத்தனையிறே. (போல்) அதுபோலே. திருமுகப்பாசுரம் வராஹநாயனாரது; படியெடுத்தார் இவ்வாழ்வார். திருமுகப்பாசுரம் கேட்டருளி அத்தை அர்த்தக்ரியாகாரியாக்கினார் பெரியபெருமாள். கேட்டருளுகையாவது :—அகஸ்த்யனைக்கொண்டு பெருமாள் ஸ்ரீராமாயணம் கேட்டருளினாப்போலே. (மதிள் திருவரங்கத்தானே) உபதேஶமாத்ரமேயாய்ப் போகாமே கோயிலிலே வந்து லோகஸாரங்கமஹாமுனிகள் தலையிலே திருப்பாணாழ்வாரை வைத்து இவ்வர்த்தத்தை வ்யாபரித்துக் காட்டிற்றிலீரோ? (மதிள் திருவரங்கத்தானே) கோயிலில் மதிளைக் கடக்கிலன்றோ தேவரீர் காட்டின இம்மர்யாதையைக் கடக்கலாவது.

† ["கொடுமின் கொள்மின்" என்று ஸ்ரீபாததீர்த்தவைபவ பரமாகவுமாம். கீழே, "போனகம்செய்தசேடம்" என்று ப்ரஸாத வைபவம் சொல்லிற்றாய், இது தீர்த்தவைபவம் சொல்லுகிறது. (கொள்மின் கொடுமின்) தீர்த்தம் கொள்மின்; கொடுங்கோள். "நின்னோடொக்கவழிபடவருளினாய்" என்று (222) "स्वाचार्यमिव तं दृष्ट्वा" (ஸ்வாசார்யமிவ தம் த்ருஷ்ட்வா) இத்யாதியாகக்கடவது. (223) "अविद्यं वा" (அவித்யம் வா) இத்யாதி. § "தேவர்வைகல் தீர்த்தங்களே" என்று நித்யஸூரிகள் ஆதரித்ததும் தீர்த்தவைபவத்தாலேயிறே; ❊ "பாதங்கள் கழுவினர்" என்னக்கடவதிறே.] 42.

---

43. அமரவோரங்கமாறும் வேதமோர்நான்குமோதித்
தமர்களில்தலைவராய சாதியந்தணர்களேலும்
நுமர்களைப்பழிப்பராகில் நொடிப்பதோரளவிலாங்கே
அவர்கள்தாம் புலையர்போலு மரங்கமாநகருளானே.

சின்ன அரு :—நாற்பத்திரண்டாம் பாட்டு. (நீர்) ஸ்வரூபமறிந்த நீங்கள் என்னுதல்; ஸ்வரூபம் ஸித்திக்கவேணுமென்றிருக்கிற நீங்களென்னுதல்; இத்தை அநுஸரிக்கிறார் (காலேக்ஷவபிசேத்யாதி). இவர்களோட்டை ஸம்பந்தத்துக்கு ஆதிக்யமேதென்ன அருளுகிறார் (ஜாதி நிபந்தநமித்யாதி). பாகவதவைபவத்தை வெளியிடுகை க்ருபாகார்யமுமாய், ரஹஸ்யமுமாயிருக்குமோவென்ன அருளுகிறார் (பூசித்து நல்கியித்யாதி). 42.

---

§ திருவாய் (7-10-11). ❊ திருவாய் (10-9-10).
† குண்டலிதம் சில ஸ்ரீகோசங்களிலில்லை.

பதவுரை :— அரங்கமா நகருளானே—, ஓர் அங்கம் ஆறும்— ஒப்பற்ற ஆறு வேதாங்கங்களையும், ஓர் வேதம் நான்கும்—நிகரற்ற நான்கு வேதங்களையும், அமர—நெஞ்சில் பதியும்படி, ஓதி—அத்ய யனம் செய்து, தமர்களில்—உன் அடியார்களில், தலைவர் ஆய— முதன்மையான, சாதி அந்தணர்களேலும்—ப்ராஹ்மண வர்ணத்தவர் களாயினும், நுமர்களை—தேவரீருடைய அடியார்களை, பழிப்பர் ஆகில்— (அவர்களுடைய ஜந்மவ்ருத்தங்களைப் பார்த்து) தூஷிப்பராகில், நொடிப்பதோர் அளவில்—அந்த நிமிஷத்திலேயே, அவர்கள் தாம்— அந்த ப்ராஹ்மணர்கள் தாம், ஆங்கே—அப்போதே, புலையர்—சண் டாளராவர்.

அவ :—நாற்பத்து மூன்றும் பாட்டு. (அமர) கீழ்ச்சொன்ன ஜந்மவ்ருத்தாதிகளுக்கு மேலே ஜ்ஞாநாதிகருமான இவர்கள், ஜந்ம வ்ருத்தாதிகளின்றிக்கே இந்த ஜ்ஞாநமுடையரானவர்களை, பகவத் ப்ர(பாவ)ஸாதத்தாலே வந்த வைலக்ஷண்யத்தை புத்திபண்ணாதே கர்ம நிபந்தநமான ஜந்மாத்யபகர்ஷத்தையே புத்திபண்ணித் தாழநினைத்தார் களாகில் அந்த க்ஷணத்திலே அவர்கள்தான் சண்டாளர் என்கிறார்.

வ்யா :—(அமரவோரங்கமாறும்) அத்விதீயமான ஷடங்கங்களை யும் அழகிதாகப் பாடங்களையும் தரித்து, அர்த்தத்தையும் தரிக்கு மவர்களாகை. அங்கங்களுக்கு அத்விதீயத்வமாவது :— ஓரங்கத்திலே ஜ்ஞாநம் குறைவற உண்டானால் லோகத்தார் அவனை ஸர்வஜ்ஞனென்று சொல்லும்படியிருக்கை. (224) “शीक्षायां वर्णशिक्षा” (ஶீக்ஷாயாம் வர்ணஶிக்ஷா) இத்யாதி. (வேதமோர்நான்கும்) வேதங்களுக்கு அத்விதீயத்வம்—பௌருஷேயஶப்தங்களிற்காட்டில் வ்யா வ்ருத்தியாதல்; தனித்தனியே விநியோகபேதத்தால்வந்த வ்யா வ்ருத்தியாதல். (ஓதி) அங்கங்களோடு வேதங்களோடு வாசியற ஆசார்யோச்சாரணாநூச்சாரணமுகத்தாலே க்ரஹிக்கை. இப்படி களாலே எம்பெருமானை உள்ளபடி அறியுமவர்களாகை. (தமர்களில் தலைவராய) ஜ்ஞாநாநுகூலமான பகவத்விஷயத்தில் ஸம்பந்தமுடை

அரு :—நாற்பத்து மூன்றும் பாட்டு. (அமரவித்யாதி). “அங்கங் கள்” என்றதுக்கு ப்ரமாணம் (ஶீக்ஷாயாமித்யாதி). விநியோகபேத மாவது—வித்யர்த்தவாதரூபேண உண்டான விநியோகமென்றபடி.

யாரில் அக்ரேஸரராயிருக்கை. இப்படிகளாலே எம்பெருமானை உள்ளபடி அறியுமவர்களாகை.

(சாதியந்தணர்கள்) கீழ்ச்சொன்னவை க்ஷத்ரிய வைஶ்யர்களுக்கும் பொதுவிறே; அவ்வளவன்றிக்கே ஜாத்யா ப்ராஹ்மணராயிருக்கை. (ஏனும்) கீழ்ச்சொன்னவை ஒருவர்க்கும் ஸித்திக்குமதல்ல; ஸித்திக்குமேயாகிலும். வைஷ்ணவ நிந்தையில் வந்தால் இவையெல்லாம் அஸத்ஸமமென்கை. துர்மாநோபஹதர்க்கு அபசாரஹேதுவுமாய், இவையில்லாதார் தலைமேலே காலிட்டுத்திரிகைக்குடலாமித்தனையிறே.

(நுமர்களை) தமர்களில் தலைவரான நுமர்களை; தமர்கள்—நித்யஸூரிகள். †"விண்ணுளாரிலும் சீரியரே" ‡ உண்ணாட்டுத் தேசன்றே—மண்ணாட்டில் தேசு. உண்ணாடு—பரமபதம். (நுமர்களை) தேவரீரபிமாநத்துக்குள்ளே அடங்கி ப்ராப்யப்ராபகங்கள் தேவரீரேயென்று அத்யவஸித்து, உடையவனே உடைமைக்கு நிர்வாஹகன், உடைமையை விநியோகம் கொள்ளுவானும் அவனே என்றிருக்குமவர்களை. (பழிப்பராகில்) பகவத்ப்ரபாவத்தை அஹங்காரத்தாலே விஸ்மரித்து, அவர்களுடைய ஜந்மமாத்ரத்தையே புத்திபண்ணித் தங்களிற் காட்டில் குறையநினைப்பராகில். பழிப்பாகிறது—குற்றம். அதாகிறது—பகவதபசாரங்களில் தலையான அபசாரம். உகந்தருளின நிலங்களில் த்ரவ்யமாத்ரத்தையே புத்திபண்ணிக் குறையநினைக்குமாப்போலே, வைஷ்ணவர்கள் ஜந்மமாத்ரத்தையே புத்திபண்ணிக் குறையநினைக்கை. (பழிப்பராகில்) கொண்டாடுகையேயாய்த்து ப்ராப்தம், அஹங்காரமாகிறமுசலகனே நிப்ரமித்தபோதிறே அவர்களைக் குறையநினைப்பது; இப்படி கூடிற்றாகில்; (நொடிப்பதோரளவிலாங்கே) காலாந்தரே தேசாந்தரே தேஹாந்தரே அன்று,

"பகவத்விஷயத்தில் ஜ்ஞாநாநுகூலமான ஸம்பந்தமுடையாரில்என்று அந்வயிப்பது.

"முசலகன்" என்று ஒரு பேய்க்குப் பேர். "போலும்" என்றதுக்குப் போலிமாத்ரமென்றாக்கித் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஜாதி சண்டாளனுக்கித்யாதி). ஜந்மாதிகளில் உத்கர்ஷம் அபிமாநஹேது

† திருவிருத்தம் (79). ‡ பெரிய திருவந்தாதி (79).

அந்த க்ஷணத்திலே அவ்விடத்திலே. "புனிதமன்றே" என்ற நன்மைபோலே தீமை வருமிடத்திலும் விளம்பமில்லை. (அவர்கள் தாம் புலையர்போலும்) அத்தேஹத்தோடே சண்டாளராவர்கள். த்ரிஶங்குவுக்கு ப்ராஹ்மண ஶாபத்தாலே கழுத்தில் வீரசங்கிலி தானே வாரானாப்போலே, இவனுக்கும் மார்விலிட்ட பூணூல்தானே வாராய்விடும். (தாம்புலையர்) கீழ்ச்சொன்ன ஜன்மாதிகளில் உத்கர்ஷங்கள் அபிமானஹேதுவாகையாலே அவைதானே இவர்களுக்கு அநர்த்தஹேதுவாய்விட்டது. ஜாதி சண்டாளனுக்கு ஒரு காலத்திலே வைஷ்ணவனாகைக்கு அதிகாரமுண்டு. இவன் உயர ஏறித் தகரவிழுந்தவனாகையாலும், பாகவதாபசாரமாகிற மஹாபாபத்தைப் பண்ணினவனாகையாலும், அவனிலும் தண்ணியன் கர்ம சண்டாளனிறே. பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஆத்மஹிதம் சொன்ன ஸமநந்தரத்திலே ஆழ்வான் பணித்த வார்த்தையை ஸ்மரிப்பது.

(அரங்கமாநகருளானே) (225) "**न क्षमामि कदाचन**" (ந க்ஷமாமி கதாசந) என்ற தேவரீர்க்கிறே பாகவதாபசாரத்தின் தண்மை தெரிவது. கர்மயோகாத்யுபாயநிஷ்டர்க்கு ஸ்வகதமான உபாயாந்தரங்களில் ந்யூநாதிரேகங்களைப்பற்றி இருக்கலாம்; பகவத்ஸம்பந்தம் கொண்டு பெறவிருக்கிற ப்ரபந்நனுக்கு பாகவதாபசாரமாகிறது பகவத்ஸம்பந்தத்தை அறுக்குமதாகையாலே பெறவிரகில்லை. பெறுகைக்கு அவர்கள் ஸம்பந்தமே அமைகிறாப்போலே இழக்கைக்கும் அபசாரமே அமையும்; ஆகையாலே ப்ரபந்நனுக்குப்பயப்பட்டு நோக்கவேண்டுவது தேவதாந்தரஸ்பர்ஶமும், பாகவதாபசாரமும். பகவத்விஷயத்தில் ஓர் ஆநுகூல்யம் பண்ணவேண்டுவதில்லை; இவையின்றியிலே ஒழிந்தவனுக்கு ஈஶ்வரன் ஸாலம்பனும். 43.

த்வாரா அநர்த்தஹேதுவென்னுமதுக்கு ஸம்வாதம் (பிள்ளைப்பிள்ளையித்யாதி).

ஆனாலும் பகவத்ப்ரபந்நனை இவனுக்கு பாகவதாபசாரமுண்டானால் அந்த ப்ரபத்திதானே இத்தையும் நிவர்த்திக்காதோ? பகவத்விஷயத்தை இழக்கைக்குடலாகவேணுமோவென்ன, அருளிச்செய்கிறார் (கர்மயோகாதீத்யாதி). ந்யூநாதிரேகங்களைப்பற்றி இருக்கலா

44. பெண்ணுலாம்சடையினானும் பிரமனுமுன்னைக்காண்பான்
எண்ணிலாவூழியூழி தவஞ்செய்தார்வெள்கிநிற்ப
விண்ணுளார்வியப்பவந்து ஆனைக்கன்றருளையீந்த
கண்ணறா ! உன்னையென்னோ களைகணாக்கருதுமாறே.

பதவுரை :— பெண் உலாம்—கங்கை ஸஞ்சரிக்கும்படியான, சடையினானும்—ஜடையையுடையனான சிவனும், பிரமனும்—ப்ரஹ்மாவும், உன்னை காண்பான்—உன்னைப் பார்ப்பதற்காக, எண் இலா ஊழி ஊழி—எண்ணமுடியாத ஊழிகாலமாக, தவம் செய்தார்—தவம் செய்து, வெள்கி நிற்ப—(காண முடியாமையாலே) வெட்கித்தலை கவிழ்ந்திருக்க, அன்று—அக்காலத்திலே, ஆனைக்கு—(முதலைவாயில் விழுந்த) ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்காக, வந்து—(அவன் தன்புற்ற மடுவின் கரைக்கு) வந்து, விண் உளார் வியப்ப—நித்யஸூரிகளும் ஆச்சரியப்படும்படியாக, அருளை ஈந்த—கிருபையைச் செய்தருளிய, கண்ணறா—கண்ணற்றவனான, உன்னை—உன்னை, களைகண்—எல்லாருக்கும் தஞ்சமாக, கருதும் ஆறு என்னோ—நினைப்பது எவ்வாறோ ?

மென்றதுக்குத் தாத்பர்யாந்தரம்—ந்யூநாதிரேகங்களுண்டானாலும் ப்ராயச்சித்தத்தாலே போக்கி நிர்பரனாயிருக்கலாமென்றபடி. இன்னமும் ஒருவழியாலே இழவுக்குடலென்னுமத்தை அருளிச்செய்கிறார் (பெறுகைக்கித்யாதி). 43.

சின்ன அரு :—நாற்பத்து மூன்றும் பாட்டு. அங்கங்கள் தானே தென்ன அருளுகிறார் (க்ஷாயாமித்யாதி). விநியோகபேதம் மந்த்ர பரங்களாயும், விதிபரங்களாயும், ப்ரஶம்ஸாபரங்களாயுமிருக்கும். உத்க்ருஷ்ட ஜந்மாதிகள் ஸத்துக்களுக்கு தமஹேதுவாயன்றோ இருப்பது. மதஹேதுவாமோவென்ன அருளுகிறார் (துர்மாநோபஹத ரித்யாதி). (இவையில்லாதார்) துர்மாநமில்லாதார். யமாதிகள் தலையிலே காலிட்டுத் திரிகைக்கும் உடலாமென்றபடி. (முசலகன்) குமரகண்டன். கர்மாத்யுபாயங்களில் வைகல்யமுண்டானால் ப்ராயச் சித்தாதிகளாலே அவனுக்கு கதியுண்டாயன்றோ இருப்பது. அப்படியே ப்ரபத்தி உண்டாயிருக்க "ந க்ஷமாமி" என்று இவனுக்கு ஒருகாலும் கதியில்லையென்பானென்னென்ன அருளுகிறார் (கர்ம யோகாதீத்யாதி). ப்ராயச்சித்தமுண்டாகையாலே பற்றியிருக்கலாமென்றபடி. 43.

அவ:— நாற்பத்துநாலாம் பாட்டு. (பெண்ணுலாம்). கீழ் ப்ரதிபாதித்த அர்த்தங்கள் ஸம்பவிக்குமென்னுமிடம், ப்ரஹ்மாதிகளுக்கும் துர்லபமான பேற்றை திர்யக்ஜாதியிலே பிறந்தானொருவன் பெற்றபின்பு சொல்லவேணுமோவென்று அந்யாபதேசத்தாலே ஸ்வபாவத்தைச் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

வ்யா:— (பெண்ணுலாம் சடையினானும்) கங்கையானவள் உள்ளே ஸஞ்சரிக்கும்படியான ஜடையையுடையவன். கங்கையை ஜடைமேலே அடக்கினேனென்னும் பிடாரைக்கொண்டு ஸர்வேச்வரனைக் காணலாமோ? § "ஆறுசடைக்கரந்தான்" இத்யாதி. (பிரமனும்) அவனுக்குங்கூட ஜநகனாய், (226) "ब्रह्मा ब्रह्मविदां वरः" (ப்ரஹ்மா ப்ரஹ்மவிதாம் வர:) என்கிறபடியே இப்பாலுள்ளார்க்குப் பள்ளி உபாத்யாயராங்காட்டில் இவ்வறிவுகொண்டு எம்பெருமானை அறியப்போமோ? தன்னாலே ஸ்ருஷ்டரானவர்களைத்தான் பரிச்சேதிக்குமத்தனையொழிய அபரிச்சிந்நனானவனைப் பரிச்சேதிக்கப்போமோ? * "கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணனடிக்கமலந் தன்னையயன்" என்னக்கடவதிறே. (உன்னைக்காண்பான்) (142) "यतो वाचो निवर्तन्ते" (யதோ வாசோ நிவர்த்தந்தே) என்கிறபடியே உன்குணங்களிலே ஒன்றை அவதிகாணமாட்டாத உன்னைக் காண்கைக்காக. நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணாநின்றாலும் எல்லைகாணமாட்டாத உன்னை. (227) "निरवद्यः परः प्राप्तेः" (நிரவத்ய: பர: ப்ராப்தே:) என்னக்கடவதிறே. பிறரால் அறியவொண்ணாதவளவேயன்றியேஉன்னாலும்உன்னைஎல்லைகாணவொண்ணாதவுன்னை. † "தனக்கும்தன் தன்மையறிவரியான்" என்னக்கடவதிறே.(காண்பான்,காணப்பெற்றால் பின்னையன்றோ ப்ரயோஜநத்தினருகு செல்லுவது. தானே தன்னைக் கண்ணுக்கு விஷயமாக்கிக் காட்டுமன்றிறே காணலாவது.

அரு:—நாற்பத்துநாலாம் பாட்டு. (பெண்ணுலாமித்யாதி) கீழ் ப்ரதிபாதித்த அர்த்தங்களாவன:—பாகவத வைபவம் தொடக்கமானவை; இதனால்-பகவத் ப்ரபாவத்தாலே கூடுமென்று தாத்பர்யம்.

குணங்களிலே யொன்றை யென்றது-ஆநந்தத்தை "காண்பான்" என்றதுக்கு வ்யங்க்யமாக (காணப்பெற்றாலித்யாதி).

---

§ நான்மு-திருவ(4). * முதல்திருவ (56). † திருவாய் (8.4-6).

அல்லது ஸ்வஸாமர்த்யத்தாலே காணும் விஷயமன்றே. (228) "न चक्षुषा पश्यति कश्चनैनं" (ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம்) என்றும், (229) "न मांसचक्षुरभिवीक्षते तं" (ந மாம்ஸசக்ஷுரபிவீக்ஷதே தம்) என்றும், (230) "न मांसचक्षुषा द्रष्टुं ब्रह्मभूतः स शक्यते" (ந மாம்ஸசக்ஷுஷா த்ரஷ்டும் ப்ரஹ்மபூதஸ்ஸ ஶக்யதே) என்றும் சொல்லக்கடவதிறே.

(எண்ணிலாவூழியூழி தவஞ்செய்தார்வெள்கி நிற்ப) நெடுங்காலம் தபஸ்ஸு பண்ணி "நாம் ‡ ஆறிய தபஸ்ஸு பண்ணுகிறோம்" என்று லஜ்ஜித்துக் கைவாங்கிநிற்க. பிறர், தங்களைக் குறித்துப்பண்ணும் தபஸ்ஸுக்குப் பலம் கொடுக்குமவர்களிறே இவனை நோக்கி தபஸ்ஸு பண்ணுகிறார்கள். (231) "युगकोटिसहस्राणि" (யுககோடிஸஹஸ்ராணி) என்னக்கடவதிறே. (வெள்கி நிற்ப) முதலையின் வாயிலே விழாதே தபஸ்ஸிலே இழிந்து என்னகாரியம் செய்தோமென்று லஜ்ஜித்து நிற்கை. (232) "परमापदमापन्नो मनसाऽचिन्तयद्धरिं" (பரமாபதமாபந்நோ மநஸாऽசிந்தயத் ஹரிம்) என்கிறபடியே ஆபத்தை முன்னிடாதே தபஸ்ஸிலேஇழிந்துஎன்னகாரியம் செய்தோமென்று லஜ்ஜித்துநிற்க.

(விண்ணுளார் வியப்பவந்து) நித்யஸூரிகள், "ப்ரஹ்மாதிகள் இப்படிப்படாநிற்க, அவர்களையும் எங்களையும் அநாதரித்து ஒரு திர்யக்கின் காற்கடையிலே அரைகுலையத் தலைகுலையவந்து விழுவதே! எத்திறம்! எத்திறம்!" என்று விஸ்மயப்பட. (வந்து) அவன் இடர்ப்பட்ட மடுவின் கரையிலே வந்து, "சென்று" என்னாதே "வந்து" என்றது — ஆனைக்குதவினது தம்பேறாயிருக்கிறபடி. (ஆனைக்கு) ப்ரஹ்மாதிகளுடைய ஜந்மோத்கர்ஷத்தையாதல், இவனுடைய ஜந்மாபகர்ஷத்தையாதல், இவற்றையொன்றையும் பாராதே ஆபத்தைப் பார்த்து ரக்ஷித்தபடி. (அன்று) ஸ்வப(ப)லமற்றவன்று; (233)

(எங்களையும் அநாதரித்து)என்றது (234) "अतन्द्रित" (அதந்த்ரித) இத்யாதியைப்பற்ற. சென்ற காலத்திலே யென்றது— அஹங்காரத் தோடே சென்றகாலத்திலென்றபடி. (வாசியில்லை) உதவாமைக்கு இதி ஶேஷ: தாத்பர்யாந்தரம் (அருளுகையாவதித்யாதி). (சுணையுடைமை) ஸ்வாபிமாநம். 44.

‡ (பா) ஆராய்.

"**गज आकर्षते तीरे**" (கஜ ஆகர்ஷதே தீரே) என்று சென்றகாலத்தில் இவனோடு ப்ரஹ்மாதிகளோடு வாசியில்லை. அன்று ஒரு முதலையின் கையிலே அகப்பட்ட ஆனைக்கருளை ஈந்தாய்; இன்று அஞ்சு முதலையின் கையிலே அகப்பட்ட எனக்கருளாய். ஆனை ஆயிரம் ஸம்வத்ஸரம் நோவுபட்டது; நான் அநாதிகாலம் நோவுபட்டேன். அவனகப்பட்டது மடுவிலே; நானகப்பட்டது ஸம்ஸாரார்ணவத்திலேயிறே.

(அருளையீந்த) அருளுகையாவது—முதலையின் வாயினின்றும் மீட்டு, அவனுடைய நொந்தகாலைத் திருக்கைகளாலே தடவியருளி ஆச்வஸிப்பித்து, அவன் கையில்பூவைத் தன் திருவடிகளிலே இடுவித்துக்கொள்ளுகை; அப்படி என்னையும் விஷயாந்தரங்களினின்றும் மீட்டு இழந்த காலத்துக்கும் ஸாந்த்வநம் பண்ணியிறே அடிமையிலே மூட்டுவது. (கண்ணுறு) அவன் உபகரித்த தசையிலே, "கண்ணுறு" என்கிறது—ப்ரீதி தலைமண்டையிட்டுச் சொல்லுகிற வார்த்தை. ஸ்வலாபத்தில் ஸ்வயத்நத்தால் லபிக்க இழிவாரைப்பாராதே, அகிஞ்சநர் பக்கலிலே முழுநோக்காயிருக்கிறவிது என்ன சுணையுடைமை! என்ன பும்ஸ்த்வம்! ஸ்வஸாமர்த்யத்தைப் பொகட்டுத் தங்கள் வெறுமையை முன்னிட்டு உன்னைக்காலிலே விழவிட்டுக்கொள்ள மாட்டாதே ஜகத்து இழப்பதே! (உன்னையென்னே களைகணுக்கருது மாறே) † ஆச்ரிதபக்ஷபாதியான உன்னை ஜகத்துக்குப் பொதுவான ரக்ஷகனென்று சொல்லுமவர்கள் மதிகேடரென்கிறார். (130)
"**देवानां दानवानाञ्च सामान्यमधिदैवतं**" (தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்) என்கிற ஸம்பந்தம் கிடக்கச் சிலர்க்காகச் சிலரை அழிக்கிற இவனை ஸர்வரக்ஷகனென்று நினைக்கலாமோ? 44.

சின்ன அரு:—நாற்பத்துநாலாம் பாட்டு. கீழுபபாதித்த மேம் பொருளுக்கு மேற்பாட்டுக்களில் உபபாதித்த காணப்போகாமைக்கு ப்ரமாணமருளுகிறார் (ஆறுசடையித்யாதி). ஸ்ருஷ்ட்யநுகுணமாக ஸகலசேதநருடைய கர்மங்களையறியும் ஸர்வஜ்ஞனை அவன் அறியானோவென்ன அருளுகிறார் (தன்னுலேயித்யாதி.)

உன்னையென்றதுக்கு மூன்று தாத்பர்யம். ப்ரயோஜநாந்தரபரர்க்கு காண்கை ப்ரயோஜநமாயிருக்குமோவென்ன அருளுகிறார்

† (பா) அகிஞ்சந.

45. வளவெழுந் தவளமாட மதுரைமா நகரந்தன்னுள்
கவளமால் யானைகொன்ற கண்ணனை அரங்கமாலைத்
துளவத்தொண்டாயதொல்சீர்த் தொண்டரடிப்பொடிசொல்
இளையபுன்கவிதையேலு மெம்பிராற்கினியவாறே.

பதவுரை :—வளம் எழும்—அழகு மிகுந்துள்ளதும், தவளம்—வெண்ணிறத்தையுடையதுமான, மாடம்—மாடங்களையுடைய, மா—பெருமை பொருந்திய, மதுரை நகரம் தன்னுள்—வடமதுரையில், கவளம்—கவளத்துடன் கூடியதும், மால்—பெருத்திருப்பதுமான, யானை — (குவலயாபீடமென்னும்) யானையை, கொன்ற—கொலை செய்த, கண்ணனை—ஸ்ரீகிருஷ்ணனாய், அரங்கம் மாலை—ஸ்ரீரங்கநாதனை பெருமானை, துளபம் தொண்டு ஆய—திருத்துழாய்த் தொண்டிலே ஈடுபட்டுள்ளவரும், தொல் சீர்—இயற்கையான சேஷத்வத்திலே நிலைநின்றவருமான, தொண்டரடிப்பொடி — தொண்டரடிப்பொடியாழ்வார், சொல்—(அருளிச்செய்த) திருமாலையாகிற இப்பிரபந்தம், இளைய புன் கவிதை ஏலும்—சப்தம், கவித்வம் முதலியவற்றால் குற்றமுடையதாயிருந்தாலும், எம் பிராற்கு—எம்முடைய ஸ்வாமியான பெரிய பெருமாளுக்கு, இனிய ஆறே—இனிமையாயிருந்தபடியென் !

அவ :— நாற்பத்தஞ்சாம் பாட்டு. (வளவெழும்) நிகமத்தில், குவலயாபீடத்தைப் போக்கினாற்போல, தம்முடைய ப்ரதிபந்தகத்தைப் போக்கினபடியைச் சொல்லிப் பெரியபெருமாளுடைய ப்ரீதியே தமக்கு ப்ரயோஜநமென்று முடிக்கிறார்.

வ்யா :— (வளவெழுந்தவளமாட) அழகு மிக்கிருப்பதாய் வெள்ளியாலே செய்தாற்போலே அதிதவளமான மாடங்களையுடைத்தாயிருக்கை. திருவவதரித்தவன்று கோடிக்கப்பெறாத இழவு தீருகிறார். வில்விழவுக்காகக் கம்ஸன் கோடித்தபடியைச் சொல்லிற்றாகவுமாம். வளம்—அழகு. எழுச்சி—மிகுதி. (மதுரைமாநகரந்தன்னுள்) ப்ரதமத்தில் வாமநாச்ரமமாய், பின்பு ஸ்ரீஶத்ருக்நாழ்வான் படைவீடு

(காணப் பெற்றாலித்யாதி). (ஸ்வபலம்) ஸ்வயத்நம். (கண்ணாறு) நித்தாஸ்துதி—சுணையுடைமை. (பும்ஸ்த்வம்) அபிமாநமென்றபடி. தேவாநாமித்யாதிப்படியே ஸர்வரக்ஷகனன்றோவென்ன அருளுகிறார் (தேவாநாமித்யாதி)

செய்து, பின்பு க்ருஷ்ணன் திருவவதாரம் பண்ணுகையாலுண்டான பெருமையைச் சொல்லுகிறது. இப்படி பகவத்ஸம்பந்தம் மாறாத தேஶமாகையாலே வைகுந்தமாநகரிற் காட்டில் இது வ்யாவ்ருத்தம். (கவளமால் யானைகொன்ற கண்ணனை) கவளம் கொண்டிருப்பதாய்ப் பெருத்திருந்துள்ள ஆனையைக்கொன்ற க்ருஷ்ணனை. "களபமால்" என்று பாடமானபோது, "களபம்" என்று ஒருபருவத்தில் பெருத்த ஆனையென்றபடி. கீழே "ஆனைக்கன்றருளையீர்ந்த" என்றார்; இங்கே "ஆனைகொன்ற" என்கிறார்; இத்தால் (130) "देवानां दानवानाञ्च" (தேவாநாம் தாநவாநாஞ்ச) என்றதழிந்தது; அங்குள்ளார் விரோதிகளைப் போக்கித் தன்னை அனுபவிப்பித்தாற்போல, இவர்தம்முடைய ப்ரதிபந்தகங்களைப்போக்கித் தம்மை அநுபவிப்பித்தபடி. (கண்ணனை) திருவவதரித்தவன்று ஒளித்துப்போனவூரிலே கண்காணவந்து விரோதியை அழியச்செய்த ஏற்றத்தை அநுபவிக்கிறார். (அரங்கமாலை) அவதாரத்துக்குப் பிற்பாடரான தம்முடைய விரோதியைப் போக்கிற்று, கோயிலிலே வந்தாய்த்து † [(அரங்கமாலை) கோயிலுக்கு ஒருமாலைபோலே அலங்காரபூதரென்னவுமாம்.] (மாலை) ஆச்ரிதவிஷயத்தில் பெரும்பித்தரானவரை. விரோதிநிரஸநமும் தத்பூர்வகமான ஸ்வாநுபவமும் தன்பேறாயிருக்கை.

(துளபத்தொண்டாய) திருத்துழாயாழ்வார்க்கடிமை செய்யுமவர்—புருஷார்த்தத்தின் சரமாவதியிலே நின்றவர். இது தான் வைஷ்ணவர்களுக்கெல்லாம் திரள அடிமை செய்தபடியாய்த்து. "துளபத்தொண்டாய என்கையாலே அபசாரம்

அரு:—நாற்பத்தஞ்சாம் பாட்டு. (வளவெழுமித்யாதி) மஹத்தைக்குத் தாத்பர்யம் (ப்ரதமத்திலித்யாதி) "கவளமால்யானைகொன்ற" என்றதுக்குத் தாத்பர்யாந்தரம் (திருவவதரித்தவன்றித்யாதி). முந்தின தாத்பர்யத்துக்குச்சேர அருளிச்செய்கிறார் (அவதாரத்துக்கித்யாதி). பாகவதர்களெல்லார்க்கும் அடிமை செய்தாலன்றோ சரமாவதியிலே நின்றதாவது "துளபத்தொண்டாய" என்கிறதே என்ன அருளிச்செய்கிறார் (இதுதானித்தாதி). பின்னையும் ஒரு தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (துளபத்தொண்டாயவென்கையாலே

† குண்டலிதம் க்வாசித்கம்.

தட்டாத கைங்கர்யமென்கை. ‡ தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள்தொண்டரடிப்பொடி” என்னக்கடவதிறே. (தொல்சீர்) ஸ்வாபாவிகமான பகவச்சேஷத்வத்தின் ஸீமையிலே நின்றவர். உன்கைங்கர்யத்தினுடைய மேலெல்லை ஸ்ரீவைஷ்ணவ கைங்கர்யமிறே. (தொண்டரடிப்பொடி சொல்) இத்தால் “தொண்டரடிப்பொடி” என்று பேரையுடையவர். இவருக்கு ஜ்ஞாநாநந்தங்களன்று காணும் நிரூபகம். “அடிப்பொடி” என்கையாலே § “தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்” என்றாற்போல இருக்கிறதாய்த்து. (இளைய புன் கவிதையேலும்) ஶப்தத்தில் இளமையும், கவித்வத்தில் குற்றமுமுண்டேயாகிலும். இளசாய், புல்லிய கவியேயாகிலும்.

(எம்பிராற்கினியவாறே) எம்பிரானுக்கு இனிதாயிருக்குமிறே. (17) “किं मृष्टं सुतवचनं” (கிம் ம்ருஷ்டம் ஸுதவசநம்) என்கிறபடியே பெரியபெருமாள் இத்தை உகந்தபடி என்! என்கிறார். ப்ரஜைகளுடைய மழலைச்சொல்லு தமப்பனார்க்கு இனிதாயிருக்குமிறே. (235) “प्रहर्षयिष्यामि सनाथजीवितः” (ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாதஜீவித:) என்கிறபடியே இவ்வுகப்புத்தானே புருஷார்த்தம். இவன் ஸத்தை பெறுகையாவது:—அவன் ப்ரீதிக்குக் கைதொடுமான

யித்யாதி). அதாவது திருத்துழாயை ஶுஶ்ரூஷித்து அவ்வழியாலே பெரியபெருமாளுக்கு அடிமை செய்கையாலே அபசாரம் தட்டாத கைங்கர்யமென்றபடி. அப்படி இது கொண்டு பெருமாளுக்கு அடிமைசெய்வரோவென்ன அருளுகிறார் (தொடையொத்தவித்யாதி). “துளபத்தொண்டாய” என்றபோதே “தொண்டரடிப்பொடி” என்னுமிடம் ஸித்திக்குமாகையாலே புநருக்தமன்றோவென்ன அருளிச்செய்கிறார் (இத்தாலித்யாதி).

இப்ரபந்தத்துக்கு ஒருபலம் சொல்லவேண்டாவோவென்ன (ப்ரஹர்ஷயிஷ்யாமீத்யாதி). கேவலம் அவனை உகப்பிக்கையாலே ஸநாதஜீவிதனாகவேணுமோ? கைங்கர்யத்தாலேயன்றோ ஸத்தாஸித்தியென்ன (இவன் ஸத்தையித்யாதி). அதாவது—கைங்கர்யந்

---

‡ திருப்பள்ளி (10). § திருவாய் (7-1-11).

மாகை. இப்ரபந்தம் கற்றூர்க்குப் பலம்சொல்லாதொழிந்தது, இவ்வுகப்புத்தானே அவர்களுக்குப் பலமாகையாலே. இவ்வாழ்வாரை உகந்தாற்போலே இப்ரபந்தம் கற்றூரையும் பெரியபெருமாள் உகந்தருளுவரென்கை; (236) "प्रीयते सततं रामः (ப்ரீயதே ஸததம் ராம:) என்று ஸ்ரீராமாயணம் கற்றூருடைய பலம்போலேயாய்த்து இப்ரபந்தம் கற்றூருடைய பலமும். 45.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

திருமாலை வ்யாக்யானம் முற்றிற்று.

—○—

தானும் அவனுடைய முகோல்லாஸஹேதுவாகையாலே அவனுடைய உகப்பே ப்ரதாந புருஷார்த்தமென்றபடி. "இளைய புன்கவிதையேலு மெம்பிராற்கினியவாறே" என்று தம்மளவிலே பெரியபெருமாள் உகந்தபடியன்றோ சொல்லிற்று, அது அவர்களுக்குப் பலமாமோ வென்ன அருளிச்செய்கிறூர் (இவ்வாழ்வாரையித்யாதி). 45.

ஜீயர் திருவடிகளே சரணம்.

அரும்பதவிளக்கம் முற்றிற்று.

—○—

சின்ன அரு:—நாற்பத்தைந்தாம் பாட்டு. அவன் ப்ரீதியே போருமோ? தனக்கு, ஸத்தைவேண்டாவோவென்ன அருளுகிறூர் (இவன் ஸத்தையித்யாதி). (கைதொடுமானம்) ஸஹாயம். 45.

ஜீயர் திருவடிகளே சரணம்.

சின்ன அரும்பதவிளக்கம் முற்றிற்று.

[—○—○—]

திருமாலை ஸங்கதி.

யாத்ருச்சிகமான திருநாமஸங்கீர்த்தநத்தாலே யமாதிகள் தலையிலே காலைவைத்தேனென்றார் முதற்பாட்டில்; அதினுடைய இனிமையாலே பரமபதம் வேண்டேனென்றார் இரண்டாம் பாட்டில்; அத்தோடு விரோதிக்கும் ஸம்ஸாரமும் வேண்டேனென்றார் மூன்றாம் பாட்டில்; பாபப்ரசுரர்க்கும் திருநாமம்சொல்ல அதிகாரமுண்டாயிருக்க இவ்விஷயத்தை இழப்பதே என்றார் நான்காம் பாட்டில்; அஸ்திரத்வாதி தோஷதுஷ்டங்களான ப்ராக்ருத விஷயங்களைப் பற்றுவார் அவிஶேஷஜ்ஞரென்கிறார் ஐந்தாம் பாட்டில்; போக்தாவின் நிலையில்லாமையைச் சொன்னார் ஆறாம் பாட்டில்; முமுக்ஷுக்களாக ப்ரமித்திருக்கிற பாஹ்யரைக்குறித்து ஆஸ்ரணீயவஸ்துவை உபதேசித்தார் ஏழாம் பாட்டில்; இது கேட்டால் பொறாதவர்கள் வத்யர் என்றார் எட்டாம் பாட்டில்; இசைந்தவர்களைக்குறித்து, ஸுலபனான க்ருஷ்ணனை ஆஸ்ரயியுங்கோளென்றார் ஒன்பதாம் பாட்டில்; பிறபாடர்க்கு உதவும்படி கோயிலிலே ஸந்நிஹிதரானார் பத்தாம் பாட்டில்; அதுக்குக் கண்ணழிவுடையார் கர்ப்பநிர்ப்பாக்யரென்றார் பதினோராம் பாட்டில்; தாம் பெற்றாலும் பிறரநர்த்தம் பொறுக்க மாட்டேனென்றார் பன்னிரண்டாம் பாட்டில்; எல்லாரும் திருநாமத்தைச் சொல்லிப்பிழைப்பதுகாணென்று மநோரதித்தார் பதின்மூன்றாம் பாட்டில்; அவர்களோட்டை ஸம்ஸர்க்கத்தால் வந்த விடாய் தீரத் திருநாமத்தைச் சொன்னார் பதினாலாம் பாட்டில்; ஸம்பந்தஜ்ஞாநம் பிறப்பித்தபடி சொன்னார் பதினஞ்சாம் பாட்டில்; விஷயாநுரூபமாக பக்திபெருகினபடி சொன்னார் பதினாறாம் பாட்டில்; கண்களித்தபடி சொன்னார் பதினேழாம் பாட்டில்; அது புறவெள்ளமிட்டபடி சொன்னார் பதினெட்டாம் பாட்டில்; உடலுருகினபடி சொன்னார் பத்தொன்பதாம் பாட்டில்; உறவறிந்தார்க்கு அகலவொண்ணாதென்றார் இருபதாம் பாட்டில்; மநஸ்ஸால் பரிச்சேதிக்கவொண்ணாதென்றார் இருபத்தோராம் பாட்டில்; பாசுரமிட்டுப் பேசவொண்ணாதென்றார் இருபத்திரண்டாம் பாட்டில்; மறக்கவொண்ணாதென்றார் இருபத்துமூன்றாம் பாட்டில்; பிறந்த பக்தி விஷயவைலக்ஷண்யத்துக்கு அநுரூபமாயிராமையாலே அது க்ருத்ரிமமென்றார் இருபத்துநாலாம் பாட்டில்; ஶாஸ்த்ரீயமான பக்த்யாதிகளில்லையென்றார் இருபத்தஞ்சாம் பாட்டில்; ஸ்த்ரீஶூத்ராதிகளுக்குள்ள

நன்மையுமில்லையென்றார் இருபத்தாறாம் பாட்டில்; திர்யக்குக்களுக்குள்ள நன்மையுமில்லையென்றார் இருபத்தேழாம் பாட்டில்; ஆனை தன்னிடரில் பட்டநினைவுமில்லையென்றார் இருபத்தெட்டாம் பாட்டில்; விலக்ஷணதேஶவாஸமில்லையென்றார் இருபத்தொன்பதாம் பாட்டில்; இவை இல்லாமையேயன்றிக்கே பிறர்க்கு அநர்த்தகரனானேன் என்றார் முப்பதாம் பாட்டில்; நீசவிஷயங்களுக்கும் ஆகாதானொருவன் என்றார் முப்பத்தோராம் பாட்டில்; இப்படியிருக்க வந்து கொடுநின்ற மூர்க்கனென்றார் முப்பத்திரண்டாம் பாட்டில்; அதுக்கடியான நிர்லஜ்ஜதையுமுடையேனென்றார் முப்பத்து மூன்றாம் பாட்டில்; இப்படிப்பட்ட நான் கிட்டி அவத்யத்தை விளைப்பேனல்லேன் என்றார் முப்பத்துநான்காம் பாட்டில்; நீர்மையாலே சேர்த்துக்கொண்டானென்கிறார் முப்பத்தைந்தாம் பாட்டில்; விஶேஷகடாக்ஷம் பண்ணவேணுமென்று கதறினார் முப்பத்தாறாம் பாட்டில்; அதுபெறாமே கிலாய்த்தார் முப்பத்தேழாம் பாட்டில்; இப்படி த்வரையையுடைய ப்ரபந்நரை உகத்தியென்கிறார் முப்பத்தெட்டாம் பாட்டில்; அவர்களுக்கு ஜந்மத்தின் தாழ்வால் வரும் குறையில்லையென்றார் முப்பத்தொன்பதாம் பாட்டில்; அவர்களுக்கு ஹிம்ஸாதி வ்ருத்தத்தால் உண்டான பலம் அநுபவிக்கவேண்டாவென்றார் நாற்பதாம் பாட்டில்; தங்களோடு ஸம்பந்தித்தாரையும் பரிஶுத்தராக்குமவரென்கிறார் நாற்பத்தோராம் பாட்டில்; இவர்கள் எம்பெருமானோபாதி பூஜ்யரென்கிறார் நாற்பத்திரண்டாம் பாட்டில்; இவர்களை ஜந்மவ்ருத்தாதிகளாலே குறைய நினைத்தவர்கள் சண்டாளரென்கிறார் நாற்பத்து மூன்றாம் பாட்டில்; ப்ரஹ்மாதிகளுக்கும் துர்லபமான பேற்றை ஒரு திர்யக்குக்குக் கொடுத்தபடி சொன்னார் நாற்பத்து நான்காம் பாட்டில்; இப்ரபந்தம் கற்றார்க்குப் பலம் அருளிச்செய்தார் நாற்பத்தைந்தாம் பாட்டில்.

திருமாலை ஸங்கதி முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
7	10	क्रीडनकाशक्ताः	क्रीडनकासक्ताः
,,	29	ஶரீர என்றும்	ஶரீரி என்று
8	4	விசேஷத்தாலே	விசேஷத்திலே
13	15	போந்தடிபயும்	போந்தபடியும்.
17	10	போக்கி ,	போக்கி,
18	15	வாரமைக்காக	வாராமைக்காக
19	4	ஐஂஶவர்யம்	ஐஶ்வர்யம்
,,	17	ஸ்தவமென்னுதல்	ஸ்தலமென்னுதல்
22, 24	23, 11	குளித்தி	குளிர்த்தி
23	10, 11	மரட்டா .... சிலே	மாட்டா .... சியிலே
,,	13	வாங்கா	வாங்க
,,	15	सिञ्चेति	सिञ्चेदि
26	16	வேண்டாவென்ன ;	வேணடாவென்ன
27	18	த்ருஷ்டாந்தமாக	ஸத்ருஷ்டாந்தமாக
29	5	யிருக்குமிறே ; சிலர்க்கு	யிருக்கும்றே சிலர்க்கு ;
30	12	ஒன்றுராயிராமையாலே	ஒன்றுயிராமையாலே
31	5	தின்னிட	தின்றிட
,,	24, 25	*யோல்பணம்	யௌல்பண்யம்
34	28	வ்யுத்க்ரமணை	வ்யுத்க்ரமேண
38	25	ஸ்பாவிக	ஸ்வாபாவிக
41	1 & 2	சங்கல்பவாக்கியம்,	ஸங்கல்பவாக்யம் ;
42	6	அவ்வநர்தமே	அவ்வநாதரமே
,,	13	விஷயத்தையன்றோ	விஷயத்தையன்றே
43	23	மாலையரோல	மாலையாலே
		அலக்ருதனானவன்	அலங்க்ருதனானவன்
,,	25	கடவன்	கடவேன்
44	16	उहा उहा	वुहा वुहा
46	3	போக்யத்தையை	போக்யதையை
47	25, 28	*ப்ரகாரஸ்	ப்ராகாரஸ்
48	21	வெறுமைாகிறது	வெறுமையாகிறது
67	9	காட்டினாள்	காட்டினான்
69	7	உலகங்களுக்கும்	உலகங்களும்
70	23	கிரற்கு	க்ரங்கு
71	2	समुत्रस्य	समुद्रस्य
,,	15	அங்கனன்றே	அங்கனன்றியே
,,	24	வர்க்கதுகக்டைய	வர்க்கத்துக்கடைய
72	10	உதவுகையிலே	உதவுகையாலே
73	18	*மயௌ	மஹத்

* இக்குறியிட்டவைகளை ஸம்ஸ்க்ருதம் தமிழ் இரண்டிலும் திருத்திக் கொள்க.

80	3	சேதநர்.	சேதநர்,
87	1	இழவை	இழவே
91	16	அதுபாவ்ய	அநுபாவ்ய
92	18	பரிகார	பரிகர
93	3	கரும்பமர்	சுரும்பமர்
96	1	சரணாதிபதி	கரணாதிபதி
97	8	திவலைகள்	திரைகள்
99	7	ஆநந்தாப்ரு	ஆநந்தாஶ்ரு
101	4	ஷிஸ்ருக்ஷை	ஷிஸ்ருக்ஷயா
105	17	பரந்த:	பரந்தப:
109	14	வாயங்கணார்க்கு	வாயரங்கணார்க்கு
111	16	மாகைலே	மாகையாலே
115	5	ஆஶக்தியைப்	தன்னுடைய ஆஶக்தியைப்
”	11	படியிலும்	படியாலும்
118	29	ஸர்வோதிக்	ஸர்வதோதிக்
119	6	ஶௌர்யம்	சௌர்யம்
”	9	நினைவாய்த்	நினைவாயாய்த்
120	3	ஜோதிர்	ஜ்யோதிர்
121	21	விஷயத்திலே	விஶேஷத்திலே
122	11	த்ரைவர்ணிதரான	த்ரைவர்ணிகரான
125	20	ரக்ஷத்தில்	ரக்ஷணத்தில்
126	1	கடவவர்	கடவ அவர்
”	13	வந்து	வந்தது
127	25, 26	லல்லர்.... னென்கிர்	ரல்லர்....னென்கிறார்
128	14	உண்டாகிலிறே.	உண்டாகிலிறே
137	20	தன்மை	தண்மை
”	22	வளர்ந்த	வளர்த்த
141	13	குண்டாலும்	குண்டாறாலும்
143	25, 30	மனஸ்ஶக்தி	மனஶ்ஶக்தி
145	7	“அவனைச் சொல்லாய்”	அவனை “சொல்லாய்”
146	17	பெற்றிறேன்	பெற்றிலேன்
148	10	மறைக்கைக்குப்	மறைக்கைக்கும்
”	14	அபகாரனாய்	அபகாரகனாய்
152	19	அழிந்தே	அழித்தே
154	12	ஸவாஸனையோடே	வாஸனையோடே
155	14	சோராதபடி	சோராதபடி
162	7	விபாகற	விபாகமற
163	22	மாத்ரமேயே யிருக்கை	மாத்ரமேயாயிருக்கை
”	27	வத்ஸனை.... போகவோ	வத்ஸலனை....போகவோ ?
167	8	கிண்ணமெடு	கிண்ணகமெடு
”	24	யோக்யதை	போக்யதை
179	30	ஸ்வரூபக	ஸ்வரூப
182	11	*த்ருஶ்யதே	த்ருஶ்யந்தே

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் க்ருஷ்ணஸமரயே நம:

திருமாலை வ்யாக்யான ப்ரமாணத் திரட்டு.

1. குருபாதாம்புஜம் த்யாயேத் குரோர் நாம ஸதா ஜபேத் ।
குருஸேவாம் ஸதா குர்யாத் ஸோऽம்ருதத்வாய கல்பதே ॥

[ஆசாரியனின் திருவடித்தாமரையை எப்போதும் தியானிக்க வேண்டும்; ஆசாரியனின் திருநாமத்தை எப்பொழுதும் ஜபிக்க வேண்டும். ஆசாரியனின் கைங்கர்யத்தையே எப்போதும் செய்ய வேண்டும். இப்படிச் செய்பவன் மோக்ஷத்திற்குத் தகுந்தவனுகிறன்.]

2. இதி து பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தீதி ।
ஸ உல்பாவ்ருதோ கர்ப்போ தஶ வா மாஸாநந்த: ஶயித்வா
யாவத்வாऽத ஜாயதே ॥

[இம்மாதிரியாக, (ச்ரத்தை, ஸோமன், வ்ருஷ்டி, அந்நம், ரேதஸ் என்னும் ஐந்து ஆஹுதிகளில்) ஐந்தாவது ஆஹுதியின்போது, அப்சப்தத்திஞல் உணர்த்தப்படும் பூத ஸூக்ஷ்மங்களாலான ஸூக்ஷ்ம சரீரம் 'புருஷன்' என்னும் வார்த்தையிஞல் சொல்லப்படுகின்றன. கர்ப்பப்பையிஞல் சூழப்பட்ட அந்த கர்ப்பம், பத்து மாதமாவது, அதற்குச் சற்றேறக்குறையவாவது தாயின் வயிற்றினுள்ளிருந்த பின் பிறக்கிறது.]

3. அத்யாம்லகடுதீக்ஷ்ணோஷ்ணலவணைர் மாத்ருபோஜநை: ।
அதிதாபிபிரத்யர்த்தம் வர்த்தமாநாதிவேதந: ॥

[மிகவும் புளிப்பு, துவர்ப்பு, காரம், உஷ்ணம், உவர்ப்பு முதலிய வற்றுடன் கூடியவையும், மிகுந்த எரிச்சலைத்தருமவையுமான தாயின் போஜனத்திஞல், மிகவும் விருத்தியடைகிற பெருந்துன்பத்தை (கர்ப்பத்தில் ஜீவன்) அநுபவிக்கிறுன்.]

---

1. ப்ரபஞ்சஸாரம். 2. சாந்தோ (5-9-1). 3. வி. பு. (6-5-11).

4. ஜாயமாநः புரீஷாஸ்ருங்மூத்ரஶுக்லாவிலாநநः ।
ப்ராஜாபத்யேந வாதேந பீட்யமாநாஸ்திபந்தநः ॥
அதோமுகோ வை க்ரியதே ப்ரபலை: ஸூதிமாருதை: ।
க்லேஶாந்நிஷ்க்ராந்திமாப்நோதி ஜடராந் மாதுராதுர: ॥

[புருஷனானவன் பிறக்கும்போது, மலம், மூத்திரம், ரத்தம், சுக்கிலம் ஆகியவற்றால் அழுக்கடைந்த முகத்தையுடையவனாய், ப்ரஹ்மாவால் செலுத்தப்பட்டதொரு வாயுவினால் எலும்புக்கூடுகள் நெருங்கப்பெற்றவனாய் மிகுந்த பலமுள்ள ப்ரஸவவாயுக்களால் தலைகீழாகச் செய்யப்படுகிறான். இப்படிக் கஷ்டமடைந்த அந்த ஜீவன் தாயின் வயிற்றிலிருந்து மிகுந்த கிலேசத்துடன் வெளிப்படுகிறான்.]

5. கண்டூயநேऽபி சாஶக்த: பரிவர்த்தேऽப்யநீச்வர: ।
ஸ்நாநபாநாதி சாஹாரமவாப்நோதி பரேச்சயா ॥

[(பிறந்த பின்பும்) சொரிந்துகொள்ளுவதிலும் சக்தியற்றவனாய், புரளுவதற்கும் அஸமர்த்தனாய், குளித்தல், குடித்தல் முதலானவற்றையும், உணவையும் பிறர் விருப்பப்படியே அடைகிறான்.]

6 & 7. பால்யே க்ரீடநகாஸக்தா யௌவநே விஷயோந்முகா: ।
அஜ்ஞா நயந்த்யஶக்தாஶ்ச வார்த்தகம் ஸமுபஸ்திதம் ॥
தஸ்மாத் பால்யே விவேகாத்மா யதேத ஶ்ரேயஸே ஸதா ।
பால்யயௌவந வ்ருத்தாத்யைர் தேஹபாவைரஸம்யுத: ॥

[மனுஷ்யர்கள், சிறுவயதில் விளையாட்டுக் கருவிகளிலும், யௌவந வயதில் விஷயங்களிலும், ஈடுபடுகிறார்கள். கிழவயது வந்தடைந்தவுடன் அறிவு மழுங்கினவர்களாகவும், சக்தியற்றவர்களாகவும் அக்காலத்தையும் கழிக்கிறார்கள். ஆகையால் விவேகியாயிருக்கும் மனிதன், பால்யம், யௌவநம், கிழத்தனம் முதலிய தேஹஸ்வபாவங்களால் இழுக்கப்படாதவனாய், பாலனாயிருக்கும் போதே ஆத்மச்ரேயஸ்ஸின் பொருட்டு எப்போதும் முயற்சிசெய்யக் கடவன்.]

8. க்லேஶாதுத்க்ராந்திமாப்நோதி யாம்யகிங்கரபீடித: ।
ததஶ்ச யாதநாதேஹம் க்லேஶேந ப்ரதிபத்யதே ॥

4. வி.பு. (6-5-15). 5. வி.பு. (6-5-18). 7 & 6. வி.பு. (1-17-75,76).
8. வி. பு. (6-5-42).

[(இறக்கும் தருவாயில்) யமகிங்கரர்களால் துன்புறுத்தப்பட்டு, மிகவும் கஷ்டத்துடன் தேகத்திலிருந்து வெளிப்படுகிறான். அதன் பிறகு (நரகத்தில்) மிகக் கிலேசத்துடன் யாதநாசரீரத்தை அடைகிறான்.]

9. போக்தாரம் யஜ்ஞதபஸாம் ஸர்வலோகமஹேச்வரம் ।
ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வா மாம் சாந்திம்ருச்சதி ॥

[யஜ்ஞங்களையும், தவங்களையும் புஜிப்பவனும், எல்லா உலகங்களுக்கும் மஹேச்வரனும், எல்லா ஜீவராசிகளுக்கும் நண்பனுமான என்னை அறிந்து சாந்தியை அடைகிறான்.]

10. ஹர்த்தும் தமஸ் ஸதஸதீ ச விவேக்துமீச:
மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி ।
தேநாவலோக்ய க்ருதிந: பரிபுஞ்ஜதே தம்
தத்ரைவ கேऽபி சபலா: சலபீபவந்தி ॥

[(அஞ்ஞானமாகிற) இருளைப் போக்கடிப்பதற்கும், நன்மை தீமைகளை விவேகித்து அறிவதற்கும், காருணிகனான ஸர்வேச்வரன் வேதத்தை விளக்கைப்போல் கொடுத்தருளுகிறான். பாக்யசாலிகள் அவ்விளக்கைக்கொண்டு அவனைக் கண்டு அநுபவிக்கின்றனர். (கருவிலே திருவிலாத) சில சபல சித்தர்கள் அவ்விளக்கிலேயே விட்டில்பூச்சிபோல் விழுந்து மடிகின்றனர்.]

11. க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர:
க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:

[ப்ரக்ருதிதத்வமே க்ஷரமெனப்படுகிறது. (அதைத் தனக்குப் போக்யமாக ஹரிக்கையால்) ஹரனாகிற ஜீவன், மரணமற்றிருக்கையால் அக்ஷரனெனப்படுகிறான்; இந்த ப்ரக்ருதி புருஷர்களை ஒரு தேவன் நியமிக்கிறான்.]

12. ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ
ஏகோ நாராயண: ।

[இவன், எல்லா பூதங்கட்கும் அந்தர்யாமியாயிருப்பவனும் தோஷமற்றவனும், ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருப்பவனுமான நாராயணனென்னும் ஒரே தேவனாவான்.]

---

9. கீதை (5-29). 10. ர. ஸ்த (2-1). 11. ச்வேதா (1-10).
12. ஸுபாலோபநிஷத்.

13. த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா
ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே ।
தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி
அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி ॥

[(ஜ்ஞானமாகிற) அழகிய இறக்கையை உடையவையும், ஸமானமான குணங்களை உடையவையும், (எப்போதும்) கூடியிருப்பவையுமான இரு பக்ஷிகள் (ஜீவனும் ஈச்வரனும்) ஒரே மரத்தை (தேஹத்தை)ப்பற்றி நிற்கின்றன. அவைகளில் ஒன்று (ஜீவன்) பழுத்த கனியை (பக்வமானகர்மபலத்தை)ப் புசிக்கிறது. மற்றொன்று (பரமாத்மா) அக்கனியை உண்ணாமலேயே பிரகாசிக்கிறது.]

14. ததா வித்வாந் புண்யபாபே விதூய
நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி

[பரமபுருஷனை ஸாக்ஷாத்கரித்தவுடன், ப்ரஹ்மஜ்ஞானியானவன், புண்ய பாபங்களை விட்டு, ப்ரக்ருதிஸம்பந்தமற்றவனாய், (பரமபுருஷனுடன்) மேலான ஸாம்யத்தை அடைகிறான்.]

15. கிம் ஜபந் முச்யதே ஜந்துர் ஜந்மஸம்ஸாரபந்தநாத்

[எதை ஜபிப்பதன் மூலம், ஜந்மஸம்ஸாரங்களாகிற கட்டுகளிலிருந்து சேதனன் விடுவிக்கப்படுகிறான்?]

16. வாஸுதேவாச்ரயோ மர்த்யோ வாஸுதேவபராயண: ।
ஸர்வபாபவிஶுத்தாத்மா யாதி ப்ரஹ்ம ஸநாதநம் ॥

[வாஸுதேவனையே ஆச்ரயித்திருப்பவனாய், அவனையே மேலான ப்ராப்யப்ராபகங்களாகக்கொண்டவனாயிருக்கும் மனிதன், எல்லாப் பாபங்களும் நீங்கப்பெற்றுப் பழமையானதான ப்ரஹ்மத்தை அடைகிறான்.]

16 (a) வேதாந்தகோ ப்ராஹ்மண: ஸ்யாத் க்ஷத்ரியோ விஜயீ பவேத் ।
வைச்யோ தநஸம்ருத்தஸ் ஸ்யாச் சூத்ரஸ் ஸுகமவாப்நுயாத் ॥

[(இந்த ஸஹஸ்ரநாமத்தைக் கேட்கும் அல்லது படிக்கும்) ப்ராஹ்மணன் வேதத்தைக் கரைகாண்பான்; க்ஷத்ரியன் வெற்றியடைவான்; வைச்யன் செல்வச்சிறப்பையடைவான்; சூத்ரன் ஸுகத்தையடைவான்.]

---

13. ச்வேதா (4-6) முண்ட (3-1-1). 14. முண்டகம்(3-1-3). 15. ஸஹஸ்ரநாமாத்யாயம் (3). 16. ஸஹஸ்ர(117). 16(a) ஸஹஸ்ர (110)

17. கிம் ம்ருஷ்டம் ஸுதவசநம்
புநரபி ம்ருஷ்டம் ததேவ ஸுதவசநம் ।
ம்ருஷ்டாதபி ம்ருஷ்டதரம்
ததேவ பரிபக்வம் ஸுதவசநம் ॥

[எது போக்யமானது? (சிசுவான) குழந்தையின் மழலைச் சொல்லே போக்யமானது. மறுபடியும் போக்யமாயிருப்பது (பாலனான) அக்குழந்தையின் பிள்ளைப்பேச்சுக்களே. போக்யமான ஸகல பதார்த்தங்களிலும் போக்யமாயுள்ளது (யுவாவான) அப்பிள்ளையின் அறிவுநிரம்பிய அந்த வார்த்தைகளேயாகும்.]

18. யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே । யேந ஜாதாநி ஜீவந்தி ।
யத் ப்ரயந்த்யபிஸம்விஶந்தி । தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத்
ப்ரஹ்மேதி ॥

[யாதொன்றினிடமிருந்து இந்த ஜீவராசிகள் தோன்றுகின்றனவோ, எதனால் தோன்றினவை (ரக்ஷிக்கப்பட்டு) உயிர்வாழ்கின்றனவோ, எதை ப்ரளயத்திலும், மோக்ஷத்திலும் அடைகின்றனவோ, அதை அறிவாயாக: அதுவே ப்ரஹ்மம்.]

19. காரணந்து த்யேய:

[காரணவஸ்துவே தியானிக்கத்தகுந்தது.]

20. ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் । ந ப்ரஹ்மா நேஶாந: ।

[நாராயணன் ஒருவனே பிரளயகாலத்திலிருந்தான்; பிரமனுமில்லை; சிவனுமில்லை.]

21. அஜாயமாநோ பஹுதா விஜாயதே ।
தஸ்ய தீரா: பரிஜாநந்தி யோநிம் ।

[பிறப்பற்றவனாயிருந்தும் பலபடியாகப்பிறக்கிறான் பரமபுருஷன். அவனுடைய அவதார ரஹஸ்யத்தை புத்திமான்களிற் சிறந்தவர்களே அறிகிறார்கள்.]

22. ஸுரூபாம் ப்ரதிமாம் விஷ்ணோ: ப்ரஸந்ந வதநேக்ஷணம் ।
க்ருத்வாத்மந: ப்ரீதிகரீம் ஸுவர்ணரஜதாதிபி: ॥
தாமர்ச்சயேத் தாம் ப்ரணமேத் தாம் பஜேத் தாம் விசிந்தயேத் ।
விஶத்யபாஸ்ததோஷஸ்து தாமேவ ப்ரஹ்மரூபிணீம் ॥

---

17. 18. தை-ப்ருகு (1). 19. அதர்வசிகை(2-17). 20. மஹோபநிஷத்(1). 21. புருஷஸூக்தம் (2-3). (22) விஷ்ணுதர்மம் (103-30).

[அழகிய உருவமுள்ளதும், மலர்ந்த திருமுகமண்டலத்தையும், திருக்கண்களையுமுடையதும், தனக்கு ஆநந்தத்தை விளைவிப்பதுமான பகவத் விக்ரஹத்தைப் பொன், வெள்ளி முதலிய உலோகங்களால் செய்து, அதை அர்ச்சிக்கக்கடவன்; அதை வணங்கக்கடவன்; அதை பஜனம் செய்யக்கடவன்; அதை இடைவிடாமல் சிந்திக்கக் கடவன்; (இப்படிச் செய்தால்) தோஷம் நீங்கப்பெற்றவனாய், ஆதியஞ்சோதியுருவுடன் கூடிய அதையே அடைகிறான்.]

23. மத்யேவிரிஞ்சகிரிஶம் ப்ரதமாவதார:
தத்ஸாம்யத: ஸ்தகயிதும் தவ சேத் ஸ்வரூபம் ।
கிம் தே பரத்வபிஶுநைரிஹ ரங்கதாமந்
ஸத்வப்ரவர்த்தந க்ருபாபரிபாலநாத்யை: ॥

[ஸ்ரீரங்கநாதரே! பிரமருத்திரர்களுக்கு நடுவில் உமக்குண்டான முதல் அவதாரமானது, அவர்களுடன் ஸாம்யத்தைக்காட்டி, உம்முடைய பரத்வ ஸ்வரூபத்தை மறைப்பதற்காகவாகில், உம்முடைய பரத்வத்தைக் கோட்சொல்லித்தருமவையான ஸத்வகுணப்ரவர்த்தனம், கருணையினால் (பிரமருத்திரர்களை) ரக்ஷித்தருளுவது ஆகிய காரியங்களால் என்ன பயன்?]

24. துரந்தஸ்யாநாதேரபரிஹரணீயஸ்ய மஹதோ
நிஹீநாசாரோऽஹம் ந்ருபஶுரஶுபஸ்யாஸ்பதமபி ।
தயாஸிந்தோ! பந்தோ! நிரவதிகவாத்ஸல்யஜலதே
தவ ஸ்மாரம் ஸ்மாரம் குணகணமிதீச்சாமி கதபீ: ॥

[கருணைக்கடலான பிரானே! எல்லாவித பந்துவுமானவனே! எல்லையற்ற வாத்ஸல்யத்துக்குக் கடல்போன்றவனே! முடிவற்றதும் ஆரம்பமில்லாததும், போக்கடிக்கமுடியாததுமான பெரிய பாபத்திற்கு உறைவிடமாகவும், கீழான நடத்தையையுடையவனாகவும், மனிதப் பசுவாகவும் இருந்தபோதிலும், உன்னுடைய குணஸமூஹங்களை நினைத்து நினைத்து பயமற்றவனாய் நான் இம்மாதிரி ஆசைப்படுகிறேன்.]

25. ராகாதய: கதம் ஜேதும் ஶக்யா வர்ஷஶதைரபி ।
ந யோகயோக்யம் ஹி மநோ ராகாதிபிரநிர்ஜிதை: ॥

23. ர-ஸ்த (2-51) 24. ஸ்தோ-ர (58) 25. வி-தர் (1-43)

[காமம், க்ரோதம் முதலியவைகளை நூற்றுக்கணக்கான வருஷங்களானாலும் எப்படி ஜயிக்கமுடியும்? காமம் முதலியவற்றை ஜயிக்காமலிருக்கும்போது மனஸ்ஸானது (கர்மஜ்ஞானபக்தி) யோகங்களுக்குத் தகுந்ததாக ஆவதில்லையன்றோ.]

26. ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம் ।....
ந ததர்ப்ப ஸமாயாந்தம் பச்யமாநோ நராதிப: ॥

[வடிவழகாலும், வண்மையினாலும், (மற்ற) குணங்களாலும், ஆண்பிள்ளைகளினுடைய கண்ணையும், நெஞ்சையும்கூடக் கவர்கின்றவனை ராமபிரானைப்பார்த்து, தசரதசக்ரவர்த்தி திருப்தியடையவில்லை.]

27. தஸ்ய யஜ்ஞவராஹஸ்ய விஷ்ணோரமிததேஜஸ: ।
ப்ரணாமம் யேऽபி குர்வந்தி தேஷாமபி நமோ நம: ॥

[யஜ்ஞவராஹரும், அளவற்ற தேஜஸ்ஸை உடையவருமான அந்த விஷ்ணுவுக்கு எவர்கள் ஒரு நமஸ்காரம் செய்கிறார்களோ அவர்களுக்குப் பலகால் நமஸ்காரம்.]

28. ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம்
வததி யம: கில தஸ்ய கர்ணமூலே ।
பரிஹர மதுஸூதநப்ரபந்நாந்
ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் ॥

[பாசத்தைக் கையில் கொண்டிருக்கும் தன் தூதனைக் கண்ணால் சைகை செய்தழைத்து, அவனுடைய காதினுள் யமன் பின்வருமாறு சொல்லலுற்றான் :— "மதுஸூதனனை சரணமடைந்தவர்களை அணுகாதே; நான் மற்ற மனிதர்களுக்கே ப்ரபுவேயொழிய வைஷ்ணவர்களுக்கல்ல"]

29. யந்நாமஸங்கீர்த்தநதோ மஹாபயாத்
விமோக்ஷமாப்நோதி ந ஸம்சயம் நர: ।
ஸ ஸர்வலோகார்த்திஹரோ ந்ருகேஸரீ
மமாஸ்து மாங்கள்யவிவ்ருத்தயே ஹரி: ॥

[எவருடைய திருநாமத்தை ஸங்கீர்த்தனம் செய்வதால் பெரும் பயத்தினின்றும் மனிதன் விடுதலையடைகிறானே, எல்லா உலகின்

---

26. ரா அயோ (3-29) 27. வி. தர் (90-55) 28. வி. பு. (3-7-14)
29. வி. தர் (43-24)

துக்கத்தையும் போக்கடிப்பவரும், நரஸிம்மவுருக்கொண்டவருமான அந்த ஹரி எனக்கு மங்களங்களை விருத்தி பண்ணட்டும்.]

30. தஸ்மாத் வா ஏதஸ்மாத் விஜ்ஞாநமயாத்
அந்யோऽந்தர ஆத்மா ஆநந்தமய:

[அப்படிப்பட்ட இந்த ஞானமயனான ஜீவனைக்காட்டிலும் வேறுபட்டவனும், (அவனுக்கு) அந்தர்யாமியாயிருப்பவனும் ஆநந்த ஸ்வரூபியான பரமாத்மாவே.]

31 ஸமஸ்தகல்யாணகுணாத்மகோऽஸௌ
ஸ்வஶக்திலேஶோத்த்ருதபூதஸர்க்க: ।
இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:
ஸம்ஸாதிதாஶேஷ ஜகத்திதோऽஸௌ ॥

[இந்த பகவான் ஸகலகல்யாணகுணங்களையும் இயற்கையாகவே உடையவன்; தன்னுடைய சக்தியில் ஒரு சிறிய பகுதியினாலேயே தரிக்கப்பட்ட பூதங்களை உடையவன்; இச்சையினாலேயே எடுத்துக் கொள்ளப்பட்டவையும், இஷ்டமானவையுமான பல தேஹங்களையுடையவன்; இவன் எல்லாவுலகிற்கும் நன்மையைச் செய்பவன்.]

32. ஸிஞ்சேதிமம் ச ஜநமிந்திரயா தடித்வாந்
பூஷாமணித்யுதிபிரிந்த்ரதநுர் ததாந: ।
ஶ்ரீரங்கதாமநி தயாரஸநிர்ப்பரத்வாத்
அத்ரௌ ஶயாளுரிவ ஶீதலகாளமேக: ॥

[பிராட்டியாகிய மின்னலையுடையதாய், திருவாபரணமணிகளின் ஒளிகளாகிற இந்திரன் வில்லை தரித்துக்கொண்டிருப்பதாய், க்ருபையாகிற ஜலத்தினால் பூர்ணமாயிருக்கையால் திருவரங்கம் பெரிய கோயிலாகிற மலையில் சாய்ந்து கொண்டிருப்பதான, குளிர்ந்த நீலமேகம் போன்றுள்ள ஸ்ரீரங்கநாதன் அடியேனையும் நீராட்டியருளட்டும்.]

33, 33(a) தஸ்ய தத் வசநம் ஶ்ருத்வா ராமோ வசநமப்ரவீத் ।
வசஸா ஸாந்த்வயித்வைநம் லோசநாப்யாம் பிபந்நிவ ॥

[அந்த விபீஷணனுடைய அவ்வார்த்தையைக்கேட்டு, ராமபிரான் அவனை நல்வார்த்தைகளால் தேற்றி, கண்களால் பருகுபவன்போலிருந்துகொண்டு பின் வரும் வார்த்தையை அருளிச்செய்தான்.]

---

30. தை-ஆந (5). 31. வி.பு. (6-5-84). 32. ர-ஸ்த (1-82). 33. ரா-யு (19-7).

34. அவிகாராய ஶுத்தாய நித்யாய பரமாத்மநே।
ஸதைகரூபரூபாய விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே॥

[(அசேதனத்தைப்போலல்லாமல்) விகாரம் அற்றவனாகவும், (ஸம்ஸாரிசேதனனைப்போலல்லாமல்) அசுத்தி இல்லாதவனாகவும், (முக்தாத்மாவைப்போலல்லாமல்) நித்ய சுத்தனாகவும், (நித்யஸூரிகளைப்போலல்லாமல்) தனக்குமேல் ஒருவனற்றவனாகவும், எப்போதும் ஒருபடிப்பட்டிருக்கும் திவ்யமங்களவிக்ரஹத்தை உடையவனாகவும், ஸர்வவ்யாபியாகவும், எல்லாவற்றையும் ஜயிப்பவனாகமுள்ள பகவானுக்கு (நமஸ்காரம்).]

35. தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பஶ்யந்தி ஸூரய: ।
திவீவ சக்ஷுராததம் । தத் விப்ராஸோ விபந்யவோ
ஜாக்ருவாம்ஸஸ் ஸமிந்ததே । விஷ்ணோர் யத் பரமம் பதம்॥

[விஷ்ணுவினுடைய அந்தப் பரமபதத்தை நித்யஸூரிகள் எப்போதும் பார்க்கிறார்கள். அப்பரமபதம், எல்லாவற்றையும் பிரகாசிப்பிப்பவனும், ஆகாயத்திலிருப்பவனும், உலகிற்குக் கண்ணாயிருப்பவனுமான ஸூர்யன் போல் ஒளிவிடுகின்றது; விஷ்ணுவினுடைய யாதொரு பரமபதமிருக்கிறதோ, அதில் மேதாவிகளும், துதிப்பதையே ஸ்வபாவமாகக் கொண்டவர்களும், (எப்போதும்) விழித்திருப்பவர்களுமான நித்யஸூரிகள் விளங்குகின்றனர்.]

35(a). நிரஸ்தாதிஶயாஹ்லாத ஸுகபாவைகலக்ஷண।
பேஷஜம் பகவத்ப்ராப்திரேகாந்தாத்யந்திகீ மதா॥

[தனக்கு மேலில்லாத ஆநந்தரூபமானதும், ஸுகமாயிருக்கையையே லக்ஷணமாக உடையதும், துக்கமற்றதும், முடிவற்றதுமான பகவத்ப்ராப்தியே (தாபத்ரயத்திற்கு) மருந்தாக எண்ணப்படுகிறது.]

36. ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டித:।
பக்திஶ்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி॥

[ஸ்வாமியே! தேவரீரிடத்தில் எனக்கு மேலான அன்பானது எப்போதும் நிலைநிற்கிறது; வீரரே! (உம்மிடத்தில்) பக்தியும் நித்யமாயிராநின்றது. என் நினைவு ஸ்ரீவைகுண்டநாதனிடத்திலும் செல்லுகின்றதில்லை.]

---

34. வி. பு. (1-2-1). 35. ருக்வேதம். ஸாமவேதம் (3-18-2-4).
35(a). வி. பு. (6-5-59). 36. ரா-உத் (40-15).

37. ஆர்ஷம் தர்மோபதேஶஞ்ச வேதஶாஸ்த்ராவிரோதிநா ।
யஸ்தர்க்கேணாநுஸந்த்தே ஸ தர்மம் வேத நேதர: ॥

[ருஷிகளால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட வேதங்களையும், தர்மங்களை உபதேசிக்கும் ஸ்ம்ருதி முதலியவற்றையும் (அந்த) வேதசாஸ்திரங்களுக்கு விரோதமில்லாத தர்க்கத்தினால் எவனொருவன் விசாரிக்கிறானோ, அவனே தர்மத்தை அறிகிறான். மற்றவன் அறியமாட்டான்.]

38. ஶதாயுர்வை புருஷ:

[மனிதன் நூறு வயது வாழ்பவன்.]

39. ந ஜாயதே ம்ரியதே வா கதாசித்
நாயம் பூத்வா பவிதா வா ந பூய: ।
அஜோ நித்ய: ஶாஶ்வதோऽயம் புராணோ
ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே ॥

[இந்த ஆத்மாவானது ஒருபொழுதும் பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை. (பிரமன் முதலிய சரீரத்திலுள்ள) இவ்வாத்மவஸ்துவும், (கல்பாதியில்) தோன்றி (கல்பாந்தத்தில்) மறைவதென்பதில்லை. ஆத்மாவானது பிறப்பற்றது; எப்போதுமுள்ளது; பழமையானதாயிருப்பினும் புதிதுபோல் போக்யமானது; சரீரம் கொல்லப்படும்போது சாவதில்லை.]

40. கர்ப்பே விலீயதே பூயோ ஜாயமாநோऽஸ்தமேதி ச ।
ஜாதமாத்ரே ச ம்ரியதே பாலபாவேऽத யௌவநே ॥
மத்யமம் வா வய: ப்ராப்தே வார்த்தகே வா த்ருவா ம்ருதி: ॥

[(ஜீவன்) கர்ப்பத்திலேயே நாசமடைகிறான். பிறக்கும்போது நசிப்பதுமுண்டு. பிறந்தவுடனேயும், பாலனாயிருக்கும்போதும், யௌவனப்பருவத்திலும் இறந்துபோவதுமுண்டு. (இல்லாவிடில்) நடுவயதாயிருக்கும் போதாவது, கிழப்பருவத்திலேயாவது மரணம் நிச்சயம்.]

41. நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவௌ ।
ஆத்மநோ நாவபுத்யந்தே மநுஷ்யா ஜீவிதக்ஷயம் ॥

[ஆதித்யனுதித்ததும் ஆநந்திக்கிறார்கள்; ஸூர்யன் அஸ்தமித்தபோதும் ஸந்தோஷப்படுகிறார்கள். தங்களுடைய ஆயுள் நசித்துவருவதை இம்மனிதர்கள் அறிகிறார்களில்லை.]

---

37. மநு (12-106). 38. யஜுர் ப்ரா (3-8-15). 39. கீதை (2-20). 40. வி. பு. (6-5-52). 41. ரா-அ (105-24).

41(a). ஜாயஸ்வ ம்ரியஸ்வ

[பிறப்பாயாக; இறப்பாயாக.]

42. ஸ ஸுப்த: ஸமயே ப்ராத்ரா லக்ஷ்மண: ப்ரதிபோதித: |
ஜஹௌ நித்ராஞ்ச தந்த்ரீஞ்ச ப்ரஸக்தம் ச பதி ஶ்ரமம் ||

[உறங்கினவனான லக்ஷ்மணன் தமையனாலே தக்க சமயத்தில் எழுப்பப்பட்டவனாய், தூக்கத்தையும், சோம்பலையும், வழிநடந்ததால் வந்த சிரமத்தையும் விட்டான்.]

43. ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தஶ்ச த்ருடவ்ரதா: |
நமஸ்யந்தஶ்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே ||

[என்னுடைய திருநாமங்களை எப்போதும் சொல்லிக்கொண்டும், விடாமுயற்சியுடன் என் கைங்கர்யத்திலே ஈடுபட்டுக்கொண்டும், என்னை பக்தியுடன் நமஸ்கரித்துக்கொண்டும், என்னுடன் எப்போதும் சேர்ந்திருக்கையை விரும்பியவர்களாய் என்னை உபாஸிக்கிறார்கள்.]

43(a). ஆரோக்யமிந்த்ரியேஷ்வல்பண்யம் ஐச்வர்யம் ஶத்ருஶாலிதா |
வியோகோ பாந்தவைராயு: கிம் தத் யேநாத்ர துஷ்யதி ||

[தேஹாரோக்யம் இந்திரியங்களுக்கு வலிமையைத் தருவதன்மூலம் விஷயப்ரவணராக்குகிறது. ஐச்வர்யம் சத்ருக்களை அதிகமாக்குகிறது. நீண்ட ஆயுளானது பந்துக்களின் வியோகத்தை உண்டுபண்ணுகிறது. இவ்வுலகில் ஸந்தோஷப்படக்கூடியது எது இருக்கின்றது?]

44. பாலா அபி க்ரீடமாநா: க்ருஹத்வாரேஷு ஸங்கஶ: |
ராமாபிஷ்டவஸம்யுக்தா: சக்ருரேவ மித: கதா: ||

[வீட்டுவாயில்களில் கூட்டங்கூட்டமாக விளையாடும் பிள்ளைகளும், ராமனைப்புகழ்ந்து பேசிக்கொண்டும், (அவன் விஷயமான) பேச்சுக்களைப் பேசிக்கொண்டுமிருந்தனர்.]

45. பவித்ரம் பரமம் புண்யம் தேஶோயம் ஸர்வகாமதுக்

[இந்த தேசம் மிகப்புனிதமாகவும், மனிதர்களை நற்கதிக்கு அழைத்

41(a) சாந் (5-10-8). 42. ரா-அ (56-3). 43. கீதை (9-14). 44. ரா-அ (6-13). 45. காருடபுராணம்-(11).

துச்செல்வதாயும், அவர்களுடைய எல்லா இஷ்டங்களையும் கொடுப்பதாயுமிருக்கிறது.]

46. ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத ஏகஶ்சார்த்தம் ந சிந்தயேத் ।
ஏகோ ந கச்சேதத்வாநம் நைகஸ் ஸுப்தேஷு ஜாக்ருயாத் ॥

[நல்ல பதார்த்தத்தை ஒருவனாகப் புசிக்கலாகாது; நற்பொருளை ஒருவனாகச் சிந்திக்கலாகாது; வழிப்பாதையில் ஒருவனாகச் செல்லலாகாது; (பலர்) தூங்குகையில் ஒருவன் விழித்திருக்கக்கூடாது.]

47. மேருமந்தரமாத்ரோऽபி ராஶி: பாபஸ்ய கர்மண: ।
கேஶவம் வைத்யமாஸாத்ய துர்வ்யாதிரிவ நஶ்யதி ।

[மேருமந்தரமலைகள் போன்ற பாபகர்மக்குவியல்களும், கேசவனை அடைந்தவுடன்; நல்ல வைத்தியனை அடைந்தவுடன் வியாதி விலகுவதுபோல், விட்டு நீங்குகிறது.]

48. தத் யதா இஷீகதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயதே ।
ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே ॥

[நெருப்பிலிடப்பட்ட இஷீகப்பஞ்சானது எப்படி எரிக்கப்படுகிறதோ, அப்படியே இவ்வுபாஸகனுடைய ஸமஸ்தபுண்யபாபங்களும் கொளுத்தப்படுகின்றன.]

49. யத் ப்ரஹ்மகல்பநியுதாநுபவேऽப்யநாஶ்யம்
தத் கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே

[யாதொரு பாபம், பல்லாயிரம் ப்ரஹ்மகல்பங்கள் அனுபவித்தாலும் நசிக்காதோ, அந்தப் பாபத்தை இந்த ஜந்து இங்கு அரைக்ஷண நேரத்தில் செய்கிறான்.]

50. அபூதபூர்வம் மம பாவி கிம் வா
ஸர்வம் ஸஹே மே ஸஹஜம் ஹி து:க்கம் ।
கிந்து த்வதக்ரே ஶரணாகதாநாம்
பராபவோ நாத ந தேऽநுரூப: ॥

[நாதனே! எனக்கு இதற்கு முன் ஏற்படாத என்ன துக்கம் இனிமேல் உண்டாகிவிடப்போகிறது? எல்லா துக்கங்களையும் பொறுத்துக் கொண்டேயிருக்கிறேன்; துன்பமென்பது என்னுடன் கூடப்பிறந்ததன்றோ. ஆனால் தேவரீருக்கு முன்னால் வந்து சரணமடைந்தவர்களுக்கு ஏற்படும் அவமானம் தேவருக்குத் தகுந்ததன்று.]

---

46. பார-உத்·(32-53). 47. விஷ்ணுதர்மம். 48. சாந்தோ (5-24-3).
49. வை-ஸ்த (60). 50. ஸ்தோ-ரத் (25).

51. ஸந்த்யக்தே பந்துலோகேந தஸ்மிந் துர்வ்ருத்தசேதஸி ।
சிந்தாம் சகார ஸ முநி: க்ஷத்ரபந்தௌ தயாபர: ॥

[பந்து ஸமூஹத்தினால் விடப்பட்டவனும், துர்நடத்தைகளில் ஈடுபட்ட மனத்தையுடையவனுமான அந்த க்ஷத்ரபந்துவினிடத்தில், கருணைநிரம்பிய அம்முனிவர் அன்புகொண்டார்.]

52. யதா ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாளநாந்மணே: ।
தோஷப்ரஹாணே ந ஜ்ஞாநமாத்மந: க்ரியதே ததா ॥
யதோதபாநகரணாத் க்ரியதே ந ஜலாம்பரம் ।
ஸதேவ நீயதே வ்யக்திம் அஸத: ஸம்பவ: குத: ॥
ததா ஹேயகுணத்வம்ஸாத் அவபோதாதயோ குணா: ।
ப்ரகாச்யந்தே ந ஜந்யந்தே நித்யா ஏவாத்மநோ ஹி தே ॥

[மணியிலுள்ள மலத்தைக் கழுவுவதினால், ஒளியானது புதிதாக உண்டுபண்ணப்படுவதில்லை. அப்படியே, தோஷம் நீங்கும்போது ஆத்மாவுக்கு ஞானம் புதிதாக உண்டாவதில்லை. (எப்பொழுதுமுள்ள ஒளியும், ஞானமும் பிரகாசிக்கத்தொடங்குகின்றன.) கிணறு வெட்டுவதினால் ஜலமானது உண்டுபண்ணப்படுவதில்லை. உள்ள ஜலமே வெளிப்படுத்தப்படுகிறது. இல்லாததை எப்படி உண்டு பண்ணமுடியும்? அப்படியே கெட்டகுணங்கள் நீங்குவதால், ஞானம் முதலிய ஆத்மகுணங்கள் பிரகாசிப்பிக்கப்படுகின்றனவேயொழிய உண்டுபண்ணப்படுவதில்லை. அவை ஆத்மாவுக்கு நித்யமாயிருப்பவையன்றோ.]

53. பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் சாச்வதம் சிவமச்யுதம் நாராயணம்
[உலகிற்கெல்லாம் பதியாகவும், தனக்குத்தானே ஈச்வரனாகவும், நித்யனாகவும், மங்களாகாரனாகவும், அடியவர்களை நழுவவிடாதவனாகவுமுள்ளவன் நாராயணனே.]

54. யஸ்யாஸ்மி நதமந்தரேமி
[எவனுக்கு நான் தாஸனாயிருக்கிறேனோ அவனை விட்டு வேறொருவனிடமும் செல்லமாட்டேன்.]

55. துராசாரோபி ஸர்வாசீ க்ருதக்நோ நாஸ்திக: புரா ।
ஸமாச்ரயேதாதிதேவம் ச்ரத்தயா சரணம் யதி ॥
நிர்தோஷம் வித்தி தம் ஜந்தும் ப்ரபாவாத் பரமாத்மந: ॥

51. வி-தர் (97-38). 52. வி-தர் (104—55....57). 53. தை-நா (11).
54. யஜுர்ப்ராஹ்மணம் (3-7) 55. ஸாத்வதம் (16-23).

[அநாதிகாலமாக ஒருவன் கெட்ட ஒழுக்கமுள்ளவனாகவும், எதை யும் சாப்பிடுபவனாகவும், செய்நன்றி மறந்தவனாகவும், நாஸ்திகனாக வும் இருந்தபோதிலும், ஆதிதேவனை ச்ரத்தையுடன் சரணமடை வானாகில் அம்மனிதனை பரமபுருஷனுடைய மகிமையினாலே தோஷமற்ற வனாக அறிவாயாக.]

56. அக்நே நய ஸுபதா ராயே
அஸ்மாந் விச்வாநி தேவ வயுநாநி வித்வாந் ।
யுயோத்யஸ்மஜ் ஜுஹுராணமேநோ
பூயிஷ்டாந்தே நம உக்திம் விதேம

[அக்நிசப்தவாச்யனான பகவானே! எங்களை நல்ல வழியாலே (பரம ப்ராப்யமான கைங்கர்யமாகிற) தனத்தை அடைவிப்பாயாக. தேவனே! நீயே எங்களுக்குத் தகுந்த உபாயங்களை அறிவாய். எங் களைப் பீடிக்கும் பாபங்களைப் போக்கடிப்பாயாக. நீ மிகப்பெரிதாக நினைக்கும் 'நம:' என்னும் சொல்லை உன் விஷயத்தில் நாங்கள் சொல்லுவோம்.]

57. ராஜவித்யா ராஜகுஹ்யம் பவித்ரமிதமுத்தமம் ।
ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்த்துமவ்யயம் ॥

[வித்யைகளுக்குள்ளும், ரஹஸ்யங்களுக்குள்ளும் மேலானது இது. இதுவே பாபங்களைப் போக்கடிப்பவற்றுள் உயர்ந்தது. என்னை நேரில் காட்டுவது. என்னை அடைவதற்கு ஸாதனமாயிருப்பது. செய்வதற்கு மிகவும் ஸுகமானது. (பலத்தைக்கொடுத்தபின்பும்) அழியாதது.]

58. ஏதத் ஸாம காயந்நாஸ்தே । ஹா வுஹா வுஹா வு ।
அஹமந்நமஹமந்நமஹமந்நம் । அஹமந்நாதோऽஹமந்நாதோऽ
ஹமந்நாத: ।

[முக்தன் "ஹா வுஹா வுஹா வு" என்னுமிந்த ஸாமகானத்தைப் பாடிக்கொண்டிருக்கிறான். நான் (பரமபுருஷனுக்கு) அன்னம்போல் போக்யமாயிருப்பவன்; நான் (பரமாத்மாவுக்கு) அன்னம்; நான் (பரமாத்மாவுக்கு) அன்னம். நான் (பரமபுருஷனின் உகப்பாகிற) அன்னத்தை புஜிப்பவன்; நான் அன்னத்தை புஜிப்பவன்; நான் அன்னத்தை புஜிப்பவன்.]

56. ஈசாவாஸ்யம் (18). 57. கீதை (9-2). 58. தை-ப்ருகு (10-6).

59. தாஸோ஽ஹம் கோஸலேந்த்ரஸ்ய ராமஸ்யாக்லிஷ்டகர்மண: ।
ஹநுமாந் ஶத்ருஸைந்யாநாம் நிஹந்தா மாருதாத்மஜ: ॥

[கோஸல தேசத்துக்கு அதிபதியும், பெருங்காரியங்களையும் எளிதாகச்செய்து முடிப்பவனுமான ராமனுக்கு, சத்ருஸைந்யங்களை அழிப்பவனும், வாயுவின் புத்திரனும், ஹநுமான் என்னும் பெயரை உடையவனுமான நான் தாஸன்.]

60. காயந்தி கேசித் ப்ரணமந்திகேசித்
ந்ருத்யந்தி கேசித் ப்ரஹஸந்தி கேசித் ।
பதந்தி கேசித் விசரந்தி கேசித்
ப்லவந்தி கேசித் ப்ரலபந்தி கேசித் ॥

[சில வானரர்கள் பாடுகிறார்கள்; சிலர் வணங்குகிறார்கள்; சிலர் ஆடுகிறார்கள்; சிலர் சிரிக்கிறார்கள்; சிலர் கீழ்விழுகிறார்கள்; சிலர் திரிகிறார்கள்; சிலர் தாவுகிறார்கள்; சிலர் கூச்சலிடுகிறார்கள்.]

61. ப்ராகேவ து மஹாபாக: ஸௌமித்ரிர் மித்ரநந்தந: ।
பூர்வஜஸ்யாநுயாத்ரார்த்தே த்ருமசீரைரலங்க்ருத: ॥

[நண்பர்களை உகப்பிப்பவனும், மஹாபாக்யசாலியுமான லக்ஷ்மணன் தமயனுடன் கூட வனத்திற்குப் புறப்படுவதற்காக, மரவுரியினால் முதலிலேயே அலங்கரித்துக்கொண்டுவிட்டார்.]

62. பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே ।
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதஶ்ச தே ॥

[தேவரீர் வைதேஹியுடன் கூட மலைத்தாழ்வரைகளில் விளையாடுவீர். அடியேன் தேவர் விழித்திருக்கும்போதும், தூங்கும்போதும் உமக்கு எல்லா அடிமைகளையும் செய்வேனாக.]

63. ஸேவா ச்வவ்ருத்திர் வ்யாக்யாதா தஸ்மாத் தாம் பரிவர்ஜயேத்

[அடிமை செய்வது நாயின் தொழிலெனப்படுகிறது. அதனால் அதை விலக்கவேண்டும்.]

64. பாரதந்த்ர்யம் பரே பும்ஸி ப்ராப்ய நிர்க்கதபந்தந: ।
ஸ்வாதந்த்ர்யமதுலம் ப்ராப்ய தேநைவ ஸஹ மோததே ॥

[கர்மபந்தத்திலிருந்து விடுபட்டவனான முக்தன் பரமபுருஷனிடத்தில்

---

59. ரா-ஸு (42-35). 60. ரா-ஸு (61-14). 61. ரா-ஸு (33-29).
62. ரா-அ (31-25). 63. மநு (4-6). 64. விஷ்ணுதத்வம்.

பாரதந்த்ரியத்தை அடைந்து, ஒப்பற்ற (கர்ம) ஸ்வாதந்த்ரியத்தையு மடைந்து அவனுடன் கூடவே ஆநந்தப்படுகிறான்.]

65. வாஸுதேவதருச்சாயா நாதிஶீதா ந கர்மதா ।
நரகாங்காரஶமநீ ஸா கிமர்த்தம் ந ஸேவ்யதே ॥

[வாஸுதேவனாகிற விருக்ஷத்தின் நிழல் அதிகக்குளிருமற்றது; மிகவும் உஷ்ணத்தையும் தாராது. நரகமாகிற அக்னி ஜ்வாலையின் உஷ்ணத்தை சமிக்கச்செய்வது. அது எக்காரணத்தினால் (எல்லா மனிதர்களாலும்) அடையப்படவில்லை?]

66. தவ தாஸ்யஸுகைகஸங்கிநாம் பவநேஷ்வஸ்த்வபி கீடஜந்ம மே ।
இதராவஸதேஷு மா ஸ்ம பூதபி சேஜ்ஜந்ம சதுர்முகாத்மநா ॥

[உனக்கு அடிமைப்பட்டிருக்கையாகிற ஸுகமொன்றிலேயே ஈடுபட்டவர்களுடைய திருமாளிகைகளில், எனக்குப் புழு ஜன்மமாவது உண்டாகட்டும். மற்றவர்கள் வீடுகளில் பிரமனாகப் பிறப்பதும் எனக்கு வேண்டா.]

67. போகா இமே விதிஶிவாதிபதஞ்ச கிஞ்ச
ஸ்வாத்மாநுபூதிரிதி யா கில முக்திருக்தா ।
ஸர்வம் ததூஷஜலஜோஷமஹம் ஜுஷேய
ஹஸ்த்யத்ரிநாத தவ தாஸ்யமஹாரஸஜ்ஞ: ॥

[அத்திகிரியருளாளனே! உன்னுடைய கைங்கர்யமாகிற தெள்ளமுதின் ரஸத்தை அனுபவித்த அடியேன் இவ்வுலகத்திலுள்ள இவ்வின்பங்கள், பிரமருத்ராதிகளுடைய பதவிகள், மேலும், ஆத்மாநுபவம் எனப்படும் மோக்ஷம் ஆகிய எல்லாவற்றையும் உப்புத் தண்ணீரைப் போல் நினைக்கக்கடவேன்.]

68. பூதபவ்யபவந்நாத: கேஶவ: கேஶிஸூதந: ।
ப்ராகாரஸ் ஸர்வவ்ருஷ்ணீநாமாபத்ஸ்வபயதோ ஹரி: ॥

[முக்காலங்களிலுமுள்ளவற்றுக்கு ஸ்வாமியும், கேசியைக்கொன்று கேசவனென்று கீர்த்தி பெற்றவருமான பகவான் ஹரி வ்ருஷ்ணி குலத்திலுள்ள எல்லாருக்கும் மதிள் போன்றவராகவும் ஆபத்துக் காலத்தில் அபயமளிப்பவராகவும் விளங்குகிறார்.]

---

65. காருடம் (222). 66. ஸ்தோ-ர (55). 67. வரத-ஸ்த-81.
68. பாரத-ராஜஸூய-69.

69. ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே ஶரீரே ஸதி யோ நர: ।
தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விஶ்வரூபம் ச மாமஜம் ॥
ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்டபாஷாணஸந்நிபம் ।
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம் ॥

[சரீரம் உயிருடனும், மனஸ் நல்ல நிலையிலும், தாதுக்கள் ஸமமாகவும் இருக்கும்போது, எந்த மனிதன், உலகையெல்லாம் உருவாகக் கொண்டவனும், பிறப்பற்றவனுமான என்னை நினைக்கிறானோ, அந்த என்னுடைய பக்தன் இறந்துபோகிறவனாய், கட்டையைப்போலும் கல்லைப்போலும் கிடக்கும்போது, அவனை நான் நினைக்கிறேன்; மேலான கதிக்கு (அவனை) அழைத்துச் செல்லுகிறேன்.]

70. லோகாநாம் த்வம் பரோ தர்மோ விஷ்வக்ஸேநஶ் சதுர்ப்புஜ: ।
ஶார்ங்கதந்வா ஹ்ருஷீகேஶ: புருஷ: புருஷோத்தம: ॥

[உலகங்களுக்கெல்லாம் நீரே மேலான தர்மமாயுள்ளவர்; எங்கும் பரவிய ஸேனைகளையுடையவர்; நான்கு புஜங்களுடன் கூடியவர்; சார்ங்கமென்னும் வில்லாள்பவர்; இந்திரியங்களை நியமிப்பவர். புருஷரென்றும் புருஷோத்தமரென்றும் புகழப்படுபவர்.]

71. ராமோ விக்ரஹவாந் தர்ம: ஸாது: ஸத்யபராக்ரம: ।
ராஜா ஸர்வஸ்ய லோகஸ்ய தேவாநாம் மகவாநிவ ॥

[ராமன் தர்மமே உருவெடுத்தவன்; நல்லோன்; உண்மையான பராக்ரமமுள்ளவன். எல்லா தேவர்களுக்கும் இந்திரன் அதிபதியாயிருப்பதுபோல், எல்லா உலகிற்கும் அவன் அரசன்.

72. யே ச வேதவிதோ விப்ரா யே சாத்யாத்மவிதோ ஜநா: ।
தே விதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் ॥

[வேதமறிந்த ப்ராஹ்மணர்களும், ஆத்ம ஸ்வரூபமறிந்த பெரியோர்களும் மஹாத்மாவான க்ருஷ்ணனையே பழமையான தர்மமாக அறிகிறார்கள்.]

73. உபாதத்தே ஸத்தாஸ்திதிநியமநாத்யைஶ்சிதசிதௌ
ஸ்வமுத்திஶ்ய ஸ்ரீமாநிதி வததி வாகௌபநிஷதீ ।
உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம் ந து குணௌ
அதஸ்த்வாம் ஸ்ரீரங்கேஶய ஶரணமவ்யாஜமபஜம் ॥

---

69. வராஹசரமம். 70. ரா – யு (120–15). 71. ரா-ஆ(37-13)-மாரீசவாக்யம். 72. பார.ஆர(71-123). 73. ர-ஸ்த (2–88).

[ஹே ஸ்ரீரங்கநாதனே! 'ஸ்ரீமந்நாராயணன் ஸ்ருஷ்டி, ஸ்திதி, நியமனம் முதலிய காரியங்களால் சேதநாசேதநங்களைத் தனக்காக ஸ்வீகரிக்கிறான்' என்று உபனிஷத்வாக்யமானது சொல்லுகிறது. ஆகையால், இவ்விஷயத்தில் உபாயத்வமும் உபேயத்வமும் உனக்கு ஸ்வரூபம்; குணங்களல்ல. ஆகையால் உம்மை நிர்வ்யாஜமான உபாயமாக அடைந்தேன்.]

74. குஹேந ஸார்த்தம் தத்ரைவ ஸ்திதோऽஸ்மி திவஸாந் பஹூந் ।
ஆஶயா யதிவா ராம: புந: ஶப்தாபயேதிதி ॥

['ராமபிரான் மறுபடியும் கூப்பிடுவாரோ' என்னும் ஆசையாலே குஹனுடன் கூட அங்கேயே பல தினங்கள் தங்கினேன்.]

75. அஸந்நேவ ஸ பவதி । அஸத் ப்ரஹ்மேதி வேத சேத் ।
அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத । ஸந்தமேநம் ததோ விது: ॥

['ப்ரஹ்மத்தை அறிகிறான்' என்னும் (புகழ்) ஒருவனுக்கில்லையாகில் அவன் இல்லாதவனாகவே ஆகிறான்!; 'ப்ரஹ்மத்தை அறிகிறான்' என்னும் (கீர்த்தி) ஒருவனுக்கிருந்ததாகில், அக்காரணத்தாலேயே (பெரியோர்கள்) அவனை ஸத்புருஷனென்கிறார்கள்.]

76. நேயமஸ்தி புரீ லங்கா ந யூயம் ந ச ராவண: ।
யஸ்மாதிக்ஷ்வாகுநாதேந பத்தம் வைரம் மஹாத்மநா ॥

[மஹாபுருஷனும், இக்ஷ்வாகுகுலநாதனுமான ராகவனால் விரோதம் வைக்கப்பட்டதாகையால், இந்த லங்காபுரியும், நீங்களும், ராவணனும் அஸத்ஸமராய்விட்டீர்கள்.]

77. தர்மாத்மா ஸத்யஸந்தஶ்ச ராமோ தாஶரதிர் யதி ।
பௌருஷே சாப்ரதித்வந்த்வ: ஶரைநம் ஜஹி ராவணிம் ॥

[அம்பே! தசரதபுத்திரனான ராமன் தர்மாத்மாவாகவும், ஸத்யஸந்தனாகவுமிருப்பானாகில், வீர்யத்தில் ஒப்பற்றவனாகவுமிருப்பானாகில், இந்த ராவணபுத்ரனான இந்திரஜித்தை ஜயிப்பாயாக.]

78. குரோர் யத்ர பரீவாதோ நிந்தா வாऽபி ப்ரவர்த்ததே ।
கர்ணௌ தத்ர பிதாதவ்யௌ கந்தவ்யம் வா ததோऽந்யத: ॥

[எவ்விடத்தில் ஆசாரியனைப்பற்றி அவதூறும், தூஷணங்களும் சொல்லப்படுகின்றனவோ, அங்கு காதுகளையாவது அடைத்துக்

74. ரா–அ (59-3) ஸுமந்த்ர வாக்யம். 75. தை–ஆந (6).
76. ரா–ஸு (43-25). 77. ரா–யு (91-73). 78. மநு (2-200).

கொள்ளவேண்டும்; அவ்விடத்தை விட்டு அகலவாவது வேண்டும்.]

79. ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி

[ஜீவராசிகள் ஒன்றையும் கொல்லக்கூடாது.]

80. யே த்வந்யதேவதாபக்தா யஜந்தே ச்ரத்தயாந்விதா: ।
தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதிபூர்வகம் ॥

[மற்ற தேவதைகளுடைய யாவர் சில பக்தர்கள், ச்ரத்தையுடன் கூடியவர்களாய் அவர்களைப் பூஜிக்கிறார்களோ, அவர்களும் என்னையே பூஜிக்கிறார்கள். ஆனால் முறை தவறி ஆராதிக்கிறார்கள்.]

81. த்ரீணி ஶதாநி த்ரிஸஹஸ்ராண்யக்நித்ஸ் ரிம்ஶச்ச தேவாந் நவ சாऽஸபர்யத்

[பல கோடிக்கணக்கான தேவதைகளுக்கும் அக்னியானவன் கைங்கர்யம் செய்தான்.]

82. சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பதம் கச்சந்தி தேவை:

[அக்நிஹோத்ரதர்சபூர்ணமாஸாதி கர்மங்கள், பரமாத்மாவானவன் ஆத்மாவாயிருப்பதாலேயே, (அவனுடைய சரீரபூதர்களான) தேவதைகளால், (அந்த தேவதைகளுக்கு ஆராதனமாயுள்ளன என்னும்) பெருமையை அடைகின்றன.]

83. அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச ।
ந து மாமபிஜாநந்தி தத்வேநாதஶ் ச்யவந்தி தே ॥

[எல்லா யஜ்ஞங்களுக்கும் நானே போக்தாவாகவும், பலத்தைக் கொடுப்பவனாகவும் இருக்கிறேனன்றோ. என்னை அந்த தேவதாந்தர நிஷ்டர்கள் உண்மையாக அறிவதில்லை. ஆகையால் அவர்கள் என்னிடமிருந்து நழுவிவிடுகிறார்கள்.]

84. யே யஜந்தி பித்ரூந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹுதாஶநாந் ।
ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்தி தே ॥

[எவர்கள் பித்ருக்களையும், தேவர்களையும், ப்ராஹ்மணர்களையும், அக்னியையும் ஆராதிக்கிறார்களோ, அவர்கள், எல்லா ஜந்துக்களுக்கும் ஆத்மாவான விஷ்ணுவையே ஆராதிக்கிறார்கள்.]

---

79. 80. கீதை(9-23). 81. 82. யஜு ஆர(3-11.21).
83. கீதை(9-24). 84. தக்ஷஸ்ம்ருதி; பார-சாந்தி(355-4).

85. ஸம்ஜ்ஞாயதே யேந ததஸ்ததோஷம்
ஶுத்தம் பரம் நிர்மலமேகரூபம் ।
ஸந்த்ருஶ்யதே வாப்யதிகம்யதே வா
தத் ஜ்ஞாநமஜ்ஞாநமதோऽந்யதுக்தம் ॥

[தோஷமற்றதும் சுத்தமானதும், மிகவும் மலமற்றதும், ஒருபடிப்பட்ட உருவத்தையுடையதுமான அப்பரவஸ்து எந்த அறிவினால் அறியப்படுகிறதோ, பார்க்கப்படுகிறதோ, அடையப்படுகிறதோ, அதுவே ஜ்ஞாநம்; அதைக்காட்டிலும் வேறானது அஜ்ஞாநம்.]

86. தத் கர்ம யந்ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே ।
ஆயாஸாயாபரம் கர்ம வித்யாந்யா ஶில்பநைபுணம் ॥

[எது பந்தத்திற்குக் காரணமல்லவோ அந்தக்கர்மமே கர்மமெனவுரியது. எது முக்திக்குக் காரணமோ அவ்வித்யையே வித்யையெனத்தக்கது. மற்ற கர்மம் தேஹசிரமத்திற்கே. மற்ற வித்யை செருப்புக்குத்துவதில் பாண்டித்யம் போன்றது.]

87. கார்யாணாம் காரணம் பூர்வம் வசஸாம் வாச்யமுத்தமம் ।
யோகாநாம் பரமாம்ஸித்திம் பரமம் தே பதம் விது: ॥

[கார்யங்களான எல்லாப்பொருள்களுக்கும் ஆதிகாரணமாகவும், சொற்களுக்கு மேலான சொற்பொருளாகவும், யோகங்களுக்கு மேலான ப்ராப்யமாகவும் உன்னுடைய மேலான ஸ்வரூபத்தை (பெரியோர்கள்) அறிகிறார்கள்.]

88. ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ
மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநம் ச ।
வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:
வேதாந்தவித் வேதவிதேவ சாஹம் ॥

[நான் எல்லாச்சேதனர்களுடைய ஹ்ருதயத்திலும் நுழைந்து நிற்கிறேன். என்னிடமிருந்தே நினைவும், அறிவும், அறிவின்மையும் உண்டாகின்றன. எல்லா வேதங்களாலும் அறியப்படுவேன் நான். வேதத்தில் சொல்லப்பட்ட பலத்தைத் தருபவனும், வேதத்தை அறிபவனும் நானே.]

89. நாராயணபரா வேதா தேவா நாராயணாங்கஜா: ।
நாராயணபரா லோகா நாராயணபரா மகா: ॥

---

85. வி-பு (6-5-87). 86. வி-பு (1-19-41). 87. ஜிதந்தே (1-7).
88. கீதை (15-15). 89. பாகவதம் (2.5-15).

[வேதங்கள் நாராயணனைச் சொல்லுபவை; தேவர்கள் நாராயணனுடைய அங்கத்திலிருந்து உண்டானவர்கள்; நாராயணனைப்பற்றியிருப்பவை உலகங்கள். யாகங்கள் நாராயணனை ஆராதிப்பவை.]

90. அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர் தாஸ்யமுபாகத:

[நான் இவருடைய நினைவினால் (இவருக்குத்) தம்பி; (உண்மையில்) இவருடைய குணங்களுக்கு அடிமைப்பட்டவன்.]

91. விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமிததேஜஸ: ।
தஸ்மாத் தநுர்ஜ்யாஸம்ஸர்க்கம் ஸ விஷேஹே மஹேச்வர: ॥

[அளவற்ற தேஜஸ்ஸையுடையவனும், பூஜ்யனுமான சிவனுக்கு விஷ்ணுவானவர் (த்ரிபுரஸம்ஹாரகாலத்தில்) விசேஷ சக்த்யாவேசரூபேண) அந்தராத்மாவாயிருந்தார். அதனாலேயே அந்த மஹேச்வரன் வில்லை வளைத்து நாணேற்றுகையினாலேற்படும் சிரமத்தை ஸஹித்தார்.]

92. அபராதஸஹஸ்ரபாஜநம் பதிதம் பீமபவார்ணவோதரே ।
அதிகம் ஶரணாகதம் ஹரே க்ருபயா கேவலமாத்மஸாத் குரு ॥

[துக்கங்களையெல்லாம் போக்கும் எம்பிரானே! கணக்கற்ற குற்றங்களுக்கு இருப்பிடமாகவும், பயங்கரமான ஸம்ஸாரக்கடலினுள் விழுந்தவனாகவும், (உன்னையொழிய வேறு) கதியற்றவனாகவும், 'ஶரணாகதன்' என்று சொல்லிக்கொள்ளுமவனாகவுமிருக்கிற அடியேனை, உன்னுடைய அருளொன்றினாலேயே உன்னுடையவனாக்கிக்கொள்வாயாக.]

93. சாபமாநய ஸௌமித்ரே ஶராம்ஶ்சாஶீவிஷோபமாந் ।
ஸாகரம் ஶோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா: ॥

[லக்ஷ்மணா! வில்லையும், விஷப்பாம்புகளுக்கொப்பான அம்புகளையும் கொண்டுவா. ஸமுத்ரத்தை வற்றச்செய்கிறேன். வானரர்கள் கால்நடையாகச் செல்லட்டும்.]

94. ஸமுத்ரஸ்ய தத: க்ருத்தோ ராமோ ரக்தாந்தலோசந: ।
ஸமீபஸ்தமுவாசேதம் லக்ஷ்மணம் ஶுபலக்ஷணம் ॥

[ஸமுத்ரத்தினிடத்தில் கோபமடைந்தவனும், (அதனால்) சிவந்துபோன கடைக்கண்களை உடையவனுமான ராமன், அருகிலிருப்ப

90. ரா-கி(4-12). 91. பார-கர்ண(29). 92. ஸ்தோ-ர(48).
93. ரா-யு(21-22). 94. ரா-யு(21-13).

வனும், மங்களமான லக்ஷணங்களை உடையவனுமான லக்ஷ்மணனிடம் இவ்வார்த்தையைச் சொன்னான்.]

95. ந யஷ்டவ்யம் ந தாதவ்யம் ந ஹோதவ்யம் கதஞ்சந ।
போக்தா யஜ்ஞஸ்ய கஸ்த்வந்யோ ஹ்யஹம் யஜ்ஞபதி: ப்ரபு: ॥

[ஒரு போதும் யாகம் செய்யலாகாது; தானம் கொடுக்கலாகாது; ஹோமம் செய்யக்கூடாது. (வேநமஹாராஜனான) என்னைக்காட்டிலும் வேறு எவன் யஜ்ஞத்திற்கு போக்தாவாவான்? நானே யஜ்ஞத்திற்கு ஸ்வாமியாகவும் பலப்ரதனாகவுமிருக்கிறேனன்றோ].

96. ஸேதும் த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய கங்காஸாகரஸங்கமம் ।
ப்ரஹ்மஹத்யா விமுச்யேத மித்ரத்ரோஹீ ந முச்யதே ॥

[ஸமுத்ரத்தில் (ராமபிரானால்) கட்டப்பட்ட ஸேதுவையும், கங்கை கடலுடன் கலப்பதையும் பார்ப்பதால் ப்ரஹ்மஹத்தியிலிருந்து விடுபடுகிறான். நண்பனுக்கு த்ரோஹம் செய்தவன் (ஒருபோதும் அப்பாபத்திலிருந்து) விடுபடமாட்டான்.]

97. கச்சாநுஜாநாமி ரணார்த்திதஸ் த்வம்
ப்ரவிஶ்ய ராத்ரிஞ்சரராஜ லங்காம் ।
ஆஶ்வாஸ்ய நிர்யாஹி ரதீ ச தந்வீ
ததா பலம் த்ரக்ஷ்யஸி மே ரதஸ்த: ॥

[ராக்ஷஸராஜனே! நீ யுத்தத்தில் களைப்படைந்துவிட்டாய்; திரும்பிப்போ; நானே அனுமதிக்கிறேன். லங்கையில் நுழைந்து, களைப்பாற்றிக்கொண்டு, ரதத்தையும் வில்லையும் கொண்டு திரும்பிவா. ரதத்திலிருந்துகொண்டு அப்போது என் பலத்தைப் பார்ப்பாய்.]

98. ராமலக்ஷ்மணகுப்தா ஸா ஸுக்ரீவேண ச வாஹிநீ ।
பபூவ துர்த்தர்ஷதரா ஸர்வைரபி ஸுராஸுரை: ॥

[ஸுக்ரீவனுடன் கூடிய அந்த வானரஸேனையானது ராமலக்ஷ்மணர்களால் காவலிடப்பட்டதாய், எல்லா தேவாஸுரர்களாலும் கலக்கவொண்ணாததாயிருந்தது.]

99. வைஷ்ணவாநாம் விஶேஷோऽஸ்தி விஷ்ணோராயதநம் மஹத்

[விஷ்ணுவுக்குப் பெரிய கோயிலாயிருக்கையாகிற ஒரு பெருமை வைஷ்ணவர்களுக்குள்ளது. (இந்த ப்ரமாணம் மூலத்தில் 'விஷ்ணோ

95. வி. பு. (1-13-14). 96. 97. ரா-யு (59-144).
98. ரா-யு (25-33). 99. லைங்கம்.

ராயதநம் யயௌ’ என்றிருப்பதைத் திருத்திக்கொள்ளவும். தெலுங்கு லிபிப் பதிப்பில் ‘விஷ்ணோராயதநம் மஹத்’ என்றே பாடம்).]

100. ஜாயமாநம் ஹி புருஷம் யம் பஶ்யேந் மதுஸூதந:।
ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்தசிந்தக:॥

[பிறந்துகொண்டிருக்கும்போது எந்தப் புருஷனை மதுஸூதனன் பார்க்கிறானோ, அவனே ஸத்வகுணமுடையனென்று அறியத்தக்கவன். அவனே மோக்ஷபலத்தை நினைப்பவன்.]

101. விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும்।
பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்தபாதாதிஸம்யுதா॥

[ப்ராஹ்மணரே! கைகால் முதலியவற்றுடன் கூடியதும், விசித்திரமானதுமான இந்த தேக அமைப்பு, ஸர்வேச்வரனுக்கு ஸமர்ப்பிப்பதற்குத் தகுந்தபடி ஆதிகாலத்திலேயே செய்யப்பட்டிருக்கிறது.]

102. நரகே பச்யமாநஸ்து யமேந பரிபாஷித:।
கிம் த்வயா நார்ச்சிதோ தேவ: கேசவ: க்லேஶநாஶந:॥

[நரகத்தில் துன்புறுத்தப்படும் ஒரு ஜீவன், “அடே! ஸகல துக்கங்களையும் போக்கும் குழலழகையுடைய கேசவனாகிற தேவன் உன்னால் அர்ச்சிக்கப்படவில்லையோ?” என்று யமனால் சொல்லப்பட்டான்.]

103. விபீஷணவிதேயம் ஹி லங்கைச்வர்யமிதம் க்ருதம்।
ததாச்வஸிஹி விச்வஸ்தா ஸ்வக்ருஹே பரிவர்த்தஸே॥

[(பிராட்டி!) இந்த லங்கைச்வர்யமானது விபீஷணனுக்கு அடங்கினதாகச் செய்யப்பட்டது. நீ உன்னுடைய வீட்டிலேயே இருப்பவள் போலாகிறாய். ஆகையால் நம்பிக்கையுடன் கவலையற்றிருப்பாயாக.]

104. ஸஹஸ்ராஸ்ய: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரசரணோ விபு:।
ஸஹஸ்ரபாஹு: ஸர்வஜ்ஞோ தேவோ நாமஸஹஸ்ரவாந்॥

[கணக்கற்ற முகங்களையும், கண்களையும், பாதங்களையும் கைகளையுமுடையவனும், ஸர்வவியாபியும், எல்லாவற்றையும் அறிபவனுமான தேவனாகிற நாராயணன் பேராயிரங்களை உடையவன்.]

105. ஆர்த்தா விஷண்ணா: ஶிதிலாஶ்ச பீதா
கோரேஷு ச வ்யாதிஷு வர்த்தமாநா:।

100. பார-சாந் (358-73). 101. விஷ்ணுதத்வம். 102.
103. ரா-யு (116-13). 104. பார-ஸபா (38). 105. ஸஹஸ்ரநா.

ஸங்கீர்த்ய நாராயணஶப்தமாத்ரம்
விமுக்தது:க்காஸ் ஸுகிநோ பவந்தி ||

[தாபத்ரயங்களாலும் வருந்தினவர்களும், (அவற்றைக்கண்டு) பயந்தவர்களும், கோரமான வியாதிகளில் உழலுபவர்களும், நாராயண சப்தத்தை மட்டும் உச்சரிப்பதாலேயே துக்கம் நீங்கப்பெற்று ஸுகமடைகிறார்கள்.]

106. யந்முஹூர்த்தம் க்ஷணம் வாऽபி வாஸுதேவோ ந சிந்த்யதே |
ஸா ஹாநிஸ்தந் மஹச்சித்ரம் ஸா ப்ராந்திஸ் ஸா ச விக்ரியா ||

[யாதொரு முஹூர்த்தத்திலாவது, கணத்திலாவது வாஸுதேவன் நினைக்கப்படுவதில்லையோ, அதுவே ஹானி; அதுவே பெருந்துன்பம்; அதுவே மயக்கம்; அதுவே விகாரம்.]

107. ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய ஸ்வநுரக்தஸ் ஸுஹ்ருஜ்ஜநே |
ராமே ப்ரமாதம் மா கார்ஷீ: புத்ர ப்ராதரி கச்சதி ||

[லக்ஷ்மணா! நீ வனவாஸத்திற்கென்றே ஸ்ருஷ்டிக்கப்பட்டவன். உன்னிடம் அன்புபூண்டவனான ராமனிடம் நீ மிகவும் பிரியம் வைத்திருக்கிறாய். பிள்ளாய்! உன் தமயன் ராமன் நடந்து செல்லும்போது (அந்நடையழகிலீடுபட்டு, அவனுக்குத் தீங்கு செய்வோரைக் கவனியாமலிருக்கையாகிற) தவறைச் செய்துவிடாதே.]

108. யோऽஸாதுப்யோர்த்தமாதாய ஸாதுப்ய: ஸம்ப்ரயச்சதி

[எவரொருவர் தீயவர்களிடமிருந்து பொருளை எடுத்து, நல்லோர்களுக்குக் கொடுக்கிறாரோ....]

109. மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந |
தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம் ||

[நண்பனுடைய வேஷத்தோடு நெருங்கின இவ்விபீஷணனை ஒருபோதும் கைவிடமாட்டேன். அவனிடம் தோஷமிருந்தாலும் இருக்கட்டுமே நல்லோர்களுக்கு இவனை ஏற்றுக்கொள்வது நிந்திக்கத்தக்கதல்ல.]

110. யஶ்ச ராமம் ந பஶ்யேத்து யஞ்ச ராமோ ந பஶ்யதி |
நிந்தித: ஸ வஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே ||

[எவனொருவன் ராமனைக் காண்பதில்லையோ, எவனை ராமனும்

---

106. காருட-பூர்வ (222-22). 107. ரா-அ (40-5). 108.
109. ரா-யு (18-3). 110. ரா-அ (17-14). 111. ஸ்தோ-ர (41).

கடாக்ஷிப்பதில்லையோ அவன் உலகத்தில் நிந்திக்கப்பட்டவனாய் வாழ்கிறான். அவனுடைய ஆத்மாவும் அவனை நிந்திக்கும்.]

111. தாஸஸ் ஸகா வாஹநமாஸநம் த்வஜ:
யஸ்தே விதாநம் வ்யஜநம் த்ரயீமய: ।
உபஸ்திதம் தேந புரோ கருத்மதா
த்வதங்க்ரிஸம்மர்த்தகிணாங்கஶோபிநா ॥

[வேதங்களை அவயவங்களாகக்கொண்ட எந்த கருடாழ்வான் உனக்கு அடியவனும், நண்பனும், வாஹனமும், ஸிம்ஹாஸனமும், கொடியும், மேற்கட்டியும் சாமரமுமாக இருக்கின்றனனோ, உன்னுடைய திருவடிகள் நெருக்கின தழும்பை அடையாளமாகக்கொண்டு சோபிப்பவனான அந்த கருடாழ்வானாலே திருமுன்பே ஸேவிக்கப் பட்டவனாகிய உன்னை....]

112. நிவாஸஶய்யாஸநபாதுகாம்ஶுகோ-
பதாநவர்ஷாதபவாரணாதிபி: ।
ஶரீரபேதைஸ் தவ ஶேஷதாம் கதைர்
யதோசிதம் ஶேஷ இதீரிதே ஜநை: ॥

[பகவான் எழுந்தருளியிருக்கும் திருமாளிகையாகவும், கண்வளர்ந் தருளுகிறபடுக்கையாகவும், ஸிம்ஹாஸனமாகவும், பாதுகையாகவும், திருப்பரியட்டமாகவும் அணையாகவும், மழைக்கும் வெயிலுக்கும் குடையாகவும், மற்றும் பல படியாகவும ஆகின்றவையாய், அந்தந்தக் காலத்திற்குத் தக்கபடி உனக்கு அடிமைப்பட்டவையான பல சரீரங் களாலே சேஷன் என்று எல்லா ஜனங்களாலும் சொல்லப்படுமவ னிடத்தில்....]

113. ஸ்ம்ருதிப்ரம்ஶாத் புத்திநாஶோ புத்திநாஶாத் ப்ரணஶ்யதி

[நினைவு மழுங்குவதினால் புத்தியானது நாசமடைகிறது; புத்திநாசத் தினால் இவன் (ஸம்ஸாரத்திலமுழ்ந்தி) நசித்துப்போகிறான்.

114. கார்ப்பண்யதோஷோபஹதஸ்வபாவ:
ப்ருச்சாமி த்வா தர்மஸம்மூடசேதா: ।
யச்ச்ரேய: ஸ்யாந்நிஶ்சிதம் ப்ரூஹி தந்மே
ஶிஷ்யஸ் தே஽ஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம் ॥

[என்செய்யவடுப்பது என்று அறியாதவனாய், பலபடிப்பட்ட தர்மங்

112. ஸ்தோ-ர (40). 113. கீதை (2-63). 114. கீதை (2-7).

களைக்கண்டு கலங்கின மனத்தையுடையவனாய் உன்னைக் கேட்கிறேன். எது எனக்கு நல்லது என்று நீ நிச்சயிக்கிறாயோ, அதை எனக்குச் சொல்வாயாக. நான் உன்னுடைய சிஷ்யன். உன்னை சரணமடைந்த என்னை நியமிப்பாயாக.]

114(a) த்ருணகாஷ்டாபஹாரேண யாவாந் தோஷ: ப்ரகீர்த்தித: |
ஸ்வர்ணரத்நாபஹாரேண தாவாநேவ பவேத் கதம் ||
கதர்யஸ்வாபஹாரேண யாவாந் தோஷ: ப்ரகீர்த்தித: |
ஶ்ரோத்ரியஸ்வாபஹாரேண தாவாநேவ பவேத் கதம் ||

[புல், கட்டை ஆகியவைகளை அபஹரிப்பதினால் யாதொரு தோஷம் உண்டாவதாகச் சொல்லப்படுகிறதோ, அதே தோஷமே ஸ்வர்ணம், ரத்னம் ஆகியவைகளை அபஹரிப்பதாலும் உண்டாகுமோ? நீசனுடைய சொத்தைத் திருடுவதினால் யாதொரு தோஷம் சொல்லப்படுகிறதோ, அதே தோஷமே வேதமறிந்த ப்ராஹ்மணனின் சொத்தைத் திருடுவதாலும் உண்டாகக்கூடுமோ?]

115. ராம: கமலபத்ராக்ஷ: ஸர்வஸத்த்வமநோஹர: |
ரூபதாக்ஷிண்யஸம்பந்ந: ப்ரஸூதோ ஜநகாத்மஜே ! ||

[ஸீதாபிராட்டியாரே! ராமபிரான் தாமரையிதழ்போன்ற திருக்கண்களையுடையவர்; (க்ரூரனாகிய என்னையுள்ளிட்ட) எல்லாப் பிராணிகளின் மனத்தையும் (அக்கண்ணழகாலே) ஆகர்ஷிப்பவர்; வடிவழகு முதலான தேஹகுணங்களும், தாக்ஷிண்யம் முதலான ஆத்மகுணங்களும் நிரம்பப் பெற்றவராய்த் தோன்றியவர்.]

116. ஸோऽஹம் தே தேவதேவேஶ நார்ச்சநாதௌ ஸ்துதௌ ந ச |
ஸாமர்த்யவாந் க்ருபாமாத்ரமநோவ்ருத்தி: ப்ரஸீத மே ||

[தேவதேவர்களான நித்யஸூரிகளுக்கும் தலைவனே! இப்படிப்பட்ட நான் உன்னைத் துதிப்பதிலும், அர்ச்சிப்பது முதலிவற்றிலும் வல்லமை உடையேனல்லேன். அருள்கூர்ந்த திருவுள்ளத்துடன் கூடியவனாய் எனக்கு தயைபுரியவேண்டும்.]

117. விதிர் விதாநே

[விதியென்னும் சொல் காயிகவ்யாபாரத்தைக் குறிப்பது.]

114(a) 115. ரா-ஸு (35-8). 116. வி. பு. (5-7-70).
117. அமரகோசம் (2534).

118. ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி தச்சித்தம் யத்ததர்ப்பிதம் ।
தாவேவ ச கரௌ ஶ்லாக்யௌ யௌ தத்பூஜாகரௌ கரௌ ॥

[எது ஹரியைத்துதிக்கிறதோ அதுவே நாக்கு. எது அவனிடம் ஸமர்ப்பிக்கப்பட்டதோ அதுவே நெஞ்சு. எவை அவனுக்குப் பூஜை செய்கின்றனவோ அக்கைகளே சிறந்தவை.]

119. ரஸோ வை ஸ: ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி

[ரஸ (ஆநந்த) ஸ்வரூபனன்றோ அப்பரமபுருஷன். ரஸஸ்வரூபனான அவனையடைந்து (இந்த ஜீவன்) ஆநந்தத்தை உடையவனாகிறான்.]

120. ராமம் மேऽநுகதா த்ருஷ்டிரத்யாபி ந நிவர்த்ததே ।
ந த்வா பஶ்யாமி கௌஸல்யே ஸாது மா பாணிநா ஸ்ப்ருஶ ॥

[ராமனைப் பின் தொடர்ந்தது என் கண்கள்; இன்றும் திரும்பி வந்தபாடில்லை. கௌஸல்யே! உன்னைக் காண்கிறேனில்லை; என்னை உன் கைகளால் நன்றாகத் தொடுவாயாக. (த்வகிந்த்ரியமாவது உள்ளதா என்று பார்க்கிறேன்.)]

121. முக்தாநாம் லக்ஷணம் ஹ்யேதத் யச்ச்வேதத்வீபவாஸிநாம் ।
நித்யாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிந: ॥

[ச்வேதத்வீபவாஸிகளுக்கு எது லக்ஷணமோ, அதுவே முக்தர்களுக்கும் லக்ஷணமாகும். அதாவது:—எப்போதும் அஞ்சலி செய்து கொண்டிருப்பார்கள். (அதனால்) ஆநந்திப்பார்கள். வாயால் 'நம:' என்றே சொல்லும் தன்மையுடையவர்களாயிருப்பார்கள்.]

122. ஆஹ்லாதஶீதநேத்ராம்பு: புளகீக்ருதகாத்ரவாந் ।
ஸதா பரகுணாவிஷ்டோ த்ரஷ்டவ்ய: ஸர்வதேஹிபி: ॥

[ஸந்தோஷத்தினாலுண்டான குளிர்ந்த ஆநந்தக்கண்ணீரையுடையவனாகவும், மயிர்க்கூச்செறியும் உடம்பையுடையவனாகவும், பரமபுருஷனுடைய குணங்களால் ஆட்கொள்ளப்பட்டவனாகவும், பகவத்பக்தனானவன் எல்லா ஜீவர்களாலும் காணத்தக்கவன்.]

123. பூர்வாங்காததிகாபராங்ககலஹம்

[அழகுப்போட்டியில் திவ்யமங்களவிக்ரஹத்தின் முன்பாகத்தைக்காட்டிலும் பின் பாகம் விஞ்சியிருக்கும்படியான வடிவழகையுடைய எம்பிரானை....]

118. விஷ்ணுதர்மம் (1-13). 119. தை-ஆந-7. 120. ரா-அ (42-34). 121. பார-சாந்தி (344-45). 122. ஸ்ரீவிஷ்ணுதத்வம். 123.

124. த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம ।
பரதேந மஹாபாஹோ ! லக்ஷ்மணேந யவீயஸா ॥
ஶத்ருக்நேந ச ஶத்ருக்ந ! ஸ்வஶரீரேண வா புந: ॥

[நீண்ட கைகளையுடைய ஸுக்ரீவனே ! உனக்கு ஏதாவது அவமானம் நேர்ந்ததாகில் ஸீதையால் எனக்கு என்ன பிரயோஜனம் ? பரதனாலும், இளையவனான லக்ஷ்மணனாலும், சத்ருக்னனாலும் என்ன பிரயோஜனம் ? சத்ருக்களை அழிப்பவனே ! என்னுடைய சரீரத்தினால்தான் என்ன பிரயோஜனம் ?]

125. பகவத்ஸ்வரூபதிரோதாநகரீம்

[பகவத்ஸ்வரூபத்தை மறைப்பதான (ப்ரக்ருதியை).]

126. தேஹயோகாத் வா ஸோऽபி

[சேதனனுடைய ஸ்வரூபம் மறைந்துகிடப்பது (ஸூக்ஷ்மஸ்தூலரூபமான தேஹத்துடன் சேர்க்கையினாலேயே.]

127. அகர்தமமிதம் தீர்த்தம் பரத்வாஜ நிஶாமய ।
ரமணீயம் ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோ யதா ॥

[பரத்வாஜனே ! சேறற்றதாகவும், அழகியதாகவும் நல்லோர்களின் மனத்தைப்போல் தெளிந்த நீரையுடையதாகவும் விளங்கும் இந்தத் தீர்த்தத்தைக் காண்பாயாக.]

128. வாயஸேந ததஸ்தேந பலவத்க்லிஶ்யமாநயா ।
ஸ மயா போதித: ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப: ॥

[பிறகு, அந்தக் காகாஸுரனால் பலாத்காரமாகத் துன்புறுத்தப்பட்ட என்னால், ஸுகமாகக் கண்வளர்ந்தருளியவரும், (அத்தாலே) அழகாயிருப்பவரும், எதிரிகளைத் தபிப்பவருமான ஸ்ரீராமபிரான் எழுப்பப் பட்டார்.]

129. போக்தாரம் யஜ்ஞதபஸாம் ஸர்வலோகமஹேச்வரம் ।
ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வா மாம் ஶாந்திம்ருச்சதி ॥

[யஜ்ஞங்களையும், தவங்களையும் புஜிப்பவனும், எல்லா உலகங்களுக்கும் மஹேச்வரனும், எல்லா ஜீவராசிகளுக்கும் நண்பனுமான என்னை அறிந்து சாந்தியை அடைகிறான்.]

124. ரா-யு (41-4). 125. ஶரணாகதிகத்யம்-12. 126. ப்ர-ஸூ(3-2-5).
127. ரா-பா (2-5). 128. ரா-யு (38-25). 129. கீதை (5-29).

130. தேவானாம் தானவானாஞ்ச ஸாமாந்யமதிதைவதம் ।
ஸர்வதா சரணத்வந்த்வம் வ்ரஜாமி ஶரணம் தவ ॥

[விஷ்ணுபக்தியுடையவர்களுக்கும், பகவத்பக்தியற்றவர்களுக்கும் எப்போதும் ஒரே மாதிரியாகப் பற்றலாம்படியிருக்கும் உன் திருவடியிணையை உபாயமாக நிச்சயிக்கிறேன்.]

131. அவாக்யநாதர:

[(காம்பீர்யத்தாலே) ஒருவரிடமும் பேசாதவனாகவும், (ஒரு வஸ்துவினிடமும்) ஆதரம் அற்றவனாகவுமுள்ளவன் பரமாத்மா.]

132. த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித் ।
ஏஷ மே ஸஹஜோ தோஷ: ஸ்வபாவோ துரதிக்ரம: ॥

[இரண்டாகப் பிளக்கப்பட்டாலும், இம்மாதிரி ஒருவனுக்கும் வணங்க மாட்டேன். இது என்னுடன் கூடப்பிறந்த தோஷம். அவரவர்களுடைய) ஸ்வபாபம் மீறமுடியாததன்றோ.]

133. த்வதங்க்ரிமுத்திஶ்ய கதாபி கேநசித்
யதா ததா வாऽபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலி: ।
ததைவ முஷ்ணாத்யஶுபாந்யஶேஷத:
ஶுபாநி புஷ்ணாதி ந ஜாது ஹீயதே ॥

[உன் திருவடியைக் குறித்து எப்போதாவது, எவனாலேயாவது, எம்மாதிரியாகவாவது, ஒரு தடவை செய்யப்பட்ட அஞ்சலியானது, அப்போதே பாபங்களை மிகுதியில்லாமல் போக்குகிறது. நன்மைகளை விருத்தியடையச் செய்கிறது. ஒரு சமயத்திலும் குறைகிறதில்லை.]

134. ஏகோऽபி க்ருஷ்ணே ஸுக்ருத: ப்ரணாமோ
தஶாஶ்வமேதாவப்ருதேந துல்ய: ? ।
தஶாஶ்வமேதீ புநரேதி ஜந்ம
க்ருஷ்ணப்ரணாமோ ந புநர்ப்பவாய ॥

[கிருஷ்ணன் விஷயத்தில் நன்கு அனுஷ்டிக்கப்பட்ட ஒருப்ரணாமத்தின் பலனை பத்து அச்வமேதங்களுடைய பலனுடன் ஒப்பிடலாமா? (கூடாது; ஏனெனில்:) பத்து அச்வமேதங்களை அனுஷ்டித்தவன் மறுபடியும் ஜன்மத்தை அடைகிறான். கிருஷ்ணனை வணங்கினவனுக்கு ஜன்மமில்லை.]

---

130. ஜிதந்தே (1-2). 131. சாந் (3-14-2). 132. ரா-யு (36-11).
133. ஸ்தோ-ர (28). 134. பார-சாந்தி (46-163).

135. அஞ்ஜலி: பரமா முத்ரா க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ

[வெகு சீக்கிரமாக பகவானை உகப்பிக்கும் அஞ்ஜலி மேலான அடையாளமாயிருக்கிறது.]

136. வ்யவஸாயாத்ருதே ப்ரஹ்மந் நாஸாதயதி தத் பரம்

[ப்ராஹ்மணரே! மநோநிச்சயமில்லாவிடில் அந்தப் பரவஸ்துவை அடையமாட்டான்.]

137. மந: பூர்வோ வாகுத்தர:

[முதலில் மனஸ்ஸும் அடுத்தபடியாக வாகிந்திரியமும் ப்ரவர்த்திக்கின்றன.]

138. தஸ்ய மத்யே வஹ்நிஶிகா அணீயோர்த்வா வ்யவஸ்தித: ।
நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா ॥

[அந்த இருதயகமலத்தின் நடுவில், சிறியதும், மேல் நோக்கினதுமான அக்னி சிகை (பரமாத்மாவின் திவ்யமங்களவிக்ரஹம்) இருக்கிறது. (அது) நீலமேகம் கொண்ட மின்னல்போல் பிரகாசமுள்ளதாக விளங்குகிறது.]

139. அதஸீபுஷ்பஸங்காஶம் பீதவாஸஸமச்யுதம் ।
யே நமஸ்யந்தி கோவிந்தம் ந தேஷாம் வித்யதே பயம் ॥

[அடியவர்களை நழுவவிடாதவனும், காயாம்பூவைப் போன்றவனும், பீதாம்பரத்தையுடையவனுமான கோவிந்தனை நமஸ்கரிப்பவர்களுக்கு (எங்கும்) பயமில்லை.]

140. ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருஶ்யதே
ஹிரண்யஶ்மஶ்ருர் ஹிரண்யகேஶ ஆப்ரணகாத் ஸர்வ ஏவ
தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ [ஸுவர்ண: ।

[ஸூர்யனுக்கு நடுவில் தங்கம்போல் அழகிய உருவையுடைய எந்த இந்தப் பரமபுருஷன் காணப்படுகிறானோ, அவன் ஸுவர்ணம் போன்ற அழகான மீசையையும், கேசங்களையும் எல்லா அவயவங்களையுமுடையவன்; அவனுக்கு ஸூர்யனால் மலரும் தாமரைபோன்ற இரு கண்கள் உள.]

141. ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாமணீயாம்ஸமணீயஸாம் ।
ருக்மாபம் ஸ்வப்நதீகம்யம் வித்யாத்து புருஷம் பரம் ॥

---

135. காருடபுராணம் (11-26). 136. பார-சாந்தி (334-47). 137. தைத் ஸம் (7-5-3). 138. நாராயணவல்லி–11. 139. பார-சாந்தி (46-118). 140. சாந் (1-6-6). 141. மநு (12-122).

[பரமபுருஷனை, எல்லாப் பொருள்களையும் நியமிப்பவனென்றும், உருக்கின தங்கம் போல் ஒளியுடையவனென்றும், ஸ்வப்ந புத்தி போன்ற (ஆச்சரியமான) ஞானத்தால் அறியத்தக்கவனென்றும் அறியவேண்டும்.]

142. யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ ।
ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஸ்சநேதி ॥

[எந்த ப்ரஹ்மத்தினிடமிருந்து, மனத்துடன் கூடிய வாக்குகள், (அதை) அளவிட்டறியாமல் திரும்புகின்றனவோ, அந்தப் பரமாத்மாவின் ஆனந்தத்தை அறிந்தவன், எதனிடமும் பயப்படமாட்டான்.]

143. கங்காஸாம்யம் புரா ப்ராப்தா தேவதேவப்ரஸாதநாத் ।
ரங்காவதரணாதூர்த்வம் ஆதிக்யஞ்சாப்யவாப ஸா ॥

[தேவதேவனுடைய அருளாலே கங்கையுடன் ஸமமாயிருக்கும் தன்மையை அடைந்த அக்காவேரி, ரங்கவிமானம் அங்கு ப்ரதிஷ்டிதமானபின்பு (கங்கையைக் காட்டிலும்) மேன்மையையுமடைந்தது.]

144. த்ரவீபூதஸ் ததா தர்மோ ஹரிபக்த்யா மஹாமுநே ।
க்ருஹீத்வா தர்மபாநீயம் பதம் நாதஸ்ய துஷ்டயே ॥
க்ஷாளிதம் பரயா பக்த்யா பாத்யார்க்யாதிபிரர்ப்பிதம் ।
ததம்பு பதிதம் த்ருஷ்ட்வா ததார ஶிரஸா ஹர: ॥
பாவநார்த்தம் ஜடாமத்யே யோக்யோऽஸ்மீத்யவதாரணாத் ।
வர்ஷாயுதாந்யத பஹூநி ந முமோச ததா ஹர: ॥

[ரிஷிச்ரேஷ்டரே! (பகவான் திருவுலகளந்தருளின) அச்சமயம் ஹரியினிடம் பக்தியினால் தர்மம் ஜலமாயிற்று. தர்மமாகிய அந்த ஜலத்தை எடுத்து, ஜகந்நாதனுடைய உகப்பிற்காக (அவனுடைய) திருவடியானது (என்னால் மேலான பக்தியுடன் விளக்கப்பட்டது. பாத்யம், அர்க்யம் முதலியவைகளாலும் பூஜிக்கப்பட்டது. விழுந்த அந்த ஜலத்தைப் பார்த்து 'நான் (பரித்தப்படுத்தத்) தகுந்தவனாயிருக்கிறேன்' என்று நிச்சயித்து, சிவன் தன்னைப் பரிசுத்தப்படுத்திக்கொள்வதற்காக ஜடையின் நடுவில் தலையால் தாங்கினான். பிறகு, பல பதினாயிரக்கணக்கான வருஷங்கள் ருத்திரன் அப்படியே அதை விடவில்லை.]

---

142. தை-ஆந (9-1). 143. ஸ்ரீரங்க மஹாத்ம்யம். 144. ஈச்வர ஸம்ஹிதை; பிரமன் வாக்கியம்,

145. ஜிதந்தே புண்டரீகாக்ஷ! நமஸ்தே விச்வபாவந।
நமஸ்தேऽஸ்து ஹ்ருஷீகேஶ! மஹாபுருஷ! பூர்வஜ! ॥

[செந்தாமரைக்கண்ணா! உன்னால் (இவ்வாத்மவஸ்து) ஜயிக்கப்பட்டது. (இது) என்னுடையதன்றே; உன்னுடையதாயிற்றே. உலகையெல்லாம் உண்டாகினவனே! இந்திரியங்களை நியமிப்பவனே! கொடுப்பதில் சிறந்தவனே! முற்பாடனாகப்பிறப்பவனே! (இவ்வாத்மவஸ்து) எனக்காகை தவிர்ந்து உனக்கேயாகவேணும்.]

146. ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாநஸமாதிபி:।
நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே ॥

[பல்லாயிரக்கணக்கான ஜன்மங்களில் கர்மஜ்ஞானயோகங்களை அநுஷ்டித்து, (பக்தியோகாரம்பவிரோதிபாபம் நீங்கப்பெற்றவர்களுக்கு க்ருஷ்ணனிடத்தில் பக்தியானது உண்டாகிறது.]

147. கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:
[ஜனகர் முதலானோர் கர்மயோகத்தினாலேயே ஸித்தியடைந்துள்ளார்களன்றோ.]

148. ஶ்ரேயாந் த்ரவ்யமயாத் யஜ்ஞாத் ஜ்ஞாநயஜ்ஞ: பரந்தப।
ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே ॥

[ஞானத்துடன் கூடிய கர்மயோகத்தில் திரவ்யமயமான பாகத்தைக் காட்டிலும், ஜ்ஞாநமயமான பாகம் சிறந்தது. அர்ஜுன! எல்லாக் கர்மமும், அதனுடைய எல்லா ஸாதனங்களும் ஞானத்திலேயே முடிவடைகின்றன.]

149. பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோऽர்ஜுந।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டுஞ்ச பரந்தப ॥

[அர்ஜுனா! எதிரிகளைத் தபிப்பவனே! ஒரு பயனை எதிர்பாராத பக்தியினாலேயே, இப்படிப்பட்ட நான், உண்மையாக அறிவதற்கும், பார்ப்பதற்கும், நுழைவதற்கும் தகுந்தவன்.]

150. ந தர்மநிஷ்டோऽஸ்மி ந சாத்மவேதீ
ந பக்திமாம்ஸ்த்வச்சரணாரவிந்தே।
அகிஞ்சநோऽநந்யகதி: ஶரண்ய!
த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே ॥

---

145. ஜிதந்தே (1-1). 146. லக்ஷ்மீதந்த்ரம்(?) 147. கீதை (3-20). 148. கீதை (4-33). 149. கீதை (11.54). 150. ஸ்தோ-ர (22).

[சரணமடையத்தகுந்த எம்பிரானே! (அடியேன்) கர்மயோகத்தில் நிலைநின்றவனல்லேன். ஆத்மஜ்ஞானமும் உடையேனல்லேன். உன் திருவடித்தாமரைகளில் பக்தியையும் உடையேனல்லேன். ஒரு உபாயமுமற்றவனும், வேறு புகலற்றவனுமான அடியேன் உன் திருவடித்தாமரைகளையே உபாயமாக நிச்சயிக்கிறேன்.]

151. ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:॥

[(மோக்ஷஸாதனமான) எல்லா தர்மங்களையும் வாஸனையுடன் விட்டு, என்னை ஒருவனையே உபாயமாக அடை. நான் உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன். துக்கிக்காதே.]

152. ஸக்ருதுச்சரிதம் யேந ஹரிரித்யக்ஷரத்வயம்।
பத்த: பரிகரஸ்தேந மோக்ஷாய கமநம் ப்ரதி॥

[யாவனொருவனால் 'ஹரி' என்னுமிவ்விரண்டெழுத்துக்களும் ஒரு தடவை உச்சரிக்கப்பட்டனவோ, அவனால் மோக்ஷம் செல்வதற்குச் செய்யவேண்டிய காரியங்களெல்லாம் செய்யப்பட்டன.]

153. ஸக்ருத் ஸ்ம்ருதோऽபி கோவிந்தோ ந்ருணாம் ஜந்மஶதை: [க்ருதம்।
பாபராஶிம் தஹத்யாஶு தூலராஶிமிவாநல:॥

[கோவிந்தன், ஒரு தடவை நினைக்கப்பட்டபோதிலும், நூற்றுக்கணக்கான ஜன்மங்களில் செய்த பாபஸமூஹத்தை, நெருப்பு பஞ்சுக் குவியலை எரிப்பதுபோல் எரித்துவிடுகிறான்.]

154. ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே।
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம॥

[ஒரு தடவை சரணமடைந்தவன் பொருட்டும், 'உனக்கு அடியேனாகிறேன்' என்று பிரார்த்திப்பவன் பொருட்டும், எல்லாப் பிராணிகளிடத்தினின்றும் அபயமளிக்கிறேன். இது எனக்கு விரதம்.]

155. ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமாத் க்ரோதோऽபிஜாயதே

[விஷயங்களுடைய சேர்க்கையால் காமம் உண்டாகிறது. காமத்தினால் கோபம் ஏற்படுகிறது.]

---

151. கீதை (18-66). 152. விஷ்ணுதர்மம் (70-84). ஹர்யஷ்டகம்.
153. 154. ரா—யு (18-33). 155. கீதை (2-62).

156. அமர்யாத: க்ஷுத்ரஸ் சலமதிரஸூயாப்ரஸவபூ:
க்ருதக்நோ துர்மாநீ ஸ்மரபரவஶோ வஞ்சநபர: ।
ந்ருஶம்ஸ: பாபிஷ்ட: கதமஹமிதோ து:க்கஜலதே:
அபாராதுத்தீர்ணஸ் தவ பரிசரேயம் சரணயோ: ॥

[வேதவரம்பை மீறினவனும், நீசவிஷயங்களில் மிகவும் சாபல்யமுள்ளவனும், நிலையற்ற நெஞ்சையுடையவனும், அஸூயைக்குப் பிறப்பிடமானவனும், நன்மை செய்தவர்களுக்குத் தீமை செய்பவனும், ஹேயமான கர்வத்தை உடையவனும், காமவசப்பட்டவனும், (காமினிகளையும்) வஞ்சிப்பவனும், கொடுமையான காரியங்களைச் செய்பவனும், பாபத்திலேயே ஊன்றியிருப்பவனுமான நான் கரைகாணவொண்ணாத இந்தத் துன்பக்கடலிலிருந்து கரையேறியவனாய், உன்னுடைய திருவடிகளில் எப்படி அடிமைசெய்யப்பெறுவேன் ?]

157. பரமஸுஹ்ருதி பாந்தவே களத்ரே
ஸுததநயாபித்ருமாத்ருப்ருத்யவர்க்கே ।
ஶடமதிருபயாதி யோऽர்த்தத்ருஷ்ணாம்
தமதமசேஷ்டமவேஹி நாஸ்ய பக்தம் ॥

[உயிர்நண்பனிடமும், பந்துவிடமும், மனைவியிடமும், பிள்ளை பெண்களிடமும், தந்தைதாயரிடமும், வேலைக்காரர்களிடமும், துஷ்டபுத்தியான எவனொருவன் பொருளாசை கொள்கிறானோ, நிஹீனமான நடத்தையுள்ள அவனை பகவானுடைய பக்தனல்லாதவனென்று அறிவாயாக.]

158. வஶீ வதாந்யோ குணவாந்ருஜு: ஶுசி:
ம்ருதுர் தயாளுர் மதுர: ஸ்திரஸ்ஸம: ।
க்ருதீ க்ருதஜ்ஞஸ் த்வமஸி ஸ்வபாவதஸ்
ஸமஸ்தகல்யாணகுணாம்ருதோததி: ॥

[(ஆச்ரிதர்களுக்கு) வசப்பட்டிருப்பவனாய், (தன்னையே தமர்க்கு நல்கும்) வள்ளலாய், ஸௌசீல்யகுணத்தை உடையவனாய், (மனோவாக்காயங்களால்) ஒரு படிப்பட்டிருப்பவனாய், (நிர்ஹேதுகமாக உபகரிக்கும்) பாவசுத்தியையுடையவனாய், அடியார்களின் பிரிவைப் பொறுக்கமாட்டாதவனாய், (அவர்களுடைய) துக்கத்தை ஸஹிக்கமாட்டாதவனாய், இனியனாய், (ஆச்ரிதரக்ஷணத்தில்) நிலைநின்றவனாய், (ஆச்ரயிக்குமிடத்தில் எல்லோருக்கும்) ஸமனாய் (ஆச்ரிதகாரியங்

156. ஸ்தோ-ர (62). 157. வி-பு (3-7-30). 158. ஸ்தோ-ர (18)

களைத் தன் காரியங்களாக நினைத்துச்) செய்பவனாய், அடியார் செய்த சிறிய ஆநுகூல்யத்தையும் பெரிதாக நினைப்பவனாயிருக்கும் நீ, இயற்கையாகவே எல்லாக் கல்யாணகுணங்களுக்கும் அமுதக்கடலாயிருக்கிறாய்.]

159. அவகாஹ்யார்ணவம் ஸ்வப்ஸ்யே ஸௌமித்ரே ! பவதா விநா ।
கதஞ்சித் ப்ரஜ்வலந் காம: ஸ மாம் ஸுப்தம் ஜலே தஹேத் ॥

[லக்ஷ்மணா! (உன்னைப் பார்ப்பதால் ஸீதையின் நினைவு வருகிறபடியால்) உன்னை விட்டுவிட்டுக் கடலில் இறங்கித் தூங்கப்போகிறேன். மிகவும் ஜ்வலிக்கும் அந்தக் காமாக்னியானது ஜலத்தில் தூங்கும் என்னைக் கஷ்டப்பட்டே தஹிக்கும்.]

159(a) மித்ரகார்யம் க்ருதமிதம் பவத்பிர் வாநரோத்தமா: ।
அநுஜ்ஞாதா மயா ஸர்வே யதேஷ்டம் கந்துமர்ஹத ॥

[வானரச்ரேஷ்டர்களே! (உங்களுடைய) நண்பனாகிய என்னுடைய இக்காரியம் உங்களால் செய்யப்பட்டது. என்னால் அநுமதிக்கப்பட்டவர்களாய்க்கொண்டு, நீங்களெல்லாரும் இஷ்டப்படி செல்வீர்களாக.]

159(b) விபதோ நைவ விபதஸ் ஸம்பதோ நைவ ஸம்பத: ।
விபத் விஸ்மரணம் விஷ்ணோஸ் ஸம்பத் தஸ்யைவ ஸம்ஸ்ம்ருதி: ॥

[(உலகத்திலுள்ள) விபத்துக்கள் (உண்மையில்) விபத்துக்களல்ல; செல்வங்களும் (உண்மையில்) செல்வங்களல்ல. (உண்மையான) விபத்து விஷ்ணுவை மறந்துவிடுதலேயாகும். (உண்மையான) செல்வம் அவனை நினைத்தலேயாகும்.]

160. அத யதத: பரோ திவோ ஜ்யோதிர் தீப்யதே விச்வத: ப்ருஷ்டேஷு
ஸர்வத: ப்ருஷ்டேஷு அநுத்தமேஷூத்தமேஷு லோகேஷு

[பரமபதத்தில் வ்யஷ்டிபதார்த்தங்களுக்கும், ஸமஷ்டிபதார்த்தங்களுக்கும் மேலாயுள்ளதும், தனக்கு மேற்பட்டதில்லாததும், மேலானதுமான ஸ்தானங்களில் யாதொரு பரஞ்சோதியானது ஒளிவிடுகிறதோ....]

---

159. ரா-யு (5-9). 159 (a). ரா-யு (49-29); (125-14).
159 (b). 160. சாந் (3-13-7).

161. அத்யர்க்காநலதீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மந: ।
ஸ்வயைவ ப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷம் தேவதாநவை: ॥
தத்ர கத்வா புநர்நேமம் லோகமாயாந்தி பாரத ॥

[மஹாத்மாவான விஷ்ணுவினுடைய அந்த ஸ்தானம், ஸூர்யனுடையவும், அக்னியுடையவும் ஒளியை விஞ்சியது. அரசனே! அது தன்னுடைய ஒளியினாலேயே தேவாஸுரர்களாலும் காணவொண்ணாததாய் விளங்குகிறது. பரதவம்சத்திலுதித்தவனே! அங்குப்போய் மறுபடியும் இவ்வுலகுக்குத் திரும்பிவருவதில்லை.]

162. ஈச்வரோऽஹமஹம் போகீ ஸித்தோऽஹம் பலவாந் ஸுகீ

[நானே ஈச்வரன். நானே போகத்தை அடைபவன். நான் இயற்கையாகவே ஸித்தனாயிருப்பவன்; (இயற்கையாகவே) பலவானாகவும், ஸுகத்தை அனுபவிப்பவனாகவுமிருப்பவன் நானே.]

163. யந்ந தேவா ந முநயோ ந சாஹம் ந ச ஶங்கர: ।
ஜாநந்தி பரமேஶஸ்ய தத் விஷ்ணோ: பரமம் பதம் ॥

[தேவர்களும், முனிவர்களும், (பிரமனாகிய) நானும், சங்கரனும் யாதொன்றை அறியவும் முடியாமலிருக்கிறோமோ, அதுவே பரமேச்வரனான விஷ்ணுவின் பரமபதம்.]

164. யதாவத் கதிதோ தேவைர் ப்ரஹ்மா ப்ராஹ தத: ஸுராந் ।
பராவரேஶம் ஶரணம் வ்ரஜத்வமஸுரார்த்தநம் ॥

[தேவர்களால் தங்களுடைய துன்பங்களை நன்கு அறிவிக்கப்பட்ட பிரமன் "மேலானவர்களோடு, கீழானவர்களோடு வாசியற எல்லாருக்கும் ஈச்வரனாயிருப்பவனும், அஸுரசத்ருவர்னவனுமான பகவானை சரணமடையுங்கள்" என்று தேவர்களிடம் சொன்னான்.]

165. க்ரோதமாஹாரயத் தீவ்ரம் வதார்த்தம் ஸர்வரக்ஷஸாம் ।
துஷ்ப்ரேக்ஷ: ஸோऽபவத் க்ருத்தோ யுகாந்தாக்நிரிவ ஜ்வலந் ॥

[(ராமபிரான்) எல்லா ராக்ஷஸர்களையும் கொல்வதற்காகக் கடுங்கோபத்தை வரவழைத்துக்கொண்டார். (அப்படிக்) கோபங்கொண்ட அவர் ப்ரளயாக்னிபோல் ஜ்வலிப்பவராய், காணவொண்ணாதவராயிருந்தார்.]

166 & 167 அத ராமோ மஹாதேஜா ராவணேந க்ருதவ்ரணம் ।
த்ருஷ்ட்வா ப்லவகஶார்தூலம் கோபஸ்ய வஶமேயிவாந் ॥

161. பார-ஆரண்ய (136-18 & 23). 162, கீதை (16-14). 163. வி-பு (1-9-55). 164. வி-பு (1-9-35). 165. ரா-ஆர (24-34). 166 & 167. ரா-யு (59-136).

[பிறகு மஹாதேஜஸ்வியான ராமன், ராவணனால் காயப்படுத்தப்பட்டவனும், வானரர்களுள் சிறந்தவனுமான ஹநுமானைப் பார்த்தவுடன் கோபத்திற்கு வசப்பட்டான்.]

168. யஸ்ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித் யஸ்ய ஜ்ஞாநமயம் தப:

[எந்தப் பரமபுருஷன், எல்லா வஸ்துக்களுடைய ஸ்வரூபத்தையும் ஸ்வபாவத்தையும் அறிகிறானோ, எவனுடைய ஸங்கல்பமானது ஞானமயமாயிருக்கிறதோ....]

169. தே வயம் பவதா ரக்ஷ்யா பவத்விஷயவாஸிந:

[உம்முடைய ராஜ்யத்தில் வசிக்குமவர்களும் வருந்தினவர்களுமான நாங்கள் உம்மால் ரக்ஷிக்கத்தக்கவர்கள்.]

170. நோச்ச்வஸத் ததயோத்யாயாம் ஸூஸூக்ஷ்மமபி த்ருஶ்யதே।
திர்யக்யோநிகதாஶ்சாங்யே ஸர்வே ராமமநுவ்ரதா:॥

[அயோத்தியில் உயிருள்ள ஒரு சிறு பொருளும் காணப்படவில்லை. விலங்குகளும், மற்ற எல்லா ஜீவர்களும் ராமனைப் பின் தொடர்ந்தனர்]

171. ஸ பித்ரா ச பரித்யக்தஸ் ஸுரைஶ்ச ஸமஹர்ஷிபி:।
த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத:॥

[அந்தக் காகாஸுரன், தந்தையினாலும், (தாயினாலும்), மஹர்ஷிகளுடன் கூடிய தேவர்களாலும் கைவிடப்பட்டவனாய், மூன்று உலகங்களையும் சுற்றித்திரிந்து அந்த ராமனையே சரணமடைந்தான்.]

172. ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா மநஸா து விஶுத்தேந

[(பரமாத்மா) கண்ணாலும், வாக்காலும் அறியப்படமுடியாதவன்; (விவேகம் முதலியவைகளால்) சுத்தியடைந்த மனத்தாலேயே அறியப்படுகிறான்.]

173. யே து ஜ்ஞாநவித: ஶுத்தசேதஸஸ் தேऽகிலம் ஜகத்।
ஜ்ஞாநாத்மகம் ப்ரபஶ்யந்தி த்வத்ரூபம் பரமேஶ்வர॥

[பரமேச்வரனே! எவர்கள் ஞானஸ்வரூபமான ஆத்மாவை அறிந்தவர்களாயும், (விவேகம் முதலிய ஸாதனங்களால்) சுத்தியடைந்த மனத்தையுடையவர்களாயுமுள்ளரோ, அவர்கள் உலகெல்லாவற்றையும் ஞானமயமானதென்றும், உன்னுடைய சரீரமென்றும் அறிகிறார்கள்.]

168. முண்ட (1-1-10). 169. ரா-ஆர (1-20). 170. ரா-உத் (109-22).
171. ரா-ஸு (38-33). 172. 173. வி-பு (1-4-41).

174. தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி
யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந

ப்ரஹ்மஜ்ஞானிகள், இந்தப் பரமாத்மாவை வேதாத்யனத்தினுலும் யஜ்ஞத்தினுலும், தானத்தினுலும், (பலத்தில்) ஆசையற்ற தபஸ்ஸினு லும் அறியவிரும்புகிறார்கள்.]

175. யஜ்ஞதாநதப: கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத் ।
யஜ்ஞோ தாநம் தபஶ்சைவ பாவநாநி மநீஷிணாம் ॥

[யஜ்ஞம், தானம், தபஸ் முதலிய கர்மங்கள் விடத்தக்கவையல்ல; அனுஷ்டிக்கப்படவேண்டியவையே; யஜ்ஞமும் தானமும் தபஸ்ஸும் உபாஸனநிஷ்டர்களைப் பரிசுத்தப்படுத்துபவையன்றோ.]

176. தாதவ்யமிதி யத்தாநம் தீயதேऽநுபகாரிணே ।
தேஶே காலே ச பாத்ரே ச தத்தாநம் ஸாத்விகம் ஸ்ம்ருதம் ॥

['நாம் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம்' என்று நினைத்து ஒரு உபகாரமும் செய்யாத நற்பாத்திரமான மனிதனுக்கு நல்ல தேசத்தி லும், காலத்திலும் எது கொடுக்கப்படுகிறதோ, அந்த தானம் ஸாத் விகமெனப்படுகிறது.]

177. ந கஞ்சந வஸதௌ ப்ரத்யாசக்ஷீத । தத் வ்ரதம் । தஸ்மாத்
யயா கயா ச விதயா பஹ்வந்நம் ப்ராப்நுயாத்

[தன் வீட்டிற்கு விருந்தாளியாக வந்த எவனையும் விரட்டக்கூடாது. இது விரதம். இதற்காக ஏதாவதொரு வழியாலே அந்நத்தை அதிகமாக ஸம்பாதிக்கக்கடவன்.]

178. யத்து ப்ரத்யுபகாரார்த்தம் பலமுத்திஶ்ய வா புந: ।
தீயதே ச பரிக்லிஷ்டம் தத் ராஜஸமுதாஹ்ருதம் ॥

[பிரதியுபகாரத்தையாவது, பலனையாவது எதிர்பார்த்து, அமங்கள மான யாதொரு திரவ்யம் கொடுக்கப்படுகிறதோ, அது ராஜஸதான மெனப்படுகிறது.

179. அதேஶகாலே யத்தாநமபாத்ரேப்யஶ்ச தீயதே ।
அஸத்க்ருதமவஜ்ஞாதம் தத் தாமஸமுதாஹ்ருதம் ॥

[தோஷமுள்ள தேசகாலங்களிலும், கௌரவமில்லாமலும், அவமதிப்

---

174. ப்ருஹ (6-4-22). 175. கீதை (18-5). 176. கீதை (17-20).
177. தை-ப்ரு (10-1). 178. கீதை (17-21). 179. கீதை (17-22).

புடனும், அஸத்மாத்ரங்களுக்கு எது கொடுக்கப்படுகிறதோ, அது தாமஸதானமெனப்படுகிறது.]

180. அநுஜோ ராவணஸ்யா஽ஹம் தேந சாஸ்ம்யவமாநித: ।
பவந்தம் ஸர்வபூதாநாம் ஶரண்யம் ஶரணம் கத: ॥

[நான் ராவணனுடைய தம்பி; (நிஹீனனான) அவனாலும் அவமதிக்கப்பட்டவன்; எல்லா ஜீவராசிகளுக்கும் சரணமடையத்தகுந்த தேவரீரை சரணமடைந்தேன்.]

181. தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் ।
ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே ॥

[என்னுடன் எப்போதும்கூடியிருக்கையை விரும்புமவர்களும், என்னை பஜனம் செய்பவர்களுமான அவர்களுக்கு என்னை அடைவதற்கு ஸாதனமான புத்தியோகத்தைப் பேரன்புடன் கொடுக்கிறேன்.]

182. 60-வது ப்ரமாணத்தைப்பார்க்கவும்.

182(a) பர்த்தா நாம பரம் நார்யா பூஷணம் பூஷணாதபி ।
ஏஷா விரஹிதா தேந பூஷணார்ஹா ந ஶோபதே ॥

[கணவனானவன் பெண்களுக்கு ஆபரணங்களைக் காட்டிலும் மேலான ஆபரணமாயிருக்கிறான். ஸகலபூஷணங்களாலும் பூஷிக்கத்தகுந்த இப்பிராட்டி, தன் நாதனை விட்டுப்பிரிந்திருப்பதால் பிரகாசிக்கிறாளில்லை.]

183. மாநுஷ்யம் ப்ராப்ய

[மநுஷ்யஜந்மத்தை அடைந்து].

184. ஸத்யமூலமிதம் ஸர்வம் லோக: ஸத்யே ப்ரதிஷ்டித: ।
நாஹம் மித்யா ப்ரவக்ஷ்யாமி ஸத்யமேவ வதாம்யஹம் ॥

[இவ்வுலகெல்லாம் உண்டானது ஸத்யத்தாலே; லோகம் ஸத்யத்திலேயே நிலைநிற்கிறது; (ஆகையால்) நான் பொய் சொல்லமாட்டேன்; (எப்போதும்) உண்மையே பேசுவேன்.]

185. ஸ தம் நிபதிதம் பூமௌ ஶரண்ய: ஶரணாகதம் ।
வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத் ॥

---

180. ரா-யு (19-4). 181. கீதை (10-10). 182(a). ரா-ஸு (16-26). 183. 184. கைசிக மஹாத்ம்யம் (32). 185. ரா-ஸு (38-35).

[சரணமடைந்தவனும், பூமியில் விழுந்தவனுமான அவனை, கொல்லத் தகுந்தவனாயிருந்தபோதிலும், சரணமடையத்தக்கவனான ஸ்ரீராம பிரான் (தன்) அருளாலே காப்பாற்றினான்.]

186. அஹமஸ்ம்யபராதாநாமாலயோऽகிஞ்சநோऽகதி: ।
த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி: ॥
ஶரணாகதிரித்யுக்தா ஸா தேவேऽஸ்மிந் ப்ரயுஜ்யதாம் ॥

["நான் குற்றங்களுக்கு ஓர் இருப்பிடமாயிருக்கிறேன். (என்னை ரக்ஷித்துக்கொள்ள) ஒரு உபாயமுமற்றவனாயிருக்கிறேன்; (உன்னை யொழிய) வேறு கதியற்றவனாயுமிருக்கிறேன்; நீயே எனக்கு உபாய மாக ஆவாயாக" என்று பிரார்த்திக்கும் புத்தியே சரணாகதியெனப் படுகிறது. அது இந்த பகவான் விஷயத்தில் செய்யப்படட்டும்.]

187. ஏகோऽஹமஸ்மீதி ச மந்யஸே த்வம்
ந ஹ்ருச்சயம் வேத்ஸி முநிம் புராணம் ।
யோ வேதிதா கர்மண: பாபகஸ்ய
தஸ்யாந்திகே த்வம் வ்ருஜிநம் கரோஷி ॥

[("துஷ்யந்த மஹாராஜனே!) 'நான் ஒருவனே இருக்கிறேன்' என்று நீ எண்ணுகிறாய். ஹ்ருதயத்தில் நித்யவாஸம் செய்து கொண்டிருக்கிற ஆதிபுருஷரான பகவானை அறியவில்லை. எவரொரு பாபகர்மத்தை அறிபவரோ, அவரருகிலேயே நீ பாபத்தைச் செய் கிறாய்."]

188. ஸஹஸ்ரஶீர்ஷா: புருஷ: । ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத் ।
ஸ பூமிம் விச்வதோ வ்ருத்வா । அத்யதிஷ்டத் தஶாங்குலம் ॥

[புருஷனெனப்படும் நாராயணன் கணக்கற்ற தலைகளையும், அளவற்ற கண்களையும் அநந்தமான கால்களையும் உடையவர். அவர் பூமியை எல்லாப்புறமும் சூழ்ந்து, அதற்குமேலும் அநந்தயோஜனைகள் வியா பித்தார்.]

189. வத்யதாமேஷ தண்டேந தீவ்ரேண ஸசிவைஸ் ஸஹ ।
ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்ராதா ஹ்யேஷ விபீஷண: ॥

[கடுமையான தண்டனையினால் மந்திரிகளுடன் கூட இவன் ஹிம்ஸிக் கப்படட்டும்; இந்த விபீஷணன் க்ரூரனான ராவணனுடைய தம்பி யன்றோ.]

---

186. அஹிர் புத்-ஸம் (37-30). 187. பா-ஸம் (38-29) சகுந்தலா வாக்யம். 188. பு-ஸூ (1). 189. ரா.யு (17-29).

190. அத ராம: ப்ரஸந்நாத்மா ஶ்ருத்வா வாயுஸுதஸ்ய ஹ ।
ப்ரத்யபாஷத துர்த்தர்ஷ: ஶ்ருதவாநாத்மநி ஸ்திதம் ॥

[பிறகு, (வார்த்தைகளினால்) வெல்லமுடியாதவரும், (வஸிஷ்டாதிகளிடம்) பல விஷயங்களைக் கேட்டறிந்தவருமான ஸ்ரீராமபிரான், வாயுகுமாரனான ஹனுமானின் (அழகிய சொல்லைக்) கேட்டுத்தெளிந்த திருவுள்ளத்தையுடையவராய், தம் திருவுள்ளத்திலுள்ளதைப் பேசலுற்றார்.]

191. ததஸ்தத் கோகுலம் ஸர்வம் கோகோபீஜநஸங்குலம் ।
அதீவார்த்தம் ஹரிர் த்ருஷ்ட்வா மைத்ரேயாசிந்தயத் ததா ॥

[மைத்ரேயரே! பிறகு பசுக்களும் கோபிகைகளும் நிறைந்த அந்த கோகுலம் முழுவதும் மிக வருத்தமுற்றிருப்பதைக் கிருஷ்ணன் கண்டு, அப்பொழுதே ஆலோசிக்கலுற்றான்.]

192. அவிவேககநாந்ததிங்முகே
பஹுதா ஸந்ததது:க்கவர்ஷிணி ।
பகவந்! பவதுர்த்திநே பத:
ஸ்கலிதம் மாமவலோகயாச்யுத ॥

[ஜ்ஞானசக்த்யாதிகுணங்கள் நிறைந்தவனே! அடியவரைக் கைவிடாதவனே! விவேகமில்லாமையாகிய மேகங்களாலே இருளடைந்த திசைகளை உடையதும், பலவிதமாக இடைவிடாமல் துன்பங்களைப் பொழிகின்றதுமான ஸம்ஸாரமாகிய மழைகால இருளிலே நல்வழியிலிருந்து தவறிய அடியேனை கடாக்ஷித்தருள்வாயாக.]

193. ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி தத் தேஜோऽஸ்ருஜத

[அந்த ப்ரஹ்மம் 'நான் பலவாக ஆகக்கடவேன்' என்று ஸங்கல்பித்தது; அது தேஜஸ்ஸை ஸ்ருஷ்டித்தது.]

194. துக்தாப்திர் ஜநகோ ஜநந்யஹமியம் ஸ்ரீரேவ புத்ரீ வர:
ஸ்ரீரங்கேச்வர ஏததர்ஹமிஹ கிம் குர்யாமிதீவாகுலா ।
சஞ்சச்சாமர சந்த்ரசந்தந மஹாமாணிக்ய முக்கோத்கராந்
காவேரீ லஹரீகரைர் விதததீ பர்யேதி ஸா ஸேவ்யதாம் ॥

["திருப்பாற்கடலானது தந்தை: (அக்கடலின் மனைவியான) நான் தாய்; இந்த ஸ்ரீரங்கநாயகியே மகள்; ஸ்ரீரங்கநாதன் மணவாளப்

190. ரா-யு (18-1). 191. வி-பு (5-11-13). 192. ஸ்தோ-ர (49).
193. சாந்-உப (6-2.3). 194. ர-ஸ்த (1-21).

பிள்ளை; இப்படிப்பட்ட இவ்விஷயத்தில் இவர்களுக்குத் தகுதியாக என்ன சீர் செய்வேன் என்று காவேரியாறானது வருந்தி, பிரகாசியா நின்ற சாமரங்களையும், பச்சைக் கற்பூரத்தையும், சந்தனமரங்களையும், சிறந்த மணிகளையும், முத்துக்களையும் குவியல் குவியலாக அலைக்கைகளால் ஏந்திக்கொண்டுவருவதுபோல் விளங்குகிறது. அப்படிப்பட்ட காவிரியாறானது (உங்களால்) நீராடப்பெறவேணும்.]

195. மாதா பிதா ப்ராதா நிவாஸஶ் ஶரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:

[நாராயணன் தாயாகவும், தந்தையாகவும், தன்னுடன் பிறந்தவனாகவும், தங்குமிடமாகவும், மோக்ஷோபாயமாகவும், நண்பனாகவும், மோக்ஷத்தில் அடையப்படுமவனாகவுமிருப்பவன்.]

196. ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ: ।
கச்சத்வமேநம் ஶரணம் ஶரண்யம் புருஷர்ஷபா: ॥

[புருஷச்ரேஷ்டர்களே! எல்லா உலகங்களுக்கும் தந்தையும் தாயுமாவான் லக்ஷ்மீநாதனே. சரணமடையத்தகுந்த இவனை சரணமடையுங்கள்.]

197. மதிமந்தாநமாவித்ய யேநாஸௌ ஶ்ருதிஸாகராத் ।
ஜகத்திதாய ஜநிதோ மஹாபாரதசந்த்ரமா: ॥

[எந்த வியாஸராலே, சுருதிக்கடலை புத்தியென்னும் மத்தால் கடைந்து, இம்மஹாபாரதமாகிற சந்திரன் உலகக்ஷேமத்திற்காக உண்டாக்கப்பட்டதோ....]

198. இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந ।
ந சாஶுஶ்ரூஷவே வாச்யம் ந ச மாம் யோऽப்யஸூயதி ॥

[(என்னால்) உனக்குச் சொல்லப்பட்ட இந்த சாஸ்திரம், தவம்செய்யாதவனுக்கும், (என்னிடமும் உன்னிடமும்) பக்தியற்றவனுக்கும், கேட்பதில் விருப்பமற்றவனுக்கும், என்னை எவனொருவன் த்வேஷிக்கிறானோ அவனுக்கும், ஒரு போதும் உபதேசிக்கத்தக்கதன்று.]

199. ஸ்வர்க்ககாமோ ஜ்யோதிஷ்டோமேந யஜேத

[ஸ்வர்க்கத்தில் விருப்பமுள்ளவன் ஜ்யோதிஷ்டோமயாகம் செய்யக் கடவன்.]

---

195. ஸுபாலோபனிஷத் (16). 196. பார-ஆர (192-56). 197. வாயுசைவபுராணங்கள். 198. கீதை (18-67). 199. தைத்-ஸம் (2-5-5).

200. ஸைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா |
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே ||

[தேவனுகிற என்னுல் நிர்மிக்கப்பட்டதும், முக்குணங்களையுடையது மான இந்த என்னுடைய ப்ரக்ருதியாகிற மாயை தாண்ட வரிதானது. என்னையே எவர்கள் சரணமடைகிறுர்களோ அவர்கள் இந்த மாயை யைத் தாண்டுகிறுர்கள்.]

201. ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யம்பவத்

['ஸத்யம்' எனப்படும் சேதனதத்வமாகவும், 'அஸத்யம்' எனப்படும் அசேதனதத்வமாகவும் ஆனபோதிலும், அப்பரவஸ்து ஸத்யமாகவே (நிர்விகாரமாகவே) இருந்தது].

202. ரம்யமாவஸதம் க்ருத்வா ரமமாணு வனே த்ரய: |
தேவகந்தர்வஸங்காஶாஸ் தத்ர தே ந்யவஸந் ஸுகம் ||

[தேவகந்தர்வர்களைப் போல்விளங்குமவர்களும், வனத்தில் ஆனந்திப்ப வர்களுமான (ராமன், லக்ஷ்மணன், ஸீதை ஆகிய) அம்மூவரும், ஓர் அழகிய பர்ணசாலையைக் கட்டி அதிலேயே ஸுகமாக வசித்தனர்.]

203. ஸ்ரீமந்நாராயணசரணௌ ஶரணம் ப்ரபத்யே |
ஸ்ரீமதே நாராயணுய நம: ||

[இது த்வயமந்திரம். பொருளை ரஹஸ்யகிரந்தங்களில் கண்டு கொள்வது.]

204. யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நத்ருஶ்யே அநாத்ம்யே அநிருக்தே அநிலயநே அபயம் ப்ரதிஷ்டாம் விந்ததே | அத ஸோऽபயங்கதோ பவதி ||

[பார்க்கத்தகாதவனும், (ப்ராக்ருத) சரீரமற்றவனும், (தேவன், மனுஷ்யன் முதலிய) வார்த்தைகளால் சொல்லத்தகாதவனும் (தனக்கு ஒரு) ஆதாரமற்றவனுமான இந்தப் பரமாத்மாவிடம் ஸம் ஸாரபயமில்லாமைக்காக பக்தியோகத்தை எப்போது அடைகிறுனே அப்போது அவன் (ஸம்ஸார) பயமற்றவனுக ஆகிறுன்.]

205. விஷ்ணுபக்திவிஹீநோ யஸ் ஸர்வஶாஸ்த்ரார்த்தவேத்யபி |
ப்ராஹ்மண்யம் தஸ்ய ந பவேத் தஸ்யோத்பத்திர் நிரூப்யதாம் ||

---

200. கீதை (7-14). 201. தை-ஆந (6). 202. ரா-பா (1-31). 204. தை. ஆந (7-2). 205. பாத்மம் (206.)

[எல்லா சாஸ்திரங்களின் அர்த்தத்தையுமறிந்தவனாகிலும், எவன் விஷ்ணுபக்தியற்றவனோ அவனுக்கு ப்ராஹ்மணத்வம் கிடையாது. அவனுடைய உத்பத்தியை நிரூபிக்கலாம்.]

206. ய: புத்ர: பிதரம் த்வேஷ்டி தம் வித்யாதந்யரேதஸம் ।
யோ விஷ்ணும் ஸததம் த்வேஷ்டி தம் வித்யாதந்த்யரேதஸம் ॥

[எந்தப் புத்திரன் பிதாவை த்வேஷிக்கிறானோ அவனை மற்றொருவனுடைய ரேதஸ்ஸுக்குப் பிறந்தவனாக அறியலாம்; எவனொருவன் விஷ்ணுவை எப்போதும் த்வேஷிக்கிறானோ அவனைச் சண்டாளனுக்குப் பிறந்தவனாக அறியலாம்.]

207. ஸர்வத்ர கலு த்ருஶ்யந்தே ஸாதவோ தர்மசாரிண: ।
ஶூரா: ஶரண்யாஸ் ஸௌமித்ரே திர்யக்யோநிகதேஷ்வபி ॥

[லக்ஷ்மணா! ஸாதுக்களாய், தர்மிஷ்டர்களாய், சூரர்களாய், சரணமடையத்தகுந்தவர்களாயுள்ள மஹாபுருஷர்கள், விலங்குகளாய்ப் பிறந்தவர்களிலும், மற்ற எல்லா யோனிகளிலும் காணப்படுகிறார்களன்றோ.]

208. ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீரஜய்ய: ஶாஶ்வதோ த்ருவ:

[(ராமபிரானே) ஸ்ரீவத்ஸமென்னும் மறுவை வலத்திருமார்விலே உடையவரும், எப்போதும் அகலகில்லேன் என்று வசிக்கும் பெரிய பிராட்டியாரை உடையவரும், ஜயிக்கமுடியாதவரும், நித்யமானவரும், ஏகரூபமானவருமான (நாராயணன்).]

209. 146-வது ப்ரமாணத்தைப் பார்க்கவும்.

210. பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே ।
வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: ॥

[பல புண்ய ஜன்மங்களுக்குப் பின், ஞானியானவன் "வாஸுதேவனே (எனக்கு) எல்லாம்" என்று என்னை உபாஸிக்கிறான். அப்படிப்பட்ட மஹாபுருஷன் மிகவும் துர்லபன்.]

211. ப்ரயத்நாத் யதமாநஸ்து யோகீ ஸம்ஶுத்தகில்பிஷ: ।
அநேகஜந்ம ஸம்ஸித்தஸ் ததோ யாதி பராம் கதிம் ॥

[அநேக ஜன்மங்களில் செய்த புண்ணியங்களை உடையவனும், (அத்

206. விஹகே.ஸம் (24-11); ப்ரஹ்மாண்டம். 207. ரா-ஆர (68-24). 208, ரா-யு (114-15). 210. கீதை (7-19). 211. கீதை (6-45).

தாலே) பாபங்களிலிருந்து சுத்தியடைந்தவனும், முயற்சியுடன் யோகத்தில் ஈடுபடுபவனுமான யோகி, (நழுவின யோகத்தைத் திரும்பப் பெற்று) மேலான கதியை அடைகிறான்.]

212. தஸ்ய புத்ரா தாயமுபயந்தி । த்விஷந்த: பாபக்ருத்யாம்
ஸுஹ்ருதஸ் ஸாதுக்ருத்யாம் ॥

[(முமுக்ஷுவானவன் பரமபதம் செல்லும் போது) புத்திரர்கள் அவனுடைய தனத்தை அடைகிறார்கள்; விரோதிகள் பாபகர்மங்களையும், ஸுஹ்ருத்துக்கள் நற்கருமங்களையும் அடைகிறார்கள்.]

213. பாபாநாம் வா ஶுபாநாம் வா வதார்ஹாணும் ப்லவங்கம ।
கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந்நாபராத்யதி ॥

[வானர! பாபிகளாயினும், புண்யமுள்ளவராயினும், கொல்லத்தகுந்தவர்களாயிருந்தாலும், குணவானாயிருந்தாலும் அவன் விஷயத்தில் கருணை காட்டப்படவேண்டும். அபராதம் செய்யாதவன் ஒருவனுமில்லையே.]

214. அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிஶ்வாஸ பூர்வகம் ।
ததேகோபாயதா யாச்ஞா ப்ரபத்தி: ஶரணாகதி: ॥

[தன்னுடைய இஷ்டம் வேறொன்றாலுமாகாதபோது, மஹாவிச்வாஸத்தை முன்னிட்டுக்கொண்டு, அவனொருவனையே உபாயமாக இருக்க வேண்டுமென்று யாசிப்பது ப்ரபத்தி; அதுவே ஶரணாகதி.]

215. த்வதீயபுக்தோஜ்ஜிதஶேஷபோஜிநா
த்வயா நிஸ்ருஷ்டாத்மபரேண யத் யதா ।
ப்ரியேண ஸேநாபதிநா ந்யவேதி தத்
ததாऽநுஜாநந்தமுதாரவீக்ஷணை: ॥

[உன்னுடைய உண்டு மிகுந்த சேஷத்தை உண்பவரும், உன்னாலே வைக்கப்பட்ட உன்னுடைய (உபயவிபூதிநிர்வாஹரூபமான) பாரத்தை உடையவரும், (எல்லாருக்கும்) இனியவருமான விஷ்வக்ஸேநராலே எந்தக் காரியம் எம்மாதிரி விண்ணப்பம் செய்யப்பட்டதோ, அருள் நிரம்பிய கடாக்ஷங்களாலே அந்தக் காரியத்தை அம்மாதிரியே (செய்வதென்று) நியமித்தருளுமவனான உன்னை....]

---

212. ஶாட்யாயநஶாகை. 213. ரா-யு (116-44). 214. பரதமுனி விஷ்வக்-ஸம். 215. ஸ்தோ-ர (42).

216. நாராயணைகநிஷ்டஸ்ய யா யா வ்ருத்திஸ் ததர்ச்சநம் ।
யோ யோ ஜல்பஸ் ஸ ஸ ஜபஸ் தத்த்யாநம் யந்நிரீக்ஷணம் ॥
தத்பாதாம்ப்வதுலம் தீர்த்தம் ததுச்சிஷ்டம் ஸுபாவநம் ।
ததுக்திமாத்ரம் மந்த்ராக்ர்யம் தத்ஸ்ப்ருஷ்டமகிலம் ஶுசி ॥

[நாராயணன் ஒருவனிடத்திலேயே பக்தியையுடையவனுடைய எந்தெந்தக் காரியங்களுள்ளனவோ, அவையெல்லாம் பகவதாராதனமாகும்; எந்தெந்த வார்த்தைகளுண்டோ அவையெல்லாம் ஜபமாகும்; அவனுடைய பார்வையெல்லாம் பகவத்தியானமாகும்; அவனுடைய திருவடி ஸம்பந்தப்பட்ட ஜலம் ஒப்புற்ற தீர்த்தமாகும்; அவன் உண்டு மிகுந்த சேஷம் மிகப்பரிசுத்தமானது; அவனுடைய ஒரு சொல்லும் மிகச்சிறந்த மந்திரமாகும்; அவனால் தொடப்பட்டவையெல்லாம் பரிசுத்தமானவை.]

217. சதுர்வேதா ருஷய:

[ருஷிகள் நான்கு வேதமும் ஓதினவர்கள்.]

218. வித்யா மதோ தநமதஸ் த்ருதீயோऽபிஜநோ மத: ।
ஏதே மதாவலிப்தாநாம் ஏத ஏவ ஸதாம் தம: ॥

[மதங்கொண்டர்களுக்கு, வித்யையும் மதஹேதுவாகிறது; தனமும் மதஹேதுவாகிறது; நல்லகுடிப்பிறப்பும் மதஹேதுவாகிறது; (வித்யை, தனம், குலம் என்னும்) இவையே நல்லோர்களுக்கு தவத்திற்கு (அடக்கத்திற்கு) ஹேதுவாகிறது]

219. காலேஷ்வபி ச ஸர்வேஷு திக்ஷு ஸர்வாஸு சாச்யுத ।
ஶரீரே ச கதௌ சாபி வர்த்ததே மே மஹத்பயம் ॥

[அடியவர்களை நழுவவிடாதவனே! எல்லாப் புண்யகாலங்களிலும், எல்லா திசைகளிலுமுள்ள புண்யக்ஷேத்திரங்களிலும், (தர்மஸாதனமான) சரீரத்திலும், சரீராந்தரகதியிலும் அடியேனுக்கு அதிகமான பயமுள்ளது.]

220. கைங்கர்யநித்யநிரதைர் பவதேகபோகை:
நித்யைரநுக்ஷணநவீநரஸார்த்ரபாவை: ।
நித்யாऽபிவாஞ்சிதபரஸ்பரநீசபாவைர்
மத்தைவதை: பரிஜநைஸ்தவ ஸங்கஸீய ॥

---

216. விஹகே. ஸம். 217. 218. 219. ஜிதந்தே (1-9).
220. வை-ஸ்த (77).

[கைங்கரியத்திலேயே எப்போதும் ஈடுபட்டிருப்பவர்களும், தேவரீரையே போகமாகக்கொண்டிருப்பவர்களும், க்ஷணந்தோறும் புதிது புதிதான ரஸானுபவங்களாலே நெஞ்சுருகுபவர்களும், எப்போதும் ஒருவருக்கொருவர் அடிமையாயிருப்பதை ஆசைப்படுமவர்களும், எனக்குப் பூஜிக்கத்தக்கவர்களும், தேவருடைய பரிஜனங்களுமான நித்யர்களுடன் கூடப்பெறுவேனாக.]

221. மத்பக்தஜநவாத்ஸல்யம் பூஜாயாஞ்சாநுமோதநம் ।
ஸ்வயமப்யர்ச்சநஞ்சைவ மதர்த்தே டம்பவர்ஜநம் ॥
மத்கதாஶ்ரவணே பக்தி: ஸ்வரநேத்ராங்கவிக்ரியா ।
மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி ॥
பக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே ।
ஸ விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமாந் ஸ யதி ஸ ச பண்டித: ॥
தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம்

[(1) என் பக்தர்களிடத்தில் வாத்ஸல்யம், (2) என்னை ஆராதனம் செய்வதை ஆமோதித்தல், (3) தானே என்னைப் பூஜித்தல், (4) என் விஷயத்தில் ஆடம்பரமற்றிருத்தல், (5) என் கதைகளைக் கேட்பதில் அன்பு, (6) (என் கதைகளைக்கேட்கும்போது) குரல் தழுதழுத்தும், கண்ணீர் மல்கியும், உடம்பு மயிர்க்கூச்செறிந்துகொண்டுமிருக்கை, (7) எப்போதும் என்னை நினைத்திருக்கை, (8) என்னிடம் வேறு ஒரு ப்ரயோஜனத்தையும் கேளாதிருக்கை, என்னும் இந்த எட்டு விதமான பக்தியானது எந்த மிலேச்சனிடமும் காணப்படுகிறதோ, அவனே ப்ராஹ்மணச்ரேஷ்டன்; அவனே முனிவன்; அவனே தனவான்; அவனே பண்டிதன்; அவனுக்கு ஞானத்தை உபதேசிக்கலாம்; அவனிடமிருந்து ஞானோபதேசமும் பெறலாம். அவன் என்னைப்போல் பூஜிக்கத்தக்கவன்.

222. ஸ்வாசார்யமிவ தம் த்ருஷ்ட்வா

[(வைஷ்ணவனை) தன் ஆசாரியனைப்போல் (கௌரவத்துடன்) பார்த்து........]

223. அவித்யம் வா ஸவித்யம் வா

[(வைஷ்ணவன் படிப்பற்றவனாயிருந்தாலும், படிப்புள்ளவனாயிருந்தாலும் (கௌரவிக்கத்தக்கவன்).]

221. காருடம் (219-6-9). 222. 223.

224. ஶீக்ஷாயாம் வர்ணஶிக்ஷா பதஸம்திகமோ
வ்யாக்ரியாநிர்வசோப்யாம்
சந்தஶ் சந்தஶ்சிதௌ ஸ்யாத்
கமயதி ஸமயம் ஜ்யௌதிஷம் ரங்கநாத ।
கல்பேநுஷ்டாநமுக்தம் ஹ்யுசிதகமிதயோர்
ந்யாயமீமாம்ஸயோ: ஸ்யாத்
அர்த்தவ்யக்தி: புராணஸ்ம்ருதிஷு
ததநுகாஸ்த்வாம் விசிந்வந்தி வேதா: ॥

[ஸ்ரீரங்கநாதரே! சீக்ஷையென்னும் வேதாங்கத்திலே அக்ஷரங்களை உச்சரிக்கும் கிரமம் (உரைக்கப்பட்டுள்ளது); வியாகரணம் நிருக்தம் என்னும் அங்கங்களால் பதங்களைப் பற்றிய அறிவு (ஏற்படுகிறது); சந்தஸ் என்னும் சாஸ்திரத்தில் (காயத்ரீ முதலிய) சந்தஸ்ஸுகள் சொல்லப்பட்டிருக்கும். ஜ்யோதிஷசாஸ்திரம் கர்மாநுஷ்டாநகாலத்தை உணர்த்துகிறது; கல்பஸூத்ரங்களில் கர்மாநுஷ்டாந முறை உரைக்கப்பட்டது. (வைதிக ஸித்தாந்தத்திற்கு) அநுகுணமாகச் செலுத்தப்பட்ட நியாயமீமாஸ்ஸா சாஸ்திரங்களிலும், புராணஸ்ம்ருதிகளாலும் பொருள் தெளிவு ஏற்படும்; கீழ்ச்சொன்ன சீக்ஷை முதலிய அங்கங்களுடன் கூடிய வேதங்கள் தேவரீரைத் தேடுகின்றன.]

225. மத்பக்தம் ஶ்வபசம் வாபி நிந்தாம் குர்வந்தி யே நரா: ।
பத்மகோடிஶதேநாபி ந க்ஷமாமி கதாசந ॥

[(பூதேவி!) சண்டாளனாயிருந்தபோதிலும், என்னுடைய பக்தனை எந்த ஜனங்கள் நிந்திக்கிறார்களோ, அவர்களை கோடிக்கணக்கான பத்மகாலங்களானாலும் ஒருபோதும் பொறுக்கமாட்டேன்.]

226. கர்த்தா ஸர்வஸ்ய லோகஸ்ய ப்ரஹ்மா ப்ரஹ்மவிதாம் வர:
[எல்லாவுலகையும் ஸ்ருஷ்டிப்பவரும், ப்ரஹ்மஜ்ஞானிகளுள் சிறந்தவருமான ப்ரஹ்மா.]

227. நிரவத்ய: பர: ப்ராப்தேர் நிரதிஷ்டோऽக்ஷர: க்ரம: ।
ஸர்வேச்வரபராதாரோ தாம்நாம் தாமாத்மகோऽவ்யய: ॥

[(தேவரீர்) குற்றமற்றவர்; தடையற்ற மஹோத்ஸாஹத்தை உடையவர்; ஈச்வரராகிய தம்மிடம் ஈடுபட்டிருக்கும் எல்லாருக்கும் ஆதாரமாயுள்ளவர்; சோதிகளுக்கும் சோதியாயிருப்பவர் குறைவற்றவர்.]

---

224. ர-ஸ்த (2-18). 225. வராஹபுராணம். 226. ரா-யு (120-3).
227. வி-பு (5-1-49).

228. ந ஸந்த்ருஶே திஷ்டதி ரூபமஸ்ய
ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம் ।

[இவனுடைய உருவம் கண்ணால் காணும்படி இராது; ஒருவராலும் இவனைக் கண்ணால் காண்கிறதில்லை.]

229. ந மாம்ஸசக்ஷுரபிவீக்ஷதே தம்

[மாம்ஸத்தாலான இக்கண் அப்பரமபுருஷனைக் காணாது.]

230. ந மாம்ஸசக்ஷுஷா த்ரஷ்டும் ப்ரஹ்மபூத: ஸ ஶக்யதே

[ப்ரஹ்மமாகிய அவன் மாம்ஸக்கண்ணால் காண அரியவன்.]

231. யுககோடிஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்ய பத்மபூ: ।
புநஸ்த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதி ஶுஶ்ரும ॥

[தாமரையில் பிறந்த நான்முகன் ஆயிரங்கோடியுகங்கள் விஷ்ணுவை ஆராதித்து, மறுபடியும் மூவுலகிற்கும் பதியாயிருக்கும் தன்மையை அடைந்தானென்று கேள்விப்படுகிறோம்.]

232. பரமாபதமாபந்நோ மநஸாऽசிந்தயத்தரிம்
ஸ து நாகவர: ஶ்ரீமாந் நாராயணபராயண: ॥

[மேலான ஆபத்தை அடைந்தவனும், கைங்கரியச்செல்வத்தை உடையவனும், நாராயணனையே மேலான கதியாகக்கொண்டவனுமான அந்த கஜேந்திராழ்வான் மநஸ்ஸாலே ஹரியை நினைத்தான்.]

233. கஜ ஆகர்ஷதே தீரே க்ராஹ ஆகர்ஷதே ஜலே ।
தயோர்த்வந்த்வஸமம் யுத்தம் திவ்யம் வர்ஷஸஹஸ்ரகம் ॥

[கஜேந்திராழ்வான் கரையில் இழுக்கிறான்; முதலையானது ஜலத்தில் இழுக்கிறது; அவ்விருவர்க்கும், தேவவருஷங்களில் ஆயிரம் வருஷம் ஒருவருக்கொருவர் ஸமமாக யுத்தம் நடந்தது.]

234. அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தமஸ்வீக்ருத
ப்ரணீதமணிபாதுகம் கிமிதி சாகுலாந்த:புரம் ।
அவாஹநபரிஷ்க்ரியம் பதகராஜமாரோஹத:
கரிப்ரவரப்ரும்ஹிதே பகவதஸ்த்வராயை நம: ।

[கஜேந்திராழ்வானுடைய தீனக்குரல் செவிப்பட்டவளவில், ஸேனை முதலியாரால் கொடுக்கப்பட்ட ஹஸ்தாவலம்பத்தை கவனிக்காமலும், கொண்டுவரப்பட்ட ரத்நபாதுகையை அணிந்துகொள்ளாமலும்,

---

228. தை-நாரா (1-10). 229. ருக்வேதம். 230. விஷ்ணுதர்மம்.
231. பார-ஸபா (14-8). 232. வி-தர் (69-47). 233. வி-தர் (69).
234. ர-ஸ்த (2-57).

'இதுவென்?' என்று அந்தபுரத்திலுள்ளோர் வியாகுலப்படும்படியாகவும், வாஹனாலங்காரங்களில்லாத பெரிய திருவடியை ஏறுகிற பகவானுடைய வேகத்தின் பொருட்டு என் நமஸ்காரம்.]

235. பவந்தமேவாநுசரந் நிரந்தரம்
ப்ரஶாந்திநி: ஶேஷமநோரதாந்தர: ।
கதாऽஹமைகாந்திகநித்யகிங்கர:
ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாதஜீவித: ॥

[உன்னையே இடைவிடாமல் பின்தொடர்ந்துகொண்டு, மற்ற எல்லா ஆசைகளும் வாஸனையுமில்லாமல் நீங்கப்பெற்றவனாய், ஒருபடிப்பட்டதாய், நித்யமான கைங்கர்யத்தை உடையவனாய், ஸபலமான ஜன்மத்தையுடையவனாய், என்று நான் (உன்னையே) உகப்பிக்கப்போகிறேன்?]

236. ராமாயணமிதம் க்ருத்ஸ்நம் ஶ்ருண்வத: படதஸ்ஸதா ।
ப்ரீயதே ஸததம் ராம: ஸ ஹி விஷ்ணு: ஸநாதந: ॥

[இந்த ராமாயணம் முழுவதையும், எப்போதும் கேட்பவனிடமும், படிப்பவனிடமும் ராமபிரான் எப்போதும் பிரியம் வைக்கிறான். அந்த ராமபிரானே பழமையானவனான விஷ்ணுவன்றோ.]

திருமாலை வியாக்கியான ப்ரமாணத்திரட்டு முற்றிற்று.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

---

235. ஸ்தோ-ர (46). 236. ரா-யு (131-118).

திருமாலை வ்யாக்யான ப்ரமாண அநுக்ரமணிகை.

அ

அஜாயமாந: 21
அஞ்ஜலி. 135
அதந்த்ரித 234
அதயதத: பரோ 160
அதராம: ப்ரஸந் 190
அதராமோமஹ 166
அதஸீபுஷ்ப 139
அதஸோபயங் 204
அத்யதிஷ்டத் 188
அத்யர்க்காநல 161
அத்யாம்லகடு 3
அநநயஸாத்யே 214
அநேகஜந்மஸம் 211
அப்ராப்ய 142
அவகாஹ்யார்ண 159
அவாக்யநாதர: 131
அவித்யம்வா 223
அஸத்க்ருதம் 179
அஸந்நேவ 75
அஹமந்நம் 58
அஹமஸ்ம்ய 186
அஹம்ஸர்வம் 62
அஹம்ஸ்மரா 69
அஹம்ஹிஸர்வ 83

ஆ

ஆநந்தமய: 30
ஆரோக்யமிந் 43a
ஆஶயாயதி 74
ஆஹ்லாதஶீத 122

இச்சாக்ருஹீ 31
இதம்தேநாத 198
இஷீகதூலமக் 31
ஈச்வரோஹம் 162
உபாயோபேயத்வே 73
ருஜ: 158

ஏ

ஏகஸ்ஸ்வாது 46
ஏகோபிக்ருஷ் 134
ஏகோஹமஸ்மீதி 187
ஏகோஹவை 20
ஏஷஏவஸதாம் 218
ஏஷஸர்வபூதா 12

க

கண்டூயநேபி 5
கர்மணைவஹி 147
காரணந்து 19
காலேஷ்வபிச 219
கிம்கார்யம்வீத 124
கிம்ஜபந் 15
கிம்த்வயாநார் 102
கிம்க்ருஷ்டம் 17
கோபஸ்யவஶ 166
க்ருபயாகேவல 92
க்ருஷ்ணம்தர்ம 72
க்ரோதமாஹார 165
க்லேஶாதுத் 8
க்லேஶாந்நிஷ் 4

ग

கஞ்சாஸாம்ய 143
கச்சாநுஜாநா 97
கஜ ஆகர்ஷதே 233
கர்ப்பேபிலீயதே 40
காயந்திகேசித் 60
குணேர்தாஸ்ய 90
குரோர்நாம 1
குரோர்யத்ர 78
கோகோபீஜந 191

ச

சதுர்வேதா 217
சதுர்ஹோதா 82

சரணௌ 203
சாபமாநய 93

ज (ஜ)

ஜந்மாந்தரஸஹ 146
ஜஹௌநித்ரா 42
ஜாயமாநம்ஹி 100
ஜாயஸ்வம்ரி 41a
ஜிதந்தே 145

த

ததாவித்வாந் 14
ததுச்சிஷ்டம் 216
தத்தாநம்ஸாத் 176
தத்ஜ்ஞாந 85
தமேவஶரண 171
தவதாஸ்யமஹா 67
தவதாஸ்யஸுக 66
தாமர்ச்சயேத் 22
திர்யக்யோநி 170
தேநசாஸ்ம்ய 180
த்ரீணிஶதாநி 81
த்ருணகாஷ்ட 114a
த்வதீயபுக்தோ 215

द

ததாமிபுத்தி 181
தாஸ:ஸகா 111
தாஸோஹம் 59
துக்தாப்தி: 194
துரத்யயா 200
துராசாரோ 55
தேவாநாம் 130
தேவோநாம 104
தேஶாயம் 45
தேஹயோகாத் 126
த்ருமசீரை: 61
த்வாஸுபர் 13
த்விஷந்த: 212

ध

தர்மாத்மா 77
தாதுஸாம்யே 69

ந

நகஞ்சிந் 213

நசக்ஷுஷாபச் 228
நஜாயதே 39
நநமேயம் 132
நந்தந்த்யுதித 41
நமஇத்யேவ 121
நமாம்ஸசக்ஷு 229
நமாம்ஸசக்ஷுஷா 230
நயஷ்டவ்யம் 95
நஹிம்ஸ்யாத் 79
நக்ஷமாமி 225
நாராயணபரா 89
நாராயணஶப்த 105
நிந்தித: 110
நிரவத்ய:பர: 227
நிரஸ்ததி 35a
நிர்தோஷம் 55
நிவாஸஶய்யா 112
நேயமஸ்திபுரீ 76
ந்ருபஶு: 24

ப

பஞ்சம்யா 2
பதிம்விச்வஸ்ய 53
பரமஸாஹ்ருதி 157
பரமாபதமா 232
பரஸ்பரநீச 220
பராவரேஶம் 164
பாரதந்த்ர்யம் 64
பாவநார்த்தம் 144
பும்ஸாம்த்ரு 26
பூர்வாங்கா 123
ப்ரகாஶ்யந்தே 52
ப்ரணமம்யே 27
ப்ரஹர்ஷயிஷ் 235
ப்ராகார: 68
ப்ரீயதே 236

ब

பஹுதாஸந்தத 192
பஹுஸ்யாம் 193
பஹூநாம் 210
பாலாஅபி 44

பால்யேக்ரீட 7
புத்திராஶாத் 113
ப்ரஹ்மாப்ரஹ்ம 226

भ

பகவத்ஸ்வரூப 125
பக்திரஷ்ட 221
பக்த்யாத்வந 149
பர்த்தாநாம 182a
பவத்விஷய 169
பாவோநாந்ய 36
பூதபவ்ய 68
பூயிஷ்டாம் 56

ம

மதிமந்தார 197
மத்யேவிரிஞ்ச 23
மந: பூர்வோ 137
மநஸாதுவிஶு 172
மாதாபிதா 195
மாநம்பிரதீப 10
மாதுஷ்யம்ப்ரா 183
மாஶுச: 151
மித்ரகார்யம் 159a
மித்ரபாவேந 109
மேருமந்தர 47

ய

ய: புத்ர: 206
யஜ்ஞேநதாநே 174
யஜ்ஞோதாந 175
யதோவாஇமா 18
யத்துப்ரத்யு 178
யத்ப்ரஹ்ம 49
யந்நதேவா 163
யந்நாமஸங் 29
யந்முஹூர்த்த 106
யயாகயாச 177
யஸ்யாஸ்மி 54
யஸ்ஸர்வஜ்ஞ: 168
யாஇப்ரஹ்ம 16
யுககோடி 231
யேதுஜ்ஞாந 173
யேப்யந்ய 80
யேயஜந்தி 84
யோஸாதுப்யோ 108
யௌதத்பூஜா 118

ர

ரமணீயம் 127
ரமமாணு 202
ரஸோவை 119
ராகாதய:கதம் 25
ராகாதிபி: 25
ராமலக்ஷ்மண 98
ராமோவிக்ரஹ 71
ராம:கமல 115
ராமம்மேநு 120
ருக்மாபம் 141

ல

லோகாநாம் 70
லோசநாப்யாம் 33

வ

வசஸாம்வாச்ய 87
வசஸாஸாந்த்வ 33
வத்யதாம் 189
வதார்ஹமபி 185
வாஸுதேவதரு 65
விசித்ரதேஹ 101
விதிர்விதாநே 117
வித்யாந்யா 86
விமதேநைவ 159b
விபீஷண 103
விஷ்ணுபக்தி 205
விஷ்ணுராத்மா 91
விஷ்ணோராய 99
வேதஶாஸ்த்ர 37
வேதாந்தகோ 16a
வேதைஶ்ச 88
வ்யவஸாயாத் 136

श (ஶ)

ஶதாயுர்வை 38
ஶிஷ்யஸ்தே 114
ஶீக்ஷாயாம் 224
ஸ்ரீவத்ஸவக்ஷா: 208

स (ஸ)

ஸக்ருதுச்சரித 152
ஸக்ருதேவ 154
ஸக்ருத்ஸ்ம்ரு 153
ஸங்காத் 155
ஸததம்கீர்த்த 43
ஸதம்நிபதித 185
ஸதாபூர்ய 35
ஸதைகரூப 34
ஸத்யஞ்சாந்ரு 201
ஸத்யமூல 184
ஸந்த்யக்தே 51
ஸமயாபோதித: 128
ஸமஹாத்மா 210
ஸமுத்ரஸ்ய 94
ஸர்வத்ரக்லு 207
ஸர்வேஷாமேவ 196
ஸர்வம்கர்மா 148
ஸர்வம்ஸஹ 50
ஸாக்ஷிமர்த்தம் 65
ஸாஜிஹ்வா 118
ஸிஞ்சேதிமம் 32
ஸுரூபாம் 22
ஸுஸுகம் 57
ஸுஹ்ருதம் 9, 129
ஸேதும்த்ருஷ் 96
ஸேவாச்வவ்ரு 63
ஸோஹம்தே 116
ஸ்ருஷ்டஸ்த்வம் 107
ஸ்மரபாவஶோ 156
ஸ்வபுருஷம் 28
ஸ்வர்க்ககாமோ 199
ஸ்வாசார்யமிவ 222
ஹிரண்மய: 140
க்ஷாரம்ப்ரதாந 11

Edited, Printed & Published by K. Srinivasa Iyengar, at Srinivasam Press, No. 8, Puthur Agraharam, Tiruchirapally.